D
V2:1,31'p67
p07.3:1.
227669

தமிழ்நாடு ஆவணக் காப்பகம்
29
சென்னை-600 008
எழும்பூர்

9-5-2007

## உள்ளடக்கம்

பக்கங்கள்

|  |  |
|---|---|
| | iii-viii |
| ஆளுநரும் அமைச்சரவையும் | ix-xiii |
| Governor and Council of Ministers | xv-xviii |
| பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள் | xix-xxix |
| பேரவை உறுப்பினர்கள் (அகர வரிசைப்படி) | |
| **1. வினாக்கள்-விடைகள்-** | |
| (அ) உடுக்குறியிட்ட வினாக்கள் | 1-34 |
| (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள் (பட்டியல்கள் 9 முதல் 11 வரை) | 35-195 |
| **2. தகவல் கோரல்-** | |
| பீடிக் கட்டுகளின்மீது மண்டை ஓடு படம் அச்சிட வேண்டுமென்ற மத்திய அரசின் உத்தரவு | 196-203 |
| திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ் | 196-197 |
| திரு. ஜி.கே. மணி | 197-199 |
| திரு. சி. கோவிந்தசாமி | 199-200 |
| திரு. வை. சிவபுண்ணியம் | 200-201 |
| திரு. டி. ஜெயக்குமார் | 201-202 |
| *மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி | 202-203 |
| **3. அறிக்கைகள் அளித்தல்-** | |
| அரசு உறுதிமொழிக் குழு | 204 |
| **4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)-** | |
| (அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007 | 204-205 |
| (ஆ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 205-206 |
| (இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 | 206-207 |
| (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2007 | 333-334 |

5. அறிவிப்புகள்— பக்கங்கள்

(அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆஇ.) 206

(ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2007 (ஆஇ.) 333

6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

(அ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்
(ஆ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை
(இ) கோரிக்கை எண் 16—நிதித் துறை
(ஈ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை
(உ) கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்
— 207-332

| | |
|---|---|
| *மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன் | 208,221,228,239, 246,256,310-329 |
| *திரு. ஆர்.டி. கணேசன் | 256-261 |
| திரு. சி. ஞானசேகரன் | 261-267 |
| திரு. ஓ. சுப்பிரமணியம் | 267-273 |
| திரு. ஜி.கே. மணி | 273-279 |
| திரு. சி. கோவிந்தசாமி | 279-284 |
| *முனைவர் கு. ஜெயக்குமார் | 284-289 |
| திரு. தி. இராமசாமி | 289-291 |
| *திரு. வீர. இளவரசன் | 292-295 |
| திரு. என். மாலைராஜா | 295-299 |
| *திரு. டி. இராமச்சந்திரன் | 299-303 |
| திரு. தி.க. ராஜா | 303-306 |
| திரு. செ. தாமோதரன் | 307-310 |

7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் 334-339




## ஆளுநரும் அமைச்சரவையும்

### ஆளுநர் – திரு. சுர்ஜித் சிங் பர்னாலா

### அமைச்சரவையின் உறுப்பினர்கள்

1. முதலமைச்சர் .. **மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:**

பொது, பொது நிருவாகம், இந்திய ஆட்சிப் பணி, இந்தியக் காவல் பணி, ஏனைய அனைத்திந்தியப் பணிகள், இலஞ்ச ஒழிப்பு, மாவட்ட வருவாய் அலுவலர்கள், உள் துறை, காவல், தொழில்கள், தகவல் தொழில் நுட்பவியல், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வை, கருப்பஞ்சாற்றுக் கசண்டு, சிறுபான்மையினர் நலன், தமிழ் ஆட்சி மொழி, தமிழ்ப் பண்பாடு, கடவுச் சீட்டுகள் மற்றும் சிறப்பு முயற்சிகள்

2. நிதி அமைச்சர் .. **மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:**

நிதி, திட்டமிடல், சட்டமன்றப் பேரவை மற்றும் தேர்தல்கள்

3. மின்சாரத் துறை அமைச்சர் .. **மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:**

மின்சாரம், மரபுசார்ரா எரிசக்தி மேம்பாடு மற்றும் பணியாளர் மற்றும் நிருவாகச் சீர்திருத்தம்

D V21 81 P07

4. ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின்:

நகராட்சி நிருவாகம், ஊரக வளர்ச்சி, ஊராட்சிகள் மற்றும் ஊராட்சி ஒன்றியங்கள், வறுமை ஒழிப்புத் திட்டங்கள், ஊரகக் கடன்கள், நகர்ப் பகுதி மற்றும் ஊரகக் குடிநீர் வழங்கல்

5. புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கோ.சி. மணி:

புள்ளியியல் மற்றும் முன்னாள் இராணுவத்தினர் நலன்

6. வேளாண்மைத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம்:

வேளாண்மை, வேளாண்மைப் பொறியியல், வேளாண் பணிக் கூட்டுறவுச் சங்கங்கள், தோட்டக் கலை, கரும்புத் தீர்வை, கரும்பு மேம்பாடு மற்றும் தரிசு நில மேம்பாடு

7. பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. துரைமுருகன்:

பொதுப் பணிகள், சிறுபாசனம் உள்ளிட்ட பாசனம், செயற்திட்டப் பணிகள், சட்டம் மற்றும் நீதிமன்றங்கள்

8. உயர் கல்வித் துறை அமைச்சர் .. மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:

தொழில்நுட்பக் கல்வி உள்ளிட்ட உயர் கல்வி, மின்னணுவியல், அறிவியல் தொழில்நுட்பவியல், சுரங்கங்கள் மற்றும் கனிமங்கள்

227669
சென்னை-600 008
நூலகம்

9. போக்குவரத்துத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. கே.என். நேரு:

போக்குவரத்து, நாட்டுடைமையாக்கப்பட்ட போக்குவரத்து மற்றும் இயக்கூர்திகள் சட்டம்

10. பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம்:

பிற்படுத்தப்பட்டோர், மிகவும் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சீர் மரபினர் நலன், வெளிநாடுவாழ் இந்தியர்கள், அகதிகள் மற்றும் வெளியேற்றப்பட்டவர்கள், பத்திரப் பதிவு மற்றும் முத்திரைத் தாள் சட்டம்

11. ஊரகத் தொழில் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. பொங்களூர் நா. பழனிசாமி:

குடிசைத் தொழில்கள் உட்பட ஊரகத் தொழில்கள் மற்றும் சிறு தொழில்கள்

12. வருவாய் மற்றும் சிறைச்சாலைகள் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. இ. பெரியசாமி:

வருவாய், மாவட்ட வருவாய்த் துறைப் பணியாளரமைப்பு, துணை ஆட்சியர்கள், சிறைச்சாலைகள், எடைகள்-அளவைகள், கடன் கொடுத்தல் குறித்த சட்டம் உள்ளிட்ட கடன் நிவாரணம், சீட்டு நிதிகள் மற்றும் நிறுவனங்களைப் பதிவு செய்தல்

13. சுற்றுலாத் துறை அமைச்சர் .. மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன்:

சுற்றுலா மற்றும் சுற்றுலா வளர்ச்சிக் கழகம்

**4. செய்தித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. பரிதி இளம்வழுதி:**

செய்தி மற்றும் விளம்பரம், திரைப்படத் தொழில்நுட்பவியல் மற்றும் திரைப்படச் சட்டம், எழுதுபொருள் மற்றும் அச்சு, அரசு அச்சகம், நகரமைப்புத் திட்டமிடல், நகர்ப் பகுதி வளர்ச்சி மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமம்

**15. உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. எ.வ. வேலு:**

உணவு, நுகர்பொருட்கள் வழங்கல், நுகர்வோர் பாதுகாப்பு, விலைக் கட்டுப்பாடு மற்றும் கூட்டுறவு

**16. வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன்:**

வீட்டு வசதி, ஊரக வீட்டு வசதி மற்றும் வீட்டு வசதி மேம்பாடு, குடிசை மாற்று வாரியம் மற்றும் இட வசதிக் கட்டுப்பாடு

**17. மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன்:**

மக்கள் நல்வாழ்வு, மருத்துவக் கல்வி மற்றும் குடும்ப நலன்

**18. தொழிலாளர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:**

தொழிலாளர் நலன், மக்கள் தொகை, வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சி, எஃகுக் கட்டுப்பாடு, செய்தித்தாள் கட்டுப்பாடு, மக்கள் தொகைக் கணக்கெடுப்பு மற்றும் நகர மற்றும் ஊரக வேலைவாய்ப்பு



**19. இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:**

இந்து சமய மற்றும் அறநிலையங்கள்

**20. கைத்தறித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா:**

கைத்தறி மற்றும் துணித் தொழில்

**21. பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:**

பள்ளிக் கல்வி மற்றும் தொல் பொருளியல்

**22. வணிக வரித் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:**

வணிக வரிகள்

**23. சுற்றுச்சூழல் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான்:**

விளையாட்டுகள் மற்றும் இளைஞர் நலன், சுற்றுச்சூழல் மற்றும் மாசுக் கட்டுப்பாடு மற்றும் இஸ்லாமிய அறக்கட்டளைகள் (வக்ஃபு)

**24. வனத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. என். செல்வராஜ்:**

வனங்கள் மற்றும் சின்கோனா

**25. நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:**

நெடுஞ்சாலைகள் மற்றும் துறைமுகங்கள்

**26. சமூக நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை:**

மகளிர் மற்றும் குழந்தைகள் நலன் உள்ளிட்ட சமூக நலன், மதிய சத்துணவு, ஊனமுற்றோர் நலன், அனாதை இலலங்கள் மற்றும் குற்றவாளிகள் சீர்திருத்த நிருவாகம், ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டம் மற்றும் இரவலர் காப்பு இல்லங்கள்

**27. கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன்:**

கால்நடை பராமரிப்பு

**28. ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:**

ஆதி திராவிடர் நலன், மலைவாழ் பழங்குடியினர் மற்றும் கொத்தடிமைத் தொழிலாளர்கள் நலன்

**29. மீன்வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கே.பி.பி. சாமி:**

மீன்வளம் மற்றும் மீன் வளர்ச்சிக் கழகம்

**30. பால் வளத் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:**

பால் மற்றும் பால் பண்ணை வளர்ச்சி

**31. கதர்த் துறை அமைச்சர்** .. **மாண்புமிகு திரு. கா. ராமச்சந்திரன்:**

கதர் கிராமத் தொழில் வாரியம், பூமிதானம் மற்றும் கிராமதானம்



## GOVERNOR AND COUNCIL OF MINISTERS

## GOVERNOR – THIRU SURJIT SINGH BARNALA

## MEMBERS OF THE COUNCIL OF MINISTERS

1. **Chief Minister** .. **The Hon. Kalaignar M. Karunanidhi:**

Public, General Administration, Indian Administrative Service, Indian Police Service, Other All India Services, Prevention of Corruption, District Revenue Officers, Home, Police, Industries, Information Technology, Prohibition and Excise, Molasses, Minorities Welfare, Tamil Official Language & Tamil Culture, Passports and Special Initiatives

2. **Minister for Finance** .. **The Hon. Prof. K. Anbazhagan:**

Finance, Planning, Legislative Assembly and Elections

3. **Minister for Electricity** .. **The Hon. Thiru Arcot N. Veerasamy:**

Electricity, Non-Conventional Energy Development and Personnel and Administrative Reforms

4. **Minister for Rural Development and Local Administration** .. **The Hon. Thiru M.K. Stalin:**

Municipal Administration, Rural Development, Panchayats and Panchayat Unions, Poverty Alleviation Programmes, Rural Indebtedness, Urban and Rural Water Supply

5. **Minister for Statistics and Ex-Servicemen** .. **The Hon. Thiru Ko.Si. Mani:**

Statistics and welfare of Ex-Servicemen

6. Minister for Agriculture .. **The Hon. Thiru Veerapandi S. Arumugam:**

Agriculture, Agricultural Engineering, Agro Service Co-operatives, Horticulture, Sugarcane Cess, Sugarcane Development and Wasteland Development

7. Minister for Public Works and Law .. **The Hon. Thiru Duraimurugan:**

Public Works, Irrigation including Minor Irrigation, Programme Works, Law and Courts

8. Minister for Higher Education .. **The Hon. Dr. K. Ponmudi:**

Higher Education including Technical Education, Electronics, Science and Technology, Mines and Minerals

9. Minister for Transport .. **The Hon. Thiru K.N. Nehru:**

Transport, Nationalised Transport and Motor Vehicles Act

10. Minister for Backward Classes .. **The Hon. Thiru M.R.K. Panneerselvam:**

Backward Classes, Most Backward Classes and Denotified Communities, Indians Overseas, Refugees and Evacuees, Registration and Stamp Act

11. Minister for Rural Industries .. **The Hon. Thiru Pongalur N. Palanisamy:**

Rural Industries including Cottage Industries and Small Industries



12. Minister for Revenue and Prisons .. **The Hon. Thiru I. Periasamy:**

Revenue, District Revenue Establishment, Deputy Collectors, Prisons, Weights and Measures, Debt Relief including Legislation on Money Lending, Chits and Registration of Companies

13. Minister for Tourism .. **The Hon. Thiru N. Suresh Rajan:**

Tourism and Tourism Development Corporation

14. Minister for Information .. **The Hon. Thiru Parithi Ellamvazhuthi:**

Information and Publicity, Film Technology and Cinematograph Act, Stationery and Printing, Government Press, Town Planning, Urban Development and Chennai Metropolitan Development Authority

15. Minister for Food and Co-operation .. **The Hon. Thiru E.V. Velu:**

Food, Civil Supplies, Consumer Protection, Price Control and Co-operation

16. Minister for Housing and Slum Clearance .. **The Hon. Thiru Suba. Thangavelan:**

Housing, Rural Housing, Housing Development, Slum Clearance Board and Accommodation Control

17. Minister for Health .. **The Hon. Thiru K.K.S.S.R. Ramachandran:**

Health, Medical Education and Family Welfare

18. **Minister for Labour** - **The Hon. Thiru T.M. Anbarasan:**

Labour, Population, Employment and Training, Steel Control, Newsprint Control, Census and Urban and Rural Employment

19. **Minister for Hindu Religious and Charitable Endowments** - **The Hon. Thiru K.R. Periakaruppan:**

Hindu Religious and Charitable Endowments

20. **Minister for Handlooms** - **The Hon. Thiru NKK. P. Raaja:**

Handlooms and Textiles

21. **Minister for School Education** - **The Hon. Thiru Thangam Thenarasu:**

School Education and Archaeology

22. **Minister for Commercial Taxes** - **The Hon. Thiru S.N.M. Upayathulla:**

Commercial Taxes

23. **Minister for Environment** - **The Hon. Thiru T.P.M. Mohideen Khan:**

Sports and Youth Welfare, Environment and Pollution Control and Wakfs

24. **Minister for Forests** - **The Hon. Thiru N. Selvaraj:**

Forests and Cinchona



25. **Minister for Highways** - **The Hon. Thiru M.P. Saminathan:**

Highways and Ports

26. **Minister for Social Welfare** - **The Hon. Dr. (Tmt.) Poongothai:**

Social Welfare including Women's and Children's Welfare, Nutritious Noon Meal, Welfare of the Disabled, Orphanages and Correctional Administration, Integrated Child Development and Beggar Homes

27. **Minister for Animal Husbandry** - **The Hon. Tmt. P. Geetha Jeevan:**

Animal Husbandry

28. **Minister for Adi Dravidar Welfare** - **The Hon. Tmt. A. Tamilarasi:**

Adi Dravidar Welfare, Hill Tribes and Bonded Labour

29. **Minister for Fisheries** - **The Hon. Thiru K.P.P. Samy:**

Fisheries and Fisheries Development Corporation

30. **Minister for Dairy Development** - **The Hon. Thiru U. Mathivanan:**

Milk and Dairy Development

31. **Minister for Khadi** - **The Hon. Thiru K. Ramachandhiran:**

Khadi and Village Industries Board, Bhoodhan and Gramadhan

## பேரவைத் தலைவர், துணைத் தலைவர், மாற்றுத் தலைவர்கள் மற்றும் முக்கிய அலுவலர்கள்

### பேரவைத் தலைவர்

மாண்புமிகு திரு. இரா. ஆவுடையப்பன்

### பேரவைத் துணைத் தலைவர்

மாண்புமிகு திரு. வீ.பெ. துரைசாமி

### மாற்றுத் தலைவர்கள் #

திரு. ப. ரங்கநாதன்

திரு. துரை சந்திரசேகரன்

டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்

திரு. தி. வேல்முருகன்

செல்வி கே. பாலபாரதி

திரு. வை. சிவபுண்ணியம்

### செயலாளர்

திரு. மா. செல்வராஜ்

---

# 26-3-2007 அன்று மாண்புமிகு பேரவைத் தலைவரால் அறிவிக்கப்பட்டவாறு.

| | |
|---|---|
| திரு. வெ.சி. சுப்ரமணியன், எம்.ஏ., பி.எல். | - கூடுதல் செயலாளர் |
| திரு. இல. மாரியப்பன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. சு. பாலச்சந்தர், பி.ஏ., பி.எல். | - இணைச் செயலாளர் |
| திரு. நா. நடராஜன், பி.ஏ., பி.ஜி.எல். | - இணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. இரவீந்திரன், எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. தி. உமாபதி, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. தி. கோவிந்தராசு, எம்.ஏ., பி.எட்., பி.எல்., | - துணைச் செயலாளர் |
| திரு. எ.எம்.பி. ஜமாலுதீன், எம்.எஸ்சி., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி இரா. அமிர்தவல்லி, எம்.ஏ., பி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி கி. இந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி சி. நிர்மலா, பி.காம். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திருமதி ந. மீனாட்சி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திருமதி ப. சரசுவதி, எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் |
| திரு. மு. பைரவன், எம்.காம்., | - குழு அலுவலர் |
| திரு. ப. இராமகிருஷ்ணன், எம்.ஏ., பி.ஜி.எல். | - துணைச் செயலாளர் (பதிப்பாளர்) |
| திரு. கோ. தேவராசன், பி.ஏ. | - குழு அலுவலர் |
| திருமதி இரா. கஸ்தூரி, பி.ஏ., பி.ஜி.எல். | - குழு அலுவலர் |



| | |
|---|---|
| திருமதி சை.உ. சலீம் உன்னிசா, பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| செல்வி நா. இந்திரா பாய், பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. நா. வீரராகவன், எம்.ஏ., பிஜி.டி.சி.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. த.ர. நாகராஜன், எம்.ஏ., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கோ. சுப்புராம், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. மு. கதிரேசன், எம்.ஏ. | - தலைமை நிருபர் |
| திரு. து. சீனிவாசன், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திரு. க. லட்சுமணன், பி.எஸ்சி., பி.எல். | - பேரவைத் தலைவரின் தனிச் செயலர் |
| திருமதி து. இராஜேஸ்வரி, எம்.ஏ., பி.எட்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. ம. பன்னீர் செல்வம் | - தலைமை நிருபர் |
| திருமதி இரா. சந்திரா, பி.ஏ., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கி. மாதவன், எம்.ஏ., பி.ஜி.எல். | - தலைமை நிருபர் |
| திரு. இரா. வெங்கடகிருஷ்ணன், பி.எஸ்சி., பி.எல். | - தலைமை நிருபர் |
| திருமதி அ. லெற்றிஸால், பி.ஏ. | - சார்புச் செயலாளர் |
| திருமதி ஓ.வி. கல்யாணி, பி.எஸ்சி., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |
| திரு. கே. இராமகிருஷ்ணா, பி.எஸ்சி., பி.எல். | - சார்புச் செயலாளர் |
| திருமதி கோ. காயத்ரி, பி.எஸ்சி. | - சார்புச் செயலாளர் |
| திருமதி இரா. பிரேமா, பி.காம்., பி.ஜி.எல். | - சார்புச் செயலாளர் |

திரு. கே. பாலசுப்ரமணியன், எம்.ஏ., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்

திருமதி கு. இந்துமதி, பி.எஸ்சி., எம்.எட்., பி.ஜி.எல். .. சார்புச் செயலாளர்



## பேரவை உறுப்பினர்கள்
## (அகர வரிசைப்படி)
## பெயர்களும் தொகுதிகளும்

| | | |
|---|---|---|
| 1. | அங்கையற்கண்ணி, செல்வி ஆ. | .. சங்கராபுரம் |
| 2. | அப்துல் பாசித், திரு. எச். | .. வாணியம்பாடி |
| 3. | அப்பாவு, திரு. மு. | .. ராதாபுரம் |
| 4. | அமரமூர்த்தி, திரு. து. | .. அரியலூர் |
| 5. | அரி, திரு. கோ. | .. திருத்தணி |
| 6. | அருண்மொழிதேவன், திரு. ஆ. | .. சிதம்பரம் |
| 7. | அருள் அன்பரசு, திரு. | .. சோளிங்கர் |
| 8. | அனிதா ஆர். ராதாகிருஷ்ணன், திரு. | .. திருச்செந்தூர் |
| 9. | அன்பரசன், திரு. தா.மோ. | .. ஆலந்தூர் |
| 10. | அன்பழகன், திரு. எம். | .. பழனி (செ.வ.) |
| 11. | அன்பழகன், திரு. கே.பி. | .. பாலக்கோடு |
| 12. | அன்பழகன், பேராசிரியர் க. | .. துறைமுகம் |
| 13. | அன்பில் பெரியசாமி, திரு. | .. திருச்சிராப்பள்ளி—1 |
| 14. | ஆவுடையப்பன், திரு. இரா. | .. அம்பாசமுத்திரம் |
| 15. | ஆறுமுகம், திரு. கி. | .. செங்கல்பட்டு |
| 16. | ஆற்காடு நா. வீராசாமி, திரு. | .. அண்ணா நகர் |
| 17. | இராசசேகரன், திரு. எஸ். | .. ஆலங்குடி |
| 18. | இராணி, திருமதி இரா. | .. உப்பிலியாபுரம் (ஆ.வா.) |
| 19. | இராமகிருஷ்ணன், திரு. நா. | .. கம்பம் |
| 20. | இராமசாமி, திரு. கரி. | .. திருவாடானை |

3-180—18

| | | |
|---|---|---|
| 21. | இராமசாமி, திரு. தி. | - ஸ்ரீவில்லிபுத்தூர் |
| 22. | இராமசுவாமி, திரு. கே.பி. | - ராசிபுரம் |
| 23. | இராமச்சந்திரன், திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். | - சாத்தூர் |
| 24. | இராமச்சந்திரன், திரு. டி. | - தளி |
| 25. | இராமன், டாக்டர் இ.எஸ்.எஸ். | - பள்ளிப்பட்டு |
| 26. | இராம்பிரபு, திரு. இரா. | - பரமக்குடி (செ.வ.) |
| 27. | இராஜா, திரு. எஸ்.ஆர். | - தாம்பரம் |
| 28. | இராஜேந்திரன், திரு. ஆ. | - வீரபாண்டி |
| 29. | இராஜேந்திரன், திரு. இரா. | - பனமரத்துப்பட்டி |
| 30. | இராஜேந்திரன், திரு. க. | - ஜெயங்கொண்டம் |
| 31. | இராஜேந்திரன், திரு. சபா. | - நெல்லிக்குப்பம் |
| 32. | இராஜ்குமார், திரு. ம. | - பெரம்பலூர் (செ.வ.) |
| 33. | இளமதி சுப்பிரமணியன், திருமதி | - வலங்கைமான் (செ.வ.) |
| 34. | இளவரசன், திரு. வீர. | - திருமங்கலம் |
| 35. | இளவழகன், திரு. கே.எல். | - ஆற்காடு |
| 36. | உதயசூரியன், திரு. தா. | - சின்னசேலம் |
| 37. | உதயம் சண்முகம், திரு. | - அறந்தாங்கி |
| 38. | உபயதுல்லா, திரு. சி.நா.மீ. | - தஞ்சாவூர் |
| 39. | உலகநாதன், திரு. கே. | - திருத்துறைப்பூண்டி (செ.வ.) |
| 40. | எதிரொலி மணியன், திரு. கோ. | - பெரணமல்லூர் |
| 41. | ஐயப்பன், திரு. கோ. | - கடலூர் |
| 42. | கணபதி, திரு. ந. | - வானூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 43. | கணேசன், திரு. ஆர்.டி. | - தேனி |
| 44. | கண்ணப்பன், திரு. மு. | - தொண்டாமுத்தூர் |
| 45. | கண்ணன், திரு. பெ. | - தாரமங்கலம் |
| 46. | கண்ணன், திரு. வே. | - செஞ்சி |
| 47. | கமலாம்பாள், திருமதி பெ. | - காஞ்சிபுரம் |
| 48. | கருணாநிதி, கலைஞர் மு. | - சேப்பாக்கம் |
| 49. | கருப்பசாமி, திரு. சொ. | - சங்கரநயினார்கோவில் (செ.வ.) |
| 50. | கருப்பசாமி பாண்டியன், திரு. வீ. | - தென்காசி |
| 51. | கலியவரதன், திரு. வீ.ஏ.டி. | - முகையூர் |
| 52. | கலீலூர் ரஹ்மான், திரு. ம.அ. | - அரவக்குறிச்சி |
| 53. | கலைராஜன், திரு. வி.பி. | - தியாகராய நகர் |
| 54. | காந்தி, திரு. ஆர். | - இராணிப்பேட்டை |
| 55. | காமராஜ், திரு. பெ. | - கிருஷ்ணராயபுரம் (செ.வ.) |
| 56. | காயத்ரி தேவி, டாக்டர் (திருமதி) கே. | - மதுராந்தகம் |
| 57. | காவேரி, திரு. வை. | - எடப்பாடி |
| 58. | கிருஷ்ணமூர்த்தி, திரு. அக்ரி எஸ்.எஸ். | - கலசப்பாக்கம் |
| 59. | கீதா ஜீவன், திருமதி பி. | - தூத்துக்குடி |
| 60. | குணசேகரன், திரு. சு. | - சிவகங்கை |
| 61. | குணசேகரன், திரு. ம. | - மானாமதுரை (செ.வ.) |
| 62. | குத்தாலம் க. அன்பழகன், திரு. | - குத்தாலம் |
| 63. | குமரகுரு, திரு. இரா. | - திருநாவலூர் |

64. குருசாமி, திரு. செ. - அந்தியூர் (செ.வ.)
65. கோபாலன், திரு. போ. - உதகமண்டலம்
66. கோபிநாத், திரு. கே. - ஓசூர்
67. கோவிந்தசாமி, திரு. சி. - திருப்பூர்
68. கோவை தங்கம், திரு. - வால்பாறை (செ.வ.)
69. சக்கரபாணி, திரு. அர. - ஒட்டன்சத்திரம்
70. சங்கரவல்லி என்கிற சங்கரிநாராயணன், திருமதி - அச்சரப்பாக்கம் (செ.வ.)
71. சண்முகம், திரு. சி.வி. - திண்டிவனம்
72. சண்முகவேலு, திரு. சி. - உடுமலைப்பேட்டை
73. சதன் திருமலைக்குமார், டாக்டர் தி. - வாசுதேவநல்லூர் (செ.வ.)
74. சந்திரகாசி, திரு. மா. - வரகூர் (செ.வ.)
75. சந்திரா, திருமதி மு. - ராஜபாளையம் (செ.வ.)
76. சாமி, திரு. ஆர். - மேலூர்
77. சாமி, திரு. கே.பி.பி. - திருவொற்றியூர்
78. சாமிநாதன், திரு. மு.பெ. - வெள்ளக்கோவில்
79. சிவசங்கர், திரு. எஸ்.எஸ். - ஆண்டிமடம்
80. சிவபுண்ணியம், திரு. வை. - மன்னார்குடி
81. சிவராஜ், திரு. சு. - ரிஷிவந்தியம்
82. சிவானந்தம், திரு. ஆர். - ஆரணி
83. சிவாஜி, திரு. இ.ஏ.பி. - திருவள்ளூர்
84. சின்னசாமி, திரு. அ. - பேரணாம்பட்டு (செ.வ.)
85. சின்னசாமி, திரு. ஆர். - சிங்காநல்லூர்



86. சின்னச்சாமி, திரு. செ. - மருங்காபுரி
87. சின்னதுரை, திரு. கு. - தலைவாசல் (செ.வ.)
88. சின்னப்பன், திரு. போ. - விளாத்திகுளம்
89. சின்னராஜ், திரு. ஓ.கே. - மேட்டுப்பாளையம்
90. சீனிவாசன், திரு. கு. - பூங்கா நகர்
91. சுதர்சனம், திரு. டி. - பூந்தமல்லி
92. சுந்தரம், திரு. எம்.ஆர். - ஆத்தூர்
93. சுந்தரம், திரு. ந. - காரைக்குடி
94. சுந்தர், திரு. க. - உத்திரமேரூர்
95. சுப்பிரமணியம், திரு. ஓ. - பவானிசாகர்
96. சுப்புராம், திரு. ராம. - திருமயம்
97. சுப்ரமணியன், திரு. ந. - குளத்தூர் (செ.வ.)
98. சுரேஷ் ராஜன், திரு. என். - கன்னியாகுமரி
99. சூரியகுமார், திரு. என்.கே.ஆர். - நாட்ராம்பள்ளி
100. செங்குட்டுவன், திரு. டி. - கிருஷ்ணகிரி
101. செங்கோட்டையன், திரு. கே.ஏ. - கோபிசெட்டிப்பாளையம்
102. செந்தமிழன், திரு. ஞா. - சைதாப்பேட்டை
103. செந்தமிழ்ச்செல்வன், திரு. பா. - மேல்மலையனூர்
104. செந்தில் பாலாஜி, திரு. வே. - கரூர்
105. செல்வம், திரு. கு. - மங்களூர் (செ.வ.)
106. செல்வராஜ், திரு. என். - முசிறி
107. செல்வராஜ், திரு. து. - ஸ்ரீவைகுண்டம்
108. செல்வி ராமஜெயம், திருமதி - புவனகிரி

83-150—1c

109. சேகரன், திரு. கூ.ந. - திருவெறும்பூர்

110. சேகர், திரு. எஸ்.வி. - மயிலாப்பூர்

111. சேகர்பாபு, திரு. பி.கே. - டாக்டர் இராதாகிருஷ்ணன் நகர்

112. சையது கௌஸ் பாஷா, திரு. சை. - மதுரை மத்தி

113. சௌந்தரபாண்டியன், திரு. அ. - லால்குடி

114. சௌந்திரபாண்டியன், திரு. அ. - குன்னூர் (செ.வ.)

115. ஞானசேகரன், திரு. சி. - வேலூர்

116. ஞானதாஸ், திரு. ஆர். - சிவகாசி

117. டில்லி பாபு, திரு. ப. - அரூர் (செ.வ.)

118. தங்கமணி, திரு. பி. - திருச்செங்கோடு

119. தங்கம் தென்னரசு, திரு. - அருப்புக்கோட்டை

120. தங்கவேலன், திரு. சுப. - கடலாடி

121. தண்டபாணி, திரு. மா. - வேடசந்தூர்

122. தமிழரசி, திருமதி ஆ. - சமயநல்லூர் (செ.வ.)

123. தமிழரசு, திரு. அ. - ஓமலூர்

124. தமிழ்செல்வன், திரு. சி. - ஏற்காடு (ஆ.வா.)

125. தம்பிதுரை, முனைவர் மு. - பர்கூர்

126. தர்மலிங்கம், திரு. எல்.பி. - சத்தியமங்கலம்

127. தாமோதரன், திரு. செ. - கிணத்துக்கடவு

128. தியோடர் ரெஜினால்டு, திரு. த. - பத்மநாபபுரம்

129. திருநாவுக்கரசு, திரு. கே. - உளுந்தூர்பேட்டை (செ.வ.)

130. துரைக்கண்ணு, திரு. இரா. - பாபநாசம்



131. துரை சந்திரசேகரன், திரு. - திருவையாறு

132. துரைசாமி, திரு. வீ.பெ. - சங்கரி (செ.வ.)

133. துரைமுருகன், திரு. - காட்பாடி

134. துரைராஜ், திரு. சி. - சேடப்பட்டி

135. தேன்மொழி, திருமதி எஸ். - நிலக்கோட்டை (செ.வ.)

136. நன்மாறன், திரு. என். - மதுரை கிழக்கு

137. நெடுஞ்செழியன், டாக்டர் க. - கபிலர்மலை

138. நெடுஞ்செழியன், திரு. ரெ. - புதுக்கோட்டை

139. நேரு, திரு. கே.என். - திருச்சிராப்பள்ளி–2

140. பதர் சயீத், திருமதி - திருவல்லிக்கேணி

141. பத்மாவதி, திருமதி பி. - நன்னிலம் (செ.வ.)

142. பரஞ்ஜோதி, திரு. மு. - ஸ்ரீரங்கம்

143. பரிதி இளம்வழுதி, திரு. - எழும்பூர் (செ.வ.)

144. பலராமன், திரு. பி. - பொன்னேரி (செ.வ.)

145. பழனிசாமி, திரு. ஆர்.எம். - மொடக்குறிச்சி

146. பன்னீர்செல்வம், திரு. எம். - சீர்காழி (செ.வ.)

147. பன்னீர்செல்வம், திரு. எம்.ஆர்.கே. - குறிஞ்சிப்பாடி

148. பன்னீர்செல்வம், திரு. ஓ. - பெரியகுளம்

149. பாண்டுரங்கன், திரு. கு. - அணைக்கட்டு

150. பாபு, திரு. வி.எஸ். - புரசைவாக்கம்

151. பாரதி மோகன், திரு. ஆர்.கே. - திருவிடைமருதூர்

152. பாலபாரதி, செல்வி கே. - திண்டுக்கல்

153. பிச்சாண்டி, திரு. கு. - திருவண்ணாமலை

| | | |
|---|---|---|
| 154. | பிரபாவதி, திருமதி பெ. | - தாராபுரம் (செ.வ.) |
| 155. | பிரேமா, திருமதி ஆர். | - அவினாசி (செ.வ.) |
| 156. | பீட்டர் அல்போன்ஸ், திரு. எஸ். | - கடையநல்லூர் |
| 157. | புஷ்பராஜ், திரு. செ. | - கண்டமங்கலம் (செ.வ.) |
| 158. | பூங்கோதை, டாக்டர் (திருமதி) | - ஆலங்குளம் |
| 159. | பெரியகருப்பன், திரு. கே.ஆர். | - திருப்பத்தூர் |
| 160. | பெரியசாமி, திரு. இ. | - ஆத்தூர் |
| 161. | பெரியசாமி, திரு. மு.க. | - பூம்புகார் |
| 162. | பெரியண்ணன், திரு. பி.என். | - பெண்ணாகரம் |
| 163. | பொங்கலூர் நா. பழனிசாமி, திரு. | - கோயம்புத்தூர் கிழக்கு |
| 164. | பொள்ளாச்சி வி. ஜெயராமன், திரு. | - பொள்ளாச்சி |
| 165. | பொன்முடி, டாக்டர் க. | - விழுப்புரம் |
| 166. | பொன்னுசாமி, திரு. கே. | - சேந்தமங்கலம் (ஆவா.) |
| 167. | பொன்னுதுரை, திரு. செ. | - பெருந்துறை |
| 168. | போளூர் ம. வரதன், திரு. | - செங்கம் (செ.வ.) |
| 169. | போஸ், திரு. ஏ.கே. | - திருப்பரங்குன்றம் |
| 170. | மகேந்திரன், திரு. இ. | - உசிலம்பட்டி |
| 171. | மகேந்திரன், திரு. கே. | - பெரம்பூர் (செ.வ.) |
| 172. | மகேஷ் கிருஷ்ணசாமி, திரு. த. | - திருவோணம் |
| 173. | மணி, திரு. எஸ். | - பொங்கலூர் |
| 174. | மணி, திரு. கோ.சி. | - கும்பகோணம் |
| 175. | மணி, திரு. ஜி.கே. | - மேட்டூர் |
| 176. | மதிவாணன், திரு. உ. | - திருவாரூர் (செ.வ.) |



| | | |
|---|---|---|
| 177. | மலரவன், திரு. தா. | .. கோயம்புத்தூர் மேற்கு |
| 178. | மாணிக்கம், திரு. இரா. | .. குளித்தலை |
| 179. | மாரிமுத்து, திரு. வே. | .. நாகப்பட்டினம் |
| 180. | மாலைராஜா, திரு. என். | .. திருநெல்வேலி |
| 181. | முருகவேல், திரு. கே. | .. முதுகுளத்தூர் |
| 182. | முல்லைவேந்தன், திரு. வ. | .. மொரப்பூர் |
| 183. | மூர்த்தி, திரு. டி. | .. திருப்போரூர் (செ.வ.) |
| 184. | மூர்த்தி, திரு. பி. | .. சோழவந்தான் |
| 185. | மேகநாதன், திரு. த.அ. | .. காவேரிப்பட்டினம் |
| 186. | மோகன், திரு. பெ. | .. ஓட்டப்பிடாரம் (செ.வ.) |
| 187. | மைதீன்கான், திரு. டி.பி.எம். | .. பாளையங்கோட்டை |
| 188. | யசோதா, திருமதி டி. | .. ஸ்ரீபெரும்புதூர் (செ.வ.) |
| 189. | ரங்கநாதன், திரு. ப. | .. வில்லிவாக்கம் |
| 190. | ரங்கராஜன், திரு. என்.ஆர். | .. பட்டுக்கோட்டை |
| 191. | ரவிக்குமார், திரு. து. | .. காட்டுமன்னார்கோவில் (செ.வ.) |
| 192. | ரவிச்சந்திரன், திரு. எல். | .. சேலம்—I |
| 193. | ராணி வெங்கடேசன், திருமதி | .. சாத்தான்குளம் |
| 194. | ராதாகிருஷ்ணன், திரு. ல. | .. கோவில்பட்டி |
| 195. | ராமச்சந்திரன், திரு. கா. | .. கூடலூர் |
| 196. | ராமநாதன், திரு. கே.வீ. | .. பவானி |
| 197. | ராஜ கண்ணப்பன், திரு. ஆர்.எஸ். | .. இளையான்குடி |
| 198. | ராஜகுமார், திரு. எஸ். | .. மயிலாடுதுறை |
| 199. | ராஜசேகரன், திரு. மா. | .. தொட்டியம் |

200. ராஜன், திரு. அ. - நாகர்கோவில்
201. ராஜா, திரு. என்கேகே.பி. - ஈரோடு
202. ராஜா, திரு. தி.க. - திருப்பத்தூர்
203. லட்சுமணன், திரு. ச. - போடிநாயக்கனூர்
204. லதா, திருமதி ஜி. - குடியாத்தம்
205. லீமா றோஸ், திருமதி ரா. - திருவட்டாறு
206. வசந்தகுமார், திரு. எச். - நாங்குநேரி
207. வரதராஜன், திரு. ரா. - விருதுநகர்
208. விசுவநாதன், திரு. இரா. - நத்தம்
209. விடியல் எஸ். சேகர், திரு. - காங்கேயம்
210. விஜயகாந்த், திரு. - விருத்தாசலம்
211. விஜயகுமார், திரு. கே.எஸ். - கும்மிடிப்பூண்டி
212. விஜயகுமார், திரு. பெ.சு. - போளூர்
213. விஷ்ணுபிரசாத், டாக்டர் எம்.கே. - செய்யாறு
214. வீரகபிலன், திரு. எம்.வி.ஆர். - பேராவூரணி
215. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், திரு. - சேலம்–2
216. வேதரத்தினம், திரு. எஸ்.கே. - வேதாரண்யம்
217. வேலு, திரு. எ.வ. - தண்டராம்பட்டு
218. வேலுசாமி, திரு. இல. - தருமபுரி
219. வேலுசாமி, திரு. செ.ம. - பல்லடம்
220. வேலுமணி, திரு. சு.ப. - பேரூர்
221. வேல்துரை, திரு. பா. - சேரன்மகாதேவி
222. வேல்முருகன், திரு. தி. - பண்ருட்டி



223. வைத்திலிங்கம், திரு. ஆர். .. ஒரத்தநாடு
224. ஜாண் ஜேக்கப், திரு. எஸ். .. கிள்ளியூர்
225. ஜாண் ஜோசப், திரு. ஞா. .. விளவங்கோடு
226. ஜெகன்மூர்த்தி, திரு. மு. .. அரக்கோணம் (செ.வ.)
227. ஜெயக்குமார், திரு. டி. .. இராயபுரம்
228. ஜெயக்குமார், முனைவர் கு. .. நாமக்கல் (செ.வ.)
229. ஜெயபால், திரு. எஸ். .. குளச்சல்
230. ஜெயராமன், திரு. எஸ்.பி. .. வந்தவாசி (செ.வ.)
231. ஜெயலலிதா, செல்வி ஜெ .. ஆண்டிப்பட்டி
232. ஸ்டாலின், திரு. மு.க. .. ஆயிரம் விளக்கு
233. ஹசன் அலி, திரு. கு. .. இராமநாதபுரம்
234. ஆஸ்கார் சி. நிக்லி, டாக்டர் .. நியமனம்
235. (வெற்றிடம்) .. மதுரை மேற்கு

**பேரவை நடவடிக்கைகளில் பங்குகொள்ள உரிமை பெற்றவர்**

திரு. இரா. விடுதலை .. மாநில அரசுத் தலைமை வழக்குரைஞர்

## தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை

## சித்திரை 26, சர்வஜித் – திருவள்ளுவர் ஆண்டு 2038

## 2007 மே 9, புதன்கிழமை

*மாண்புமிகு பேரவைத் தலைவர்* **திரு. இரா. ஆவுடையப்பன்** *அவர்கள் தலைமையில் காலை 9-30 மணியளவில் பேரவை கூடியது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:**

*"குடிசெய்வல் என்னும் ஒருவற்குத் தெய்வம்*
*மடிதற்றுத் தான்முந் துறும்"*

*தன்னைச் சேர்ந்த குடிமக்களை உயர்வடையச் செய்திட ஓயாது உழைப்பவனுக்குத் தெய்வச் செயல் எனக் கூறப்படும் இயற்கையின் ஆற்றல்கூட வரிந்து கட்டிக்கொண்டு வந்து துணைபுரியும்.*

### 1. வினாக்கள்–விடைகள்

### (அ) உடுக்குறியிட்ட வினாக்கள்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினாக்கள்-விடைகள். வினா எண் 181, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ், மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.*

**181—**

**மின் வாரியம்**

***672—திரு. ஆர். ஞானதாஸ்:**

*மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பிரிக்கும் திட்டம் எந்த நிலையில் உள்ளது?*

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தமிழ்நாடு மின்சார வாரியத்தை, மின் செலுத்துகைப் பணி மற்றும் மின் பளு அனுப்புகை ஆகிய பணிகளை அடக்கிய மின் செலுத்துகை நிறுவனமாகவும், மற்ற எல்லா எஞ்சியுள்ள மின் விநியோகம் அடக்கிய பகுதிகளைத் தமிழ்நாடு மின்சார வாரியமாகவும் தொடர வகை செய்யும் திட்டத்தின் கருத்துரு, மின்சார வாரியத்திலிருந்து பெறப்பட்டு, அரசின் ஆய்வில் உள்ளது.

தற்போதுள்ள நிலையிலேயே தமிழ்நாடு மின்சார வாரியம் திறம்பட இயங்கி வருவதால், வாரியத்தைத் தற்போதுள்ள நிலையிலேயே 9-6-2007 வரை தொடர மத்திய அரசு மின்சாரச் சட்டப் பிரிவு 172(a)–ன்படி ஒப்புதல் அளித்துள்ளது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்தை சில மாநிலங்கள் பிரித்து பல அனுபவங்களைப் பெற்றிருக்கின்றன. குறிப்பாக, மஹாராஷ்டிரா மற்றும் ஹரியானா போன்ற மாநிலங்கள் மின்சார வாரியத்தைப் பிரித்த பின்பு, அந்தந்த மாநிலங்களில் மின்சார வாரியத்திற்கு ஏற்பட்ட அனுபவங்களைத் தமிழக அரசு கருத்தில் கொண்டுள்ளதா? அப்படி, அந்த வகையில் பிரிக்கப்படும்பொழுது தொழிலாளர் நலன் பாதிக்கப்படாமல் வகை செய்யப்படுமா என்பதையும் தங்கள் வாயிலாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் சொன்னதைப்போல, இந்தியாவிலே பல மாநிலங்களில் மின்சாரக் கட்டணம் 60 சதவிகிதம் வரையில் வசூலாகியது. அதைப்போல, மின் இழப்பு என்பது 52 சதவிகிதம் வரையிலே இருந்தது. மின் உற்பத்தியிலேயும் அப்படிப்பட்ட பிரச்சினைகள் இருந்த காரணத்தினால்தான், 2003 ஆம் ஆண்டு மத்திய அரசாங்கம் அதற்கென்று ஒரு சட்டம் கொண்டு வந்தது. ஆனால், இந்தியாவிலேயே 99 சதவிகிதம் consumer–கள் தாங்கள் பயன்படுத்துகின்ற மின்சாரத்திற்கு உரிய கட்டணத்தைச்



செலுத்துகின்ற ஒரே மாநிலம் இந்தியாவிலே தமிழ்நாடு மட்டும்தான். அதைப்போல, 18 சதவிகிதம்தான் நம்முடைய தமிழகத்திலே line loss இருக்கிறது. மற்ற மாநிலங்களிலே 30 சதவிகிதம், 40 சதவிகிதம், 50 சதவிகிதம் என்று இருக்கின்ற காரணத்தினால்தான், அதைக் குறைப்பதற்கு மத்திய அரசாங்கம் இப்படிப்பட்ட ஒரு சட்டத்தைக் கொண்டு வந்தது. மின்சாரத் துறை அமைச்சர்கள் மாநாட்டிலே இந்தக் கருத்து பற்றி விவாதித்தபோது, தமிழ்நாட்டிலே இந்தச் சட்டத்தை நாங்கள் அமல்படுத்த முடியாது. எங்கள் மாநிலத்திலே முறையாக வசூல் நடந்து வருகிறது. Line loss குறைவாக இருக்கிறது. மின் உற்பத்தியும் நிறைவாக இருக்கிறது. Surplus State ஆக இருக்கின்றோம். எனவே, என்றைக்குக் கோள அரசாங்கம் இந்தச் சட்டத்தை அமல்படுத்த முன்வருகிறதோ, அன்றைக்கு நாங்களும் இது பற்றி யோசிக்கிறோம் என்று சொல்லிவிட்டு வந்திருக்கிறோம். எனவே, தமிழக அரசாங்கத்தைப் பொறுத்தவரையில், மின்சார வாரியத்திலே இருக்கக்கூடிய தொழிலாளர்களுடைய நன்மையைக் கருதி, இதை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கின்ற திட்டம் இப்போதைக்கு இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். ஞானதாஸ்.

**திரு. ஆர். ஞானதாஸ்:** மாண்புமிகு அமைச்சரின் பதிலுக்கு நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மானாமதுரை தொகுதி, மானாமதுரை சிவகங்கை மாவட்டம், மானாமதுரை ஒன்றியத்தினுடைய சில பகுதிகளில் ஒன்றியம் மற்றும் திருப்புவனம் ஒன்றியத்தினுடைய சில பகுதிகளில் மளவராயநேந்தல், அதாவது, ஆரங்காடு, திருப்பாச்சத்தி, மின்சாரம் வருவது சம்பாராநேந்தல், மரநாடு போன்ற கிராமங்களில் மின்சாரம் வருவது தடைப்படுகின்ற காரணத்தினாலும், குறைந்த மின்சாரம் வருவதனாலும், திருப்புவனம் ஒன்றியம், திருப்பாச்சத்தியில் கடந்த எங்களுடைய ஆட்சியில் துணை மின் நிலையம் தொடங்கப்பட்டு, அந்தக் கட்டுமானப் பணிகள் முடிவடையாமல் இருந்தன. இந்த ஆட்சி வந்த பிறகு, அது தொடர்ந்து நடைபெற்று, கட்டுமானப் பணிகள் முடிக்கப்பட்டு, இன்று செயல்படாமல் இருக்கின்றது. அந்தத் துணை மின் நிலையம் எப்பொழுது செயல்படுத்தப்படும் என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-35

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் முதலில் சொன்ன கருத்தை மின் வாரியம் உடனடியாகக் கவனிக்கும். துணை மின் நிலையம் எப்போது தொடங்கப்படும் என்று கேட்டார்கள். சட்டமன்றக் கூட்டத் தொடர் முடிந்தவுடன், ஒரு நாளைக்கு நானே வந்து, அந்தத் துணை மின் நிலையத்தைத் தொடங்கி வைக்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அ. ராஜன்.

**திரு. அ. ராஜன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, நாகர்கோவில் நகரில் தற்போது பெய்து வரக்கூடிய மழை காரணமாகவும், காற்று அதிகமாக வீசுவதாலும் அடிக்கடி மின் தடை ஏற்படுகிறது. நான் ஏற்கெனவே மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இது சம்பந்தமாக மனு தந்திருக்கிறேன். அதற்குப் பிறகும் இப்பொழுது அடிக்கடி மின் தடை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. நேற்றைக்குக்கூட 4, 5 தடவை current போய்விட்டதாக நாகர்கோவிலிலிருந்து தொலைபேசிமூலம் எனக்குத் தகவல் வந்துள்ளது. எனவே, நாகர்கோவில் பெருநகரத்தைக் கருத்தில்கொண்டு, அங்குள்ள மக்கள் தொகையையும் கருத்தில்கொண்டு, அங்குள்ள தேவைகளையும் கருத்தில்கொண்டு, நாகர்கோவில் நகரில் மின் தடை ஏற்படாமல் இருக்க அரசு ஏதாவது சிறப்பு வசதிகள் செய்யுமா என்பதைத் தங்கள்மூலம் அறிந்துகொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மழை, காற்று, இவை வருகின்ற நேரங்களிலே பெரும்பாலும் மின்சாரத் தடை ஏற்படும். அதிலேயும் குறிப்பாக, அதிகமாக மழை பெய்தால் மின்சார இலாகாவினரே மின்சாரத்தை நிறுத்திவிடுவார்கள். ஏனென்றால், சில இடங்களிலே அதிக வெள்ளம் வந்து, cable-கள் மூழ்கி பாதிக்கப்பட்டிருக்குமானால், அதனால் shock அடித்து மக்கள் பாதித்துவிடக் கூடாது என்பதற்காக மின்சார



வாரியமேகூட மின்சாரத்தை நிறுத்திவிடும். அப்படிப்பட்ட நிலை இருந்திருக்குமானால் அதை சரி செய்வதற்கு மின்சார வாரியம் உடனடியாக நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கு. பிச்சாண்டி.

**திரு. கு. பிச்சாண்டி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, என்னுடைய தொகுதியில் மின் wire-கள் தாழ்வாக இருக்கின்ற காரணத்தால், தீப்பொறிபட்டு கரும்புப் பயிர்கள் எல்லாம் பற்றியெரிந்து, பல இடங்களிலே சேதங்கள் ஏற்பட்டுக்கொண்டிருக்கின்றன. இப்படிப்பட்ட வெயில் காலத்திலே அந்த wire-களையெல்லாம் மின்சார வாரியமே இழுத்துக் கட்டுகின்ற பணியிலே தங்களை ஈடுபடுத்திக்கொள்ளுமா? இல்லாவிட்டால், விவசாயிகள் பாதிக்கப்படக்கூடிய சூழ்நிலை இருக்கிற காரணத்தால், அதற்கு அமைச்சர் உத்தரவிடுவாரா என அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தக் கூட்டத் தொடரிலேயே ஒரு சட்டமன்ற உறுப்பினர் இந்தக் கருத்தை எடுத்துச் சொன்னவுடன் கிராமப் பகுதிகளிலே எங்கெங்கே மின்சார wire தாழ்வாக இருக்கிறதோ, அவற்றையெல்லாம் சரி செய்யும்படி மின்சார வாரியத்திற்கு ஆணையிடப்பட்டிருக்கிறது. அந்தப் பணிகள் தொடர்ந்து நடைபெற்று வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாடு மின்சார வாரியத்தைப் பொறுத்தவரையிலே, சுய அதிகாரம் பெற்ற ஓர் அமைப்பாகத்தான் ஏறக்குறைய அந்த வாரியம் இயங்கி வருகிறது. நம்முடைய மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிறைந்த அனுபவம் வாய்ந்தவர்கள்; அந்தத் துறையிலே செறிவுபெற்ற அறிவுபெற்றவர்கள். மின்சார வாரிய அமைப்பிலே உறுப்பினர்களாக, Member (Generation), Member (Operation) என்றெல்லாம் நியமிக்கின்றார்கள். ஆனால், consumer தரப்பிலே,

நுகர்வோர் சார்பாக யாரும் அந்த மின் வாரிய அமைப்பிலே இடம் பெறுவதில்லை. இந்தக் குறையை அரசாங்கம் மனதிலேகொண்டு, நுகர்வோர் சார்பாக—consumer சார்பாக உறுப்பினர்களை மின் வாரிய அமைப்பிலே நியமிப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மின்சார வாரியத்திலே அதிகாரிகள் மட்டத்தில் மட்டுமல்லாமல், மாண்புமிகு உறுப்பினரைப்போன்ற அனுபவம் மிக்கவர்களை, குறிப்பாக, விவசாயிகள், வியாபாரிகள் மற்றும் தொழிலதிபர்கள் ஆகியோர் சார்பாக ஆறு பேரைக் கொண்ட ஆலோசனைக் குழுவை நியமிப்பதற்கு அரசு பரிசீலித்து வருகிறது. இன்னும் ஓரிரு வாரங்களிலே—அந்த உறுப்பினர்களுடைய பட்டியலை அரசு அறிவிக்கும். அப்போது மாண்புமிகு உறுப்பினர் போன்றவர்களுடைய பெயரையும் சேர்த்துக்கொள்வதற்கு நிச்சயமாக முயற்சிப்போம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.ஏ. செங்கோட்டையன்.

**திரு. கே.ஏ. செங்கோட்டையன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் குடியிருக்கின்ற பல பகுதிகளில் மின்சார line-கள் குறுக்கே செல்கின்ற காரணத்தினால், குடிசைகள் போட்டு வாழ்கிற ஆதி திராவிட மக்கள், மின்னல் வருகிறபோது அச்சத்திற்குள்ளாகிறார்கள். அப்படிச் சில பகுதிகளில் இருக்கின்ற அந்த மின் கம்பங்களை மாற்றி, அவர்களுக்கு இடையூறு இல்லாமல் செய்வதற்கு இந்த அரசு முன்வருமா என்பதை உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சி கொறடா அவர்கள் எந்தெந்தப் பகுதிகளிலே அப்படி இருக்கின்றன என்று ஒரு குறிப்பைக் கொடுப்பாரேயானால், ஒரு வார காலத்திற்குள்ளாக மின்சார வாரியம் அவற்றையெல்லாம் சரி செய்யும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் வாழ்கிற பல இடங்களிலே தெரு விளக்குகள் அமைப்பதற்காக மட்டுமே மின்சாரம் வழங்கப்படுகிறது. அவர்களில் ஒரு சில பேர்களின் வீடுகளுக்கு மின் இணைப்பைப் பெறுவதற்கான வாய்ப்பைப் பெற வேண்டுமானால் 3 மின் கம்பிகள் அதற்குத் தேவைப்படுகின்றன. தமிழகத்திலே பல கிராமங்களிலே மின் கம்பிகளோடு தெரு விளக்குகளை எரியவிடுகிற சூழ்நிலைகள் இருக்கின்றன. தமிழகத்திலே இப்படி இரண்டு மின்கம்பிகள் என்ற நிலையை மாற்றி, அனைத்துக் கிராமங்களிலேயும் மூன்று கம்பிகளைப் பொருத்துவதற்கான முயற்சிகளை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புவதோடு, எனது மன்னார்குடி தொகுதிக்குட்பட்ட திருமக்கோட்டையில் மின் நிலையம் இருக்கிறது. எரிவாயு மூலமாக 300 கோடி ரூபாய் செலவிலே மின் உற்பத்தி நிலையம் செயல்பட்டுக்கொண்டிருக்கிறது. அதன்மூலமாக வெளியேற்றப்படுகிற கழிவு நீர், வெந்நீர், இவற்றின்மூலமாகப் பல தாதுப் பொருள்கள் வெளியேறி, சுமார் 150 ஏக்கர் நிலங்கள் பாழ்பட்டிருக்கின்றன. அந்தப் பாழடைந்த நிலங்களுக்குரியவர்களுக்கு நஷ்ட ஈடுகளை வழங்குவதற்கும், நிலங்களைப் பாதுகாப்பதற்குமான முயற்சியை அரசு மேற்கொள்ளுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 9-40

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. ஆர்க்காடு நா. வீராசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிட மக்கள் வாழ்கின்ற பகுதிகளில் two phase current தான் இருக்கிறது, three phase current வழங்க முடியுமா என்று கேட்டார். அங்கே அவர்களுக்கெல்லாம் வீட்டுக்கு ஒரு விளக்குதான் கொடுக்கிறோம். அதற்கு three phase current அவசியமில்லை. டி.வி., துணி துவைக்கின்ற மெஷின்–washing machine–மற்றும் மின்சார சாதனங்களை யார், யாரெல்லாம் உபயோகப்படுத்துகிறார்களோ அவர்களுக்குத்தான் three phase இணைப்புத் தேவை. ஒரு விளக்கு உபயோகப்படுத்துகிறவர்களுக்கு three phase இணைப்புத் தேவையில்லை. ஆகவேதான் அப்படிப்பட்ட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கின்றன.

அவருடைய தொகுதியிலே அமைக்கப்பட்டிருக்கின்ற மின் உற்பத்தி நிலையத்திலேயிருந்து சூடான நீர் வெளியேறுவதாகச் சொன்னார்கள். அந்த மின் திட்டத்தை முன்பு மின்சாரத் துறை அமைச்சராக இருந்தபோது, நான்தான் அவருடைய தொகுதிக்குச் சென்று, தொடங்கி வைத்தேன். அப்படிப்பட்ட குறைகள் இருக்குமானால், உடனடியாக அதிகாரிகளிடத்திலே தெரிவித்து, அதைத் தடுப்பதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 182, மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி, மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**182—**

## அணை கட்டுதல்

***1003—திரு. மா. தண்டபாணி:**

மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திண்டுக்கல் மாவட்டம், வடமதுரை ஒன்றியம், கொம்பேறிபட்டி ஊராட்சி, மான்கோம்பை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:** பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் வட்டம், வடமதுரை ஒன்றியம், கொம்பேறிபட்டி ஊராட்சி, மான்கோம்பை ஆற்றின் குறுக்கே அணை கட்டும் திட்டத்திற்கான மதிப்பீடு ரூ.97 இலட்சங்களுக்குத் தயாரிக்கப்பட்டு, பொதுப் பணித் துறை திட்ட உருவாக்கத் தலைமைப் பொறியாளரின் பரிசீலனையில் இருக்கிறது.

பேரவைத் தலைவர் அவர்களே, உங்கள் அனுமதியோடு, திட்ட மதிப்பீடு ரூ.97 இலட்சம் என்று இருப்பதை ரூ.238.78 இலட்சம் என்று திருத்திக்கொள்ள அனுமதி அளிக்க வேண்டுகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தத் திட்டத்தைக் கொணர்ந்திருக்கிற நம்முடைய அரசுக்கு நன்றியைத் தெரிவிக்கிற நேரத்தில், இந்தத் திட்டத்தின்மூலமாக என்னுடைய பகுதியில் இருக்கிற கிட்டத்தட்ட 7 ஊராட்சிகள் பயன்பெறும். என்னுடைய தொகுதியைப் பொறுத்தளவில், வறண்ட, வறட்சியான பகுதி என்பதை யாரும் மறுக்க முடியாது. அப்படிப்பட்ட இடத்தில், தமிழகத்தினுடைய முதல்வராக டாக்டர் கலைஞர் அவர்கள் இருந்தபோது என்னுடைய தொகுதியிலே குடகனாறு அணையைக் கட்டிக் கொடுத்து எங்களுக்குப் பெருமை சேர்த்தார்கள். அதேபோல, இந்த அணையையும் கட்டி, எங்கள் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய வாழ்க்கையை உயர்த்தியிருப்பதற்கு, உள்ளபடியே பெருமையோடு நன்றி சொல்கிறேன். என்னுடைய மாவட்டத்திலேயுள்ள பழனியிலே குடிகொண்டிருக்கிற முருகனைப்போல, இந்தத் திட்டத்தை நிறைவேற்றினால், இந்த முருகனை நாங்கள் வணங்குவதற்குத் தயாராக இருக்கிறோம். என்னுடைய தொகுதியிலே குஜிலியம்பாறை ஒன்றியத்தில் வறட்டாறு இருக்கிறது. அது பற்றிய விவரங்களும் தங்களுடைய ஆய்வில் இருப்பதாக நான் அறிகிறேன். அதையும் கட்டிக் கொடுத்தால் உங்களை என்றைக்கும் வணங்குவதற்கு நாங்கள் தயாராக இருக்கிறோம் என்று கூறி, விடைபெறுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆறுமுகம். (குறுக்கீடு)

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட (குறுக்கீடு) அதைச் சொல்லிவிடுகிறேன். மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், மேட்டூர் தொகுதிக்குட்பட்ட கொளத்தூர் ஒன்றியப் பகுதி, மேட்டூர் அணையின் கரையிலே இருக்கிறது. அந்தப் பகுதியிலே இருக்கக்கூடியவர்கள் எல்லாம் மேட்டூர் அணையினுடைய தண்ணீரை நாங்கள் பார்க்க முடிகிறதே தவிர, சில கிராமங்களில் இருக்கிற மக்கள் குடிக்கக்கூட முடிவதில்லை என்று ஏக்கத்தோடு இருந்துகொண்டிருக்கிறார்கள். எல்லாம் வானம் பார்த்த பூமியாக இருக்கின்றன. ஆகவே, அந்தப் பகுதி பாசன வசதிபெற வேண்டுமென்று சொன்னால், கொளத்தூரை அடுத்துள்ள

பெரியதண்டா பகுதியிலே தோணிமடுவு என்ற ஒரு மிகப் பெரிய காட்டாறு ஓடுகிறது. அதைத் தேக்குவதற்கு ஒரு நீர்த்தேக்கம் கட்டினால், கொளத்தூர் ஒன்றியப் பகுதி முழுவதும் பாசன வசதிபெறும் நல்ல வாய்ப்பு இருக்கிறது. இது நீண்ட காலமாகப் பேசப்பட்டு, நிலுவையிலே இருக்கிற திட்டம். ஆகவே, அந்தத் தோணிமடுவுத் திட்டத்தை அரசு நிறைவேற்றி, கொளத்தூர் ஒன்றியப் பகுதிகளில் பாசன வசதியைப் பெருக்குவதற்கு அரசு ஆவன செய்யுமா என்பதை அறிய விரும்புகிறேன், இது ஒன்று. 

(முற்பகல் 9-45)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கிடு)

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் தலைவர் அவர்களே, மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து சாம்பல் நீர் வீணாகச் செல்கிறது; அதிக அளவில் கழிவு நீர் வீணாகப் போகிறது. அதைப் பாசனத்திற்குப் பயன்படுத்துவதற்கு வாய்ப்பிருக்கிறது. அதைத் திருப்பிவிட்டால், நங்கவள்ளி ஒன்றியத்திலே பல கிராமங்கள் பாசன வசதி பெறுகின்ற வாய்ப்பு இருக்கின்ற காரணத்தால், அதையும் நிறைவேற்றித் தருவீர்களா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள் குறிப்பிட்ட தோணிமடுவு என்கிற இடத்தில் ஒரு சிறிய நீர்த்தேக்கம் கட்டினால், கிட்டத்தட்ட 1,499 ஏக்கர் நிலம் பாசனம் பெறும் என்று ஆய்வறிக்கையிலே தெரிவித்திருக்கிறார்கள். இதுவொரு நல்ல திட்டம்; வரவேற்கத்தக்க திட்டம்தான். ஆனால், இது காவிரியோடு தொடர்புடையது என்ற காரணத்தால், காவிரிப் பிரச்சினை இருந்த காரணத்தால், இதுவரையில் அந்தத் திட்டம் பரிசிலனை அளவிலே இருந்தது. இது முழுக்க, முழுக்க அடர்ந்த வனப் பகுதியிலே இருக்கிறது. எனவே, இந்தத் திட்டத்தை நிறைவேற்றுவதற்காக, அந்த இடத்தை அளவு எடுப்பதற்கு பொதுப் பணித் துறையினரை வனப் பகுதியினர் அனுமதிக்க மறுக்கிறார்கள். வனப் பகுதியினுடைய தலைமை வனக் காவலர் அவர்களிடம், இந்தப் பகுதியிலே பொதுப் பணித் துறை அதிகாரிகள் செல்ல, படம் எடுக்க அனுமதிக்க



வேண்டுமென்று நாங்கள் கேட்டிருக்கிறோம். காவிரிப் பிரச்சினையும் தீர்ந்த காரணத்தால், விரைவில் இந்தத் திட்டத்தை எடுத்துக்கொள்வதற்கு அரசு ஆவன செய்யும். பேரவைத் தலைவர் அவர்களே, சாம்பல் நீர், அங்கேயிருக்கிற மேட்டூர் அனல் மின் நிலையத்திலிருந்து வெளியே வருவதாகத் தெரிவித்தார். அதைப் பாசனத்திற்குத் திருப்பிவிட வேண்டுமென்ற ஒரு கோரிக்கையை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் வைத்தார்கள். நான் இந்த மாதம் 26, 27-ல் மேட்டூர் பகுதிக்கு வருகிறேன். நானே நேரிலே பார்த்துவிட்டு, அது குறித்து ஆவன செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 183, மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன், மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**183—**

## தொழில்நுட்பக் கல்லூரி

***1323—திரு. பி.என். பெரியண்ணன்:**

மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பெண்ணாகரம் தொகுதியில் தொழில்நுட்பக் கல்லூரி நிறுவ அரசு முன்வருமா?

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி, உயர் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தற்போது அரசுத் தரப்பில் பெண்ணாகரம் தொகுதியில் புதியதாக அரசு பாலிடெக்னிக் கல்லூரி தொடங்க வாய்ப்புகள் ஏதுமில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பி.என். பெரியண்ணன்.

**திரு. பி.என். பெரியண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டிலே மிகவும் பிற்படுத்தப்பட்ட தொகுதி பெண்ணாகரம் தொகுதி. அந்தப் பெண்ணாகரம் தொகுதியில் நூற்றுக்கு ஐம்பது சதவிகிதம் பேர் வெளியூரை நம்பித்தான் தொழில் செய்து வாழ்கின்றார்கள். அந்த மக்கள் வாழ்கின்ற மக்களில் வாழ்விலே வளம்பெற வேண்டுமென்றால், அந்தப் பகுதியிலே

தொழிற்கல்லூரியை அரசு சார்பாக அமைத்தால் நன்றாக இருக்கும் என்ற நிலைமையிலே, அதை அமைப்பதற்கு வாய்ப்புள்ளதா என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** பேரவைத் தலைவர் அவர்களே, பெண்ணாகரத்திற்கு அருகிலுள்ள தருமபுரியில் மட்டும் மூன்று பாலிடெக்னிக் கல்லூரிகள் மற்றும் தருமபுரி மாவட்ட சர்க்கரைத் தொழிற்சாலைக் கூட்டுறவு பாலிடெக்னிக் கல்லூரி, ஆக நான்கு கல்லூரிகள் அந்த மாவட்டத்திலே செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. மானியக் கோரிக்கையிலே அறிவித்ததைப்போல, அந்தத் தொகுதியில் வேறு கல்லூரிகளே இல்லாமல் இருக்குமேயானால், வரும் காலங்களில் இந்தக் கல்லூரியைத் தொடங்குவதைப் பற்றி அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்திலே பொறியியல், மருத்துவக் கல்லூரிகள் மற்றும் பிற தொழில்நுட்பக் கல்லூரிகளில் admission நேரம் இது. தனியார் சுய நிதிக் கல்லூரிகளிலே ஒரு வரன்முறையின்றி பல இலட்சம் ரூபாய் நன்கொடையாக வசூலிக்கப்படுகிறது. கல்விக் கட்டணங்கள்கூட அரசு நிர்ணயித்த தொகையைக் காட்டிலும் அதிகமாக வசூலிக்கப்படுகின்றன. இதைத் தடுக்க அரசு கடுமையான சட்டம் இயற்றுமா? அதோடு இல்லாமல், அரசு நிர்ணயித்த தொகை குறித்த பட்டியலை அந்தந்தக் கல்லூரிகளிலே வைப்பதற்கு அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு குழு அமைக்கப்பட்டு, அந்தக் குழு நிர்ணயிக்கின்ற prescribed amount-ஐத்தான் வசூலிக்க வேண்டும் என்ற விதிமுறை நடைமுறையிலே இருக்கிறது. இருந்தாலும்கூட, மாண்புமிகு உறுப்பினர் சொல்வதைப்போல, சில கல்லூரிகளில் அதிகக் கட்டணம் வசூலிக்கப்படுகிறது. ஆனால், அதைப் பற்றித் தனியார் யாரும் புகார்



கொடுப்பதில்லை. அது குறித்துப் புகார் கொடுப்பார்களேயானால், நிச்சயமாக அதற்குரிய நடவடிக்கைகளை இந்த அரசு எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1999 ஆம் ஆண்டு முதல் 2004 ஆம் ஆண்டு வரை, மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம், சமுதாயக் கல்லூரிகள்மூலமாக ஓராண்டு மழலையர் ஆசிரியர் பட்டயப் பயிற்சி–Diploma in Pre-school Teacher Education-வகுப்புகள் நடத்தியது. கன்னியாகுமரி, திருநெல்வேலி, தூத்துக்குடி மாவட்டங்களைச் சார்ந்த சுமார் 10,000 மாணவிகள் பயிற்சிபெற்றனர். இவர்களுக்கான தேர்வையும் மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகமே நடத்தி, சான்றிதழையும் வழங்கியது. 2004-ல் N.C.T.E.-யின் அனுமதி இல்லாமல் இந்த வகுப்புகள் நடத்தப்பட்டதாக ஒரு சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது. அனுமதி பெறாததற்கு இந்த மாணவிகள் காரணம் அல்ல; குற்றவாளிகள் அல்ல என்றே நான் கருதுகிறேன். எனவே, எதிர்காலம் கேள்விக்குறி . . .

முற்பகல் 9-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வியை மட்டும் கேளுங்கள்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** எதிர்காலம் கேள்விக்குறியாக்கப்பட்டுள்ள இந்த மாணவிகளுக்குத் தவிர்ப்பாணை அளித்து, இவர்களின் சான்றிதழ்களை அங்கீகரித்து, வேலை நியமனம் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் மானியக் குறிப்பிலேயே சமுதாயக் கல்லூரிகளைப் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறேன். இப்பொழுது சில பல்கலைக்கழகங்கள் ஆங்காங்கே இதுபோன்ற சமுதாயக் கல்லூரிகளை நடத்தினாலும்கூட அவற்றிற்குப் பல்கலைக்கழக அங்கீகாரங்கள் கொடுத்திருந்தாலும், N.C.T.E. போன்றவைகளுடைய அங்கீகாரங்கள் கிடைக்காமல் இருப்பது உண்மைதான். அதற்கான முயற்சிகளை அந்தந்தப்

பல்கலைக்கழகங்களே மேற்கொண்டு, நடவடிக்கை எடுப்பதற்கு இந்த அரசு வலியுறுத்தும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி செல்வி ராமஜெயம்.

**திருமதி செல்வி ராமஜெயம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய புவனகிரி தொகுதியில் அரசு தொழிற்கல்விக் கல்லூரி அமைப்பதற்கு இந்த அரசு ஆவன செய்யுமா என்று தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன். மேலும், எங்களுடைய சி.முட்லூர், அரசு கலைக் கல்லூரியில் அரசு சார்பில் 8 வகுப்பறைகள் கொடுத்துள்ளதற்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, மேலும், அங்கு 8 வகுப்பறைகளும், கூடுதல் பாடப் பிரிவுகளும் வழங்க இந்த அரசு ஆவன செய்யுமா எனத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புவனகிரி தொகுதிக்குப் பக்கத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. அங்கே பொறியியல் கல்லூரிகள், தொழில்நுட்பப் பிரிவுகள் என்று பல பிரிவுகள் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நன்கு அறிவார்கள். அங்கே இருக்கிற கிள்ளை அரசினர் கலைக் கல்லூரி, 25 ஆம் ஆண்டு விழாவைக் கொண்டாடியதையொட்டி அங்கே இந்த ஆண்டு 8 வகுப்பறைகள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. எந்தெந்தக் கல்லூரிகள், எத்தனை வகுப்பறைகள் கேட்டார்களோ, அத்தனை வகுப்பறைகளும் கிட்டத்தட்டக் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அங்கே தேவைப்படுமானால், அந்தக் கல்லூரியில் அந்த வகுப்பறைகளைக் கட்டிக் கொடுப்பதற்கும் அரசு நடவடிக்கை எடுக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்களுடைய விழுப்புரம் மாவட்டத்திலே தொழில்நுட்பக் கல்லூரிகள் என்பது மிகக் குறைவான எண்ணிக்கையில்தான் இருக்கின்றன.



ரிஷிவந்தியம், சங்கராபுரம், முகையூர் ஆகிய தொகுதிகள் மிகவும் பின்தங்கிய தொகுதிகள். இந்த 3 தொகுதிகளை மையமாக வைத்து ஒரு தொழில்நுட்பக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா என்று உங்கள்மூலமாக அறிய விரும்புகின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உயர் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு டாக்டர் க. பொன்முடி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் திரு. சு. சிவராஜ் அவர்களே இதுபோன்ற கல்லூரிகளைத் துவக்குகிற அனைத்து வசதிகளும் படைத்தவர். அதே பகுதியிலேயே அவர் துவக்க முன்வந்தால், நிச்சயமாக அரசு அனுமதி வழங்கும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 184, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம், மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**184—** **கடனுதவி**

***298—திரு. கோவை தங்கம்:**

மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சிறு தொழில் செய்யக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் சிறு தொழில் செய்யக் கடன் உதவி வழங்கப்படுமா என்று கேட்டிருக்கிறார்கள். வால்பாறையில் சிறு தொழில் செய்யக் கடன் உதவி வழங்க அரசு ஆவன செய்து வருகிறது.

[2007 மே 9

வால்பாறை தொகுதியில் படித்து வேலையில்லாமல் இருக்கும்
இளைஞர்கள் சிறு தொழில் துவங்க முன்வந்தால், அவர்களது திட்ட
மதிப்பீட்டைப் பொறுத்து, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத்
திட்டத்தின்கீழ் உதவிகள் அளிக்கப்படும். மேலும், தாட்கோமூலமும்,
மகளிர் மேம்பாட்டுத் திட்டத்தின்மூலமும் சுயமாகத் தொழில் மற்றும்
வியாபாரம் துவங்க இந்த அரசு பல நடவடிக்கைகளை எடுத்து
வருகிறது.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
வால்பாறையில் தொழிற்சாலைகள் ஒன்றும் கிடையாது. வணிக
வியாபாரத் தொழிற்சாலைகளும், சிறு வியாபாரங்களும்
குறைவாகத்தான் இருக்கின்றன. அங்கே இருப்பது தேயிலைத்
தொழிற்சாலைகள் மட்டும்தான். அவற்றிலும், சம்பளம் குறைவாக
வழங்குவதால், அங்கிருந்த 50,000 பேர்கள் கடந்த 5 ஆண்டுகளிலே
வால்பாறையைவிட்டு வெளியேறிவிட்டார்கள். ஆகவே, அங்கே
வறுமையில் இருக்கின்ற, படித்துவிட்டு வேலை இல்லாமல் இருக்கின்ற
இளைஞர்கள், சிறு தொழில் செய்யக் கடனுதவி வழங்குவதற்கு,
வங்கிகள்மூலம் இல்லாமல் அரசே உதவி செய்வதற்கு முன்வருமா
என்பதைத் தங்களுடைய வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை
அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத்
தலைவர் அவர்களே, பாரதப் பிரதமரின் சுய வேலைவாய்ப்புத்
திட்டத்தின்கீழ், படித்து வேலையில்லாத இளைஞர்களுக்கு சிறு
தொழில் தொடங்க வங்கிகள்மூலம் கடனுதவி வழங்கும் திட்டம் நமது
மாநிலத்தில் சிறப்பாகச் செயல்படுத்தப்பட்டு வருகிறது.
இத்திட்டத்திற்கான அடிப்படைத் தகுதிகளின்படி 18 முதல் 35
வயதிற்கு உட்பட்ட, குறைந்தபட்சம் 8 ஆம் வகுப்பு
தேர்ச்சிபெற்றவர்கள், அவர்தம் மொத்தக் குடும்ப வருமானம்
ஆண்டுக்கு ரூ.40,000/-க்கு மிகாமலும், தொடர்ந்து அப்பகுதியில் 3
ஆண்டுகளாகக் குடியிருப்பவர்களாகவும் இருத்தல் வேண்டும். ஆதி
திராவிடர், பழங்குடியினர், பெண்கள், ஊனமுற்றோர், படை வீரர்கள்
ஆகியோருக்கு வயது உச்சவரம்பில் 10 ஆண்டுகள் தளர்வு



2007 மே 9]

செய்யப்பட்டு, தனி நபருக்கு அதிகபட்சமாகத் தொழில் செய்வதற்கு
ரூபாய் இரண்டு இலட்சமும், சேவைப் பிரிவில் ரூபாய் இரண்டு
இலட்சம் வரையிலும் வியாபாரம் செய்வதற்கு ரூபாய் ஒரு இலட்சம்
வரையிலும் மேற்கண்ட தொழில்கள் தொடங்குவதற்காக கடன்
வழங்கப்படுகிறது. மேலும் இத்திட்ட மதிப்பீட்டில் 15 சதவிகிதம்,
அதிகபட்சம் 7,500 ரூபாய் வரை மானியமாக வழங்கப்படுகிறது.
இத்திட்டத்தின்கீழ் பயன்பெற விரும்புவோர், கோயமுத்தூர் மாவட்டத்
தொழில் மையப் பொது மேலாளரை அணுகி, ஆலோசனை பெறலாம்.

முற்பகல் 9-55

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,
வால்பாறை தொகுதியில் இருக்கின்ற அரசுடைமையாக்கப்பட்ட
வங்கிகளை நான் பலமுறை அணுகி ஏழையெளிய ஆதி திராவிட,
பிற்படுத்தப்பட்ட, சிறுபான்மை மக்களுக்காக, படித்துவிட்டு
வேலையில்லாதவர்களுக்காக சிறு தொழில் செய்வதற்குக் கடனுதவி
கேட்டபோது, அங்கே கடன் வழங்கப்படவில்லை. கோயமுத்தூர்
மாவட்டத்திலே மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலே
நடைபெறுகின்ற Lead Bank meeting, அந்தக் கூட்டத்திலும் நான் பல
முறை வலியுறுத்தி, வற்புறுத்தி இருக்கின்றேன். நிரந்தரத்
தொழிலாளர்கள், அரசுப் பணியிலே இருக்கின்றவர்கள் பரிந்துரை
செய்தும்கூட இரண்டு பேர்கள் பரிந்துரை செய்தும்கூட,
அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகளிலே
கடனுதவி வழங்க முன்வருவதில்லை. கோயமுத்தூர்
மாவட்டத்தினுடைய அமைச்சர் என்ற முறையிலும், சிறந்த
முறையிலே இப்போது பணியாற்றிக்கொண்டிருக்கின்ற அமைச்சர்
என்ற முறையிலும் அவரை நான் கேட்டுக்கொள்வது,
அரசுடைமையாக்கப்பட்ட வங்கிகள், கூட்டுறவு வங்கிகள் எல்லாம்
கடனுதவி வழங்குவதற்குக் காலதாமதம் செய்வதுடன் கடன்
வழங்கவும் முன்வராததால், படித்துவிட்டு வேலையில்லாத
இளைஞர்களுக்கு வேலைவாய்ப்பை உருவாக்குகின்ற வகையிலேயும்
சிறு தொழில்களை உருவாக்குவதற்கு வழிவகை செய்கின்ற
வகையிலேயும், கூட்டுறவு வங்கியைப்போல, அரசே கடனுதவி
வழங்குவதற்கு ஒரு வங்கியை ஏற்படுத்திக் கடனுதவி வழங்குவதற்கு
முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டம் சிறப்பாக நடைபெற வேண்டுமென்றால் வங்கியாளர்களுடைய ஒத்துழைப்பினால் மட்டுமே முடியும். அதற்காக நமது மாண்புமிகு மத்திய நிதி அமைச்சர் திரு. ப. சிதம்பரம் அவர்களும், நமது மாண்புமிகு நிதி அமைச்சர் பேராசிரியர் அவர்களும், மின்சாரத் துறை அமைச்சர் அவர்களும் 9-9-2006 அன்று நமது கோட்டையில் வங்கியினுடைய தலைமை அதிகாரிகளையெல்லாம் வரவழைத்து, ஒரு கூட்டம் நடத்தினார்கள். அதன்வாயிலாக இப்பொழுது ஓரளவு முன்னேற்றம் ஏற்பட்டு, கடந்த காலத்தில் இல்லாத அளவுக்குக் கடனுதவிகள் அதிகமாக வழங்கப்படுகின்றன. இன்னும் பல்வேறு வகைகளிலே நாங்களும் முயற்சிகளை எடுத்துக்கொண்டிருக்கிறோம். ஆகவே, விரைவில் கடன் வழங்குவதில் நல்ல முன்னேற்றம் ஏற்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது நம்முடைய அரசு சிறு தொழில் தொடங்க அதிகமாக ஆர்வத்தைக் காட்டி வருகின்றது. அந்த வகையிலே, இதுபோன்ற சிறு தொழில்கள் தொடங்குவதற்கு, குறிப்பாக, படித்த இளைஞர்கள், அதிலும் குறிப்பாகப் பெண்கள் தொடங்குகிற தொழில்களுக்கு 50 சதவிகிதம் மானியம் கொடுக்க நம்முடைய அரசு முன்வருமா எனத் தங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பிரதமரின் சுய வேலைவாய்ப்புத் திட்டத்தின்கீழ் பெண்களுக்கு முன்னுரிமை கொடுத்து, 10 ஆண்டுகள் தளர்வு, அதாவது 35 ஆண்டுகளுக்குப் பதிலாக 45 ஆண்டுகள் வரை அவர்களுக்கு வயதுத் தளர்வு அளிக்கப்பட்டிருக்கிறது. இன்னும் பல சலுகைகள் வழங்கப்பட்டிருக்கின்றன. பெண்களுக்கு 5 சதவிகிதம் மானியமும் கூடுதலாகக் கிடைப்பதற்கு வழிவகைகள் செய்யப்பட்டிருக்கின்றன. நமது புதிய தொழில் கொள்கையை மாண்புமிகு முதல்வர் அவர்கள் விரைவிலே அறிவிப்பார்கள். அப்போது சிறு தொழில் கொள்கையும் அறிவிக்கப்பட்டு, மேலும் பல சலுகைகள் பெண்களுக்கு வழங்கப்படும்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 185, மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு, மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**185—**

## குடமுழுக்கு

***5169—திரு. அருள் அன்பரசு:**

மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சோளிங்கர் தொகுதியில் உள்ள அருள்மிகு ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

வேலூர் மாவட்டம், சோளிங்கர் அருள்மிகு ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலுக்குத் திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்தி நீண்ட காலமாகிவிட்டபடியால், அத்திருக்கோயிலில் திருப்பணி செய்திடத் திட்டமிடப்பட்டு, ரூபாய் 4 கோடி மதிப்பீட்டில் திருப்பணிகள் செய்திடும்பொருட்டு, கடந்த 28-2-2007 அன்று நானும், இந்தக் கேள்வியை எழுப்பி இருக்கக்கூடிய சம்பந்தப்பட்ட நம்முடைய சட்டமன்ற உறுப்பினர் திரு. அருள் அன்பரசு அவர்களும் மற்றும் துறையினுடைய அதிகாரிகளும் அங்கே சென்று, அந்தத் திருப்பணியைத் தொடங்கியிருக்கின்றோம். பணிகள் விரைவாக முடிக்கப்பட்டு, வெகுவிரைவில் குடமுழுக்கு நடைபெறும்.

முற்பகல் 10-00

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோளிங்கர் அருள்மிகு ஸ்ரீ யோக நரசிம்மர் திருக்கோயிலுக்குக் குடமுழுக்கு நடத்திட உடனடியாக நடவடிக்கை எடுத்திட்ட மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றியினை சோளிங்கர் தொகுதி மக்களின் சார்பாக நான் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, சோளிங்கர் திருக்கோயிலுக்கு rope car வசதி செய்து தரப்படும் என்று, வரலாற்றுச் சிறப்புமிக்கதொரு அறிவிப்பினைக் கடந்த ஆண்டு மாண்புமிகு முதல்வர் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் வெளியிட்டார்கள். அதற்கான பூர்வாங்கத் தொடக்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுவிட்டனவா? அப்படித் தொடங்கப்பட்டிருந்தால், அப்பணி எத்தனை மாதங்களில் நிறைவுபெறும்? அதேபோல, சோளிங்கர் திருக்கோயிலுக்கு அறங்காவலர் குழு எப்போது அமைக்கப்படும் என்பதைத் தங்களின் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, rope car திட்டம் கடந்த ஆண்டு அறிவிக்கப்பட்டிருக்கிறது. தற்போது பூர்வாங்க வேலைகள் நடைபெற்றுக்கொண்டிருப்பதை சட்டமன்ற உறுப்பினர் அவர்களும் நன்றாக அறிவார்கள். அதற்கான மதிப்பீடு தயாரிக்கும் பணி உள்ளிட்ட மற்ற பணிகளெல்லாம் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன. நிதியாதாரங்களைப் பொறுத்தவரை, அந்தப் பணியை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி வசதிகளும் ஏற்பாடாகியிருக்கின்றன. ஆகவே, சோளிங்கர் மலையில் வெகுவிரைவில் rope car வசதி செய்து தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். அதேபோல, அறங்காவலர் குழுவைப் பற்றிக் கேள்வி எழுப்பினார்கள். அங்கேயிருக்கின்ற இணை ஆணையர்மூலமாகப் பணிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. சம்பந்தப்பட்ட இணை ஆணையர், துணை ஆணையர் ஆகியோர் சட்டமன்ற உறுப்பினரிடத்திலே அந்த விவரங்களைத் தெரிவிப்பார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.



**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடமுழுக்கு நடத்துவது சம்பந்தமாக, (குறுக்கீடு) குடமுழுக்கு எனக்கில்லை. ஈரோடு மாவட்டம், சென்னிமலைக்கு அருகில் உள்ள மைலாடி என்கிற கிராமத்தில் உள்ள அருள்மிகு செல்லாண்டி அம்மன் திருக்கோயிலில், அந்த ஊர்ப் பொது மக்களெல்லாம் சேர்ந்து, கடந்த 28-3-2007 அன்று திருக்குடமுழுக்கு பூஜை நடத்தியிருக்கிறார்கள். ஆனால், அந்தக் குடமுழுக்கு தமிழ் முறைப்படி நடந்த காரணத்தினால், அங்கேயிருக்கிற அர்ச்சகர்கள் அதை ஏற்றுக்கொள்ள முடியாது என்று தொடர்ச்சியாக அங்கே அதற்கு எதிர்ப்புத் தெரிவித்து வருகிறார்கள். கடந்த மார்ச் மாதம் 28 ஆம் தேதி பேரூர் ஆதீனத்தையெல்லாம் வைத்து, முறைப்படி தமிழில் அந்தக் குடமுழுக்கு நடத்தப்பட்டது. ஆனால், அங்குள்ள அர்ச்சகர்கள் அதை ஏற்றுக்கொள்ளாமல், ஒரு நாள் இரவிலே, அதற்குப் போட்டியாக ஒரு குடமுழுக்கு நடத்தியதாகச் செய்திகள் வந்து, அந்த ஊர் மக்களிடத்திலே ஒரு பரபரப்பு ஏற்பட்டு, இன்றைக்கு அந்தச் செய்தி வந்திருக்கிறது. மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு அறநிலையத் துறை அமைச்சர் அவர்களுக்கும்கூடக் கடிதம் எழுதியிருக்கிறார்கள். அதனுடைய நகல்தான் இப்போது என் கையில் இருக்கிறது. ஆகவே, அரசினுடைய நிலைப்பாட்டிற்குப் புறம்பாக அங்கேயுள்ள சில அர்ச்சகர்கள் தொடர்ந்து, வேண்டுமென்றே, இதுபோன்று தமிழில் நடைபெறுகின்ற குடமுழுக்கைத் தடை செய்ய வேண்டுமென்ற நோக்கத்திலே ஈடுபடுகின்றனர். அந்த அர்ச்சகர்கள்மீது இந்த அரசு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதை நான் உங்கள்மூலம் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குடமுழுக்கு முறைகளைப் பொறுத்தவரையில், தமிழ் மொழியிலும் நடத்துவதற்கு ஆங்காங்கு முயற்சிகள் செய்கின்றார்கள். இது வெற்றிகரமாகவும் நடந்திருக்கின்றது. ஆனால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்டுச் சுட்டிக்காட்டுகின்ற அந்தத் திருக்கோயிலில் அவ்வாறு முறைகேடுகள் நடைபெற்றிருந்தால், விசாரித்து, தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 186, திரு. ஆர்.டி. கணேசன், மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

186—  [2007 மே 9

## சுற்றுச் சுவர்

***427—திரு. ஆர்.டி. கணேசன்:**

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்குச் சுற்றுச் சுவர் கட்டிக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

தேனி தொகுதி, வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளியைச் சுற்றி வனத் துறைமூலமாகப் பசுமை வேலி அமைத்திட முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் மாண்புமிகு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் 10 உயர்நிலைப் பள்ளிகளும், 10 நடுநிலைப் பள்ளிகளும் தரம் உயர்த்தப்பட்டன. வீரபாண்டி அரசு மேல்நிலைப் பள்ளிக்குக் கட்டடங்களெல்லாம் முழுமையாகக் கட்டப்பட்டு, போதுமான வகுப்பறைகளும் இருக்கின்றன. இப்பள்ளி ஊரின் நடுவே அமைந்திருக்கின்ற காரணத்தினாலும், அதன் அருகே காலனிப் பகுதிகள் அமைந்திருப்பதாலும், அங்கிருக்கின்ற பன்றிகள், பள்ளி நடைபெறுகின்ற நேரத்தில் மேல்நிலைப் பள்ளியின் மைதானத்தில் விளையாடிக்கொண்டிருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்துகின்ற வகையில், அதற்குச் சுற்றுச் சுவரும், அதேபோல, தேனி மாவட்டத்தில் தரம் உயர்த்தப்பட்டிருக்கின்ற அனைத்துப் பள்ளிகளுக்கும் சுற்றுச் சுவர் அமைக்கவும் அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்பதனை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.



2007 மே 9]  முற்பகல் 10-05

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் பல முறை இந்த அவையிலே குறிப்பிட்டிருப்பதைப்போல, இந்த ஆண்டு முதல் நபார்டு வங்கியினுடைய உதவியைப்பெற்று, பல்வேறு பள்ளிகளுக்குச் சுற்றுச் சுவர் கட்டித் தருவதற்கு அரசு முடிவெடுத்து, அதற்காக நபார்டினுடைய ஒப்புதலைப் பெற்றிருக்கிறோம். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடக்கூடிய வீரபாண்டியிலுள்ள அந்தப் பள்ளி, தேனி மாவட்டத்திலே இருக்கக்கூடிய ஒரு மிக முக்கியமான பள்ளி என்பதை அரசு உணர்ந்திருக்கிறது. இதிலே ஏற்கெனவே நபார்டு வங்கியின் ஒன்று முதல் ஏழு வரை இருக்கக்கூடிய திட்டத்தின்கிழே பயன்பட்டிருக்கக்கூடிய பள்ளிகளுக்கு, முதற்கட்டமாகத் தேவையான சுற்றுச் சுவர் கட்டுவதற்கு அரசு உத்தேசித்திருக்கிறது. அவர் குறிப்பிடக்கூடிய வீரபாண்டியிலுள்ள பள்ளிக்கு நபார்டு இரண்டாவது திட்டத்தின்கிழே 10 வகுப்பறைகள் கட்டப்பட்டு, ஆய்வகமும் கட்டப்பட்டிருக்கக்கூடிய காரணத்தினாலே, அதற்கு இப்பொழுது 1,600 மீட்டருக்குச் சுற்றுச் சுவர் தேவைப்படுகிறது. ஏறத்தாழ ஒன்றரைக் கிலோ மீட்டருக்கு நாம் அதைக் கட்ட வேண்டும். ஏனென்றால், அந்தப் பள்ளி 10 ஏக்கர் அளவிலே பெரிய பள்ளியாக இருக்கிறது. எனவே, இந்த ஆண்டு அந்தப் பள்ளி நிச்சயமாக எடுத்துக்கொள்ளப்பட்டு, அங்கே சுற்றுச் சுவர் அமைத்துத் தரப்படும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டம், தேனி ஒன்றியம், இலட்சுமிபுரத்திலுள்ள தனியார் இராமகிருஷ்ணா தொடக்கப் பள்ளி நிர்வாகத்தினரிடையே இருந்த கருத்து வேறுபாட்டின் காரணமாகக் கடந்த 10 வருடங்களுக்கு முன்பு 300 மாணவ, மாணவியர்கள் படித்துவந்த நிலை மாறி, இன்றையதினம் 50 மாணவர்களுக்கும் குறைவாகவே பயின்று வருகின்றார்கள். அதை அரசிடம் ஒப்படைக்கக் கோரி. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கேள்வி சுற்றுச் சுவர் குறித்தது. மூலக் கேள்வியைவிட்டு எங்கெல்லாமோ போய்க்கொண்டிருக்கிறீர்களே?

**திரு. ஆர்.டி. கணேசன்:** ஒன்றே, ஒன்று. கல்வித் துறை சம்பந்தமான கேள்வி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** கல்வித் துறையென்றால் என்ன வேண்டுமானாலும் கேட்கலாமா? (குறுக்கீடு)

வினா எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள். (குறுக்கீடு) அவர் என்னவெல்லாமோ கேட்டுக்கொண்டிருக்கிறார். நீங்கள் அனுமதிக்கச் சொல்கிறீர்கள். சரி, திரு. கணேசன், கேளுங்கள்.

**திரு. ஆர்.டி. கணேசன்:** அதை அரசிடம் ஒப்படைப்பதற்கு, கிராமத்திலிருந்து இரண்டு ஏக்கர் நிலமும், நாடாளுமன்ற உறுப்பினரிடமிருந்து பள்ளிக் கட்டடம் கட்டுவதற்கு சிபாரிசுக் கடிதமும் கொடுத்து, அரசு இதுவரை ஏற்காமல் இருக்கின்றது. அந்தப் பகுதியின் நலன் கருதி, வருகின்ற ஆண்டில் அந்த இராமகிருஷ்ணா தொடக்கப் பள்ளியினை அரசு ஏற்று நடத்துவதற்கு முன்வருமா என்பதனைப் பேரவைத் தலைவர் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் எழுப்பியிருக்கக்கூடிய அந்தப் பள்ளியினுடைய நிலைமையைக் குறித்து ஏற்கெனவே அவர்கள் ஒரு கவன ஈர்ப்புத் தீர்மானத்தைக்கூட இந்த அவையினுடைய கவனத்திற்குக் கொண்டு வருவதற்காகக் கொடுத்திருக்கிறார்கள். இதைப் பயன்படுத்திக்கொண்டு, நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவிக்க விரும்புவது என்னவென்று சொன்னால், அந்த நிர்வாகத்திலே இருக்கக்கூடியவர்கள், அந்தப் பள்ளியினுடைய கட்டடத்தையும், அதேபோல அந்தப் பள்ளிக்குச் சொந்தமாக இருக்கக்கூடிய இடத்தையும் அரசுக்கு வழங்குவதற்கு முறையாக ஒரு தீர்மானத்தைப் போட்டு, அரசுக்குத் தருவார்களானால், இந்த ஆண்டே அந்தப் பள்ளியை அரசு எடுத்துக்கொள்வதற்கு வாய்ப்பு நிச்சயமாக இருக்கிறது என்பதை நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 187, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்.



**187—**

## சாலை வசதி

***12306—திரு. ஓ. சுப்பிரமணியம்:**

மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானிசாகரிலிருந்து தெங்குமரஹடா செல்லும் மண் பாதையைத் தார்ச் சாலையாக மாற்றித் தர நடவடிக்கை எடுக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஈரோடு மாவட்டத்தில் பவானிசாகரிலிருந்து தெங்குமரஹடா வரையுள்ள சாலை தற்போது பழுதடைந்து, போக்குவரத்துக்கு மிகவும் மோசமான நிலையில் உள்ளது என்பது உண்மைதான். இச்சாலையினை மேம்படுத்த, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டம், பகுதி-2 திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டு, மைய அரசின் ஒப்புதல் கிடைக்கப்பெறாததால் பணிகள் மேற்கொள்ளப்படவில்லை. இச்சாலையினை மேம்படுத்த, ஊரக வளர்ச்சித் துறை மற்றும் நெடுஞ்சாலைத் துறையினால் தார்ச் சாலையாக மாற்ற, பிரதம மந்திரி கிராமச் சாலைகள் மேம்பாட்டுத் திட்டத்தில் ஒப்புதல் பெற்று, வனப் பாதுகாப்புச் சட்டம், 1980-ன்படி உரிய கருத்துரு அனுப்பப்பட்டு, தேவையான நிதியை வனத் துறைக்கு ஒதுக்குவதன்மூலம் மைய அரசின் அனுமதிபெற்று, வனத் துறைமூலம் பணி மேற்கொள்ளப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஓ. சுப்பிரமணியம்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் அந்தப் பாதையை விரைவாக அமைத்துத் தந்து, அங்கே இருக்கக்கூடிய பழங்குடி மக்களுக்கு யானை, புலி, கரடி போன்ற மிருகங்களிடமிருந்து பாதுகாப்பு வழங்க வேண்டுமென்று கேட்டு, நன்றி தெரிவித்து, அமர்கின்றேன். நன்றி.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 188, மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**188—**

## புதிய பாலம்

***3554—திரு. வை. சிவபுண்ணியம்:**

மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி மாநில நெடுஞ்சாலையில் தட்டாங்கோயில் என்ற இடத்தில் உள்ள கோரையாற்றில் பழுதடைந்துள்ள போக்குவரத்துப் பாலத்திற்கு மாற்றாக புதிய பாலம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மன்னார்குடி—திருத்துறைப்பூண்டி நெடுஞ்சாலையிலே இருக்கின்ற கோரையாற்றின் குறுக்கே இருக்கிற பாலம் என்பது 130 ஆண்டு காலப் பழைமையான பாலம். அதை மாற்றிக் கட்டித் தரப்பட வேண்டுமென்ற கோரிக்கை வைக்கப்பட்டு, அதற்குரிய பணிகளெல்லாம் தொடங்கி நடைபெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன. அதற்காக மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கும், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், இதைக் கட்டுகிறபொழுது அருகிலே இருக்கிற பழைமையான பாலங்களான முள்ளியாறு, மணல்போக்கியாறு, அய்யனாறு ஆகிய மூன்று பாலங்களையும் இணைத்தால்தான், இந்தப் பாலம் கட்டுவது பொருத்தமாக அமையும் என்ற காரணத்தினாலே, அதற்குரிய அனுமதியும் வழங்கப்பட்டிருக்கிறதா, அதையும் இந்த நிதியாண்டுத் திட்டத்திலே இணைத்துச் செயல்படுத்துவதற்குரிய முயற்சி எடுக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சாவூர்–மன்னார்குடி–திருத்துறைப்பூண்டி–வேதாரண்யம்–கோடியக்கரை சாலை மாநில நெடுஞ்சாலையாகும். இதில் சுமார் 39-வது கிலோ மீட்டரில், அதாவது கோரையாற்றின் குறுக்கே சுமார் 180 இலட்சம் ரூபாய் மதிப்பில் பாலம் கட்டுவதற்காக இந்தப் புதிய அரசு பொறுப்பேற்ற பிறகு அரசு ஆணை வழங்கப்பட்டிருக்கிறது. அதற்குரிய மதிப்பீடுகளும், வடிவமைப்பும் தலைமைப் பொறியாளரால் இறுதி செய்யப்பட்டு, திருச்சி, நபார்டு மற்றும் கிராமச் சாலைத் திட்டத்தினுடைய கண்காணிப்புப் பொறியாளரிடத்திலே ஒப்படைக்கப்பட்டிருக்கிறது. வருகிற ஜூன் மாதம் 7 ஆம் தேதி ஒப்பந்தப்புள்ளிகள் அழைக்கப்படவிருக்கின்றன. ஒப்பந்தப்புள்ளி இறுதி செய்யப்பட்ட பிறகு, அந்தப் பாலப் பணி நடைபெறும். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய அரசு ஏற்பட்ட பிறகு, இதேபோல இன்னும் பல பாலங்கள் பழுதடைந்துள்ளதாகக் குறிப்பிட்டிருக்கின்றார்கள். இம்மாநில நெடுஞ்சாலையினுடைய அகலம் சுமார் ஐந்தரை மீட்டராக உள்ளது. அந்தச் சாலையையும் அகலப்படுத்துவதற்காக இந்த ஆண்டு பரிசீலிக்கப்படவிருக்கிறது. அந்த அடிப்படையில், டெல்டா பகுதிகளில் இருக்கின்ற வலுவிழந்த பாலங்கள், குறிப்பாக ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட Arch பாலங்கள் எல்லாம் வலுவிழந்து இருப்பதை நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய கவனத்திற்கு எடுத்துச் சொன்னோம். அந்த அடிப்படையில் இந்த ஆண்டு, மாநிலம் முழுவதும் இருக்கின்ற வலுவிழந்த பாலங்களை மாற்றிக் கட்டுவதற்காக சுமார் ரூ.160 கோடி வழங்கவுள்ளார்கள். மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலங்களையும் இந்த அரசு நிச்சயம் பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஏற்கெனவே சொன்னதுபோல, இந்த ஆட்சி பொறுப்பேற்றதற்குப் பின்னாலேதான் காவிரி டெல்டா பகுதிகளிலே

வலுவிழந்து இருக்கிற பாலங்கள், அநேகமாக நூற்றுக்கும் மேற்பட்ட பாலங்களை இந்த ஆண்டு கட்டுவதற்காக நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, அந்தப் பணிகள் எல்லாம் பல இடங்களிலே தொடங்கப்பட்டிருக்கின்றன. அதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கும், மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்களுக்கும் மீண்டும் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். அந்தக் கோரிக்கையின் அடிப்படையிலே, அதற்கு அருகிலே இருக்கின்ற முள்ளியாறு, அய்யனாறு, மணல்போக்கியாறு மற்றும் அரிச்சந்திரா பாலங்களையும், இணைத்துச் செயல்படுத்துவதற்குரிய முயற்சியை மேற்கொள்ள வேண்டுமென்ற கோரிக்கையை வைத்து, அதற்கான விடையை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. துரைமுருகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தஞ்சை மாவட்டத்தில் காவிரி, வெண்ணாறு, வெட்டாறுபோன்ற பகுதிகளில் ஓடுகிற கால்வாய்கள்மீது பாலங்கள் இருக்கின்றன. அவை எல்லாம் மிகப் பழைமையானவை. அந்தக் கட்டுமானங்கள் எல்லாம் இன்றைக்குத் தகர்ந்து போய் இருக்கிற காரணத்தினால், அவற்றையெல்லாம் புதுப்பிக்க வேண்டும். பழுதடைந்த பாலங்களைப் புதிதாகக் கட்ட வேண்டும் என்பதற்காக மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் 30 கோடி ரூபாயை ஒதுக்கித் தந்திருக்கிறார்கள். அந்தப் பணி இந்த ஆண்டு எடுத்துக்கொள்ளப்படும் என்ற மகிழ்ச்சிகரமான செய்தியைத் தஞ்சை மாவட்டத்திலே இருக்கிற மக்களுக்கும், உறுப்பினர்களுக்கும் நான் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திருமதி எஸ். தேன்மொழி.

**திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிலக்கோட்டைத் தொகுதியில், வத்தலக்குண்டு ஒன்றியத்தில், கூட்டாத்துப்பாளையத்தில் உள்ள தரைப் பாலத்தில், ஆற்றில் வெள்ளம் வரும் காலத்தில், பொது மக்களும், ஆடு, மாடுகளும் வெள்ளத்தில் அடித்துச் செல்லப்பட்டு, உயிர்ச் சேதம் ஏற்படுகின்றது. கடந்த வருடம்கூட இரண்டு பேர் அடித்துச் செல்லப்பட்டு, இறந்துவிட்டார்கள். அதைக் கருத்தில்கொண்டு, ஆற்றின் குறுக்கே புதிய மேம்பாலம் கட்டுவதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழகத்தில் அமைந்துள்ள பல பாலங்கள் நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்தபோதுதான் கட்டப்பட்டிருக்கின்றன. தலைவர் கலைஞர் அரசானது பாலம் அமைக்கின்ற அரசாகவே அமைந்திருக்கிறது. அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிற அந்தப் பாலத்தையும் நிச்சயமாக இந்த அரசு பரிசீலிக்கும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வீ.ஏ.டி. கலியவாதன்.

**திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எனது தொகுதியிலே நிறையப் பாலங்கள் பழுதடைந்துள்ளன. ஆனால், பல முறை இந்த மன்றத்திலே கூறியும், இதுவரை எந்தவிதமான நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை. குறிப்பாக, ஆயந்தூர்-விழுப்புரம் செல்லக்கூடிய பகுதியிலே, திருக்கோவிலூர் அருகில் உள்ள இரும்புத் தரைப் பாலம் முழுமையாகப் பாதிக்கப்பட்டு இடிந்து விழுந்துவிட்டால், அந்த வழிக்கு மாற்று வழிகூட இல்லை. எனவே, தயவுசெய்து, அது குறித்து அருள்கூர்ந்து, உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமாயும் மற்றும் எனது கிராமத்தின் வழியாகச் செல்லக்கூடிய வழியிலே இரண்டு பாலங்கள் பழுதடைந்துள்ளன. வீரசோழபுரம், காக்காக்குப்பம் ஆகிய பகுதிகளிலே இருக்கின்ற பம்பையாற்றுப் பாலம் பழுதடைந்துள்ளது. இதற்கு அரசு உடனடியாக நடவடிக்கை எடுத்து, அந்தப் பாலங்களைக் கட்டித் தருவதற்கு உரிய நடவடிக்கை எடுக்குமா என்பதையும் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.

*முற்பகல் 10-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, பல பாலப் பணிகள் கிடப்பிலே கிடந்ததெல்லாம், இன்னும் சொல்லப் போனால், நம்முடைய மாண்புமிகு முதல்வர் தலைவர் கலைஞர் அவர்கள்

நான்காவது முறையாகப் பொறுப்பேற்றிருந்தபொழுது அறிவிக்கப்பட்ட பல பாலங்கள் கட்டப்படாமல் நிலுவையில் இருந்தன. அவற்றையெல்லாம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தோம்.

அதற்குப் பிறகு, கடந்த 2 மாதங்களுக்கு முன்பு ஆய்வு செய்து, தமிழகம் முழுவதற்கும் ஒரு பட்டியல் எடுத்தோம். வலுவிழந்த பாலங்கள், குறுகிய பாலங்கள், பாலங்களே இல்லாத, குறிப்பாக, தரைப் பாலங்களாக இருப்பதையெல்லாம் உயர்மட்டப் பாலங்களாக மாற்றுவதற்குரிய செயற்குறிப்புகளெல்லாம், பட்டியல் எல்லாம் தயாரிக்கப்பட்டிருக்கின்றன. ஏறத்தாழ இதற்கு மட்டும் சுமார் 600 கோடி ரூபாய் அளவிலே தேவைப்படுகின்றது. அந்த அடிப்படையிலே, இந்த ஆண்டு வலுவிழந்த பாலங்களுக்கு, அதாவது சுமை ஏற்றிச்செல்லக்கூடிய கன ரக வாகனங்கள், பேருந்துகள் செல்கின்ற நேரத்திலே, குறிப்பாக ஆங்கிலேயர் காலத்தில் கட்டப்பட்ட அந்த Arch பாலங்கள் எல்லாம் கீழே இறங்குகின்ற சூழ்நிலை நிலவி வருகிறது. இதனால் விபத்து ஏற்பட்டு, உயிரிழப்பு ஏற்படுகின்றது. அந்த அடிப்படையில், நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள் அதற்காக நிதி நெருக்கடி இருந்தாலும்கூட, முதலில் இந்த ஆண்டு 170 கோடி ரூபாய் கொடுத்தார் என்பதனைக் கடந்த வினாவிற்குரிய பதிலிலேயே தெரிவித்துள்ளேன். அந்த அடிப்படையில், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுவது, வேறு பல திட்டத்தில்கூட எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கலாம்.

குறிப்பாக, கடந்த ஆண்டிலேயிருந்தே நபார்டு வங்கி, கிராமச் சாலைகள், அதேபோல, ஊராட்சி ஒன்றியச் சாலைகளிலெல்லாம் இருக்கக்கூடிய பாலங்களைக் கட்டுவதற்காக எங்களுக்கு கோரிக்கை வருகிறது. அந்த அடிப்படையில், நபார்டு வங்கியினுடைய ஒத்துழைப்பை அதற்காக நாங்கள் நாடி இருந்தோம். கடந்த ஆண்டு தாக்கீது அனுப்பப்பட்டது. இந்த ஆண்டு முதலில் அதற்கு முன்னுரிமை தருவதாக நபார்டு வங்கியினர் ஒப்புதல் தந்திருக்கின்றார்கள். நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பரிந்துரையை ஏற்று, நிதித் துறையும் அதற்குப் பரிந்துரை செய்திருக்கின்றது. அந்த அடிப்படையிலே, இந்த ஆண்டு அந்தப் பாலங்கள் எடுத்துக்கொள்ளப்பட இருக்கின்றன. அப்படி வரும்பட்சத்தில், நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகின்ற அந்தப் பாலங்கள் தேவைப்படும்பட்சத்தில், நிச்சயமாக இந்த அரசு அவற்றை எடுத்துக்கொள்ளும் என்பதை இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 189, மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார், மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**189—**

**கல்லூரி**

***698—திரு. து. ரவிக்குமார்:**

மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆதி திராவிடர் நலத் துறை சார்பாகக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆதி திராவிடர் நலத் துறையின் சார்பாகக் கல்லூரி துவக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசிடம் இல்லை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. து. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறையானது ஆயிரத்திற்கும் மேற்பட்ட பள்ளிகளை இப்பொழுது நடத்தி வருகிறது. பள்ளிக் கல்வித் துறைக்கு அடுத்தபடியாக மிக அதிகமான பள்ளிகளை நடத்துகின்ற ஒரு துறையாக இருக்கிறது. இன்றைக்குப் பள்ளிக் கல்வியை முடித்து, கல்லூரிக் கல்வியிலே சேருகின்ற மாணவர்களுடைய விழுக்காடு, தேசிய சராசரியைவிடத் தமிழ்நாட்டிலே அதிகமாக இருந்தபோதிலும்கூட, நம்முடைய மாநில சராசரியைவிட, ஆதி திராவிட மாணவர்களுடைய எண்ணிக்கை ஏறத்தாழ இரண்டு விழுக்காடு அளவிற்குக் குறைவாக இருக்கிறது. இதை நாம் சரி செய்ய வேண்டும் என்று சொன்னால், அதிகமாக இந்த மக்களுக்கு என்று கல்லூரிகளைத் துவக்க வேண்டி இருக்கிறது. அதற்காக, இந்தக் குறையைப் போக்கும்விதமாக, ஆதி திராவிடர் நலத் துறை வாயிலாக கல்லூரிகளைத் துவக்க முன்வருமா என்பதைத் தங்கள் அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் தேர்ச்சி விழுக்காடு இரண்டு சதவிகிதம் குறைவாக இருக்கிறது என்று சொன்னார்கள். 1996-2001 ஆம் ஆண்டுகளில் கடலூர் மாவட்டம், நந்தனார் என்ற பள்ளியில் 90 சதவிகிதம், 80 சதவிகிதம் என்று வாங்கிக்கொண்டிருந்த அந்தப் பள்ளியின் தரம், சென்ற ஆண்டு (2005-2006) வெறும் 7 சதவிகிதம்தான் இருந்தது. ஆனால், அந்தக் குறைகளைக் களைவதற்கு, இன்று பல்வேறு நடவடிக்கைகளை இந்தத் துறை எடுத்துக்கொண்டு வருகிறது. மேலும், உயர் கல்வித் துறையின்மூலமாக, தேவையின் அடிப்படையில் புதிய கல்லூரிகள் துவங்கப்பட்டு வருகின்றன. ஆதி திராவிடர் நலத் துறையின்மூலமாகவோ அல்லது துறைவாரியாகவோ, சமூகவாரியாகவோ புதிய கல்லூரிகள் தொடங்கப்படுவது இல்லை என்று கூறிக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ரவிக்குமார்.

**திரு. து. ரவிக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர் நலத் துறை மற்றும் பிற துறைகள் சார்பாகச் செலவிடப்படும் சிறப்புக் கூறுகள் திட்ட நிதியை எப்படிப் பயன்படுத்த வேண்டும் என்று சொல்லி, 2006 ஆம் ஆண்டு Planning Commission ஒரு தாக்கீதை அனுப்பி இருக்கிறது. அதிலே 19 வழிகாட்டுதல்கள் கொடுக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிலே ஒன்று, இப்படி மாவட்டம்தோறும் கல்லூரிகளைத் துவக்க வேண்டும் என்கின்ற வழிகாட்டுதல் திட்டக் குழுவினாலே நம்முடைய மாநில அரசுக்கு 2006 ஆம் ஆண்டு அளிக்கப்பட்டிருக்கின்றது. திரு. சந்திரபால் என்பவர் கையெழுத்திட்டு அந்தக் கடிதம் நமக்கு வந்திருக்கின்றது. அதன் அடிப்படையிலேயாவது கல்லூரிகளைத் துவக்க நம்முடைய அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.



**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** பேரவைத் தலைவர் அவர்களே, ஆதி திராவிடர்கள் என்ற பெயரால்தான் கல்லூரிகள் அமைய வேண்டும் என்று இல்லை. அது எதிர்காலத்திற்கு உகந்ததாக இருக்காது. நாம் விரும்புகின்ற சமுதாயச் சீர்திருத்தம் மலர்வதற்கும் வழி பிறக்காது. இருந்தாலும்கூட, ஆதி திராவிடர்கள் அதிக உரிமை பெறுகின்ற அளவிற்கும், அதிக இடம் பெறுகின்ற அளவிற்கும் கல்லூரிகள் நிச்சயமாகப் பயன்படும் என்று நான் நம்புகின்றேன். அந்த வகையிலே அமைகின்ற கல்லூரிகள் பெரும்பான்மையாக ஆதி திராவிடர்களுக்கு நலம் பயக்கின்ற வகையிலும், அதே நேரத்திலே, எல்லாச் சமுதாயத்தினரும் இடம் பெறுகின்ற வகையிலும் கல்லூரிகள் அமைய இந்த அரசு முனைப்பான முயற்சிகளை மேற்கொள்ளும். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினா எண் 190, திரு. பெ. கண்ணன், மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**190—**

## புதிய கட்டடம்

***16003—திரு. பெ. கண்ணன்:**

மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சி, இலட்சுமாயூர் பால் கூட்டுறவுச் சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், தாரமங்கலம் தொகுதி, தெசவிளக்கு ஊராட்சி, இலட்சுமாயூர் பால் கூட்டுறவுச் சங்கத்தில் போதுமான நிதி வசதி இல்லாததால், புதிய கட்டடம் கட்ட இயலாது என்பதைத் தங்கள்மூலம் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சேலம் மாவட்டம், தாரமங்கலம் சட்டமன்றத் தொகுதியில், லட்சுமாயூரில் பால் கூட்டுறவுச் சங்கத்தில் 505 பேர்களை உறுப்பினர்களாகக்கொண்டு, அங்கு அவர்கள் 250 லிட்டர் பால் வரை வழங்கிக்கொண்டிருக்கிறார்கள். அந்தச் சங்கத்திலுள்ள உறுப்பினர்களே சேர்ந்து ஒரு காலி நிலமும் வாங்கி, அதில் கட்டடம் கட்டுவதற்கு முன்வந்திருக்கிறார்கள். எப்படியாவது இந்த அரசு அந்தக் கட்டடத்தை நிறுவிக் கொடுக்க வேண்டுமென்று பேரவைத் தலைவர் வாயிலாக வலியுறுத்த விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பால் கூட்டுறவுச் சங்கத்தைப் பொறுத்தளவில் கட்டடங்கள் கட்டுவது என்றால், அவர்களுடைய சொந்த நிதியிலிருந்துதான் கட்டப்படுகிறது. எனவே, தற்போதைய சூழ்நிலையில் அந்தச் சங்கத்தில் போதுமான நிதி இல்லாத காரணத்தால், நிதி வருகிற காலத்தில் அதைப் பற்றிப் பரிசீலனை செய்து, கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தச் சங்கத்தில் நிதியில்லாத காரணத்தினால், அமைச்சர் முன்வந்து அந்தக் கட்டடத்தைக் கட்டித் தருவாரா என்று தங்கள் வாயிலாகக் கேட்க விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன்:** நிதி ஆதாரம் வருகிறபோது நிச்சயமாகக் கட்டடம் கட்டித் தரப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



## (ஆ) உடுக்குறியிடாத வினாக்கள்@
## (பட்டியல்கள் 9 முதல் 11 வரை)
## பட்டியல்-9

1—

### புதிய குடியிருப்புகள்

**வினா எண் 9308—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை தீயணைப்பு அலுவலர் குடியிருப்பை புதுப்பிக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

உடுமலைப்பேட்டை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தில் தற்போது உள்ள துறை குடியிருப்புகளை இடித்துவிட்டு புதிய குடியிருப்புகள் கட்ட பொதுப் பணித் துறை ஆலோசனை வழங்கியதன் அடிப்படையில் தொடர் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. எனவே, இக்குடியிருப்புகளைப் புதுப்பிக்கும் நிலை தற்போது எழவில்லை.

2—

### தீயணைப்பு நிலையம்

**வினா எண் 10535—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், கலவை பேரூராட்சியில் தீயணைப்பு நிலையம் அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், கலவை பேரூராட்சி பகுதியின் 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள்

@ இப்பட்டியல்களில் உள்ள வினாக்களுக்கான விடைகள் அந்தந்த அமைச்சர்கள் ஒப்புதல் அளித்த தேதியன்று உள்ளபடி அமைந்தனவாகும்.

ஆற்காடு மற்றும் ஆரணி ஆகிய இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

**3—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 10977—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) பண்ருட்டி தொகுதி, குள்ளஞ்சாவடியில் தீயணைப்பு நிலையம் அமைத்திட அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கடலூர் மாவட்டம், குள்ளஞ்சாவடிப் பகுதியின் 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் குறிஞ்சிப்பாடி, கடலூர் சிப்காட், பண்ருட்டி மற்றும் பாங்கிப்பேட்டை ஆகிய நான்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

**4—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 11231—திரு. இரா. மாணிக்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குளித்தலை தொகுதியில் தீயணைப்பு நிலையம் எப்போது ஆரம்பிக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

குளித்தலையைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் 8 கி.மீ. தொலைவில் முசிறி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் செயல்பட்டு வருவதால், அங்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.



**5—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 11264—திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) மயிலாடுதுறை மணல்மேட்டில் தீயணைப்பு நிலையம் புதிதாகத் தொடங்க அரசு ஆவன செய்யுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மயிலாடுதுறை, மணல்மேட்டினைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் சீர்காழி, மயிலாடுதுறை மற்றும் குத்தாலம் ஆகிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இருப்பினும், புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைப்பது குறித்தும், ஏற்கெனவே செயல்பட்டு வரும் நிலையங்களை அவ்விடங்களிலிருந்து, தேவைப்படும் வேறு இடங்களுக்கு மாற்றி அமைப்பது குறித்து பரிசீலிக்கவும், உயர் அலுவலர்களைக் கொண்ட ஒரு நிலைக் குழு அரசு ஆணை (நிலை) எண் 519, உள் (காவல்-17) துறை, நாள் 23-6-2005-ன்படி அமைக்கப்பட்டுள்ளது. எனவே, மேற்படி நிலைக் குழுவின் பரிசீலனைக்கு உட்படுத்தப்பட்டு, அதன் அறிக்கையின் அடிப்படையில் இங்கு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் நிறுவுவது குறித்து உரிய தருணத்தில் முடிவெடுக்கப்படும்.

**6—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 11279—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை, அதிராம்பட்டினம் பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தஞ்சாவூர் மாவட்டம், அதிராம்பட்டினம் பகுதியைச் சுற்றி தேவையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளே போதுமானவையாக உள்ளதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

7—

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 11295—திரு. ஏ.கே. போஸ்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருப்பரங்குன்றத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மதுரை மாவட்டம், திருப்பரங்குன்றத்தின் பகுதியைச் சுற்றி தேவையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளே போதுமானவையாக உள்ளதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

8—

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 11987—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், மல்லவாடி பகுதியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, துரிஞ்சாபுரம் ஒன்றியம், மல்லவாடி பகுதியினைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் திருவண்ணாமலை மற்றும் போளூர், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால் இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

9—

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 11989—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கத்தில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் பகுதியினைச் சுற்றி 25 கி.மீ. சுற்றளவிற்குள் போளூர் மற்றும் திருவண்ணாமலை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்கும் நிலை தற்போது எழவில்லை.

10—

**தீயணைப்பு நிலையம்**

**வினா எண் 12386—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலைத் தொகுதி, பரமத்தியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கபிலர்மலைத் தொகுதி, பரமத்திப் பகுதியினைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் புகளூர் மற்றும் நாமக்கல் ஆகிய இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருவதால், அங்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

**11—**

## சிப்காட் வளாகம்

**வினா எண் 13166—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் சிப்காட் வளாகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தற்சமயம் சிப்காட் நிறுவனத்திடம் எந்தவிதமான திட்டமும் இல்லை.

சிப்காட் நிறுவனம் பெரம்பலூர் மாவட்டத்திற்கு அருகில் உள்ள கடலூர் மற்றும் புதுக்கோட்டையில் தொழில் வளாகங்களை உருவாக்கி அங்கு பலவித தொழிற்சாலைகள் இயங்கி வருகின்றன. தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம் (டிட்கோ) பெரம்பலூர் அருகில் ஒரு பல்பொருள் சிறப்புப் பொருளாதார மண்டலம் (Multiproduct Special Economic Zone) அமைக்க நடவடிக்கை எடுத்து வருகின்றது. பெரம்பலூர் மாவட்டம், ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள தொழில் முனைவோர்கள் அவர்களுடைய தேவைக்கேற்ப தொழிற்சாலையை பெரம்பலூரில் அமைக்கவிருக்கும் சிறப்புப் பொருளாதார மண்டலத்தில் தொழில் தொடங்கலாம். இந்தத் தொழில் வளாகங்களில் போதிய அளவு நிலங்கள் விற்பனைக்கு உள்ளன.



**12—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 13171—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தா. பழூர் மற்றும் மீன்சுருட்டியில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தா. பழூர் மற்றும் மீன்சுருட்டி ஆகிய ஊர்களைச் சுற்றி தேவையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளே போதுமானவையாக உள்ளதால், இவ்விடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

**13—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 13724—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருமானூரில் புதியதாக தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருமானூரைச் சுற்றி 25 கிலோ மீட்டர் சுற்றளவிற்குள் திருவையாறு மற்றும் அரியலூர் ஆகிய இரண்டு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டுவருவதால், அங்கு புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

14— [2007 மே 9

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13840—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு தொகுதி, திருக்கழுக்குன்றம் தீயணைப்பு நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருக்கழுக்குன்றம், தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திற்கு நிலம் கையகப்படுத்திய பின்னர் உரிய தருணத்தில் சொந்தக் கட்டடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

15—

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 13842—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாமல்லபுரத்தில் புதிய தீயணைப்பு நிலையம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

காஞ்சிபுரம் மாவட்டம், மாமல்லபுரம் பகுதியைச் சுற்றி தேவையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளே போதுமானவையாக உள்ளதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

16—

## விழிப்புணர்வு முகாம்

**வினா எண் 13843—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

இயற்கை இடர்பாடுகள் மற்றும் தீ விபத்துகள் ஏற்படும்போது பொதுமக்கள் விழிப்புடன் செயலாற்றுவதற்கான விழிப்புணர்வு முகாம்களை கிராமங்கள் மற்றும் நகரங்கள்தோறும் நடத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

மாநிலம் முழுவதும் விழிப்புணர்வு முகாம்கள் அரசு நடத்திவருகிறது.

17—

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 13982—திரு. வி.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதி, மணலூர்பேட்டை, முகையூர், கண்டாச்சிபுரம் ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையம் அமைத்துத்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) விழுப்புரம் மாவட்டம், மணலூர்பேட்டை, முகையூர் மற்றும் கண்டாச்சிபுரம் பகுதிகளைச் சுற்றி தேவையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளே போதுமானவையாக உள்ளதால், இவ்விடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

18—

## காவல் நிலையம்

**வினா எண் 14570—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மே 9

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, சேரானூர் ஊராட்சி, கண்டாச்சிபுரம் காவல் நிலையக் கட்டுப்பாட்டில் உள்ளதை அனந்தபுரம் காவல் நிலைய எல்லைக்குள் கொண்டுவர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

கண்டாச்சிபுரம் காவல் நிலைய கட்டுப்பாட்டில் உள்ள சேரானூர் ஊராட்சிப் பகுதியினை, செஞ்சி உட்கோட்ட அனந்தபுரம் காவல் நிலைய எல்லைக்குள் கொண்டு வருவது குறித்த கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் தற்பொழுது இல்லை. மாவட்டக் குழுவின் பரிந்துரைக்கேற்ப அரசு உரிய முடிவெடுக்கும்.

**19—**

## புதிய காவல் நிலையம்

**வினா எண் 14646—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, மதகொண்டப்பள்ளியில் புதிய காவல் நிலையம் துவக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காவல் நிலையங்கள் அமைப்பது தொடர்பாக வரக்கூடிய கோரிக்கைகள் அனைத்தும் அவ்வப்போது எழக்கூடிய தேவையையும் நிலவும் சூழலையும் கோரிக்கையின் நியாயத்தையும் கருத்தில் கொண்டு உரிய வகையில் முக்கியத்துவம் தந்து முன்னுரிமை அடிப்படையிலும், நிதிநிலைக்கேற்பவும் மட்டுமே புதிய காவல் நிலையங்கள் அமைத்து ஆணையிடுவது எனவும் இது குறித்த கோரிக்கை எதனையும் பிறவகையில் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்வதில்லை என்ற நிலை நடைமுறையில் உள்ளது.



2007 மே 9]

மேற்கூறிய சூழ்நிலையில், தளி தொகுதி, மதக்கொண்டப் பள்ளியில் புதிய காவல் நிலையம் அமைப்பது குறித்து, தற்போது அமைக்கப்பட்டுள்ள மூன்றாவது காவல் குழு பரிந்துரைக்குப் பின்னர் உரிய தருணத்தில் பரிசீலிக்கப்படும்.

**20—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 14811—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையத்தில் தீயணைப்பு நிலையம் அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், மேலப்பாளையம் பகுதியைச் சுற்றி தேவையான தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவைகளே போதுமானவையாக உள்ளதால், இவ்விடத்தில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் அமைக்க வேண்டிய நிலை தற்போது எழவில்லை.

**21—**

## விளையாட்டுப் போட்டி

**வினா எண் 18093—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தீயணைப்புத் துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை விளையாட்டுப் போட்டி நடத்த அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு ஆண்டுக்கு ஒரு முறை விளையாட்டுப் போட்டி நடத்தும் திட்டத்தின்படி 2000 ஆண்டு வரை விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்பட்டன. ஆயினும், பணியிடங்கள் நிரப்பப்படாமல் அதிக காலியிடங்கள் இருந்ததன் காரணமாகவும், ஆள் பற்றாக்குறையாக

இருந்ததாலும் மேலும், பொதுமக்களுக்கு ஆற்றும் பணிகள் வெவ்வேறு [2007 மே 9
விதமாக நாளுக்குநாள் அதிகரித்து வந்ததாலும், 2000 ஆம் ஆண்டுக்குப்
பிறகு நிர்வாகக் காரணங்களினால் ஆண்டுதோறும் நடத்தப்படும்
விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படவில்லை. தற்போது தீயணைப்பு
மற்றும் மீட்புப் பணிகள் துறையில் பல்வேறு தரங்களில் உள்ள
காலியிடங்களை நிரப்ப நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.
காலியிடங்கள் படிப்படியாக நிரப்பப்பட்டதும், மீண்டும் ஆண்டுக்கு ஒரு
முறை விளையாட்டுப் போட்டியினை நடத்துவது குறித்து உரிய
தருணத்தில் முடிவு செய்யப்படும்.

**22—**

## தீயணைப்பு நிலையம்

**வினா எண் 18123—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு
முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கோட்டூர், சோலையாறு அணை,
ஆழியாறு நகர், சேத்துமடை ஆகிய இடங்களில் தீயணைப்பு நிலையங்கள்
ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 25 கி.மீ. சுற்றளவுள்ள இடத்திற்குள் குறைந்தபட்சம்
ஒரு தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் இருத்தல்,
50,000-க்கும் குறையாத மக்கள் தொகை மற்றும் ரூ.50,000/- மதிப்பிற்குக்
குறைவில்லாத சேதத்தை ஏற்படுத்த வாய்ப்புள்ள தீ விபத்துகள் நிகழும்
இடங்கள் ஆகியவற்றை அளவுகோல்களாகக் கொண்டு, தேவைப்படும்
இடங்களில் புதிய தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம்
அமைப்பது குறித்து பரிசீலிக்கப்படுகிறது. வால்பாறை தொகுதியில் உள்ள
கோட்டூர், சோலையாறு அணை, ஆழியாறு நகர், சேத்துமடை ஆகிய
இடங்களில் கடந்த 3 ஆண்டுகளில் ஏற்பட்ட தீவிபத்து அழைப்புகள்
மற்றும் மீட்புப் பணி அழைப்புகளின் எண்ணிக்கை மிகவும் குறைவாக
உள்ளதால், மேற்படி இடங்களில் ஏற்படும் தீவிபத்து அழைப்புகள் மற்றும்
மீட்புப் பணி அழைப்புகளை அருகில் உள்ள நிலையங்களில் உள்ள
ஊர்திகளைக் கொண்டே மேற்கொள்ள இயலும். எனவே, மேற்படி
இடங்களில் தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையங்கள் அமைக்கும்
நிலை தற்போது எழவில்லை.



2007 மே 9]

**23—**

## குடியிருப்புகள்

**வினா எண் 18133—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு
முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தீயணைப்பு அலுவலகம் அருகில் தீயணைப்புப்
பணியாளர்களுக்கு வீடு கட்டித்தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கோவை-நீலகிரி கோட்டம், வால்பாறை தீயணைப்பு மற்றும்
மீட்புப் பணிகள் நிலையத்தின், நிலைய அலுவலர் மற்றும்
பணியாளர்களுக்குக் குடியிருப்புகள் கட்ட பொதுப் பணித்
துறையினரிடமிருந்து மதிப்பீடுகள் பெற நடவடிக்கை எடுக்கப்பட்டு
வருகிறது. மதிப்பீடுகள் பெறப்பட்டதும் நிதி நிலைக்கேற்ப குடியிருப்புகள்
கட்டுவதற்கு உரிய நேரத்தில் முடிவு செய்யப்படும். எனவே, வால்பாறை
தீயணைப்பு நிலையத்தைச் சேர்ந்த அலுவலர் மற்றும் பணியாளர்களுக்குக்
குடியிருப்புகள் கட்டித் தரும் நிலை தற்போது எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**24—**

## நோயாளர் ஊர்தி

**வினா எண் 18138—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு
முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தீயணைப்பு நிலையத்திற்கு நோயாளர் ஊர்தி வழங்க
அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) வால்பாறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம் ஒரு
ஒற்றை ஊர்தி கொண்ட நிலையமாகும். இந்நிலையத்தில் தற்போது ஒரு

நீர்தாங்கி வண்டி பயன்பாட்டில் உள்ளது. இவ்வூர்தியினைக் கொண்டு இந்நிலையத்தின் எல்லைக்குட்பட்ட பகுதிகளுக்குள் ஏற்படும் தீ விபத்து மற்றும் மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. கடந்த 3 ஆண்டுகளில் மொத்தம் 27 தீ விபத்து அழைப்புகள் மற்றும் 44 மீட்புப் பணி அழைப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. வால்பாறை தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்திலிருந்து வடக்கே சுமார் 64 கி.மீ. தொலைவில் உள்ள பொள்ளாச்சி தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையத்தின் பயன்பாட்டில் தற்போது ஒரு நோயாளர் ஊர்தி உள்ளது. வால்பாறையில் உள்ள அரசு பொது மருத்துவமனையில் உள்ள 2 நோயாளர் ஊர்திகள் மூலம் தற்போது மீட்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. ஆண்டுக்கு சராசரி தீ விபத்து மற்றும் மீட்புப் பணி அழைப்புகளின் எண்ணிக்கை முறையே 9 மற்றும் 15 என குறைவாக உள்ள நிலையில், இந்நிலையத்திற்கு ஒப்பளிக்கப்பட்டுள்ள நீர்தாங்கி வண்டியினைக் கொண்டே இத்தகைய அழைப்புகளை மேற்கொள்ள இயலுமென்பதால், இந்நிலையத்திற்குப் புதியதாக ஒரு நோயாளர் ஊர்தி வழங்கும் நிலை தற்போது எழவில்லை.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**25—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 18144—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தீயணைப்பு அலுவலகத்திற்குத் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

(அ) வால்பாறை, தீயணைப்பு மற்றும் மீட்புப் பணிகள் நிலையம், மலைப்பாங்கான பகுதியில் அமைந்துள்ளது. எனவே, இந்நிலையத்தினைச் சுற்றி தடுப்புச் சுவர் அமைப்பதற்கான வாய்ப்புக்கள் குறித்து பரிசீலித்து, வாய்ப்புக்களிருப்பின் அதற்கான மதிப்பீடுகள் தயார் செய்து அனுப்பிவைக்குமாறு பொதுப் பணித் துறையினரிடம் கோரப்பட்டுள்ளது.



அவை பெறப்பட்டதும், நிதி நிலைக்கேற்ப தடுப்புச் சுவர் ஏற்படுத்துவது குறித்து உரிய தருணத்தில் பரிசீலனை செய்யப்பட்டு தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

(ஆ) இக்கேள்விக்கு இடமில்லை.

**26—**

## மின் வசதி

**வினா எண் 14197—திரு. ம. குணசேகரன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, தஞ்சாக்கூர் காலனி குடியிருப்புக்கு மின்சார வசதி செய்துதர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, தஞ்சாக்கூர் காலனி குடியிருப்பில் 5 குழும வீடுகளும், 11 குடிசைகளும் உள்ளன. இவற்றில் 6 குடிசைகளுக்கு இது வரை மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது. மீதமுள்ள குழும வீடுகளுக்கும், குடிசைகளுக்கும், மின் இணைப்பு வேண்டி விண்ணப்பங்கள் அளிக்கப்படும்பட்சத்தில், உடனடியாக மின் இணைப்பு வழங்கப்படும். இந்தப் பகுதிக்கு தெருமின் விளக்குகள் வேண்டி விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை.

**27—**

## மின் வசதி

**வினா எண் 14231—திரு. எல். ரவிச்சந்திரன் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாநகர மையப் பகுதியில் வட்டம் 10 மற்றும் வட்டம் 35-ல் ஆதிதிராவிடர் வசிக்கும் பகுதியில் மின் வசதி ஏற்படுத்தித்தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—** [2007 மே 9

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

சேலம் மாநகர மையப் பகுதியில் வட்டம் 10 மற்றும் வட்டம் 35-ல் ஏற்கெனவே மின் வசதி அளிக்கப்பட்டு உள்ளது. ஆதிதிராவிடர் மற்றும் பிற இனத்தவர் கார்பெட் தெரு, ரெயில்வே லைன் தெற்கு மற்றும் வடக்குத் தெரு, ஆகிய பகுதிகளில் வசித்து வருகின்றனர். மேற்கண்ட பகுதியானது ஜாமியா மசூதி வக்போர்டுக்கு சொந்தமானது ஆகும். ஏற்கெனவே, இப்பகுதியில் ஜாமியா மசூதி வக்போர்டில் இருந்து தடையில்லாச் சான்று பெற்று விண்ணப்பித்தவர்களுக்கு மின் இணைப்பு வழங்கப்பட்டுள்ளது.

வட்டம் 10-ல் சுமார் 100 வீடுகளும், வட்டம் 35-ல் சுமார் 75 வீடுகளும் மின் இணைப்பு இல்லாமல் உள்ளன. உரிய விண்ணப்பத்துடன், ஜாமியா மசூதி வக்போர்டின் தடையில்லா சான்றுடன், மின் இணைப்பிற்கு உண்டான கட்டணத்தைச் செலுத்தும்பட்சத்தில், மேற்கண்ட வீடுகளுக்கு, வாரிய விதிமுறைகளின்படி மின் இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்படும்.

**28—**

## தடையில்லா மின்சாரம்

**வினா எண் 15220—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள கிராமங்களில் தொடர்ந்து மின்சாரத் தடை ஏற்படாமல் இருக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதிக்குட்பட்ட வால்பாறை மலைப்பகுதி அங்கலக்குறிச்சி, ஆனைமலை, தேவனூர்புதூர் மற்றும் அதனைச் சுற்றியுள்ள கிராமங்களுக்கு ஐயர்பாடி மற்றும் அங்கலக்குறிச்சி



2007 மே 9]

துணை மின் நிலையங்களிலிருந்து (11 எண்ணிக்கை) மின்னூட்டிகள்மூலம் மின் விநியோகம் செய்யப்படுகிறது. இம்மின்னூட்டிகள் அடர்ந்த மலைப்பகுதி, மரங்களடங்கிய பகுதி மற்றும் அடர்ந்த தென்னந்தோப்புகள் வழியாகச் செல்வதால் மழை, காற்று போன்ற இயற்கைக் காரணங்களால் மின் தடங்கல் ஏற்படுகின்றது. மலைப் பகுதிகளில் மின் தடங்கலைச் சரி செய்யச் சிறிது காலதாமதம் ஏற்படுகிறது. இனிவரும் காலங்களில் மின் தடங்கல்கள் ஏற்படுவதைத் தவிர்க்கும் பொருட்டும், மின் தடங்கல்களை விரைந்து சரி செய்யவும் நடவடிக்கை எடுக்கப்படும்.

**29—**

## மின் இணைப்பு

**வினா எண் 16065—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மற்றும் டாப்சிலிப் மலைப் பகுதியில் வசிக்கும் பழங்குடியினர் மக்கள் பகுதிக்கு மின்சார விளக்குகள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதியில் 376 மலைவாழ் மக்கள் குடியிருப்புகள் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் உள்ளன. இவற்றில் தமிழ்நாடு மின்சார வாரியம்மூலம் மின்னூட்டம் செய்யப்பட்டவை 15, சூரிய ஒளிமூலம் மின் வசதி செய்யப்பட்டவை 279, மின்னூட்டம் இல்லாதவை 82. இப்பகுதியில் 26 தெருவிளக்குகள் உள்ளன. இவற்றில் மின்சார வாரியம்மூலம் மின்னூட்டம் செய்யப்பட்டவை 13, சூரிய ஒளிமூலம் மின் வசதி செய்யப்பட்டவை 13, தெருவிளக்குக்கு மின் இணைப்பு வேண்டி 1 விண்ணப்பம் நிலுவையில் உள்ளது. மின் இணைப்பு வழங்க வனத் துறையினரின் தடையில்லாச் சான்றிதழ் தேவைப்படுகிறது. தடையில்லாச் சான்று சமர்ப்பிக்கப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கப்படும். குடிசைகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை.

[2007 மே 9

டாப்சிலிப் மலைப் பகுதியில் 215 மலைவாழ் மக்கள் குடியிருப்புகள் வனத் துறைக்குச் சொந்தமான இடத்தில் உள்ளன. இவற்றில் தமிழ்நாடு மின்சார வாரியம்மூலம் மின்னூட்டம் செய்யப்பட்டவை 36. சூரிய ஒளிமூலம் மின்னூட்டம் செய்யப்பட்டவை 132. மின்னூட்டம் இல்லாதவை 77. இவற்றில் 55 வீடுகளுக்கு மதிப்பீடு அனுமதிக்கப்பட்டு வனத் துறையினரின் தடையில்லாச் சான்றுக்காக நிலுவையில் உள்ளன. இந்த பகுதியில் 5 தெருவிளக்குகள் தமிழ்நாடு மின்சார வாரியத்தால் மின்னூட்டம் செய்யப்பட்டுள்ளன. தெருவிளக்கு மற்றும் 22 குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு வேண்டி விண்ணப்பம் எதுவும் நிலுவையில் இல்லை.

மேற்கண்ட 55 வீடுகளுக்கு மின் இணைப்பு வழங்குவதற்காக தடையில்லாச் சான்று குறித்து வன விலங்கு காப்பாளர்/பொள்ளாச்சி மற்றும் செயல் அலுவலர்/வேட்டைக்காரன்புதூர் அவர்களுக்கு கடிதம் அனுப்பப்பட்டுள்ளது. தடையின்மைச் சான்று பெற்று சமர்ப்பிக்கப்பட்டவுடன் மின் இணைப்பு வழங்கப்படும்.

மேற்கண்ட பகுதிகளில் வனத் துறையின் தடையில்லாச் சான்றிதழுடன் பெறப்படும் விண்ணப்பங்களுக்கு உடனடியாக மின் இணைப்பு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**30—**

## தெருவிளக்குகள்

**வினா எண் 17494—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம், குமாரபுரம் ஊராட்சி, நாலந்துலா கிராமத்தில், புதிய மின்கம்பம் அமைத்து தெரு மின்விளக்கு வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் ஒன்றியம் குமாரபுரம் ஊராட்சிக்கு உட்பட்ட நாலந்துலா கிராமத்தில் 65 வீடுகளுக்கு 9 தெரு மின்விளக்குகள் உள்ளன. மேலும், கூடுதல் தெரு மின்விளக்குகள் வேண்டி



2007 மே 9]

விண்ணப்பம் ஏதும் இதுவரை பெறப்படவில்லை. உரிய விண்ணப்பம் பெறப்பட்டால், வாரிய விதிமுறைகளின்படி தெருவிளக்குகள் அமைக்க மேல் நடவடிக்கை எடுக்கப்படும்.

**31—**

## நடனமாடும் நீரூற்று

**வினா எண் 1547—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கொடைக்கானல் நகராட்சி, பிரையண்ட் பூங்காவில் நடனமாடும் நீரூற்று அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கொடைக்கானல் நகராட்சிப் பகுதிகளில் சுற்றுலா வளர்ச்சித் திட்ட நிதியில் தோட்டக்கலைத் துறையினரால் பராமரிக்கப்பட்டு வரும் பிரையண்ட் பூங்காவில் இன்னிசை மற்றும் நடனமாடும் நீரூற்றுகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**32—**

## அடிப்படை வசதி

**வினா எண் 1835—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, முல்லை நகர் குடியிருப்பில் பொதுக் கழிப்பிடம், சாலை மற்றும் சாக்கடை வசதிகள் செய்து தரும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—** [2007 மே 9

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, முல்லைநகர் குடியிருப்புப் பகுதிக்கு சாலை வசதி, குடிநீர் வசதி உள்ளது. சாக்கடை வசதி செய்து தர நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது.

**33—**

## அடிப்படை வசதி

**வினா எண் 2346—திரு. கு.ப. வேலுமணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, சுகுணாபுரம் பகுதி, சுகுணாபுரம் மேற்குப் பகுதி, சுகுணாபுரம் மேற்கு மாட்டுக்காரசாமி பகுதி, திருநகர் பகுதி, வசந்தம் நகர், எல்ஐசி. காலனி மற்றும் ராமானுஜம் நகர் பகுதிகளில் மின்விளக்கு மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதி ஏற்படுத்தித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தற்பொழுது இப்பகுதிகளில் போதுமான எண்ணிக்கையில் மின்விளக்குகள் மற்றும் கழிவுநீர்க் கால்வாய் வசதி செய்யப்பட்டுள்ளன.

**34—**

## துப்புரவுப் பணியாளர்கள்

**வினா எண் 2368—திரு. கு.ப. வேலுமணி :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கோயம்புத்தூர் மாநகராட்சியில் பூசாரிபாளையம், கரும்புக்கடை, தெலுங்குபாளையம், சொக்கம்புதூர், வெங்கிடாபுரம், வேலாண்டிபாளையம் ஆகிய வட்டங்களில் கூடுதலாக துப்புரவுப் பணியாளர்களை பணியமர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் தோற்றுவிக்கப்பட்ட 459 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களை பூர்த்தி செய்யவும், இப்பணியிடங்களில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் மீதமுள்ள 365 பதிலி துப்புரவுப் பணியாளர்களை முறையான ஊதிய விகிதத்தில் நியமனம் செய்து கொள்ளவும் அரசாணை (பத்தாண்டு) எண் 54, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12-02-2007-ல் அனுமதி அளிக்கப்பட்டுள்ளது. எனவே, இவ்வாணையின் அடிப்படையில், பூசாரிபாளையத்திற்கு 6 (வார்டு எண் 57), கரும்புக்கடைக்கு 10 (வார்டு எண் 54), தெலுங்குபாளையத்திற்கு 9 (வார்டு எண் 55), சொக்கம்புதூருக்கு 9 (வார்டு எண் 56), வெங்கிடாபுரத்திற்கு 7 (வார்டு எண் 60), வேலாண்டிபாளையத்திற்கு 8 (வார்டு எண் 61) என இப்பகுதிகளை உள்ளடக்கிய வார்டுகளுக்கு 49 துப்புரவுப் பணியாளர்கள் கூடுதலாக பணியில் அமர்த்தப்பட்டுள்ளார்கள்.

**35—**

## தார்ச் சாலை

**வினா எண் 8562—திரு. விடியல் எஸ். சேகர் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயத்திற்குட்பட்ட சென்னிமலை ஊராட்சி ஒன்றியம், உலகபுரம் வெள்ளமுத்துக்கவுண்டர் வலசு மண் சாலை சிவன்மலை கல்லேரி பிரிவிலிருந்து வேலாயுதம்பாளையம் - கீரனூர் இணைப்புச் சாலை, சிவன்மலை - கீரனூர் செல்லும் பணிவிடுபட்ட சாலை, சிக்கரசம் பாளையம் செல்லும் விடுபட்ட சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலையாக மாற்ற அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் தொகுதி, உலகபுரம் வெள்ளமுத்துக்கவுண்டர் வலசு மண் சாலை, சிவன்மலை கல்லேரி பிரிவிலிருந்து வேலாயுதம்பாளையம் - கீரனூர் இணைப்புச் சாலை, சிவன்மலை - கீரனூர் செல்லும் பணிவிடுபட்ட சாலை, சிக்கரசம்பாளையம் செல்லும் விடுபட்ட சாலை ஆகிய சாலைகளை தார்ச் சாலையாக மாற்ற உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.29.50 இலட்சம் நிதி தேவைப்படும். ஊராட்சி ஒன்றியத்தில் தற்போது நிதிவசதி இல்லையாதலால் மேற்கண்ட பணியினை எடுத்துச் செய்ய இயலாது.

**36—**

## மழைக் கோட்டுகள்

**வினா எண் 11408—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உதகமண்டலம் நகராட்சியில் துப்புரவுத் தொழிலாளர்களுக்கு மழைக் கோட்டுகள் வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

உதகமண்டலம் நகராட்சி துப்புரவுப் பணியாளர்களுக்கு 2006 ஆம் ஆண்டிற்கு வழங்க வேண்டிய மழைக் கோட்டுகள் 13-9-2006-ல் வழங்கப்பட்டுவிட்டன.

**37—**

## கையுறை

**வினா எண் 13259—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பவானி நகராட்சியில் துப்புரவுப் பணியாளர்களுக்கு கையுறை, கால் பூட்ஸ், மழைக்கோட்டு ஆகியவை கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) ஆம்

(ஆ) 26-1-2007 குடியரசு தினத்தன்று நகராட்சியில் உள்ள 72 துப்புரவுப் பணியாளர்களுக்குக் கையுறை, கால் பூட்ஸ், முகவுறை தொப்பி, மழைக்கோட்டு ஆகியவை வழங்கப்பட்டுள்ளன.

**38—**

## துப்புரவுப் பணியாளர்கள்

**வினா எண் 17356—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் கூடுதல் துப்புரவுப் பணியாளர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாநகராட்சியில் தொகுப்பூதியத்தில் தோற்றுவிக்கப்பட்ட 159 துப்புரவுப் பணியாளர் பணியிடங்களைப் பூர்த்தி செய்யவும், இப்பணியிடங்களில் கோயம்புத்தூர் மாநகராட்சியில் மீதமுள்ள 365 பதிலி துப்புரவுப் பணியாளர்களை ரூ. 2,550-55-2,660-60-3,200 என்ற ஊதிய விகிதத்தில் பணியில் அமர்த்திக்கொள்ளவும் அனுமதி அளித்து அரசாணை (பத்தாண்டு) எண் 54, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 12-02-2007-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. எனவே, இவ்வாணைக்கிணங்க, 365 பதிலி துப்புரவுப் பணியாளர்கள் 19-02-2007 ஆம் தேதி முதல் முறையான ஊதிய

விகிதத்தில் கூடுதலாக கோயம்புத்தூர் மாநகராட்சியில் பணியில் அமர்த்தப்பட்டார்கள்.

39—

## பருத்தி உற்பத்தி

**வினா எண் 20949—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) தமிழக வேளாண்மைத் துறை, மாநிலத்தில் பருத்தி உற்பத்தியை அதிகரிக்க பல்வேறு திட்டங்களை செயல்படுத்தி வருகிறது. வால்பாறை தொகுதி அமைந்துள்ள கோவை மாவட்டத்திற்கு பருத்தி விதை பெருக்கத் திட்டத்தின்கீழ் ரூ.5.00 இலட்சம், சான்று விதை உற்பத்தி செய்து விநியோகம் செய்வதற்கென ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ.16.00 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண்மை இடுபொருட்கள் விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இது தவிர, வேளாண்மைத் துறையினரால் விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், கிராம கூட்டங்களிலும், முன்பருவ முகாம்கள், பணிமனை கூட்டங்கள் மூலமாகவும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. எனவே, பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில அரசு திட்டங்கள் இப்பகுதியில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.



40—

## ஆராய்ச்சி மையம்

**வினா எண் 20957—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி மையம் துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் பருத்தி ஆராய்ச்சி நிலையம் அமைப்பதற்குப் பிரேரணை எதுவும் வேளாண்மைத் துறையில் இல்லை. ஏற்கெனவே கோவையில் மத்திய பருத்தி ஆராய்ச்சி நிலையம் மற்றும் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் அமைந்துள்ளதால் வால்பாறையில் தனியாக ஆராய்ச்சி நிலையம் அமைக்க அவசியம் இல்லை என்று கருதப்படுகிறது.

41—

## வடிகால்வாய்கள் சீரமைத்தல்

**வினா எண் 2390—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளம் தொகுதி, சென்னல்பட்டி முதல் முத்தாலங்குறிச்சி வரை உள்ள வடிகால்வாய்களை சீரமைத்துக் கொடுக்க அரசு ஆவன செய்யுமா?

விடை— [2007 மே 9

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

ஆலங்கால் ஓடை எல்.எஸ். 0 கிலோ மீட்டர் முதல் 4 கிலோ மீட்டர் வரை உள்ள பகுதிக்கும் மற்றும் முத்தாலங்குறிச்சிகால் 4 கிலோ மீட்டர் முதல் 8 கிலோ மீட்டர் வரையிலான பகுதிக்கும் நடப்பு நிதியாண்டில் பராமரிப்பு தலைப்பில் சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எஞ்சியுள்ள பணிகளை அடுத்த நிதியாண்டில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும்.

42—

## குளம் தூர் வாருதல்

**வினா எண் 10940—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், கஸ்தூரிரெங்காபுரம் ஊராட்சி, பெருங்கண்ணன் குளத்தை தூர் வார அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

நவம்பர் 2006-ல் பெய்த பெருமழையின் காரணமாக குளத்தின் கரையில் ஏற்பட்ட மண் அரிப்பு மற்றும் உடைப்பு ரூ.85,000 மதிப்பீட்டில் சீர் செய்யப்பட்டுள்ளது. தற்போது குளம் நிரம்பியுள்ளது. ஆதலால் எதிர்வரும் நிதி ஆண்டில் பராமரிப்பு நிதியிலிருந்து முன்னுரிமை அடிப்படையில் மேம்பாட்டுப் பணி மேற்கொள்ளப்படும்.

43—

## தடுப்பணை

**வினா எண் 10943—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

திருநெல்வேலி மாவட்டம், இராதாபுரம் வட்டம், பழவூர் ஊராட்சி, பழவூர் மேற்குத் தொடர்ச்சி மலை அடிவாரத்தில் சிங்கத்தங்கல் பொத்தை மற்றும் அணைக்கரை பொத்தைகளுக்கிடையே தடுப்பணை அமைக்கப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

சிங்கத்தங்கல் பொத்தை மற்றும் அணைக்கரை பொத்தைகளுக்கு இடையிலுள்ள பள்ளத்தாக்கு சிறிய கட்டைப்புளி ஓடையின் உப ஓடையாகும். இப்பகுதி ஆரல்வாய்மொழி பக்கத்திலுள்ள மழை மறைவுப் பிரதேசத்தில் உள்ளதால் மழைநீர் ஈட்டம் மிகக் குறைவாக உள்ளது. ஏற்கெனவே கட்டைப்புளி ஓடையிலுள்ள குளங்களுக்குக் கடந்த 15 வருடங்களாக தண்ணீர் பற்றாக்குறை இருந்து வருகிறது. இந்நிலையில் மேற்குறிப்பிட்ட இரண்டு பொத்தைகளுக்கு இடையில் தடுப்பணை அமைக்க தொழில்நுட்ப ரீதியாக சாத்தியக்கூறு இல்லை.

44—

## கால்வாய் சீர்செய்தல்

**வினா எண் 14590—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, நெழலி கிராமம், 4-வது மண்டல பாசனக் கால்வாயில் உள்ள முட்புதர் செடிகளை அகற்றி கால்வாய் சீர்செய்யப்படுமா?

விடை—

மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:

காங்கேயம் தொகுதி, நெழலி கிராமத்தில் 1 ஆம் மண்டல பாசனக் கால்வாயில் பாசனம் ஆகஸ்ட் 2007-ல் தொடங்கும். நான்காவது மண்டல பாசனம் தொடங்குவதற்கு முன்பாக 2007-08 ஆம் ஆண்டின் பராமரிப்பு நிதியிலிருந்து மேற்படி கால்வாய்களில் உள்ள முட்புதர்களை அகற்றி கால்வாய் சீர் செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

[2007 மே 9

45—

## கைவினைப் பொருட்கள்

**வினா எண் 14325—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூரில் பொற்கொல்லர்கள் கைவினைப் பொருட்கள் தயாரிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தங்கவேலை செய்யும் பொற்கொல்லர்களை கைத்திறன் தொழிலின் கீழ் கைவினைஞர்களாக எடுத்துக்கொள்வது இல்லை. மேலும், கோயம்புத்தூரில் பொற்கொல்லர்களை வைத்து கைவினைப் பொருட்கள் தயாரிக்கும் திட்டம் எதுவும் தற்சமயம் தமிழ்நாடு கைத்திறத் தொழில்கள் வளர்ச்சிக் கழகத்திடம் இல்லை.

46—

## கபின்

**வினா எண் 17080—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரகத் தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள தேயிலைக் கழிவிலிருந்து கபின் தயாரிக்கும் சிறு தொழிற்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. பொங்கலூர் நா. பழனிசாமி, ஊரகத் தொழில் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையில் உள்ள தேயிலைக் கழிவிலிருந்து கபின் தயாரிக்கும் தொழிற்சாலை துவக்கும் உத்தேசம் அரசிடம் இல்லை. இத்தொழிலை தனியார் துவக்க முன்வந்தால், அதற்கான வசதிகள் மாவட்ட தொழில் மையம்மூலம் செய்துதர பரிசீலனை செய்யப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

47—

## பட்டா

**வினா எண் 3745—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், சிங்காரப்பேட்டை பகுதியில் கூட்டுறவு வங்கி பின்புறம் புறம்போக்கு நிலத்தில் வீடு கட்டி குடியிருக்கும் குடும்பங்களுக்கு இலவச மனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது வழங்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

**48—** [2007 மே 9

### பட்டா

**வினா எண் 9303—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, உடுமலைப்பேட்டை, அனுமந்தப்பட்டினம், நத்தம் புறம்போக்கில் குடியிருக்கும் 20 நபர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**49—**

### பட்டா

**வினா எண் 10161—திரு. செ. பொன்னுதுரை:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

(அ) ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், விரும்பாண்டம்பாளையம் கிராமம், ஜே.ஜே நகரில் குடியிருக்கும் குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) ஈரோடு மாவட்டம், பெருந்துறை வட்டம், ஊத்துக்குளி ஊராட்சி ஒன்றியம், விரும்பாண்டம்பாளையம் கிராமம் ரீ.ச.46/2-ல் அனாதீனம் வகைப்பாட்டில் ஜே.ஜே நகரில் குடியிருக்கும் பெரும்பாலான குடும்பங்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க போதுமான நத்தம் புறம்போக்கு காலியிடம் இல்லை என்றும், இந்த நிலத்தில் ஊராட்சி ஒன்றியத்தால் 215 மரங்கள் நடப்பட்டு, பராமரிக்கப்பட்டு வருவதாகவும், மேற்படி புலமானது தடையாணை புத்தகத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதாலும், தடைசெய்யப்பட்ட இடமாக உள்ளதாலும் தற்போது வீட்டுமனைப் பட்டா வழங்க இயலாத நிலை உள்ளது.

(ஆ) இவ்வினா எழாது.

**50—**

### பட்டா

**வினா எண் 10792—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை, சிலோன் காலனி மற்றும் பெரியார் நகரில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**51—**

## பட்டா

**வினா எண் 11272—திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பட்டுக்கோட்டை நகராட்சி, மன்னை நகரில் குடியிருக்கும் 29 குடும்பங்களுக்குப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



**52—**

## பட்டா

**வினா எண் 12335—திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தருமபுரி தொகுதி, கம்மம்பட்டி ஊராட்சி, பாப்பம்பட்டி கிராமத்தில் குடியிருந்து வருபவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**53—**

## பட்டா

**வினா எண் 13151—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மே 9

(அ) கபிலர்மலை ஒன்றியம், பிலிக்கல்பாளையம், மல்லிகாபுரம் காலனியில் பட்டா இல்லாதவர்களுக்குப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 851, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**54—**

## பட்டா

**வினா எண் 13153—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை ஒன்றியம், சோழசிராமணி, அண்ணாநகர் பகுதியில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 851, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**55—**

## புனரமைத்தல்

**வினா எண் 13234—திருமதி ரா. லீமா ரோஸ்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மக்கள் தொகை அதிகமாக இருப்பதால் வருவாய் வட்டங்களையும் கிராமங்களையும் நிர்வாக வசதிக்கு ஏற்ற முறையில் புனரமைக்க அரசிடம் என்ன திட்டம் உள்ளது?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) எழாது.

56—

## பட்டா

**வினா எண் 13733—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூர், வாரணவாசி சமத்துவபுரத்தின் அருகிலுள்ள மேய்ச்சல்தரை புறம்போக்கு நிலத்தில் குடியிருக்கும் ஏழையெளிய மக்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

57—

## பட்டா

**வினா எண் 14516—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, அரசகுப்பம் ஊராட்சி, திகடரளபள்ளி கிராமத்தில் சுமார் 40 ஆண்டுகளுக்குமேல் குடியிருப்பவர்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?



(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கிருஷ்ணகிரி மாவட்டம், தேன்கனிகோட்டை வட்டம், அரசகுப்பம் கிராமம் புல எண் 136/1, 2 மொத்தப் பரப்பு 0.39.0 தர்ஸ் நிலம் தேன்கனிக்கோட்டை கிராமத்தைச் சேர்ந்த திரு. டி. பேட்ராஸ்சுவாமி என்பவருக்குச் சொந்தமான நிலமென்றும், இந்நிலத்தில் 19 குடும்பத்தைச் சேர்ந்த நபர்களுக்குக் குடியிருக்க வீடு இல்லாததால் நிலத்தின் சொந்தக்காரர் வீடு கட்டிக் கொடுத்து நிலத்தில் வேலைசெய்யவும் வாய்மொழியாகக் கூறியுள்ளார். தற்போது இந்த வீட்டில் குடியிருக்கும் நபர்கள் நல்ல வருமானம் சம்பாதிப்பவர்களாகவும், பொருளாதார நிலையில் மேம்பட்டவர்களாகவும் உள்ளதால் இவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு விதிகளில் வழிவகை இல்லை.

58—

## பட்டா

**வினா எண் 14517—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதி, பொம்மதாத்தனூர் ஊராட்சி, குல்லெட்டி கிராமத்தில் குடியிருப்பவர்களுக்கு மனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட

தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**59—**

## பட்டா

**வினா எண் 14586—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி, அரசு காலனியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**60—**

## பட்டா

**வினா எண் 14588—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கரூர் தொகுதி, மண்மங்கலம் ஊராட்சி, ராமேஸ்வரப்பட்டி விவசாயி நகரில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**61—**

## பட்டா

**வினா எண் 14589—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, மின்னாம்பள்ளி பஞ்சமாதேவி ஊராட்சி, கருங்கல் காலனியில் குடியிருப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில்

மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**62—**

## பட்டா

**வினா எண் 14592—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், காங்கேயம் வட்டம், குண்டடம் ஊராட்சி ஒன்றியம், பங்காம்பாளையம், கல்லாங்காடு புதுகாலனியில் வசிக்கின்றவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டிக் குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்கு தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**63—**

## பட்டா

**வினா எண் 17109—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—





(அ) வால்பாறை தொகுதி, அர்த்தநாரிபாளையம் ஊராட்சி, சண்முகசுந்தரம் நகரில் குடியிருப்பவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள், அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 ஜனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**64—**

## பட்டா

**வினா எண் 17156—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கரியஞ்செட்டிபாளையம், பிலிசின்னம்பாளையம், அங்கலக்குறிச்சி, காளியாபுரம், பெத்தநாயக்கனூர் ஊராட்சிகளில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(அ) ஆம் எனில், எப்போது?

**விடை—** 

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

**65—**

## கிளைச் சிறை

**வினா எண் 17513—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி சார்நிலை, கிளைச் சிறைச்சாலையை சமத்தூர் அல்லது பிலிசின்னம்பாளையத்திற்கு மாற்ற அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பொள்ளாச்சியில் உள்ள கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இட வசதி 72 ஆகும். அதன் தற்போதைய அடைப்பு 51 ஆகும். தற்போது இக்கிளைச் சிறையில் உள்ள இடவசதி மற்றும் இதர உள் கட்டமைப்பு வசதிகள் அனைத்தும் போதுமான அளவு உள்ளது. மேலும், இட வசதியைப் பெருக்குவதற்கு 100 சிறைவாசிகள் வைக்கக்கூடிய துயிற்கூடம் ஒன்று கட்டுவதற்கு உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பாதுகாப்பினைப் பலப்படுத்த, பாதுகாப்புச் சுவர்



கட்டுவதற்கும் உரிய பணிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, பொள்ளாச்சி கிளைச் சிறையை வேறு இடத்திற்கு மாற்றுவதற்கு எந்த செயற்குறிப்பும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**66—**

## கிளைச் சிறை

**வினா எண் 17514—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் சார்நிலைச் சிறைச்சாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அருகே உள்ள பொள்ளாச்சியில் ஏற்கெனவே ஒரு கிளைச் சிறை செயல்பட்டு வருகிறது. இக்கிளைச் சிறையின் அங்கீகரிக்கப்பட்ட இட வசதி 72 ஆகும். அதன் தற்போதைய அடைப்பு 51 ஆகும். மேலும், வால்பாறை பகுதியை சேர்ந்தவர்கள், அருகில் உள்ள பொள்ளாச்சி கிளைச் சிறையில் மிகவும் குறைவான அளவிலேயே அனுமதிக்கப்பட்டு வருகின்றனர். தவிர, பொள்ளாச்சி கிளைச் சிறையினை விரிவுபடுத்த பணிகள் துவங்கப்படவுள்ளன. எனவே, தனியாக வால்பாறையில் ஒரு கிளைச் சிறை ஏற்படுத்த வேண்டிய அவசியம் இல்லை.

**67—**

## குடியிருப்பு பழுதுபார்த்தல்

**வினா எண் 17528—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயமுத்தூர் மத்திய சிறைச்சாலையிலுள்ள காவலர் குடியிருப்புகளைப் புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) சிறைச்சாலைகளை நவீனப்படுத்தும் திட்டத்தின்கீழ் சிறைப் பணியாளர்களுக்கு புதிய குடியிருப்புகள் கட்டிக் கொடுக்கப்பட்டு வருகின்றன.

ஆண்டுதோறும் வழங்கப்படும் கட்டடப் பராமரிப்பு நிதியின்கீழ் மட்டுமே சிறைக் கட்டடங்களை பராமரித்திடவும், பழுது பார்த்திடவும் இயலும். குடியிருப்புகளைப் பழுது பார்த்தலுக்கு பொதுப் பணித் துறை, தலைமைப் பொறியாளர் (கட்டடம்) அவர்களால் மட்டுமே நிதி ஒதுக்கீடு செய்யப்படுவதால், சிறைத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள குடியிருப்புகளுக்குப் பராமரிப்பு மற்றும் பழுது பார்த்தலுக்குத் தனியாக நிதி ஒதுக்கீடு செய்வது குறித்து பொதுப் பணித் துறை தலைமைப் பொறியாளருடன் கலந்தாலோசிக்கப்பட்டு வருகிறது.

**68—**

## பட்டா

**வினா எண் 25133—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, கோணாய்க்கால்பாளையத்தில் மந்தைப் புறம்போக்கில் உள்ள 47 வீடுகளுக்கு பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல், அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை



செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**69—**

## பட்டா

**வினா எண் 25134—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேரூர் தொகுதி, குறிச்சி நகராட்சி, பிள்ளையார்புரம் பகுதியில் புறம்போக்கு நிலங்களில் ஆக்கிரமிப்பை அகற்றி, தகுதியுள்ளவர்களுக்குப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006-ல், அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத் தணிக்கை செய்து, அந்நிலங்கள், அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**70—**

## தகவல் மையம்

**வினா எண் 14799—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுலாத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அணையில் ஒரு தகவல் மையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். சுரேஷ் ராஜன், சுற்றுலாத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு அணையில் தகவல் மையம் ஒன்றினை அமைத்திட கருத்துரு ஏதும் தற்போது சுற்றுலாத் துறையின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**71—**

## மண்ணெண்ணெய் வழங்குதல்

**வினா எண் 20925—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பகுதியில் புதிதாக வழங்கப்பட்ட குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் தற்போதைய மண்ணெண்ணெய் ஒதுக்கீடு, ஏற்கெனவே நடைமுறையிலுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்குவதற்கு மட்டுமே போதுமானதாக உள்ளது. புதிய குடும்ப அட்டைகளுக்கு மண்ணெண்ணெய் வழங்கத் தேவைப்படும் கூடுதல் அளவிலான 17,000 கிலோ லிட்டர் மண்ணெண்ணெயினை ஒதுக்கீடு



செய்ய மத்திய அரசிடம் கேட்கப்பட்டுள்ளது. மத்திய அரசின் கூடுதல் ஒதுக்கீடு பெறப்படும்போது மானாமதுரை பகுதியில் புதிதாக வழங்கப்பட்டுள்ள தகுதியுள்ள குடும்ப அட்டைதாரர்களுக்கு மண்ணெண்ணெய் வழங்கப்படும்.

**72—**

## தொழிற்பயிற்சி மையம்

**வினா எண் 9239—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம், துரிஞ்சாபுரம் ஆகிய பகுதிகளில் தொழிற்பயிற்சி மையம் அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், திருவண்ணாமலையில் 272 இருக்கைகள் கொண்ட அரசினர் தொழிற் பயிற்சி நிலையம் இயங்கி வருகிறது. இத்தொழில் பயிற்சி நிலையம் துரிஞ்சாபுரத்திலிருந்து 6 கி.மீ. தொலைவில் அமைந்துள்ளது.

மேலும், இம்மாவட்டத்தில் 1938 இருக்கைகள் கொண்ட 17 அங்கீகரிக்கப்பட்ட தனியார் தொழிற் பயிற்சி மையங்கள் இயங்கி வருகின்றன.

எனவே, திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் துரிஞ்சாபுரத்தில் தொழிற் பயிற்சி மையம் அமைக்க உத்தேசம் இல்லை.

**73—**

## குறைந்தபட்ச ஊதியம்

**வினா எண் 11862—திருமதி ரா. லீமா றோஸ்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி, கன்னியாகுமரி, தூத்துக்குடி மாவட்டங்களில் பெண் பீடித் தொழிலாளர்களுக்கு குறைந்தபட்சக் கூலி, பஞ்சப்படி மற்றும் சம்பள உயர்வு வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பீடி நிறுவனங்களில் பீடி சுற்றும் மனைப் பணியாளர்கள் அநேகமாக பெண் தொழிலாளர்கள்தான். இவர்களுக்கு அந்தந்த நிறுவனங்களில் படிவம் 15-ல் வருகை பதிவு செய்யப்பட்டு வருகிறது. திருநெல்வேலி மாவட்டத்தில் 8 பீடி தொழிலாளர் உதவி ஆய்வர்கள், கன்னியாகுமரி மாவட்டத்தில் தொழிலாளர் உதவி ஆய்வர்கள், பீடி நிறுவனங்களில் அடிக்கடி ஆய்வு செய்து, பீடி சுற்றும் பெண் தொழிலாளர்களுக்கு அரசு நிர்ணயம் செய்துள்ள குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைப் படி வழங்கப்படுகிறதா என்பதைக் கண்காணித்து வருகின்றனர். அரசு நிர்ணயித்துள்ள குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைப்படி வழங்காத பீடி நிறுவனங்களின் ஒப்பந்தக்காரர்கள்மீது கேட்பு மனுக்கள், தொழிலாளர் துணை ஆணையர், திருநெல்வேலி முன்பாக தாக்கல் செய்யப்படுகிறது.

திருநெல்வேலி மாவட்டத்தில் தொழிலாளர் ஆய்வர், மகளிர் தொழிலாளர் ஆய்வர் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்தில் தொழிலாளர் ஆய்வர் ஆகிய அமலாக்க அதிகாரிகளால் பீடி நிறுவனங்களில் சோதனை ஆய்வு செய்யப்பட்டு வருகிறது. மேலும், மகளிர் நலனுக்காக மகளிர் தொழிலாளர் ஆய்வர்கள் நியமிக்கப்பட்டு, அவர்களால் பீடி நிறுவனங்களில் குறைந்தபட்ச ஊதியம் மற்றும் அகவிலைப்படி அரசு நிர்ணயித்தபடி வழங்கப்படுகிறதா என்பது கண்காணிக்கப்பட்டு வருகிறது.

குறைந்தபட்ச ஊதிய மறு நிர்ணயம் தற்பொழுது 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை மேற்கொள்ளப்படுகிறது. இதற்கான நடவடிக்கை 3 ஆண்டுகள் முடிந்தவுடன் துவக்கப்பட வேண்டும். அகவிலைப்படி, பிரதி வருடம், அதற்கு முந்தைய ஆண்டின் (ஜனவரி முதல் டிசம்பர் முடிய) சென்னை நகர விலைவாசிப் புள்ளிகள் சராசரியின் அடிப்படையில் கணக்கிடப்பட்டு அதற்கு அடுத்த ஆண்டு ஏப்ரல் முதல் தேதியிலிருந்து மார்ச் வரை வழங்கப்படுகிறது.



**74—**

## வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 13164—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் வேலைவாய்ப்பு பதிவு அலுவலகம் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

பெரம்பலூர் மாவட்டத்தில் வேலைவாய்ப்பு உதவி தொடர்பான அனைத்துப் பணிகளையும் மேற்கொள்ள பெரம்பலூர் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகம் செயல்பட்டு வரும் நிலையில், புதியதாக ஜெயங்கொண்டம் பகுதியில் வேலைவாய்ப்பு அலுவலகம் அமைப்பதற்கான தேவை எழவில்லை.

**75—**

## குறைந்தபட்ச ஊதியம்

**வினா எண் 13762—திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள சுமார் ஒரு லட்சம் முந்திரியாலை தொழிலாளர்களுக்காக புதிய குறைந்தபட்ச ஊதியச் சட்டத்தைக் கொண்டுவர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

1948-ம் வருட குறைந்தபட்ச ஊதியச் சட்டம் அட்டவணையில் சேர்க்கப்பட்ட தொழில் இனங்களில் "முந்திரித் தொழிலும்" அடங்கும், முந்திரித் தொழிலுக்கு அரசாணை (2டி) எண் 22, தொழிலாளர்

மற்றும் வேலைவாய்ப்புத் துறை, நாள் 21-6-2004-ன்மூலம் குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் மறுநிர்ணயம் செய்யப்பட்டுள்ளன. இந்த அரசாணையிலுள்ள குறைந்தபட்ச ஊதிய விகிதங்கள் கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள முந்திரித் தொழிலாளர்களுக்கும் பொருந்தும்.

**76—**

## துணை வேலைவாய்ப்பு அலுவலகம்

**வினா எண் 13786—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மாவட்ட வேலைவாய்ப்பு துணை அலுவலகத்தை செங்கல்பட்டு நகரில் அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

வேலைவாய்ப்புப் பணிகளின் அனைத்து வகையான சேவைகளும் செங்கற்பட்டு நகர மக்களுக்கு காஞ்சிபுரம் மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், செங்கற்பட்டு நகரில் தனியாகத் துணை வேலைவாய்ப்பு அலுவலகம் புதிதாக அமைப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**77—**

## திருப்பணி

**வினா எண் 11809—செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திண்டுக்கல் நகரிலுள்ள அபிராமி அம்மன் கோவிலை மறு சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

திண்டுக்கல் நகரில் உள்ள அபிராமி அம்மன் திருக்கோயிலுக்கு 5-9-1993 அன்று குடமுழுக்கு நடைபெற்றுள்ளது. குடமுழுக்கு நடைபெற்று 12 ஆண்டுகள் கடந்துவிட்டபடியால் மீண்டும் திருக்கோயிலுக்கு



திருப்பணிகள் செய்து குடமுழுக்கு நடத்திட திட்டமிடப்பட்டுள்ளது. திருப்பணிகளுக்கான மதிப்பீடுகளைத் தயாரிக்கவும், திருப்பணிக் குழு அமைத்திடவும் திருக்கோயில் நிர்வாகத்தால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**78—**

## புதிய கட்டடம்

**வினா எண் 11813—திரு. எல்.பி. தர்மலிங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சத்தியமங்கலம் தொகுதியிலுள்ள அருள்மிகு பண்ணாரி அம்மன் திருக்கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு உணவருந்தவும், ஓய்வெடுக்கவும் அரசு சார்பில் புதிய கட்டடங்கள் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

சத்தியமங்கலம் தொகுதியிலுள்ள அருள்மிகு பண்ணாரி மாரியம்மன் திருக்கோயில் உணவருந்தும் மண்டபம் 26-2-2001 ஆம் ஆண்டு முதல் பயன்பாட்டில் இருந்து வருகிறது. இத்திருக்கோயிலில் தற்போது 32 ஓய்வு அறைகள் உள்ளன. இவை நாள் ஒன்றுக்கு ரூ.50/- வீதம் பக்தர்களுக்கு வாடகைக்கு விடப்பட்டு பயன்பாட்டில் இருந்து வருகிறது. மேலும், இத்திருக்கோயிலில் யாத்ரிகர்கள் தங்கும் மண்டபம் மற்றும் நவீன வசதிகளுடன்கூடிய பெரிய உணவருந்தும் மண்டபம் கட்டுவது பரிசீலனையில் இருந்து வருகிறது.

**79—**

## திருப்பணித் திட்டம்

**வினா எண் 17364—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் ஆதி திராவிடர் கோவில்களுக்கு 25,000 ரூபாய் வழங்கும் திட்டத்தைத் தொடர்ந்து செயல்படுத்த அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில், இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டின்கீழ் இல்லாத ஆதி திராவிடர்கள் மற்றும் பழங்குடியினர் வசிக்கும் பகுதியிலுள்ள திருக்கோயில் திருப்பணி திட்டத்தின்கீழ் திருக்கோயில் 1-க்கு ரூ.25,000/- தொகை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

**80—**

## இழுவை இரயில் வசதி

**வினா எண் 17383—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மருதமலையில் இழுவை இரயில் வசதி ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு வருகை தரும் பக்தர்கள் சுவாமி தரிசனம் செய்திட ஏதுவாக படிக்கட்டுகள் (841) மற்றும் தார்ச் சாலை ஆகியவற்றின் வழியாக வந்தடைய போதுமான வசதிகள் செய்யப்பட்டுள்ளன. திருக்கோயில்மூலம் மூன்று சிற்றுந்துகள் இயக்கப்படுகின்றன. எனவே, தற்போது இத்திருக்கோயிலுக்கு புதியதாக இழுவை இரயில் வசதி ஏற்படுத்தத் தேவையில்லை.



**81—**

## கைத்தறி விற்பனை

**வினா எண் 18345—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் கைத்தறி விற்பனை நிலையம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை பகுதிக்கு அருகில் பொள்ளாச்சி கைத்தறி விற்பனை நிலையம் ஏற்கெனவே செயல்பட்டு வருகிறது. மேலும், பண்டிகை காலங்களில் வால்பாறை பகுதி மக்களின் வசதிக்காக கைத்தறி துணிவகைகளின் விற்பனைக்காக வளாக விற்பனை செய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

**82—**

## ஒருங்கிணைப்பகம்

**வினா எண் 18354—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தில் கைத்தறித் தொழில் ஒருங்கிணைப்பகம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) கோயம்புத்தூர் மாவட்டத்தைப் பொறுத்தவரையில் கைத்தறி தொழிலை ஒருங்கிணைப்பதற்கென கோயம்புத்தூர் சரக கைத்தறி மற்றும் துணிநூல் உதவி இயக்குநர் அலுவலகம் செயல்பட்டு வருகிறது. மேலும் விற்பனை போன்ற இனங்களைப் பொறுத்தவரையில் கோ-ஆப்டெக்ஸ்

மண்டல அலுவலகம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் கைத்தறித் தொழிலுக்கென தனியாக ஒருங்கிணைப்பகம் ஏற்படுத்த வேண்டிய அவசியம் எழவில்லை.

(ஆ) இவ்வினா எழவில்லை.

**83—**

**ஆசிரியர் பயிற்சி**

**வினா எண் 7144—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் 1992-94 ஆம் ஆண்டில் பாதிக்கப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சிப் பள்ளிகளில் சேர்ந்த புத்தொளி பயிற்சி பெறாத மாணவர்களுக்கு, ஆசிரியர் பயிற்சிப் பள்ளியில் சேர்க்கை அளித்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அங்கீகாரம் இரத்து செய்யப்பட்ட தனியார் ஆசிரியர் பயிற்சி நிறுவனங்களில் பயிற்சி மேற்கொண்டு பாதிக்கப்பட்ட மாணவர்களில் புத்தொளி பயிற்சி பெறாத மாணவர்களுக்கு, நிறுவனங்கள் மற்றும் மாணவர்களால் சமர்ப்பிக்கப்பட்ட ஏற்கக்கூடிய ஆவணங்களான சேர்க்கைப் பதிவேடு, வருகைப் பதிவேடு போன்ற ஆவணங்களின் அடிப்படையில் சுமார் 710 மாணவர்களுக்கு 2006-2007-ல் சேர்க்கை அளிக்கப்பட்டு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

**84—**

**புதிய மின் மோட்டார்**

**வினா எண் 7341—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



(அ) பண்ருட்டி தொகுதி, பத்திரக்கோட்டை அரசு உயர்நிலைப் பள்ளி அருகிலுள்ள பழுதடைந்த மின் மோட்டருக்குப் பதிலாக புதிய மின் மோட்டார் அமைத்திட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மேற்காண் பள்ளிக்குச் சொந்தமான மின் மோட்டார் பழுதுநீக்கம் செய்யப்பட்டு தற்போது நல்ல நிலையில் இயங்கி வருகிறது.

**85—**

**நோட்டுப் புத்தகங்கள்**

**வினா எண் 11667—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளிப் பாட நோட்டுகளில் நடிகர், நடிகைகளின் படங்களை அட்டையில் அச்சிடுவதைத் தவிர்க்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு பாடநூல் நிறுவனம்மூலம் அச்சடிக்கப்பட்டு விற்கப்படும் பள்ளிப் பாட நோட்டுகளில் நடிகர், நடிகைகளின் படங்கள் இடம் பெறுவதில்லை. மற்றும் பள்ளிக் கூட்டுறவுப் பண்டகசாலைகளில் விற்கப்படும் நோட்டுப் புத்தகங்களில் நடிகர், நடிகைகளின் படங்களை அச்சிட்ட நோட்டுப் புத்தகங்களை விற்கக்கூடாது என அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டுள்ளது.

**86—** [2007 மே 9

## விற்பனை வரி குறைப்பு

**வினா எண் 17611—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சுய உதவிக் குழுக்கள்மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரியைக் குறைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா, வணிக வரித் துறை அமைச்சர்:**

சுய உதவிக் குழுக்கள்மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்களுக்கு விற்பனை வரியைக் குறைக்கும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் இல்லை.

**87—**

## கசிவுநீர்க் குட்டைகள்

**வினா எண் 17353—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ஆனைமுடி, குரங்குமுடி பகுதிகளிலுள்ள சோலையாறு டாப்சிலிப் பகுதி, சின்கோனா சோலை பகுதியில் குளம் வெட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) வால்பாறையிலுள்ள ஆனைமுடி, குரங்குமுடி, சோலையாறு, சின்கோனா, டாப்சிலிப் பகுதிகளில் ஏற்கெனவே நான்கு கசிவு நீர்க் குட்டைகள் கட்டப்பட்டு தண்ணீர் தேக்கி வைக்கப்பட்டு வன உயிரினங்களுக்குப் பயன்படும் வகையில் உள்ளன. எனவே, புதிதாக குளம் வெட்டுவதற்கான அவசியம் தற்சமயம் எழவில்லை.

(ஆ) வினா எழவில்லை.



2007 மே 9]

**88—**

## சாலை அகலப்படுத்துதல்

**வினா எண் 11126—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஏளூர்-நாட்டாமங்கலம், குருசாமிப்பாளையம் சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஏளூர்-நாட்டாமங்கலம், குருசாமிப்பாளையம் சாலையில் போக்குவரத்துச் செறிவு போதுமான அளவில் இல்லாததால் சாலையை அகலப்படுத்த சாத்தியக்கூறுகள் இல்லை.

**89—**

## தரைப்பாலம்

**வினா எண் 11972—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மேலாரணி சாலையிலிருந்து பழங்கோயில் கிராமத்திற்குச் செல்ல செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது இத்திட்டம் நிறைவேற்றப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) கலசப்பாக்கம் தொகுதி, கலசப்பாக்கம் மேலாரணி சாலையிலிருந்து பழங்கோயில் கிராமத்திற்குச் செல்ல செய்யாற்றின் குறுக்கே தரைப்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

[2007 மே 9

90—

## மேம்பாலம்

**வினா எண் 13497—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் இரயில்வே மேம்பாலம் கட்டுமானப் பணியை விரைவாகக் கட்டி முடித்திட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் (கடவு எண் 100-க்குப் பதிலாக) இரயில்வே மேம்பாலப் பணியில் இரயில்வே பகுதியும் மேலும் அதனையொட்டி இரு பக்கமும் உள்ள மேல்தளம் அமைக்கும் பணி. தவிர மற்ற நெடுஞ்சாலைத் துறை பணிகள் முடிக்கப்பட்டுவிட்டன. இரயில்வே பகுதியின் மேல்தளம் அமைக்கும் பணி இரயில்வே துறையினரால் இன்னும் தொடங்கப்படவில்லை. அதனைத் துரிதப்படுத்துமாறு இரயில்வே துறையினர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். இரயில்வே பகுதியின் பணிகள் முடிக்கப்பட்டபின் நெடுஞ்சாலைத் துறையின் பகுதியில் மீதமுள்ள பணிகளை மேற்கொள்ள இயலும். இதற்கிடையே இரயில்வே பகுதியை ஒட்டி இரு பக்கமும் மேல்தளம் அமைக்கும் பணிக்கு ஒப்பந்தப்புள்ளிகள் கோர நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, இரயில்வே பணிகள் முடிவுற்றவுடன் மீதமுள்ள பணிகள் விரைவில் துவங்கி நெடுஞ்சாலைப் பகுதியில் பணிகள் முழுமையாக முடிக்க தக்க நடவடிக்கை எடுக்கப்படும்.

91—

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 13498—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரூரிலிருந்து சித்தேரி செல்லும் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

அரூரிலிருந்து சித்தேரி செல்லும் சாலையின் ஒரு பகுதியைச் செப்பனிட ஒருங்கிணைந்த சாலைகள் உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டம், 2006-2007 (CRIDP)-ன்கீழ் ரூ.117.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக அனுமதி வழங்கப்பட்டு ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டுள்ளது. ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டபின் பணிகள் துவங்கப்படும்.

92—

## சாலை சீரமைப்பு

**வினா எண் 14527—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தளி தொகுதியில் பழுதடைந்துள்ள தேன்கனிக்கோட்டை நெடுஞ்சாலையைச் சீர் அமைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) தளி தொகுதியில் பழுதடைந்துள்ள தேன்கனிக்கோட்டை நெடுஞ்சாலையானது, தளி-தேன்கனிக்கோட்டை மாவட்ட முக்கிய சாலையாகும். இச்சாலையின் மொத்த நீளம் 16.00 கி.மீ. இச்சாலையை முழுவதும் அகலப்படுத்தி மேம்படுத்தும் பணிக்கு ஒருங்கிணைந்த சாலைகள் உள் கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ. 198.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, ஒப்பந்தம் இறுதியாக்கப்பட்டு வேலை ஒப்படைக்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் துவங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

[2007 மே 9

93—

## தையல் இயந்திரம்

**வினா எண் 4332—திரு. கோவை தங்கம்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) வால்பாறை தொகுதியில், வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சிகளில் தையல் இயந்திரம் கேட்டு விண்ணப்பம் செய்து உள்ளவர்களுக்கு தையல் இயந்திரம் வழங்க அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

*(அ)* மற்றும் *(ஆ)* வால்பாறை தொகுதியில் வேட்டைக்காரன்புதூர் மற்றும் கோட்டூர் சிறப்பு ஊராட்சிகளில் தையல் இயந்திரம் கடந்த ஆண்டுகளில் வழங்கப்பட்ட விவரம் பின்வருமாறு:

| வேட்டைக்காரன் புதூர் | விண்ணப்பித்தவர்களின் எண்ணிக்கை | பயன்பெற்றவர்கள் எண்ணிக்கை |
|---|---|---|
| 2003-04 | 4 | 4 |
| 2004-05 | 2 | - (தகுதியில்லாததால் நிராகரிக்கப்பட்டது.) |
| கோட்டூர் | | |
| 2003-04 | 3 | 2 (தகுதியில்லாததால் 1 நிராகரிக்கப்பட்டது.) |
| 2004-05 | 4 | 4 |

மேலும் *2006-2007* ஆம் ஆண்டில் *5,500* தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கான அரசாணை வெளியிடப்பட்டு அது குறித்து சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டு தற்போது முடிவு செய்யப்பட்டுள்ள நிலையில், கோவை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் தையல் இயந்திரங்கள் வழங்குவதற்கான நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகிறது.



2007 மே 9]

94—

## சமையல் கூடம்

**வினா எண் 4969—திரு. த.அ. மேகநாதன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*காவேரிப்பட்டினம் தொகுதி, தேவர் முக்குளம் கிராம நடுநிலைப் பள்ளியில் சத்துணவு சமையல் கூடம் கட்டுமானப் பணியை விரைந்து முடித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

காவேரிப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், கரடி அள்ளி ஊராட்சி, தேவர் முக்குளம் கிராமத்தில் உள்ள நடுநிலைப் பள்ளி சத்துணவு சமையல் கூடத்தின் பழைய கட்டடம் பழுது பார்க்கப்பட்டு வேலை முடிக்கப்பட்டு தற்போது நல்ல நிலையில் உள்ளது.

95—

## முதியோர் உதவித் தொகை

**வினா எண் 5468—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** *மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் முதியோர் உதவித் தொகை கிடைக்காத முதியவர்கள் அனைவருக்கும் உதவித் தொகை உடனே கிடைக்க அரசு ஆவன செய்யுமா?*

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் முதியோர் உதவித் தொகை கோரி பெறப்பட்ட மனுக்கள்மீது தகுந்த நடவடிக்கை எடுக்கப்பட்டு தகுதியுள்ள நபர்கள் அனைவருக்கும் உதவித் தொகை

வழங்கப்பட்டு வருகிறது. மேலும், மேல்மலையனூர் சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட பகுதிகளில் முதியோர் உதவித் தொகைத் திட்டத்தின் கீழுள்ள ஐந்து இனங்களில் (மே 2006 முதல் நவம்பர் 2006 வரை) பெறப்பட்ட மனுக்கள் 180. அவற்றில் 104 நபர்கள் உதவித் தொகை பெற்றுவருகிறார்கள். 45 ஊனமுற்ற நபர்களின் வயது தளர்த்தி வழங்க மருத்துவக் குழுவில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மேலும், 31 மனுக்கள் தகுதி இல்லாத இனங்களாகக் கருதி தள்ளுபடி செய்யப்பட்டுள்ளன.

**96—**

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 6170—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வாகூர் ஊராட்சி, பள்ளகுடிசை கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைத்துத் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், வரகூர் ஊராட்சியின் பள்ளகுடிசை கிராமத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியில் மாணவ/மாணவியர்களின் எண்ணிக்கை 23 மட்டுமே உள்ளது. இப்பயனாளிகளுக்கு சத்துணவு, அருகில் உள்ள வரகூர் புதூர் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியின் சத்துணவு மையத்திலிருந்து தற்போது வழங்கப்பட்டு வருகிறது. 25 பயனாளிகளுக்கு மேல் எண்ணிக்கையுள்ள துவக்கப் பள்ளிகளுக்கு மட்டும் புதியதாக சத்துணவு மையம் ஆரம்பிக்க விதிமுறைகள் உள்ளன. பிள்ளைகளின் எண்ணிக்கை மேற்படி பள்ளியில் அதிகமாக உயர்த்தப்பட்டதும், 2007-2008 ஆம் ஆண்டிற்கு சத்துணவுக் கூடக் கட்டடம் கட்டித் தர பரிசீலிக்கப்படும்.



**97—**

### சத்துணவுக் கூடம்

**வினா எண் 6171—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு சமூக நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், ஆயர்பாடி துவக்கப் பள்ளிக்கு சத்துணவுக் கூடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு டாக்டர் (திருமதி) பூங்கோதை, சமூக நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், திமிரி ஊராட்சி ஒன்றியம், மேலபழந்தை ஊராட்சி, ஆயர்பாடி ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளி சத்துணவு மையத்தில் சமையல் கூடம் கட்டப்பட்டு தற்போது நல்ல முறையில் இயங்கி வருகிறது.

**98—**

### பட்டா

**வினா எண் 11718—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, ஜெகதளா ஊராட்சி, தரேமி கிராமப் பகுதிகளில் உள்ள ஆதி திராவிடர் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, ஜெகதளா ஊராட்சி, தரேமி கிராமப் பகுதியில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக

[2007 மே 9

வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க ஆதி திராவிடர் நலத் துறையின்கீழ் நில எடுப்பு செய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. தகுதியான நிலம் கிடைக்கப்பெற்றதும், இப்பகுதி மக்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்கப்படும்.

(ஆ) தனியார் பேரத்தின்கீழ் நிலம் தேர்வு செய்யப்பட்டதும் குறைந்த பட்சம் மூன்று மாத காலத்திற்குள் அவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

**99—**

## கூட்டுறவுச் சங்கம்

**வினா எண் 7588—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மொரப்பூர் தொகுதி, சித்தேரி மலைப்பகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தின்மூலம் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்களைத் துவக்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

மொரப்பூர் தொகுதி, சித்தேரி மலைப்பகுதியில் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் சங்கம் அமைக்க, தருமபுரி மாவட்டக் கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றியத்தில் போதிய நிதி வசதி இல்லாத காரணத்தால் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கங்கள் துவக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**100—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13009—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

(அ) கபிலர்மலை ஒன்றியம், கு. அய்யம்பாளையம் மற்றும் கோதூர் ஊராட்சி, கோதூர் பால் உற்பத்தியாளர் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கபிலர்மலை ஒன்றியம், கு. அய்யம்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்கு 2000-2001 ஆம் ஆண்டு அரசு வேலை உறுதியளிப்பு திட்டத்தின்மூலம் சொந்தமாகக் கட்டடம் கட்டி முடிக்கப்பட்டு தற்போது சொந்தக் கட்டடத்தில் இயங்கி வருகிறது. கோதூர் ஊராட்சியில், கோதூர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குச் சொந்தமாகக் கட்டடம் கட்ட நிலமும், நிதி வசதியும் இல்லை. எனவே, அச்சங்கத்திற்குப் புதிய கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

## பட்டியல்-10

1—

### பிக்பாக்கெட் அடிப்பதைத் தடுத்தல்

**வினா எண் 8307—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பேருந்துகளில் பெண்கள் பிக்பாக்கெட் அடிப்பதைத் தடுக்க அரசு எடுக்கும் நடவடிக்கை என்ன ?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

பேருந்துகளில் பெண்கள் பிக்பாக்கெட் அடிப்பதைத் தடுக்க, முக்கியமான பேருந்துகளில் பெண் காவலர்களை சாதாரண உடையில் அனுப்பி தக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது. மேலும், முக்கிய பேருந்துகளில், பேருந்து நிலையங்களில் முறைக் காவலர்கள் அனுப்பப்பட்டு ரோந்து நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு குற்றங்கள் நடவாமல் இருக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. இருப்பினும், தமிழகத்தில் பேருந்துகளில் பிக்பாக்கெட் அடித்த பெண்கள் 218 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. பேருந்துகளில் பெண்கள் பிக்பாக்கெட் அடிப்பதைத் தடுக்க அரசு காவல் துறைமூலம் தக்க நடவடிக்கை எடுத்து வருகிறது.

2—

### போலி சாமியார்கள்மீது நடவடிக்கை

**வினா எண் 10185—திருமதி பி. பத்மாவதி :** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

குழந்தைகளை நரபலி கொடுக்கத் தூண்டும், மூட நம்பிக்கையைப் பரப்பும் போலி சாமியார்களைக் களைய அரசின் நடவடிக்கை என்ன ?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர் :**

குழந்தைகளை நரபலி கொடுக்கத் தூண்டும் மூட நம்பிக்கையைப் பரப்பும் போலி சாமியார்களைக் களைய அரசு காவல் துறைமூலம் கடுமையான நடவடிக்கை மேற்கொண்டு; மேற்கண்ட வழக்குகளில்



சம்பந்தப்பட்ட நபர்கள்மீது கொலை குற்ற வழக்கு பதிவு செய்து நடவடிக்கை எடுத்து வருகிறது. மேலும், நரபலி கொடுக்கத் தூண்டும் மூட நம்பிக்கையைப் பரப்பும் போலி சாமியார்கள்மீது புகார் பெறப்படும் பட்சத்தில், அவர்கள்மீது சட்டரீதியான கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும். இதனடிப்படையில் கடந்த 2006 ஆம் வருடத்தில், கடலூர் மாவட்டத்தில், நெல்லிக்குப்பம் காவல் நிலைய எல்லைக்குட்பட்ட அரசடிகுப்பம் என்ற கிராமத்தில் இதுபோன்ற ஒரு வழக்கு பதிவு செய்யப்பட்டு எதிரிகள் 10 பேர் கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர் செய்யப்பட்டு நீதிமன்ற நடவடிக்கைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

3—

### சிப்காட் தொழிற்பேட்டை

**வினா எண் 10492—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகரில் சிப்காட்மூலம் தொழிற்சாலை ஏற்படுத்த அரசு முன்வருமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது ?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தற்சமயம் அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. சிப்காட் நிறுவனம் ஈரோடு மாவட்டத்தில் உள்ள பெருந்துறை தொகுதியில் சுமார் 2,600 ஏக்கர் நிலப்பரப்பில் பெரிய மற்றும் நடுத்தர தொழில் நிறுவனங்கள் தொடங்க "சிப்காட் பெருந்துறை வளர்ச்சி மையத்தை" உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இந்தத் தொழில் வளர்ச்சி மையம், கோவை மாநகர் மற்றும் பொள்ளாச்சி வால்பாறையிலிருந்து சுமார் 150 கி.மீ. தொலைவில் உள்ளதால் ஆழியாறு நகரில் உள்ள தொழில் முனைவோர்கள் தங்களது தொழிற்சாலைகளை சிப்காட் பெருந்துறை தொழில் வளர்ச்சி மையத்தில் துவங்கலாம். சிப்காட் நிறுவனம் தமிழ்நாட்டில் பெரிய மற்றும் நடுத்தர தொழிற்சாலைகளை உருவாக்க பெரிய அளவில், தொழில் வளாகங்கள்/பூங்காக்கள்/வளர்ச்சி மையங்களை உருவாக்கி செயல்படுத்தி வருகிறது. இதுவரை 12 மாவட்டங்களில் 11 தொழில் வளாகங்கள் 3 தொழில் பூங்காக்கள் மற்றும் 3 தொழில் வளர்ச்சி மையங்களை செயல்படுத்தி வருகிறது. தமிழ்நாட்டில்

227669
சென்னை-600 002

[2007 மே 9

உள்ள ஒவ்வொரு ஊராட்சியிலும் பெரிய அல்லது நடுத்தர தொழில் வளாகங்களை உருவாக்குவது சாத்தியமில்லை. போதிய அளவு தொழில் முனைவோர்களின் தேவை, பெரிய அளவில் நிலங்கள் கையகப்படுத்துவதற்கு உள்ளதா மற்றும் தொழில் உட்கட்டமைப்பிற்கான போக்குவரத்து, தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்க இயலுமா என்ற சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பின்தான் தொழில் வளாகங்களை உருவாக்க முடிவு செய்யப்படும். ஆகவே, வால்பாறை தொகுதி ஆழியாறு நகரில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**4—**

## சிப்காட் தொழிற்பேட்டை

**வினா எண் 10931—திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் அரசு தொழிற்பேட்டை அமைக்க அரசு முன்வருமா?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

*தற்சமயம் அத்தகைய திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.*

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு ஒன்றியத்திலும் பெரிய அல்லது நடுத்தர தொழில் வளாகங்களை உருவாக்குவது சாத்தியமில்லை. போதிய அளவு தொழில் உள்ளதா மற்றும் உட்கட்டமைப்பிற்கான போக்குவரத்து, தண்ணீர், மின்சாரம் போன்ற அடிப்படை வசதிகளை உருவாக்க இயலுமா என்ற சாத்தியக்கூறுகளை ஆராய்ந்த பின்தான் தொழில் வளாகங்களை உருவாக்க முடிவு செய்யப்படும். ஆகவே திண்டுக்கல் மாவட்டம், வேடசந்தூர் தொகுதி, குஜிலியம்பாறை ஒன்றியத்தில் சிப்காட் தொழிற்பேட்டை அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை.

**5—**

## சிப்காட் தொழில் வளாகம்

**வினா எண் 13487—திரு. வ. முல்லைவேந்தன்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

*தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் "சிப்காட் தொழில் வளாகம்" அமைக்கும் செயற்குறிப்பு அரசின் ஆய்வில் உள்ளதா?*

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

சிப்காட் நிறுவனம் ஏற்கெனவே தருமபுரி மாவட்டம், மொரப்பூருக்கு அருகில் இருக்கும் பர்கூர், கிருஷ்ணகிரி மாவட்டத்தில் ஒரு தொழில் வளாகத்தை சுமார் 1,100 ஏக்கர் நிலப்பரப்பில் உருவாக்கியுள்ளது. இங்கு போதிய அளவு நிலங்கள் விற்பனைக்கு உள்ளதால், தொழில் முனைவோர்கள் அவர்களுடைய தேவைக்கேற்ப பர்கூர் தொழில் வளாகத்தில் தொழிற்சாலையை உருவாக்கலாம். இந்நிலையில், தருமபுரி மாவட்டம், மொரப்பூரில் சிப்காட் தொழில் வளாகம் அமைக்க எந்தவித திட்டமும் சிப்காட் நிறுவனத்திடம் இல்லை.

**6—**

## காலிப் பணியிடங்கள்

**வினா எண் 1715—திரு. ப. ரங்கநாதன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) தமிழ்நாடு தேர்வாணைக் குழுமூலமாக அரசுத் துறைகளில் காலியாகவுள்ள பணியிடங்களை நிரப்ப அரசு நடவடிக்கை எடுக்குமா?*

*(ஆ) ஆம் எனில், அதன் விவரம் என்ன?*

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

*(அ) ஆம்.*

*(ஆ) அரசுத் துறைகளில் உள்ள காலிப்பணியிடங்களைக் கணக்கிடுவது குறித்த அறிவுரைகள் அளிக்கப்பட்டு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம்மூலம் காலிப்பணியிடங்களை விரைந்து நிரப்பிடத் தேவையான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுள்ளன.*

7— [2007 மே 9

## மின் இணைப்பு

**வினா எண் 14168—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் ஊராட்சி, பழவூர் புதுகாலனி குடியிருப்பு வழியாகச் செல்லும் 11 கிவா. கோபுரத்தை மாற்றம் செய்து, குடியிருப்புகளுக்கு மின் இணைப்பு கிடைத்திட நடவடிக்கை எடுக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், பழவூர் ஊராட்சி, பழவூர் புதுக்காலனியில் ஏற்கெனவே உள்ள உயர் மற்றும் தாழ்வழுத்த மின்பாதைக்குக்கீழ் கட்டியுள்ள வீடுகளுக்குப் பாதுகாப்பு வழிமுறைகள் செய்து மின்னிணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

8—

## மின் இணைப்பு

**வினா எண் 14207—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தமிழகத்தில் விவசாயத்திற்காக மின் இணைப்பு வேண்டி பதிவு செய்து, நீண்ட காலம் காத்திருக்கும் ஏழையெளிய விவசாயிகளுக்கு மின் இணைப்பு வழங்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தில் நிலுவையில் உள்ள விவசாய விண்ணப்பங்கள் எண்ணிக்கை 5,08,061 ஆகும். வாரியத்தின் கட்டமைப்பு, நிதிச்சுமை மற்றும் இதர காரணங்களைக் கருத்தில் கொண்டு, ஒவ்வொரு வருடமும் அரசு நிர்ணயிக்கும் குறியீட்டிற்குத் தகுந்தவாறு விண்ணப்பப் பதிவு மூப்பு வரிசைப்படி விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டு வருகின்றன. 2006-2007 ஆம் ஆண்டிற்கான குறியீடாக 40,500 எண்ணிக்கைகள் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. 1-04-2006 முதல் 31-12-2006 வரை 18,681 விவசாய மின் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளன



2007 மே 9]

9—

## குடிநீர் வசதி

**வினா எண் 2301—திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் தொகுதி, போத்தனூர் அம்மன் நகர் 6-வது வார்டு, என்.பி. இட்டேரி 2-வது வார்டில் போதிய குடிநீர் வசதி செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) போத்தனூர் அம்மன் நகர் 6-வது வார்டு, என்.பி. இட்டேரி 2-வது வார்டுக்கு சிறுவாணி குடிநீர்த் திட்டத்தின் மூலம் நாளொன்றுக்கு நபர் ஒருவருக்கு 40 லிட்டர் வீதம் குடிநீர், நகராட்சி மூலம் வழங்கப்பட்டு வருகிறது.

10—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 10661—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, வண்டிசோலை ஊராட்சி, பெள்ளட்டி மட்டம் ஆரம்பப் பள்ளிக்குச் சொந்தமாகக் கட்டடம் கட்டித் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட பெள்ளட்டி மட்டம் கிராமத்தின் புல எண் 174-ல்

வருவாய்த் துறையைச் சார்ந்த சாலைப் புறம்போக்கு சுமார் 0.335 ஹெக்டேர் நிலத்தில் பள்ளிக் கட்டடம் கட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

11—

## தளவாட பொருட்கள்

**வினா எண் 10666—திரு. அ. சௌந்திரபாண்டியன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, கீழ்கோத்தகிரி, ஆலூர் ஊராட்சிப் பள்ளிக்குத் தளவாடப் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) நீலகிரி மாவட்டம், குன்னூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட கீழ்கோத்தகிரி, ஆலூர் ஊராட்சி ஒன்றியப் பள்ளிக்குப் போதுமான மேசை, நாற்காலிகள் உள்ளன. பெற்றோர், ஆசிரியர் கழகத்தின் மூலம் 5 சிறிய தரைமட்ட உட்காரும் பலகைகள் வாங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

12—

## நியாய விலைக் கட்டடம்

**வினா எண் 10723—திரு. வி.எ.டி. கலியவரதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதி கிராமங்களுக்கு நியாய விலைக் கட்டடம் கட்டித் தர அரசு முன்வருமா?



**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

முகையூர் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட முகையூர் மற்றும் காணை ஊராட்சி ஒன்றியத்தில், கொழுந்திராம்பட்டு ஊராட்சி நீங்கலாக அனைத்து ஊராட்சிகளிலும் நியாய விலைக் கட்டடம் இயங்கி வருகிறது. அனைத்து ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட பகுதியில் வாழப்பட்டு, சித்தேரி, காணை ஊராட்சி ஒன்றியத்திற்குட்பட்ட, குருவித்தாங்கல் மற்றும் அரும்புலி நீங்கலாக அனைத்து ஊராட்சிகளிலும் நியாய விலைக் கட்டடம் இயங்கி வருகிறது. மேலும், நிலுவையிலுள்ள அனைத்து ஊராட்சிகளுக்கும் அரசு நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நியாய விலைக் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்படும்.

13—

## ஆக்கிரமிப்பு அகற்றுதல்

**வினா எண் 14677—திரு. கே.வி. ராமநாதன் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பவானி தொகுதி, கவுந்தப்பாடி கிராமம், நல்லாக்கவுண்டன் பாளையம், பாட்டைய கவுண்டர் வீட்டில் இருந்து மாயவக் கவுண்டர் வீடுவரை செல்லும் நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் :**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, கவுந்தப்பாடி கிராமம், நல்லாக்கவுண்டன் பாளையம், பாட்டைய கவுண்டர் வீட்டில் இருந்து மாயவக் கவுண்டர் வீடுவரை செல்லும் நடைபாதையில் உள்ள ஆக்கிரமிப்பை அகற்றித் தர, கவுந்தப்பாடி ஊராட்சி மன்றத் தலைவர் மூலம் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

**14—**

## சமுதாயக் கூடம்

**வினா எண் 18181—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சிக்கு சமுதாயக் கூடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, பிலிசின்னம்பாளையம் ஊராட்சிக்கு சமுதாயக் கூடம் கட்ட, சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியிலிருந்து நிதி ஒதுக்கீடு செய்து தரும்பட்சத்தில் உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**15—**

## தென்னை ஆராய்ச்சி மையம்

**வினா எண் 9676—திரு. ஆர். சிவானந்தம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆரணி தொகுதி, எஸ்.வி. நகரத்திலுள்ள கிராம விரிவாக்க மையத்தில் தென்னை ஆராய்ச்சி மையம் ஏற்படுத்த அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

ஆரணி தொகுதி, எஸ்.வி. நகரத்திலுள்ள கிராம விரிவாக்க மையத்தில் தென்னை ஆராய்ச்சி மையம் அமைக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசிலனையில் இல்லை.



**16—**

## பருத்தி உற்பத்தி

**வினா எண் 18427—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பருத்தி விளைச்சலை அதிகரிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழக வேளாண்மைத் துறை, மாநிலத்தில் பருத்தி உற்பத்தியினை அதிகரிக்க பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. விவசாயிகளுக்குத் தரமான சான்று விதைகளை விநியோகிக்கும் பொருட்டு, தமிழக வேளாண் துறை விதைப் பெருக்கத் திட்டத்தினைச் செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்கீழ், விவசாயிகளுக்குத் தேவைப்படும் பருத்தி இரகங்களின் விதைகள், விதைப் பண்ணைகளில் உற்பத்தி செய்யப்பட்டு, விவசாயிகளுக்கு விநியோகம் செய்யப்படுகிறது.

பருத்தி விதைப் பெருக்கத் திட்டத்தின்கீழ் ரூ.106.43 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மத்திய அரசின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படும் தீவிர பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் ரூ. 432.17 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, வேளாண்மை இடுபொருட்கள், விதை, பயிர்ப் பாதுகாப்புக் கருவிகள், சொட்டு நீர் பாசன மற்றும் தெளிப்பு நீர் பாசனக் கருவிகள், உயிர் உரம், நுண்ணுரம், இனக்கவர்ச்சிப் பொறி போன்றவை விவசாயிகளுக்கு மானிய விலையில் வழங்கப்படுகின்றன. இவை தவிர, வேளாண்மைத் துறையினால் விவசாயிகளுக்கு பருத்தி சாகுபடி பற்றிய தொழில்நுட்பங்கள் குறித்து பயிற்சி அளிக்கப்படுகிறது. மேலும், கிராமக் கூட்டங்களிலும், முன்பருவ முகாம்கள், பணிமனை கூட்டங்கள் மூலமாகவும் தொழில்நுட்பங்கள் விவசாயிகளுக்கு எடுத்துரைக்கப்படுகின்றன. எனவே, பருத்தி உற்பத்தியை அதிகரிக்கும் நோக்கத்துடன் மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் தமிழகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

17— [2007 மே 9

## பருத்தி விதை

**வினா எண் 20940—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேளாண்மைத் துறையில் புதிய வீரியத்துடன்கூடிய பருத்தி விதை உற்பத்தி செய்ய அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பயிர் உற்பத்திக்கு விதையே ஆதாரம், வீரிய ஒட்டு இரக பருத்தி விதைகளை சாகுபடி செய்வதால் பருத்தி மகசூல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. அதனைக் கருத்தில் கொண்டு, தமிழக அரசு பருத்தி அபிவிருத்தித் திட்டத்தின்கீழ் சான்று விதைகளை உற்பத்தி செய்து விவசாயிகளுக்கு வழங்க 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.106.43 இலட்சம் ஒதுக்கீடு செய்து, இதன்மூலம் 250 மெட்ரிக் டன் சான்று பெற்ற விதைகள் விவசாயிகளுக்கு வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டில் முக்கிய பருத்தி இரகங்களான எம்சியூ.5, எம்சியூ.12, எம்சியூ.13, எல்ஆர்ஏ5166, எஸ்விபிஆர் 2 மற்றும் 3, சுரபி, சுப்ரியா ஆகிய பருத்தி இரக விதைகள் விவசாயிகளுக்கு வழங்கப்படுகின்றன. வீரிய ஒட்டு ரகங்களான டிசிஎச் 32, ராசி விதைகள் மற்றும் பண்ணி இரகங்களும் விவசாயிகளால் பயிரிடப்பட்டு வருகின்றன. இது மட்டுமல்லாமல், தற்போது காய்ப் புழு தாக்காத இரகங்களான பிடி பருத்தி தனியார் மூலம் விற்பனை செய்யப்பட்டு வருகிறது.

தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் நீண்ட இழை பருத்தி இரகங்களையும், பூச்சி நோய் தாக்காத இரகங்களையும் ஆராய்ச்சி செய்து வருகிறது. இதன்மூலம் அதிக மகசூல் கிடைக்கக்கூடிய பூச்சி நோய் தாக்காத இரகங்களை எதிர்காலத்தில் தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலைக்கழகம் வெளியிட உள்ளது.



2007 மே 9]

18—

## வாய்க்கால் வெட்டும் செலவு

**வினா எண் 13220—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயத்திற்குட்பட்ட மருதுறை கிராமம், குருக்கல்பாளையம் ஆகிய ஊர்களில் வாய்க்கால் வெட்டும் செலவை பொதுமக்களே ஏற்று வாய்க்கால் வெட்டிக்கொள்ள அரசு அனுமதி அளிக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

காங்கேயம் வட்டம், மருதுறை கிராமம், குருக்கல்பாளையம் கிராமத்திற்கு அருகில், கீழ்பவானி திட்ட பிரதானக் கால்வாய் மைல் 100-6-7-ன்கீழ் உள்ள பூமிகள் தாராபுரம் கட் தலைப்பில் வருவதாகும். அரசாணை (நிலை) எண் 122, பொதுப் பணித் துறை, நாள் 7-3-2000-ன்படி தாராபுரம் கட் நிலங்களை கீழ்பவானி திட்ட ஆயக்கட்டில் சேர்த்து ஆணை வழங்கியபோது, இத்திட்டத்தின்மூலம் பயன்பெறும் விவசாயிகள், செலவுத் தொகையினை தாமே ஏற்றுக்கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையுடன் அரசு ஆணை வழங்கியது. போதிய மழையின்மையாலும், நிர்வாகக் காரணங்களினாலும் இத்திட்டம் நடைமுறைப்படுத்தப்படவில்லை. தற்போது நல்ல மழைப்பொழிவு இருப்பதன் அடிப்படையில், தாராபுரம் கட் பகுதிகளை, கீழ்பவானி திட்ட ஆயக்கட்டில் மீண்டும் சேர்க்க உரிய ஒத்திசைவு வழங்கிட மாவட்ட ஆட்சியர்கள் ஈரோடு மற்றும் கரூர் ஆகியோர் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். அவர்களின் ஒத்திசைவு கிடைக்கப் பெற்றவுடன் இப்பொருள் குறித்து அரசு பரிசீலிக்கும்.

19—

## வாய்க்கால் பராமரிப்பு

**வினா எண் 14591—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சென்னிமலை ஒன்றியம், கீழ்பவானி பாசன வாய்க்கால் 630/560 பிரிவு ஊஞ்சலூர் பகிர்மான வாய்க்கால், M-7 பாசன வாய்க்கால் ஆகியவற்றை பராமரிக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

சென்னிமலை ஒன்றியம், கீழ்பவானி பாசன வாய்க்கால் 630/500 பிரிவு ஊஞ்சலூர் பகிர்மான வாய்க்கால், M-7 நீரைப் பயன்படுத்துவோர் பாசன சங்கத்திற்கு ரூ.2,21,085/- பராமரிப்புப் பணிக்காக ஒதுக்கீடு செய்யப்பட்டதில், இதுவரை ரூ.75,000/-க்கு மதிப்பீடு அனுமதி வழங்கப்பட்டுள்ளது. எஞ்சிய தொகைக்குரிய பராமரிப்புப் பணிகள், பாசனத்திற்கு நீர் நிறுத்தம் செய்த பின்னர் செய்திட இயலும். கீழ்பவானி திட்டக் கால்வாய்களைப் பராமரிப்பு செய்திட, அரசு ரூ.1765 கோடி 2006-2007-ல் ஒதுக்கீடு செய்ததில், முன்னுரிமை பணிகள் மட்டும் செய்து முடிக்கப்பட்டுள்ளன. ஈரோடு கோட்டக் கட்டுப்பாட்டில் 44 பாசனதாரர்கள் சங்கங்கள் உள்ளன. ஆண்டு பராமரிப்புக்கென வருடாவருடம் ஒதுக்கீடு வழங்கப்படுவதில்லை. எனினும், 2005-2006 ஆம் ஆண்டில் மட்டுமே பாசனதாரர்களுக்கு ஒருமுறை பட்டுவாடா தொகை வழங்கப்பட்டது. மேலும், ஆண்டு பராமரிப்பிற்காக ஒதுக்கப்பட்ட தொகையில், இவ்வாய்க்காலில் அத்தியாவசியமான பணிகள் மட்டும் பார்க்கப்பட்டு உள்ளன.

**20—**

### பணிமனை

**வினா எண் 1097—திருமதி ராணி வெங்கடேசன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சாத்தான்குளத்தில் அரசு பேருந்து பணிமனை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சாத்தான்குளத்திலிருந்து 17 கி.மீ. தூரத்தில் நாகர்கோவில் வட்டார திசையன்விளை கிளையும், 27.5 கி.மீ. தூரத்தில் திருநெல்வேலி வட்டார திருச்செந்தூர் கிளையும் ஏற்கெனவே செயல்பட்டு வருகின்றன. அரசாணையின்படி, இரு பணிமனைகளுக்கு இடையே உள்ள தூரம் 400 கி.மீ.-க்குக் குறையாமல் இருக்க வேண்டும். எனவே, சாத்தான்குளத்தில் அரசு பேருந்து பணிமனை அமைக்க ஆய்வு செய்யப்பட்டு முடிவு செய்யப்படும்.





**21—**

### பேருந்து வசதி

**வினா எண் 2458—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு முதல் வள்ளிபுரம் வரை இயங்கி வந்த T19 மற்றும் T5 ஆகிய நகரப் பேருந்துகளை மீண்டும் இயக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

செங்கற்பட்டிலிருந்து வள்ளிபுரத்திற்கு T19 மூலம் 4 நடைகள் இயக்கப்பட்டன. இந்த நான்கு நடைகளும், நகரப் பேருந்துகள் தட சீரமைப்பின்போது தடங்கள் T2 மற்றும் T3ஏ மூலம் இயக்கப்படுகின்றன. அதேபோல், T5-ன்மூலம் செங்கற்பட்டிலிருந்து வள்ளிபுரத்திற்கு இயக்கப்பட்ட 4 நடைகளும் தொடர்ந்து இயக்கப்படுகின்றன. மேலும், T4-ன்மூலம் செங்கற்பட்டிலிருந்து 4 நடைகள் வள்ளிபுரத்திற்கு இயக்கப்படுகின்றன. எனவே, நகரத் தடங்கள் T19 மற்றும் T5-ன்மூலம் செங்கற்பட்டிலிருந்து வள்ளிபுரத்திற்கு இயக்கப்பட்ட 8 நடைகளும் துண்டிக்கப்படவில்லை, தொடர்ந்து இயக்கப்படுகின்றன.

**22—**

### துணைப் பணிமனை

**வினா எண் 3543—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை SIPCOT வளாகத்திற்கு அரசு போக்குவரத்துக் கழகப் பேருந்து நிலையத்தைச் செயல்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை SIPCOT வளாகத்தில், அரசுப் போக்குவரத்துக் கழக துணை பணிமனை கடந்த ஏப்ரல் 2002 முதல் இயங்கி வருகிறது. மானாமதுரையை மையமாகக் கொண்டு பதினொன்று பேருந்துகள் இயங்கி வருகின்றன. இவை தவிர மானாமதுரை வழியாகச் செல்லும் பேருந்துகளின் இயக்கங்கள், இந்தத் துணை பணிமனைமூலம் கண்காணிக்கப்படுகிறது.

**23—**

## மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம்

**வினா எண் 3572—திரு. தா. உதயசூரியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், கள்ளக்குறிச்சியில் மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் புதியதாக துவங்க அரசிடம் திட்டம் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகங்கள் தேவையான இடங்களில் துவங்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எனவே, அரசின் நிதிநிலைமைக்கேற்ப, கள்ளக்குறிச்சியில் புதிய மோட்டார் வாகன ஆய்வாளர் அலுவலகம் துவங்க உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**24—**

## ஒரே வண்ணம்

**வினா எண் 4547—திரு. வி.எஸ். பாபு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகம் முழுவதும் இயங்கும் அரசு நகரப் பேருந்துகளுக்கு ஒரே மாதிரியான வண்ணம் பூச அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?



**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்தில் பல்வேறு மாவட்டங்களில் அரசு நகரப் பேருந்துகள் தனியார் நகரப் பேருந்துகளுடன் அதிகப் போட்டியில் இயக்கப்படுகின்றன. இவ்வாறு போட்டியில் பேருந்துகள் இயக்கப்படுவதால், பயணிகளின் பார்வையை ஈர்க்கும் வகையில் அரசுப் பேருந்துகளுக்கு பலவித வண்ணம் பூச வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் சுலபமாக அடையாளம் கண்டு கொள்ள, தமிழக அரசின் கொள்கை முடிவுக்கேற்ப ஒவ்வொரு நகரத்திலும் இயக்கப்படும் உள்ளூர் பேருந்துகளுக்கு ஒரு வண்ணமும், தமிழ்நாட்டின் மற்ற மாவட்டங்களுக்கு இயக்கப்படும் விரைவு பேருந்துகளுக்கு ஒரு வண்ணமும் மற்றும் அண்டை மாநிலங்களுக்கு இயக்கப்படும் அதி விரைவு பேருந்துகளுக்கு வேறொரு வண்ணமும் கொடுக்கப்பட்டுள்ளது.

**25—**

## கூடுதல் பேருந்து வசதி

**வினா எண் 4580—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை பெரியார் நிலையத்திலிருந்து செக்கானூரணி, கோவிலாங்குளம் வழியாக முதலைக்குளம் கிராமத்திற்குக் கூடுதல் பேருந்து வசதி செய்து தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

மதுரை பெரியார் பேருந்து நிலையத்திலிருந்து செக்கானூரணி, கோவிலாங்குளம் வழியாக முதலைக்குளத்திற்கு தற்போது நாளொன்றுக்கு 6 தனி நடைகள் இயக்கப்பட்டு வருகின்றன. மேலும், முதலைக்குளத்திற்கு 0.4 கிலோ மீட்டர் தூரத்தில் உள்ள பிரிவு நிறுத்தம் வழியாக பெரியார் நிலையம்-கொடிக்குளம் தடப்பேருந்துகள்மூலம் 24 தனி நடைகள் பேருந்து வசதி உள்ளது. பயணிகள் அடர்வு மற்றும் தற்போதுள்ள பேருந்து வசதிகளை கணக்கில் கொள்ளும்போது, முதலைக்குளம் கிராமத்திற்கு தற்போதுள்ள பேருந்து வசதிகள் போதுமானது என்று கருதப்படுகிறது.

**26—** 

## பேருந்து வசதி

**வினா எண் 5684—திரு. ஆர்.கே. பாரதி மோகன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவிடைமருதூர் தொகுதி, திருமணஞ்சேரி செல்லவும், திருமணஞ்சேரியில் இருந்து ஆடுதுறை செல்லவும் அரசுப் பேருந்து வழித்தடம் அமைத்துக் கொடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

கோரிக்கை தடத்தில், குத்தாலம் திருமணஞ்சேரி வரை 5 கி.மீ. பகுதியில் மயிலாடுதுறை கிளை நகரப் பேருந்துகள்மூலம் தினசரி 24 நடைகள் இயக்கப்படுகின்றன. குத்தாலம்-ஆடுதுறை தடப் பகுதியானது கும்பகோணம்-மயிலாடுதுறை பிரதான தடத்தில் அமைந்துள்ளதால், போதிய அளவு பேருந்து வசதி உள்ளது. கோரிக்கை தடத்தின் அனைத்துப் பகுதிகளிலும் பேருந்து வசதி உள்ளது.

**27—**

## பணிமனை

**வினா எண் 8531—திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கலசப்பாக்கத்தில் போக்குவரத்துத் துறையின் சார்பில் ஒரு பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கலசப்பாக்கத்திற்கு அருகில் 8 கி.மீ. தூரத்தில் உள்ள போளூரில் ஒரு பணிமனையும், 20 கி.மீ. தூரத்தில் உள்ள





திருவண்ணாமலையில் ஒரு பணிமனையும் இயங்கி வருகின்றன. அரசாணையின்படி இரு பணிமனைகளுக்கு இடையே உள்ள தூரம் 40 கி.மீ.-க்குக் குறைவாக இருக்கக்கூடாது. எனவே, கலசப்பாக்கத்தில் பணிமனை அமைக்க இயலாது.

**28—**

## பேருந்து வசதி

**வினா எண் 9143—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

நாகர்கோவிலில் இருந்து ராதாபுரம் தொகுதிக்குட்பட்ட கிராமங்களான காவல்கிணறு, வடக்கன்குளம், பெத்தரெங்கபுரம், ராதாபுரம், சீலாத்திகுளம், முடவன்குளம், பெட்டைகுளம், திசையன்விளை வழியாக திருச்செந்தூருக்கு தடம் 577-ஐ மீண்டும் இயக்கிட அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காவல்கிணறு, வடக்கன்குளம், பெத்தரெங்கபுரம், ராதாபுரம், சீலாத்திகுளம், முடவன்குளம், பெட்டைகுளம், திசையன்விளை வழியாக திருச்செந்தூருக்கு இயக்கப்பட்ட தடம் எண் 577 பயணிகளின் அடர்வு குறைவு காரணமாக 10 ஆண்டுகளுக்கு முன்னர் நிறுத்தப்பட்டது. இருப்பினும் மக்களது தேவையைக் கருத்தில்கொண்டு தடம் எண் 571 வாயிலாக திசையன்விளை வரை தினசரி 4 நடைகளும் வள்ளியூர் வழியாக திருச்செந்தூருக்கு 2 நடைகளும் இயக்கப்பட்டு வருகின்றன.

**29—**

## நவீனக் கழிப்பிடம்

**வினா எண் 9684—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி போக்குவரத்துத் துறை அலுவலகத்தில் நவீனக் கழிப்பிடம் கட்டித்தர அரசு முன்வருமா?

[2007 மே 9

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நவீனக் கழிப்பிடம் கட்டுவது தொடர்பாக பொதுப் பணித் துறையினரிடம் தோராய மதிப்பீடு, பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலரால் கோரப்பட்டுள்ளது. மேற்படி தோராய மதிப்பீடு வரப்பெற்றபின், பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்கு நவீன கழிப்பிடம் கட்டித்தர நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**30—**

## பணிமனை

**வினா எண் 10306—திரு. கே. பொன்னுசாமி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை செம்மேட்டிலுள்ள அரசு நிலத்தில் பேருந்து பணிமனை அமைக்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேந்தமங்கலம் தொகுதி, கொல்லிமலை, செம்மேடு, வாழவந்திநாடு கிராமத்தில் உள்ள சேலம் தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகத்திற்குச் சொந்தமான நிலத்தில் பேருந்து பணிமனை அமைப்பதற்கான நடவடிக்கை தற்போது ஏதுமில்லை.

**31—**

## பேருந்து வசதி

**வினா எண் 12010—திரு. த. தியோடர் ரெஜினால்டு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

(அ) தக்கலை பேருந்து நிலையத்திலிருந்து திருவிதாங்கோடு, கோழிப்போர்விளை, பள்ளியாடி வழியாக திருவனந்தபுரத்திற்கு பேருந்து இயக்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தக்கலை பேருந்து நிலையத்திலிருந்து திருவிதாங்கோடு, கோழிப்போர்விளை, பள்ளியாடி வழியாக திருவனந்தபுரத்திற்கு பேருந்து இயக்குவது இரு மாநில வழித்தடமாக அமைந்துள்ளது. இரு மாநில வழித்தடத்தில் தன்னிச்சையாக புதிய பேருந்து இயக்க வழி வகை இல்லை. அடுத்து நடக்கவிருக்கும் இரு மாநில வழித்தட ஒப்பந்தம் ஏற்படும்போது இது குறித்து நடவடிக்கை எடுக்கப்படும்.

**32—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13772—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் வத்தலக்குண்டில் வாடகைக் கட்டடத்தில் இயங்கும் வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குப் புதிய கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) திண்டுக்கல் வட்டாரப் போக்குவரத்து அலுவலகக் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் வத்தலக்குண்டு பகுதி அலுவலகத்திற்கு அரசுக்குச் சொந்தமான புறம்போக்கு நிலத்தில் சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக மாவட்ட ஆட்சியர், திண்டுக்கல் அவர்களை

அணுகி உரிய நிலத்தினைத் தேர்வு செய்து, அதன்பின் நிதிநிலைக்கேற்ப உரிய நேரத்தில் நடவடிக்கை எடுக்கப்படும்.

**33—**

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13856—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

செங்கல்பட்டு போக்குவரத்து ஆய்வாளர் அலுவலகத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் வட்டாரப் போக்குவரத்து அலுவலரின் கட்டுப்பாட்டில் இயங்கிவரும் செங்கல்பட்டு பகுதி அலுவலகத்திற்கு சொந்தக் கட்டடம் கட்டுவது தொடர்பாக, செங்கல்பட்டு வட்டம், கிராம எண் 221 பரமனூர், கிராம புல எண் 64/1-ல் 1.48 ஹெக்டேரில் 0.32.05 ஹெக்டேர் நிலத்தினை போக்குவரத்துத் துறைக்கு நிலமாற்றம் செய்தபின், பகுதி அலுவலகக் கட்டடம் கட்டுவதற்கான திட்ட மதிப்பீடு மற்றும் நிதி ஒதுக்கீடு பெற்று சொந்தக் கட்டடம் கட்ட நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**34—**

## பணிமனை

**வினா எண் 14062—திரு. கோ. எதிரொலி மணியன்:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதி, சேத்துப்பட்டு நகரில் அரசுப் பேருந்து பணிமனை அமைக்க அரசு முன் வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

சேத்துப்பட்டு, வந்தவாசி-போளூர் சாலை மற்றும் ஆரணி-செஞ்சி சாலை சந்திப்பில் அமைந்துள்ளது. இக்கழகத்தின் வேலூர் மண்டலத்தின்



கட்டுப்பாட்டில் வந்தவாசி, ஆரணி மற்றும் போளூரிலும், காஞ்சிபுரம் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் வந்தவாசியிலும். மேலும், விழுப்புரம் மண்டலத்தின் கட்டுப்பாட்டில் செஞ்சியிலும் பணிமனைகள் செயல்படுகின்றன. அப்பணிமனைகள் யாவும் சேத்துப்பட்டு நகரில் இருந்து 10 கி.மீ. தூரத்திற்குள்ளேயே அமைந்துள்ளன. அரசாணை எண் 61, போக்குவரத்துத் துறை, நாள் 9-9-1992-ன்படி இரு பணிமனைகளுக்கும் இடையே உள்ள தூரம் 10 கி.மீ-க்குக் குறைவாக இருக்கக்கூடாது. எனவே, திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியிலுள்ள சேத்துப்பட்டில் பணிமனை அமைக்க இயலாது.

**35—**

## சிற்றுந்து

**வினா எண் 14706—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை வட்டத்தில் நகர எல்லைகளை இணைக்கக் கூடிய வகையில் கூடுதலாக சிற்றுந்து விட அனுமதி வழங்க அரசு முன் வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

(அ) சிற்றுந்துத் திட்டத்தின்கீழ் அரசாணையின்படி கோவை வருவாய் மாவட்டத்திற்கு 250 அனுமதிச் சீட்டுகள் வழங்க உத்தரவிடப்பட்டுள்ளன. இதில் பொள்ளாச்சி வட்டாரப் போக்குவரத்து அலுவலகத்திற்குட்பட்ட பகுதிக்கு 23 அனுமதிச் சீட்டுக்கள் ஒதுக்கீடு செய்யப்பட்டன. அவை அனைத்தும் வழங்கப்பட்டுவிட்டன. தற்போது காலியிடம் ஏதும் இல்லை.

(ஆ) தனியார் சிற்றுந்து உரிமையாளர்கள் எவரேனும் அனுமதிச் சீட்டு வேண்டி விண்ணப்பிக்கும்பட்சத்தில் கோவை மாவட்ட ஆட்சியரால் தற்போது நடப்பில் உள்ள மோட்டார் வாகனச் சட்டம் மற்றும் விதிகளுக்குட்பட்டு விண்ணப்பம் பரிசீலனை செய்யப்படும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

36—

[2007 மே 9

## பட்டா

**வினா எண் 10727—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், திருத்துறைப்பூண்டி தொகுதி, முத்துப்பேட்டை ஒன்றியம், தெற்குக்காடு 17-வது வார்டு, தில்லைவிளாகம் ஊராட்சியில் வீட்டுமனைப் பட்டா இல்லாதவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

37—

## பட்டா

**வினா எண் 10973—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, காட்டுக்கூடலூர், பள்ளங்குளம் பகுதியில் குடியிருப்பவர்களுக்குப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

**(அ) அரசாணை** (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் **30-12-2006** இல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.

38—

## பட்டா

**வினா எண் 11183—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நாகை மாவட்டம், பூம்புகார் தொகுதிக்குட்பட்ட சீர்காழி வட்டம், இராதநல்லூர் கிராமத்தில் உள்ள கன்னிகோவில் தெருவில் வசிக்கும் நபர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்கிட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட

[2007 மே 9

தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**39—**

## பட்டா

**வினா எண் 13149—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, பரமத்தி பேரூராட்சி, காந்திநகர் பகுதியில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**40—**

## வீட்டுமனை

**வினா எண் 13150—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

(அ) கபிலர்மலை ஒன்றியம், பெருங்குறிச்சி ஊராட்சி, சின்னியம்பாளையம் காலனியில் வசிக்கும் வீட்டுமனை இல்லாதவர்களுக்கு வீட்டுமனை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**41—**

## பட்டா

**வினா எண் 13152—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கபிலர்மலை ஒன்றியம், பெரியசோளிபாளையம் ஊராட்சி, கணபதி நகரில் வசிக்கும் மக்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு

மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**42—**

## பட்டா

**வினா எண் 14563—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, கோவில்புறையூர் பகுதி மக்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு, மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் வீட்டுமனை ஒப்படை செய்ய மாவட்ட ஆட்சியர்களுக்கு அதிகாரம் வழங்கி ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

(ஆ) வினா எழாது.



**43—**

## பட்டா

**வினா எண் 14587—திரு. வே. செந்தில் பாலாஜி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கரூர் தொகுதி, மண்மங்கலம் ஊராட்சி, மண்மங்கலம் எம்.ஜி.ஆர். நகர் பகுதியில் வசிப்பவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறுமாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

**44—**

## அலுவலகம் பழுதுபார்த்தல்

**வினா எண் 17120—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாநகரில் தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தைப் பழுதுபார்க்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டத்திலுள்ள வருவாய்த் துறை கட்டடங்கள் பராமரிப்பு மற்றும் பழுதுபார்க்க 2006-2007 ஆம் ஆண்டிற்கு நிதி ஒதுக்கீடு செய்த நிதியிலிருந்து கோவை தெற்கு வட்டாட்சியர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய பராமரிப்புப் பணிகளுக்காக ரூ.11,00,000/- நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு, இது தொடர்பாக பணிகளை விரைந்து முடிக்க கோவை பொதுப் பணித் துறை செயற்பொறியாளருக்கு அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.

45—

## பட்டா

**வினா எண் 17198—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, ஓமலூர் ஒன்றியம், செல்லப்பிள்ளைகுட்டை, முத்துநாயக்கன்பட்டி கிராமங்களிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசாணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.



46—

## பட்டா

**வினா எண் 17200—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஓமலூர் தொகுதி, காடையாம்பட்டி ஒன்றியம், கனவாய்ப்புதூர் ஊராட்சியிலுள்ள மிகவும் பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சார்ந்த வறுமைக்கோட்டிற்குக்கீழ் உள்ளவர்களுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

அரசு நிலங்களில் பத்து ஆண்டுகளுக்கும் மேலாக வீடுகள் கட்டி குடியிருந்து, அதற்கான ஆதாரங்களைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மாவட்ட ஆட்சியர் தலைமையிலான குழு அந்நிலத்தைப் புலத்தணிக்கை செய்து, அந்நிலங்கள் அரசுக்குத் தேவையில்லையெனில், ஒப்படை செய்ய விதிக்கப்பட்ட சம்பந்தப்பட்ட தடையாணைகளை இவ்வினங்களில் மட்டும் தளர்வு செய்து, தகுதியின் அடிப்படையில் 2007 சனவரி திங்கள் முதல் ஆறு மாத காலத்திற்குள் மாவட்ட ஆட்சியர் ஒப்படை செய்ய அரசு ஆணை (நிலை) எண் 854, வருவாய்த் துறை, நாள் 30-12-2006 இல் ஆணை வெளியிடப்பட்டுள்ளது.

47—

## பட்டா

**வினா எண் 17238—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டை கிராமம், பாரதிபுரம் பகுதி சர்வே எண் 581 இல் 15 ஏக்கர் நிலம் கிராம நத்தமாக இருந்து வருவதை வீடு இல்லாத ஏழைகளுக்கு இலவச மனைப் பட்டா வழங்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், டேனிஷ்பேட்டை கிராமம், பாரதிபுரம் பகுதி சர்வே எண் 581, விஸ்தீரணம் 2.12.5 ஹெக்டேர் நிலம் கிராம நத்தமாக உள்ளது. இப்புலத்தில் 9 நபர்கள் வீடுகட்டி சாகுபடி செய்து அனுபவம் செய்து வருகிறார்கள். மேற்படி நிலம் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்கு உள்ளதால் பட்டா வழங்க இயலாது.

48—

## கூடுதல் காவலர்கள்

**வினா எண் 17519—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மத்திய சிறைச்சாலையில் கூடுதல் காவலர்களை நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மத்திய சிறையில் அங்கீகரிக்கப்பட்ட 261 இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களில், 222 ஆண் காவலர்கள் இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களில் பணிபுரிகிறார்கள். அதேபோல் 9 அங்கீகரிக்கப்பட்ட பெண் இரண்டாம் நிலை காவலர் பணியிடங்களில் 9 பெண் காவலர்கள் பணிபுரிகிறார்கள். ஆகவே, கோவை மத்திய சிறையில் தற்போது போதிய அளவில் ஆண்/பெண் இரண்டாம் நிலை காவலர்கள் பணிபுரிந்து வரும் நிலையில் மேலும் கூடுதல் காவலர்கள் நியமிக்கும் நேர்வு எழவில்லை என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.



49—

## வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள்

**வினா எண் 25127—திரு. மு.க. பெரியசாமி:** மாண்புமிகு வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பூம்புகார் தொகுதி, சந்திரபாடி முதல் புதுக்குப்பம் வரை 15 கிராமங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிரந்தர வீடுகள் மற்றும் அடிப்படை வசதிகள் செய்து தர அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. இ. பெரியசாமி, வருவாய் மற்றும் சிறைத் துறை அமைச்சர்:**

பூம்புகார் சட்டமன்றத் தொகுதி மற்றும் தரங்கம்பாடி வட்டத்திற்குட்பட்ட புதுக்குப்பம் முதல் சந்திரபாடி முடியவுள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் சுனாமியின்போது பாதிக்கப்பட்ட பயனாளிகளை வருவாய்த் துறை அலுவலர்கள் ஒவ்வொரு மீனவ கிராமப் பஞ்சாயத்துமூலமும் பயனாளிகளை அடையாளங்கண்டு பயனாளிகள் அனைவருக்கும் நிரந்தர குடியிருப்புகள் விடுபாடின்றி கட்டப்பட்டு வருகின்றன. மேலும் Help a Child of India என்னும் தொண்டு நிறுவனத்தின்மூலம் சந்திரபாடி கிராமத்தில் 50 வீடுகளும், சின்னமேடு கிராமத்தில் 145 வீடுகளும், Rural Development Trust (RDT) என்னும் தொண்டு நிறுவனத்தின்மூலம் தாழம்பேட்டை கிராமத்தில் 149 வீடுகளும், வேப்பஞ்சேரி கிராமத்தில் 52 வீடுகளும், International Association for Human Values (IAHV) என்னும் தொண்டு நிறுவனத்தின்மூலம் பெரியமாணிக்கபங்கு கிராமத்தில் 94 வீடுகளும், EFICOR என்னும் தொண்டு நிறுவனத்தின்மூலம் வெள்ளக்கோவில் கிராமத்தில் 88 வீடுகளும், SEVAI என்னும் தொண்டு நிறுவனத்தின்மூலம் பிள்ளைக்காலனி கிராமத்தில் 26 வீடுகளும் கட்டப்பட்டு வீடுகள் பயனாளிகளிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மேலும் நிரந்தர குடியிருப்புப் பகுதிகளில் மின்சாரம், குடிநீர், சுகாதாரம் மற்றும் சாலை வசதிகள் ஆகிய அடிப்படை வசதிகளுக்கு நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டு அனைத்தும் நிறைவேற்றப்பட்டு வருகின்றன.

[2007 மே 9

50—

## சரியான அளவில் வழங்குதல்

**வினா எண் 6622—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சில ரேஷன் கடைகளில் சர்க்கரை, மண்ணெண்ணெய், அரிசி ஆகியவற்றின் அளவை குறையாமல் போட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் சர்க்கரை மற்றும் மண்ணெண்ணெய் ஆகியவற்றின் அளவு குறையாமல் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

51—

## ஊட்டி தேயிலைத் தூள்

**வினா எண் 9449—திரு. போ. கோபாலன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேயிலை கலப்படத்தைத் தவிர்க்க தமிழ்நாட்டில் எல்லா நியாயவிலைக் கடைகளிலும் ஊட்டி தேயிலையினை விற்பனை செய்ய அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

அரசாணை எண் 259, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 20-7-2001-ல் அரசால் ஊட்டி தேயிலைத் தூள்



2007 மே 9]

அனைத்து நியாயவிலைக் கடைகளில் விற்பனை செய்ய ஆணை வழங்கப்பட்டு, அதன்படி அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் ஊட்டி தேயிலைத் தூள் விற்பனை செய்யப்படுகிறது.

2. அத்தியாவசியப் பொருட்களை வாங்க நியாயவிலைக் கடைக்கு வரும் குடும்ப அட்டைதாரர்களிடம் பிற பொருட்களை கட்டாயப்படுத்தி விற்பனை செய்யக் கூடாது என்ற நிலையிலும் நியாயவிலைக் கடைகளில் மாதந்தோறும் 200 மெ. டன் அளவிற்கு ஊட்டி தேயிலைத் தூள் விற்பனை செய்யப்படுகிறது.

52—

## குடும்ப அட்டை

**வினா எண் 16214—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் குடும்ப அட்டைகள் கேட்டு விண்ணப்பித்துள்ளவர்களுக்கு குடும்ப அட்டை வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) புதிய குடும்ப அட்டைகள் வழங்குவது குறித்து உரிய ஆணைகள் அரசு ஆணை (நிலை) எண் 130, கூட்டுறவு, உணவு மற்றும் நுகர்வோர் பாதுகாப்புத் துறை, நாள் 8-8-2006-ல் வெளியிடப்பட்டுள்ளன. அதன் அடிப்படையில் வால்பாறை தொகுதியில் குடும்ப அட்டைகள் கோரி விண்ணப்பித்தவர்களுக்கு புதிய குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

53—

## பாக்கெட் முறையில் உணவுப் பொருட்கள்

**வினா எண் 16245—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மே 9

(அ) வால்பாறை மலைப்பகுதிக்கு நியாயவிலைக் கடைகளின்மூலம் பாக்கெட் முறையில் உணவுப் பொருட்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை மலைப் பகுதியில் பொது விநியோக முறையில் வழங்கப்படும் அரிசி மற்றும் சர்க்கரை போன்ற பொருட்களை பிளாஸ்டிக் அல்லது துணிப் பைகளில் வழங்கும் திட்டம் எதுவும் தற்போது இல்லை.

**54—**

## அலுவலக மாற்றம்

**வினா எண் 18316—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, உசிலம்பட்டி துணைப் பதிவாளர் கூட்டுறவு சங்க அலுவலகத்தை உசிலம்பட்டிக்கு மாற்ற அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மதுரை மண்டலம், உசிலம்பட்டி கூட்டுறவுச் சங்கங்களின் சரக துணைப் பதிவாளர் அலுவலகத்தை திருமங்கலத்திலிருந்து உசிலம்பட்டிக்கு மாற்ற சாத்தியக்கூறுகள் இல்லை.

**55—**

## வீட்டு மனைகள்

**வினா எண் 11700—திரு. கோ. அரி:** மாண்புமிகு வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

திருத்தணி மற்றும் மணவாள நகர் பகுதியில் வீட்டுவசதி வாரியத்தின் மூலம் வீட்டு மனைகளை தவணை முறையில் அளித்திட அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. சுப. தங்கவேலன், வீட்டு வசதி மற்றும் குடிசை மாற்றுத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு வீட்டுவசதி வாரியத்தின்மூலம் திருத்தணி மற்றும் மணவாள நகரில் வீட்டு மனைகள் தவணை முறையில் அளிப்பது பற்றிய திட்டங்கள் எதுவும் தற்போது இல்லை.

**56—**

## துணை சுகாதார நிலையம்

**வினா எண் 2026—திரு. எம். பன்னீர்செல்வம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழி தொகுதி, திருநகரி, திருவாலி மற்றும் பெருந்தோட்டம் கிழக்கு ஆகிய இடங்களில் துணை சுகாதார நிலையக் கட்டடங்கள் கட்டித் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

நாகப்பட்டினம் மாவட்டம், சீர்காழி தொகுதி, திருவாலி, பெருந்தோட்டம் (கிழக்கு) ஆகிய துணை சுகாதார நிலையங்களுக்கு நிலம் தேர்வு செய்யப்பட்டு நபார்டு வங்கி கடனுதவியுடன் கட்டடம் கட்டித் தர நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. திருநகரி துணை சுகாதார நிலையம் சம்பந்தமாக நாகப்பட்டினம் துணை இயக்குநர், சுகாதாரப் பணிகள் அவர்களிடம் பெறப்பட்ட விவரத்தின்படி துணை சுகாதார நிலைய கட்டட பழுதுபார்ப்புப் பணிகள் ரூ.1.85 இலட்சம் மதிப்பீட்டில் பொதுப் பணித் துறையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

57— [2007 மே 9

## கிராம சுகாதார செவிலியர்

**வினா எண் 9213—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் போதுமான கிராம சுகாதார செவிலியர்கள் நியமிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் சுகாதார மாவட்டத்திற்கு உட்பட்ட வால்பாறை ஆரம்ப சுகாதார நிலையத்தில் 18 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களும், 2 துணை செவிலியர் பணியிடங்களும் உள்ளன. அவற்றுள் 3 கிராம சுகாதார செவிலியர் பணியிடங்களும் 1 துணை செவிலியர் பணியிடமும் (மொத்தம் 4) கடந்த நவம்பர் மாதம் முதல் பணியிட மாறுதல் காரணமாக காலியாக உள்ளன. மேற்படி காலிப்பணியிடங்கள் பணிநியமன கலந்தாய்வின்மூலம் விரைவில் நிரப்பப்படும்.

58—

## வேலைவாய்ப்பு

**வினா எண் 10212—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1990 ஆம் ஆண்டு அரசு தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி பெற்றவர்களில் 52 பேருக்கு 15 ஆண்டுகளாக பணி வழங்கப்படவில்லை என்பதை அரசு அறியுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது அவர்களுக்குப் பணி வழங்கப்படும்?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1990 ஆம் ஆண்டு தொழுநோய் ஆய்வாளர் பயிற்சி பெற்றவர்களுக்கு ஆறு மாத கால சுகாதார ஆய்வாளர் பயிற்சி அளித்து பின் அவர்களுக்கு சுகாதார ஆய்விலும், தரம்-2 பணி வழங்குவது குறித்த கருத்துரு பொது சுகாதாரம் மற்றும் நோய்தடுப்பு மருத்துவத் துறை இயக்குநரிடமிருந்து பெறப்பட்டு அரசின் பரிசீலனையில் உள்ளது.

59—

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 10734—திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவாரூர் மாவட்டம், நீடாமங்கலம் வட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சேர்ந்த 50. சேந்தங்குடி ஊராட்சியில் ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் இலக்கின்படி, சமவெளிப் பகுதிகளில் 30,000 மக்கள் தொகைக்கும், மலைப்பகுதியில் 20,000 மக்கள் தொகைக்கும் ஒரு புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கப்படுகிறது. மேலும் இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். திருவாரூர் மாவட்டம், கோட்டூர் ஊராட்சி ஒன்றியம், 50. சேந்தங்குடி கிராம மக்கள் தொகை 1,850 ஆகும். 50. சேந்தங்குடி கிராமத்திற்கு 8 கி.மீ. தொலைவில் திருத்தங்கூர் ஆரம்ப சுகாதார நிலையமும், 25 கிலோ மீட்டர் தொலைவில் திருத்துறைப்பூண்டி அரசு மருத்துவமனையும் செயல்படுகிறது. 50. சேந்தங்குடி கிராமம் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தினை சார்ந்தது. கோட்டூர் ஊராட்சி ஒன்றிய மக்கள் தொகை 99,703 (2001 கணக்கெடுப்பு). இவ்வூராட்சி

ஒன்றியத்தில் நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்கள் முறையே சத்தனூர், ஆதிச்சாபுரம், திருத்தங்கூர் மற்றும் ஆலத்தம்பாடி ஆகியன செயல்படுகின்றன. கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்திற்கு தற்போதுள்ள நான்கு ஆரம்ப சுகாதார நிலையங்களே போதுமானதாக உள்ளதால் கோட்டூர் ஊராட்சி ஒன்றியத்தில் 50. சேந்தங்குடி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறு தற்போது இல்லை.

**60—**

### கிராம சுகாதார செவிலியர்

**வினா எண் 13143—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கபிலர்மலை ஒன்றியம், திருமல் துணை சுகாதார நிலையத்தில் காலியாக உள்ள கிராம சுகாதார செவிலியர் பணியிடம் நிரப்பப்படுமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) நாமக்கல் சுகாதார மாவட்டத்திற்கு உட்பட்ட கபிலர்மலை ஆரம்ப சுகாதார நிலையத்தைச் சார்ந்த திருமல் துணை சுகாதார மையத்தில் கடந்த அக்டோபர் மாதம் நடைபெற்ற பணி நியமன கலந்தாய்வின்மூலம் நியமன ஆணை வழங்கப்பட்டு ஒரு கிராம சுகாதார செவிலியர் 28-10-2006 முதல் பணிபுரிந்து வருகின்றார்.

**61—**

### ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 13145—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ) கபிலர்மலை ஒன்றியம், சோழசிராமணி, அண்ணாநகர் பகுதியில் ஆரம்ப சுகாதார நிலையம் துவங்க அரசு ஆவன செய்யுமா?*



*(ஆ) ஆம் எனில், எவ்வளவு மதிப்பீட்டில் எப்போது துவங்கப்படும்?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மத்திய அரசின் வழிகாட்டுதலின்படி, இரண்டு சுகாதார மையங்களுக்கு குறைந்தபட்ச இடைவெளி 8 கிலோ மீட்டருக்கு மேல் இருத்தல் வேண்டும். ஆனால், சோழசிராமணி கிராமத்திற்கும் எரையமங்கலம் ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், சோழசிராமணி கிராமத்தில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை. இதேபோல் அண்ணாநகர் கிராமத்திற்கும் வெங்கரை ஆரம்ப சுகாதார நிலையத்திற்கும் இடைப்பட்ட தூரம் 3 கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், அண்ணாநகர் கிராமத்தில், புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.

**62—**

### பெண் சிசுக்கள்

**வினா எண் 13841—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

*தமிழகத்தில் பெண் சிசுக் கொலைகளைத் தடுக்க அரசு எடுத்துள்ள நடவடிக்கை யாது?*

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

பெண் சிசுக் கொலைகளைத் தடுப்பதற்காக, வெளியிடப்பட்ட "பிறப்பிற்கு முன் கருவின் தன்மையறியும் தொழில்நுட்பம் (பாலினத் தெரிவு செய்வதைத் தடுத்தல்) சட்டம், 1994" இன்படி மாநில, மாவட்ட மற்றும் வட்ட அளவில் அமலாக்க அலுவலர்கள் நியமிக்கப்பட்டு அவர்களுக்கு ஆலோசனை வழங்க ஆலோசனைக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. இதுவரை 3,000 மையங்கள் பதிவு செய்யப்பட்டு, கருவின் பாலினத்தை அறிந்து சிசுக் கலைப்பு நடைபெறுவதைத் தடுக்க

நிலையான கண்காணிப்பு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. பதிவு செய்யப்படாத 70 நிலையங்கள்மீது வழக்குகள் பதிவு செய்யப்பட்டு, 48 வழக்குகளில் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது. பெண் சிசுக் கலைப்பு ஒழிக்க வேண்டிய அவசியம் குறித்து, விழிப்புணர்வு ஏற்படுத்த மக்கள் தொடர்பு சாதனங்களான ரேடியோ, தொலைக்காட்சி, செய்தித்தாள்மூலமாக விளம்பரங்கள் செய்யப்பட்டு வருகின்றன. அனைத்து ஸ்கேன் மையங்களில் ஸ்கேன் பரிசோதனைக்குள்ளாகும் அனைத்து தாய்மார்களும், மகப்பேறு வரை தீவிர கண்காணிப்புக்கு உட்படுத்தப்பட்டு பெண் சிசுக் கொலை நடக்காவண்ணம் கண்காணிக்கப்பட்டு மகப்பேறுக்குப் பின் உள்ளாட்சி அமைப்புகளில் பெண் சிசுக்கள் கண்காணிக்கப்படுகின்றன.

**63—**

## ஆரம்ப சுகாதார நிலையம்

**வினா எண் 16609—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, தென்சங்கம்பாளையம், சோமந்துறை ஊராட்சிகளில் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை ஊராட்சி ஒன்றியம், தென்சங்கம்பாளையம் மற்றும் சோமந்துறை கிராமங்களுக்கும் கோட்டூர் அரசு மருத்துவமனைக்கும் இடையே ஒரு கிலோ மீட்டர் மட்டுமே உள்ளதால், தென்சங்கம்பாளையம் மற்றும் சோமந்துறை கிராமங்களில் புதிய ஆரம்ப சுகாதார நிலையம் அமைக்கும் சாத்தியக் கூறுகள் இல்லை.



**64—**

## கணினி வசதி

**வினா எண் 18044—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் கணினிமூலம் ஒருங்கிணைத்து நவீனப்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன், தொழிலாளர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழகத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களையும் மின்னணு ஆளுமையின்கீழ் கொண்டுவர, இந்திய அரசு வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை இனமறிந்துள்ளது. இது தொடர்பாக, தமிழ்நாடு அரசு நியமித்துள்ள திருவாளர்கள் விப்ரோ நிறுவனத்தினால் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட அறிக்கை மத்திய அரசுக்கு அனுப்பப்பட்டுள்ளது. இத்திட்ட அறிக்கையின்மீது, மத்திய அரசின் ஒப்புதல் பெற்ற பின்னர் தமிழகத்திலுள்ள அனைத்து வேலைவாய்ப்பு அலுவலகங்களும் கணினிமூலம் ஒருங்கிணைக்கப்பட்டு நவீனப்படுத்தப்படும்.

**65—**

## வாடகை உயர்த்துதல்

**வினா எண் 17412—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை மாசாணியம்மன் திருக்கோயில், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரர், மருதமலை திருக்கோயில், காரமடை ரங்கநாதர் திருக்கோயில் கீழுள்ள கடைகளின் வாடகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மே 9

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (i) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயிலுக்கு முன்புறமாக 20 தற்காலிக கடைகள் உள்ளன. இவை பேரூராட்சிக்குச் சொந்தமான வண்டிப்பாதை புறம்போக்கில் அமைந்துள்ளன. இக்கடைகள் பொது ஏலம்மூலம் வாடகைக்கு விடப்படுகின்றன. ஏலத்தொகையில் 50% பேரூராட்சிக்கு வழங்கப்பட்டு வருகிறது. கடந்த பசலியில் பொது ஏலத்தில் சென்றுள்ள தொகையில் 10% உயர்வு செய்து, பொது ஏலத்தில் விடப்பட்டு வருவதால் வாடகை உயர்வு செய்ய வேண்டிய அவசியம் இல்லை.

(ii) கோயம்புத்தூர் மாவட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வரசுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமான 16 கடைகள் உள்ளன. அவை பொது ஏலம் மூலம் வாடகைக்கு விடப்பட்டு வருகின்றன. எனவே, வாடகை உயர்வு செய்ய அவசியம் இல்லை.

(iii) கோயம்புத்தூர் மாவட்டம், மருதமலை அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் கடைகள் ஒவ்வொரு பசலிக்கும் பொது ஏலம் விடப்பட்டு வருகிறது. சென்ற பசலி தொகையை விட 10%-க்கு குறையாமல் வாடகை உயர்வு செய்து ஏலம் விடப்படுகிறது. ஒவ்வொரு பசலி காலம் முடிந்ததும் மறு பசலிக்கு பொது ஏலம்மூலம் விடப்படுவதால் வாடகை உயர்வு செய்ய வேண்டிய அவசியம் எழாது.

(iv) மேட்டுப்பாளையம் வட்டம், காரமடை அருள்மிகு ரங்கநாத சுவாமி திருக்கோயிலுக்குச் சொந்தமானக் கடை ஒன்று உள்ளது. இக்கடை மாதம் ஒன்றுக்கு ரூ.1,800/-க்கு வாடகைக்கு விடப்பட்டு, மூன்று வருடங்களுக்கு ஒருமுறை 33.3% உயர்வு செய்து வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது மற்றும் இத்திருக்கோயிலுக்கு சொந்தமாக தெப்பக்குளத்திற்கு அருகில் 4 கடைகள் உள்ளன. இக்கடைகள் ஒவ்வொரு பசலிக்கும் தனித்தனியாக பொது ஏலத்தின்மூலம் வாடகைக்கு விடப்பட்டு வருகிறது. எனவே, வாடகை உயர்வு செய்ய அவசியம் எழாது.



2007 மே 9]

**66—**

## கைத்தறித் துணிகள்

**வினா எண் 6255—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நெசவாளர் கூட்டுறவு சங்கங்களில் தேங்கியுள்ள கைத்தறித் துணிகளை விற்பனை செய்திட மத்திய அரசு 20%, மாநில அரசு 20% விற்பனை கழிவிற்கு மானியம் வழங்க நடவடிக்கை எடுக்க முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஏற்கெனவே தமிழக அரசு கைத்தறி ரக துணிகளின் விற்பனைக்கு ஆண்டு முழுவதும் 20% தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது. எனினும், விழாக்கால சிறப்புத் தள்ளுபடியாக 15-08-2006 முதல் 31-01-2007 முடிய உள்ள காலத்திற்கு ஏற்கெனவே வழங்கப்படும் 20% தள்ளுபடி மானியத்துடன் கூடுதலாக 10% சேர்த்து மொத்தம் 30% தள்ளுபடி மானியம் வழங்கி வருகிறது. மேலும், மத்திய அரசால், சிறப்புத் தள்ளுபடியாக 2006-2007 ஆம் ஆண்டிற்கு விழாக்காலங்கள் மற்றும் கண்காட்சிகள் நடைபெறும் 128 நாட்களுக்கு உச்சவரம்பின்றி 10% தள்ளுபடி மானியம் (பட்டு இரகங்களுக்கு மட்டும்) வழங்கப்பட்டு வருகிறது.

**67—**

## நூற்பாலை

**வினா எண் 15732—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடையில் நூற்பாலை ஏற்படுத்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் 1958 முதல் 1985ஆம் ஆண்டு வரையிலான காலகட்டத்தில் 18 கூட்டுறவு நூற்பாலைகள் துவக்கப்பட்டன. இக்கூட்டுறவு நூற்பாலைகள் நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்களுக்கு நியாயமான விலையில் தரமான நூலினை விநியோகம் செய்யும் நோக்கோடு ஆரம்பிக்கப்பட்டன.

ஜவுளித் தொழிலில் ஏற்பட்ட மந்தநிலை, தாராளமயமாக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கை, பஞ்சு விலை ஏற்றம், நூல்விலை சரிவு, போதிய நடைமுறை மூலதனம் இன்மை மற்றும் பழமையான இயந்திரங்கள் போன்ற பல்வேறு காரணங்களால் மேற்கண்ட கூட்டுறவு நூற்பாலைகள் நலிவுற்ற நிலைக்குத் தள்ளப்பட்டன. இதன் காரணமாக 13 கூட்டுறவு நூற்பாலைகள் இயங்காமல் உள்ளன.

31-12-2002-ல் நடைபெற்ற அரசு பங்கு முதலீடுகளைத் திரும்பப் பெறுவதற்கான அமைச்சரவைக் குழுக் கூட்டத்தில் நட்டத்தில் இயங்கும் கூட்டுறவு நூற்பாலைகளில் தன்விருப்ப ஓய்வுத் திட்டம் செயல்படுத்த முடிவெடுக்கப்பட்டது. அதன்படி 13 கூட்டுறவு நூற்பாலைகளில் தன்விருப்ப ஓய்வுத் திட்டம் அமல்படுத்தப்பட்டுள்ளது. தற்போது அண்ணா கூட்டுறவு நூற்பாலை, பாரதி கூட்டுறவு நூற்பாலை, கன்னியாகுமரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை, புதுக்கோட்டை மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை மற்றும் தருமபுரி மாவட்டக் கூட்டுறவு நூற்பாலை ஆகிய கூட்டுறவு நூற்பாலைகள் இயங்கி வருகின்றன.

மேற்கண்ட சூழ்நிலையில் வால்பாறை தொகுதியில் பருத்தி நூல் உற்பத்தித் தொழிற்சாலை நிறுவும் பிரேரணை எதுவும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**68—**

## தடுப்புச்சுவர்

**வினா எண் 1140—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, கோட்டூர் சிறப்பு ஊராட்சி பொங்காளியூர் மற்றும் பழனியூரிலுள்ள இடைநிலைப் பள்ளிகளுக்குத் தடுப்புச்சுவர் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) பள்ளிக் கட்டடங்கள், கூடுதல் பள்ளிக் கட்டடங்கள் தேவையின் அடிப்படையில் அனைவருக்கும் கல்வித் திட்டத்தின்கீழ் கட்டித்தரப்படுகின்றன. பள்ளிகளுக்குத் தடுப்புச்சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

**69—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 5351—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் உள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டித்தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, திமிரி ஒன்றியம், வேம்பி கிராமத்தில் 45 மாணவர்கள் பயிலும் ஊராட்சி ஒன்றியத் தொடக்கப் பள்ளி மட்டுமே உள்ளது. இப்பள்ளிக்குத் தேவையான அளவில் இரண்டு வகுப்பறைகள் உள்ளன. எனவே, இப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்டும் நிலை எழவில்லை.

**70—**

## நெசவு ஆசிரியர் பணியிடம்

**வினா எண் 7184—திரு. தி. வேல்முருகன்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பண்ருட்டி தொகுதி, பண்ருட்டி நகரத்தில் உள்ள அரசு மேல்நிலைப் பள்ளியில் நெசவு ஆசிரியர் பணியிடம் காலியாக உள்ளதை நிரப்பிட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில் எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கைத்தொழில் ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில், மாநிலம் முழுவதற்கும், அரசு உயர்நிலை மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில், தையற்கலை ஆசிரியர்கள், ஓவிய ஆசிரியர்கள், இசை ஆசிரியர்கள் மட்டுமே தற்போது நியமனம் செய்யப்படுகின்றனர். ஏனைய கைத்தொழில் ஆசிரியர் பணியிடங்கள் (விவசாயம், மரவேலை, நெசவு) பொறுத்தமட்டிலும், அவற்றை நிரப்பிட தற்போது அரசு தடை உள்ளது.

**71—**

## கூடுதல் கட்டடம்

**வினா எண் 7952—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் தொகுதிக்குட்பட்ட, சிவியார்பாளையத்திலுள்ள ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட இடம் ஒதுக்கித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதிக்குட்பட்ட சிவியார்பாளையம் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளிக்குக் கூடுதல் கட்டடம் கட்ட பள்ளியை ஒட்டி காலியிடம் இல்லாத நிலையில் இடம் ஒதுக்கிக் கொடுக்கும் செயற்குறிப்பு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



**72—**

## மாசுக் கட்டுப்பாடு

**வினா எண் 16891—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு சுற்றுச்சூழல் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், வால்பாறை மலைப்பகுதி, வாகனத்தால் சுற்றுச்சூழல் மாசு ஏற்படாமல் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. டி.பி.எம். மைதீன்கான், சுற்றுச்சூழல் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) வாகனங்களிலிருந்து வெளியேற்றப்படும் புகையைக் கட்டுப்படுத்த கீழ்க்கண்ட நடவடிக்கைகளை தமிழக அரசு மேற்கொண்டு வருகிறது:

அனைத்து வாகனங்களுக்கும் 6 மாதத்திற்கொருமுறை புகைச் சோதனை கட்டாயமாக்கப்பட்டு அதற்காக தமிழகமெங்கும் சுமார் 263 தனியார் வாகனப்புகைச் சோதனை நிலையங்களுக்கு அரசு அங்கீகாரம் வழங்கி செயல்படுத்தி வருகிறது.

இதன்படி கோவை மாவட்டத்தில் 26 தனியார் புகைச் சோதனை மையங்கள் வாகனங்களுக்கு புகைச் சோதனை செய்து சான்றிதழ் வழங்கும் பணியை மேற்கொண்டு வருகின்றன.

பாரத்-II தர அளவிற்குட்பட்ட பயணிகள் வாகனங்கள் மட்டுமே சென்னை நகர் தவிர தமிழகத்தின் பிற இடங்களில் ஏப்ரல் 2005 முதல் பதிவு செய்யப்பட்டு வருகின்றன.

1-10-2004 முதல் கடுமையாக்கப்பட்ட வாகனப்புகை தர அளவுகள் நிர்ணயிக்கப்பட்டு, பெட்ரோல் வாகனங்களில் ஹைட்ரோ கார்பன் அளவும் சோதனை செய்யப்பட்டு தர அளவுக்குட்பட்ட வாகனங்களுக்கு மட்டுமே சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகின்றன.

சென்னை நகர் தவிர தமிழகத்தின் பிற இடங்களில் பென்சின் அளவு (3 சதவீதம்) குறைக்கப்பட்ட பெட்ரோல் மற்றும் குறைந்த அளவு கந்தகம் (Low Sulphur) டீசல் கடந்த ஜனவரி 2005 முதல் வழங்கப்பட்டு வருகிறது.

தமிழகத்தில் 5 விழுக்காடு எரிசாராயம் (எத்தனால்) கலந்த பெட்ரோல் பயன்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டு கோவை மாவட்டத்தில் அமல்படுத்தப்பட்டுள்ளது.

வாகனங்களில் எரிபொருளாக திரவ பெட்ரோலிய எரிவாயுவைப் பயன்படுத்தும் திட்டத்தை கோவை நகருக்கும் விரிவுபடுத்தத் திட்டமிடப்பட்டு அதற்கென திரவ பெட்ரோலிய நிரப்பு நிலையங்கள் அமைக்க எண்ணெய் நிறுவனங்களால் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

பழைய வாகனங்களின் பயன்பாட்டைக் குறைக்கும்பொருட்டு 15 ஆண்டுகளுக்கு மேற்பட்ட வாகனங்களுக்கு பசுமை வரி விதிக்கப்பட்டு வருகிறது.

வாகனப்புகை மாசினைக் குறைக்க தமிழ்நாடு மாசுக் கட்டுப்பாடு வாரியம், போக்குவரத்துத் துறை மற்றும் சென்னை மாநகராட்சியுடன் இணைந்து வானொலி, தொலைக்காட்சிமூலமாக தூய காற்று விழிப்புணர்வு (Clean Air Campaign) நிகழ்ச்சிகளை செயல்படுத்தி வருகிறது.

**73—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 7400—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உள்ள டான்டீ மருத்துவமனையைச் சுற்றிலும் தடுப்புச் சுவர் ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) 1986 முதல் டான்டீ நிறுவனத்தால் நடத்தப்பட்டு வரும் மருத்துவமனையைச் சுற்றி அந்நிறுவனத்தின் தேயிலைத்



தோட்டங்கள் உள்ளதால் சுற்றுச்சுவர் உடனடியாகக் கட்ட வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. அந்நிறுவனத்தின் இரு கட்டடங்கள் அடங்கிய ஒரு பகுதி பாரதியார் பல்கலைக்கழகத்திற்கு தற்காலிகமாக அளிக்கப்பட்டிருப்பதால் சுற்றுச்சுவர் கட்டினால் அப்பல்கலைக்கழகம் உபயோகிக்கும் கட்டடங்களையும் உள்ளடக்கி இருக்க வேண்டும். மருத்துவமனைக்கு சுற்றுச்சுவர் இல்லாமலிருந்தாலும் ஆக்கிரமிப்புகள் ஏதும் ஏற்படவில்லை.

**74—**

## தார்ச் சாலை

**வினா எண் 11727—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, வண்டிச்சோலை ஊராட்சி, சோலாடாமட்டம் கிராமத்திற்கு வனத் துறையின் அனுமதி பெற்று தார்ச் சாலை வசதி செய்து தரப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, வண்டிச்சோலை ஊராட்சிக்குட்பட்ட சோலாடாமட்டம் கிராமம், குன்னூர் பீக் காப்பு வனத்தை ஒட்டி அமைந்துள்ளது. குன்னூர் பீக் காப்புக் காட்டில் சுமார் 2 கி.மீ. நீளமும் 3 மீ. அகலமும் கொண்ட தார்ந்த நிலையில் பழைய கூப்ரோடு உள்ளது. இது காப்புக் காட்டு அறிவிக்கையில் அனுமதிக்கப்பட்ட வழி உரிமம் அல்ல. இருப்பினும், இந்தக் கூப்புச் சாலையை தார்ச் சாலையாக மாற்ற ஊரக வளர்ச்சித் துறையினரால் உரிய படிவத்தில் கருத்துரு அனுப்பி வைக்கப்பட்டு சாலை அமைக்கத் தேவையான நிதியினை வனத் துறைக்கு வழங்கும்பட்சத்தில், மைய அரசு அனுமதி பெற்று சாலை அமைக்க ஆவன செய்யப்படும்.

(ஆ) வினா எழவில்லை.

**75—**

## தொழிற்சாலைகளுடன் இணைத்தல்

**வினா எண் 14884—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை ஹைபாரஸ்ட் நிர்வாகத்தினை டான்மூ தொழிற்சாலைகளுடன் இணைக்கும் திட்டம் அரசிடம் உள்ளதா? [2007 மே 9

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**76—**

## பாலம் பழுதுபார்த்தல்

**வினா எண் 1990—திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுரை, பழங்காநத்தம் பகுதியில் உள்ள வ.உ.சி. பாலத்தின் கைப்பிடிகள் உடைந்துள்ளதை சரி செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மதுரை, பழங்காநத்தம் பகுதியில் அமைந்துள்ள வ.உ.சி. பாலத்தைப் பழுதுபார்க்கவும், இரும்புக் கைப்பிடிச் சுவர் அமைக்கவும், திட்ட இயக்குநர், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம், மதுரை அவர்களால் நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**77—**

## சாலைப் பராமரிப்பு

**வினா எண் 8003—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தின் கீழுள்ள பழுதடைந்துள்ள சாலைகளை அரசே பராமரிக்க முன்வருமா?



2007 மே 9]

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் தேயிலைத் தோட்ட நிர்வாகத்தின் கீழுள்ள பழுதடைந்துள்ள சாலைகள் தனியார் சாலைகளாக இருப்பதால் நெடுஞ்சாலைத் துறை மூலம் மேற்படி சாலைகளைப் பராமரிப்பதற்கான சாத்தியக்கூறுகள் இல்லை.

**78—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 8015—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறை வாட்டர் பால்ஸ் மருத்துவமனைக்கு எதிரில் தடுப்புச் சுவர் அமைத்துத் தர அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வால்பாறை வாட்டர் பால்ஸ் மருத்துவமனை என்பது, பொள்ளாச்சி வால்பாறை சாலையிலிருந்து, உள்ளே எஸ்டேட் பகுதிக்குள் அமைந்துள்ளதால், பிரதான சாலையில் தடுப்புச் சுவர் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**79—**

## மேம்பாலம்

**வினா எண் 8339—திரு. கோ. அரி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருவாலங்காடு ஒன்றியம், நார்த்வாடா கிராமத்தில் மேம்பாலம் ஒன்றை அமைத்துத் தர அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருவள்ளூர் மாவட்டம், திருவாலங்காடு ஒன்றியம், நார்த்வாடா கிராமத்தில் மேம்பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் பரிசிலனையில் இல்லை; தற்போதுள்ள தாம்போகி போதுமானதாகவுள்ளது.

**80—**

**சாலை வசதி**

**வினா எண் 10905—திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தேனி தொகுதி, குப்பிநாயக்கன்பட்டியிலிருந்து அய்யனார் கோவில் வரை சாலை அமைக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தேனி தொகுதியில் குப்பிநாயக்கன்பட்டி அய்யனார் கோவில் சாலை கி.மீ. 0/0-4/4 வரை உள்ள சாலையை ரூ.158.52 இலட்சம் மதிப்பீட்டில் அமைக்க அரசு நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது. ஒப்பந்தப்புள்ளிகள் இறுதியாக்கப்பட்டவுடன், இப்பணி மேற்கொள்ளப்படும்.

**81—**

**சாலை அகலப்படுத்துதல்**

**வினா எண் 11111—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆட்டையம்பட்டி-மசக்காளிப்பட்டி சாலையில் நாச்சிப்பட்டி பிரிவு முதல் வெண்ணந்தூர் வரையுள்ள பகுதியை அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?



விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆட்டையம்பட்டி, மசக்காளிப்பட்டி சாலை கி.மீ. 3/2-4/0 என்பது ஒரு மாவட்ட முக்கியச் சாலையாகும். இச்சாலைப்பகுதி ஏற்கெனவே இருவழித்தட சாலையாக உள்ளதால் மேற்கொண்டு அகலப்படுத்த அவசியம் எழவில்லை.

**82—**

**சாலை மேம்பாடு**

**வினா எண் 11112—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஆட்டையம்பட்டி-மசக்காளிப்பட்டி சாலை பழந்தின்னிப்பட்டிமடம் மற்றும் மசக்காளிப்பட்டி அருகே அகலப்படுத்தி மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

ஆட்டையம்பட்டி-மசக்காளிப்பட்டி சாலை பழந்தின்னிப்பட்டிமடம் மற்றும் மசக்காளிப்பட்டி அருகே உள்ள சாலையை அகலப்படுத்தி மேம்பாடு செய்யக்கோரும் சாலையானது மாவட்ட முக்கியச் சாலையான ஆட்டையம்பட்டி, மசக்காளிப்பட்டி சாலை கி.மீ. 8/0-8/7, 12/0, 12/4 வரையுள்ள பகுதியாகும். ஒருங்கிணைந்த சாலை மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் அரசு இச்சாலையை இடைவழித் தடத்திலிருந்து இருவழித்தடமாக மாற்றி மேம்பாடு செய்ய ரூ.12.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிகள் விரைவில் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**83—**

**சாலை சீரமைப்பு**

**வினா எண் 11892—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பத்திலிருந்து ஹைவேவில் எஸ்டேட்டிற்கு செல்லுகின்ற சாலையைச் சீரமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கம்பத்திலிருந்து ஹைவேவில் எஸ்டேட்டிற்கு செல்லும் சாலையின் நீளம் 48.4 கி.மீ. ஆகும். இதில் கி.மீ. 0/0-10/0 வரை டீ எஸ்டேட் இண்டியா லிமிடெட் குழுமத்தாருக்குச் சொந்தமான பட்டா நிலத்திலும் கி.மீ. 10/0-48/4 வரையுள்ள சாலையானது, வனத் துறைக்குச் சொந்தமான நிலத்தில் 99 வருட குத்தகை நிலத்திலும் செல்வதால், இச்சாலையை நெடுஞ்சாலைத் துறை சீரமைப்புக்கு எடுத்துக்கொள்ள இயலாது.

**84—**

## சாலை வசதி

**வினா எண் 11893—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

கம்பம் தொகுதியில், கோம்பையிலிருந்து கேரளாவை இணைக்கின்ற ராமக்கல்மெட்டு சாலை அமைக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

கம்பம் தொகுதியில் "கோம்பை-ராமக்கல்மெட்டு சாலையானது பாளையம்-தேவாரம்-போடி மாநில நெடுஞ்சாலையில் கி.மீ. 8/4-ல் பிரிந்து செல்கிறது. இதன் நீளம் கி.மீ. 0/0-14/4 வரை ஆகும். 0/0-6/4 வரை உள்ள சாலை மாவட்ட இதர சாலை தேனி நெடுஞ்சாலைத் துறை கோட்டத்தின் மூலம் நல்ல முறையில் பராமரிக்கப்பட்டு வருகிறது. எஞ்சிய பகுதி கி.மீ. 6/4-14/4 வரையுள்ள 8.00 கி.மீ. சாலை வனத் துறைக்குச் சொந்தமான காப்புக்காடு பகுதியில் உள்ளதால் நெடுஞ்சாலைத் துறைமூலம் அமைக்கும் சாத்தியக்கூறுகள் இல்லை.



**85—**

## சாலை மேம்பாடு

**வினா எண் 13224—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

காங்கேயம் தொகுதி, குருத்துபாளையம் ஊராட்சி, பங்கம்பாளையம்-கொடுவாய், சக்தி விநாயகபுரம் வழியாகச் செல்லும் சாலையைச் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

காங்கேயம் தொகுதி, குருத்துபாளையம் ஊராட்சி, பங்கம்பாளையம், கொடுவாய், சக்தி விநாயகபுரம் வழியாகச் செல்லும் சாலையானது கோபிதாராபுரம் சாலையிலிருந்து கொடுவாய் செல்லும் சாலை (வழி) செட்டிபாளையம் பங்கம்பாளையம் என்கிற பெயரில் உள்ளது. இச்சாலையை நபார்டு ஆர்.ஐ.டி.எப். II திட்டம் 93-ன்கீழ் மேம்பாடு செய்யும் பணி நடைபெற்று வருகிறது. இப்பணியைத் துரிதமாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**86—**

## பாலம் அமைத்தல்

**வினா எண் 13770—திருமதி எஸ். தேன்மொழி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா:

வத்தலகுண்டு மீனாட்சிபுரம் குனிப்பட்டிக்கு இடையில் ஓடும் மஞ்சளாற்றையும், மருதா நதியையும் கடப்பதற்கு ஆற்றின் குறுக்கே பெரிய பாலம் அமைக்கப்படுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வத்தலகுண்டு-மீனாட்சிபுரம் குனிப்பட்டிக்கு இடையில் ஓடும் மஞ்சளாற்றையும் மருதா நதியையும் கடப்பதற்கு ஆற்றின் குறுக்கே பாலம் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

87— [2007 மே 9

## தார்ச் சாலை

**வினா எண் 17574—திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியம், கோட்டைபாளையம் முதல் மத்தம்பாளையம் வரை தார்ச் சாலை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) ஆம்.

(ஆ) சிங்காநல்லூர் தொகுதி, எஸ்.எஸ். குளம் ஒன்றியம், கோட்டை மத்தம்பாளையம் சாலை கி.மீ. 0/0-6/6 வரை உள்ள சாலையினை மேம்பாடு செய்வதற்கு ரூ.40.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டு, பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. விரைவாக முடிக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

88—

## குடியிருப்பு

**வினா எண் 4219—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை அரசு கால்நடை மருத்துவமனையில் பணிபுரிபவர்களுக்கு குடியிருக்க வீடு கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை அரசு கால்நடை மருத்துவமனையில் பணிபுரிபவர்களுக்கு குடியிருக்க வீடு கட்ட தற்போது ஏதும் செயற்குறிப்பு இல்லை.

89—

## கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு

**வினா எண் 11490—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தேனி மாவட்டத்தில் கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தேனி மாவட்டத்தில் கால்நடைகளுக்கு ஏற்படும் நோய்க் கிளர்ச்சிகளை உடனுக்குடன் கண்டறிய மதுரை, கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களால் நோய் தாக்கிய கால்நடைகளிலிருந்து மாதிரிகள் சேகரிக்கப்பட்டு ஆய்வு செய்யப்படுகிறது. மேலும், கால்நடைகளில் ஏற்பட்டுள்ள நோயினை உறுதி செய்துகொள்ளும்பொருட்டு, சென்னையில் செயல்பட்டுவரும் மத்திய தொடர்பு ஆய்வுக்கூடத்திற்கு கால்நடைகளிலிருந்து எடுக்கப்பட்ட மாதிரிகள் அனுப்பப்படுகின்றன. அங்கு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு, தகுந்த நோய் தடுப்பு நடவடிக்கைகள் எடுக்க சம்பந்தப்பட்ட கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கப்பட்டு, நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதால், இதுவே போதுமானதாக கருதப்படுவதால் தேனி மாவட்டத்தில் புதிய கால்நடை நோய்ப் புலனாய்வுப் பிரிவு ஏற்படுத்தும் செயற்குறிப்பு ஏதுமில்லை.

[2007 மே 9

90—

## கால்நடை மருத்துவமனைகள்

**வினா எண் 13560—திரு. கோ. எதிரொலி மணியன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் தொகுதி, செம்மாம்பாடி மற்றும் அனாதிமங்கலம் கிராமங்களுக்குப் பகுதி நேரக் கால்நடை மருத்துவமனைகள் அமைத்துத் தர அரசு நடவடிக்கை எடுக்குமா?*

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டம், பெரணமல்லூர் தொகுதி, செம்மாம்பாடி மற்றும் அனாதிமங்கலம் கிராமங்களுக்குப் பகுதி நேரக் கால்நடை மருத்துவமனைகள் அமைக்கும் திட்டம் ஏதும் தற்போது இல்லை. அனாதிமங்கலம் கிராமத்திற்கு மேலத்தாங்கல் கால்நடை கிளை நிலையம் 5 கி.மீ. தொலைவிலும், செம்மாம்பாடி கிராமத்திற்கு கொழப்பலூர் கால்நடை மருந்தகம் 5 கி.மீ. தொலைவிலும் அமைந்துள்ளன. அனாதிமங்கலம் கிராமம், செம்மாம்பாடி கிராமம், பெரணமல்லூர் ஊராட்சி ஒன்றியத்தைச் சார்ந்தது. மேற்படி ஒன்றியத்தில் 3 கால்நடை மருந்தகங்கள் 5 கால்நடை கிளை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன. இவற்றின்மூலம் அளிக்கப்படும் சிகிச்சைப் பணிகளே போதுமானது.

91—

## கட்டட வசதி

**வினா எண் 14182—திரு. கோ. எதிரொலி மணியன்:** *மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—*

*திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர், தேசூர் கால்நடை மருந்தகத்திற்குப் புதியக் கட்டடம் கட்டித் தரப்படுமா?*



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

திருவண்ணாமலை மாவட்டம், பெரணமல்லூர் தொகுதியில் கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் பெரணமல்லூர் தொகுதி, தேசூர் கால்நடை மருந்தகத்திற்குப் புதியக் கட்டடம் கட்ட தற்போது அரசிடம் செயற்குறிப்பு ஏதும் இல்லை.

92—

## கடன் வசதி

**வினா எண் 16134—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

*(அ)* வால்பாறை தொகுதியில் சுய உதவிக் குழுக்கள்மூலம் கறவை மாடுகள், ஆடுகள் வளர்க்க கடன் வசதி அளிக்கப்படுமா?

*(ஆ)* ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

*(அ)* கால்நடை பராமரிப்புத் துறை கட்டுப்பாட்டின்கீழ் செயல்படும் கால்நடைப் பண்ணையில் ஆடுகள் மற்றும் மாடுகள் பராமரிக்கப்பட்டு அவற்றில் உபரி இருப்பு இருப்பின், சிறு குறு விவசாயிகளுக்கு விற்பனை விலை அடிப்படையில் விற்பனை செய்யப்பட்டு வருகிறது. சுய உதவிக் குழுக்கள்மூலம் கறவை மாடுகள், ஆடுகள் வளர்க்க கடன் வழங்க திட்டம் ஏதும் இத்துறையில் அமல்படுத்தப்படவில்லை.

*(ஆ)* எழாது.

93—

## தடுப்பூசி

**வினா எண் 16174—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழ்நாட்டில் நாய்களுக்கு தடுப்பூசி போடாமல் வளர்ப்பதைத் தடை செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) தமிழ்நாட்டில் நாய்களுக்கு தடுப்பூசி போடாமல் வளர்ப்பதைத் தடை செய்ய திட்டம் ஏதும் தற்போது இல்லை.

**94—**

## நில ஒப்படை

**வினா எண் 4125—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள பழங்குடியினருக்கு விவசாயம் செய்ய தரிசு நிலங்களை வழங்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை சட்டமன்றத் தொகுதிக்குட்பட்ட வால்பாறை வட்டமானது மலைப்பிரதேசமாகும். இவ்வட்டத்தில் அரசாணை (நிலை) எண் 1168, வருவாய்த் துறை, நாள் 25-7-89-ன்படி விவசாயக் காரியங்களுக்கு நில ஒப்படைச் செய்ய அரசு தடை செய்து ஆணையிடப்பட்டுள்ளது. மேலும், நில ஒப்படை செய்ய நிலம் ஏதும் இல்லை.

**95—**

## பட்டா

**வினா எண் 5459—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதி, ஆலம்பூண்டி மதுராரெட்டியாப்பாளையத்திலுள்ள ஆதி திராவிட மக்களுக்கு பட்டா வழங்க அரசு முன்வருமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், செஞ்சி வட்டம், ஆலம்பூண்டி மதுரா ரெட்டிக்குப்பம் கிராமத்தில் வசிக்கும் 75 பயனாளிகளுக்கு வீட்டுமனைப் பட்டா வழங்குவதற்காக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**96—**

## பட்டா

**வினா எண் 11719—திரு. அ. சௌந்திரபாண்டியன்:** மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) நீலகிரி மாவட்டம், குன்னூர் தொகுதி, உலிக்கல் ஊராட்சியிலுள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திருமதி ஆ. தமிழரசி, ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர்:**

(அ) குன்னூர் தொகுதி, உலிக்கல் ஊராட்சியில் உள்ள ஆதி திராவிடர்களுக்கு இலவசமாக வீட்டுமனைப் பட்டாக்கள் வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. தனியாரிடம் தகுதியான பட்டா நிலங்கள் கிடைக்கப் பெற்றால் அதை தனி நபர் பேச்சுவார்த்தையின் மூலம் நில எடுப்பு செய்ய உடன் நடவடிக்கை எடுக்கப்படும்.

(ஆ) நில எடுப்பு செய்யப்பட்ட இரண்டு அல்லது மூன்று மாதங்களுக்குள் வீட்டுமனைப் பட்டா வழங்கப்படும்.

97— [2007 மே 9

## புதிய கட்டடம்

**வினா எண் 3790—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி (தெற்கு), சுமைதாங்கி பகுதியில் கூட்டுறவு பால் கொள்முதல் உற்பத்தி மையத்திற்கு, புதிய கட்டடம் அமைத்துக் கொடுக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்பொழுது அமைக்கப்படும்?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், காடையாம்பட்டி ஒன்றியம், கொங்குப்பட்டி (தெற்கு), சுமைதாங்கி பகுதியில் கூட்டுறவு பால் கொள்முதல் உற்பத்தி மையத்திற்கு போதிய நிதி ஆதாரம் இல்லாததால் புதிய கட்டடம் கட்ட இயலாத நிலை உள்ளது.

98—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 13011—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மோகனூர் ஒன்றியம், சின்னக்கரசப்பாளையம், பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்களுக்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மோகனூர் ஒன்றியம், சின்னக்கரசப்பாளையம் பால் உற்பத்தியாளர்கள் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அச்சங்கத்தில் போதுமான நிதி வசதி இல்லாததால் கட்டடம் கட்ட வாய்ப்பில்லை.

99—

## பால் விற்பனை மையம்

**வினா எண் 18366—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் படித்துவிட்டு வேலையில்லாத இளைஞர்களுக்கு ஆவின் பால் விற்பனை மையங்கள் வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதியில் பால் விநியோகத்திற்கு, வாகன வசதி உள்ள படித்துவிட்டு வேலை இல்லாத இளைஞர்கள் ஆவின் நிறுவனத்தை அணுகினால் ஆவின் பால் விற்பனை மையங்கள் அமைக்க அனுமதி வழங்கப்படும்.

100—

## சொந்தக் கட்டடம்

**வினா எண் 18585—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பால் வளத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

[2007 மே 9

(அ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், சங்கராண்டாம் பாளையம் ஊராட்சி, சிறுகிணர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. உ. மதிவாணன், பால் வளத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் தொகுதி, குண்டடம் ஒன்றியம், சங்கராண்டாம்பாளையம் ஊராட்சி, சிறுகிணர் மகளிர் பால் உற்பத்தியாளர் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட சங்கத்தில் போதிய நிதி வசதி இல்லாததால் கட்டடம் கட்ட வாய்ப்பு இல்லை.



2007 மே 9]

## பட்டியல்-11

1—

### சர்க்கரை ஆலைகள்

**வினா எண் 1730—திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) தமிழகத்தில் புதிதாக சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு மற்றும் தனியார் துறைமூலம் எத்தனை ஆலைகள் தொடங்க மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்தது?

(ஆ) அதில் எத்தனை ஆலைகளுக்கு மத்திய அரசு அனுமதி அளித்துள்ளது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) 1998 ஆம் ஆண்டு முதல் மத்திய அரசு கொள்கைப்படி புதிய சர்க்கரை ஆலைகள் அமைக்க ஆலை நிர்வாகத்தினர் நேரிடையாக மத்திய அரசிடம் (IEM) விண்ணப்பம் செய்து அவ்விண்ணப்பதிற்கான ஒப்புகையைப் பெற்று அதனடிப்படையில் மாநில அரசிடம் அமைக்கப்படவுள்ள புதிய சர்க்கரை ஆலைக்கான கரும்புப் பகுதி ஒதுக்கீடு பெற விண்ணப்பம் செய்கின்றனர். எனவே, தமிழகத்தில் புதிதாக சர்க்கரை ஆலைகள் கூட்டுறவு மற்றும் தனியார் துறைகளில் தொடங்க மாநில அரசு மத்திய அரசுக்கு பரிந்துரை செய்யும் வினா எழவில்லை.

(ஆ) ஆத்தூர், சங்கராபுரம், ஈரோடு, மொடக்குறிச்சி, அம்பாசமுத்திரம், கும்மிடிப்பூண்டி, பட்டுக்கோட்டை, அரியலூர், ரிஷிவந்தியம், செஞ்சி, ஸ்ரீவைகுண்டம், ஊத்துக்கோட்டை, செங்கம், பண்ருட்டி, திருத்தணி மற்றும் திருக்கோயிலூர் ஆகிய தாலுகாக்களில் புதிய சர்க்கரை ஆலைகள் நிறுவ 30 தனியார் நிறுவனங்கள் விண்ணப்பம் செய்துள்ளன. அவற்றில் 24 தனியார் நிறுவனங்கள் மத்திய அரசிடமிருந்து விண்ணப்பம் (IEM) செய்ததற்கான ஒப்புகையைப் பெற்று கரும்புப் பகுதி ஒதுக்கீடு செய்ய விண்ணப்பங்கள் அரசுக்கு வரப் பெற்றுள்ளன. அவை அரசின் பரிசீலனையில் உள்ளன.

[2007 மே 9

2—

## சர்க்கரை ஆலை

**வினா எண் 2403—திரு. வீ.ஏ.டி. கலியவரதன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

முகையூர் தொகுதியில் குலதீபமங்கலத்தில் கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைப்பதற்கு அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், முகையூர் தொகுதியில் குலதீபமங்கலத்தில் புதியதாக ஒரு கூட்டுறவு சர்க்கரை ஆலை அமைக்க அரசிடம் செயற்குறிப்பு ஏதுமில்லை.

3—

## நாட்டிய இசைப் பள்ளி

**வினா எண் 8878—திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

ஜெயங்கொண்டம் பகுதியில் நாட்டிய இசைப் பள்ளி துவக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஜெயங்கொண்டம் பகுதி, பெரம்பலூர் மாவட்டத்தில் உள்ளது. பெரம்பலூர் மாவட்டத்தில் ஏற்கெனவே அரசு இசைப் பள்ளி இயங்கி வரும் நிலையில், ஜெயங்கொண்டம் பகுதியில் புதியதாக நாட்டிய இசைப் பள்ளி தொடங்க கருத்துரு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

4—

## சர்க்கரை ஆலை

**வினா எண் 10494—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—



2007 மே 9]

(அ) வால்பாறை தொகுதி, தென்செங்கம்பாளையம் மற்றும் பிலிசின்னம் ஊராட்சிகளில் சர்க்கரை ஆலை நிறுவ அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) கோவை மாவட்டம், வால்பாறை தொகுதியில் உள்ள தென்செங்கம்பாளையம் மற்றும் பிலிசின்னம் ஊராட்சிகளில் புதியதாக ஒரு சர்க்கரை ஆலை கூட்டுறவு/பொதுத் துறைமூலம் அமைக்கும் முன்மொழிவு ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை. மேலும், இத்தொகுதியில் தனியார் துறைமூலமும் சர்க்கரை ஆலை அமைக்க விண்ணப்பம் ஏதும் வரப்பெறவில்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

5—

## சர்க்கரை ஆலை

**வினா எண் 10900—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் சர்க்கரை ஆலை அமைத்துத் தர அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

விழுப்புரம் மாவட்டம், மேல்மலையனூர் தொகுதியில் புதிய சர்க்கரை ஆலை, கூட்டுறவு மற்றும் பொதுத் துறையின்கீழ் அமைப்பது தொடர்பான பிரேரணை எதுவும் அரசின் பரிசீலனையில் இல்லை.

6—

## சர்க்கரை ஆலை

**வினா எண் 10983—திரு. விஜயகாந்த்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் திறக்க அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

ஆவன செய்யப்படும். மதுராந்தகம் கூட்டுறவு சர்க்கரை ஆலையை மீண்டும் திறப்பது குறித்த பிரேரணைகள் அரசின் பரிசீலனையில் உள்ளன.

**7—**

## அரவைத் திறன்

**வினா எண் 12384—டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு முதலமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கபிலர்மலை தொகுதி, சேலம் மத்திய கூட்டுறவு சர்க்கரை ஆலையின் அரவைத் திறனை நாளொன்றுக்கு 5,000 டன் என்ற அளவிற்கு உயர்த்த அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன?

**விடை—**

**மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி, முதலமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் கூட்டுறவு சர்க்கரை ஆலையின் தற்போதைய அரவைத் திறன் தினசரி 2,500 டன்களாகும். இந்த அரவைத் திறனுக்கு 4.30 இலட்சம் மெட்ரிக் டன் கரும்பு தேவை. இவ்வாலைப் பகுதியில் சற்றுக் கூடுதலாகக் கரும்பு கிடைப்பதால் இவ்வாலையின் தினசரி அரவைத் திறனை 350 டன்களாக அதிகரிக்கவும்/நவீனப்படுத்தவும் அரசு அளவில் தனியாகப் பரிசீலிக்கப்பட்டு வருகிறது. ஆனால், இவ்வாலையின் அரவைத் திறனை தினசரி 5,000 டன்களாக உயர்த்தும் திட்டம் தற்போது ஏதுமில்லை.

**8—**

## சேமிப்புக் கிடங்கு

**வினா எண் 11492—திரு. நா. இராமகிருஷ்ணன்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—



கம்பம் தொகுதி, கம்பம் நகருக்குள் தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சேமிப்புக் கிடங்கு புதியதாகத் திறப்பதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு மின்சார வாரியத்தின் சார்பாக சேமிப்புக் கிடங்குகள் கட்டுவது இல்லை என்பதால், கம்பம் தொகுதி, கம்பம் நகருக்குள் புதிய கிடங்கு திறப்பதற்கான உத்தேசம் ஏதுமில்லை.

**9—**

## வாரியக் குடியிருப்பு

**வினா எண் 15261—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் மின்சாரத் துறையில் பணிபுரிகின்றவர்களுக்கு வீடு கட்டித் தர அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. ஆற்காடு நா. வீராசாமி, மின்சாரத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் உள்ள ஐயர்பாடி 110/22 கி.வோ. துணை மின் நிலையத்தில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு மட்டும் தற்போது வாரியக் குடியிருப்பு கட்டப்பட்டு அவர்களது பயன்பாட்டிற்காக ஒதுக்கப்பட்டுள்ளது. மேலும், வால்பாறையில் உள்ள இதர விநியோகப் பிரிவுகளில் பணிபுரியும் அலுவலர் மற்றும் பணியாளர்களுக்கு வாரியக் குடியிருப்பு கட்டிக் கொடுக்கும் வழக்கம் (Norms) நடைமுறையில் இல்லை.

**10—**

## புதிய பட்டியல்

**வினா எண் 2879—திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

[2007 மே 9

வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பற்றிய புதிய பட்டியல் எடுக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

2002 ஆம் ஆண்டு எடுக்கப்பட்ட கணக்கின் அடிப்படையில் வறுமைக் கோட்டிற்குக் கீழுள்ளவர்கள் பட்டியல் வெளியிடப்பட்டு விடுபட்டவர்களை தேர்வு செய்ய மதிப்பெண்களை நிர்ணயம் செய்து அரசு ஆணை எண் 150, நாள் 17-10-2006-ல் ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. அதன்படி ஊராட்சிகளில் 14-11-2006 அன்று கிராம சபா ஒப்புதல் பெற்று அறிக்கை அனுப்புமாறு அனைத்து மாவட்ட ஆட்சித் தலைவர்களும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர். அதன்படி ஒருங்கிணைந்த அறிக்கையை ஊரக வளர்ச்சி இயக்குநர் அரசுக்கு அனுப்பி, அதன் பின்னர் புதிய பட்டியல் தயாரிக்கப்படும்.

**11—**

## பொதுக் கழிப்பிடம்

**வினா எண் 7757—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதிக்குட்பட்ட சின்னபுலியூர் ஊராட்சி, பெரியார் நகர் பகுதி, ஒட்டப்பாளையம் கிராமம், வெள்ளக்காட்டூர், ஆலந்தூர் கிராமம், வி. இராமநாதபுரம் காலனி, பெருமாபாளையம்புதூர், அருந்ததியர் காலனி, ஆப்பக்கூடல் கிராமம் 6-வது வார்டு, கல்லாங்காட்டுமேடு ஆகிய பகுதிகளில் பொதுக் கழிப்பிடம் அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி ஒன்றியத்தைச் சேர்ந்த சின்னபுலியூர் ஊராட்சியில் பெரியார் நகர் பகுதி, ஒட்டப்பாளையம்



2007 மே 9]

கிராமம், வெள்ளக்காட்டூர், ஆலந்தூர் ஊராட்சியைச் சேர்ந்த வி. இராமநாதபுரம் காலனி, கவுந்தம்பாடி ஊராட்சியைச் சேர்ந்த பெருமாபாளையம்புதூர் ஆகிய ஊராட்சிகளில் முழு சுகாதார இயக்கத்தின்கீழ் அனைத்து தனியார் இல்லங்களிலும் அரசு மானியத்துடன் கழிவறைகள் கட்டப்பட்டு வருகின்றன. எனவே, இப்பகுதிகளில் தனிக் கழிப்பிடம் அமைக்க தேவையில்லை. ஆப்பக்கூடல் பேரூராட்சி 6-வது வார்டு, கல்லாங்காட்டுமேடு பகுதியில் பொதுக் கழிப்பிடம் கட்ட பேரூராட்சியில் நிதி வசதி இல்லை.

**12—**

## பன்றி ஒழிப்பு

**வினா எண் 16109—திரு. கோவை தங்கம் :** மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியில் கோட்டூரிலும், சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் பன்றிகளை ஒழிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.க. ஸ்டாலின், ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, கோட்டூரிலும், சுற்றியுள்ள ஊராட்சிகளிலும் உள்ள பன்றிகளை ஒழிக்க ஊராட்சித் தலைவர்களுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

**13—**

## விதை விநியோகம்

**வினா எண் 16263—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதியிலுள்ள விவசாயிகளுக்கு நல்ல தரம் வாய்ந்த விதைகளை இலவசமாக வழங்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

[2007 மே 9

**விடை—**

**மாண்புமிகு திரு. வீரபாண்டி எஸ். ஆறுமுகம், வேளாண்மைத் துறை அமைச்சர்:**

(அ) தற்போது வேளாண்மைத் துறைமூலம் இலவசமாக விதை விநியோகம் வழங்கும் திட்டம் ஏதும் அரசிடம் இல்லை.

(ஆ) எழவில்லை.

**14—**

## மணல் விற்பனை

**வினா எண் 5325—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, ஆழியாறு நகர் பகுதியில் மணல் விற்பனை செய்ய அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) இல்லை.

(ஆ) இக்கேள்வி எழவில்லை.

**15—**

## புதிய கட்டடம்

**வினா எண் 13225—திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) காங்கேயம் நீதிமன்றத்திற்குப் புதிய கட்டடம் கட்டப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) காங்கேயம் நீதிமன்றத்திற்கு மைய அரசின் நிதியுதவியுடன் புதிய கட்டடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

**16—**

## புதிய கட்டடம்

**வினா எண் 13727—திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

அரியலூரில் உள்ள உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் ஆகியவற்றிற்கு புதிய நீதிமன்றக் கட்டடம் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. துரைமுருகன், பொதுப் பணி மற்றும் சட்டத் துறை அமைச்சர்:**

அரியலூரில் உள்ள உரிமையியல் நீதிமன்றம், சார்பு நீதிமன்றம் ஆகியவற்றிற்கு மைய அரசின் உதவியுடன் கட்டடம் கட்டுவதற்கு செயற்குறிப்பு ஒன்று மைய அரசுக்கு அனுப்பப்பட்டு பதில் எதிர்பார்க்கப்படுகிறது. பதில் பெறப்பட்டவுடன் கட்டடம் கட்டுவது சம்பந்தமாகப் பரிசீலிக்கப்படும்.

**17—**

## பணிமனையில் உரிய வசதிகள்

**வினா எண் 6023—திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமி போக்குவரத்துத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற் விடையளிப்பாரா—

காஞ்சிபுரம் பேருந்து நிலையத்தில் இயங்கும் காஞ்சிபுர பணிமனையில் கழிப்பறை வசதியும், தண்ணீர் தட்டுப்பாட்டை போக்கவும், வாகனங்கள் நிறுத்த போதிய இட வசதியும் அளிக்க அர முன்வருமா?

[2007 மே 9

விடை—

**மாண்புமிகு திரு. கே.என். நேரு, போக்குவரத்துத் துறை அமைச்சர்:**

காஞ்சிபுரம் பணிமனை பணியாளர்களுக்குத் தனி கழிப்பறை வசதிகள் செய்யப்பட்டுள்ளன. இவை காஞ்சிபுரம் பணிமனை பணியாளர்களுக்கும் தொழில்நுட்பப் பணியாளர்களுக்கும் போதுமானதாக உள்ளன. புதிய குழாய் இணைப்புகள் காஞ்சிபுரம் பணிமனைக்கென காஞ்சிபுரம் நகராட்சியிலிருந்து பெறப்பட்டுள்ளது. இத்துடன் பணிமனை லாரியின்மூலமாகவும் தண்ணீர் பெறப்பட்டு வழங்கப்படுகிறது. ஓரிக்கை கிராமத்தில் பணிமனை நிர்மாணிக்க நிலம் கையகப்படுத்தும் பணி நடைமுறையில் உள்ளது.

நிலம் கையகப்படுத்திய பிறகு, தற்பொழுது காஞ்சிபுரம் பணிமனையில் பராமரிக்கப்படும் ஓரிக்கை பணிமனையின் பேருந்துகள் ஓரிக்கை பணிமனைக்கு மாற்றப்படும். அதன்பின் காஞ்சிபுரம் பணிமனையின் பேருந்துகளை நிறுத்துவதற்கும், பராமரிப்புப் பணிகள் செய்வதற்கும் போதிய இட வசதி கிடைக்கப் பெறும்.

18—

**பத்திரப் பதிவு அலுவலகம்**

**வினா எண் 17594—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. எம்.ஆர்.கே. பன்னீர்செல்வம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையில் பத்திரப் பதிவுத் துறை அலுவலகம் செயல்படவில்லை. வால்பாறை ஆனைமலை சார்பதிவாளர் அலுவலக எல்லைக்குட்பட்டுள்ளது. எனவே, வால்பாறையில் பத்திரப் பதிவுத் துறைக் கட்டடம் கட்ட வேண்டிய நிலை எழவில்லை.



2007 மே 9]

ஆனைமலை சார்பதிவாளர் அலுவலகம் தற்போது அரசு கட்டடத்தில் இயங்கி வருகிறது.

19—

**சொந்தக் கட்டடம்**

**வினா எண் 6117—திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

உசிலம்பட்டி தொகுதி, மேலப்பெருமாள்பட்டியில் உள்ள கூட்டுறவுச் சங்கக் கட்டடத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்டிக் கொடுக்க அரசு முன்வருமா?

விடை—

**மாண்புமிகு திரு. எ. வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

மதுரை மாவட்டத்திலுள்ள தேசிய கூட்டுறவு வளர்ச்சிக் கழகத்தின் மூலம் ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டம் செயல்படவுள்ளது. இதற்கான திட்ட அறிக்கையில், மேலப்பெருமாள்பட்டி தொடக்க வேளாண்மைக் கூட்டுறவு வங்கிக்கு அலுவலகக் கட்டடத்துடன் இணைந்த கிட்டங்கி கட்டுவதற்கு ரூ. 8.50 இலட்சம் அளவிற்கு கடன் கோரும் முன்மொழிவு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. ஒருங்கிணைந்த கூட்டுறவு வளர்ச்சித் திட்டத்தின்மூலம் கோரப்படும் கடன் தொகை கிடைக்கப்பெற்றவுடன் வங்கிக்குச் சொந்த அலுவலகக் கட்டடம் கட்ட வாய்ப்பு ஏற்படும்.

20—

**கூட்டுறவு வேளாண்மை நிலையம்**

**வினா எண் 10263—டாக்டர் எம்.கே. விஷ்ணுபிரசாத்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதியில் தமிழ்நாடு அரசு கூட்டுறவுப் பயிற்சிக் கல்லூரி அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) தமிழ்நாட்டில் 11 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தனியாக பதிவு செய்யப்பட்டும், 9 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் தமிழ்நாடு கூட்டுறவு ஒன்றியத்தின் அங்கங்களாகவும், ஆக மொத்தம் 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் செயல்பட்டு வருகின்றன.

2. மேற்கண்ட கூட்டுறவு மேலாண்மை நிலையங்கள் 36 வார கால கூட்டுறவு மேலாண்மை பட்டயப் பயிற்சியினை +2 மற்றும் பட்டதாரி மாணவ/மாணவியருக்கு பயிற்சி அளித்து வருகிறது. தற்போது 29 மாவட்டங்களில் 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் உள்ள மாணவ/மாணவியர்கள் பயிற்சியில் சேருவது தற்சமயம் குறைந்து கொண்டே வருகின்ற சூழ்நிலை உள்ளது. மேலும், 20 கூட்டுறவு மேலாண்மை நிலையங்களில் ஒன்றான திருவண்ணாமலை கூட்டுறவு மேலாண்மை நிலையம் மற்றும் பேரறிஞர் அண்ணா கூட்டுறவு மேலாண்மை நிலையம், காஞ்சிபுரம் செய்யாறு பகுதியினை ஒரு விவகார எல்லையாக உள்ளடக்கி உள்ளது. திருவண்ணாமலை மாவட்டத்திற்கென தனியாக கூட்டுறவு பயிற்சி நிலையம் செயல்பட்டு வருகிறது. இந்நிலையில் திருவண்ணாமலை மாவட்டம், செய்யாறு பகுதியில் கூட்டுறவு மேலாண்மை நிலையம் அமைக்க தற்சமயம் உத்தேசம் ஏதும் இல்லை.

(ஆ) கேள்வி எழவில்லை.

**21—**

## புதிய கட்டடம்

**வினா எண் 15785—திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதி, சின்னப்பம்பட்டி பகுதியில் கூட்டுறவுச் சங்கத்திற்குக் கட்டடம் கட்ட அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) சேலம் மாவட்டம், ஓமலூர் வட்டம், தாரமங்கலம் தொகுதியில் ஓமலூர் சரகத் துணைப் பதிவாளர் கட்டுப்பாட்டில் செயல்பட்டு வரும் சின்னப்பம்பட்டி தொடக்க வேளாண்மை கூட்டுறவு வங்கிக்குச் சொந்தமாக இரண்டு கட்டடங்கள் உள்ளன. மேற்படி கட்டடங்களில் வங்கி தற்போது இயங்கி வருகிறது. போதிய இட வசதி உள்ளதால், சின்னப்பம்பட்டி வங்கிக்குத் தற்போது புதிய கட்டடம் கட்ட வேண்டிய அவசியம் எழவில்லை.

**22—**

## மண்ணெண்ணெய் வங்கி

**வினா எண் 16199—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை மலைப் பகுதியில் மண்ணெண்ணெய் வங்கி ஏற்படுத்த அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. எ.வ. வேலு, உணவு மற்றும் கூட்டுறவுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) எந்தக் கூட்டுறவுச் சங்கமும் வால்பாறையில் மண்ணெண்ணெய் வழங்கும் நிலையம் (Kerosene Bunk) அமைப்பது தொடர்பாக இதுவரை விண்ணப்பம் ஏதும் செய்யவில்லை. இது குறித்து விண்ணப்பம் ஏதேனும் பெறப்படின், வால்பாறையில் மண்ணெண்ணெய் வழங்கு நிலையம் அமைப்பது குறித்து நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

**23—**

## ஆராய்ச்சி நிலையம்

**வினா எண் 9167—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையில் உபாசி அருகில் மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை உபாசியில் போதிய வசதிகள் இல்லாததால், மூலிகைகளைக் கொண்டு மருந்து தயாரிக்கும் ஆராய்ச்சி நிலையம் ஒன்றை ஏற்படுத்த தற்போது உத்தேசம் ஏதும் அரசுக்கு இல்லை.

**24—**

## மருத்துவர் பணியிடம்

**வினா எண் 10525—திரு. கே.எல். இளவழகன்:** மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலூர் மாவட்டம், ஆற்காடு தொகுதி, ஆற்காடு நகர் அரசு மருத்துவமனையில் மருத்துவர்கள் மற்றும் அலுவலர்களுக்கான காலிப் பணியிடங்கள் நிரப்பப்படுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.கே.எஸ்.எஸ்.ஆர். இராமச்சந்திரன், மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வேலூர் மாவட்டம், ஆற்காடு அரசு மருத்துவமனைக்கு ஒப்பளிக்கப்பட்ட நான்கு உதவி மருத்துவர்கள் பணியிடங்களில் இரண்டு கண் மருத்துவர்கள், ஒரு மகப்பேறு மருத்துவர் மற்றும் ஒரு பொது அறுவை சிகிச்சை நிபுணர் ஆகியோர் பணிபுரிந்து வருகின்றனர்.



**25—**

## வாடகை உயர்த்துதல்

**வினா எண் 17416—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பொள்ளாச்சி அருள்மிகு மாரியம்மன் திருக்கோயில், சுப்பிரமணியர் திருக்கோயிலின் கீழுள்ள கடைகளின் வாடகையை உயர்த்த அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1) கோவை மாவட்டம், பொள்ளாச்சி வட்டம், அருள்மிகு மாரியம்மன் அங்காளம்மன் திருக்கோயிலுக்குச் சொந்தமான 5 கடைகளுக்கான வாடகை, அரசாணையின்படி நிர்ணயம் செய்யப்பட்டுவிட்டதால் மீண்டும் வாடகையை உயர்த்த வேண்டிய நிலை இல்லை. மேலும், அரசாணையின்படி மூன்றாண்டுகளுக்கு ஒருமுறை 33.3 சதவிகிதம் வாடகை உயர்வு செய்ய உள்ளதால், புதியதாக வாடகை நிர்ணயம் செய்ய இயலாது.

(2) பொள்ளாச்சி நகரம், அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலுக்கு 8 வணிகக் கட்டடங்களும், ஒரு ஊழியர் குடியிருப்பும் உள்ளது. ஊழியர் குடியிருப்பு தவிர 8 வணிகக் கட்டடங்களுக்கும் அரசாணையின்படி நியாய வாடகை, நிர்ணயம் செய்யப்பட்ட வாடகை வசூலிக்கப்பட்டு வருகிறது. ஒவ்வொரு மூன்று ஆண்டுகளுக்கு ஒருமுறை 33.3 சதவீதம் வாடகை உயர்வு செய்து வசூலிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயிலுக்கு அரசாணையின்படி வாடகை நிர்ணயம் செய்யப்பட்டு அதன்படி வாடகை வசூலிக்கப்பட்டு வருவதால், தற்போது மேற்படி கடைகளுக்கு வாடகையை உயர்த்த வழிவகை ஏதுமில்லை.

[2007 மே 9

26—

## கோயில் திருப்பணி

**வினா எண் 20979—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, 18-வது வார்டு, அருள்மிகு பிடாரியம்மன் கோயிலுக்கு குடிநீர்க் குழாய் அமைக்கவும், சுற்றுச்சுவர் மராமத்து செய்யவும் அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை 18-வது வார்டு, அருள்மிகு பிடாரியம்மன் திருக்கோயில் சிவகங்கை சமஸ்தானம் மற்றும் தேவஸ்தானத்திற்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள ஆனந்தவள்ளியம்மன் திருக்கோயிலின் உபகோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் பரம்பரை அறங்காவலரால் நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் தண்ணீர் வசதி செய்யப்பட்டுள்ளது. சுற்றுச்சுவர் மராமத்து செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

27—

## ஆலயம் புதுப்பித்தல்

**வினா எண் 20982—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை பேரூராட்சி, ஆனந்தவள்ளியம்மன் கோயில் ஆலயத்தைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை பேரூராட்சி, அருள்மிகு ஆனந்தவள்ளியம்மன் திருக்கோயில், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் திருப்பணி வேலைகள் செய்திட மதிப்பீடு தயாரிக்கும் பணி நடைபெற்று வருகிறது. விரைவில் கும்பாபிஷேகம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

28—

## புதிய தேர்

**வினா எண் 20984—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, அருள்மிகு ஆனந்தவள்ளியம்மன் திருக்கோயில், அருள்மிகு வீரழகர் பெருமாள் திருக்கோயிலுக்குப் புதிய தேர் செய்ய அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, அருள்மிகு ஆனந்தவள்ளியம்மன் திருக்கோயில் சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் அம்மன் திருத்தேர் சுமார் ரூ.17.50 இலட்சம் மதிப்பீட்டில் புதியதாக செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மானாமதுரை தொகுதி, அருள்மிகு வீரழகர் பெருமாள் திருக்கோயில், சிவகங்கை சமஸ்தானம் தேவஸ்தானத்திற்குட்பட்ட இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலில் தேரோட்ட உற்சவம் நடைபெறுவதில்லை என்பதால், மேற்படி திருக்கோயிலில் புதிய தேர் செய்ய அவசியம் எழவில்லை.

29—

[2007 மே 9

## தடுப்புச் சுவர்

**வினா எண் 20988—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, செங்கோட்டை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி கோயில் பகுதியில் தடுப்புச் சுவர் கட்ட அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, செங்கோட்டை அருள்மிகு அங்காள பரமேஸ்வரி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறை கட்டுப்பாட்டில் உள்ள பட்டியலைச் சேர்ந்த திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம், மடப்புரம் உதவி ஆணையர்/செயல் அலுவலர் தக்காராக இருந்து நிர்வாகம் செய்யப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயிலில் தடுப்புச் சுவர் சுமார் ரூ.3 இலட்சம் மதிப்பீட்டில் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

30—

## கோயில் புதுப்பித்தல்

**வினா எண் 20990—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 9-வது வார்டு, கிருஷ்ணன் கோயிலைப் புதுப்பிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 9வது வார்டு, அருள்மிகு கிருஷ்ணன் திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் திரு. எஸ். சுப்பிரமணியம் என்பவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு பொதுமக்கள் நிதி உதவிமூலம் மராமத்து வேலைகள் செய்து முடிக்கப்பட்டுவிட்டன. எனவே, இத்திருக்கோயிலை தற்போது புதுப்பிக்க வேண்டிய அவசியம் எழவில்லை.

31—

## கோயில் திருப்பணி

**வினா எண் 20991—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 3-வது வார்டு, கோட்டைப் பெருமாள் கோயிலைச் சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, திருப்புவனம் பேரூராட்சி, 3-வது வார்டு, அருள்மிகு கோட்டைப் பேருமாள் திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறை ஆளுகையின் கீழுள்ள பட்டியலைச் சேராத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் பரம்பரை அறங்காவலரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலில் அரசு நிதியுதவியின்கீழ் ஒரு கால பூஜை நடைபெற்று வருகிறது. இத்திருக்கோயிலில் திருப்பணி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

32—

[2007 மே 9

## கோயில் புதுப்பித்தல்

**வினா எண் 20994—திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் அருள்மிகு சூட்டுக்கோல் ராமசாமி கோயிலைப் புதுப்பிக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) மானாமதுரை தொகுதி, கட்டிக்குளம் அருள்மிகு சூட்டுக்கோல் ராமசாமி திருக்கோயில், இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் இல்லாத திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் திரு. ரவி என்பவரால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. இத்திருக்கோயிலுக்கு உபயதாரர்கள்மூலம் திருப்பணி செய்யப்பட்டு, 1997 ஆம் ஆண்டு கும்பாபிஷேகம் நடைபெற்றுள்ள நிலையில் தற்போது புதுப்பிக்க வேண்டிய நிலை எழவில்லை.

33—

## தரைத்தளம் புதுப்பித்தல்

**வினா எண் 22215—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) கோயம்புத்தூர் மாவட்டம், ஆனைமலை அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயில், அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயில், அருள்மிகு மருதமலை திருக்கோயில், அருள்மிகு பட்டீஸ்வர் திருக்கோயில், அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலின் தரைத்தளத்தை புதுப்பிக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) (1) கோவை மாவட்டம், ஆனைமலை, அருள்மிகு மாசானியம்மன் திருக்கோயிலின் இராஜகோபுர திருப்பணி மற்றும் தங்கரதத் திருப்பணி வேலைகளும் நடைபெற்று வருகின்றன. மேற்கண்ட திருப்பணிகள் முடிவுற்றவுடன் தரைத்தளத்தை உபயதாரர்கள்மூலம் புதுப்பிக்க நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

(2) கோவை மாவட்டம், வட்டம் மற்றும் நகர் அருள்மிகு தண்டுமாரியம்மன் திருக்கோயிலின் அனைத்துப் பகுதிகளிலும் தரைத்தளம் போடப்பட்டுள்ளதால், மேலும் தரைத்தளம் புதுப்பிக்க அவசியம் எழவில்லை.

(3) கோவை மாவட்டம், மருதமலை, அருள்மிகு சுப்பிரமணிய சுவாமி திருக்கோயிலின் அலுவலக முன்புறம் தவிர அனைத்து பகுதிகளிலும் தரைத்தளம் போடப்பட்டுள்ளது. மேற்குறிப்பிட்ட அலுவலக முன்புறத்திற்கு எதிரே திருமண மண்டபம் கட்டப்படவுள்ளதால், மேற்படி பணி முடிவுற்றவுடன் தரைத்தளம் போடப்படும்.

(4) கோவை மாவட்டம் மற்றும் வட்டம், பேரூர் அருள்மிகு பட்டீஸ்வர சுவாமி திருக்கோயிலின் முன்புற மைதானத்தில், சுமார் ரூ.12.40 இலட்சத்தில் கான்கிரீட் தளம் அமைக்க சுற்றுலாத் துறை நிதியுதவி பெற்று பணிகள் செய்திட நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

(5) கோவை மாவட்டம், வட்டம் மற்றும் நகர், அருள்மிகு கோணியம்மன் திருக்கோயிலின் அனைத்துப் பகுதிகளிலும் தரைத்தளம் போடப்பட்டுள்ளதால், மேலும் தரைத்தளம் புதுப்பிக்க அவசியம் எழவில்லை.

34—

## திருக்கோயில் விரிவுபடுத்துதல்

**வினா எண் 22225—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) அருள்மிகு புதுசித்தாபுதூர் அய்யப்பன் திருக்கோயிலை விரிவுபடுத்த அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. கே.ஆர். பெரியகருப்பன், இந்து சமய மற்றும் அறநிலையத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) கோவை மாவட்டம் மற்றும் வட்டம், புதுசித்தாபுதூர் அருள்மிகு அய்யப்பன் சுவாமி திருக்கோயில் இந்து சமய அறநிலையத் துறையின் கட்டுப்பாட்டில் உள்ள திருக்கோயிலாகும். இத்திருக்கோயிலின் நிர்வாகம் அறங்காவலர் குழுவால் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. மேற்படி திருக்கோயில் கோவை நகரின் மையப் பகுதியில் உள்ளதாலும், இத்திருக்கோயிலுக்கு போதிய இடம் இல்லாததாலும், மேற்படி திருக்கோயிலைச் சுற்றி குடியிருப்புகள் உள்ளதாலும், இத்திருக்கோயிலை ஒட்டி ஆவாரம்பாளையம் பிரதான சாலை உள்ளதாலும் இத்திருக்கோயிலை விரிவுபடுத்த சாத்தியமில்லை.

**35—**

## கைத்தறித் தொழிலாளர்களுக்கு வீடுகள்

**வினா எண் 8834—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு கைத்தறித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வாளவாடி, உடுக்கம்பாளையம், மலையாண்டிப்பட்டிணம், சின்னபொம்மன்சாலை, பாப்பான்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள கைத்தறித் தொழிலாளர்களுக்கு புதிதாக வீடுகள் கட்டித் தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. என்கேகே.பி. ராஜா, கைத்தறித் துறை அமைச்சர்:**

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, வாளவாடி, உடுக்கம்பாளையம், மலையாண்டிப்பட்டிணம், சின்னபொம்மன் சாலை, பாப்பான்குளம் ஆகிய கிராமங்களில் உள்ள கைத்தறித் தொழிலாளர்களுக்கு வீடுகள் கட்டித் தரும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.



(ஆ) இவ்வினா எழவில்லை.

**36—**

## தடுப்புச் சுவர்

**வினா எண் 1139—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறையிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு தடுப்புச் சுவர் கட்டித் தருவதற்கு அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறையிலுள்ள ஆரம்பப் பள்ளிக்கு தற்போது கல்தூண்கள் நடப்பட்டு கம்பிவேலி போடப்பட்டுள்ளது. பள்ளிகளுக்குத் தடுப்புச் சுவர் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

**37—**

## அடிப்படை வசதி

**வினா எண் 2809—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வால்பாறை தொகுதி, சேத்துமடை உயர்நிலைப் பள்ளிக்குக் குடிநீர், கழிப்பிடம், இருக்கை வசதிகள், கூடுதல் வகுப்பறைகள், தடுப்புச் சுவர் மற்றும் ஆசிரியர்கள் நியமனம் செய்து தர அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) வால்பாறை தொகுதி, சேத்துமடை அரசு உயர்நிலைப் பள்ளி சென்ற கல்வியாண்டில்தான் உயர்நிலைப் பள்ளியாகத் தரம் உயர்த்தப்பட்டது. தற்போது ஊராட்சி ஒன்றிய துவக்கப் பள்ளியின் கட்டடத்தில் செயல்பட்டு வருகிறது. மேற்கண்ட பள்ளிக்குச் சொந்தமான நிலம் கிடைத்தவுடன் குடிநீர் வசதி, கழிப்பிடம், இருக்கை வசதிகள், கூடுதல் வகுப்பறைகள் மற்றும் தடுப்புச் சுவர் ஆகியவை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

[2007 மே 9

38—

## தீயணைப்பு, முதலுதவிப் பயிற்சி

**வினா எண் 14151—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

பள்ளி, கல்லூரிகளில் படிக்கும் மாணவ, மாணவியருக்கு தீயணைப்புப் பயிற்சி, முதலுதவிப் பயிற்சி போன்றவற்றை அளித்திட அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

பள்ளிகளில் படிக்கும் மாணவர்/மாணவியருக்குத் தீயணைப்புப் பயிற்சி மற்றும் முதலுதவிப் பயிற்சி போன்றவை தமிழ்நாட்டிலுள்ள அனைத்து உயர்நிலை/மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் உடற்கல்வி ஆசிரியர்களுக்கு அளிக்கப்பட்டு வருகிறது. அவர்கள்மூலம் பள்ளிகளில் உள்ள என்.எஸ்.எஸ். மற்றும் என்.சி.சி. மாணவ/மாணவியருக்குத் தீயணைப்புப் பயிற்சி மற்றும் முதலுதவிப் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. மேலும் கல்லூரிகளில் பயிலும் மாணவ/மாணவியர்களில் தேசிய மாணவர் படையைச் சேர்ந்த மாணவ/மாணவிகள் அனைவருக்கும் தீயணைப்புப் பயிற்சி மற்றும் முதலுதவி பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது.

39—

## உயர்நிலைப் பள்ளி

**வினா எண் 16922—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உளுந்தூர்பேட்டை தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், திம்மலை ஊராட்சியில் உயர்நிலைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, பள்ளிக் கல்வித் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) உளுந்தூர்பேட்டை தொகுதி, தியாகதுருகம் ஒன்றியம், திம்மலை ஊராட்சியில் உயர்நிலைப் பள்ளி துவக்குவது குறித்த கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

40—

## சூரிய மின் வேலி

**வினா எண் 11648—திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு வனத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

தளி தொகுதியிலுள்ள மலைக் கிராமங்களில் யானைகளால் ஏற்படும் சேதத்தினைத் தடுக்க சூரிய மின் வேலி அமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. என். செல்வராஜ், வனத் துறை அமைச்சர்:**

2006-2007 ஆம் ஆண்டில் தளி தொகுதியில் 26 கி.மீ. நீளத்திற்கு சூரிய மின் வேலி அமைக்கும் பணி கீழ்க்கண்டவாறு நடைபெற்று வருகிறது:

| | | |
|---|---|---|
| (1) | 12-வது நிதிக்குழு நிதி ஒதுக்கீட்டின்கீழ் | 20 கி.மீ. தூரம் |
| (2) | சூரிய மின் வேலி அமைத்தல் (மாநில திட்டம்) | 5 கி.மீ. தூரம் |
| (3) | யானைகள் திட்டம் (மத்திய அரசு திட்டம்) | 1 கி.மீ. தூரம் |
| | மொத்தம் | 26 கி.மீ. தூரம் |

41—

## சாலை சீரமைத்தல்

**வினா எண் 8318—திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

வால்பாறையில் பழுதடைந்துள்ள சிறுகுன்றா சாலையைச் சீரமைக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

வால்பாறையில் பழுதடைந்துள்ள சிறுகுன்றா சாலையானது பொள்ளாச்சி (நெ) கோட்டத்தால் பராமரிக்கப்பட்டு வரும் மாவட்ட இதர சாலையான ஸ்டேன்மோர்-சிறுகுன்றா சாலை கி.மீ. 0/0-6/420 ஆகும். இச்சாலையில் பழுதடைந்துள்ள பகுதியான கி.மீ. 0/0-3/0 வரையுள்ள பகுதிகள் ரூ.23.80 இலட்சம் மதிப்பீட்டில் சிறப்பு பழுதுபார்த்தல் திட்டத்தின்கீழும் மற்றும் கி.மீ. 4/4-5/2 வரையுள்ள பகுதிகள் ரூ.5.25 இலட்சம் மதிப்பீட்டில் காலமுறை புதுப்பித்தல் திட்டத்தின்கீழும், சீரமைப்புப் பணிகள் மேற்கொள்ளப்பட்டு முடிக்கப்பட்டுள்ளன.

**42—**

## குழல் விளக்கு

**வினா எண் 9298—திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உடுமலைப்பேட்டை தொகுதி, தேசிய நெடுஞ்சாலையில் தடுப்பு அமைத்து குழல் விளக்கு அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) உடுமலை நகர் பகுதி தே.நெ.209-ல் கி.மீ.89/6 மற்றும் 114/4-ல் சாலை சந்திப்பில் மையத் தடுப்பு (Centre median) அமைத்து சாலை சந்திப்பு மேம்பாடு செய்ய ஆண்டுத் திட்டம் 2006-2007-ல் ரூ.110.59 இலட்சத்திற்கு மதிப்பீடு மைய அரசின் ஒப்புதலுக்காக அனுப்பப்பட்டுள்ளது. இம்மதிப்பீட்டிற்கு மைய அரசின் ஒப்புதல் பெறப்பட்டு பணி முடிந்த பின்னரே மையத் திட்டில் நகராட்சிமூலம் குழல் விளக்கு அமைப்பது தொடர்பாக பரிசீலிக்க இயலும்.

(ஆ) மையத் தடுப்பு அமைத்தபின் நகராட்சி குழல் விளக்கு அமைக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.



**43—**

## நான்கு வழிப்பாதை

**வினா எண் 9856—திரு. அ. தமிழரசு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சேலம் முதல் தர்மபுரி வரை நான்கு வழிப்பாதை அமைக்கும் பணியினை விரைவில் முடிக்க அரசு ஆவன செய்யுமா?

விடை—

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

தே.நெ.7-ல் தொப்பூர் கணவாயிலிருந்து சேலம் வரையிலான கி.மீ. 94.00 முதல் கி.மீ. 199.200 வரை) சாலைப் பகுதியை நான்கு வழித்தடமாக மாற்றும் பணி இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தால் நான்கு கூறுகளாகப் பிரிக்கப்பட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. இப்பணிகள் பின்வருமாறு முடிக்கப்படும் என தேசிய நெடுஞ்சாலை ஆணைய அலுவலர்களிடமிருந்து பெறப்பட்ட பதிலிலிருந்து தெரிகிறது.

| வரிசை எண் | சாலைப் பகுதி | முடிவடையும் என எதிர்பார்க்கப்படும் நாள் |
|---|---|---|
| 1 | தொப்பூர் கணவாயிலிருந்து கிருஷ்ணகிரி வரை (கி.மீ. 94.00 முதல் 156.00) | ஜனவரி 2009 |
| 2 | தொப்பூர் கணவாய் பகுதி (கி.மீ. 156.00 முதல் 163.400 வரை) | பணி முடிவடைந்து விட்டது |
| 3 | ஓமலூர் முதல் தும்பிப்பாடி வரை (கி.மீ. 163.400 முதல் 180.00 வரை) | 21-11-2007 |
| 4 | தும்பிப்பாடி முதல் சேலம் வரை (கி.மீ. 180.00 முதல் 199.200 வரை) | சாலைப் பணி முடிவடைந்து விட்டது. மேம்பாலப் பணிகள் 30-9-2007-க்குள் முடிவடையும் என எதிர்பார்க்கப்படுகிறது. |

[2007 மே 9

44—

## பாலம்

**வினா எண் 10239—திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓலகடம் கிராமம், குட்டைமேடு வளைவில் சாலையின் குறுக்கே பாலம் கட்ட அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) மற்றும் (ஆ) ஈரோடு மாவட்டம், பவானி தொகுதி, ஓலகடம் குட்டைமேடு வளைவு சாலை, கோபி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கிய சாலையான தொப்பூர்-மேட்டூர், பவானி சாலையிலிருந்து வெள்ளித்திருப்பூர் செல்லும் சாலையில் கி.மீ. 12/8-ல் அமைந்துள்ள வளைவான பகுதியாகும். இப்பகுதியில் பாலம் கட்டும் திட்டம் ஏதும் அரசின் பரிசீலனையில் இல்லை.

45—

## சாலை செப்பனிடுதல்

**வினா எண் 11114—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

இராசிபுரம்-ஆத்தூர் சாலையை இராசிபுரம் அருகில் 2.40 கி.மீ. நீளத்திற்குத் செப்பனிட அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

இராசிபுரம்-ஆத்தூர் சாலையை இராசிபுரம் அருகில் 2.40 கி.மீ. நீளத்திற்குச் செப்பனிடக் கோரும் சாலையானது நாமக்கல் கோட்டப் பராமரிப்பில் உள்ள மாவட்ட முக்கியச் சாலையாகும். இருவழிச்



2007 மே 9]

சாலையாக உள்ள இச்சாலைப் பகுதியை மேம்பாடு செய்ய ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.75.00 இலட்சத்திற்கு 18-11-2006 அன்று நிர்வாக ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ளது. ஒப்பந்தப்புள்ளி இறுதியாக்கப்பட்டு பணியினை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

46—

## சாலை மேம்பாடு

**வினா எண் 11115—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மல்லியக்கரை-இராசிபுரம்-திருச்செங்கோடு-ஈரோடு 3.80 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்ய அரசு ஆவன செய்யுமா?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மல்லியக்கரை-இராசிபுரம்-திருச்செங்கோடு-ஈரோடு சாலை 3.60 கி.மீ. நீளத்திற்கு மேம்பாடு செய்யக்கோரும் சாலையானது நாமக்கல் நெடுஞ்சாலைக் கோட்டப் பராமரிப்பிற்குட்பட்ட மாநில நெடுஞ்சாலையான மல்லியக்கரை-இராசிபுரம்-திருச்செங்கோடு-ஈரோடு சாலையில் கி.மீ. 42/2-45/8 வரையுள்ள சாலையாகும். இச்சாலைப் பகுதியை 2006-2007 ஆம் ஆண்டு ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் மேம்பாடு செய்ய ரூ.99.00 இலட்சம் மதிப்பில் நிர்வாக ஒப்புதல் வழங்கி ஒப்பந்தப்புள்ளிகள் கோரி மேம்பாட்டுப் பணிகளை மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

47—

## பாலம் சீரமைத்தல்

**வினா எண் 11116—திரு. கே.பி. இராமசுவாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மல்லியக்கரை-இராசிபுரம்-திருச்செங்கோடு சாலையில் மங்களபுரம் அருகில் குறுகிய பழுதடைந்துள்ள பாலத்தை அகலப்படுத்தி சீரமைக்க அரசு ஆவன செய்யுமா?

[2007 மே 9

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

மல்லியக்கரை-இராசிபுரம்-திருச்செங்கோடு சாலையில் மங்களபுரம் அருகிலுள்ள குறுகிய பழுதடைந்த பாலத்தை அகலப்படுத்தி சீரமைக்கும் திட்டம் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.

**48—**

## இருவழிச் சாலை

**வினா எண் 11913—திரு. அ. சின்னசாமி:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் ஆம்பூர் சாத்கர் சாலையைச் செப்பனிட்டு இருவழிச் சாலையாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

(அ) பேரணாம்பட்டு தொகுதியில் ஆம்பூர் சாத்கர் சாலையைச் செப்பனிட்டு இருவழிச் சாலையாக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

(ஆ) வினா எழவில்லை.

**49—**

## இருவழிச் சாலை

**வினா எண் 14948—திரு. மு. அப்பாவு:** மாண்புமிகு நெடுஞ்சாலைத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரில் இருந்து சாத்தான்குளம் வரை உள்ள மாநில சாலையை அகலப்படுத்தி இருவழிச் சாலையாக மாற்ற அரசு ஆவன செய்யுமா?



2007 மே 9]

**விடை—**

**மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், நெடுஞ்சாலைத் துறை அமைச்சர்:**

திருநெல்வேலி மாவட்டம், ராதாபுரம் வட்டம், வள்ளியூரில் இருந்து சாத்தான்குளம் வரையுள்ள சாலையானது திருநெல்வேலி (நெ) கோட்டப் பராமரிப்பில் உள்ள ஆழ்வார்திருநகரி-நாசரேத்-சாத்தான்குளம்-இட்டமொழி-வள்ளியூர் (மாநில) சாலை ஆகும். இதில் வள்ளியூர்-சாத்தான்குளம் கி.மீ. 29/895-60-260 வரையுள்ள பகுதியாகும். இதில் கி.மீ. 29/895-33/0 வரையுள்ள பகுதியினை ஒருங்கிணைந்த சாலைகள் உள்கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டத்தின்கீழ் ரூ.60.00 இலட்சம் மதிப்பில், அகலப்படுத்தும் பணிக்கு நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது. இப்பணிக்கான ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டு, இறுதியாக்கப்பட்டவுடன் பணிகளைத் தொடங்கி விரைவில் முடிப்பதற்கு, தக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். மீதமுள்ள பகுதிகளை அகலப்படுத்தும் பணியினைப் படிப்படியாக மேற்கொள்ள பரிசீலிக்கப்படும்.

**50—**

## மருத்துவர் நியமனம்

**வினா எண் 20877—திரு. பா. செந்தமிழ்ச்செல்வன்:** மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

மேல்மலையனூர் தொகுதி, அனந்தாபுரம் கால்நடை மருத்துவமனைக்கு மருத்துவரை நியமிக்க அரசு நடவடிக்கை எடுக்குமா?

**விடை—**

**மாண்புமிகு திருமதி பி. கீதா ஜீவன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்:**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்திடமிருந்து 250 நபர்களைக் கொண்ட தேர்வுப் பட்டியல் பெறப்பட்டுள்ளது. அப்பட்டியலிலுள்ள நபர்களைக் கொண்டு காலியாக உள்ள கால்நடை உதவி மருத்துவர் பணியிடங்கள் நிரப்பப்படும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வினாக்கள்-விடைகள் முடிவுற்றன.

[**குறிப்பு:** ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடம்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.]

[2007 மே 9

## 2. தகவல் கோரல்

### பீடிக் கட்டுகளின்மீது மண்டை ஓடு படம் அச்சிட வேண்டுமென்ற மத்திய அரசின் உத்தரவு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்.

**திரு. எஸ். பீட்டர் அல்போன்ஸ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, எங்கள் தென் மாவட்டங்களிலே உள்ள மக்களுக்குப் பீடி சுற்றுவது மிக ஆதாரமான தொழில். எங்களது மாவட்டத்திலும் சரி, வேலூர் மாவட்டத்திலும் சரி, 10 இலட்சம் குடும்பங்கள் பீடி சுற்றுகின்ற தொழிலை வைத்து மட்டுமே தங்கள் அன்றாட வாழ்க்கையை நடத்த வேண்டிய நிர்பந்தத்திலே இருக்கிறார்கள். தற்போது மத்திய அரசினுடைய சுகாதாரத் துறை ஜி.ஓ. எண் 97 என்கிற பெயரிலே ஒவ்வொரு பீடியின்மீதும் மண்டை ஓடுப் படத்தை அச்சிட வேண்டுமென்கிற உத்தாவினைப் பிறப்பித்திருக்கின்ற காரணத்தினால், பீடித் தயாரிப்பாளர்கள் எங்கள் மாவட்டங்களில், வருகின்ற ஒரு வாரத்திற்கு பீடிகளைத் தயாரிப்பது இல்லை என்ற முடிவினை எடுத்திருக்கிறார்கள். (குறுக்கீடு) மண்டை ஓடு படம். (சிரிப்பு) இதனால் என்ன ஆகிறது என்று சொன்னால், பீடி தயாரிக்கின்றவர்கள் ஏற்கெனவே கர்நாடகா, மேற்கு வங்க மாநிலம், இந்த இரண்டையும் ஒப்பிட்டுப் பார்க்கின்றபோது, தமிழகத்தில்தான் பீடித் தொழிலாளர்களுக்குச் சம்பளம் அதிகம். மேற்கு வங்க மாநிலத்திலே ஆயிரம் பீடிகளுக்கு 41 ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. ஆயிரம் பீடிகளுக்குத் தமிழ்நாட்டிலே 63 ரூபாயும், ஆயிரம் பீடிகளுக்குக் கர்நாடகத்திலே 60 ரூபாயும், கொடுக்கப்படுகிறது. இந்த மண்டை ஓடுப் படத்தைப் போடுகின்ற காரணத்தினால், பீடி உற்பத்தி குறைகின்றது. இதனால், தமிழ்நாட்டில் இருக்கிற தயாரிப்பு நிலையங்களை மூடிவிட்டு, கர்நாடகத்திலும், மேற்கு வங்க மாநிலத்திலும் பார்த்துக்கொள்ளலாம் என்று பீடித் தயாரிப்பாளர்கள் நினைக்கிறார்கள். ஏனென்றால், உற்பத்தி விலை அங்கே குறைவு என்று கருதுகிறார்கள். நேற்று எங்கள் மாவட்டத்தினுடைய தலைநகர் திருநெல்வேலியிலே ஏறக்குறைய ஒரு இலட்சம் பெண்கள் சாலையில் இறங்கி, எங்கள் வாழ்விற்கு என்ன ஜீவாதாரம் என்கிற கேள்வியினை எழுப்பியிருக்கிறார்கள். இந்தப் பிரச்சினையினுடைய ஆழத்தைப் புரிந்துகொண்டு, இந்த ஏழை மக்களுடைய நிலையைப் புரிந்துகொண்டு, பிரதமருக்கு ஏற்கெனவே நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களே கடிதம் எழுதியுள்ளார்கள். இருந்தாலும்கூட, நமது முதல்வர் அவர்களிடம் உங்கள்மூலமாக ஒரு வேண்டுகோளை வைக்க விரும்புகின்றேன். நாளை மறுநாள் நம்முடைய முதலமைச்சர் அவர்களை வாழ்த்துவதற்காகப் பிரதமரே நேராக இங்கே அவரைத் தேடி வருகின்றார்கள். அவ்வாறு வருகின்ற நேரத்திலே இந்தப் பிரச்சினையின் அவசியத்தையும், இதனுடைய ஆழத்தையும், இதனால் பாதிக்கப்படவிருக்கின்ற 10 இலட்சம் குடும்பங்களின் நிலைமைகளையும் எடுத்துச் சொல்லி, அந்தக் குடும்பங்களுக்கு ஒரு மாற்று வாழ்க்கை, மாற்றுத் தொழில் கிடைக்கின்ற வரை, இந்தத் தொழிலை அழித்துவிடாமல் இருக்க ஒரு ஏற்பாட்டைச் செய்ய வேண்டுமென்று 10 இலட்சம் பீடி சுற்றும் தொழிலாளர்களின் சார்பாக மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கோரிக்கை வைத்து, அமர்கின்றேன். நன்றி.



முற்பகல் 10-25

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஜி.கே. மணி, சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சுருக்கமாகச் சொல்கின்றேன். காங்கிரஸ் கட்சியினுடைய உறுப்பினர் அன்பிற்குரிய திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் பீடி சுற்றும் தொழிலாளர்களுடைய நிலைமைகளைப் பற்றியெல்லாம் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். குறிப்பாக, நமது மத்திய அரசின் மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சகத்திலிருந்து ஓர் ஆணை வந்திருக்கிறது. இதனால் மிகப் பெரிய பாதிப்பு வரும் என்றும், தொழிலாளர்களெல்லாம் போராடிக்கொண்டிருக்கின்றார்கள் என்ற நிலையையும் இங்கே எடுத்துச் சொல்லியிருக்கின்றார்கள். மத்திய சுகாதாரத் துறை அமைச்சரவர்கள் இதைப் பற்றிக் குறிப்பிட்டு ஓர் ஆணையை வெளியிட்டதற்குக் காரணம், இன்று உலகம் முழுவதும் இந்த நிலை மேலோங்கி இருக்கிறது. உலகச் சுகாதார நிறுவனம், அதாவது W.H.O. சொல்லியிருக்கின்ற அந்தக் கூற்றின் அடிப்படையிலேதான், இது உடலுக்குக் கெடுதல், இதைத் தடை செய்ய வேண்டுமென்ற நல்ல செய்தியை அவர்கள் சொன்னார்கள். இப்போது பல்வேறு சிகரெட் அட்டைப் பெட்டிகளின்மேல் "Cigarette smoking is injurious to health" என்று எழுதப்பட்டு, விற்பனை

செய்யப்படுகின்றன. மதுக் கடைகளின் முன்பாகக்கூட 'குடி, குடியைக் கெடுக்கும், குடிப்பழக்கம் உடல் நலத்தைக் கெடுக்கும்' என்ற வாசகங்கள் எழுதி வைக்கப்பட்டு, மது விற்பனை செய்யப்படுகின்றது. மின்சார வாரியத்தின்மூலம் மின் கம்பிகள் செல்கின்ற இடங்களில் "அபாயம்-danger" என்று எழுதப்பட்டு, மண்டை ஓட்டுப் படமும் போடப்பட்டிருக்கிறது. ஆக, உடல் நலத்திற்குக் கெடுதல், பாதிப்பை உண்டாக்கும் என்ற நோக்கத்திலேதான், அது கொண்டு வரப்பட்டதே தவிர, வேறல்ல என்பதை நான் இந்த நேரத்திலே சொல்லிக்கொள்கின்றேன்.

தென் மாவட்டங்களிலே உள்ள பீடித் தொழில் முதலாளிகள் இப்பொழுது பல கொடுமைகளைச் செய்துகொண்டிருப்பதாகத் தொழிற் சங்கங்களே சொல்லியிருக்கின்றன. நமது மார்க்சிஸ்ட் பொதுவுடைமைக் கட்சியின் தொழிற்சங்கமான C.I.T.U. பீடித் தொழில் முதலாளிகள் கதவடைப்புச் செய்வது, சட்டப்படி வழங்க வேண்டிய சலுகையான ஊதிய உயர்வை வழங்காமல் இருக்க, திசை திருப்பும் முயற்சி என்றுகூட அவர்கள் நமது அரசுக்கு ஓர் அறிவிப்பை வெளியிட்டிருக்கின்றார்கள். இது பற்றி அவர்கள் மேலும் சொல்லியிருப்பது, இந்தப் பிரச்சினையால் தொழில் நலிவு ஏற்படும் என்றும், இந்த நிலைமை தொடர்ந்தால் தொழிலை நடத்த முடியாது என்றும் கூறி, தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்ட சட்டப்படியான உரிமைகள் மற்றும் பணப் பயன்களை அளிக்க பீடி-trade mark-தொழில் முதலாளிகள் மறுத்து வருகின்றனர். குறிப்பாகத் தென் மாவட்ட முதலாளிகள் சுமார் 100 கோடி ரூபாய் அளவில் வழங்காமல் ஏமாற்றி வருகின்றனர் என்றும் பல்வேறு கருத்துகளை வெளியிட்டிருக்கின்றார்கள். இப்படிப்பட்ட சட்ட மீறல்களைச் செய்து வரும் பீடித் தொழில் முதலாளிகள், பீடிக் கட்டுகளில் மண்டை ஓட்டின் படத்தைப் போடுவதற்கு எதிர்ப்புத் தெரிவித்து, உற்பத்தி நிறுத்தம் செய்திருப்பது, தொழிலாளர்களுக்கு அவர்களின் உரிமைகளைக் கொடுப்பதற்குப் பதிலாக, இது திசை திருப்பும் வேலைதான் என்று தமிழ்நாடு பீடித் தொழிலாளர் சம்மேளனம் கருதுகிறது என்று, பீடித் தொழில் முதலாளிகளைப் பற்றி அங்கே கண்டித்திருக்கின்றார்கள். ஆகவே, நான்கூட இந்த நேரத்திலே சொல்ல விரும்புவது, நமது திரு. பீட்டர் அல்போன்ஸ் அவர்கள் கூறியதைப்போல, இந்தத் தொழிலிலே ஈடுபட்டு இருப்பவர்களுக்கு வேறு வேலைவாய்ப்பினைக் கொடுக்கலாம். நிறைய வாய்ப்புகள்





இருக்கின்றன. அங்கே வீட்டிலுள்ள பெண்களுக்கு ஊதுபத்தி தயாரித்தல், அப்பளம் தயாரித்தல் போன்ற பல்வேறு தொழில்கள் இருக்கின்றன. ஆகவே, இப்படிப்பட்ட மாற்றுத் தொழில்களை அந்தக் குடும்பங்களுக்குக் கொடுத்து அவர்களைக் காப்பாற்றுவதற்கு, அவர்களின் தொழிலை மேலோங்கச் செய்வதற்கு வாய்ப்புகள் இருக்கின்றன. அதை உருவாக்க வேண்டுமென்று கேட்டு, அமர்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி. எல்லோரும் இதே subject-ஐத்தானே சொல்லப் போகிறீர்கள்?

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு முக்கியமான பிரச்சினையாக இந்தப் பிரச்சினை இன்று தமிழ்நாட்டில் இருந்துகொண்டிருக்கின்றது. மாண்புமிகு முதல்வர் அவர்கள் இது குறித்துப் பிரதமர் அவர்களுக்கும், சுகாதாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும் உடனடியாகக் கடிதங்களை எழுதியிருக்கின்றார்கள். வருகின்ற ஜூன் 2 ஆம் தேதியிலிருந்து பீடிகளின்மீது மண்டை ஓட்டின் படம் ஒட்டுவதன்மூலம் ஏற்படுகின்ற பாதிப்பால், இந்தத் தொழிலை நம்பியிருக்கின்ற 10 முதல் 15 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள், குறிப்பாக, இஸ்லாமியப் பெண்கள் அதிகமாக ஈடுபட்டிருக்கின்ற ஒரு வீட்டுத் தொழிலாக இருக்கக்கூடிய இந்த பீடித் தொழில் பாதிக்கக்கூடிய ஓர் ஆபத்து ஏற்பட்டிருக்கின்றது. தொழிலாளர்களுடைய வேலைவாய்ப்பும், அவர்களுடைய நலனும் பாதுகாக்கப்பட வேண்டும், அதே நோத்தில், அந்தத் தொழிலைப் பாதுகாப்பதன்மூலம்தான் வேலைவாய்ப்பைப் பாதுகாக்க முடியும் என்ற முறையில் இதை நாம் பார்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன். அரசுகள் இதுபோன்ற உத்தரவுகளைப் போடுகின்றபோது, அதை நம்பியிருக்கின்ற இலட்சக்கணக்கான மக்களுடைய வேலைவாய்ப்பிற்கு என்ன மாற்று ஏற்பாடு என்பதைப் பற்றி எதுவுமே சொல்லாமல் இதுபோன்ற உத்தரவுகளைப் போடுவதன்மூலம், அதை நம்பி வாழ்கின்ற சாதாரண மக்கள் கடுமையான பாதிப்பிற்கு ஆளாகக்கூடிய நிலைமை ஏற்படுகிறது. ஆகவே, இதனை இதுபோன்ற படம் ஒட்டுவதனால் மட்டுமே தடுத்துவிட முடியாது. மக்கள் மத்தியில் ஏற்படுத்துகின்ற விழிப்புணர்ச்சியின்மூலமாகத்தான் இதுபோன்ற தவறான பழக்கங்களைத் தடுப்பதற்கான பணிகளைத் தொடர்ந்து மேற்கொள்ள முடியும்.

*முற்பகல் 10-30*

இப்போது மது பாட்டிலின் மீதுகூட 'குடி, குடியைக் கெடுக்கும், குடிப் பழக்கம் உடல்நலத்தைக் கெடுக்கும்' என்ற வாசகம் எழுதப்பட்டிருக்கிறது. ஆனால், இன்றைக்கு டாஸ்மாக் கடையில் நாளுக்கு நாள் வியாபாரம் அதிகமாகிக்கொண்டிருக்கக்கூடிய நிலைமையைத்தான் நாம் பார்க்கிறோம். எங்கள் திருப்பூரில் மட்டும் ஒரு நாளைக்கு ஒரு கோடி ரூபாய்க்கு மது வியாபாரமாகிறது. யாரும் அந்த பாட்டிலில் எழுதியிருப்பதைப் பார்த்ததாகவே தெரியவில்லை. ஆகவே, அதுபோன்று எழுதுவதனாலேயோ, ஒட்டுவதனாலேயோ பெரும் பயன் இருப்பதாக நான் கருதவில்லை. ஆகவே, இது குறித்து மக்கள் மத்தியில் எல்லோரும் சேர்ந்து விழிப்புணர்ச்சியை ஏற்படுத்துவதன்மூலம் படிப்படியாக இந்தத் தீய நடவடிக்கைகளைக் குறைக்க முடியும் என்று மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சி கருதுகிறது என்பதை இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. வை. சிவபுண்ணியம், சுருக்கமாகச் சொல்லுங்கள்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பீடிகளில் மண்டை ஓட்டுச் சின்னம் பொறிக்கப்பட வேண்டுமென்ற பிரச்சினை என்பது இந்திய அளவிலே மிகப் பெரிய பிரச்சினையாக மாறியிருக்கிறது. அதிலே குறிப்பாக, பீடி சுற்றுகின்ற தொழிலாளர்கள் மிகப் பெரிய அளவிலே, இலட்சக்கணக்கிலே பாதிக்கப்படுகிறார்கள். இதிலே அடிப்படையான காரணங்களில் ஒன்றாக இருப்பது என்பது, பன்னாட்டு நிறுவனங்கள் பீடிக்கு இணையாக சிகரெட்டின் விலையைக் குறைத்து, பீடித் தொழிலையே நசிந்துவிடச் செய்வதற்கான ஒரு மறைமுகமான ஏற்பாடு. இந்த மறைமுகமான ஏற்பாடுகளைச் செய்கின்ற பன்னாட்டு நிறுவனங்களுக்கு உதவிபுரிகின்ற வகையிலே இந்தச் சட்டம் வந்துவிடக் கூடாது. இதைத் திரும்பவும் தீர்க்கமாகப் பரிசீலிக்க வேண்டிய அவசியம் மத்திய அரசுக்கு இருக்கிறது. அதை உணர்ந்த காரணத்தினாலேதான் நம்முடைய மாண்புமிகு முதல்வர் டாக்டர் கலைஞர் அவர்கள் இந்தக் கோரிக்கையை முன்வைத்து உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்ற வேண்டுகோளைக் வைத்திருக்கிறார்கள். அந்த அடிப்படையிலே, இந்தச் சின்னம்



பொறிக்கப்படுவது என்பது சாதாரண ஏழையெளிய பீடி சுற்றுகின்ற தொழிலாளர்களைப் பாதிக்கும். அந்தத் தொழிலையே நம்பியிருக்கின்ற இலட்சக்கணக்கான குடும்பங்கள் பாதிக்கப்படுமென்ற சூழ்நிலை ஏற்படுமென்ற காரணத்தினாலேதான், அதைத் தடுத்து நிறுத்துவதற்கான ஒரு முயற்சியை மத்திய அரசு மேற்கொள்ள வேண்டும். அதை வலியுறுத்துவதற்கு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுக்கு நாங்களும் உறுதுணையாக இருக்கிறோம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. ஜெயக்குமார்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, கடந்த ஒரு வார காலமாகத் தமிழ்நாட்டில் பீடி சுற்றும் தொழிலாளர்கள் போராட்டம் செய்து வருகின்ற அந்த நிலை குறித்து இப்போது விவாதம் நடத்தப்படுகின்றது. மத்திய அரசு சமீபத்திலே மண்டை ஓட்டுச் சின்னம் பீடி லேபிள்களின்மேல் பொறிக்கப்பட வேண்டுமென்று வெளியிட்ட உத்தரவை எதிர்த்து ஆர்ப்பாட்டங்களெல்லாம் செய்கின்ற ஒரு நிலைமை. என்னுடைய தொகுதியிலேகூட 2 ஆயிரம், 3 ஆயிரம் குடும்பங்கள் இன்றைக்கு பீடி சுற்றுகின்ற தொழிலை நிறுத்திவிட்டுப் போராடிக்கொண்டிருக்கிற ஒரு நிலைமையில், இதிலே ஒரு mutual understanding—அவர்களை அழைத்துப் பேசி, எதையுமே திணிக்கக் கூடாத ஒரு நிலைமைதான் இருக்க வேண்டும். உதாரணத்திற்கு, 'Cigarette smoking is injurious to health' என்று, 'சிகரெட் குடிப்பது உடல் நலத்திற்குத் தீங்கு' என்று சொல்கிறோம். அதேபோன்று 'குடி குடியைக் கெடுக்கும்' என்று சொல்கின்றோம். விஞ்ஞானபூர்வமாக, சிகரெட் குடிப்பதால் இரத்த நாளங்கள் சுருங்கும். விஞ்ஞானபூர்வமாக, மதுவைக் குடித்தால் இரத்த நாளங்கள் விரியும். ஆனால், இவை இரண்டுமே ஆபத்து என்று உணர்ந்தும்கூட, சமுதாயம் ஏற்றுக்கொண்டு முழுமையான அளவிற்கு அவற்றைப் பயன்படுத்திக்கொண்டு வருகிறார்கள். எனவே, இதிலே ஒரு முழுமையான அளவிற்கு என்ன செய்தால் பீடி குடிக்காமல் இருப்பார்கள், என்ன செய்தால் தண்ணி அடிக்காமல் இருப்பார்கள், என்ன செய்தால் மதுவைக் குடிக்காமல் இருப்பார்கள் என்பதை அரசு மிகவும் serious-ஆகச் சிந்தித்து, அவர்களையெல்லாம்

[திரு. டி. ஜெயக்குமார்] [2007 மே 9

அழைத்துப் பேசி, (சிரிப்பு) இதற்கு ஒரு முடிவை ஏற்படுத்த வேண்டும். "திருடனாய்ப் பார்த்துத் திருந்தாவிட்டால் திருட்டை ஒழிக்க முடியாது" என்பதைப் போல, குடிப்பவன், சிகரெட் புகைப்பவன், அவனே திருந்தாத வரையில் இதை ஒழிக்கவே முடியாது. எனவே, வலுக்கட்டாயம் என்பதைவிட, அழைத்துப் பேசி ஒரு விழிப்புணர்வை ஏற்படுத்துகின்ற வகையிலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்தப் பிரச்சினையைத் தீர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-35*

***மாண்புமிகு கலைஞர் மு. கருணாநிதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்கள் அவர்களுடைய கட்சிகளின் சார்பாக, பீடித் தொழில் குறித்த சில கருத்துகளை இங்கே எடுத்துக் கூறி இருக்கின்றார்கள். ஒரு தொழில் நசித்துவிடக் கூடாது என்பதைவிட, பல்லாயிரக்கணக்கான, இலட்சக்கணக்கான ஏழையெளியவர்களைக் காப்பாற்றுவதற்கு இருக்கின்ற ஒரே சாதனமாக ஒரு தொழில் இருக்கும்பொழுது, அந்தத் தொழில் நசித்துவிட்டால், தொழில் நசிப்பது மாத்திரமல்ல, இலட்சக்கணக்கான ஏழையெளியவர்களுடைய வாழ்வே நசித்துவிடுகிறது என்பதை மனதில்கொண்டு இந்தப் பிரச்சினையை நாம் நோக்க வேண்டும். மண்டை ஓட்டுச் சித்திரங்களை பீடிக் கட்டுகளில் பொருத்த வேண்டும் என்ற ஆணை ஒன்று மத்தியிலேயிருந்து பிறப்பிக்கப்பட்டபோது, அதை எதிர்த்து இலட்சக்கணக்கான தொழிலாளர்கள் போராடுவார்கள், போராட்டத்திற்கான தேதியையும் குறிப்பிட்டுவிட்டார்கள் என்றெல்லாம் செய்தி வந்தபோது, அத்தகைய அசம்பாவிதம் ஒன்று நாட்டில் இந்த நேரத்திலே நடக்கக் கூடாது என்பதற்காக நான் ஒரு கடிதத்தைப் பிரதமருக்கும், மத்தியிலே இருக்கின்ற மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. அன்புமணி அவர்களுக்கும் எழுதினேன். அதிலே நான், படம் ஒட்டுகின்ற இந்த உத்தரவை நிறுத்த வேண்டும் என்று மாத்திரம் அல்ல—அவ்வுத்தரவே கூடாது என்று நான் அதிலே குறிப்பிடவில்லை. இந்த முயற்சியால் பீடி குடிப்பதைத் தடுக்கக் கூடாது என்று நான் குறிப்பிடவில்லை.



2007 மே 9] [கலைஞர் மு. கருணாநிதி]

இப்பொழுது ஏற்பட்டிருக்கின்ற இந்தச் சிக்கலைத் தவிர்ப்பதற்கு, உத்தரவை இரத்துச் செய்யக்கூட வேண்டியதில்லை, ஒத்திவையுங்கள் என்றுதான் கேட்டுக்கொண்டிருக்கிறேன். அதைச் சரியாகப் படித்திருந்தால், பாட்டாளி மக்கள் கட்சியிலேயிருந்துகூட எனக்கு எதிர்ப்பு வந்திருக்காது. நான் ஒத்திவையுங்கள் என்றுதான் கேட்டுக்கொண்டிருக்கின்றேன். நல்லவைகளே இருந்தாலும்கூட, அதைப் புரிந்துகொள்ளாத மக்கள் தவறு செய்யும்போது, அந்த மக்களுடைய உணர்வுகளை மதித்து, அவற்றை ஒத்திவைத்து, பிறகு முயற்சியை மேற்கொள்வதுதான் ஒரு நல்ல அரசினுடைய உதாரணமாக இருக்க முடியும்.

குறிப்பாக, இப்பொழுது இரண்டாவது தலைநகராம் ஒன்று ஏற்படுத்துவதற்கு, அழகு நகரம் ஒன்று சென்னையை ஒட்டி ஏற்படுத்துவதற்கு நாங்கள் முயற்சித்தபோது ஏற்பட்ட எதிர்ப்புக்குத் தலைவணங்கி நிறுத்திவிட்டோம் என்றால், சொல்லப்பட்ட விஷயம், நேர்மையான விஷயம்; எங்களுக்காக உணர்த்தப்பட்ட விஷயம் என்பதற்காகக்கூட அல்ல. இது பலருக்குப் பிடிக்கவில்லை என்றால், ஜனநாயக ரீதியிலே மெஜாரிட்டியை நாம் மதிக்க வேண்டும் என்பதற்காக மதித்து, பிறகு ஒரு காலத்திலே இதற்கு ஜனநாயகத் தீர்வு கிடைக்குமேயானால் பார்த்துக்கொள்ளலாம் என்று எப்படி எழில் நகராம், இரண்டாவது நகரத்தை நாங்கள் நிறுத்திவைத்தோமோ, அதைப்போல மத்திய அரசும் இந்தப் பீடிக் கட்டுகளிலே மண்டை ஓட்டுச் சித்திரங்கள் பொருத்துவதைத் தற்காலிக்மாக நிறுத்தி வைத்து, பிறகு சமயம் கிடைத்தால் மீண்டும் அந்த முயற்சியை மேற்கொள்ளலாம் என்ற வகையிலேதான் பிரதமருக்கும், மத்திய மக்கள் நல்வாழ்வுத் துறை அமைச்சர் திரு. அன்புமணிக்கும் கடிதம் எழுதினேன். அந்தக் கடிதத்தினுடைய எதிரொலியாக, பிரணாப் முகர்ஜியினுடைய தலைமையிலே மூவர்கொண்ட ஒரு குழு அமைக்கப்பட்டு இதுபற்றி ஆராயப்படுகிறது என்று இன்று நான் பத்திரிகையிலே பார்த்தேன். எனவே, நம்முடைய கருத்து எடுபடும் என்ற நம்பிக்கையோடு இந்தப் பிரச்சினையை இந்த அளவில் இன்றைக்கு அவையிலே நிறுத்திக்கொள்ளலாம் என்று கருதுகின்றேன்.

## 3. அறிக்கைகள் அளித்தல்

### அரசு உறுதிமொழிக் குழு

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** குழுக்களின் அறிக்கைகள் அளித்தல். அரசு உறுதிமொழிக் குழுவின் அறிக்கைகள் அளித்தல். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி, அரசு உறுதிமொழிக் குழுத் தலைவர்.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 2006-2007 ஆம் ஆண்டிற்கான அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது மற்றும் நான்காவது அறிக்கைகளைக் குழுவின் சார்பாகப் பேரவைக்கு அளிக்கிறேன்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

### (அ) தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவு. மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

முற்பகல் 10-40

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு உடலுழைப்புத் தொழிலாளர்கள் (வேலையை முறைப்படுத்துதல் மற்றும் பணி நிபந்தனைகள்) திருத்தச் சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.



ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு தொழிலாளர் நலத் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தா.மோ. அன்பரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

### (ஆ) தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

“2007 ஆம் ஆண்டு ஆண்டு தமிழ்நாடு பொது நூலகங்கள் (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்”

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 5. அறிவிப்புகள்

### (அ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

—தொடர்ச்சி

### (இ) தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு. மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

***மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரி (திருத்தச்) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே....

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன?





**திரு. செ.ம. வேலுசாமி:** அறிமுக நிலையிலேயே கருத்துக் கூற விரும்புகிறேன். (குறுக்கீடுகள்)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உங்களுடைய அறிமுக நிலை எதிர்ப்பு பதிவு செய்யப்படுகிறது. உட்காருங்கள்.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு திரு. சி.நா.மீ. உபயதுல்லா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

## 6. மானியக் கோரிக்கைகள், 2007–2008, விவாதமும் வாக்கெடுப்பும்—தொடர்ச்சி

**(அ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்**

**(ஆ) கோரிக்கை எண் 2—ஆளுநர் மற்றும் அமைச்சரவை**

**(இ) கோரிக்கை எண் 16—நிதித் துறை**

**(ஈ) கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை**

**(உ) கோரிக்கை எண் 50—ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்**

---

### (அ) கோரிக்கை எண் 1—மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 2007–2008 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது விவாதமும் வாக்கெடுப்பும். மானியக் கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.19,88,65,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 148, மாண்புமிகு உறுப்பினர் திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2711, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5367, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7952, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11367, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2675, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5098, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6166, திரு. ஆர். சின்னசாமி.

**திரு. ஆர். சின்னசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5657, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11673, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11795, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6574, திரு. தி.க. ராஜா.



**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6601, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8752, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 9397, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10474, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11074, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4599, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4877, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றம் கூடும் நாட்களை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5330, திரு. ஆர்டி. கணேசன்.

**திரு. ஆர்டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களுக்குத் தேவையான ஸ்டேஷனரி பொருட்கள் மாதந்தோறும் வழங்கப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5395, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் அலுவலகங்களில் உதவியாளர் ஒருவரை நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5467, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற வளாகத்தில், இந்திய விடுதலைப் போராட்டத்தில் ஈடுபட்ட தமிழக வீரர்கள், தியாகிகளின் உருவச் சிலைகள் அல்லது உருவப் படங்களை வைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5579, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஆந்திர மாநிலம் ஹைதராபாத்திலும், கர்நாடக மாநிலம் பெங்களூரிலும், அம்மாநில அரசுகள் M.L.A.-க்கள் காலனியை உருவாக்கி, ஒவ்வொரு M.L.A.-வுக்கும் இரண்டு ground வீட்டுமனையைக் கொடுத்து, வட்டியில்லாக் கடன் வழங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) வீடு கட்டிக் கொடுத்துள்ளதுபோல, சென்னைப் புறநகர், சோழிங்கநல்லூரில் வீட்டு வசதி வாரியம் கையகப்படுத்தி வைத்துள்ள 25 ஏக்கர் நிலத்தில், M.L.A.-க்கள் காலனியை உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" (மேசையைத் தட்டும் ஒலி) விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5578, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மஹாராஷ்டிரா, ஆந்திர மாநிலங்களில் வழங்கப்படுவதைப்போல, சம்பளம், படி, கார் வசதி, (மேசையைத் தட்டும் ஒலி) இரயில் பயணப் படி, விமானப் படி என மாதம் ரூ.65,000/- தமிழகச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, தமிழக முதல்வரின் சட்டமன்றப் பணியின் பொன் விழாவையொட்டி உடனே வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** நீங்கள் மொழிந்த வெட்டுத் தீர்மானங்கள் பதிவு செய்யப்படுகின்றன.

வெட்டுத் தீர்மானம் எண் 5612, திரு. கோ. அரி.

**திரு. கோ. அரி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத்தில் ஒரு வருடத்திற்கும்கீழ் சட்டமன்ற உறுப்பினர்களாக இருந்தவர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5968, திரு. எல். ரவிச்சந்திரன்.

**திரு. எல். ரவிச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் உதவியாளர்கள் தலைமைச் செயலகத்திற்கு அலுவலக நேரங்களில் தடையின்றிச் செல்ல அடையாள அட்டை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6146, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநிலச் சட்டமன்றப் பேரவைக்குச் சொந்தக் கட்டடம் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6237, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6388, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்கு அரசு வாகனம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6723, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சென்னை, சட்டமன்ற உறுப்பினர் விடுதியில் தரைத் தளத்தில் அதிகமான பிளாஸ்டிக் பேப்பர்களும், கழிவுப் பொருட்களும் கிடப்பதைச் சுத்தம் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7117, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் விடுதியிலிருந்து சட்டமன்றத்திற்கு வருகின்ற பேருந்துகளில், குளிர்சாதன வசதி செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7229, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் அலுவலகத்திற்குத் தட்டச்சு மற்றும் கணினி இயக்குவதற்கு உதவியாளர் நியமிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7404, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாடு சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மஹாராஷ்டிரா மாநிலத்தைப் போன்று சம்பளம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-45

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7446, திரு. எஸ். ராஜகுமார்.

**திரு. எஸ். ராஜகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மறைந்த சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்கள் ஒரு சிலருக்கு ஓய்வூதியம் கிடைக்கப்பெறாதது குறித்தும், அவர்களது வாரிசுதாரர்களுக்குக் குடும்ப ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்தும்" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7509, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொடர் வண்டிக் கட்டணமாகப் பணம் கொடுப்பதற்குப் பதிலாக, பாராளுமன்ற உறுப்பினர்களைப் போன்று சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தொடர் வண்டியில் இலவசமாகப் பயணம் செய்ய அரசு அனுமதி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7658, திரு. பெ. மோகன்.

**திரு. பெ. மோகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ரூ.10,000/- ஓய்வூதியமாக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7700, திரு. வீர. இளவரசன்.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத்தில் எதிர்க்கட்சிகளுக்கு சம வாய்ப்பு வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7740, திரு. டி. ஜெயக்குமார். (குறுக்கீடு) டி. ஜெயக்குமார், அவையிலே என்ன நடக்கிறது என்று பாருங்கள்.

**திரு. டி. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றம் நடக்கும் நாட்களில் இரவு, பகல் பாராது பணியாற்றும் அலுவலர்கள், ஊழியர்கள் அனைவருக்கும் சட்டமன்றம் நடக்கும் நாட்களில் கூடுதல் சலுகைகள் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8152, திரு. செ.ம. வேலுசாமி.

**திரு. செ.ம. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கும் கடிதங்களைக் கணினிமூலம் டைப் செய்து கொடுக்கவேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/-குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8197, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொன்மையான நமது சட்டமன்றத்தைப் புதுப்பித்து, அதிநவீன வசதிகளைச் செய்து தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8966, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற வளாகத்திற்குள் சைக்கிள் நிறுத்த நிழற்கூடம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9190, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றம் நடைபெறும் நாட்களில் சட்டமன்றத்தில் நடக்கின்ற உண்மை நிகழ்வுகளை அனைத்து மக்களும் தெரிந்துகொள்ளும்விதமாக நேரடி ஒளிபரப்புச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9295, திரு. பி. பலராமன்.

**திரு. பி. பலராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழ்நாட்டில் உள்ள சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களுக்கு ஓய்வூதியத்தை ரூ.10,000/- ஆக உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9567, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜாண் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தந்த தொகுதிகளின் தேவைக்கேற்ப வேலைகளைத் தேர்வு செய்வதற்கு (முழுத் தொகைக்கும்) வசதியாக விதிமுறைகளைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9808, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதிய சட்டமன்ற வளாகம் கட்டப்பட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10748, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11462, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதியில் குறை கேட்டுச் செல்லும்போது, அந்தந்த துறைகளைச் சார்ந்த அரசு அலுவலர், அதிகாரிகள் உடன் வந்து குறையைத் தீர்க்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11677, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் தொகுதி அலுவலகத்தில் குறைந்தது 2 உதவியாளர்கள் பணியாற்ற வேண்டியுள்ளதால், ஒரு உதவியாளருக்கு அரசு சம்பளம் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11854, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத் தொகுதி அலுவலகம் ஏற்கெனவே இருந்தும், பயன்படும் அளவுக்கு இல்லாத அலுவலகத்திற்குப் பதிலாக மாற்று அலுவலகம் அமைத்துத் தர வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.19,88,65,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஆ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,27,97,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 338, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2712, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5368, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8811, திரு. விடியல் எஸ். சேகர், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11368, டாக்டர் இஎஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2674, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5118, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5658, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11615, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11796, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6931, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8739, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10166, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10326, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10475, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11742, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4878, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் கேட்கும் வினாக்களுக்கு அமைச்சர்கள் தாமதமின்றி விடையளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5576, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்றத்தைச் சுற்றி மும்பையில் உள்ளதுபோல், சட்டமன்ற உறுப்பினர்கள் எளிதில் சந்தித்துப் பேச வசதியாக அமைச்சர்களுக்கு அறைகள் கட்ட வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6380, திரு. பெ. கண்ணன்.

**திரு. பெ. கண்ணன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் சட்டமன்ற உறுப்பினர்களால் பொது மக்கள் நலன் கருதிக் கொடுக்கப்படும் மனுக்களின்மீது அரசு மற்றும் மாவட்ட ஆட்சியர் ஆகியோரால் மேற்கொள்ளப்படும் முடிவினைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உடனே தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7485, திரு. ஆர். வைத்திலிங்கம்.

**திரு. ஆர். வைத்திலிங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களால் கொடுக்கப்படும் மனுக்கள்மீது மாவட்ட ஆட்சியர் அலுவலகம் உடன் பதில் தெரிவிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7514, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர், மாவட்ட ஆட்சித் தலைவர் மாதம் ஒரு முறை அனைத்துத் துறை அதிகாரிகளுடன் தொகுதி வளர்ச்சிப் பணி குறித்துக் கலந்துரையாடி நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8957, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தலைமைச் செயலகத்தில் அமைச்சரவைக் கட்டடங்களுக்கு அருகில் தலைமைச் செயலகத்திற்கு அலுவல் காரணமாக வருபவர்களுக்குப் போதிய கழிப்பிட வசதி, உணவு வசதி உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9041, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்களின் பரிந்துரையுடன் கொடுக்கப்படும் மனுக்கள்மீது அமைச்சர்கள் துரிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9241, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசின் சார்பில் சட்டமன்ற உறுப்பினர்களின் கடிதங்களுக்கு உடனடியாக பதில் அளிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9571, திரு. ஞா. ஜாண் ஜோசப்.

**திரு. ஞா. ஜான் ஜோசப்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர்கள் மாண்புமிகு அமைச்சர்களுக்கு வழங்கும் மனுக்கள்மீது எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களின் அலுவலகத்திலிருந்து தெரிவிப்பதுபோலத் தெரியப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10750, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11852, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சட்டமன்ற உறுப்பினர் அமைச்சரிடம் கொடுக்கின்ற மனு மீது உரிய காலத்தில் தக்க நடவடிக்கை எடுத்து, அதன் பதிலைச் சட்டமன்ற உறுப்பினருக்குக் கொடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.17,27,97,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (இ) கோரிக்கை எண் 16—நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.16,83,55,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 344, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5376, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8863, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11148, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11376, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 2680, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5108, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5670, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11614, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6881, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7881, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8742, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10151, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10318, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11732, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 3459, திரு. வை. காவேரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4481, திரு. ந. சுப்ரமணியன்.

**திரு. ந. சுப்ரமணியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "புதுக்கோட்டை மாவட்டம், குளத்தூர் தொகுதி, இலுப்பூரில் வட்டாட்சியர் அலுவலகம் செயல்படுவதால், அங்கு ஒரு சார்நிலைக் கருவூலம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4587, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 4876, திரு. என். நன்மாறன்.

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 'மதுரை, பாலரெங்காபுரம் சின்னக்கண்மாய் பகுதியில் உருவாகவுள்ள அரசு பல் மருத்துவக் கல்லூரிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5401, டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி.

**டாக்டர் (திருமதி) கே. காயத்ரி தேவி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் விதவைப் பெண்களுக்கு வழங்கி வரும் உதவித் தொகையை உயர்த்தி வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5451, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திண்டுக்கல் தொகுதியில், டி.அய்யம்பாளையம், முள்ளிப்பாடி கல்லறை, கோம்பையன்பட்டி, உலகம்பட்டி, ஆத்துப்பட்டி, கல்லாத்துப்பட்டி, ஆத்துமரத்துப்பட்டி ஆகிய கிராமங்களுக்குப் பாலம் கட்டுவதற்கு நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5597, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் நகரம், வேலூர் மாவட்டத்தின் குடிநீர்ப் பிரச்சினையை நிரந்தரமாகத் தீர்க்க ஒகேனக்கல்லில் இருந்து காவிரியாற்று நீரைக் கொண்டுவரும் திட்டத்திற்கு ஒப்புதல் அளித்து ரூ.1,500/- கோடி நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5625, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 6147, திரு. கே.எஸ். விஜயகுமார்.

**திரு. கே.எஸ். விஜயகுமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக மக்களின் தனி நபர் வருமானத்தை அதிகரிக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6370, திரு. ராம. சுப்புராம்.

**திரு. ராம. சுப்புராம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருமயம் சட்டமன்றத் தொகுதி, பொன்னமராவதியில் கருவூலம் ஒன்று துவக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7077, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மகளிர் சுய உதவிக் குழுக்களுக்குக் கடன் வழங்கக் கூடுதலாக மானியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7116, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறு சேமிப்பில் முன்னணியில் இருக்கும் ஈரோடு மாவட்டம் ஈரோட்டின் குடிநீர்த் தேவைக்காக அதிக நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

முற்பகல் 10-50

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7390, திரு. இ. மகேந்திரன்.

**திரு. இ. மகேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "மாநில நிதித் துறையின்கீழ் இயங்கும் கருவூல அலுவலகங்களில் காலியாக உள்ள பணியிடங்களை நிரப்ப வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7568, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசுப் பணியாளர்களுக்கு மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படும் ஊதியத்திற்கு இணையான ஊதியம் வழங்க ஊதியக் குழு அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8201, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோத்தாரி கமிஷனின் பரிந்துரைப்படி கல்வித் துறைக்கு மொத்த உள்நாட்டு உற்பத்தி போன்று இரு மடங்கு ஒதுக்கீடு செய்யாமல் வெறும் 3.4 சதவீதம் மட்டும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதை அதிகப்படுத்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8967, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தொடக்கக் கல்வி முதல் உயர் கல்வி வரை கல்விக்கு அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:





"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9201, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை, கலசப்பாக்கம் தொகுதியில் உள்ள ஏழை மக்களின் தனி நபர் வருமானத்தை அதிகரிக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9357, திரு. இல. வேலுசாமி.

**திரு. இல. வேலுசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒகேனக்கல் கூட்டுக் குடிநீர்த் திட்டத்திற்கு நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9807, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிறப்பு உட்கூறுத் திட்டத்தின்கீழ் நிதி ஒதுக்கப்பட்டு, திட்டங்கள் செயல்படுத்தப்படுவதைக் கண்காணிக்கக் குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10753, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10896, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை மாவட்டத்தில் உள்ள தாட்கோவிற்குக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11552, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கோவை மாவட்டம், பேரூர் தொகுதிக்குட்பட்ட பள்ளிகளின் மேம்பாட்டிற்காகக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11828, திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "பொது விநியோகம் முறையாக நடைபெறக் கூடுதல் நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:



"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.464,60,11,000/-, மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.16,83,55,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

## (ஈ) கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,63,76,000/- ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 323, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5361, திரு. க. சிவராஜ்.

**திரு. க. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7302, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8773, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11161, திரு. து. அமரமூர்த்தி.

**திரு. து. அமரமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11394, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 3504, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 7048, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7932, திரு. டி. மூர்த்தி.

**திரு. டி. மூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8730, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11240, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5231, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5253, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11616, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11798, திரு. கே. உலகநாதன்.



**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11863, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4595, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5650, திரு. கோ. அரி, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5694, திரு. எஸ். ஜெயபால்.

**திரு. எஸ். ஜெயபால்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக முதலமைச்சர் கலைஞர் அவர்களின் 50 ஆண்டு காலச் சட்டமன்ற உறுப்பினர் பொன் விழா சிறப்பு நினைவுத் திட்டமாக, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களுக்குச் சிறப்பாகப் பணியாற்றுவதற்கு ஊக்கப்படுத்தும் வகையில், அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கார் வசதியும், டீசல் செலவும் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6134, திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூரில் சர்வதேசத் தரத்தில் விமான நிலையம் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7602, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் திட்டப் பணிகள் எவ்வாறு நடைபெறுகின்றன என்பதைக் கண்காணிக்க திட்ட அலுவலர், சட்டமன்ற உறுப்பினர், அதிகாரிகள் அடங்கிய குழு ஒன்று அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8238, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திட்டம் சார்ந்த செலவினங்களுக்கு ஒதுக்கீட்டினை உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9038, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிராமப்புற வளர்ச்சித் திட்டங்களுக்கும், தொழில் மற்றும் திறன் மேம்பாட்டுப் பயிற்சித் திட்டத்திற்கும் அதிக அளவில் நிதி ஒதுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9180, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "திருவண்ணாமலை மாவட்டம், கலசப்பாக்கம் தொகுதியில் மகளிர் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதன் அவசியத்தை உணர்ந்து கைவினைப் பொருட்கள் உற்பத்தித் தொழிற்சாலை தொடங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10602, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதி, சோலையார்பேட்டை ஒன்றியம், ஏலகிரி மலைப் பகுதி மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்கு ஏற்படும் காலதாமதத்தைத் தவிர்க்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10768, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10810, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சிவகங்கை, இராமநாதபுரம் மாவட்டங்களில் நலிந்து வரும் வெற்றிலை உற்பத்தி செய்யும் விவசாயிகளுக்கு உதவப் புதிய திட்டம் உருவாக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.15,63,76,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

### (உ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50- ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,184,19,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்."

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானங்கள் முன்மொழிதல். வெட்டுத் தீர்மானம் எண் 346, திரு. கோவை தங்கம்.

**திரு. கோவை தங்கம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5352, திரு. சு. சிவராஜ்.

**திரு. சு. சிவராஜ்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7245, திரு. என்.ஆர். ரங்கராஜன்.

**திரு. என்.ஆர். ரங்கராஜன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8820, திரு. விடியல் எஸ். சேகர்.

**திரு. விடியல் எஸ். சேகர்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11403, டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்.

**டாக்டர் இ.எஸ்.எஸ். இராமன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5262, திரு. கு. பாண்டுரங்கன்.

**திரு. கு. பாண்டுரங்கன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6482, திரு. சி. சண்முகவேலு.

**திரு. சி. சண்முகவேலு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6921, திருமதி பெ. கமலாம்பாள்.

**திருமதி பெ. கமலாம்பாள்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8727, திரு. தி. வேல்முருகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10099, திரு. பா. செந்தமிழ்ச்செல்வன், இருக்கையில் இல்லை.



வெட்டுத் தீர்மானம் எண் 11232, திரு. கே.எல். இளவழகன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 11799, திரு. கே. உலகநாதன்.

**திரு. கே. உலகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11883, திரு. வை. சிவபுண்ணியம்.

**திரு. வை. சிவபுண்ணியம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கொள்கை பற்றி" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 1576, திரு. ஆர்டி. கணேசன்.

**திரு. ஆர்டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர், விதவை, கணவரால் கைவிடப்பட்ட பெண்கள் ஓய்வூதியத் தொகை வேண்டி விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக விசாரணை செய்து, ஓய்வூதியம் கிடைக்கச் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 4583, திருமதி மு. சந்திரா, இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 5288, திரு. என். நன்மாறன்.

[2007 மே 9

**திரு. என். நன்மாறன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியம்பெறும் அரசு ஊழியர்கள் மற்றும் ஊழியர்களின் சங்கத் தலைவர்களை அழைத்துப் பேசி, அவர்களின் குறைகளுக்கு நிவாரணம் காண வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 5565, செல்வி கே. பாலபாரதி.

**செல்வி கே. பாலபாரதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்ட வீரர்கள், தமிழ் மொழிப் போர்த் தியாகிகளுக்கான ஓய்வூதியம் வழங்குவதற்கான நிபந்தனைகளைத் தளர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6041, திரு. க. இராஜேந்திரன்.

**திரு. க. இராஜேந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஜெயங்கொண்டம் தொகுதியில் உள்ள அரசுப் பணியாளர்களுக்குக் கிடைக்க வேண்டிய ஓய்வூதியம் முழுவதும் கிடைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 6117, திரு. சி. ஞானசேகரன்.



2007 மே 9]

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்திய அரசு வழங்குவதுபோல் மாதம் ரூ.10,000/- பென்ஷன் வழங்கவும் மத்திய அரசின் பென்ஷன்பெறும் தியாகிகளுக்கு மாதம் ரூ.500/- மட்டுமே தருவதை ரூ.2,000/- ஆக உயர்த்தி வழங்கவும் வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7115, திரு. ஆர்.எம். பழனிசாமி.

**திரு. ஆர்.எம். பழனிசாமி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அமைப்புசாராத் தொழிலாளர்கள் மற்றும் விவசாயத் தொழிலாளர்களுக்கு நிரந்தரமாக ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7636, திரு. அருள் அன்பரசு.

**திரு. அருள் அன்பரசு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டத்தில் உள்ள சோளிங்கர் சட்டமன்றத் தொகுதியில் முறையாக ஓய்வூதியங்கள் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 7939, திரு. ப. டில்லி பாபு.

**திரு. ப. டில்லி பாபு:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழக அரசின் ஊழியர்களுக்கு 30 ஆண்டு காலம் பணிபுரிந்தால் மட்டும் ஓய்வூதியம் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8222, டாக்டர் க. நெடுஞ்செழியன்.

**டாக்டர் க. நெடுஞ்செழியன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வுபெறும் அலுவலர்கள் ஒவ்வொருவருக்கும் ஓய்வூதியத்தினையும், ஓய்வுக் காலச் சலுகைகளையும் விரைந்து வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 8954, திரு. கே.வீ. ராமநாதன்.

**திரு. கே.வீ. ராமநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கூட்டுறவு வங்கியில் பணிபுரியும் ஊழியர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கும் ஓய்வூதியத்தைப்போல் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9031, திரு. சு.ப. வேலுமணி.

**திரு. சு.ப. வேலுமணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசிடம் ஓய்வூதியம் பெறுபவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை



அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யும்போது, அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9160, திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி.

**திரு. அக்ரி எஸ்.எஸ். கிருஷ்ணமூர்த்தி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "அரசிடம் ஓய்வூதியம் பெறுபவர்களின் குடும்பத்தைச் சேர்ந்தவர்களை அரசுப் பணிகளுக்குத் தேர்வு செய்யும்போது, அவர்களுக்கு முன்னுரிமை வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9806, முனைவர் கு. ஜெயக்குமார்.

**முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு ஓய்வூதியத் தொகையை மொழிப் போராட்ட வீரர்களுக்கு நிகராக உயர்த்த வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 9882, திரு. த.அ. மேகநாதன்.

**திரு. த.அ. மேகநாதன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "கிருஷ்ணகிரி மாவட்டம், காவேரிப்பட்டினம் தொகுதியில் ஓய்வூதியம் வேண்டி விண்ணப்பித்த சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு

ஓய்வூதியம் உடனடியாக வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10025, திரு. மா. தண்டபாணி.

**திரு. மா. தண்டபாணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "ஓய்வூதியங்கள், ஓய்வூதியதாரர்களுக்குக் கிடைப்பதில் ஏற்படுகின்ற சிரமங்களைப் போக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10456, திரு. கி. ஆறுமுகம்.

**திரு. கி. ஆறுமுகம்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "18 வயதிற்குமேல் பிள்ளைகள் இருந்தாலும் முதியோர் உதவித் தொகைக்காக விண்ணப்பித்தவர்களுக்கு உடனடியாக உதவித் தொகை கிடைக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10690, திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "வேலூர் மாவட்டம், திருப்பத்தூர் தொகுதியில் முதியோர் பென்ஷன், விதவை பென்ஷன் வாங்கி வந்தவர்களுக்குக் காரணமின்றி பென்ஷன் கேன்சல் செய்யப்பட்டுள்ளதைப் பற்றி மறு விசாரணை நடத்தி,



உடனே ஒரு மாத காலத்தில் பென்ஷன் வழங்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 10757, திரு. கோ. எதிரொலி மணியன், இருக்கையில் இல்லை.

வெட்டுத் தீர்மானம் எண் 10773, திரு. ம. குணசேகரன்.

**திரு. ம. குணசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "தமிழகத்தில் உள்ள அனைத்து ஓய்வூதியதாரர்களுக்கும் அரசுப் போக்குவாத்துக் கழகப் பேருந்துகளில் பயணம் செய்யப் பாதிக் கட்டணம் மட்டும் வசூல் செய்ய வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** வெட்டுத் தீர்மானம் எண் 11619, திருமதி பி. பத்மாவதி.

**திருமதி பி. பத்மாவதி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, "முதியோர்களுக்கு அரசுப் பாதுகாப்பு இல்லங்கள் அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து" விவாதிக்க, நான் கீழ்க்கண்ட வெட்டுத் தீர்மானத்தை மொழிகிறேன்:

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ஒதுக்கப்பெறுகின்ற ரூ.6,184,19,15,000/-ல் ரூ.100/- குறைக்க வேண்டும்."

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கைகளும், வெட்டுத் தீர்மானங்களும் பேரவைமுன் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் முன்னுரையாக ஏதாவது கூற விரும்பினால், கூறலாம். மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

*முற்பகல் 10-55* [2007 மே 9

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகியன குறித்த கொள்கை விளக்கக் குறிப்புகள் தமிழிலும், ஆங்கிலத்திலும் அச்சடிக்கப்பட்டு, மாமன்ற உறுப்பினர்களுக்கு, அவர்கள் படிப்பதற்கு வசதியாக ஏற்கெனவே கொடுக்கப்பட்டுள்ளன. அவற்றில் தமிழிலே கொடுக்கப்பட்டிருக்கிற கொள்கை விளக்கக் குறிப்புகளை@ நான் இந்த மாமன்றத்திலே படித்ததாக ஏற்று, சட்டமன்றப் பதிவேட்டில் பதிவு செய்துகொள்ள வேண்டுமென்று பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். மாண்புமிகு உறுப்பினர்கள் தங்கள் அரிய கருத்துகளைத் தெரிவித்த பின்னர், என்னுடைய பதிலுரையில் அவற்றுக்கு விளக்கம் அளிக்கிறேன் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்று 5 மானியக் கோரிக்கைகள் பேரவையில் விவாதத்திற்கு வைக்கப்பட்டுள்ளன. மானியக் கோரிக்கைகள் விவாதத்திற்கு ஒதுக்கப்பட்ட நாட்களில் இன்று கடைசி நாள். எனவே, இன்று பிற்பகல் 1-30 மணிக்குள் விவாதங்கள் அனைத்தும் நிறைவு செய்யப்பட வேண்டும். அதாவது, கில்லட்டின் நேரம் பிற்பகல் 1-30 மணி. எனவே, உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் 7 நிமிடங்களுக்குள் தங்களது உரையை முடித்துக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறேன். முதலில் மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன், உங்களுக்கு 7 நிமிடங்கள்.

***திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சென்ற 2006-2007 ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கை சம்பந்தமான எரிசக்தித் துறை மற்றும் சிறு தொழில்கள் மானியக் கோரிக்கைகளில் முதலில் தொடங்கிப் பேசுவதற்கும், இந்த ஆண்டு மானியக் கோரிக்கைகளின் நிறைவு நாளான இன்று மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் மற்றும் ஆளுநர் மற்றும் அமைச்சரவை ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என் கருத்துகளைப் பேசுவதற்கும் வாய்ப்பளித்த, தமிழக மக்களின் உள்ளத்தில் குடிகொண்டிருக்கும் அறிவியல் தமிழ்கண்ட அன்னையின் பாதங்களுக்கு நன்றியினைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

@ 341 முதல் 411 வரையிலான பக்கங்களில் இணைப்புகள் I, II மற்றும் III-ஆக அச்சிடப்பட்டுள்ளன.



(மேசையைத் தட்டும் ஒலி) எங்கள் சட்டமன்றக் கட்சியின் துணைத் தலைவர் அவர்களுக்கும், கொறடா அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, சட்டப் பேரவைத் தலைவர் அவர்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, என் உரையைத் தொடங்குகின்றேன்.

சட்டமன்றம் என்பது ஜனநாயக அமைப்பில் எவ்வளவு முக்கியத்துவம் வாய்ந்தது என்பதை நாம் அனைவரும் உணர்கிறோம். ஜனநாயக நாட்டில் தலைப் பகுதியாகவும், முதுகெலும்பாகவும் செயலாற்றி வருவது சட்டமன்றம். மக்களால், மக்களுக்காகத் தேவைப்படும் திட்டங்களைத் தீட்டுவது, சட்ட திட்டங்களை வகுப்பது, தீர்மானங்களை நிறைவேற்றுவது சட்டமன்றத்தின் கடமைகளாக இருக்கின்றன. மக்களாட்சி அமைப்பிலே மூன்று தூண்களில் ஒன்றாகக் கருதப்படுவது சட்டமன்றம். சட்டமன்றம் நிறைவேற்றிய சட்டங்களையும், திட்டங்களையும், தீர்மானங்களையும் நடைமுறைப்படுத்துவது நிர்வாகம் என்கிற இரண்டாவது தூண். சட்டங்களுக்கு விளக்கம் மற்றும் விதிகளைத் தருவது நீதித் துறை என்ற மூன்றாவது தூணாகும். நிர்வாகமும், நீதித் துறையும் பணியாற்றுவதற்கு அடிப்படை சட்டமன்றப் பேரவைதான். மக்களாட்சி முறையில் ஆளுங்கட்சியும் இருக்க வேண்டும், எதிர்க்கட்சியும் இருக்க வேண்டும். அந்த வகையில்தான் "the Ruling Party has its way; the Opposition Party has its say" என்று சொல்வார்கள். செய்ய வேண்டியவை என்ன என்பதை எடுத்துச் சொல்ல வேண்டிய பொறுப்பு எதிர்க்கட்சிக்கு இருக்கிறது. அதனைத் தெரிந்துகொண்டு செய்ய வேண்டிய பொறுப்பு ஆளுங்கட்சிக்கு இருக்கிறது. ஆகவே, சட்டமன்றத்திலும் சரி, தொகுதி வளர்ச்சிப் பணிகளிலும் சரி ஆளுங்கட்சிக்கும், தோழமைக் கட்சிகளுக்கும் நடைபெறுகின்ற பணிகளில் நான்கில் ஒரு பங்குகூட எதிர்க்கட்சிகளான அ.இ.அ.தி.மு.க., ம.தி.மு.க. சட்டமன்ற உறுப்பினர்கள் இடம்பெறுகின்ற சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெறாமல் இருப்பது, (மேசையைத் தட்டும் ஒலி) தமிழகத்தில் இந்தத் தொகுதிகள் இல்லாததுபோல் இருக்கின்றன.

நமது மாநிலத்தினுடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களாகத் திகழ வேண்டும் என்பதற்காகவும், முதன்மைபெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பதற்காகவும், இன்றைய காலச் சூழ்நிலைக்கு ஏற்ப அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் கடந்த 21-5-2003 முதல் 15 நாட்கள் கணினிப் பயிற்சி வழங்கி மாண்புமிகு அம்மா அவர்கள் சட்டமன்றப் பேரவை வரலாற்றுச் சாதனையில் மணிமகுடமாகத் திகழ்ந்தார்கள்.

சட்டமன்றத்திற்குப் பல விதிகள் உண்டு. அந்த விதிகளில் முக்கியமானது எது, தமிழக மக்களுடைய தலைவிதி, வறுமை, இல்லாமை, கல்லாமை, அப்படிப்பட்ட எந்தத் தலைவிதியையும் மாற்றிய சட்டமன்ற விதி எது தெரியுமா? எங்களுடைய இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில் அம்மா அவர்களால் சட்டமன்றத்தில் அளிக்கப்பட்ட 110-வது விதியின்கீழ் தெரிவிக்கப்பட்ட அறிவிப்புகள்தான். 110-வது விதியின்கீழ் அறிவிப்பு அவையிலே வருகிறது என்றாலே, மக்கள் எல்லோரும் நல்லது நடக்கப் போகிறது, ஏழைகளுக்கு நல்லது நடக்கப் போகிறது என்ற நிலையினை அனைத்து மக்கள் மத்தியிலும் உருவாக்கக்கூடிய நிலையில் மாண்புமிகு இதய தெய்வம் அம்மா அவர்கள் 2001 முதல் 2006 வரை 110-வது விதியின்கீழ் 52 அறிக்கைகளை அளித்து, தமிழக மக்களின் வாழ்வில் ஒளியேற்றினார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

தமிழக மக்களின் வாழ்வில் மகத்தான மாறுதலை எதிர்நோக்கி, நீண்ட காலத் தொலைநோக்குப் பார்வையோடு, அம்மா அவர்கள் 110-வது விதியின்கீழ் அறிக்கைகள் அளித்திருக்கின்றார்கள். இந்தச் சட்டமன்றத்தில் அம்மா அவர்கள் அரிசியையும், நெல்லையும் மாநிலத்திற்கு வெளியே லெவி செலுத்தாமல் கொண்டு செல்ல அனுமதித்தார்கள். சென்னை மாநகரில் வீராணம் குடிநீர்த் திட்டத்தை, தாகத்தைத் தீர்ப்பதற்காக அறிவித்தார்கள். திருக்கோயில்களில் அன்னதானத் திட்டம் கொண்டு வந்தது; குழந்தையின் பெயருக்கு முன்னால் தாய் அல்லது தந்தை பெயரின் முதல் எழுத்தை இனிஷியலாகப் பயன்படுத்தும் அறிக்கை; இராணி மேரி கல்லூரி முதல் மாடி வராண்டா இடிந்து விழுந்ததில் ஊனமடைந்த மாணவி ஷீலாவுக்கு 9 இலட்சம் ரூபாய் உதவி; மாணவர்களுக்கு இலவசப் பாடப் புத்தகம் வழங்குதல்; நோக்கியா நிறுவனம் ஸ்ரீபெரும்புதூரில் தொழிற்சாலை நிறுவுதல் போன்ற மாண்புமிகு அம்மா அவர்களின் மகத்தான அறிவிப்புகள் · தமிழக மக்களின் வறுமையைப் போக்கி மாறுதலை ஏற்படுத்தியிருக்கின்றன.

*முற்பகல் 11-00*

அவையில் குரலெழுப்பியவுடன், தேனியைச் சேர்ந்த, காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த திருமதி எ. கிருஷ்ணவேணி, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் அவர்களுக்குக் கருணைத் தொகை ரூபாய் 5 இலட்சமும், வாழ்நாள் முழுவதும் குடியிருக்க வாடகையில்லாத அரசுக் குடியிருப்பும் வழங்கியதும் மாண்புமிகு அம்மா அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி)



பல உறுப்பினர்கள் அவர்கள் சார்ந்திருக்கின்ற இயக்கத்தின் முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் மிகவும் சிரமத்தில் இருப்பதாகவும், அரசு வேலை கோரியும் மாமன்றத்தில் பேசி வருகின்றார்கள். பொதுவாக முன்னாள் அமைச்சர்களோ, சட்டமன்ற உறுப்பினர்களோ, அனைத்து இயக்கங்களிலும் நூற்றுக்கணக்கானவர்கள் இன்றையதினம் வறுமைக் கோட்டிற்குக் கீழே வசித்து வருகின்றார்கள். அவர்களைக் கணக்கெடுத்து, வறுமையில் வசிக்கின்ற அனைத்து முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் அல்லது அவர்கள் குடும்பத்தினருக்கும் ஏதாவது ஒரு வழியில் உதவிட அரசு நடவடிக்கை எடுக்க வேண்டுமாய்க் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்றம் எவ்வளவு சிறப்பாக, பொறுப்பாகப் பணியாற்றுகிறதோ, அதைப் பொறுத்துத்தான் சட்டமன்ற உறுப்பினர்களின் சிறப்பும் அமைந்திருக்கிறது என்பதை உணர்ந்தவர் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்கள். எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய அந்தஸ்து மாவட்டத்தில் தரப்படுவதில்லை. எதிர்க்கட்சி சட்டமன்ற உறுப்பினர்கள் சரிவர நடத்தப்படுவதில்லை. எதிர்க்கட்சியைச் சேர்ந்த சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உரிய முறையில் அவர்களுடைய உரிமை பாதுகாக்கப்பட வேண்டும் என்பதனைப் பேரவைக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

இந்தியாவிலேயே சட்டமன்றப் பேரவை என்றால் நினைவுக்கு வருவது விதான் சௌதா, பெங்களூர் ஆகும். அதுபோல, தமிழகச் சட்டமன்றத்தையும் வேறு பரந்த நிலப்பரப்புகொண்ட இடத்திற்கு மாற்றம் செய்திட வேண்டி மாண்புமிகு அம்மா அவர்கள் ஆட்சிக் காலத்தில் திட்டங்கள் தீட்டப்பட்டு, சட்டமன்றம் மற்றும் தலைமைச் செயலகம் எப்படி இருக்க வேண்டுமென்ற வடிவமைப்புக்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது. அதன்மீது இந்த அரசு தொடர் நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

பேரறிஞர் அண்ணா அவர்கள் ஒரு கருத்தினைக் கூறியுள்ளார்கள். "அரசாங்கம் ஒரு வீடு, ஆளுங்கட்சி அதை வாடகைக்கு எடுத்துக்கொள்கிறது; மக்களின் நல்லெண்ணம்தான் வாடகைப் பணம், அதன் கணக்கு 5 ஆண்டுகளுக்கு ஒரு முறை பார்க்கப்படுகிறது; மக்களைப் பார்த்து ஆளுகிறவர்கள் அஞ்ச வேண்டும்; ஆளுகிறவர்களைப் பார்த்து மக்கள் எக்காரணத்தைக் கொண்டும் அஞ்சக் கூடாது" என்று அண்ணா அவர்கள் கூறியுள்ளார்கள். அந்த நிலை பல சம்பவங்களில் தற்போது தமிழகத்தில் உருவாகியுள்ளது என்பதனைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

கடந்த 2003 ஆம் ஆண்டு அம்மா அவர்களின் ஆட்சிக் காலத்தில், மாவட்ட வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு மூப்பின் அடிப்படையில் அரசுப் பணியாளர் வேலை நியமன வழிமுறைகளைப் பின்பற்றி, 17,500 தற்காலிக இளநிலை உதவியாளர்கள் நியமிக்கப்பட்டனர். அவர்கள் தொகுப்பூதியத்தில் ரூபாய் 4,000 பெற்று வருகின்றனர். அதைப்போல, இன்று அரசினை நடத்துவதற்கு உதவியாக உள்ள டாஸ்மாக்கில் பணியாற்றுகின்ற சுமார் 32,000 ஊழியர்கள் தொகுப்பூதியத்திலிருந்து கால முறை ஊதியத்திற்குத் தங்களை மாற்றக் கோரியுள்ளார்கள். தற்போது ஆண்டுகொண்டிருக்கின்ற அரசு தொகுப்பூதியத்தில் பணிபுரிபவர்களைக் காலமுறை ஊதியத்தில் மாற்றுவதாகக் கூறியிருக்கின்றது. அதிலும் குறிப்பாக, சென்ற ஆண்டு, 2006-07 நிதிநிலை அறிக்கையில் பணியாளர் நலன் மற்றும் நிருவாகச் சீர்திருத்தத் துறை மானியக் கோரிக்கைக்கான பதிலுரையில், அதாவது, ஆகஸ்ட் 25 ஆம் தேதி இந்த அவையில் நிதி அமைச்சர் அவர்கள் அளித்த பதிலுரையில், இளநிலை உதவியாளர்கள் 17,500 பேரை, வயது, கல்வித் தகுதி, பணிபுரிந்த ஆண்டுகள், இட ஒதுக்கீடு போன்றவற்றைக் கணக்கிட்டும், புதிய பணியிடங்களைத் தோற்றுவித்தும் 3 மாதம் முதல் 6 மாதத்திற்குள் பணியமர்த்துவதற்காக (மணியடிக்கப்பெற்றது) ஆணைகள் வழங்கப்படும் என்று கூறியிருந்தார்கள். நிதி அமைச்சர் அவர்கள் கூறிய 3 முதல் 6 மாதங்கள் உருண்டோடி, 8 மாதங்கள் ஆகின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** 7 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. ஆர்.டி. கணேசன்:** இதுவரை தற்காலிக இளநிலை உதவியாளர்களுக்குப் பணி நியமனம் கிடைக்கவில்லை என்பதனைத் தெரியப்படுத்திக்கொள்கின்றேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடித்துவிட்டீர்களா?

**திரு. ஆர்.டி. கணேசன்:** தொகுதிப் பிரச்சினை.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அதெல்லாம் அப்புறம். அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

**திரு. சி. ஞானசேகரன்:** தலைவர் அவர்களே, . . . (குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** இன்றைக்கு கில்லட்டின் நேரம். அதனாலே கொடுக்கப்பட்ட நேரத்திற்குள் உரையை முடித்தாக வேண்டும். (குறுக்கீடுகள்) சரி, சொல்லுங்கள், கணேசன்.



**திரு. ஆர்.டி. கணேசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தேனி மாவட்டத்தில் தேனி நகரானது மிகவும் முக்கியமான நகரமாகும். அங்கே பேருந்து நிலையம் வேண்டிப் பல முறை விண்ணப்பம் செய்தும், இதுவரை வரவில்லை. அரசுக்குச் சொந்தமான, வனத் துறைக்குச் சொந்தமான இரண்டு இடங்கள் அங்கே இருக்கின்றன. கடந்த ஆண்டு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்கள்கூட அங்கே வந்து பேருந்து நிலையம் அமைக்கின்ற பகுதியைப் பார்வையிட்டு வந்திருக்கின்றார்கள். மிகவும் நெரிசலாக இருக்கின்ற அந்தப் பகுதியில் பேருந்து நிலையத்தை விரைந்து அமைத்திடக் கேட்டுக்கொள்கிறேன்.

இன்னொரு முக்கியமான கருத்தினை உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களின் கவனத்திற்குக் கொண்டு வருகின்றேன். தேனி நகராட்சியைப் பொறுத்தவரையில் நகர்மன்றத் தலைவர் செயல்பாடு சரியற்றிருக்கின்ற காரணத்தினால், அங்கே மொத்தம் 33 கவுன்சிலர்களில் 19 பேர் நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டு வந்து மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடத்தில் கொடுத்திருக்கின்றார்கள். அதைப்போல, R.D.M.A., அவர்களிடம் கொடுக்கச் சென்றபோது, எங்களுக்கு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களிடமிருந்து . . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன். (குறுக்கீடு) முதலிலேயே வயலேஷனா? (குறுக்கீடு) No. முடியாது. மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. ஞானசேகரன்.

முற்பகல் 11-05

**திரு. சி. ஞானசேகரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம் குறித்துப் பேசுகிற ஒரு நல்வாய்ப்பினை எனக்கு நல்கிய தங்களுக்கு என்னுடைய நெஞ்சார்ந்த நன்றியினைக் காணிக்கையாக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். இந்த மாநில சட்டமன்றத்தில் இதுவரை தமிழகத்திலே 12 முறை தேர்தலிலே நின்று ஒரு முறைகூடத் தோல்வியைத் தழுவாமல் வெற்றி நாயகனாகத் தொடர்ந்து (மேசையை தட்டும் ஒலி) வெற்றிபெற்று தமிழகத்தைச் சார்ந்திருக்கிற யாருமே அந்தப் பெருமையை அடைய முடியாது என்கிற வகையில் ஐம்பது ஆண்டு காலம் இந்தச் சட்டமன்றத்தில் சட்டமன்ற உறுப்பினராகப் பணியாற்றி (மேசையைத் தட்டும் ஒலி) இன்று மகத்தான சாதனை புரிந்து, ஐந்தாவது முறையாக

முதலமைச்சராக அரியணை ஏறியிருக்கிற மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு என்னுடைய வாழ்த்துக்களைச் சொல்ல வயதில்லை, அவரை நான் இந்த இடத்திலே வணங்கக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

25-1-1959 ஆம் தேதி Bhishnuram Medhi கவர்னராக இருந்தபோது, கர்ம வீரர் காமராஜர் தலைமையிலே நம்முடைய கடற்கரையிலே உழைப்பாளர் சிலை திறப்பு விழா நடந்திருக்கிறது. அது குறித்து எங்களுடைய மக்கள் தலைவர் மூப்பனார் அவர்கள் குறிப்பிடுவார்கள். அங்கே உழைப்பாளர்கள் பல பேர் சேர்ந்திருப்பதுபோலச் சிலை இருக்கிறது. ஆனால், உழைப்பிற்கு ஒரு எடுத்துக்காட்டு யார் என்று சொன்னால், அந்தச் சிலைக்குப் பதிலாக நம்முடைய கலைஞரை அந்த இடத்தில் வைத்தால்தான் (மேசையைத் தட்டும் ஒலி) அது மிகப் பொருத்தமாக இருக்கும் என்று நம்முடைய தலைவர் மூப்பனார் அவர்கள் சொல்வார்கள். அதனால்தான் அங்கே, உழைப்பின் வெற்றி- -Triumph of Labour என்று பொறிக்கப்பட்டிருக்கும். அந்த அளவிற்கு இன்று உழைப்பின் சின்னமாக விளங்கிக்கொண்டிருக்கின்ற மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய காலத்தில் பல சாதனைகளை நாம் இங்கே படைத்துக்கொண்டிருக்கிறோம்.

இங்கே அண்டை மாநிலங்களெல்லாம் முன்னணியில் இருக்கக் கூடாது, தமிழகம்தான் எதிலுமே முன்னிலையில் இருக்க வேண்டுமென்கிற நிலையில் இன்று பயணத்தை மேற்கொண்டிருக்கிற, மிக வேகமாக வளர்ந்துகொண்டிருக்கிற நம்முடைய தமிழ்ச் சமுதாயத்தில், நம்முடைய தமிழக முதல்வரவர்கள் முதல்வராக இருக்கிறபோது ஒரு திட்டத்தை எங்களால் பெற முடியவில்லை என்று சொன்னால், நாங்கள் வேறு எப்போது பெறப் போகிறோம்? ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுகொள்வதெல்லாம், நீங்கள் பொன் விழாக் காணுகின்ற இந்தக் காலத்தில், சட்டமன்றத்தினுடைய பொன் விழாவை மிகச் சிறப்பாக நடத்திக்கொண்டிருக்கிற இந்த நேரத்தில், 15 ஆண்டுகளுக்கு முன்னாலே கர்நாடக மாநிலத்திலே, பெங்களூரில் நான்கு கிரவுண்டு நிலம் எம்.எல்.ஏ.-க்களுக்கு கொடுத்திருக்கிறார்கள். (சிரிப்பு) வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். அதேபோல், சந்திரபாபு நாயுடு அவர்கள் முதல்வராக இருந்தபோது ஆந்திர மாநிலத்தில், ஹைதராபாத்திலே இரண்டு கிரவுண்டு நிலம் ஒவ்வொரு எம்.எல்.ஏ.-வுக்கும் கொடுத்து, மேலும் பத்து இலட்சம் ரூபாய் வட்டியில்லாத கடனாகவும் கொடுத்து வீடு கட்டிக் கொடுத்திருக்கிறார்கள். ஆகவே, நான் பணிவன்போடு கேட்டுக்கொள்வது, இங்கே சில



பத்திரிகைகள் வாயிலாகச் சில பேர் சில விமர்சனங்களைச் செய்துகொண்டிருக்கிறார்கள், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஏதோ சலுகைகள் அதிகமாக வழங்கப்படுவதுபோல. இங்கே நாங்கள் சலுகைகள் என்ற பெயரிலே கேட்கவில்லை. வீடு இல்லாதவர்களுக்கு வீடு கொடுக்க வேண்டும். அதேபோல, நிலம் இல்லாதவர்களுக்கு நிலம் கொடுக்க வேண்டும் என்கிற உன்னதத் திட்டத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கிற உங்கள் காலக்கட்டத்தில்--வீட்டு வசதி வாரியம் எதற்காக உருவாக்கப்பட்டது--நாங்கள் பணத்தைக் கொடுத்து விடுகிறோம், அந்தப் பணத்தைப் பெற்றுக்கொண்டு நீங்கள் வீட்டுமனைகளைக் கொடுங்கள் என்று நாங்கள் கேட்கிறோம். எம்.எல்.ஏ. என்கிற முறையிலே இனாமாக நாங்கள் இதைக் கேட்கவில்லை. ஆகவே, இதை ஒரு சிறப்புத் திட்டமாக எடுத்து மாண்புமிகு முதல்வர் அவர்கள் சலுகை அடிப்படையிலே, அரசு நிர்ணயிக்கக்கூடிய விலையைத் தாராளமாக நிர்ணயித்து எங்களுக்கும் கொடுங்கள். ஏனென்றால், கலைஞருடைய பொன் விழா நினைவு எப்பொழுதும் சட்டமன்ற உறுப்பினர்களுக்குத் தொடர்ந்து இருக்க வேண்டும். சோழிங்கநல்லூரில் வீட்டு வசதி வாரியத்திற்குச் சொந்தமான 25 ஏக்கர் இடத்தை அத்துறை அமைச்சர் அவர்கள் வைத்துக்கொண்டு இருக்கிறார்கள். நாங்களும் அதை அடையாளம் காட்டியிருக்கிறோம். அந்த இடத்தைக் கையகப்படுத்துவதற்கு நீங்கள் எவ்வளவு செலவிட்டிருக்கிறீர்களோ, அந்தத் தொகையைத் தாராளமாக எங்களிடம் பெற்றுக்கொள்ளுங்கள். எம்.எல்.ஏ.-க்கள் காலனி என்று எப்படி பெங்களூரில் இருக்கிறதோ, ஹைதராபாத்தில் இருக்கிறதோ, அதேபோல சென்னை, சோழிங்கநல்லூரில் உள்ள அந்த இடத்தை, நம்முடைய கலைஞர் அவர்களின் பொன் விழா நினைவாக, எம்.எல்.ஏ.-க்கள் நினைவு காலனி என்றே பெயர் சூட்டி, அந்த இடத்தை உடனடியாக வழங்க வேண்டும் என்று (மேசையைத் தட்டும் ஒலி) நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். எங்கள் கட்சியினுடைய தலைவர் சுதர்சனம் அவர்கள் சொல்கிறபோது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** திரு. ஞானசேகரன், அதாவது, கலைஞர் பொன் விழா நகர். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. சி. ஞானசேகரன்:** கலைஞர் பொன் விழா நகர். நமது மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே கூறிவிட்டார்கள். ஆகவே, நிச்சயமாக இது எங்களுக்குக் கிடைத்துவிடும். நீங்கள் பரிந்துரைத்துவிட்டீர்கள். பெயர் சூட்டிவிடுகிறோம் என்று

சொல்கிறபோதே, எங்களுக்கு Plot-கள் வந்துவிட்டதாகவே நாங்கள் கருதுகிறோம். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-10

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அடுத்து, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இவ்வளவு சம்பளமா என்றெல்லாம்கூடக் கேட்கிறார்கள். என்னுடைய அருமை நண்பர்கள், சக சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வருத்தம்கூட இருக்கலாம். எங்களுக்குச் சம்பளமே வேண்டாம், இரண்டாயிரம் ரூபாய் சம்பளம் கொடுக்கிறீர்கள். சம்பளத்தை எடுத்து விடுங்கள். சம்பளத்தை எடுத்துவிட்டு, எங்களுக்கு ஆகிற செலவுகளை மட்டும் நீங்கள் கொடுத்தாலே போதும். ஏனென்று சொன்னால், மஹாராஷ்டிராவிலே இப்பொழுது 65,000 ரூபாய். (குறுக்கீடு) நியாயமான செலவுகள். மஹாராஷ்டிராவிலே 65,000 ரூபாய் கொடுக்கிறார்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய ஆந்திராவிலே 43,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இமாச்சலப் பிரதேசத்தில் 33,000 ரூபாய் கொடுக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தில் 30,000 ரூபாய் கொடுக்கிறார்கள். கோவா ஒரு சின்ன இடம், அந்த மாநிலத்தில் 30,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அரியானாவில் 31,000 ரூபாய் கொடுக்கிறார்கள். பஞ்சாபில் 25,000 ரூபாய் கொடுக்கிறார்கள். மத்தியப் பிரதேசத்தில் 25,000 ரூபாய் கொடுக்கிறார்கள். இராஜஸ்தான் வறண்டு போன ஒரு மாநிலம். இராஜஸ்தானிலேகூட 25,000 ரூபாய் கொடுக்கிறார்கள். ஆகவே, நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்வதெல்லாம், எங்களுக்கு 2,000 ரூபாய் சம்பளத்தைக் கழித்துக்கொள்ளுங்கள். பக்கத்து மாநிலமான ஆந்திராவிலே 43,000 ரூபாய் கொடுக்கிறார்கள். அந்த ரூ.43,000-ல் ரூ.2,000-ஐக் கழித்துவிட்டு, மீதி இருக்கக்கூடிய 41,000 ரூபாயையாவது நீங்கள் தயவுசெய்து எங்களுடைய படிகளை மட்டுமே ஏற்றுக்கொண்டு கொடுத்தால் போதும் என்று நான் மாண்புமிகு முதல்வர் அவர்களைப் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

எம்.எல்.ஏ.க்களுக்கு, இங்கேகூடக் கையெழுத்துப் போட்டுக் கொடுத்தால் கொடுக்கிறேன் என்று மாண்புமிகு முதல்வர் அவர்கள் ஒரு நாள் சொன்னார்கள். இங்கே கையெழுத்துப் போட்டுக் கொடுத்திருக்கிறவர்களுக்கு, விண்ணப்பித்தவர்களுக்கு நீங்கள் தயவுசெய்து கொடுங்கள். கையெழுத்துப் போடாதவர்களுக்குக் கொடுப்பதும், கொடுக்காததும் உங்கள் இஷ்டம். ஆகவே,



எப்படியாவது நீங்கள் அவர்களைப் பார்த்துக்கொள்ளுங்கள். யாரெல்லாம் கையெழுத்துப் போட்டுக் கொடுக்கிறோமோ, கொடுங்கள். இதை நாங்கள் எல்லாம் இனாமாகக் கேட்கவில்லை, சலுகையாகக் கேட்கவில்லை. ஆகவே, உரிமையோடு நான் மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் மீண்டும் கோரிக்கை வைக்கிறேன். தயவுசெய்து நீங்கள் அதைக் கொடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அடுத்து, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதி 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் தருகிறீர்கள். ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினரும் மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய திட்டத்தை நம்முடைய நாட்டு மக்களுக்கு, எங்களுடைய தொகுதிக்கு ஒவ்வொரு கிராமத்திற்கும் எடுத்துச் செல்கிறோம். அப்படி எடுத்துச் செல்கிறபோது, வைக்கக்கூடிய கோரிக்கைகளுக்கு நீங்கள் 5 கோடி ரூபாய் கொடுத்தால்கூடப் போதாது. இருந்தாலும்கூட, உங்களுடைய பொன் விழாவைக் கொண்டாடிக் கொண்டிருக்கிற இந்த நேரத்தில் நாங்களெல்லாம் மகிழ்ச்சி அடையக்கூடிய வகையில், அதைக் குறைந்தபட்சம், 2 கோடி ரூபாயாக இப்போதே, இன்றே நீங்கள் அறிவிக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

உங்களை மாதிரி எங்களாலே 50 ஆண்டு காலம் தொடர்ந்து இருக்க முடியாத நிலை இருக்கும். இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களாக இருக்கிறவர்கள் கொஞ்சம் காலத்திலே பழைய சட்டமன்ற உறுப்பினர்களாகிவிட்டால், நிலைமை மிக மோசமாகப் போய்விடுகிறது. ஆகவே, அந்த நேரத்தில் பழைய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு, Ex.M.L.A.-க்களுக்கு இப்போது கிடைக்கும் ஓய்வூதியம் 6,000 ரூபாய். ஆகவே, நான் அந்த Ex. M.L.A.-க்களுக்கும் சேர்த்துக் கேட்கிறேன். அவர்களுக்கு எப்படி எம்.எல்.ஏ.க்களுடைய சம்பளத்தில் பாதியாக, இப்பொழுது நீங்கள் 65,000 ரூபாய் எங்களுக்குக் கொடுப்போம் என்று சொன்னால், அதில் பாதி நீங்கள் அவர்களுக்குக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மருத்துவப் படி இப்பொழுது 250 ரூபாய் கொடுக்கிறீர்கள். மாதம் அவர்களுக்கு 1,000 ரூபாய் கொடுக்க வேண்டும். அதேபோல, டெல்லியிலே அவர்கள் போய்த் தமிழ்நாடு இல்லத்தில் தங்க

[திரு. சி. ஞானசேகரன்] [2007 மே 9

வேண்டுமென்று சொன்னால், எம்.எல்.ஏ.-க்களுக்கு எந்தக்
கட்டணத்தை வசூலிக்கிறோமோ, அந்தக் கட்டணத்தில்
அவர்களுக்கும் கொடுப்பதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான்
பழைய சட்டமன்ற உறுப்பினர்களுக்காகக் கேட்டுக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அதேபோல, இந்தச் சட்டமன்றத்தினுடைய நாயகராக இருந்து
மிகச் சிறப்பாக வழிநடத்திக்கொண்டிருக்கிற மாண்புமிகு சட்டப்
பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய பாராட்டுக்களையும்,
வாழ்த்துக்களையும் நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த 5 ஆண்டுகளாக எங்களுக்கு
zero hour என்பதே மறந்து போய்விட்டது. இப்பொழுது மீண்டும்
zero hour-க்கு உயிர் கொடுத்து, மிகச் சிறப்பாகப்
பணியாற்றிக்கொண்டிருக்கிற நம்முடைய மாண்புமிகு சட்டப்
பேரவைத் தலைவர் அவர்களுக்கு எங்களுடைய நெஞ்சார்ந்த
பாராட்டுக்களை நான் இங்கே தெரிவித்துக்கொள்ளக்
கடமைப்பட்டிருக்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முன்னாள் தியாகிகள், சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்திய
அரசு 10,000 ரூபாய் ஓய்வூதியமாகக் கொடுக்கிறார்கள்.
இங்கே ரூ.3,000தான் கொடுக்கப்படுகிறது. அதேபோல,
ரூபாய் கொடுக்கிறார்கள். உத்திரப் பிரதேசத்தில் 4,000
சுதந்திரப் போராட்ட வீரர்களுக்கு மத்தியப் பிரதேசத்தில் 4,000 ரூபாய்
அதேபோல, கேரளாவிலேகூட ஓய்வூதியமாகக் கொடுக்கிறார்கள்.
ஆகவே, நான் 3,000 ரூபாய் கொடுக்கிறார்கள்.
கேட்டுக்கொள்வதெல்லாம், மாண்புமிகு முதல்வர் அவர்களைக்
கொடுத்துக்கொண்டிருக்கிறது. நம்முடைய மத்திய அரசு 10,000 ரூபாய்
போராட்ட வீரர்களுக்கு அதற்கு இணையாக சுதந்திரப்
வேண்டுமென்று நீங்கள் ஓய்வூதியத்தைக் கொடுக்க
கேட்டுக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

அதுபோல, நம்முடைய
பணியாற்றிக்கொண்டிருக்கிற பணியாளர்கள். சட்டமன்றத்தில்
ஒரு unique department. உண்மையிலேயே இது
இங்கே transfer வேறு எந்த department-லிருந்தும் யாரையும்
பணியாற்றிக்கொண்டிருக்கிற பண்ணிப் போட முடியாது. மிகச் சிறப்பாகப்
ஊழியர்களுக்கும் நம்முடைய சட்டமன்றத்தினுடைய
கொடுக்கிறீர்கள். போக்குவரத்துப் படியாக 12 ரூபாய்
சரியாகப் போய்விடும். அது ஒரு நாளைக்கு பஸ்ஸில் ஏறி, இறங்கினாலே
ஆட்டோவில் ஏறினாலே 50 ரூபாய் பிடுங்கி



2007 மே 9] [திரு. சி. ஞானசேகரன்]

விடுகிறார்கள். ஆகவே, இவர்களுக்குப் போக்குவரத்துப் படியை 50
ரூபாயாக நீங்கள் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.
அதேபோல, தலைமைச் செயலகத்தில் பணியாற்றிக்கொண்டிருக்கிற
பணியாளர்களுக்கு இருக்கக்கூடிய ஊதியத்தைவிட நம்முடைய
சட்டமன்றத்தில் பணியாற்றக்கக்கூடிய பணியாளர்களுக்கு ரொம்பக்
குறைவாக இருக்கிறது. On par with Government Secretariat staff என்ற
வகையில், equal ஆக இவர்களுக்கும் சம்பளத்தை உயர்த்த வேண்டும்
என்றும், அதுவும் உச்ச நீதிமன்றத்தினுடைய ஆணைப்படி லோக்
சபாவில் பணியாற்றக்கூடிய பணியாளர்களுக்கு எப்படியெல்லாம்
சம்பளம் கொடுக்கிறார்களோ, அதேபோன்ற சம்பளத்தை இவர்களுக்கு
நீங்கள் உயர்த்திக் கொடுக்க வேண்டும் என்று நான் பணிவன்போடு
கேட்டு, இந்த வாய்ப்பை நல்கிய பேரவைத் தலைவர் அவர்களுக்கு
என்னுடைய நெஞ்சார்ந்த நன்றிகளைக் காணிக்கையாக்கி, இங்கே
நம்முடைய பொன் விழாக் காண்கின்ற மாண்புமிகு முதல்வர்
அவர்களுக்கு மீண்டும் ஒரு முறை என்னுடைய நெஞ்சார்ந்த
வணக்கத்தையும், நன்றியையும் தெரிவித்துக் கொண்டு
விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

*முற்பகல் 11-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர்
திரு. ஓ. சுப்பிரமணியம்.

**திரு. ஓ. சுப்பிரமணியம்:**

*"தமிழ் மணக்கும் திசையெல்லாம் தேடினேன் உன்னை*
*சான்றோர்தம் அவையெல்லாம் அலையவிட்டேன் கண்ணை*
*கமழ்கின்ற பைந்தமிழே! காவியமே அண்ணா*
*கண் கலங்கிக் கதறவிட்டுச் சென்றனையோ அண்ணா!*
*சென்றனையோ அண்ணா!"*

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்மையெல்லாம் கண்
கலங்கிக் கதறவிட்டுச் சென்ற பேரறிஞர் அண்ணாவினுடைய
இதயத்தை இரவலாகப் பெற்று, இன்று தமிழ்ச் சமுதாயத்தினுடைய
பாதுகாவலராக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு தமிழக
முதல்வர் அண்ணன் டாக்டர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத்
தட்டும் ஒலி) நட்புக்கு இலக்கணமாக, நாட்டு மக்களுக்கு நல்லதொரு
நிதிநிலை அறிக்கையை வழங்கி இருக்கின்ற நமது நிதி
அமைச்சர் மாண்புமிகு அண்ணன் இனமானப் பேராசிரியர்

அவர்களுக்கும், தலைவர் கலைஞர் அவர்களுடைய நிழலாகப் பணியாற்றிக்கொண்டிருக்கக்கூடிய மாண்புமிகு அண்ணன் ஆற்காட்டார் அவர்களுக்கும், தங்கக் கட்டியாய் இருந்த தளபதி அவர்கள், மிசா என்கிற கொடும் நெருப்பிலே உருகி, அதை இந்த நாட்டு மக்கள் அணிகின்ற ஆபரணமாக, தியாகத்திலே, அனுபவத்திலே பெற்று, இன்று தமிழக மக்கள் அணிந்து கொள்கின்ற ஆபரணமாக, தமிழக மக்களுக்கு நல்லாட்சி நடத்திக்கொண்டிருக்கின்ற உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) தலைவர் கலைஞர் அவர்களுடைய தளகர்த்தர்களாக விளங்கிக்கொண்டிருக்கக்கூடிய அமைச்சர் பெருமக்களுக்கும், மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், தந்தை பெரியார் அவர்களுடைய மாவட்டமான ஈரோடு மாவட்டம், பவானிசாகர் தொகுதியின் சார்பாக முதற்கண் நன்றி கலந்த வணக்கத்தை உரித்தாக்கிக்கொள்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தச் சட்டமன்ற உறுப்பினர்களுக்குப் பல்லடுக்கு சட்டமன்ற உறுப்பினர் விடுதியைத் திறந்து வைத்தவர் நமது அருமைத் தலைவர் டாக்டர் கலைஞர் அவர்கள். அதேபோல, குடியிருப்பு வசதிகளோடு சட்டமன்ற விடுதிகளை அமைத்துக் கொடுத்தவர் தலைவர் கலைஞர் அவர்கள். தொகுதியிலே இருக்கக்கூடிய மக்களிடம் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நன்மதிப்பை உயர்த்துவதற்காகத் தொகுதி மேம்பாட்டு நிதியை வழங்கியவர் டாக்டர் கலைஞர் அவர்கள். (மேசையைத் தட்டும் ஒலி) இப்படிப் பல்வேறு நலத் திட்டங்களைச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு மட்டுமல்லாமல், இந்த நாட்டிலே இருக்கக்கூடிய விவசாயிகளுக்கும், தொழிலாளிகளுக்கும், நெசவாளிகளுக்கும், மகளிர்களுக்கும், மாணவர்களுக்கும், அரசு ஊழியர்களுக்கும் எனப் பல்வேறு நலத் திட்டங்களைத் தலைவர் கலைஞர் அவர்கள் வழங்கியிருக்கின்றார்கள்.

அதே நேரத்திலே, தலைவர் கலைஞர் அவர்கள் ஏராளமான நூல்களையும், நிறையத் திரைப்படங்களுக்குக் கதை, வசனத்தையும் எழுதி இருக்கின்றார்கள். தலைவர் கலைஞர் அவர்களுடைய பொன் விழா ஆண்டை முன்னிட்டு, மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களிடம் நான் ஒரு கோரிக்கை வைக்கின்றேன். 55 ஆண்டு காலத்திற்கு முன்பாகவே இந்தத் தமிழ்ச் சமுதாயத்திலே இருந்த நிலைமைகளையெல்லாம் 'பராசக்தி' என்கின்ற திரைப்படத்திலே தலைவர் கலைஞர் அவர்கள் தெரிவித்திருக்கின்றார்கள். தலைவர்



கலைஞர் அவர்களின் பொன் விழாவை முன்னிட்டு அதனுடைய ஒரு பகுதியைச் சுட்டிக்காட்டுவதற்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் அனுமதி வழங்குமாறு கேட்டுக்கொள்கின்றேன்.

பராசக்தி திரைப்படத்திலே சிவாஜிகணேசன் அவர்கள் நீதிமன்றத்திலே சொல்லுவார்கள்:

"நீதிமன்றம் விசித்திரம் நிறைந்த பல வழக்குகளைச் சந்தித்திருக்கிறது.

புதுமையான மனிதர்களைக் கண்டிருக்கிறது.

ஆகவே, இவ்வழக்கு விசித்திரம் அல்ல.

வழக்காடும் நான் புதுமையான மனிதனும் அல்ல.

சர்வ சாதாரணமாக வாழ்க்கைப் பாதையிலே காணக்கூடிய ஜீவராசிகளிலே நானும் ஒருவன்.

கோயிலிலே குழப்பம் விளைவித்தேன், பூசாரியைத் தாக்கினேன், குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறேன், இப்படியெல்லாம்.

கோயிலிலே குழப்பம் விளைவித்தேன், கோயில் கூடாது என்பதற்காக அல்ல, கோயில் கொடியவர்களின் கூடாரமாக ஆகிவிடக்கூடாது என்பதற்காக.

பூசாரியைத் தாக்கினேன், அவன் பக்தன் என்பதற்காக அல்ல, பக்தி பகல் வேஷமாக ஆகிவிட்டது என்பதைக் கண்டிப்பதற்காக.

உனக்கு ஏன் இவ்வளவு அக்கறை? உலகத்தில் யாருக்கும் இல்லாத அக்கறை என்று கேட்பீர்கள், நானே பாதிக்கப்பட்டேன்.

முற்பகல் 11-20

நேரடியாகப் பாதிக்கப்பட்டேன்.

சுய நலமென்பீர்கள். என் சுய நலத்திலே பொது நலமும் கலந்திருக்கிறது.

ஆகாரத்திற்காக அழுக்கைச் சாப்பிட்டுத் தடாகத்தைச் சுத்தப்படுத்துகிறதே மீன், அதைப்போல. என்னைக் குற்றவாளி என்கிறீர்களே, இந்தக் குற்றவாளியின் வாழ்க்கைப் பாதையிலே கொஞ்சம் பின்னோக்கி நடந்து பார்த்தால், அவன் கடந்து வந்துள்ள காட்டாறுகள் எவ்வளவு என்று கணக்குப் பார்க்க முடியும்.

பாட்டொலிக்கும் குயில்கள் இல்லை என் பாதையில்;

படமெடுத்தாடும் பாம்புகள் நெளிந்திருக்கின்றன.

தென்றலைத் தீண்டியதில்லை நான்;

தீயைத் தாண்டியிருக்கிறேன்.

கேளுங்கள் நீதிபதி அவர்களே, தீர்ப்பு எழுதுவதற்கு முன் தயவுசெய்து கேளுங்கள்.

தமிழ்நாட்டிலே இத்திருவிடத்திலே பிறந்தவர்களிலே நானும் ஒருவன்.

தமிழ்நாட்டின் தலையெழுத்துக்கு நானென்ன விதிவிலக்கா?

ரங்கூன், அது என் உயிரை வளர்த்தது; உயர்ந்தவனாக்கியது.

திருமணக் கோலத்திலிருந்த என் தங்கையைக் காண வந்தேன்.

இதோ உங்கள் முன் குற்றவாளிக் கூண்டிலே நிற்கிறாளே, இந்த ஜாலக்காரி ஜாலி.

இவள் விரித்த வலையிலே விழுந்தவர்களிலே நானும் ஒருவன். பணப் பெட்டியைப் பறி கொடுத்தேன்; பசியால் நலிந்தேன்; மெலிந்தேன்;

கடைசியில் பைத்தியக்காரனாக மாறினேன்.

காண வந்த தங்கையைக் கண்டேன், கண்ணற்ற ஓவியமாக.

ஆம், கைம்பெண்ணாக.

பெயரோ கல்யாணி, மங்களகரமான பெயர்.

கழுத்திலே மாங்கல்யமில்லை.

செழித்து வளர்ந்த குடும்பம் சீரழிந்துவிட்டது.

கையிலே பிள்ளை, கண்களிலே நீர்.

கல்யாணி அலைந்தாள்.

கல்யாணிக்காக நான் அலைந்தேன்.

கல்யாணிக்காகக் காளையர் சிலர் கருணை காட்ட முன்வந்தனர்.



கொலை வழக்கிலே ஈடுபட்டு உங்கள் முன் நிற்கிறானே, இந்தக் கொடியவன் வேணு.

இவன் பகட்டால் என் தங்கையைக் கற்பழிக்க முயன்றான்.

நான் தடுத்திராவிட்டால் கல்யாணி அப்பொழுதே தற்கொலை செய்துகொண்டிருப்பாள்.

கடவுள் பக்தர்களும் கருணை காட்ட முன்வந்தனர்.

பிரதியுபகாரமாக அவள் கடைக்கண் பார்வையைக் கேட்டனர்.

அதில் தலையானவன் இந்தப் பூசாரி, கல்யாணியின் கற்பைக் காணிக்கையாகக் கேட்டிருக்கிறான்.

பராசக்தியின் பெயரால், உலக மாதாவின் பெயரால், கல்யாணி உலகத்தில் புழுவாகத் துடித்தபடியாவது உயிரோடிருந்திருப்பாள்.

அவளைத் தற்கொலை செய்துகொள்ளத் தூண்டியது இந்தப் பூசாரிதான்.

இந்த இரக்கமற்ற உலகத்தில் தன் குழந்தை அனாதையாகச் சாவதை விரும்பவில்லை.

எனவே, குழந்தையைக் கொன்றிருக்கிறாள்.

உலக உத்தமர் காந்தி, அஹிம்சா மூர்த்தி, ஜீவகாருண்ய சீலர், நோயால் துடித்துக் கொண்டிருந்த கன்றுக் குட்டியைக் கொன்றுவிடச் சொல்லியிருக்கிறார்,

அது கஷ்டப்படுவதைக் காணச் சகியாமல்.

அதே முறையைத்தான் கையாண்டிருக்கிறாள் கல்யாணி.

இது எப்படிக் குற்றமாகும்?

வெளிநாட்டிலிருந்து திரும்பிய ஒரு தமிழனுக்கு வாழ வழியில்லை.

தமிழ்நாட்டிலே பிறந்த ஒரு பெண்ணுக்கு வாழ்வதற்குத் தக்க பாதுகாப்பில்லை.

என் தங்கை கொஞ்சம் விட்டுக் கொடுத்திருந்தால், கோடீஸ்வரன் வீட்டுப் பள்ளியறையிலே ஒரு நாள்,

மானத்தை விலை கூறியிருந்தால் மாளிகைவாசியின் மடியிலே ஒரு நாள்,

இப்படி ஓட்டியிருக்கலாம் நாட்களை.

இதைத்தானா இந்த நீதிமன்றம் விரும்புகிறது?

பகட்டு என் தங்கையை மிரட்டியது, பயந்து ஓடினாள்.

பணம் என் தங்கையைத் துரத்தியது, மீண்டும் ஓடினாள்.

பக்தி என் தங்கையைப் பயமுறுத்தியது, ஓடினாள். ஓடினாள்,

வாழ்க்கையின் ஓரத்திற்கே ஓடினாள். (மேசையைத் தட்டும் ஒலி)

அந்த ஓட்டத்தைத் தடுத்திருக்க வேண்டும்.

இன்று வாட்டத்தைப் போக்கியிருக்க வேண்டும், சட்டத்தைத் தீட்டுவோர்.

வாழவிட்டார்களா என் தங்கை கல்யாணியை?

கல்யாணி தற்கொலை செய்துகொள்ள முயன்றது ஒரு குற்றம்;

குழந்தையைக் கொன்றது ஒரு குற்றம்;

நான் பூசாரியைத் தாக்கியது ஒரு குற்றம்.

இத்தனை குற்றங்களுக்கும் யார் காரணம்? யார்?

கல்யாணியை கஞ்சிக்கில்லாமல் அலையவிட்டது யார் குற்றம்?

விதியின் குற்றமா? அல்லது விதியின் பெயரைச் சொல்லி வயிறு வளர்க்கும் வீணர்களின் குற்றமா?

பணம் பறிக்கும் கொள்ளைக் கூட்டத்தை நாட்டிலே நடமாடவிட்டது யார் குற்றம்?

பஞ்சத்தின் குற்றமா? அல்லது பஞ்சத்தை மஞ்சத்துக்கு வரவழைக்கும் வஞ்சகர்களின் குற்றமா?



கடவுளின் பெயரால் காம லீலைகள் நடத்தும் போலிப் பூசாரிகளை நாட்டிலே நடமாடவிட்டது யார் குற்றம்?

கடவுளின் குற்றமா? அல்லது கடவுள் பெயரைச் சொல்லி காலக்ஷேபம் நடத்தும் கயவர்களின் குற்றமா?

இந்தக் குற்றங்கள் களையப்படும் வரை குணசேகரன்களும் கல்யாணிகளும் குறையப் போவதில்லை.

இதுதான் எங்கள் வாழ்க்கை ஏட்டில் எந்தப் பக்கம் புரட்டினாலும் காணப்படும் பாடம், பகுத்தறிவு, பயனுள்ள அரசியல் தத்துவம்" (மேசையைத் தட்டும் ஒலி)

என்று 55 ஆண்டு காலத்திற்கு முன்னதாகவே, இந்தச் சமுதாயத்தைப் பற்றி அக்கறையோடும், பல்வேறுவிதமான சமூக நலத்திற்காகவும் இந்தக் கருத்தினைத் தெரிவித்திருக்கின்றார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மனிதர்களிலே மூன்று வகை உண்டு. ஒன்று, தனக்காக வாழ்வது; இன்னொன்று, தனக்காகவும், மற்றவர்களுக்காகவும் வாழ்வது; மூன்றாவதாக, மற்றவர்களுக்காகவே வாழ்வது. தனக்காக வாழ்கின்றவர்களைப் பற்றி நமக்குக் கவலையில்லை. ஆனால், மற்றவர்களுக்காக வாழ்ந்துகொண்டிருக்கக்கூடிய தலைவர் கலைஞர் அவர்கள் (மேசையைத் தட்டும் ஒலி) நூறாண்டு காலம் வாழ்ந்து, இந்தத் தமிழ்ச் சமுதாயத்தைத் தன்னிறைவு பெறச் செய்ய வேண்டுமென வேண்டிக் கேட்டுக்கொண்டு, அமர்கிறேன், நன்றி, வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி. (குறுக்கீடு) திரு. கலைராஜன், இன்றைக்கு அதற்கெல்லாம் நேரமில்லை, உட்காருங்கள். (குறுக்கீடு) உட்காருங்கள். நேரம் இல்லை. (குறுக்கீடு) Guillotine time. (குறுக்கீடு) Subject-ல்தான் பேச வேண்டும், உட்காருங்கள். (குறுக்கீடு) No interruption. உட்காருங்கள். திரு. ஜி.கே. மணி.

**திரு. ஜி.கே. மணி:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்றம், நிதித் துறை, ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் போன்ற மானியக் கோரிக்கைகளில் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே சில கருத்துகளை நான் இங்கே கூற விழைகிறேன்.

மாண்புமிகு போவைத் தலைவர் அவர்களே, இன்றைய மானியக் கோரிக்கையில் சட்டமன்றத்தைப் பற்றி நாம் பேசிக்கொண்டிருக்கிறோம். சட்டமன்றத்தைப் பற்றிப் பேசுகிற நோத்தில், தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை துவங்கப்பட்டது 1952 ஆம் ஆண்டு. 1952 ஆம் ஆண்டு துவங்கப்பட்டு, இதுவரையிலே 55 ஆண்டுகள் ஆகின்றன. ஆனால், இந்த 55 ஆண்டு கால வரலாற்றில்— தமிழ்நாட்டில் மட்டும் 55 ஆண்டு காலம் அல்ல, இந்தியத் திருநாட்டிலும் ஒப்பிட்டுப் பார்த்தால், இந்தியத் திருநாட்டிலேயே 50 ஆண்டு காலம் தொடர்ந்து சட்டமன்றப் பேரவையிலே பணியாற்றிய மகத்தான பெருமைக்குரியவர்தான் முத்தமிழறிஞர் முதலமைச்சர் கலைஞர் அவர்கள் என்பதை நான் இங்கே பெருமையோடு சுட்டிக்காட்ட ஆசைப்படுகிறேன்.

இப்படி 55 ஆண்டுகளில் 50 வருடங்கள் அவருடைய சட்டமன்றப் பணி. தமிழ்நாட்டிலே அப்படி யாராவது இருக்கின்றார்களா என்று பார்க்கிறோம்; யாரும் கண்ணுக்குத் தெரியவில்லை. சரி, இந்தியாவிலே இருக்கிற எல்லா மாநிலங்களின் சட்டமன்றப் பேரவைகளை எண்ணிப் பார்த்தால், காலையிலே ஒரு சில மத்திய அமைச்சர்களோடும், எங்களுக்குத் தெரிந்த தலைவர்களிடத்திலேயும், வேறு ஏதாவது மாநிலத்திலே இப்படி இருக்கிறார்களா என்று கேட்டுப் பார்த்தோம். இல்லை என்பதுதான் பதில். 50 ஆண்டு காலம், அரை நூற்றாண்டு காலம் சட்டமன்றப் பணியை நிறைவேற்றிய மாண்புமிகு கலைஞர் அவர்களை மீண்டும் ஒரு முறை நான் இங்கே பாராட்ட விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றத்தைப் பற்றிப் பேசுகிற நேரத்தில், இந்தச் சட்டமன்றப் போவையில் அமர்ந்து பணியாற்றியவர்கள், பெருந்தலைவர் காமராஜர், பெரியவர் பக்தவத்சலம் மற்றும் பேரறிஞர் அண்ணா அவர்கள், இப்படிப் பல்வேறு தலைவர்கள் வரிசையிலே மாண்புமிகு கலைஞர் அவர்களையும் ஒப்பிட்டுப் பார்க்கிறோம். கடந்த காலங்களில் இந்தச் சட்டமன்றப் பேரவைக்குத் தனி மரியாதை இருந்திருக்கிறது; மரபுகள், கண்ணியங்கள் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன. ஆகவே, இந்த மன்றத்திலே நான் அன்போடு கேட்டுக்கொள்வது, தெரிவித்துக்கொள்ள விரும்புவது, நம்மை எல்லோரையும் நாட்டு மக்கள் தேர்ந்தெடுத்து அனுப்பியிருக்கிறார்கள். மக்களுக்காகப் பணியாற்ற வேண்டும்; கண்ணியத்தோடு நடந்துகொள்ள வேண்டும்;



நடந்துகொள்ள வேண்டும் நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக நடந்துகொள்ள வேண்டும் என்று நம்மை அனுப்பி வைத்திருக்கிறார்கள். மக்கள் நம்மை விழிப்போடு பார்த்துக்கொண்டிருக்கிற இந்தக் காலக்கட்டத்தில், சட்டமன்ற நடவடிக்கைகளிலே மரபு மீறிச் செயல்படுவது, கண்ணியக் குறைவாக நடந்துகொள்வது, இங்கே காகிதத்தைத் தூக்கி வீசுவது, பேரவைத் தலைவர் முன்பாக நின்றுகொண்டு கூச்சலிடுவது, காகிதத்தைக் கிழித்துப் போடுவதுபோன்ற நடவடிக்கைகளை நாம் ஏற்றுக்கொள்ளக் கூடாது, அனுமதிக்கக் கூடாது என்பதை நான் இங்கே வெளிப்படையாகச் சொல்ல விரும்புகிறேன்.

(மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் தலைமை)

எங்கள் கட்சியிலேகூட—எங்கள் கட்சியைக் குறிப்பிட்டுச் சொல்வதற்காக அல்ல—எங்கள் கட்சியிலே தேர்ந்தெடுக்கப்பட்ட சட்டமன்ற உறுப்பினர்களை அழைத்து வைத்து ஆண்டுதோறும் எங்கள் மருத்துவர் அய்யா அவர்கள் பயிற்சி கொடுக்கிறார்கள். அந்தப் பயிற்சியிலே சொல்லப்படுவது, மரபு மீறிப் பேசக் கூடாது; வரம்பு மீறி நடந்துகொள்ளக் கூடாது; கண்ணியம் காக்கப்பட வேண்டும் என்று அறிவுறுத்தியிருக்கிறார்கள். ஆகவே, நான். . .
(குறுக்கீடு)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திரு. ஜெயக்குமார், அவர் யாரையும் சொல்லவில்லை. பொதுவாக எல்லோருக்குமே சொல்கிறார். (குறுக்கீடு) He is not mentioning anybody in particular. அப்புறம் பேசுங்கள்.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, நான் பொதுவாகச் சொல்கிறேன், எல்லோருக்கும் சொல்கிறேன். மக்கள் நம்மை மரியாதையாக நினைத்துக்கொண்டிருக்கிறார்கள். அந்த மரியாதையைக் காப்பாற்ற வேண்டும். நாட்டு மக்களுக்கு எடுத்துக்காட்டாக இருக்க வேண்டுமென்ற அந்த அடிப்படையிலே சொல்கிறேனே தவிர, குற்றச்சாட்டுக்காக அல்ல என்பதை நான் இங்கே தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதே வேளையில், இங்கே சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்கிறார்கள். நாங்கள் அமைச்சர்களிடத்திலே, அதிகாரிகளிடத்திலே ஒரு மனு கொடுக்கிறோம் என்று சொன்னால், குறைந்த அளவு 10, 15 நாட்களுக்குள்ளே எங்களுக்குப் பதில் வேண்டும் என்று கோரிக்கை விடுத்துக்கொண்டிருக்கிறார்கள். அதை நிறைவேற்றித் தர வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, இப்போது தொகுதி மறு சீரமைப்புப் பணிகள் நடந்துகொண்டிருக்கின்றன. அந்தக் குழுவின் வாயிலாகத் தேர்தல் ஆணையம் அந்தப் பணியை மேற்கொண்டிருக்கிறது. அப்படிப் பார்[ய]க்கிற வேளையிலே, தொகுதிகளைப் பிரித்து ஒரு வரைவு அறிக்கை நமக்குக் கொடுக்கப்பட்டிருக்கிறது. அந்த வரைவு அறிக்கையைப் பார்த்தால், பூகோள ரீதியாகச் சரியாக இல்லை. இன்னும் சில சட்டமன்றத் தொகுதிகளைப் பார்ப்போம் என்று சொன்னால், பிறை வடிவத்திலே இருக்கிறது; ஒன்று சதுர வடிவத்திலே இருக்கலாம்; இல்லையென்றால், செவ்வக வடிவத்திலே இருக்கலாம்; மக்கள் தொகை அடிப்படை என்று சொல்கிறார்கள்; விருப்பத்திற்கேற்ப மாற்றியமைத்திருக்கிறார்கள். அந்தக் குழுவிலே தமிழ்நாட்டிலே இருக்கிற அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகள் எல்லாம் இடம்பெற்றிருக்கின்றன. இடம் பெற்றிருந்தும்கூட, தமிழகத்திலே இருக்கிற கட்சியைச் சார்ந்த நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் எடுத்துச் சொன்னாலும்கூட, அவர்கள் காதிலே வாங்கிக்கொள்கிறார்கள். ஆனால், அதை நடைமுறைப்படுத்துவதாகத் தெரியவில்லை. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்களும், தமிழக அரசும் இதிலே அதிக அக்கறை எடுத்துக்கொண்டு, இந்தச் சீரமைப்புப் பணியைச் சரிவர நடத்துவதற்குத் தேர்தல் ஆணையத்திற்கு எடுத்துரைக்க வேண்டுமென்ற வேண்டுகோளை நான் முன்வைக்க விரும்புகிறேன்.

அதைப்போல, தனித் தொகுதிகள். இந்தத் தனித் தொகுதிகளை மாவட்ட அளவில் அல்லது தமிழ்நாடு அளவில் ஆதி திராவிட மக்களுடைய மக்கள் தொகை என்ற அடிப்படையில் எடுத்துக்கொண்டு பிரித்துப் பார்க்கக் கூடாது. உதாரணத்திற்கு, ஒரு நாடாளுமன்றத் தொகுதியில் உள்ளடங்கியிருப்பது ஆறு சட்டமன்றத் தொகுதிகள். ஆகவே, ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்குக் குறைந்தபட்சம் ஒரு சட்டமன்றத் தனித் தொகுதியாவது இடம் பெற வேண்டும். அப்படி இடம்பெறுகின்ற நேரத்திலேதான், அந்த ஆதி திராவிட மக்களுக்குப் பரவலாகப் பிரதிநிதித்துவம் இருக்கிறது என்ற ஒரு நிலை உருவாக்கப்படும். அதை நாம் மனதிலேகொள்ள வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

*முற்பகல் 11-30*

நாடாளுமன்றத் தொகுதிச் சீரமைப்பு என்று பார்க்கின்ற நேரத்தில், தமிழகம் நான்கு மண்டலங்களாகப் பிரிக்கப்பட்டு, இந்த நான்கு



மண்டலங்களிலேயும், ஆதி திராவிட மக்களுக்கு நாடாளுமன்றப் பிரதிநிதித்துவம் இருக்கின்ற வகையில் தனித் தொகுதிகள் தெற்கிலேயும் இருக்க வேண்டும்; மேற்கிலேயும் இருக்க வேண்டும்; கிழக்குப் பகுதி, வடக்குப் பகுதி என நான்கு மண்டலங்களிலேயும் நாடாளுமன்றத் தனித் தொகுதிகள் இருக்கிற வகையிலே நாம் அதை எடுத்துச் சொல்ல வேண்டும். அதை நடைமுறைப்படுத்துவதற்கு முன்வர வேண்டுமென்று நான் வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன்.

இப்பொழுது பார்த்தீர்களென்றால், மாவட்டங்கள் பெரிய அளவில் இருக்கின்றன. ஐந்து சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என்றிருக்கிறது; 12 தொகுதிகளுக்கு மேலேயும் மாவட்டங்கள் இருக்கின்றன. ஆகவே, மக்கள் நலத் திட்டங்கள் விரைவாகச் சென்றடைவதற்கும், நிர்வாக வசதிக்காகவும், நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஆறு சட்டமன்றத் தொகுதிகளுக்கு ஒரு மாவட்டம் என்ற அளவிலே மாவட்டங்களைப் பிரிப்பது என்பதைக் கொள்கை ரீதியாக ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள். அதைப் பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பிலே நாங்கள் வரவேற்கிறோம். அது விரைவாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டும். முடிக்கப்பட்டு, அப்படிப் பிரிக்கின்ற நேரத்திலே. . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** ஏழு நிமிடங்கள் ஆகிவிட்டன, please. இன்னும் உங்கள் கட்சியின் சார்பில் உறுப்பினர் திரு. ராஜா பேசவிருக்கிறார்.

**திரு. ஜி.கே. மணி:** இன்னும் நிறைய இருக்கின்றன. ஆகவே, அதைக் கவனத்திலே எடுத்துக்கொள்ள வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன். இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் சொல்லியிருக்கிறார்கள்; இந்தச் சட்டமன்ற நடவடிக்கைகளைத் தொலைக்காட்சியிலே நாட்டுப்புற மக்கள், கிராமப்புறத்து மக்கள் பார்ப்பதற்கு வசதியாக நேரடி ஒளிபரப்புச் செய்ய வேண்டும். அதை அரசுத் தொலைக்காட்சி, தனியார் தொலைக்காட்சிகளின் வாயிலாகக்கூட ஒளிபரப்புவதற்கு ஆவன செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்கு உதவியாளர்கள் இருக்கிறார்கள். அந்த உதவியாளர்களுக்கு, உதவியாளர் அடையாள அட்டை, அவர்கள் பேருந்திலே பயணம் செய்வதற்கு இலவசப் பயணச் சீட்டு ஆகியவற்றை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். இப்பொழுது சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் அலுவலகம்

கொடுத்தாகிவிட்டது. அலுவலகம் இருக்கிறது; கணினி கொடுத்தாகிவிட்டது. கணினியை இயக்குவதற்கு ஆட்கள் வேண்டும். ஆகவே, அதற்கு ஆட்களை நியமனம் செய்ய வேண்டும்.

அது மட்டுமல்லாமல், சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதியிலே சுற்றி வருவதற்கு ஒரு வாகனம் அவசியம் இருக்க வேண்டும். ஊராட்சி ஒன்றிய அலுவலருக்கு இருக்கிறது; வட்டாட்சியருக்கு இருக்கிறது; சட்டமன்ற உறுப்பினர்கள் யாராவது வருகிறார்கள், போகிறார்கள். இருந்தாலும்கூட, நிரந்தரமாக ஒரு மகிழுந்து அவர்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று நான் இங்கே அன்போடு கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

அதைப்போல, எல்லோருடைய கோரிக்கை; நம்முடைய உறுப்பினர் திரு. ஞானசேகரன் அதை வலியுறுத்திச் சொல்லியிருக்கிறார். இதுவரையிலே இல்லையென்று சொன்னாலும்கூட, இந்த ஐம்பது ஆண்டு கால பொன் விழா நேரத்தில்--மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், 'எல்லோரும் விரும்பிக் கையெழுத்து போட்டால், நான் வீட்டுமனையை ஒதுக்கித் தருகிறேன்' என்று ஏற்கெனவே சொன்னார்கள். . .

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** திருவாளர் சி. கோவிந்தசாமி. (குறுக்கீடு) இல்லை, இல்லை, நேரம் முடிந்து போய்விட்டது. நான் ஏற்கெனவே ஒரு நிமிடம் கூடுதலாகக் கொடுத்துவிட்டேன். (குறுக்கீடு) இல்லை, உரையை முடித்துவிடுங்கள். (குறுக்கீடு) சரி.

**திரு. ஜி.கே. மணி:** பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆகவே, விரும்பக்கூடிய சட்டமன்ற உறுப்பினர்களுக்கு நீங்கள் ஒரு வீட்டு மனையை வழங்க வேண்டும். முடிந்தால் வீடு கட்டித் தர வேண்டும் என்று நான் எல்லோருடைய சார்பிலே இங்கே வேண்டுகோள் வைக்க விரும்புகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

அதைப்போல, சிறு சேமிப்பு; சிறு சேமிப்பிலே ஊக்கத் தொகையாக ஒரு விழுக்காட்டை அந்த முகவர்களுக்குக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். கடந்த ஆட்சியில், 2005-லே அது அரை விழுக்காடாகக் குறைக்கப்பட்டிருக்கிறது. 70 ஆயிரம் முகவர்கள் இருக்கிறார்கள். சிறு சேமிப்புத் தொகையும் குறைந்துவிட்டது. அவர்களுக்கு மீண்டும் அந்தச் சலுகையை வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.



அதைப்போல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஓய்வூதியம் கூடுதலாக வழங்க வேண்டுமென்று கேட்கிறார்கள். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஊதியத்தை உயர்த்துகிற நேரத்தில், அதில் பாதி அளவாவது அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்க வேண்டும். அவர்களுக்கு மருத்துவப் படி 250 ரூபாயிலிருந்து, 1000 ரூபாயாக வழங்க வேண்டுமென்று பல்வேறு கோரிக்கைகளை நான் முன்வைக்கிறேன்.

சட்டமன்றம் கூடும் நாட்களில் தற்காலிகப் பணியாளர்கள் இருக்கிறார்கள்; அவர்களுக்கு ஊதிய உயர்வு வேண்டும். காவல் துறையிலேயிருந்து வரக்கூடியவர்களுக்கு, அந்தத் தினப் படியைக் கூடுதலாக்கித் தர வேண்டும். ஒட்டுமொத்தமாக, சட்டமன்றச் செயலகத்திலே பணியாற்றக்கூடிய அத்தனை பேருக்கும், சட்டமன்றம் கூடுகிற நேரத்தில் தினப் படியை உயர்த்தித் தர வேண்டுமென்று நான் உங்களை வேண்டிக் கேட்டுக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. சி. கோவிந்தசாமி.

**திரு. சி. கோவிந்தசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் என்கிற ஐந்து மானியக் கோரிக்கைகள்மீது பேசுகிற வாய்ப்பினைத் தந்த தங்களுக்கு முதலில் எனது நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்றம் என்கிற மானியமாக இருப்பதையொட்டி, சட்டமன்றத்தில் 1957-லே அடியெடுத்து வைத்து, 2007-லே நம்முடைய அனைவருடைய விருப்பத்தோடு பொன் விழாக் காணவிருக்கிற நமது பெருமதிப்பிற்குரிய மாண்புமிகு முதல்வர் அவர்களுக்கு மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பாக எங்கள் வாழ்த்துக்களை முதலிலே தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

முற்பகல் 11-35

சட்டமன்றக் கூட்டம் சம்பந்தமாக சபாநாயகர்களுடைய மாநாட்டிலே நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கேற்ப, குறைந்தபட்சம் ஓராண்டுக்கு 100 நாட்கள் என்பதை உறுதிப்படுத்துகிற வகையிலே, சட்டமன்றம் கூடுகிற நாட்களை அதிகப்படுத்த வேண்டும். அதேபோல, பட்ஜெட் கூட்டத்தொடர் நாட்களை சற்று

அதிகப்படுத்தி, தேவைப்பட்டால் ஒரு நாள் இடைவெளி விட்டு சட்டமன்ற பட்ஜெட் கூட்டத்தொடரை நடத்துவது பொருத்தமாக இருக்கும்.

ஒரே நாளில் 2, 3 மானியக் கோரிக்கைகளை முன்வைத்து விவாதிப்பதன்மூலம், தயாரிப்புகளோடு வருகிற உறுப்பினர்களும் முழுமையாகக் கருத்துச் சொல்ல முடிவதில்லை. அமைச்சர் பெருமக்களும் பல்வேறு சிரமங்களுக்கு மத்தியிலே தயாரிப்போடு வருகிறார்கள். அவர்களாலும் முழுமையாகப் பதிலளிக்க இயலவில்லை. ஆகவே, எதிர் வருகிற காலத்திலே அவற்றைக் கவனத்திலேகொண்டு, சட்டமன்றத்தினுடைய நேரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். அப்படித் தேவை ஏற்படுமானால், சில நாட்களில் மாலை நேரங்களில்கூட சட்டமன்றக் கூட்டத்தை நடத்தி, அமைச்சர்கள் முழுமையாகப் பதிலளிப்பதற்கு வாய்ப்பளிக்க வேண்டும்; உறுப்பினர்களுக்கும் வாய்ப்பளிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோலச் சட்டமன்றத்திலே, ஏதாவது தவிர்க்க முடியாத காரணங்களைத் தவிர, கேள்வி நேரத்தை எக்காரணம் கொண்டும் தவிர்க்கக் கூடாது. அது தொடர்ந்து இருப்பதற்கு, இடமளிப்பதற்கு நீங்கள் வாய்ப்பளிக்க வேண்டுமென்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சட்டப் பேரவை உறுப்பினர்கள் அமைச்சர்களுக்குக் கொடுக்கிற மனுக்கள், கடிதங்களுக்கு உரிய காலத்திலே பதிலோ, அதன்மீது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் என்ன என்பதற்கான விவரங்களோ கிடைப்பதில்லை. அமைச்சர்கள் சுறுசுறுப்பாகச் செயலாற்றுகிறவர்கள்தான். துறை அதிகாரிகள் இதிலே உரிய கவனம் செலுத்தி, அதற்குரிய பதிலை அனுப்பி வைப்பது இன்னும் உதவியாக இருக்கும் என்பதை நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

சபை விதிகளுக்கு உட்பட்டு, கவன ஈர்ப்புத் தீர்மானங்கள் போன்ற தீர்மானங்கள் கொடுக்கப்படுகிறபோது, அவற்றை எடுத்துக்கொள்வதற்கு என்ன அளவுகோல் என்பதைக்கூட நாம் விவாதிப்பது நல்லது. அது முழுக்க சபாநாயகருடைய அதிகாரத்துக்கு உட்பட்டது என்பதிலே எனக்கு மாறுபட்ட கருத்து இல்லை. அதைக்கூட கவனத்தில் எடுத்துக்கொள்ள வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். கொடுக்கிற தீர்மானத்தை யார்



கொடுக்கிறார்கள் என்பதைவிட, அந்தத் தீர்மானத்தினுடைய உள்ளடக்கம், பிரச்சினை, அது முக்கியமானதா என்பதைப் பார்த்து, அதை எடுக்க வேண்டுமென்று நான் இந்த நோத்திலே கேட்டுக்கொள்ள விரும்புகிறேன்.

சட்டமன்றக் கூட்டம் நடைபெறுகிற காலத்தில் தினக் கூலி அடிப்படையிலே வேலை செய்யக்கூடிய ஊழியர்கள், டைப் அடிப்பவர்கள், அலுவலக உதவியாளர்கள், துப்புரவுப் பணியாளர்கள் என்று சுமார் 500, 600 பேர் தொடர்ந்து பணியாற்றுகிறார்கள். சட்டமன்றக் கூட்டத்தொடர் முடிந்தால் அவர்களுக்கும் வேலையில்லாமல் இருக்கிறது. வேறு வேலைக்கும் அவர்கள் போக முடியாமல், இங்கேயும் தொடர்ச்சியாக வேலையில்லாமல் அவர்கள் பாதிக்கப்படுகிறார்கள். ஆகவே, அவர்களுக்குரிய ஒரு பணிப் பாதுகாப்பு அல்லது தொடர்ச்சியாக வேலை கொடுக்க வேண்டும். ஏற்கெனவே ஒரு முறை மாண்புமிகு முதல்வர் அவர்கள், சட்டமன்றம் இல்லையென்றாலும் மாதத்தில் 15 நாட்கள் அவர்களுக்குரிய வேலை கொடுக்கப்படும் என்றார்கள். அதுபோன்று ஏதாவது ஒரு வேலைக்கு உத்தரவாதம் அளிக்கிற வகையிலே ஏற்பாடு செய்ய வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பிலே பணியாற்றக்கூடிய காவலர்கள், மின் தூக்கிப் பணியாளர்கள், மின் பணியாளர்கள், துப்புரவிலே பணியாற்றுகிற ஆண், பெண் ஊழியர்கள், பிளம்பர்கள் போன்றவர்கள் 12 மணி நேரம் பணியாற்றுகிறார்கள். Contract அடிப்படையிலே அவர்கள் வேலை செய்து வருகிறார்கள். 7 வருடங்களாக இந்த நிலைமை தொடருகிறது. அவர்களுக்குரிய ஊதியம் ஏற்கெனவே நம்முடைய வீட்டு வசதி வாரியத்தின்மூலம் நிர்ணயிக்கப்பட்டது. காவலர்களுக்கு மாத வருமானம் எட்டு மணி நோத்திற்கு ரூ.2,790. ஆனால், இப்போது 12 மணி நேரத்திற்கு ரூ.1,400-ம், மின் தூக்கிப் பணியாளர்களுக்கு ரூ.3,600-க்கு வெறும் ரூ.1,400-ம், மின் பணியாளர்களுக்கு ரூ.4,050-க்கு ரூ.2,000-ம், பெண் துப்புரவாளர்களுக்கு ரூ.2,250-க்கு ரூ.900-ம், ஆண் துப்புரவாளர்களுக்கு ரூ.2,430-க்கு ரூ.1,400-ம், பிளம்பர்களுக்கு ரூ.4,290-க்கு ரூ.2,300-ம் என்ற அடிப்படையிலே 8 மணி நோத்திற்கு நம்முடைய வீட்டு வசதி வாரியத்தால் நிர்ணயிக்கப்பட்டிருக்கிற கூலியைவிட பாதிக் கூலி 12 மணி நோத்திற்கு வழங்கப்படுகிறது. இதிலே ஒரு மாற்றத்தை உருவாக்கி, வீட்டு வசதி வாரியத்தினுடைய ஊழியர்களாக அவர்களை மாற்ற வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகள் இரண்டு வகையினர். ஒன்று, மத்திய அரசுமூலமாக மாநில பென்ஷன் பெறக்கூடியவர்கள். மற்றொரு பகுதி, மாநில அரசின்மூலம் மத்திய அரசு ரூ.10,000 வழங்குவதாகத் தெரிவிக்கிறார்கள். அந்தத் தியாகி இறந்துவிட்டால், அவருடைய குடும்பத்திற்கு, மனைவிக்குப் பாதித்தொகை முழுமையாக வழங்குவதாகச் சொல்கிறார்கள். ஆனால் தமிழ்நாட்டிலே இப்போது ரூ.3,000 வழங்கப்படுகிறது. 15 ரூபாய் மருத்துவப் படி வழங்கப்படுகிறது. தியாகி இறந்துவிட்டால், அவரது மனைவிக்கு ரூ.1,500 என்ற நிலை இருக்கிறது. ஆகவே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் இந்த ஆண்டுத் தொடக்கத்திலே நடைபெற்ற கூட்டத் தொடரிலேகூட, பட்ஜெட் நேரத்திலே அது பரிசீலிக்கப்படும் என்று தெரிவித்தார்கள். அவர்கள் இந்த நேரத்திலே அது கூடுதலாக்கப்படும் என்று எதிர்பார்க்கிறார்கள். எனவே, அதை உயர்த்தித் தர வேண்டும். பஸ்ஸிலே பயணம் செய்யக்கூடிய அந்தத் தியாகிகள் வயதானவர்கள், அவர் ஒருவருக்குத்தான் பஸ் பாஸ் இருக்கிறது. இரண்டு பேர் பயணம் செய்யக்கூடிய வகையிலே, அவர்களுடைய உதவியாளரையும் அழைத்துச் செல்வதற்கு ஏற்பாடு செய்ய வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள்.

*முற்பகல் 11-40*

அதைப்போல, முன்னாள் கிராம அதிகாரிகளாக, 'கர்ணம்' என்ற பெயரிலே பணியாற்றி வந்தவர்கள் எல்லாம் 1980 ஆம் ஆண்டில் வீட்டுக்கு அனுப்பப்பட்டார்கள். ஆனால், அவர்களுக்கு மிகக் குறைந்த ஓய்வூதியம்தான் வழங்கப்படுகிறது. அவர்கள் இறந்துவிட்டால் அவர்களுடைய குடும்பத்தினருக்கு வெறும் 150 ரூபாய்தான் பென்ஷன் வழங்கப்படுகிறது. ஆகவே, இன்றைக்கு அவர்கள் முதியோர் ஓய்வூதியம்கூட வாங்குவதற்கு வாய்ப்பில்லை. முதியோர் ஓய்வூதியத்தைக்கூட 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாகத் தலைவர் கலைஞர் அவர்கள் அறிவித்திருக்கிறார்கள். ஆனால், கர்ணமாக வேலை செய்தவர்களுடைய குடும்பத்திற்கு 150 ரூபாய்தான் உதவித் தொகை இருக்கிறது. அதையும் இரத்துச் செய்துவிட்டால் அவர்கள் முதியோர் ஓய்வூதியமாவது பெறுவார்கள். ஆகவே, அதைப் பரிசீலித்து, உயர்த்த வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

சத்துணவு ஊழியர்கள். மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய மேலான பணிவான கவனத்திற்கு நான் சொல்ல விரும்புவது, தொடர்ந்து பல்வேறு சலுகைகளைப் பல ஊழியர்களுக்கு நீங்கள்





வழங்கியிருக்கிறீர்கள், அதை நாங்கள் வரவேற்கிறோம். அவர்கள் சத்துணவு ஊழியர்களாக 30 ஆண்டுகள் பணியாற்றிய பிறகு, அவர்களில் ஒரு பகுதி ஊழியர்கள் இன்றைக்கு ஓய்வூதிய வயதைக் கடந்து கொண்டிருக்கிறார்கள். குறைந்த ஊதியத்திலே வேலை செய்தார்கள். இன்றைக்கு வயதின் காரணமாக ஓய்வுபெற்றுச் சென்றால், அவர்களுக்கு எந்தவிதமான வாய்ப்பும் இல்லாத நிலை இருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களுடைய பொன் விழாவைக் கொண்டாடுகிற இந்த நல்ல நேரத்தில், சத்துணவு ஊழியர்களுக்கும், அங்கன்வாடி ஊழியர்களுக்கும் பணியிலிருந்து ஓய்வுபெறுகிறபோது அவர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதற்கான ஒரு நல்ல அறிவிப்பை மாண்புமிகு முதல்வர் அவர்கள் தங்களுடைய இந்தப் பொன் விழா ஆண்டிலே அறிவிக்க வேண்டுமென்று நான் அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் குறித்த ஒரு முக்கியமான கருத்தை நான் பதிவு செய்து உரையை முடிக்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீடு சம்பந்தமான பிரச்சினையில் இங்கே உறுப்பினர்கள் பலர் கோரிக்கை வைத்திருக்கிறார்கள். பத்திரிகைகளில் எல்லாம் சிலர் அறிவித்ததாகச் சொன்னார்கள். மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சிதான் தீர்மானமாக நிறைவேற்றி, அதைப் பத்திரிகையிலே அறிவித்திருக்கிறது. மாண்புமிகு முதல்வர் அவர்களால் ஏற்கெனவே கட்டிக் கொடுக்கப்பட்டிருக்கிற சட்டமன்ற உறுப்பினர் குடியிருப்பு எல்லா வசதிகளோடும், குடியிருப்பதற்குத் தகுதியான இடமாக இன்றைக்கு இருக்கிறது. ஆகவே, தனியாக ஒரு காலனி அவசியம் இல்லை என்பது மார்க்சிய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய பணிவான கருத்து. ஆனால், மற்றவர்கள் வாங்குவதற்கு நாங்கள் குறுக்கே நிற்கவில்லை. இது எங்களுடைய கருத்து. ஏனென்றால், மக்களிடத்திலே நம்மைப் பற்றி, அதிகாரம் இவர்கள் கையில் இருக்கிற காரணத்தினால், இதுபோன்ற முடிவுகளை மேற்கொள்கிறார்கள் என்ற ஒரு தவறான பார்வையும், தோற்றமும் ஏற்பட்டுவிடக் கூடாது என்பதை நான் இங்கே பதிவு செய்ய விரும்புகிறேன். அதை நீங்கள் கவனத்தில்கொள்ள வேண்டும்.

இப்போது ஊராட்சி மன்ற Chairman, நகர Chairman போன்றவர்களுக்கெல்லாம் அரசு வாகனங்கள் வழங்கப்பட்டு, பயன்படுத்தி வருகிறார்கள். அதேபோல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் திரு. மணி அவர்கள் சொன்னதைப்போல, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மக்களிடத்திலே நெருக்கமாகப்

பணியாற்றுவதற்கு ஒரு அலுவலகம் கொடுக்கப்பட்டிருக்கிற நிலையில், ஒரு அரசு வாகனமும் சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வழங்கலாம். அவருடைய பதவிக் காலம் முடிந்த பிறகு, அதை அரசே திரும்பப் பெற்றுக்கொள்ளலாம். அந்த வகையிலே மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஒரு வாகனம் கிடைக்க ஏற்பாடு செய்து தந்தால் சட்டமன்ற உறுப்பினர்களின் பணிகள் மேலும் சிறக்க வாய்ப்பாக இருக்கும் என்பதைச் சொல்லி, கடைசியாக ஒரே ஒரு கருத்தைச் சொல்ல விரும்புகிறேன்.

நம்முடைய அலுவலகத்திலே தற்காலிகப் பணியாளராகப் பணியாற்றிய திரு. அன்பழகன் என்கிற ஒருவர் நேற்றையதினம் நோய்வாய்ப்பட்டுத் திடீரென்று இறந்துவிட்டதாக ஒரு செய்தியைத் தெரிவித்திருக்கிறார்கள். அவர் எந்தவிதமான வாய்ப்பும், வசதியும் இல்லாத ஒரு ஏழைக் குடும்பத்தைச் சார்ந்தவர். ஆகவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள், கருணையோடு எத்தனையோ பல நல்ல அறிவிப்புகளைச் செய்திருக்கிற நீங்கள் அந்த அன்பழகன் குடும்பத்திற்கு, அவர் தற்காலிகப் பணியாளராக இருந்தாலும், அவரது குடும்பத்திற்கு ஏதாவது உதவி செய்து, அந்தக் குடும்பத்தைப் பாதுகாக்க முன்வர வேண்டுமென்று அன்போடு கேட்டு, விடைபெறுகிறேன். வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு முனைவர் ஜெயக்குமார். (குறுக்கீடு) நான் கூப்பிடுகிறேன். முனைவர் கு. ஜெயக்குமார் பேசட்டும். You are having only seven minutes.

***முனைவர் கு. ஜெயக்குமார்:** மாண்புமிகு அவைத் துணைத் தலைவர் அவர்களே, இன்றையதினம் ஐந்து மானியக் கோரிக்கைகளின்மீது விவாதம் நடந்துகொண்டிருக்கின்றது. குறிப்பாக நிதித் துறை. அரசின் இதயமாக இயங்குகின்ற இந்த நிதித் துறை, மதிப்பிற்கும், மரியாதைக்கும், வணக்கத்திற்கும் உரிய பேராசிரியர் பெருந்தகை அவர்களின் கண்காணிப்பிலே சிறப்பாக இயங்கிக்கொண்டிருக்கிறது. புதிய வரிகள் இல்லை, பழைய வரிகள் குறைப்பு. முந்தைய திட்டங்கள் எதையும் கைவிடாமல், வேண்டுமானால் இன்னும் சிறப்பாகவே செயல்படுத்த வேண்டுமென்று சுமார் 18 திட்டங்களை 13,333 கோடி ரூபாயிலே இன்றைக்குச் செயல்படுத்திக்கொண்டிருக்கின்றார்கள். இத்தகைய சிறப்பான துறையை மிகச் சிறப்பாகச் செயல்படுத்திக்கொண்டிருக்கிற மதிப்புமிகு பேராசிரியர் பெருந்தகை அவர்களை நான் வாழ்த்தக் கடமைப்பட்டிருக்கிறேன்.



இங்கே நான்காவது முறையாக ஒரு கோரிக்கையை இந்தச் சட்டமன்றத்திலே வைக்க நான் முன்வருகின்றேன். கடந்த மூன்று முறையாக ஒரு புதிய சட்டமன்றக் கட்டடத்தை நாம் நிறுவ வேண்டுமென்றும், தற்போதைய சட்டமன்றம் மிகவும் குறுகலாகவும், ஆங்காங்கே அமர்ந்திருக்கின்ற உறுப்பினர்களைக்கூட மற்றொரு உறுப்பினர் பார்த்துக்கொள்ள முடியாத அளவுக்கு இருக்கின்றது என்பதையும் நான் ஏற்கெனவே சுட்டிக்காட்டியிருக்கிறேன். அதுமட்டுமல்ல, இந்தக் கட்டடமானது 1640 ஆம் ஆண்டிலே கட்டப்பட்டது. இந்த வயதுடைய கட்டடங்களெல்லாம் இடிந்து விழுந்துகொண்டிருக்கின்றன. அந்த நிலையில் இருக்கின்றபொழுது, கடந்த அரசானது புதிய சட்டமன்றம் கட்ட முயற்சித்தது. அது நல்ல முயற்சிதான். ஆனால், தவறான முறையில் அணுகிய காரணத்தினால், அதைச் செயல்படுத்த முடியாமல் போய்விட்டது. இன்றைக்கு இருக்கின்ற அரசு, முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் தலைமையிலே இருக்கின்ற அரசு சரியான அணுகுமுறையைக் கொண்டிருக்கின்ற அரசு, மக்களுடைய மனநிலை கண்டு செயல்படுகின்ற இந்த அரசு, கலைஞர் சட்டமன்றப் பணியின் பொன் விழாக் காலத்திலே நல்லதொரு சட்டமன்ற வளாகத்தை நிறுவ வேண்டும். பக்கத்திலே இருக்கின்ற எந்த மாநிலத்தை வேண்டுமானாலும் பாருங்கள். பக்கத்திலே இருக்கின்ற கர்நாடக மாநிலத்தைப் பாருங்கள். ஆந்திர மாநிலத்தைப் பாருங்கள். மத்தியப் பிரதேச மாநிலத்தைப் பாருங்கள். பஞ்சாப் மாநிலத்தைப் பாருங்கள். எந்த மாநிலத்தை எடுத்துக்கொண்டாலும், மிகச் சிறப்பான வசதிகள் நிறைந்த சட்டமன்றம் இருக்கின்ற நோத்திலே, நாம் மட்டும் ஏன் இந்த பழைய சட்டமன்றத்திலே இருக்க வேண்டும்? மாண்புமிகு அமைச்சர்களைச் சென்று பார்க்க வேண்டுமென்றாலும்கூட, அமைச்சர்கள்கூட, மிகக் குறுகலான அறைகளிலே அமர்ந்து கொண்டு, பார்வையாளர்களெல்லாம் வெளியிலே நிற்கின்ற நிலை இருக்கிறது. எனவே, புதியதொரு சட்டமன்ற வளாகத்தை முத்தமிழறிஞர் அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே நாம் கட்டியாக வேண்டும் என்பதை இங்கே நான் வலியுறுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 11-45*

எனக்கு முன்பாகப் பேசிய சட்டமன்ற உறுப்பினர் இந்திய தேசிய காங்கிரஸ் கட்சியைச் சார்ந்த எனதருமை இளவல் மாண்புமிகு திரு. ஞானசேகரன் அவர்கள், பல கோரிக்கைகளை இங்கே வைத்தார்கள். அவற்றைத் திரும்பச் சொன்னால், சொன்னதையே

சொல்கின்ற கிளிப் பிள்ளையின் நிலையாக இருக்கும் என்ற காரணத்தினால், அவர் சொன்ன அத்தனை கருத்துகளையும் நான் இங்கே வலியுறுத்துகின்றேன். அவர் ஓரிரு கருத்துகளைச் சொல்லாமல் விட்டுவிட்டார் என்று கருதுகின்றேன். வாகனம் அவர் கேட்கவில்லை. இந்த வசதிகளையெல்லாம் நாங்கள் இங்கே கேட்பது, சட்டமன்ற உறுப்பினர்களுக்காக அல்ல. இந்தச் சட்டமன்றத்திலே இருக்கின்ற ஒவ்வொரு உறுப்பினரும் வாக்குறுதிகளைக் கொடுத்து, வாக்குகளைப் பெற்று, சட்டமன்ற உறுப்பினர்களாக வந்திருக்கின்றோம். நாம் செயல்பட வேண்டும். சிறப்பாகச் செயல்பட வேண்டுமென்றால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வேண்டிய அத்தனை வசதிகளையும் செய்து தர வேண்டியது, இந்த அரசினுடைய கடமை என்றுகூட நான் சொல்வேன். ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்களெல்லாம் சிறப்பாகச் செயல்படுவதற்கு வாகனம் வேண்டும்.

அது மட்டுமல்ல, நாம் வாக்குறுதிகளைக் கொடுத்து இங்கே வந்திருக்கின்றோம். இந்த ஐந்தாண்டு காலத்திலே, கலைஞர் அவர்களுடைய சட்டமன்றப் பணியின் பொன் விழாக் காலத்திலே, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும், அதன் நினைவாக ஐந்து கோடி ரூபாயிலிருந்து பத்துக் கோடி ரூபாய் அளவிற்கு ஏதாவது ஒரு திட்டத்தைச் செயல்படுத்த வேண்டும். அது, பள்ளிகளைத் தொடங்குவதாக இருக்கலாம்; கல்லூரிகளை நிர்மாணிப்பதாக இருக்கலாம்; இயங்காத தொழிற்சாலைகளை மீண்டும் இயக்குவதாக இருக்கலாம். இதன் நினைவாக, ஒவ்வொரு சட்டமன்றத் தொகுதியிலும் ஐந்து கோடி ரூபாயிலிருந்து, பத்து கோடி ரூபாய் வரையிலான திட்டங்களை இந்த அரசு கண்டிப்பாகச் செயல்படுத்த வேண்டுமென்று நான் இங்கே கேட்டுக்கொள்கின்றேன்.

சுதந்திரப் போராட்டத் தியாகிகளைப் பற்றி இங்கே ஒரு சிலர் குறிப்பிட்டார்கள். நான் அண்மையிலேதான், அவைக் குழுவின் தலைவர் என்ற முறையிலே அந்தமான் தீவிற்குச் சென்று வந்தேன். அங்கேயிருக்கின்ற கூண்டுச் சிறையைப் பார்த்தேன். அந்தக் கூண்டுச் சிறையில்--The Cellular Jail என்று சொல்கிறார்களே, அந்தக் கொடுமை நிறைந்த ஜெயிலில், அந்தச் சிறைக்கு இணையாக வேறு எந்தவொரு கொடுமையான சிறையும் இந்தியாவிலே அல்ல, உலகத்திலேயேகூட இருக்க முடியாது. சுதந்திரப் போராட்டத் தியாகிகள் பட்ட பாட்டினை, அங்கே சென்று பார்த்து வந்தவர்களுக்கு நன்றாகத் தெரியும். எனவே, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்குக்



கொடுக்கப்படுகின்ற மாநில ஓய்வூதியம் மத்திய அரசு வழங்குகிற அளவிற்கு உயர்த்தப்பட வேண்டுமென்றும், அவர் இறந்த பிறகு, அவருடைய மனைவிக்கும், மணமாகாத மகள் இருந்தால், அவருக்கும் கொடுக்கப்பட வேண்டும். அவர்கள் தங்களுடைய வயதான காலத்தில் பேருந்துகளில் பயணம் செய்கின்றபோது, அவர்களுக்குத் துணையாக ஒருவர் செல்கின்ற அளவிற்கு, அவர்களுக்கு இலவசப் பயணச் சலுகை அளிக்கப்பட வேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன். சுதந்திரப் போராட்டத் தியாகிகள் கொடுத்திருக்கின்ற மனுக்களில் பல பரிசீலிக்கப்படாமல் தேர்வு நிலையிலேயே இருக்கின்றன. இந்த மனுக்களெல்லாம் பரிசீலிக்கப்பட வேண்டும் என்பதையும் இங்கே நான் அழுத்தமாகச் சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களுக்கு மீண்டும் ஒரு கருத்தை இங்கே நான் சொல்லக் கடமைப்பட்டிருக்கிறேன். கடந்த முறை பொது விவாதத்திலே நான் பேசியபொழுதுகூட, இலவச அரிசித் திட்டத்தைப் பற்றிப் பேசினேன். "30 கிலோ அரிசியை நீங்கள் இலவசமாக வழங்கினாலும், உங்களுக்கு 800 கோடி ரூபாய் மிச்சமாகும். ஆனால், அதை வறுமைக் கோட்டிற்குக் கீழாக இருக்கின்ற மக்களுக்கு மட்டும் கொடுக்கின்ற நிலை ஏற்பட்டால், இந்த அரசுக்கு 1,000 கோடி ரூபாய்க்குமேலாக மிச்சமாகும்" என்பதை நான் கடந்த முறை சொன்னேன். அதை மீண்டும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள் பரிசீலிக்க வேண்டுமென்று நான் இங்கு மிகப் பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

கடந்த முறை மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் மற்றொன்றையும் சொன்னேன். விவசாயிகளுக்கு சுமார் 7,000 கோடி ரூபாய் கடனை நாம் இரத்துச் செய்திருக்கிறோம். தாட்கோவில் கடன் பெற்றவர்களின் புள்ளிவிவாத்தை நான் அணுகிப் பார்த்தேன். 75 கோடி ரூபாய்தான் உள்ளது. 7,000 கோடி ரூபாயில் 75 கோடி ரூபாய் என்பது, ஒரு சதவிகிதத்திற்கும் குறைவாக வருகின்ற பணமாக இருக்கின்ற காரணத்தினால், தாட்கோமூலம் கொடுக்கப்பட்டிருக்கின்ற கடன் அத்தனையையும் தாங்கள் இரத்துச் செய்ய வேண்டும் என்பதை இங்கே பணிவன்போடு நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) இந்த முறை, இந்த அரசு, இதைக் கண்டிப்பாகப் பரிசீலிக்கும் என்பதையும், இந்தக் கடனை இரத்து செய்வதன்மூலம், 20,000 பேர் இந்தக் கடன் தொல்லையிலிருந்து மீட்கப்படுவார்கள் என்பதையும் இங்கே நான் தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

முற்பகல் 11-50

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, சிறு சேமிப்பிலே, ஏற்கெனவே இருந்த கடந்த கால அரசு, அவர்களுக்குக் கொடுக்கப்பட்டு வந்த ஊக்கத் தொகையைக் குறைத்திருக்கின்றது. அந்தக் குறைக்கப்பட்ட ஊக்கத் தொகையைத் தாங்கள் இந்த முறை ஈடு செய்ய வேண்டுமென்று பணிவன்போடு கேட்டுக்கொள்கின்றேன்.

இன்று காலையில்தான் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களிடம் சிறப்பு உட்கூறுத் திட்டத்தைப் பற்றிய மத்திய அரசினுடைய வழிகாட்டுதலைக் கொடுத்தேன். அந்த வழிகாட்டுதலின்படிச் செய்தால் நாம் இந்தச் சிறப்பு உட்கூறுத் திட்டத்தைச் சிறப்பாகச் செயல்படுத்த முடியும் என்றும், சிறப்பு உட்கூறுத் திட்டத்தின்கீழ் செலவு செய்யப்படுகின்ற நிதி அத்தனையும், நேரடியாக இந்தச் சமுதாயத்தின் அடித்தளத்தில் இருக்கின்ற மக்களுக்குச் சென்று சேர வேண்டும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, ஆசிய ஜோதி என்று அழைக்கப்பட்ட நேரு அவர்கள், ஒன்பது ஆண்டு காலம் சிறையிலே இருந்து, 17 ஆண்டு காலம் பிரதமராக இருந்தார்கள். கர்ம வீரர் காமராஜர் அவர்கள் சுதந்திரப் போராட்டத்திலே ஈடுபட்டு, ஒன்பது ஆண்டு காலம் சிறையிலே இருந்தும், ஒன்பது ஆண்டு காலம் இந்த மகாசபையிலே முதலமைச்சராக இருந்தார்கள். பெருந்தலைவர்களெல்லாம் அன்றைக்குத் தங்களைத் தியாகம் செய்துகொண்டபொழுது, கர்ம வீரர் காமராஜரோ, நேருவோ, தாம் இந்த நாட்டிற்குப் பிரதமராக எதி காலத்தில் வரப் போகின்றோம் என்றோ, தமிழகச் சட்டமன்றத்திலே முதல்வராக இருப்போம் என்றோ நினைத்து தங்களுடைய வாழ்க்கையைத் தியாகம் செய்துகொள்ளவில்லை. தந்தை பெரியார்கூட தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ் மக்களின் மேம்பாட்டிற்காகத் தங்களை அர்ப்பணித்துக்கொண்டவர்கள். அந்த வழியிலே, தந்தை பெரியார் அவர்கள், பச்சைத் தமிழன் காமராஜர் என்று சொன்னார்கள். (மேசையைத் தட்டும் ஒலி) அந்தப் பச்சைத் தமிழன் காமராஜர் அவர்களைப் போன்றும், தந்தை பெரியார் அவர்களைப்போன்றும், தந்தை பெரியார் அவர்களின் கொள்கையை ஏற்றும், அவர்களைத் தலைவராக ஏற்றுக்கொண்ட அண்ணா அவர்களுடைய வழியிலே நின்று, தமிழுக்காக, தமிழ் மக்களுக்காக, தமிழ் மண்ணிற்காக தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் கலைஞர். பலருக்கு வாழ்க்கை ஒரு போராட்டம், கலைஞருக்கு போராட்டமே வாழ்க்கை.



ஒரு போராளியாக, இந்தத் தமிழ் மக்களுக்காக வாழ்ந்துகொண்டிருக்கின்ற கலைஞர் மேலும் பல்லாண்டு நம்மோடு இருந்து வாழ வேண்டுமென்ற எண்ணத்திலே, முதலமைச்சர் கலைஞர் அவர்கள், நான் இந்தப் பூமியிலே இருக்கும்மட்டும் அவர்களும் என்னோடு இருக்க வேண்டுமென்று வாழ்த்துகளைச் சொல்லி, விடைபெறுகிறேன். நன்றி. (மேசையைத் தட்டும் ஒலி)

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** அடுத்து, மாண்புமிகு உறுப்பினர் திரு. இளவரசன் அவர்கள். (குறுக்கீடு) மாண்புமிகு உறுப்பினர் திரு. இராமசாமி அவர்கள்.

**திரு. தி. இராமசாமி:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, இந்த அவையில் நமக்கெல்லாம் வழிகாட்டியாக இருந்து, 50 ஆண்டு காலம் இந்த அவைக்குச் சிறப்புக் கொடுத்து, இன்றைக்குப் பொன் விழாக் காணும் நாயகர் நமது தலைவர் கலைஞர் அவர்களை முதலில் வணங்குகிறேன். இந்திய கம்யூனிஸ்ட் கட்சியின் சார்பில், ஒரு மாபெரும் இயக்கம் என்ற அடிப்படையில் நமது தமிழக முதல்வர் அவர்களுக்கு வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

இந்தச் சட்டமன்றம் பேரறிஞர் அண்ணா, பெருந்தலைவர் காமராஜர், இலக்கியச் செல்வர் ஜீவானந்தம் போன்ற மாபெரும் தலைவர்கள் அலங்கரித்த அவை. இந்த அவையில் நாமெல்லாம் சட்டமன்ற உறுப்பினராக வந்திருப்பது பெருமை. எனினும், நமது தமிழக முதல்வர் மாண்புமிகு தலைவர் கலைஞர் அவர்களுடைய காலத்தில் இந்த அவையில் அங்கம் பெற்றிருக்கிறோம் என்பதையும், வரலாற்றில் அவர்களோடு சேர்ந்து, அவருக்கு இருக்கின்ற அந்த வரலாற்றுப் பெருமையை நமக்கும் சேர்த்து அளித்திருக்கிறார்கள் என்பதையும் நினைவுகூரும்பொழுது அவர்களுக்கு நாம் அனைவருமே நன்றி சொல்லக் கடமைப்பட்டிருக்கின்றோம். சட்டமன்ற உறுப்பினர்கள் என்று வரும்பொழுது, இப்போது சினிமாவிலேயெல்லாம் பெரும்பாலும் வில்லன்களாகத்தான் சட்டமன்ற உறுப்பினர்களைக் காட்டுகிறார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் இப்படித்தான் இருப்பார்கள் என்பதைப்போல, அடிதடி நடத்துவது, சமூக விரோதக் காரியங்களில் ஈடுபடுவது போன்று சட்டமன்ற உறுப்பினர்களைக் காட்டுகிறார்கள். அதனால், சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் மக்கள் சேவகர்கள், மக்களுக்காகப் பணியாற்றக்கூடியவர்கள், பொறுப்புணர்வோடு

[திரு. தி. இராமசாமி] [2007 மே 9

சேவை செய்வார்கள் என்று நல்ல முறையில், சித்தரிக்கின்றவகையில் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நடவடிக்கைகள் இருக்க வேண்டியிருக்கிறது. இன்றைக்கு இந்த மாமன்றத்தில் பல உறுப்பினர்களுடைய பேச்சுக்கள் மக்களுடைய பிரச்சினைகளை எடுத்து வைக்கின்ற முறையில், அதிக கருத்து உள்ளவையாக இருக்க வேண்டும்.

*முற்பகல் 11-55*

இன்றைக்கு நமது சபாநாயகர் அவர்கள் அனைவருக்கும், இன்னும் சொல்லப் போனால் எதிர்க்கட்சியாக இருப்பவர்களுக்குத் தாராளமாக நேரத்தை ஒதுக்கி, எல்லாச் சலுகைகளையும் கொடுத்து, அவர்கள் கேட்கின்ற கோரிக்கைகளையெல்லாம் நிறைவேற்றி, மிகுந்த பெருந்தன்மையோடு நடந்துகொள்கிறார். அப்படிப்பட்ட ஒரு சபாநாயகரைப் பெற்றிருக்கின்ற இந்த அவையில், சட்டமன்ற உறுப்பினர்கள் பேசுகின்ற பேச்சுக்கள் அவைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட வேண்டிய ஒரு நிலை இன்னும் இருக்கிறது என்று சொன்னால், நம் அனைவருடைய பேச்சுக்களுமே அவைக் குறிப்பில் இடம்பெறக்கூடிய முறையில் நமது நடவடிக்கைகள் அமைய வேண்டுமென்பதை இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள், நாடாளுமன்ற உறுப்பினர்களுடைய செயல்பாடுகள் எல்லாம் சரியில்லை என்று சொன்னால், மக்களே திரும்ப அழைத்துக்கொள்கின்ற அந்தச் சட்டங்கள் பல மேலைநாடுகளிலே இருக்கின்றன. இன்றைக்கு நாமெல்லாம் இரண்டு இலட்சம் மக்களுடைய பிரதிநிதிகள் என்று பெருமையோடு சொன்னாலும், அந்த மொத்த எண்ணிக்கையில் மூன்றில் ஒரு பங்கு வாக்குகள்கூடப் பெற முடியாதவர்கள்கூட சட்டமன்ற உறுப்பினர்களாகி இந்த ஜனநாயகத்தில் நாம் வந்திருக்கிறோம். அப்படிப்பட்ட முறையில் அனைவரையும் மதித்து, மக்களுக்கு உகந்த முறையில் நடந்துகொள்வது என்பது நமது கடமையாக இருக்கிறது. அதை மீறுபவர்களைத் திரும்ப அழைக்கின்ற சட்டங்களைக்கூட இன்றைக்கு இந்த நாட்டில் கொண்டு வர வேண்டும்.

அதேபோல, கடந்த காலத்தில் நாங்கள் எல்லாம் இந்த அவைக்கு வராமல் வெளியே இருக்கும்போது, பத்திரிகைகளைப் படிக்கும்போது, 45 மானியக் கோரிக்கைகள் மூன்று நாளில் விவாதித்து முடிக்கப்பட்டுவிடும். இங்கே வந்து பார்த்த பிறகுதான் தெரிகிறது,



2007 மே 9] [திரு. தி. இராமசாமி]

45 மானியக் கோரிக்கைகளுக்கான விவாதங்கள் இப்போது கிட்டத்தட்ட இரண்டு மாதங்களுக்குமேலாக இந்த அவையில் நடந்துகொண்டிருக்கின்றன. அப்படி நடந்துகொண்டிருந்தாலும், இன்னும் எங்களுக்கு நேரம் போதவில்லை என்று சட்டமன்ற உறுப்பினர்கள் சொல்லிக்கொண்டிருக்கின்றோம். மூன்று நாட்களில் வாசித்து முடிப்பதற்குக்கூட நேரம் காணாது. அப்படிப்பட்ட நிலையில் கடந்த காலத்தில் சட்டமன்றம் நடந்தது. வெளியே இருந்துதான், சட்டமன்றத்தில் ஜனநாயகம் இல்லை என்று குரல் கொடுத்திருக்கிறோம். சட்டமன்றத்தில் நடந்த சம்பவங்களுக்குக்கூட இதே சட்டமன்றத்திற்குள் இருக்கிற உறுப்பினர்கள்மீது பிரிவு 307-ன்கீழ் வழக்குப் போட்டு, இங்கேயிருந்தே சிறைச்சாலைக்குக் கொண்டு சென்ற கொடுமைகளை எல்லாம் பத்திரிகைகளிலும் படித்திருக்கிறோம். மக்கள் இயக்கத்தையும் கடந்த காலத்தில் தொடர்ந்து நடத்தியிருக்கிறோம்.

நமது முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றதற்குப் பிறகு, சட்டமன்றம் என்றால் எப்படிப்பட்ட ஒரு ஜனநாயக முறைப்படி, ஒரு மாண்போடு நடந்துகொள்ள வேண்டுமென்பதற்கு ஒரு எடுத்துகாட்டானமுறையில், இன்றைக்கு நடந்துகொண்டிருக்கிறது. முதல்வர் அவர்களைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, அமைச்சர் பெருமக்களைச் சந்திக்க வேண்டுமென்று சொன்னாலும் சரி, எந்த நேரத்திலும் சந்திப்பதற்கான ஒரு வாய்ப்பு என்பது இந்த ஜனநாயகத்தில் கிடைத்திருக்கிறது என்பதை நான் இந்த நேரத்தில் பதிவு செய்யக் கடமைப்பட்டிருக்கிறேன். ஏனென்றால், இப்படிப்பட்ட மாண்புகள் நிறைந்த இந்தச் சட்டமன்றம் நமது முதல்வர் அவர்கள் காலத்தில் மேலும் பெருமை சேர்த்துக்கொண்டிருக்கிறது என்பதை உறுதிப்படுத்தி, இன்றைக்கு நமது உறுப்பினர், மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியினுடைய. . .

*நண்பகல் 12-00*

**மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. இளவரசன். (குறுக்கீடு) இல்லை, அவ்வளவுதான். Correct ஆக 7 minutes தான். அதற்கு மேலே முடியாது. திரு. இளவரசன், நீங்கள் பேசுங்கள். (குறுக்கீடு) அநேகமாக இன்றைக்கு நம்முடைய தமிழ்நாடு சட்டசபையைப் பற்றிப் பேசுவீர்கள் என்று நம்புகிறேன்.

***திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் குறித்த மானியக் கோரிக்கைகளின்மீது பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, "ஜனநாயகம் என்பது வீட்டு விளக்கு, சர்வாதிகாரம் என்பது காட்டுத் தீ" என்றார் பேறிஞர் அண்ணா அவர்கள். உலகத்தில் இருக்கின்ற ஆட்சி முறைகளில் ஜனநாயக ஆட்சி முறைதான் தலைசிறந்தது என்று எல்லோரும் ஒப்புக்கொள்கின்ற நிலையில், டாக்டர் நாவலர் அவர்கள், உலகத்திலே இருக்கின்ற பல்வேறு ஆட்சி முறைகளைப் பற்றியெல்லாம் விளக்கமாக எடுத்துச் சொல்லியிருக்கிறார்கள். அவர் சொன்னார், "தனி மனிதன் ஆதிக்கம் செலுத்தும் ஆதிக்க ஆட்சி, அரசன் மகன் அரசாளும் கோன் ஆட்சி, மக்கள் கூடி ஆளும் குடியாட்சி, குடிமக்களும், கோனும் சேர்ந்து ஆளும் குடிகோன் ஆட்சி, உயர்குடி மக்கள் ஆதிக்கம் செலுத்தும் உயர்குடி ஆட்சி, தனித் தனிக் குழுவினர் ஆதிக்கம் செலுத்துகின்ற குழு ஆட்சி, எல்லா அதிகாரங்களையும் தனி ஒருவனே வைத்து ஆளுகின்ற சர்வாதிகார ஆட்சி, படைத் தலைவர் ஆதிக்கம் செலுத்தும் படையினர் ஆட்சி, மதத் தலைவர் ஆதிக்கம் செலுத்தும் மதவாத ஆட்சி, நாசிச மனப்பான்மையோடு ஆளும் நாசிச ஆட்சி, பாசிசக் கொள்கையோடு ஆளும் பாசிச ஆட்சி, சமதர்ம நோக்கத்தைக்கொண்டு ஆளுகின்ற சமதர்ம ஆட்சி, அதேபோல, பொதுவுடைமைக் கொள்கைகளைக்கொண்ட பொதுவுடைமை ஆட்சி, குடிமக்களின் பிரதிநிதிகளைக்கொண்ட பாராளுமன்ற ஜனநாயக ஆட்சி போன்ற பல்வேறு ஆட்சி முறைகள் இந்த நாட்டிலே, உலகத்தில் இருந்தாலும், இதில் தலைசிறந்ததும், பயன் மிக்கதும், பண்பட்டதும், சிறப்பு மிக்கதுமானது ஜனநாயக ஆட்சி முறையே தலைச்சிறந்தது" என்றார் டாக்டர் நாவலர் அவர்கள்.

பாராளுமன்ற ஜனநாயக முறை வெற்றிபெற, பாராளுமன்ற, சட்டமன்ற உறுப்பினர்கள் ஜனநாயகப் பண்பு, ஜனநாயகக் கொள்கைகள், கோட்பாடு, குறிக்கோள்களை எந்த நிலையிலும் கட்டிக் காத்திட வேண்டும் என்று இந்தச் சந்தர்ப்பத்தில் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.



இங்கிலாந்து பாராளுமன்றம்தான் பாராளுமன்றத்தின் தாய் என்று கருதப்படுகிறது. பார்லர் என்ற பிரெஞ்சுச் சொல்லிலிருந்துதான் பாராளுமன்றம் என்ற ஆங்கில வார்த்தை வழக்கத்திற்கு வந்திருக்கிறது. 13 ஆம் நூற்றாண்டில் பாராளுமன்றம் தோன்றி இருக்கிறது. அது 14 ஆம் நூற்றாண்டில்தான் வளர்ச்சி பெற்றிருக்கிறது என்ற வாலாற்றை நம்மால் பார்க்க முடிகிறது. இங்கிலாந்து பாராளுமன்றத்தைப் பின்பற்றித்தான் நம்முடைய நாட்டில் பாராளுமன்ற, சட்டமன்ற முறைகள் எல்லாம் நடைமுறையிலே இயங்கி வருகின்றன. இந்த நாட்டில் எழுதப்பட்ட அரசியல் சட்டம் மட்டும் நம்முடைய நாட்டிலே வழக்கத்தில் இருந்து வருகிறது.

அதுவும் தமிழகத்திற்கு என்று ஒரு தனிச் சிறப்பு இருக்கிறது. ஏறத்தாழ ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால் சோழர் காலத்திலே குடவோலை முறையின்மூலமாக இங்கே ஜனநாயகப் பண்பு மலர்ந்தது நம்முடைய தமிழகத்தில்தான் என்ற தனிச் சிறப்பு நமக்கு மட்டுமே இருக்கிறது. மான்டேகு-செம்ஸ்ஃபோர்டு சீர்திருத்தத்தின் அடிப்படையில் 1919 ஆம் ஆண்டு இயற்றப்பட்ட இந்திய அரசியல் சட்டத்தின்படி இங்கே தேர்தல்கள் நடத்தப்பட்டன. 1921 ஆம் ஆண்டு Connaught கோமகனால் இந்தச் சட்டமன்றம் அன்றைக்குத் தொடங்கி வைக்கப்பட்டிருக்கிறது. 1922 ஆம் ஆண்டில் அன்றைக்குச் சென்னை மாநிலத்தின் ஆளுநராக இருந்த வெலிங்டன் பிரபுவும், அவருடைய துணைவியாரும்தான் நம்முடைய சபாநாயகர் அமரக்கூடிய இந்த 8 அடி உயரமுள்ள தேக்கு மரத்தாலான இந்த அழகிய வேலைப்பாடு அமைந்த இருக்கையை இங்கே வழங்கி இருக்கிறார்கள் என்பதைப் பார்க்க முடிகிறது.

*(மாண்புமிகு பேரவைத் தலைவர் தலைமை)*

*பிற்பகல் 12-05*

முதல் தேர்தலில் நீதிக் கட்சி வெற்றிபெற்று, திரு. அ. சுப்பராயலு ரெட்டியார் முதலமைச்சராகப் பதவி ஏற்கிறார். அதற்குப் பிறகு, பனகல் அரசர் டாக்டர் பி. சுப்பாராயன், திரு. பி. முனுசாமி நாயுடு, பொப்பிலி ராஜா, திரு. பி.டி. இராசன், திரு. கே.வி. ரெட்டி நாயுடு, மூதறிஞர் இராஜாஜி, திரு. டி. பிரகாசம் அவர்கள், திரு. ஓ.பி. ராமசாமி ரெட்டியார், திரு. பி.எஸ். குமாரசாமி ராஜா, பெருந்தலைவர் காமராஜர், திரு. எம். பக்தவத்சலம், அறிஞர் அண்ணா, நம்முடைய மாண்புமிகு முதல்வர் அவர்கள், புரட்சித் தலைவர், மாண்புமிகு புரட்சித் தலைவி போன்றவர்கள் இங்கே ஆட்சியில்

முதலமைச்சர்களாக இருந்து ஆட்சி செலுத்தினார்கள், செலுத்தி வருகிறார்கள் என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

ஜனநாயகத்தின் அடையாளச் சின்னமாக இருப்பது நம்முடைய சட்டமன்றம் என்பதை இந்தச் சந்தர்ப்பத்திலே சுட்டிக்காட்ட விரும்புகிறேன். சட்டசபை உறுப்பினர்கள் அரசாங்கம் என்பதை சமூக நன்மைக்கு ஏற்றதொரு அமைப்பாக, அதுவும் மக்களின் உண்மைப் பிரதிநிதித்துவம்கொண்ட பஞ்சாயத்தாகத்தான் கருத வேண்டுமே தவிர, அதை ஓர் அதிகார அமைப்பாகக் கருதவோ, பதவி சுகிக்கும் அமைப்பாகவோ கருதக் கூடாது என்றார் தந்தை பெரியார் அவர்கள். அதைத்தான் இப்படிப்பட்ட நம்முடைய சிறப்பு மிகுந்த சட்டமன்றத்தில் பேரறிஞர் அண்ணா அவர்கள் 1957-லே சட்டமன்ற உறுப்பினராக இங்கே அடியெடுத்து வைத்ததற்குப் பிறகுதான் இங்கே ஜனநாயகப் பண்பாடு மலர்ந்தது, போற்றப்பட்டது, பெருமைபெற்றது என்பதை இந்தச் சந்தர்ப்பத்தில் நான் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அண்ணா அவர்கள் சொன்னார்கள், 'அதிகாரம் என்பது ஒரு போதை தரும் பொருள். அது பருகப் பருக இனிக்கும், பழகப் பழக அதிலே சொக்கி விழாதவர்கள் மிகச் சிலரே. அதிலும் ஆட்சி அதிகாரம் அதிகமான போதையைத் தரும், அதைப் பருகுவோர் பரமானந்தம் அடைந்து, பாதம் பூமியில் சரியாகப் படியாதபடி தாண்டவம் ஆடுவர், அந்தப் போதையின் விளைவாக எதேச்சதிகாரம், சர்வாதிகாரம் ஏற்படும். தட்டிக் கேட்க ஆள் இல்லாவிட்டால் தம்பி, சண்டப்பிரசண்டனாக மாறிவிடுவான், அதைப்போல, ஆளுங்கட்சிக்கு எதிர்க்கட்சி இல்லாவிட்டால், எவரும் இல்லை என்ற மனப்பான்மை கொண்டுவிட்டால், ஜனநாயக நோக்கம் சீரழிந்து போய்விடும், ஆளுங்கட்சிக்கு அளவுக்கு மீறிய போதை ஏறாமல் இருக்க வலிமையான எதிர்க்கட்சி இருந்தே தீர வேண்டும்' என்று பேரறிஞர் அண்ணா அவர்கள் அன்றைக்கு எடுத்துச் சொன்னார்கள்.

ஜனநாயகத்தின் இலக்கணமாக அப்படிச் சொல்லி, ஜனநாயகத்திற்கு இலக்கணம் வகுத்த அறிஞர் அண்ணா அவர்கள் 1967 ஆம் ஆண்டு முதலமைச்சராகப் பொறுப்பேற்றதற்குப் பிறகு, தமிழினம் இருக்கும் வரையிலும்--இந்த உலகத்தில், இந்த மண்ணில் தமிழினம் இருக்கும் வரையிலும் நினைத்து நினைத்து மகிழத்தக்கவிதமாகத் 'தமிழ்நாடு' என்ற பெயர் சூட்டி ஒரு வரலாற்றுச் சிறப்பு மிக்க தீர்மானத்தை இந்தச் சபையிலே நிறைவேற்றிக்



காட்டினார்கள். அதேபோல, தமிழை ஆட்சி மொழியாக்கி, இரு மொழித் திட்டத்தை இங்கே கொண்டு வந்து, அண்ணா அவர்கள் இந்த அவையிலே சாதனை நிகழ்த்திக் காட்டினார்கள் என்பதைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.

அரசியல் நாகரிகத்திற்கும், ஜனநாயகப் பண்பாட்டிற்கும் இலக்கணமாக இந்த மன்றத்திலே இருந்து விளங்கியவர் பேரறிஞர் அண்ணா அவர்கள். 1967-லே அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்ததற்குப் பிறகு, காங்கிரஸ் வெற்றி வாய்ப்பை இழந்தவுடன், அப்போது. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** உரையை முடியுங்கள். 7 நிமிடங்கள் ஆகிவிட்டன.

**திரு. வீர. இளவரசன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆளுங்கட்சிக்கு, ஆளுங்கட்சியில் உள்ள சாதனைகளை, அவர்களுடைய திட்டங்களையெல்லாம் சொல்வதற்கு ஆளும் கட்சியும் அவர்களுக்கு ஆதரவாக உள்ள கூட்டணிக் கட்சிகளும் இருக்கின்றன. ஆனால், ஆட்சியில் உள்ள குற்றம், குறைகளைச் சுட்டிக்காட்டுகின்ற கடமையும், பொறுப்பும் எதிர்க்கட்சிகளுக்குத்தான் இருக்கின்றன.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. என். மாலைராஜா.

**திரு. என். மாலைராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை உள்ளிட்ட ஐந்து மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கு இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். சட்டமன்ற வரலாற்றில் 50 ஆண்டு காலப் பொன் விழாக் காணும் வரலாற்று நாயகர், வள்ளுவருக்குக் கல்லோவியமும், குறளுக்குச் சொல்லோவியமும் தந்த ஒப்பற்ற தலைவர், கொண்ட கொள்கைக்காக எவ்விதத் தியாகமும் செய்திடத் தயங்காத தன்மானமிக்க எங்கள் குடும்பத் தலைவர், தலைவர் கலைஞர் அவர்களுக்கும், (மேசையைத் தட்டும் ஒலி) வரி இல்லாத நிதிநிலை அறிக்கை தந்த இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும், ஊராட்சித் தத்துவம் உயிர்பெற்று எழுந்து ஊர்தோறும் உலவச் செய்த மக்களாட்சியின் மகத்துவத்தைப் பரணி போற்றச் செய்திட்ட, எங்களை எதிர்காலத்தில் இயக்கிட நிகழ்காலத்தில்

சாதனை செய்து வரும் மாண்புமிகு தளபதி அவர்களுக்கும் (மேசையைத் தட்டும் ஒலி) இந்த நேரத்திலே நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழக மக்களின் வாழ்க்கை நிலையை உயர்த்த வரியில்லா நிதிநிலை அறிக்கையை மக்கள் வாழ்த்தி வரவேற்கும் வேளையில், கடந்த காலத்தில் சட்டமன்றப் பேரவையில் எதிர்க்கட்சியினருக்கு வாய்ப்பு வழங்கப்படாவிட்டாலும், ஜனநாயகத்தின்மீது மிகுந்த மதிப்புக் கொண்டுள்ள தலைவர் கலைஞர் அவர்கள், எதிர்க்கட்சியினர் பேசுவதற்கு எவ்வாறு வாய்ப்பு அளிக்கிறார் என்பது எதிர்க்கட்சியினருக்கே தெரியும். எவ்வாறு ஜனநாயகம் பேணிக் காக்கப்படுகிறது, ஆளுங்கட்சி உறுப்பினர்களாகிய எங்களுக்கே குறைந்த அளவு நேரம்தான் ஒதுக்கப்படுகிறது. ஆனால், எதிர்க்கட்சியினர் வேண்டுகின்ற நேரத்தில் அவர்களுக்குப் பேச வாய்ப்பளிக்கப்படுகின்றது.

*பிற்பகல் 12-10*

மாண்புமிகு எதிர்க்கட்சி உறுப்பினர் திரு. ஆர்.டி. கணேசன் அவர்கள் பேசியபோது, அவர்களுடைய அம்மா ஆட்சிக் காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் 15 நாட்கள் கணினிப் பயிற்சி அளிக்கப்பட்டதாகத் தெரிவித்தார்கள். ஆனால், நமது உள்ளாட்சித் துறை அமைச்சர், எங்களுடைய தளபதி அவர்கள், ஒவ்வொரு சட்டமன்ற உறுப்பினருக்கும் கணினி ஒன்றை வாங்கிக் கொடுத்து, அவர்களைப் பயிற்சிபெற வைத்திருக்கின்றார்கள் என்பதை இந்த நேரத்தில் நான் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியை ஒரு குறிப்பிட்ட பணிக்கு நாங்கள் ஒதுக்கீடு செய்கின்றபோது, அந்தப் பணி எப்பொழுது தொடங்கப்படும், எப்பொழுது முடிவடையும் என அறியவும், அந்தப் பணி நடைபெறுகின்றபோது, அதைப் பார்வையிடுவதற்கு அந்தத் துறையைச் சார்ந்த அதிகாரிகள் எங்களோடு வர வேண்டுமென்றும் இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர் ஒரு கடிதம் கொடுத்து, அதை மாண்புமிகு முதல்வர் அவர்களிடம் கொடுத்தாலே, 15 நாட்களுக்குள் எங்களுக்குப்



பதில் வந்துவிடுகின்றது. ஆனால், மாவட்ட அதிகாரிகளிடத்திலே கொடுக்கின்றபோது, சில சமயங்களில் அதற்குரிய பதில் எங்களுக்குக் கிடைப்பதேயில்லை. எனவே, மாண்புமிகு முதல்வர் அவர்கள் தயவுகூர்ந்து அவர்களுக்கு உரிய அறிவுரை கூறி, எங்களுக்கு உடனடியாகப் பதில் தருவதற்கு உரிய வாய்ப்பை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுக்குக் கணினியை இயக்க ஓர் உதவியாளரை நியமனம் செய்ய வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டுக்கொள்கின்றேன். எனது தொகுதியில் அதிகமாக வாழும் சைவ வேளாளர் சமூகத்தைச் சார்ந்தவர்களை பிற்படுத்தப்பட்டோர் பட்டியலில் இணைத்திட வேண்டுகிறேன். நாட்டுப்புறக் கலைஞர்களுக்குத் தமிழ்க் கலைஞர், கலைமாமணி விருது வழங்கும்போது, அவர்களுக்கு உரிய பிரதிநிதித்துவம் அளித்திட வேண்டுகிறேன். தமிழர்களின் கலையான நாதஸ்வரத்தைத் தென்கிழக்காசிய நாடுகளுக்குப் பரப்பிய காருகுறிச்சி அருணாசலம் அவர்களுக்குத் திருநெல்வேலியில் மணிமண்டபம் அமைத்திட வேண்டுகிறேன். சுதந்திரத்திற்காக முதல் போர் நடத்திய நெற்கட்டும்செவல் பூலித்தேவனின் படைத் தளபதி ஒண்டி வீரனுக்கு நெல்லையில் மணிமண்டபம், சிலை அமைத்திட வேண்டுகிறேன்.

தென் மாவட்ட மாணவர்களின் நலன் கருதி, திருநெல்வேலி அபிஷேகப்பட்டியில் இயங்கி வரும் கால்நடை ஆராய்ச்சி மையத்தைத் தரம் உயர்த்தி, கால்நடை மருத்துவக் கல்லூரி ஒன்றை அமைத்திட வேண்டுகிறேன்.

திருநெல்வேலியில் அமையவுள்ள அண்ணா தொழில்நுட்பப் பல்கலைக்கழகத்தைத் தற்போதுள்ள மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகத்தின் அருகில் உள்ள வளாகத்தில் அமைத்துத் தந்திட வேண்டுகிறேன்.

பேட்டை கூட்டுறவு நூற்பாலையைத் திறந்து, ஆயிரக்கணக்கான தொழிலாளர் வாழ்வை வளப்படுத்திட வேண்டுகிறேன்.

திருநெல்வேலி மாவட்டத்தில் பூ, எலுமிச்சை, வாழை அதிகமாகப் பயிரிடப்படுகின்றன. அவற்றைக் குறிப்பிட்ட காலத்திற்குச் சேமித்து வைத்திட ஏதுவாகக் குளிர்பதனக் கிடங்கு அமைத்திட வேண்டுகிறேன். தாழையூத்துப் பகுதியில் அரசுக் கலைக் கல்லூரி ஒன்றை ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

அதேபோன்று, தச்சநல்லூரில் பெண்கள் உயர்நிலைப் பள்ளியை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

போக்குவரத்து நெரிசலைக் கட்டுப்படுத்த, மதுரை-தச்சநல்லூர்-அபிஷேகப்பட்டி சாலைகளை இணைத்து, ஆலங்குளம்-தென்காசி-செங்கோட்டை-கொல்லம் சாலைகளுடன் இணைப்பை ஏற்படுத்தி, சாலை அமைத்துத் தர வேண்டுகிறேன்.

தாமிரபரணி ஆறு, திருநெல்வேலி, தூத்துக்குடி, விருதுநகர் ஆகிய மாவட்ட மக்களின் தாகம் தீர்க்கும் புண்ணிய நதியாக விளங்குகிறது. அதன் இரு புறமும் ஆடாதொடை, சீமைவேலிப் புதர்களால் மூடப்பட்டுள்ளன. அதனைத் தூர் வாரிச் செப்பனிடவும், கோடகன் கால்வாய், தாமிரபாணிக் கால்வாய் ஆகியவற்றைத் தூர் வாரிச் செப்பனிட்டும், இரு கரைகளையும் பலப்படுத்தி, கீழ்த்தளத்தில் கான்கிரீட் ஓடுதளம் அமைத்திடவும் வேண்டுகிறேன். நகர்ப் பகுதியில் நாளுக்கு நாள் போக்குவரத்து அதிகரித்து வரும் சூழ்நிலையில் நகர்ப் பகுதியில் தனிப் பேருந்து நிலையம் அமைத்துத் தர அன்புடன் வேண்டுகிறேன்.

அருள்மிகு நெல்லையப்பர் உடனுறை காந்திமதி அம்மன் கோயிலுக்குச் சொந்தமான, நகரின் மையப் பகுதியிலுள்ள 96 சென்ட் நிலத்தில், மறைந்த முன்னாள் அறநிலையத் துறை அமைச்சர் அய்யா, கே.பி.கே. அவர்கள், பல்லடுக்கு வணிக வளாகம் அமைக்க வேண்டுமெனத் திட்டம் தீட்டினார்கள். அதனை ஏற்படுத்திட வேண்டுகிறேன்.

தச்சநல்லூரில் இயங்கி வரும் காய்கறி அங்காடி தனியார் சிலரால் நடத்தப்பட்டு வருகின்றது. பல கோடி ரூபாய் வருமானம் வரும் அக்காய்கறி அங்காடிக்கு வருகின்ற வாகனங்கள் மற்றும் கடைகளுக்குச் சுங்கம் வசூலித்திட மாநகராட்சிக்கு அனுமதி அளித்திட வேண்டுமென மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சர் அவர்களைக் கேட்டுக்கொள்கின்றேன்.

"தோன்றின் புகழொடு தோன்றுக அஃதிலார்
தோன்றலின் தோன்றாமை நன்று"

என்ற திருக்குறளின் இரு வரிகளின் தேன்தமிழ்க் கவிஞருடைய திருமறைக்கேற்ப, தோன்றி அல்லலுறும் மக்களின் இன்னல்களைக் களைய, தன்னுடைய ஆருயிரைப் பணயம் வைத்து, எல்லையில்லாப் புகழ் சேர்த்து, வையத்து நாடனைத்தும் வாழ்வாங்கு வாழ்கின்ற பெருவாய்ப்பினைப் பெற்று, சட்டமன்றத்தில் தொடர்ந்து 50 ஆண்டுகள் ஏழை, எளிய மக்களுக்காகப் பாடுபட்டுக்கொண்டிருக்கும் தமிழ் கூறும் நல்லுலகின் தன்னிகரில்லாத் தலைவர் அவர்கள் பொன் விழாக் காண்கின்ற இத்திங்களில், தங்களை வாழ்த்த வயதில்லை, தங்கள் பொற்பாதம் பணிந்து, வாய்ப்புக்கு நன்றி கூறி, அமைகின்றேன். நன்றி, வணக்கம்.



*பிற்பகல் 12-15*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. டி. இராமச்சந்திரன்.

***திரு. டி. இராமச்சந்திரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஐம்பது ஆண்டுகள் இந்த அவையிலே சிறப்பாகப் பணியாற்றி, ஐந்தாம் முறையாக ஆட்சிப் பொறுப்பேற்று, தமிழகத்தின் அனைத்து பகுதி மக்களின் எதிர்பார்ப்புகளையும் நிறைவேற்றி, மனுநீதிச் சோழன் வழியிலே பொற்கால ஆட்சி செய்கின்ற, பொன் விழா நாயகர் முத்தமிழறிஞர் டாக்டர் கலைஞர் அவர்களை வணங்கி, இருண்டு கிடந்த உள்ளாட்சி அமைப்புகளை வெளிச்சத்திற்குக் கொண்டு வந்து, நாளைய நல்லாட்சியின் இலக்கணமாய், உள்ளாட்சியில் நல்லாட்சி செய்கின்ற ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் மாண்புமிகு அண்ணன் தளபதி அவர்களுக்கும், வரியில்லாத நிதிநிலை அறிக்கையைத் தந்த மாண்புமிகு அவை முன்னவர் பேராசிரியர் அவர்களுக்கும், மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை மற்றும் ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய மானியக் கோரிக்கைகள்மீது என்னுடைய கருத்துகளை எடுத்துரைக்க வாய்ப்பளித்த பேரவைத் தலைவராகிய தங்களுக்கும் மனமார்ந்த நன்றியை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

ஆற்றலும், அனுபவமும் மிக்க நமது முதல்வர் அவர்கள் தலைமையிலே நம்முடைய அமைச்சரவை சிறப்பாகச் செயலாற்றிக்கொண்டு வருகிறது என்பதை நான் மனமாரப் பாராட்டுகிறேன். இப்போது சாதாரண, சாமானிய மக்கள்கூடக் கோட்டைக்கு வந்து, மாண்புமிகு அமைச்சர்களையும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்களையும் சந்தித்துத் தங்களுடைய குறைகளை எடுத்துக் கூறுகின்ற ஒரு நல்ல சந்தர்ப்பம் கிடைத்துள்ளது.

இப்போது அரசு விழாக்களிலே ஆடம்பரம் இல்லாமல் எளிய முறையிலே அமைச்சர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள். அதேபோல, இப்போது இந்த அரசு மக்களுடைய தேவைகளை அறிந்து செயல்படுகிறது என்பதை இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன். மாண்புமிகு முதல்வர் அவர்களிடத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுடைய தொகுதியினுடைய பிரச்சினைகளை மனுக்களாகக் கொடுக்கும்போது, அதற்குரிய பதில் என்பது கிடைக்கின்றது. ஆனால், மாவட்ட ஆட்சித் தலைவர்களிடத்திலோ அல்லது துறை அதிகாரிகளிடத்திலோ, துறைச் செயலாளர்களிடத்திலோ சட்டமன்ற உறுப்பினர்கள் கொடுக்கின்ற மனுக்களுக்கு எத்தகைய பதிலும் கிடைக்கப்பெறுவதில்லை.

சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிகளுக்குச் சென்று மக்கள் மத்தியிலே மனுக்களைப் பெறும்போது, முதியோர் உதவித் தொகை, ரேஷன் கார்டு போன்ற கோரிக்கை மனுக்களைக் கொடுக்கிறார்கள். அவற்றைச் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளிடத்திலே கொடுக்கும்போது, அவர்கள் தகுதியுடையவர்களா என்பதை ஆய்வு செய்வது அவர்களுடைய பணி. ஆனால், மறுபடியும் தொகுதிக்கு அந்தச் சட்டமன்ற உறுப்பினர் செல்லும்போது, அந்த மக்கள் மனுக்களைக் குறித்துக் கேட்கும்போது, பதில் கூற முடிவதில்லை. ஆகவே, அரசு இதிலே கவனம் செலுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

மக்களின் தேவைகளைப் பூர்த்தி செய்ய வேண்டியது அரசின் கடமை என்ற முறையிலே சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுத்து அனுப்புகிறார்கள். ஆனால், மக்களின் பிரச்சினைகளைப் பற்றி பேசக்கூடிய இந்த அவையில் ஆண்டிற்கு ஒரு முறைதான் மானியக் கோரிக்கை என்பது வருகிறது. எனவே, மக்களுடைய பிரச்சினைகளை இந்த மானியக் கோரிக்கைகளின்மீது பேசும்போது ஆண்டிற்கு இரண்டு முறைதான் பேச முடியும். அதேபோல, ஒரு மணி நேரமோ அல்லது இரண்டு மணி நேரமோ விவாதித்து, மக்களின் பிரச்சினைகளை முழுமையாக விவாதிக்க முடியாது என்பது என்னுடைய கருத்து. ஆகவே, சட்டப் பேரவையினுடைய நேரத்தை அதிகப்படுத்த வேண்டுமென்று இந்த நேரத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன்.

சட்டப் பேரவைத் தலைவர்கள் மாநாடு டெல்லியில் நடைபெற்றது. அந்த மாநாட்டிலே ஒரு ஆண்டிற்குக் குறைந்தபட்சம் 165 முதல் 185



நாட்கள் சட்டமன்றம் நடைபெற வேண்டுமென்ற தீர்மானம் நிறைவேற்றப்பட்டிருப்பதை அரசின் கவனத்திற்குக் கொண்டு வருவதோடு, அவ்வாறு சட்டமன்றம் கூடும் நாட்களை அதிகப்படுத்துவதன்மூலம் மக்களின் ஆக்கபூர்வமான பிரச்சினைகளைப் பேசி, விவாதித்துத் தீர்க்க முடியும் என்பதை நான் இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்கள் ஒரு சில கோரிக்கைகளை வைத்திருக்கிறார்கள். குறிப்பாக, ஒரு சட்டமன்றத் தொகுதியிலே 500 முதல் 600 கிராமங்கள் இருக்கின்றன. அந்தக் கிராமங்களிலே அடிப்படைத் தேவைகள் என்பவை அதிகரித்துக்கொண்டே இருக்கின்றன. ஆகவே, சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதிக்குச் செல்கின்றபோது, சட்டமன்ற உறுப்பினர்களால்தான் நிறைவேற்ற முடியும் என்று மக்கள் கோரிக்கைகளை வைக்கின்றார்கள். இப்போது, 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதியிலிருந்து அந்தப் பணிகளைச் செய்ய முடிவதில்லை. 1 கோடியே 20 இலட்சம் ரூபாய் என்று ஏற்கெனவே உயர்த்திக் கொடுத்த நமது முதல்வர் அவர்கள், பொன் விழாக் காணுகின்ற இந்த நேரத்திலே சட்டமன்ற உறுப்பினர்கள் தொகுதி மேம்பாட்டு நிதியை 2 கோடி ரூபாயாக உயர்த்திக் கொடுக்க வேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன்.

பல சட்டமன்ற உறுப்பினர்கள் இந்த அவையிலே, Municipal Chairman, Union Chairman, எல்லோருக்கும் அரசினுடைய பணிகளை ஆய்வு செய்வதற்காக, மக்களைச் சந்திப்பதற்காக, ஈப்பு வண்டிகள் வழங்கப்பட்டிருக்கின்றன என்று சொன்னார்கள். ஆனால், சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஈப்பு வண்டிகள் வழங்கப்படவில்லை. எனவே, அரசின் சார்பாக, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு ஈப்பு வண்டிகளை வழங்க வேண்டுமென்ற கோரிக்கையை இந்த நேரத்திலே வைக்கின்றேன்.

இன்றைக்கு ஊராட்சி மன்றத் தலைவர்களுக்கு, அந்த ஊராட்சி மன்ற அலுவலகத்திலே மக்களுடைய குறைகளைக் கேட்பதற்கு அரசின் சார்பாக, உள்ளாட்சித் துறையின் சார்பாக உதவியாளர்கள் வழங்கப்பட்டிருக்கிறார்கள். அதேபோல சட்டமன்ற உறுப்பினர்களுக்குக்கூட அரசின் சார்பிலே, உள்ளாட்சித் துறையின் சார்பில் உதவியாளர்கள் நியமிக்கப்பட வேண்டுமென்ற கோரிக்கையை வைத்திருக்கிறார்கள். அதை நிறைவேற்ற வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

இந்திய சுதந்திரப் பொன் விழாவைக் கொண்டாடும் வகையிலே, அன்றைக்குத் தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள் ஆட்சியில் இருந்தபோது, தமிழ்நாடு முழுவதும் உள்ள மாவட்டங்களில் சமத்துவபுரங்களை நிறுவினார்கள். இப்போது மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் சட்டமன்றப் பொன் விழாக் காண்கின்ற இந்த நேரத்திலே, ஏற்கெனவே சட்டமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியதுபோல், 'தலைவர் கலைஞர் பொன் விழா நகர்' என்ற பெயரிலே சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டுமனைகளை ஒதுக்க வேண்டுமென்ற கோரிக்கையை வைக்கின்றேன்.

ஓய்வூதியங்கள் நாட்டின் சுதந்திரப் போராட்டத்திற்காகப் போராடிய வீரர்களுக்கு, போராடிய தியாகிகளுக்கு ஓய்வூதியம் என்பது மிகவும் குறைவாக உள்ளது. 3 ஆயிரம் ரூபாய்தான் கொடுக்கப்படுகிறது. ஆகவே, அதை உயர்த்தித் தர வேண்டும் என்ற கோரிக்கையை வைக்கிறேன்.

*பிற்பகல் 12-20*

மொழிப் போராட்டத் தியாகிகள் குடும்ப ஓய்வூதியம் என்பது தற்போது நிறுத்தப்பட்டுள்ளது. அந்த ஓய்வூதியம் மொழிப் போராட்டத் தியாகிகளுக்கு வழங்கப்பட வேண்டும். அதேபோல, சுதந்திரப் போராட்டத் தியாகிகள் மற்றும் மொழிப் போராட்டத் தியாகிகளுடைய வாரிசுகளுக்கு மருத்துவக் கல்லூரி மற்றும் பொறியியல் கல்லூரிகளிலே இட ஒதுக்கீடு அளிக்கப்பட வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கின்றேன்.

1986 ஆம் ஆண்டு இந்திய அரசியலமைப்புச் சட்ட நகல் எரிப்புப் போராட்டத்திலே நமது மாண்புமிகு பேராசிரியர் உட்பட 10 சட்டமன்ற உறுப்பினர்கள் பதவி நீக்கம் செய்யப்பட்டார்கள். அப்போது பல உறுப்பினர்கள் அந்த நகல் எரிப்புப் போராட்டத்திலே கலந்துகொண்டு 3 மாதங்கள், 6 மாதங்கள் என்று சிறை சென்றுள்ளார்கள். பொன் விழாக் காணுகின்ற தலைவர் கலைஞர் ஆட்சியிலே, அவர்கள் கௌரவிக்கப்பட வேண்டும். அவர்களுக்கு ஒரு சிறப்புத் தொகை வழங்கப்பட வேண்டும் என்ற கோரிக்கையை இந்த நேரத்தில் நான் வைக்கிறேன்.

இப்போது இந்தச் சட்டமன்றச் செயலக ஊழியர்கள் சில கோரிக்கைகளை வைத்திருக்கின்றார்கள். சட்டமன்றச் செயலகத்திலே பணியாற்றக்கூடிய ஊழியர்கள் நீண்ட காலமாகப் பணி நிரந்தரம்



செய்யப்படாமல் இருக்கிறார்கள். ஆகவே, அவர்களுடைய பணியை நிரந்தரம் செய்ய வேண்டும், ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும். சட்டமன்றம் கூடும் நாட்களிலே காலை முதல் மாலை வரை அவர்கள் பணியாற்றுகிறார்கள். ஆகவே, சட்டமன்றம் கூடும் நாட்களிலே அவர்களுக்கு வழங்கக்கூடிய படியை உயர்த்தித் தர வேண்டுமென்று கேட்டுக்கொள்கின்றேன்.

தலைமைச் செயலகம், சட்டமன்றச் செயலகம் மற்றும் சட்டமன்ற உறுப்பினர்கள் விடுதிகளிலே பணியாற்றக்கூடிய ஊழியர்களைப் பணி நிரந்தாம் செய்ய வேண்டும், ஊதிய உயர்வு வழங்கப்பட வேண்டும்.

தேர்தல் செலவுகளைத் தேர்தல் ஆணையமே ஏற்றுக்கொள்ள வேண்டும். உள்ளாட்சி மன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, சட்டமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, நாடாளுமன்றத் தேர்தலாக இருந்தாலும் சரி, அவர்களுடைய தேர்தல் செலவுகளைத் தேர்தல் ஆணையம் ஏற்றுக்கொண்டால்தான், ஊழல் இல்லாத நிர்வாகத்தை வழங்க முடியும் என்பதை நான் வலியுறுத்துகிறேன்.

இன்றைக்குச் சட்டமன்ற நிருபர்களுடைய கோரிக்கையாக, சட்டமன்ற நிருபர்கள், பேரவை நிருபர் பணிக்கு வருபவர்கள் தொடர்ந்து நிருபர் பணியிலே பணியாற்றுவது மிகுந்த சிரமமான ஒன்று என்பதைக் கருத்திலேகொண்டு, அவர்களுக்கு வழங்கக்கூடிய மாதாந்திர சிறப்புத் தொகையை 200 ரூபாயிலிருந்து 400 ரூபாயாக உயர்த்தித் தரும்படிக் கேட்டுக்கொள்கிறேன். தமிழ் மற்றும் ஆங்கில நிருபர் பணிக்கு. . .

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. தி.க. ராஜா.

**திரு. தி.க. ராஜா:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், நிதித் துறை, ஆளுநர் மற்றும் அமைச்சரவை போன்ற மானியக் கோரிக்கைகளிலே பேச வாய்ப்பளித்த தங்களுக்கும், சமூக நீதிக் காவலர் மருத்துவர் அய்யா அவர்களுக்கும், எனக்குப் பேசுவதற்கு உதவி செய்த மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்களுக்கும், அண்ணன் கோ.க. மணி அவர்களுக்கும் முதற்கண் வணக்கத்தைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

உலகத் தமிழினத்தின் வரலாற்றில் எவரும் எட்ட முடியாத சிகரத்தை அடைந்து, பொன் விழாக் காணும்,

பொன்னெழுத்துக்களால் எழுதப்பட வேண்டிய வரலாற்று நாயகர் தமிழினத் தலைவர் மாண்புமிகு முதல்வர் அய்யா அவர்களை முதலிலே வணங்கி, (மேசையைத் தட்டும் ஒலி) அவருடைய மேலான கவனத்திற்கு எங்கள் பகுதியினுடைய நீண்ட காலக் கோரிக்கையை நான் இங்கே சமர்ப்பிக்கின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மறுசீராய்வு முடிந்தவுடன் நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்று கூறியிருப்பதை நாங்கள் வரவேற்கிறோம். ஆனால், திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதி, சுதந்திரம் பெற்ற பிறகு திருப்பத்தூர் நாடாளுமன்றத் தொகுதியாகச் செயல்பட்டு வந்தது. இப்பொழுது அது திருவண்ணாமலை நாடாளுமன்றத் தொகுதியாக மாற இருப்பதனாலே ஒரு நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மாவட்டம் என்கிறபோது அது ஒரு கேள்விக்குறியாக இருப்பதனால், எங்களுடைய பகுதி மக்கள் எல்லாம் இப்போது வேதனையடைந்து, திருப்பத்தூர் மாவட்டம் என்பது கேள்விக்குறியாகிவிட்டது என்கின்ற நிலையிலே இப்போது தவித்துக்கொண்டிருக்கிறார்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அரசினுடைய புள்ளிவிவரத்திலே பெரிய மாவட்டங்கள் 4, 5 இருக்கின்றன. அவற்றிலே விழுப்புரம், வேலூர், சேலம் போன்ற வட மாவட்டங்கள் எல்லாம் கல்வி, பொருளாதாரம், வேலைவாய்ப்பிலே மிகப் பின்தங்கி இருக்கின்றன என்று அரசினுடைய புள்ளிவிவரத்திலேயே சொல்லி இருக்கிறார்கள். எனவே பெரிய, பெரிய மாவட்டங்களாக இருக்கின்ற மாவட்டங்களை எல்லாம் இரண்டாகப் பிரிக்க வேண்டும். அதிலும் குறிப்பாக, வேலூர் மாவட்டம். வேலூர் மாவட்டத்தினுடைய மொத்த சதுரப் பரப்பளவு என்று சொன்னால், 6,077 சதுர கிலோ மீட்டர். அது காஞ்சிபுர எல்லையிலே தொடங்கி, கிருஷ்ணகிரி எல்லையிலே முடிகிறது என்று சொன்னால், மொத்த நீளம் 260 கிலோ மீட்டர். இந்த மாவட்டத்திலே மொத்தம் 35 இலட்சம் மக்கள் இருக்கிறார்கள். 12 சட்டமன்றத் தொகுதிகள் இருக்கின்றன. மறு சீராய்விலே அது 13 தொகுதிகளாக மாற இருக்கிறது. இந்த மாவட்டத்திலே 20 ஊராட்சி ஒன்றியங்கள் இருக்கின்றன. 15 நகராட்சிகள் இருக்கின்றன, 22 பேரூராட்சிகள் இருக்கின்றன. 853 சிற்றூராட்சிகள், 22 சிறப்பு ஊராட்சிகள், 54 பிர்காக்கள், 8 தாலுகாக்கள், 3 Revenue Divisional Offices என்று மிகப் பெரிய மாவட்டமாகத் தமிழ்நாட்டிலே இருக்கின்றது. சாதாரண மக்கள், குறிப்பாக ஜவ்வாது மலையிலே இருக்கின்ற ஒருவர் மா[illegible]



ஆட்சியரையோ, S.P.-யையோ பார்க்க அல்லது மாவட்ட மருத்துவமனைக்குச் செல்லவோ வேண்டுமென்றால், ஏறக்குறைய 300 கிலோ மீட்டர் தூரம் வந்து செல்ல வேண்டும். இதற்கு ஒரு நாள் ஆகிவிடுகிறது. எனவே, நான் மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்வதெல்லாம், தொகுதி மறுசீராய்வில் ஏற்றத்தாழ்வு இருக்கக் கூடாது, எல்லாத் தொகுதிகளும் சமமாக இருக்க வேண்டும், எல்லாப் பணிகளும், உதவிகளும் மக்களுக்குச் சமச்சீராகச் செல்ல வேண்டுமென்றுதான் இன்றைக்கு மறுசீராய்வு செய்கிறார்கள். அந்த வகையிலே, இதுபோன்ற பெரிய மாவட்டங்களை ஏற்றத்தாழ்வு இல்லாமல் இருப்பதற்காகவும், மக்களுக்கு அரசின் திட்டங்கள் எளிதிலே போய்ச் சேர வேண்டும் என்பதற்காகவும் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராகக்கொண்ட புதிய மாவட்டம் உருவாக்க வேண்டுமென்று நீண்ட காலமாக நாங்கள் கோரிக்கை வைத்து வந்துகொண்டிருக்கிறோம். திருப்பத்தூர், மாவட்டத் தலைநகரமாக ஆவதற்கான அனைத்துத் தகுதிகளும் அதற்கு இருக்கின்றன. திருப்பத்தூரில் 100 ஆண்டுகளுக்கு முன்பாகவே, 1880-லே அங்கே Revenue Divisional Office உருவாக்கப்பட்டிருக்கிறது. தாலுகா தலைமையிடமாகவும், சட்டமன்ற நாடாளுமன்ற உறுப்பினருடைய தலைமையிடமாகவும், சட்டமன்ற உறுப்பினருடைய தலைமையிடமாகவும் இருக்கிற காரணத்தினாலே, அங்கே நிர்வாக வசதிக்காக, வேலூர் மாவட்டத்தை இரண்டாகப் பிரித்து, ஏற்கெனவே கல்வி, வனம், சுகாதாரம் மற்றும் மின்சாரத் துறை அலுவலகங்கள் எல்லாம் இரண்டு, இரண்டாகச் செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. எனவே, மக்கள் நலனிலே அக்கறைகொண்டு அந்த மாவட்டத்தைப் பிரித்து, திருப்பத்தூரைத் தலைநகராகக்கொண்ட புதிய மாவட்டத்தை உருவாக்க வேண்டுமென்று நான் இந்த நேரத்திலே மாண்புமிகு தமிழக முதல்வர் அய்யா அவர்களைக் கேட்டுக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-25

நீங்கள் 50-வது ஆண்டுப் பொன் விழாக் கொண்டாடுகிறீர்கள். உங்களுடைய ஞாபகார்த்த மாவட்டமாக, 50-வது ஆண்டுப் பொன் விழாவினுடைய ஞாபகார்த்த மாவட்டமாகத் திருப்பத்தூரை நீங்கள் உருவாக்கித் தாருங்கள், தாருங்கள் என்று இந்த நேரத்திலே உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

அதேபோல, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கெல்லாம் ஓய்வூதியத்தை உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நோத்திலே நான் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர்களுக்கு இயக்கூர்திகள், வண்டிகள் எல்லாம் வழங்க வேண்டுமென்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

தாட்கோவில் இருக்கிற கடன்களை எல்லாம் தள்ளுபடி செய்ய வேண்டும். தலித் மக்களுக்கான சிறப்புக் கூறுத் திட்டங்களை முறையாகச் செயல்படுத்த வேண்டும்.

சத்துணவு, ஊட்டச் சத்துப் பணியாளர்களுக்கும், நியாய விலைக் கடைப் பணியாளர்களுக்கும், நுகர்பொருள் வாணிபக் கழகப் பணியாளர்களுக்கும் ஓய்வூதியம் வழங்க வேண்டும். ஓய்வூதியர் சங்கக் கோரிக்கைகளை உடனடியாக நிறைவேற்ற வேண்டும்.

அதேபோல, கூட்டுறவு வீட்டு வசதிக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டுமென்று பாட்டாளி மக்கள் கட்சியின் சார்பாக நான் வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன். சட்டமன்ற உறுப்பினர் விடுதியில், வேலைவாய்ப்பு அலுவலகம்மூலமாகத் தேர்வு செய்யப்பட்டுப் பணியாற்றுபவர்களை நிரந்தரப்படுத்தி, ஊதிய உயர்வு வழங்க வேண்டும். அதேபோல, 1-6-1988 முதல் 31-12-1995 வரையுள்ள காலத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கு உயர் நீதிமன்றம் தீர்ப்பளித்தவாறு பலன்களை வழங்க வேண்டுமென்று அன்போடு நான் கேட்டுக்கொள்கிறேன்.

பேரவைத் தலைவர் அவர்களே, சட்டமன்ற உறுப்பினர்களுக்கு வீட்டுமனை வழங்கி, வீடு கட்ட வட்டியில்லாக் கடனும் வழங்க வேண்டும். உறுப்பினருடைய தொகுதி மேம்பாட்டு நிதியை இரண்டு கோடி ரூபாயாக உயர்த்தித் தர வேண்டுமென்று இந்த நேரத்திலே அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்ற உறுப்பினர்களுடைய மனுக்களை உடனுக்குடன் பரிசீலனை செய்து, பதில் அளிக்க வேண்டும். முதல்வருடைய தனிப் பிரிவுக்கு எங்களுடைய மனுக்களை அனுப்பினால், மீண்டும் அந்த மனு எங்களுக்கே வருகிறது. சட்டமன்ற உறுப்பினருடைய நிதியிலிருந்து சீர் செய்யப்பட வேண்டுமென்று வருகிறது. எனவே, எங்களுடைய மனுக்களைச் சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகளுக்கு உடனுக்குடன் அனுப்பித் தீர்வு காண நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டு, வாய்ப்புக்கு நன்றி கூறி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.



**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு உறுப்பினர் திரு. செ. தாமோதரன்.

**திரு. செ. தாமோதரன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாநிலச் சட்டமன்றம், ஆளுநர் மற்றும் அமைச்சரவை, நிதித் துறை, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் ஆகிய தலைப்புகளிலே உள்ள மானியக் கோரிக்கைகள்மீது எனது கருத்துகளை இந்தச் சட்டமன்றத்திலே எடுத்து வைக்க அனுமதி அளித்திருக்கின்ற, பகுத்தறிவுப் பகலவன் தந்தை பெரியார் அவர்களின் துணிவும், அறிஞர் அண்ணா அவர்களின் அறிவாற்றலும் ஒருங்கே அமையப்பெற்றவரும், வங்கக் கடலோரம் இறவா வரம்பெற்று, சந்தனப் பேழையிலே துயில்கொண்டிருக்கின்ற எங்கள் தங்கத் தலைவர் (மேசையைத் தட்டும் ஒலி) டாக்டர் புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். அவர்களின் அரசியல் வாரிசாகவும், 1½ கோடி அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத் தொண்டர்களின் வழிகாட்டியாகவும், 6 கோடித் தமிழ் மக்களின் நம்பிக்கையாகவும், 100 கோடி இந்திய மக்களின் எதிர்பார்ப்பாகவும் திகழ்கின்ற எங்கள் இதய தெய்வம் டாக்டர் புரட்சித் தலைவி அம்மா (மேசையைத் தட்டும் ஒலி) அவர்களுக்கு என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொண்டு, எனக்குப் பேச நேரம் ஒதுக்கித் தந்த மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களுக்கும் என்னுடைய நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

பிற்பகல் 12-30

எனது தொகுதியைப் பொறுத்தவரையில், ஒரு முக்கியமான பிரச்சினை, விவசாயிகளுடைய பிரச்சினை. எங்களது பகுதி பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தால் பாசனம் பெற்று வருகிறது. இதில் எனது தொகுதியின் வட மேற்குப் பகுதியில் உள்ள பூமிகள் பாசனத்தில் விடுபட்டுள்ளன. தற்போது பரம்பிக்குளம்-ஆழியாறு திட்டத்தால் பாசனம் பெற்று வரும் பகுதி சுமார் 3,78,000 ஏக்கர் ஆகும். அரசு இந்தத் திட்டத்தை 4 மண்டலங்களாகப் பிரிக்கும்போது, ஒரு சில விவசாயிகள் நீதிமன்றத்திற்குச் சென்றதால், 3,78,000 ஏக்கருக்கு மேல் நாங்கள் பாசனப் பகுதிகளை விஸ்தரிப்பதில்லை என்ற முடிவை அரசு எடுத்தது. அப்படி விஸ்தரிப்புச் செய்ய வேண்டுமெனில், ஆனைமலையாறு-நல்லாறு திட்டங்கள் முடிவுற்ற பிறகு, நீர் வரத்தை அதிகப்படுத்தி, பின் விஸ்தரிப்புச் செய்யப்படும் என்ற நிலையில் அரசு இருப்பதாகத் தெரிய வருகிறது. தற்போது உள்ள நிலையில்

ஆனைமலையாறு-நல்லாறு திட்டங்கள் எங்களது பகுதி விவசாயிகளின் கனவுத் திட்டங்களாகத்தான் உள்ளன.

அதனால், மேற்படி திட்டத்தில் பாசனம் பெற்று வரும் 3,78,000 ஏக்கருக்கு உட்பட்ட பகுதிகளில், காற்றாலை மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது. பெரிய தொழிற்சாலைகள் உருவாகியுள்ளன. சில இடங்களில் வீட்டுமனைகளுக்காக நிலங்கள் பிரிக்கப்பட்டு விற்கப்பட்டுள்ளன. எனவே, இது பற்றி ஆராய்ந்து, அரசு ஒரு கமிட்டி அமைத்து, இதில் எவ்வளவு ஏக்கர் நிலங்கள் பாசனத்தில் சேர்க்கப்பட்டுப் பயன்படாமல் உள்ளன என்பதைக் கண்டறிந்து, மேற்படி பயனடையாமல் இருக்கின்ற பகுதிகள் அனைத்தையும் பாசனப் பரப்பில் இருந்து நீக்க வேண்டும். அதன் பின்பு, எவ்வளவு நீக்கப்படுகிறதோ, அந்த அளவு நிலத்தை என் தொகுதியில் விடுபட்ட பகுதியிலே சேர்க்க வேண்டும் என்று இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன்.

அத்துடன், இந்தத் திட்டத்தில் அணையிலிருந்து சுமார் 120 கி.மீ. வரை பாசனம் பெற்று வருகிறது. ஆனால், என்னுடைய தொகுதி 30 கி.மீ. தூரத்தில்தான் உள்ளது என்பதை இந்த நேரத்தில் நினைவுபடுத்தக் கடமைப்பட்டிருக்கின்றேன். 2004 ஆம் ஆண்டு தமிழகத்தில் உள்ள சுமார் 1,500 பாசனச் சங்கங்களுக்கு அம்மா அவர்களுடைய ஆட்சிக் காலத்திலே தேர்தல்கள் நடத்தப்பட்டன. அதற்குப் பின்னால் எவ்வித அரசியல் தலையீடும் இல்லாமல் முழுப் பாசனமும் பாசனச் சபையின் பொறுப்பில் விடப்பட்டது. ஆனால், தற்போது பாசனச் சபையை வைத்து, அணையில் இருந்து தண்ணீர் திறந்துவிட ஒரு நாளை அறிவிக்க வேண்டியது, 10 அல்லது 15 நாட்களுக்குப் பின்னால் தண்ணீர் திறந்துவிடுவதுபோன்ற செயல்கள் நடைபெற்று வருகின்றன. மேற்படி செயல்பாடுகளால், முதல் அறிவிப்பை நம்பி விதைப்புச் செய்த விவசாயிகள் மிகவும் பாதிக்கப்படுகிறார்கள். இதில் இப்போதுள்ள அரசியல் தலையீடு தொடராமல் பார்த்துக்கொள்வதுடன், அணையின் முழுக் கட்டுப்பாட்டையும் பாசனச் சபையின் வசம் விடவேண்டும் என்றும் இந்த நேரத்திலே கேட்டுக்கொள்கிறேன். அப்படி விடுவதால், அரசியல் தலையீடு, சில நேரங்களில் ஒரு சில விவசாயிகளின் நன்மைக்காக ஆற்றிலே தண்ணீரைத் தூக்கிவிட்டுச் சேதப்படுத்துவதுபோன்ற செயல்களை எல்லாம் தடுக்கலாம் என்பதை இந்த நேரத்திலே கூறிக்கொண்டு, இதில் அரசு தனிக் கவனம் செலுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.



நமது சட்டமன்றத்தைப் பொறுத்தவரையில், தற்போது நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்தச் சட்டமன்றக் கட்டடம் மிகவும் பழைமையானதும், பாரம்பரியம் மிக்கதுமாகும். ஆனால், நமக்குச் சொந்தமானது இல்லை. அத்துடன் இதில் இட நெருக்கடி, இங்கு பணியாற்றும் அமைச்சர்கள் முதல் சட்டமன்ற உறுப்பினர்கள், அலுவலர்கள் என அனைவரும் பல அசௌகரியங்களுக்கு ஆளாகின்றார்கள். நாம் தமிழகத்தை இந்தியாவிலேயே முதல் மாநிலமாகத் திகழச் செய்ய வேண்டும் என்று சொல்லிக்கொண்டிருக்கின்றோம். இந்த வகையிலே, இதையும் சேர்த்து இந்தியாவிலே சிறப்பான அனைத்து வசதிகளும், அனைத்து அரசுத் துறை அலுவலர்களும் ஒருங்கே அமையப்பெற்ற சட்டமன்றம் எது என்றால், அது தமிழ்நாடு சட்டமன்றம் என்று சொல்கின்ற வகையிலே, வேறு ஒரு நல்ல இடத்திலே, அனைத்து வசதிகளுடன்கூடிய ஒரு புதிய சட்டமன்றக் கட்டடத்துடன்கூடிய நிர்வாக நகரை உருவாக்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

கடந்த ஆட்சியிலே நடைபெற்ற நல்ல திட்டங்களை எல்லாம் இந்த அரசு செயல்படுத்தி வருவதுபோல், இந்தத் திட்டமும் சென்ற ஆட்சியிலே தொடங்கப்பட்ட மிக அவசியமான ஒரு நல்ல திட்டமாகும். எனவே, அரசு இந்தத் திட்டத்தை நிறைவேற்ற வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

நம்மீது நம்பிக்கை வைத்து வாக்களித்த மக்கள் நம்மை இந்தச் சட்டமன்றத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார்கள். நாம் வாக்களித்த மக்களுக்காக இங்கே சட்டமன்றத்திலே எப்படிப் பணியாற்றுகிறோம் என்பது தெரிய வேண்டும். அதற்காகச் சட்டமன்ற நிகழ்ச்சிகள் முழுவதையும், பாராளுமன்றத்தில் காண்பிப்பதுபோல் ஒன்றுவிடாமல் தொலைக்காட்சி வாயிலாக நேரடியாக ஒளிபரப்ப வேண்டும். அப்படி ஒளிபரப்பினால்தான் இங்கு என்ன நடைபெறுகிறது, (மேசையைத் தட்டும் ஒலி) யார் தவறு செய்தார்கள், யார் மக்களுக்காகப் பணி ஆற்றுகிறார்கள் என்பதை மக்கள் நன்கு தெரிந்துகொள்வார்கள். அடுத்த சட்டமன்றக் கூட்டத் தொடரிலேயே இந்த முறையை அமல்படுத்த வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

சட்டமன்றம் நடைபெறுகின்ற நாட்கள் போதாது. இன்னும் நாட்களை அதிகப்படுத்த வேண்டும். அத்துடன், சட்டமன்ற உறுப்பினர் பேசுவதற்கு ஒதுக்குகின்ற நேரத்தில் வருகின்ற குறுக்கீடுகளை எல்லாம் கழித்து, ஓர் உறுப்பினருக்கு ஒதுக்கிய நேரம் வரை பேச அனுமதிக்க வேண்டும்.

கேள்வி நேரத்தில் தினமும் குறைந்தது 20 கேள்விகளாவது வருவதுபோலப் பார்த்துக்கொள்ள வேண்டும். பல சட்டமன்ற உறுப்பினர்கள் நூற்றுக்கணக்கான கேள்விகளைக் கொடுத்தும், கேள்விகள் சட்டமன்றத்திலே வருவதில்லை. ஒரு சில உறுப்பினர்களுக்கு மட்டும் கேள்விகள் வருகின்றன. அதனால் அனைத்துச் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், ஒரு கூட்டத் தொடரிலே ஒரு சட்டமன்ற உறுப்பினருக்குக் குறைந்தபட்சம் 10 கேள்விகளாவது இருக்கச் செய்ய வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

பொதுவாக, சட்டமன்ற உறுப்பினர் நிதியை அரசின் திட்டங்களுக்குத்தான் பயன்படுத்துகிறோம். அதனால் இந்த நிதியை ரூபாய் 2 கோடியாக உயர்த்துவதுடன், பாராளுமன்ற கூட்டத் தொடர்போல் ஆண்டுக்கு மூன்று முறை சட்டமன்றக் கூட்டத் தொடரை நடத்த வேண்டும்.

மேலும் பாராளுமன்றத்திலும், சில சட்டமன்றங்களிலும் Finance Committees அமைக்கப்பட்டிருக்கின்றன. அதைப்போல் அமைத்து, பட்ஜெட் விவாதத்தை அந்த கமிட்டியிலே மேற்கொள்ள வேண்டுமென்று இந்த நேரத்திலே தெரிவித்துக்கொள்கிறேன்.

ஒவ்வொரு தொகுதியிலும் அந்தந்தத் தொகுதிச் சட்டமன்ற உறுப்பினர் அரசின் அனைத்துத் துறைகளுக்கும் பரிந்துரை செய்கின்ற பணிகளை முதலில் எடுத்துக்கொள்ள வேண்டும். அத்துடன், சட்டமன்ற உறுப்பினர் பதிவு செய்து அனுப்புகின்ற மனுக்களுக்குக் குறிப்பிட்ட நாட்களுக்குள் சரியான பதில்களை அனுப்ப வேண்டும்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** போதும், உட்காருங்கள்.

**திரு. செ. தாமோதரன்:** பேச்சை முடித்துவிடுகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** No, Time ஆகிவிட்டது. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் பதிலுரை.

***மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்று கொண்டு வரப்பட்டிருக்கின்ற இந்த மானியக் கோரிக்கைகளின்மீது அனைத்துக் கட்சிகளைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர்கள் 12 பேர் உரையாற்றியிருக்கிறார்கள். இன்னும் பலருடைய கருத்துகள் வெட்டுத் தீர்மானங்கள்மூலமாக



தெரிவிக்கப்பட்டிருக்கின்றன. அந்த இந்தக் கோரிக்கைகள்மீது தெரிவிக்கப்பட்ட அடிப்படையில், இன்று அரசின் சார்பாக எடுத்து வைக்கப்பட்ட இந்தக் கோரிக்கைகளில் ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய மானியம், சட்டமன்றத்தின் செலவிற்கான மானியம், இவை இரண்டும் நிதிநிலை முறையில், Charged Account என்ற முறையில், ஏற்கெனவே ஒப்புதல் வழங்கப்பட்ட செலவு என்ற முறையில் அவை, இந்த அவையினுடைய விவாதத்திற்கு முழு அளவில் உரியது அல்ல. அதிலேயும் குறிப்பாக, ஆளுநரைக் குறித்து விவாதம் எழுவது வழக்கம் அல்ல. அவையெல்லாம் அரசியல் சட்டப்படி அந்த உரிமை பெற்றவர்களுக்காக ஒதுக்கப்படுகிற தொகை என்பதையும், சட்டமன்றத்திற்கும் ஏறத்தாழ அப்படிப்பட்ட ஒரு தனித் தகுதி உண்டு என்பதையும் நான் நினைவூட்ட விரும்புகிறேன்.

இந்த ஆண்டு நிதிநிலை அறிக்கைமீது பல்வேறு மானியங்களில் இந்த மன்றத்தில் விரிவான விவாதங்கள் நடைபெற்றிருக்கின்றன. இன்றைக்கு நடைபெறுகின்ற இந்த விவாதத்தில் நிதித் துறைக்காக ஒரு மானியம் ஒதுக்கப்பட்டு, ரூபாய் 464,60,11,000/- அளவுக்கு வருவாய்க் கணக்கிலே செலவும், அதேபோல கடன் கணக்கிலே ரூபாய் 16,83,55,000/- செலவும் இங்கே இந்த மானியக் கோரிக்கையிலே வைக்கப்பட்டிருக்கிறது. அந்தத் தொகை, சாதாரணமாக நிதித் துறைக்கு இவ்வளவு செலவா என்றுகூடத் தோன்றும். ஆனால், இந்த நிதித் துறை தமிழ்நாட்டினுடைய மொத்த வரவு-செலவுகளை ஒழுங்கு செய்கிற, மேற்பார்வை செய்கிற, வரன்முறைப்படுத்துகிற மிக முக்கியமான இடத்திலே இருக்கிற ஒரு துறை என்ற முறையிலேயும், நிதிநிலை அறிக்கை உருவாவதற்கே இந்தத் துறை காரணமாக இருக்கிறது என்ற முறையிலேயும், இந்தச் செலவு எவ்வளவு என்று பார்க்கிறபோது, மொத்தம் 44,600 கோடி ரூபாய் மொத்த நிதி வரவு-செலவு இந்த அவையிலே வைக்கப்பட்டிருக்கின்ற நேரத்தில், இந்த நிதித் துறைக்குச் செலவு 464 கோடி என்றால், ஏறத்தாழ ஒரு விழுக்காடுதான். அதற்கான செலவு திட்டத் துறை என்ற இதன் தொடர்புடைய துறையாக, திட்டம் வகுத்துத் தருகிற துறையாக, இருக்கிற அந்தத் துறையினுடைய செலவு 39 கோடியே 16 இலட்சம் ரூபாய் என்ற அளவிலே அமைகிறது. அவைகளை எல்லாம் சேர்த்துக் கணக்கிட்டால்கூட 1.2 என்ற அந்த விழுக்காடு அளவிற்குத்தான் அதற்கான செலவு மொத்த வரவு செலவில் அமையும். அது தமிழ்நாட்டினுடைய அரசு வரவு-செலவைச் செம்மைப்படுத்துகிற ஒரு அமைப்பாக இருக்கிறது என்பதையும் நான் நினைவூட்டக் கடமைப்பட்டிருக்கிறேன்.

பிற்பகல் 12-40

இந்த நிதித் துறை, தனியாக வரவு-செலவுத் திட்டத் துறையாக மட்டும், அதுவும் குறிப்பாக, சட்டமன்றத்திலே வைக்கப்படுகிற வரவு-செலவு மட்டும் அல்லாமல், அரசாங்கத்தால் நாடு முழுவதும் நடைபெறுகிற பல்வேறுவிதமான வரவு-செலவுகளையும் செம்மைப்படுத்துகிற, ஒழுங்குபடுத்துகிற அந்தப் பொறுப்பிலே உள்ள துறையாகும். இந்தத் துறையிலேதான் கருவூலக் கணக்குத் துறை, உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை, சிறு சேமிப்புத் துறை, அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தை மேற்பார்வையிடுகிற அந்தப் பொறுப்பு, கூட்டுறவுத் தணிக்கைத் துறை, துறைத் தணிக்கை மற்றும் சட்டப்படி அமைந்த அரசுத் துறை, நிறுவனத் தணிக்கைத் துறை, ஓய்வூதிய இயக்ககம், இத்தனை பணிகள், இத்தனை தனித் தனிக் கிளைப் பணிகள் இந்த நிதித் துறையால் மேற்கொள்ளப்படுகின்றன என்பதையும் நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

இந்த நிதித் துறையைப் பற்றி வெட்டுத் தீர்மானங்கள்மூலமாகச் சில முக்கியமான கருத்துகளை வலியுறுத்துவதற்கு மாண்புமிகு உறுப்பினர்கள் முயன்றிருக்கிறார்கள். அதிலே ஒன்று, 'அரசின் நிதி நிர்வாகத்தை நவீனப்படுத்தி, வளர்ந்து வரும் சூழ்நிலைகளுக்கு ஏற்ப நிதி நிர்வாகத்தை மாற்றி அமைக்க வேண்டியதன் அவசியம் குறித்து' விவாதிப்பதற்காக என்று தெரிவித்திருக்கிறார்கள். நிதித் துறையேகூட அவ்வப்போது ஏற்படுகிற வளர்ச்சிக்குத் தேவையான புதிய பணிகளையும் மேற்கொள்ளக்கூடிய அளவுக்குத் தொடர்ந்து அது நவீனப்பட்டுக்கொண்டுதான் வருகிறது என்பது ஒரு பெரிய உண்மை. நவீனப்படாமல், புதுமையை ஏற்காமல், புதிய வழிமுறைகளைக் காணாமல், நிதித் துறை செம்மையாக இயங்க முடியாது. அந்த முறையிலே இப்போது நடைபெறுகிற இந்த நிர்வாகத்தில் அரசின் நிதி நிர்வாகத்தைச் செம்மைப்படுத்தி, ஒரு வரையறுக்கப்பட்ட இலக்கோடும், பொது மக்கள் இந்த நிர்வாகத்தை நன்கு உணரும்வண்ணம் ஒளிவுமறைவற்ற தன்மையை உருவாக்கவும், தமிழ்நாடு அரசு 2003 ஆம் ஆண்டு நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தை இயற்றியுள்ளது. இதன்படி, வருவாய்ப் பற்றாக்குறையும், நிதிப் பற்றாக்குறையும் ஒரு கட்டுப்பாட்டுக்குள் வைக்கப்பட வேண்டும். நிதித் துறைப் பொறுப்பு வகிக்கும் அமைச்சர் அவர்கள் ஒவ்வொரு அரை ஆண்டிலும் மாநிலத்தின் நிதி நிலைமையை ஆய்வு செய்து, ஒரு இடைப்பட்ட கால நிதி நிலவரத் திட்டத்தைச் சட்டமன்றப் பேரவையில் சமர்ப்பிக்க வேண்டும். அந்த அறிக்கை



ஏற்கெனவே வழங்கப்பட்டிருக்கிறது. வருவாய்ப் பற்றாக்குறையை வருகின்ற ஆண்டிலே, 2008-2009 ஆம் ஆண்டில் முற்றிலும் நீக்குவதும் இதனுடைய குறிக்கோள். வருகின்ற காலங்களில் ஓராண்டு, இரண்டு ஆண்டுகளுக்குள்ளாக இந்தப் பற்றாக்குறை என்பது முற்றிலுமாக நீக்கப்பட வேண்டும். நிதிப் பற்றாக்குறையை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்கு மிகாமல் பராமரிப்பதும் நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின் இலக்குகளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளன. இதை எய்தும் விதத்தில், 2007-2008 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் வருவாய்ப் பற்றாக்குறை என்பது மொத்த வருவாய் வரவுகளில் 0.23; 1/4 per cent—க்குக் கீழே, 0.23 சதவிகிதம் ஆகவும், நிதிப் பற்றாக்குறை மாநிலத்தின் மொத்த உற்பத்தி மதிப்பில் 2.84 சதவிகிதமாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளன. 3 விழுக்காட்டுக்கு உட்பட்டதாக இருக்க வேண்டும் என்ற அந்த விதி காப்பாற்றப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் இலக்குகள் முற்றிலும் எய்தப்படவும், அதைத் தொடர்ந்து பராமரிக்கவும் அரசு உறுதி பூண்டுள்ளது என்ற காரணத்தால், வெட்டுத் தீர்மானம் தந்தவருடைய அந்த நோக்கம், 'செம்மையான முறையில் நிதிநிலை காக்கப்பட வேண்டும்' என்னும் நோக்கம் காப்பாற்றப்படுகிறது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல், நிதிப் பற்றாக்குறையைப் பற்றி ஒரு விளக்கம். மாநில அரசின் நிதிநிலை உறுதிப்பாட்டையும், நிலையான தன்மையையும்--stability--உறுதி செய்வதற்காக இயற்றப்பட்ட தமிழ்நாடு 2003 ஆம் ஆண்டின் நிதிநிலைப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி பற்றாக்குறை, உற்பத்தி மதிப்பில் 3 சதவிகிதத்திற்கு மிகாவண்ணம் உறுதி செய்யப்பட வேண்டும் என்பது காப்பாற்றப்பட்டிருக்கிறது. அதிலே, 2006-2007 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி, 2.74 சதவிகிதம்தான் அந்தப் பற்றாக்குறை வருகிறது. அதேபோல, 2007-2008 ஆம் ஆண்டின் வரவு-செலவுத் திட்டத்தில் 2.84 சதவிகிதம்தான் அந்தப் பற்றாக்குறை வருகிறது. எனவே, இந்தத் தமிழகத்தின் நிதிநிலை செம்மையான முறையில் காப்பாற்றப்படுகிறது அல்லது நிர்வகிக்கப்படுகிறது என்று நான் தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 12-45

இன்னும் ஒரு கருத்து. இந்தப் பொறுப்புடைமைச் சட்டத்தின்படி நிதிநிலை அறிக்கையில் வருவாய் வரவு 44,532 கோடி. செலவினம் 44,633 கோடி. இதனால் ஏற்படும் இழப்பு 101 கோடி. இதை எப்படி

ஈடு கட்டுவது என்று திரு. விடியல் எஸ். சேகர் அவர்களுடைய
வெட்டுத் தீர்மானம் கேள்வி எழுப்புகிறது. அந்தப் பிரச்சினையைப்
பொறுத்தவரையில், தமிழ்நாடு அரசு 2003 ஆம் ஆண்டு நிதிநிலைப்
பொறுப்புடைமைச் சட்டத்தின்படி 2007-08 ஆம் ஆண்டில் அரசின்
மொத்த வருவாய் வரவுகளில் 5 சதவிகித அளவிற்குள் வருவாய்ப்
பற்றாக்குறை குறைக்கப்பட வேண்டும். அந்த முறையிலேதான்
2006-07 ஆம் ஆண்டின் திருத்த மதிப்பீட்டின்படி மொத்த வருவாய்
வரவுகளில் வருவாய்ப் பற்றாக்குறை 0.61, ஒரு விழுக்காட்டிற்கு
உட்பட்டு 0.61 சதவிகிதம் ஆகவும், 2007-08 ஆம் ஆண்டின் வரவு
செலவுத் திட்ட மதிப்பீட்டின்படி இது 0.23 சதவிகிதம் ஆகவும்
இருக்கும். இந்த நிலையானது, 2008-09 ஆம் ஆண்டில்
நிர்ணயிக்கப்பட்ட இலக்கான வருவாய்ப் பற்றாக்குறையை முற்றிலும்
நீக்கும்படி அதை ஒட்டியே உள்ளது. எந்தக் கோணத்திலே,
எந்தக் குறிக்கோளோடு இந்த ஆண்டின் வரவு-செலவு நிதி
அளவு நிர்ணயிக்கப்பட வேண்டுமோ, அந்த முறையோடு
நிர்ணயிக்கப்படுகிறது என்பதை அது உறுதி செய்திருக்கிறது. ஆகவே,
மாண்புமிகு உறுப்பினர் தந்த அந்த வெட்டுத் தீர்மானங்களுடைய
நோக்கம் இந்த அரசாங்கத்தால் காப்பாற்றப்படுகிற காரணத்தால்,
அதை ஒரு பிரச்சினையாகக் கருதத் தேவையில்லை என்று நான்
தெரிவிக்க விரும்புகிறேன்.

அதேபோல, கடந்த காலத்தில் இந்த அரசின் சார்பில் பல்வேறு
உறுதிமொழிகளை நம்முடைய தமிழக முதல்வர் கலைஞர் அவர்கள்
அரசு அலுவலர்களுக்கும், நாட்டுக்கும் வழங்கினார்கள். அந்த
முறையிலே அரசு ஊழியர்களுக்குப் பல சலுகைகள் தொடர்ந்து
வழங்கப்பட்டன. ஒரு வேளை இன்றைக்கு இந்த விவாதம்
நடைபெறுகிற நேரத்திலே நான் சில உறுதிமொழிகளை அல்லது சில
வேண்டுகோள்களை நிறைவேற்ற முடியாமல் இருந்தாலும்கூட, இந்த
அரசினுடைய நிர்வாக முறைப்படி, தொடர்ந்து பல காரியங்களைச்
செய்கிறது என்ற முறையில், அவ்வப்போது ஒவ்வொரு பிரச்சினையும்
ஆய்வு செய்யப்பட்டு, உரிய முறையிலே பரிசீலிக்கப்பட்டு,
முடிவு எடுக்கப்பட்டு, அறிவிக்கப்படும். அந்த முறையிலே,
ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட செய்திகளை நான் சொல்லக்
கடமைப்பட்டிருக்கிறேன்.

அரசு ஊழியர் முழுமையான ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள
பணிக் காலம் 30 ஆண்டுகளிலிருந்து 33 ஆண்டுகளாகக் கடந்த
காலத்தில் உயர்த்தப்பட்டது. 1-8-2006-ல் அந்தச் சலுகை மீண்டும் அரசு
அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.



அதேபோல, கடைசி மாத ஊதியத்தின் 50 சதவிகிதத் தொகை
ஓய்வூதியமாக நிர்ணயிக்கப்படுவதற்குப் பதிலாக, கடைசி 10 மாத
காலத்தின் 50 சதவிகித ஊதியத் தொகையின் சராசரித் தொகையினை
ஓய்வூதியமாகக் கணக்கீடு செய்ய கடந்த காலத்திலே
உத்தாவிடப்பட்டது. இப்போது 1-8-2006-ல், ஏற்கெனவே அவர்கள்
பெற்றிருந்த அந்தச் சலுகை, என்.ஜி.ஓ.-க்கள் பெற்றிருந்த அந்தச் சலுகை
திரும்ப அந்த அரசு அலுவலர்களுக்கு வழங்கப்பட்டது.

அதேபோல, ஆண்டுக்கு ஒரு முறை 15 நாட்கள் அல்லது இரண்டு
ஆண்டுகளுக்கு ஒரு முறை 30 நாட்கள் ஈட்டிய விடுப்பைச் சரண்
செய்து பணமாக்கிக்கொள்கின்ற அந்த உரிமை கடந்த ஆட்சியிலே
நிறுத்தி வைக்கப்பட்டது. கேன்சல் செய்யவில்லை, தடுத்து
வைத்தார்கள். அதை மாற்றி, பணியாளர் மற்றும் நிர்வாகச்
சீர்திருத்தத் துறையின் சார்பாக 23-2-2006-ல் இந்தச் சலுகை மறுபடியும்
வழங்கப்பட்டது.

தலைமைச் செயலகப் பணியாளர்களுக்கு மாலை நேர வருகைப்
பதிவேட்டிலும் கையொப்பமிடும் முறை ஒன்று கொண்டு
வரப்பட்டது, கடந்த காலத்தில். அந்த முறை தேவையில்லை என்று
இந்த அரசு 23-6-2006-ல் அதை இரத்துச் செய்துவிட்டது.

ஐந்தாவது ஊதியக் குழுவின் நிலுவைத் தொகையில் 60 சதவிகிதம்
ஊழியர்களுக்கு வழங்கப்படாமல் ஏற்கெனவே நிறுத்தி
வைக்கப்பட்டது. அரசாணை நிலை எண் 490, நிதித் துறை, நாள்
31-7-2006-ல், அந்த நிலுவைத் தொகை 3 தவணைகளில் ரொக்கமாக
வழங்கப்படும் என ஆணை வழங்கப்பட்டது.

ஆண்டுதோறும் பொங்கல் பண்டிகையின்போது வழங்கப்பட்டு
வந்த பொங்கல் போனஸ் 2002 ஆம் ஆண்டிலிருந்து
வழங்கப்படவில்லை, நிறுத்தப்பட்டது. பொங்கல் என்ற காரணத்தால்
நிறுத்தப்பட்டதோ அல்லது சிக்கன நடவடிக்கையால்
நிறுத்தப்பட்டதோ, நிறுத்தப்பட்டது. 28-12-2006-ல்--2007 ஆம் ஆண்டு
ஜனவரி பொங்கல் பண்டிகைக்குப் பொங்கல் போனஸ், கருணைத்
தொகை வழங்க இந்த அரசு ஆணையிட்டது.

பிற்பகல் 12-50

அதேபோல, விடுப்புக் காலப் பயணச் சலுகைகளான, இரயிலில்
முதல் வகுப்பில் செல்லத் தகுதியான அடிப்படை ஊதிய விகிதத்தை,

ரூபாய் 5,000 என்று இருந்ததை ரூபாய் 8,000 ஆக உயர்த்தி ஆணையிடப்பட்டது. ரூபாய் 8,000 சம்பளம் வாங்கினால்தான் அவர்களுக்கு அந்தச் சலுகை உண்டு என்று கடந்த ஆட்சிக் காலத்தில் அறிவிக்கப்பட்டது. அப்படி அறிவிக்கப்பட்ட அந்த நிலை இப்போது ஆய்விலே இருக்கிறது. அதிவிரைவிலே, அது பற்றி ஆய்ந்து, அந்தச் சலுகைகளை வழங்குவதற்கு இந்த அரசு முயற்சி செய்துகொண்டிருக்கிறது. தமிழ்நாடு அத்தியாவசியப் பணிகள் பராமரிப்புச் சட்டம்; அது TESMA சட்டம். ஏற்கெனவே அந்த ஆட்சியிலே கொண்டு வரப்பட்டு, இந்த ஆட்சியிலே அந்தச் சட்டம் நீக்கப்பட்டது. பணியில் இருக்கும்போது இறந்த அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்களின் வாரிசுகளுக்கு கருணை அடிப்படையில் அவர்களின் கல்வித் தகுதிக்கேற்பப் பணி நியமனம் வழங்குவது ஏற்கெனவே தடை செய்யப்பட்டது; வழங்குவதில்லை என்று கைவிட்டார்கள். இப்போது மறுபடியும், 19-7-2006-ல் அந்தச் சலுகை மீண்டும் வழங்கப்பட்டது. அரசுப் பணிகளில் புதிய நியமனங்கள் செய்யத் தடை விதிக்கப்பட்டது; எந்த வேலையிலும் நியமிப்பதில்லை என்று அறிவிக்கப்பட்டது. இப்போது இந்த அரசால் 18-9-2006 மற்றும் 19-9-2006 ஆகிய அரசு ஆணைகளில் இத்தடை நீக்கப்பட்டுப் புதிய நியமனங்கள் செய்ய உத்தரவிடப்பட்டது.

அதேபோல, தமிழ்நாடு மாநில சார்நிலைப் பணிகளில் பொது விதி அல்லது சிறப்பு விதிகளில் குறிப்பிடப்படவில்லை என்றாலும், ஒரு பணித் தொகுப்பின் வகை அல்லது வகுப்பில் பணிபுரியும் அரசுப் பணியாளர்கள் அந்தப் பதவிக்கு இணையான வேறு ஒரு பணித் தொகுப்பில் உள்ள வகை அல்லது வகுப்பினைச் சார்ந்த பணியிடங்களுக்குப் பொது நலன் கருதி அல்லது நிர்வாகக் காரணங்களுக்காக மாநில அரசு மாறுதல் செய்யலாம் என ஒரு ஆணை 15-9-2001-ல் வெளியிடப்பட்டது. இப்போது அந்த ஆணை நீக்கப்பட்டது. எனவே, இப்படி இந்த ஆட்சியில் சட்டமன்றத் தொடர்புடைய முறையிலேயும், நிதித் துறை தொடர்புடைய முறையிலேயும் உள்ள அரசு அலுவலர்களுக்கு இழைக்கப்பட்ட பல்வேறுவிதமான பாதகங்கள், பறிக்கப்பட்ட சலுகைகள் திரும்ப வழங்கப்பட்டன என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, ஓய்வூதியம் வழங்குவதில் அவர்களுடைய வேண்டுகோளாகப் பல வேண்டுகோள்கள் தெரிவிக்கப்பட்டு, வெட்டுத் தீர்மானங்களாகவும் தரப்பட்டு இருக்கின்றன. அந்த ஓய்வூதியம்



வழங்குவதைப் பற்றித் தகுந்த முறையில் ஆய்வுகள் நடத்திப் பல்வேறுவிதமான சலுகைகள் வழங்கப்பட்டு இருக்கின்றன. அதிலே குறிப்பாக, சுதந்திரப் போராட்டத் தியாகிகளுக்கு மாநில அரசால் வழங்கப்படும் ஓய்வூதியம் உயர்த்தப்பட வேண்டும் என்ற கோரிக்கை இங்கே எடுத்து வைக்கப்பட்டுள்ளது. இப்போது 1,024 விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு 15-8-1997 முதல் மாதந்தோறும் ரூபாய் 3,000/- மாநில அரசின் சார்பில் ஓய்வூதியமாக வழங்கப்படுகிறது. மேலும், 2,251 விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசால் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,100 வழங்கப்படுகிறது. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும், அவர்களின் குடும்பங்களுக்கும் வழங்கப்படும் ஓய்வூதியம் கடந்த 10 ஆண்டுகளாக உயர்த்தப்படாமல் உள்ளது என்பதைக் கருத்திற்கொண்டு, விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு மாநில அரசு வழங்கும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை ரூபாய் 3,000/-லிருந்து ரூபாய் 4,000 ஆகவும், (மேசையைத் தட்டும் ஒலி) விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பங்களுக்கு மாநில அரசால் வழங்கப்படும் குடும்ப ஓய்வூதியத் தொகை ரூபாய் 1,500/-லிருந்து ரூபாய் 2,000/- ஆகவும் உயர்த்தி வழங்கப்படும். இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு 257.94 இலட்சம் கூடுதல் செலவினம் ஏற்படுமெனினும், நமது நாட்டின் சுதந்திரப் போரில் இவர்களின் அளப்பரிய பங்கினைக் கருத்திற்கொண்டு இச்செலவை அரசு ஏற்றுக்கொள்ளும்.

பிற்பகல் 12-55

தற்போது பங்களிப்புடனான ஓய்வூதியத் திட்டம் பற்றிய ஒரு கருத்தை நான் தெரிவிக்கக் கடமைப்பட்டிருக்கின்றேன். ஏனென்றால், இதுகாறும் வழங்கப்பட்டு வந்த ஓய்வூதிய முறை அரசுக்குப் மிகப் பெரிய நிதிச் சுமையை ஏற்படுத்துகிறது என்ற காரணத்தினால், அகில இந்திய அளவிலேயேகூட இந்த ஓய்வூதியம் வழங்குகிற முறையை ஒரு தனி ஏற்பாடாகச் செய்ய வேண்டும் என்ற ஒரு கருத்து உருவாகி, அதைப் பல மாநிலங்களிலேயும் பின்பற்றி ஏற்றுக்கொண்டிருக்கிறார்கள்.

தற்போது நடைமுறையில் உள்ள பயன்கள், வரையறுக்கப்பட்ட ஓய்வுதியத் திட்டத்தின்கீழ், தமிழ்நாடு அரசுப் பணியாளர்கள் பணியிலிருந்து ஓய்வுபெற்றபின் அவ்வப்போது மேற்கொள்ளப்படும் விதிகளின்படி, ஓய்வூதியப் பயன்களுக்குத் தகுதியுடையவர் ஆகின்றனர். தற்போது கிடைக்கப்பெறும் ஓய்வூதியப் பயன்கள் பின்வருமாறு:

ஓய்வூதியம், குடும்ப நல ஓய்வூதியம், இறப்பு மற்றும் ஓய்வுப் பணிக்கொடை. நிர்ணயிக்கப்படும் ஓய்வூதியத் தொகையில் 33.33 சதவிதிகம் தொகையை மொத்தமாக முன்னரே பெற்றுக்கொள்ள ஓய்வூதியதாரர்கள் அனுமதிக்கப்படுகின்றனர். இவ்வாறு ஒன்று திரட்டிப் பெறக் கணக்கில் எடுத்துக்கொள்ளப்பட்ட தொகை, 15 ஆண்டுகளுக்குப் பின்னர், அந்தத் தொகை எடுத்துக்கொள்ளப்பட, திரும்ப அந்தக் கடன் கட்டப்பட்டதாகக் கொள்ளப்பட்டு, 15 ஆண்டுகளுக்குப் பின்னர் ஓய்வூதியம் முழுமையாக வழங்கப்படும். அவர்களுக்கு ஏற்கெனவே வழங்கப்படுகிற, மாதந்தோறும் வழங்கப்படுகிற ஓய்வூதியம், இந்த மொத்தத் தொகை எடுத்துக்கொள்ளப்படுகிற காரணத்தினால், முதலில் வெட்டப்பட்டாலும்கூட, 15 ஆண்டுகளில் அந்தத் தொகை ஈடு செய்யப்பட்டதாக ஏற்றுக்கொள்ளப்பட்டு, அவர்களுக்கு முழு ஓய்வூதியம் வழங்கப்படும்.

இன்றுள்ளபடி, சுமார் 5 இலட்சத்து 66 ஆயிரம் குடும்ப நல ஓய்வூதியதாரர் உள்ளிட்ட ஓய்வூதியதாரர்களுக்குத் தமிழ்நாடு அரசு மாதாந்திர ஓய்வூதியம் வழங்கி வருகிறது. கடந்த சில ஆண்டுகளில் ஓய்வூதியர் எண்ணிக்கை தொடர்ந்து அதிகரித்துள்ளதன் காரணமாக, மாநில அரசின் திட்டம்சாராச் செலவினத்தின் பெரும் பகுதி ஓய்வூதியச் செலவினத்திற்கே தேவைப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

1997 ஆம் ஆண்டில் 1,070 கோடி ரூபாய் அளவிலிருந்து இந்தப் பத்து ஆண்டுகளில் 2006-2007 ஆம் ஆண்டுகளில், 5,688 கோடி ரூபாய் அளவிற்குச் செலவினம் உயரும் என மதிப்பிடப்பட்டுள்ளது. மிக விரைவாக உயர்ந்து வரும் ஓய்வூதியப் பயன்கள் குறித்த செலவுப் பொறுப்பினைக் கருத்திற்கொண்டு, மறைமுக ஓய்வூதியக் கடன்பாட்டின் அளவை அறிய, தமிழ்நாடு அரசு உலக வங்கியின் தொழில்நுட்ப உதவியுடன் ஒரு விரிவான ஆய்வினை மேற்கொண்டுள்ளது.

ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியத் திரட்டு ஆகியவற்றை உள்ளடக்கிய தற்போதுள்ள பயன்கள் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்திற்கான செலவு, மாநிலத்தின் சொந்த வருவாயில் 21 சதவிகித அளவில் உள்ளது. பயன்கள் வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தின்கீழான ஓய்வூதியச் செலவு, ஊதியச் செலவில் எதிர்பார்த்த காலக்கட்டத்திற்கு முன்னரே சுமார் 50 சதவிகிதமாக உயர்ந்துவிட்டது.



தமிழ்நாட்டைப் பொறுத்தவரையில், மறைமுகமான ஓய்வூதியக் கடன்பாடு தற்போதைய விலை விகிதத்திலான எதிர்காலச் செலவுப் பொறுப்பு ரூபாய் 52,600 கோடி என மதிப்பிடப்பட்டுள்ளது. அதாவது, 2002 ஆம் ஆண்டில் மாநிலத்தில் மொத்த உற்பத்தியில் 33 சதவிகிதமாக இருந்தது. இது மற்ற இந்திய மாநிலங்களில் மொத்த உற்பத்தியில் 24 சதவிகிதமாக இருந்தது. மற்ற மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டில் தொடர்ந்து முறையாக இந்த பென்ஷன் வழங்குகிற முறை, முறையாகச் செலவிட்டு, அதன் காரணமாக அது உயர்ந்துகொண்டே வந்த காரணத்தாலும், அலுவலர்களுடைய எண்ணிக்கை மிகுதி காரணமாகவும், இப்படிப் பல்வேறு காரணங்களால் ஏற்கெனவே நாம் வழங்கிக்கொண்டு வருகிற அந்த முறைப்படி இந்த விகிதம் 33 சதவிகிதம். ஆனால், மற்ற மாநிலங்களில் அது 24 சதவிகிதம்தான்.

இதனை விரிவாக ஆய்வு செய்த பின்னர், ஓய்வூதியச் செலவுப் பொறுப்பு வேகமாக உயர்ந்து வருவதைக் கருத்திற்கொண்டு தமிழ்நாடு அரசு 2003 ஆம் ஆண்டில், 1-4-2003-க்குப் பின்னர் நியமிக்கப்படும் பணியாளர்களுக்குப் புதிய பங்கேற்பு வரையறுக்கப்பட்ட ஓய்வூதியத் திட்டத்தை அமல்படுத்தக் கொள்கை முடிவு எடுத்தது. அது பற்றிய ஆய்வு தொடர்ந்து நடைபெற்று, ஒரு தகுந்த முடிவு அறிவிக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-00

இத்திட்டத்திற்கு ஓய்வூதிய நிதிய ஒழுங்குமுறை மேம்பாட்டு ஆணையம் குறிப்பிடும் வழிகாட்டுக் கோட்பாடுகளைப் பின்பற்றலாம் என்று தமிழ்நாடு அரசு கருதியுள்ளது. ஓய்வூதிய நிதிய ஒழுங்குமுறை மற்றும் மேம்பாட்டு ஆணையச் சட்டமுன்வடிவு மக்களவையில் 2005 ஆம் ஆண்டு அறிமுகம் செய்யப்பட்டுள்ளது. இந்தச் சட்டம் இயற்றப்பட்டதும் ஓய்வூதிய நிதிய ஒழுங்குமுறை ஆணையம் வழிகாட்டுக் கோட்பாடுகளை வெளியிடும். அதன் பின்னர், தமிழக அரசு அந்த அடிப்படையில் ஆய்வு நடத்தி, உரிய முடிவு எடுக்கும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மற்றும் ஒன்று; தமிழ்நாட்டில் திட்டங்களுக்காக--ஐந்தாண்டுத் திட்டங்களாகப் பல முறை நடைபெற்று, ஏறத்தாழ ஏழாவது திட்டம் வரையில் ஐந்தாண்டுத் திட்டங்களாக, எட்டாவது திட்டம் வருகிறபோது ஓராண்டுத் திட்டமாக, ஒன்பதாவது திட்டம்

வருகிறபோதும் ஓராண்டுத் திட்டமாக, ஆனால் இந்த எட்டு, ஒன்பது என்ற அந்தத் திட்டங்கள் எல்லாம் ஒவ்வோராண்டுத் திட்டமாக நடைபெற்றாலும்கூட, அது ஓராண்டுத் திட்டமாக விடப்பட்டு, எட்டாவது திட்டம், 1992-1997-லிருந்து, ஒன்பது, பத்து ஆகிய ஐந்தாண்டுத் திட்டங்கள் நடைபெற்று, இனி 11-வது திட்டம் வர இருக்கிறது. இந்தத் திட்டத்திற்காகவும் ஒரு குழு இருந்து, அதற்குத் தகுந்த ஆலோசனை வழங்குகிறது. அந்தத் திட்டங்களில் முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு ரூபாய் 29 ஆக இருந்தது. ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் இந்தத் தனி நபருக்கான ஒதுக்கீட்டுத் தொகை அளவு ரூ.248/-ஆக--படிப்படியாக வளர்ந்து ரூ.248-ஐ எட்டியது. இப்பொழுது 10-வது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு உயர்ந்த அளவாக ரூ.6,557-ஐ எட்டியுள்ளது. ஏறத்தாழ இந்த நாட்டினுடைய பொருளாதாரத்தில் எற்படுகிற பெரிய மாற்றங்கள் காரணமாக, வளர்ச்சி காரணமாக, இந்த ஐந்தாண்டுத் திட்டத்திலே செய்யப்படுகிற முதலீட்டினுடைய அளவு மிகப் பெரிய அளவிலே உயர்ந்திருக்கிறது என்பதையும், அப்படி உயர்ந்து வருகிற வேகத்தில் இந்த ஆண்டிலேயே அந்த ஐந்தாண்டுத் திட்டத்தாலே நாம் பெறக்கூடிய பலனை மிகுதியாகப் பெறக்கூடிய அளவிற்கு மத்தியத் திட்டக் குழுவினரிடமிருந்து நம்முடைய முதலமைச்சர் கலைஞர் அவர்கள் கடந்த ஆண்டிலே பெற்றிருந்ததைவிட 1,500 கோடி ரூபாய் அதிகமாக இந்த ஆண்டுத் திட்டத்திற்காக நிதி பெற்றார்கள் என்பதையும் நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அது தமிழ்நாட்டினுடைய வளர்ச்சியிலே குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

அதேபோல, நம்முடைய சட்டமன்ற உறுப்பினர்கள் தங்களுக்காகப் பல கோரிக்கைகளை எடுத்து வைத்து, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுடைய நிலையையும் எடுத்துக் கூறி, அவர்களுடைய நிலையில் இப்பொழுது வழங்கப்படுகிற இந்த ஓய்வூதியத் தொகை போதுமானது அல்ல என்பதை வலியுறுத்தி எடுத்துச் சொன்னார்கள். அந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்கள் சார்பாக இங்கே பலர் உரையாற்றினார்கள். நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அவற்றைக் கருதி, அந்த முன்னாள் சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், இப்போதுள்ள சட்டமன்ற உறுப்பினர்களுக்கும், எந்த வகையில், இந்தச் சூழ்நிலையில் அவர்களுடைய கோரிக்கையை ஏற்க முடியுமோ, அந்த வகையிலே ஏற்றுத் தெரிவித்திருக்கிறார்கள். அதை நான் இங்கே உங்களுக்குத் தெரிவிக்கிறேன். முன்னாள்



சட்டமன்ற உறுப்பினர்கள் தாங்கள் பெறும் ஓய்வூதியம் மற்றும் இதர சலுகைகளை உயர்த்துவது குறித்து மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடம் ஏற்கெனவே கோரிக்கையை வைத்துள்ளார்கள். அவற்றைக் கனிவுடன் பரிசீலித்து, மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்கள் பின்வருமாறு ஆணையிட்டுள்ளார்:

முன்னாள் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்கள் தற்போது பெற்று வரும் மாதாந்திர ஓய்வூதியத் தொகையான ரூபாய் 6,000, இனி மாதந்தோறும் ரூபாய் 7,000 ஆக உயர்த்தி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 1.15 கோடி கூடுதல் செலவு ஏற்படும். முன்னாள் சட்டமன்றப் பேரவை, மேலவை உறுப்பினர்களுக்குத் தற்போது ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 3,000 மருத்துவப் படியாக வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி, ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 4,000 ஆக மருத்துவப் படி வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்கு ரூபாய் 10 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.

பிற்பகல் 1-05

1-4-1999-லிருந்து இயற்கை எய்திய முன்னாள் சட்டமன்றப் பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்குக் குடும்ப ஓய்வூதியமாக மாதம் ஒன்றுக்கு ரூபாய் 3,000 வழங்கப்பட்டு வருகிறது. 1-4-1999-க்கு முன்பாக இயற்கை எய்திய முன்னாள் சட்டமன்றப் பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்பட வேண்டுமென்ற ஒரு கோரிக்கை வைக்கப்பட்டுள்ளது. இக்கோரிக்கையை ஏற்று, 1-1-1999-க்கு முன்பு இயற்கை எய்திய முன்னாள் சட்டமன்றப் பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்களுக்கும் 1-4-2007 முதல் மாதந்தோறும் ரூபாய் 3,000 குடும்ப ஓய்வூதியமாக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் சுமார் 350 முன்னாள் சட்டமன்றப் பேரவை/மேலவை உறுப்பினர்களின் குடும்பங்கள் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்களாகிறார்கள். இதனால் அரசுக்கு ஆண்டொன்றுக்கு 1.26 கோடி ரூபாய் கூடுதல் செலவு ஏற்படும்.

டெல்லியில் உள்ள தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்குத் தற்போது சட்டமன்ற உறுப்பினர்களுக்குச் சலுகை அடிப்படையில் வாடகைக் கட்டணம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களும் தாங்கள் டெல்லி செல்லும்போது தமிழ்நாடு இல்லத்தில் தங்குவதற்குச் சலுகை அடிப்படையில்

வாடகைக் கட்டணம் நிர்ணயிக்க வேண்டுமென்று கோரிக்கை வைத்திருக்கிறார்கள். அந்தக் கோரிக்கையினை ஏற்று, தற்போது முன்னாள் சட்டப் பேரவை உறுப்பினர்களிடம் எந்த அளவிற்கு வாடகைக் கட்டணம் வசூலிக்கப்பட்டு வருகிறதோ, அந்தக் கட்டணத்தில் 50 சதவிகிதம் சலுகையாக வழங்கிட முடிவு செய்யப்பட்டிருக்கிறது. (மேசையைத் தட்டும் ஒலி)

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களின் தினப் படி--இந்தச் சட்டமன்றத்திற்கு வருகிற அன்றையதினம் வழங்குகிற தினப் படி-- ரூபாய் 400-லிருந்து ரூபாய் 500 ஆக உயர்த்தப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ஆண்டு ஒன்றுக்குக் கூடுதலாக ரூபாய் 20 இலட்சம் செலவு ஏற்படும்.

சட்டமன்றப் பேரவை உறுப்பினர்களுக்கு இரயில் பயணப் படியாக ஆண்டு ஒன்றுக்கு 15,000 ரூபாய் வழங்கப்படுகிறது. இதை உயர்த்தி, இனி ஆண்டொன்றுக்கு ரூபாய் 20,000-ஆக வழங்கப்படும். (மேசையைத் தட்டும் ஒலி) இதனால் அரசுக்கு ரூபாய் 12 இலட்சம் கூடுதல் செலவு ஏற்படும்.

மறைந்த சட்டப் பேரவை உறுப்பினர் திரு. கே.ஆர். நல்லசிவம் அவர்களின் குடும்பத்திற்கு--இங்கே அவர்களுக்கு உதவ வேண்டுமென்று முதலமைச்சரைக் கேட்டுக்கொண்டார்கள். அவர்களின் குடும்பத்திற்கு--நிதியுதவி வழங்கப்படும் என்று நேற்றையதினம் சட்டப் பேரவையில் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அறிவித்ததற்கிணங்க, 2 இலட்சம் ரூபாய் திரு. கே.ஆர். நல்லசிவம் அவர்களின் துணைவியாருக்கு (மேசையைத் தட்டும் ஒலி) உதவி நிதியாக வழங்குவது என்று முடிவெடுக்கப்பட்டுள்ளது. மேலும், ஏற்கெனவே நான் அறிவித்த அந்தச் சலுகையின்படி 1-4-1999 ஆம் தேதிக்கு முன்னதாக இயற்கை எய்திய சட்டப் பேரவை உறுப்பினர்களின் குடும்பத்தினருக்குக் குடும்ப ஓய்வூதியமாக மாதந்தோறும் 3,000 ரூபாய் வழங்கப்படும் என்று அறிவித்ததையொட்டி, திரு. கே.ஆர். நல்லசிவம் அவர்களின் துணைவியார் மாதந்தோறும் 3,000 ரூபாய் குடும்ப ஓய்வூதியம் பெறுவார்கள். (மேசையைத் தட்டும் ஒலி)

இங்கே மாண்புமிகு உறுப்பினர்கள், இந்தச் சட்டமன்றம் அமைந்திருக்கிற இந்த இடத்தில் போதுமான இட வசதி இல்லையென்ற அடிப்படையில் பல செய்திகளைச் சொன்னார்கள்.



ஆனால் அதே நேரத்தில், நான் நீண்ட காலமாகக் கருதி வருகிற ஒன்று; வேறு இடத்திற்குப் போனால்தான் இந்த இடத்தினுடைய அருமையேகூடத் தெரியும். இந்த இடம் அளவுக்கு ஒரு வரலாற்றுப் பின்னணியுடைய ஒரு இடமோ, இன்னும் சொல்லப் போனால், சட்டமன்றத்திற்கு வேண்டிய ஒரு தனிச் சிறப்பான சில அழகுகளைக்கொண்ட அந்த அமைப்போ மற்ற இடங்களிலே அமைவது கொஞ்சம் கடினம்தான். இருந்தாலும், அந்த வேண்டுகோளைப் பற்றிக் கலைஞர் அவர்கள் எண்ணிப் பார்க்கிறார்கள் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். சிந்தித்துத்தான் முடிவெடுக்க வேண்டும். இடம், பொருள், ஏவல். ஏவல் வேண்டுமானால் எளிதாகச் செய்யலாம். இடமும், பொருளும் பார்த்து, அதற்கேற்பச் செய்ய வேண்டுமென்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

அதேபோல, இங்கே தரப்பட்டுள்ள ஒரு வெட்டுத் தீர்மானம், பிற்படுத்தப்பட்டோர் நலத் துறைக்கெனத் தனியாக ஓர் அமைச்சரை நியமிக்க வேண்டியதனுடைய அவசியம் குறித்து, மிக, மிகப் பிற்படுத்தப்பட்டோருக்காக ஒரு தனி அமைச்சர் வேண்டுமென்று கேட்டிருக்கிறார்கள். இப்போது இருக்கிற அமைச்சரேகூட அவர் எவ்வளவு திறமையானவராக இருந்தாலும், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்தான். அவரே மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவராக இருக்கிறபோது, அவர்களுக்கு என்று வேறு அமைச்சர் தேவையென்று சாதாரணமாகக் கருத முடியாது. இரண்டாவது, பிற்படுத்தப்பட்டவர், மிக, மிகப் பிற்படுத்தப்பட்டவர்களுக்கு வழங்கப்படுகிற சலுகைகள் ஏறத்தாழ ஒரேவிதமான சலுகைகள். இவர்களுக்கு ஒரு ஹாஸ்டல் கட்டினால், அவர்களுக்கு ஒரு ஹாஸ்டல், இவர்களுக்குச் சாப்பாட்டுக்கு என்ன செலவோ, அதுதான் அவர்களுக்கும் சாப்பாட்டுக்கு. எண்ணிக்கை அதிகம் உள்ள சமூகம் எந்த இடத்திலே இருக்கிறதோ, அங்கு அதிக இட வசதி செய்வதற்கு நிச்சயமாக இந்த அரசு தகுந்த முயற்சி எடுத்துக்கொள்ளும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

பிற்பகல் 1-10

சட்டமன்ற உறுப்பினர்கள் இங்கேயும் தெரிவித்தார்கள். அவர்கள் மாவட்ட ஆட்சியர்களுக்கும், மற்றவர்களுக்கும் மனுக்களை அனுப்புகிறபோது, உடனுக்குடன் பதில் வர வேண்டுமென்று தெரிவித்தார்கள். ஏற்கெனவே அரசாங்கம் அதற்குத் தகுந்த ஆணை

வெளியிட்டிருக்கிறது. அதிகாரிகளுக்குத் தெரிவித்திருக்கிறது. அப்படி
ஒரு 15 நாட்களில் உரிய பதில் கிடைக்காவிட்டால்; நீங்கள் மறுபடியும்,
அப்படிக் கிடைக்கவில்லை என்பதைக்கூட சட்டமன்றச்
செயலாளருக்கேகூட அனுப்பி, சட்டமன்றத்தின் மூலமாகக்கூட
அவர்களுக்கு அனுப்பிக்கூட நீங்கள் கேட்க முடியும். ஆகவே, எல்லா
அதிகாரிகளும் சட்டமன்ற உறுப்பினர்கள் தெரிவிக்கிற செய்திகளுக்கு
அல்லது அவர்களுடைய கடிதங்களுக்கு உரிய முடிவெடுக்க
வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, மக்கள் குறைகளைக் கேட்பதற்கு, ஒவ்வொரு வாரமும்
திங்கட்கிழமை அன்றையதினம் மாவட்ட ஆட்சித் தலைவர் மக்கள்
குறைகளைக் கேட்க வேண்டுமென்று தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

அதேபோல, ஏதோ கோப்புகள் அந்தந்த மாவட்ட ஆட்சித்
தலைவருடைய அலுவலகத்திலே முடிக்கப்படாமல் இருக்குமானால்,
ஒவ்வொரு வாரமும், ஒரு நாளைக் குறிப்பிட்டு, பெரும்பாலும்
திங்கட்கிழமையே அதுவரையில் வந்த கோப்புகள் முடிக்கப்பட
வேண்டும் என்று அரசு தெரிவித்திருக்கிறது.
தெரிவிக்கப்பட்ட இந்த விதிமுறைகளை அதிகாரிகள் பின்பற்றாமல்
இருப்பார்களேயானால், அது பற்றி அரசுக்குத் தெரிய வருமானால்,
உரிய அமைச்சர்கள் தகுந்த நடவடிக்கை எடுப்பார்கள் என்று நான்
தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். அப்படித்

அதேபோல, அமைச்சர்களுக்கு வருகிற கடிதங்களுக்கு அல்லது
வேண்டுகோளுக்கு, விண்ணப்பங்களுக்கு, அமைச்சர்கள் அந்த
விண்ணப்பம் கிடைத்தது என்று தெரிவிக்க முடியுமே தவிர,
உடனடியாக அந்த விண்ணப்பத்தை நிறைவேற்றித் தருவது என்பது
இயலாது. தங்களுடைய வேண்டுகோள் கடிதம் கிடைத்தது அல்லது
விண்ணப்பம் கிடைத்தது, பரிசீலனையில் இருக்கின்றது, ஆய்வு
செய்யப்படுகிறது என்றுதான் சொல்ல முடியும். ஏனென்றால்,
எங்களுக்குக் கிடைக்கிற செய்திகள் அல்லது தரப்படுகிற
விண்ணப்பங்கள், அவைகளைப் பற்றி நாங்கள் அந்தந்தத் துறைக்கு
எழுதி, அவர்கள் பதில் தெரிவித்ததற்குப் பின்னர்தான் முடிவு சொல்ல
முடியும். அந்த முடிவுதான் பயனுள்ள முடிவாக இருக்க முடியும்
என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

தொகுதிகளுக்குச் செல்கிறபோது அமைச்சர்கள் அந்தந்தச்
சட்டமன்ற உறுப்பினருக்கு அவருடைய வருகையைத் தெரிவிக்க



வேண்டும் என்பது ஏற்கெனவே நடைமுறையில் இருக்கிறது,
தெரிவிக்கப்படுகிறது. கடிதங்கள்தான் அனுப்பப்படுகின்றன.
அதன்படி, சட்டமன்ற உறுப்பினர்கள் எல்லாம் அதைப்
பயன்படுத்திக்கொள்ள விரும்பினால் பயன்படுத்திக்கொள்ளலாம்.
அவர்கள் அதே நாளில் வேறு ஒரு பகுதிக்குச் சுற்றுப் பயணம்
போகிறபோது முடியாது. அமைச்சர் கும்பகோணம் வருகிறபோது,
அந்தக் கும்பகோணத்திலே இருக்க வேண்டிய சட்டமன்ற உறுப்பினர்
இயல்பாக அவர் மதுரைக்குப் போயிருந்தால், சந்திக்கத்தான்
முடியாது. ஆகவே, சட்டமன்ற உறுப்பினருடைய வசதியைத்
தெரிந்துகொண்டு அமைச்சர் வர முடியாது. அமைச்சர் வருவது
என்பது பெரும்பாலும் அரசு நிகழ்ச்சிகளையொட்டி. ஆகவே,
மாண்புமிகு உறுப்பினர்கள் மதிக்கப்பட்டு, அவர்களுக்கு உரிய
செய்திகள் அனுப்பப்படுகின்றன என்பதை நான்
தெரிவித்துக்கொள்ளக் கடமைப்பட்டிருக்கிறேன்.

இங்கே நாமக்கல் சட்டமன்ற உறுப்பினர் மாண்புமிகு ஜெயக்குமார்
அவர்கள் கடந்த நிதிநிலை அறிக்கை விவாதத்திலேயும் எடுத்து
வைத்தார்கள்; இப்போதும்கூட நியாயமான ஒரு கருத்தை எடுத்து
வைத்து, அதை, அந்தக் கருத்தைச் செயல்படுத்துவதற்கு வழி காண
வேண்டுமென்று கேட்டார்கள். இருந்தாலும், சில விளக்கங்களை நான்
சொல்ல வேண்டிய ஒரு கடமை இருக்கிறது. ஆதி திராவிடர் சமூகம்,
அதேபோல மலைவாழ் மக்கள், அப்படிப்பட்ட மக்களுடைய நலனை
மிகுந்த அக்கறையோடு பாதுகாக்க வேண்டும், அவர்களுக்குத் தகுந்த
உதவிகள் செய்ய வேண்டும் என்கின்ற முறையிலே அந்த
வேண்டுகோளை எடுத்து வைத்தார்கள். அகில இந்திய அளவிலே
கொண்டு வரப்படுகிற இந்தத் திட்டத்திற்கான ஆலோசனையைக்கூட
மத்திய அரசாலேயே நிறைவேற்றப்படக்கூடியதாக இல்லை. மாநில
அரசுகள்தான் நிறைவேற்ற வேண்டும். அந்த மாநில அரசுகளிலேயும்
தமிழ்நாடு நீண்ட காலமாகப் பல்வேறு வகைகளிலே பாதிக்கப்பட்ட
மக்களுடைய நலனைப் பாதுகாப்பதிலே முனைப்பாகச் செயல்படுவது.
தமிழக அரசு நீண்ட பாரம்பரியம் கொண்டது. நீதிக் கட்சி
காலத்திலேயிருந்து, 1926-27-லேயிருந்து, தொடர்ந்து பல்வேறு பணிகள்
நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. அதிலேயும் குறிப்பாகக் கலைஞருடைய
ஆட்சியிலே பல பணிகள் நிறைவேற்றப்படுகின்றன. இருந்தாலும்,
புள்ளிவிவரங்களைப் பார்க்கிறபோது, இங்கே guideline என்று
சொல்லப்படுகிற அந்த முறையிலே பார்த்தால், அந்தப்
புள்ளிவிவரங்கள் அதற்கு ஈடு கொடுப்பதாக இல்லை என்றாலும்,

வேறு பல மாநிலங்களைவிடத் தமிழ்நாட்டிலேதான் அது இப்போதுகூட உயர்ந்திருக்கிறது என்று நான் மகிழ்ச்சியோடு தெரிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-15

நமது மாநிலத்தின் ஆண்டுத் திட்டத்தில் ஒவ்வொரு ஆண்டிலும் செய்யப்படும் ஒதுக்கீட்டில் குறிப்பிட்ட சதவிகிதம் சிறப்புக் கூறுத் திட்டமாகத் தனியே ஒதுக்கீடு செய்யப்பட்டு, ஆதி திராவிட மக்களுக்காகச் செலவு செய்யப்பட வேண்டுமென்றும், இந்தத் தனி ஒதுக்கீடு எவ்வாறு செய்யப்பட வேண்டுமென்பது குறித்தும் மத்திய திட்டக் குழு தனது பரிந்துரையிலே ஆலோசனைகளை வழங்கியுள்ளது.

2001 ஆம் ஆண்டு மக்கள் தொகைக் கணக்கெடுப்பின்படி, தமிழகத்திலுள்ள மொத்த மக்கள் தொகையான 624 இலட்சத்தில், ஆதி திராவிட மக்கள் 118.58 இலட்சம்; அதாவது 19 விழுக்காடு உள்ளனர். சுமார் 70 விழுக்காடு ஆதி திராவிட மக்கள் ஊரகப் பகுதிகளில் வசிக்கின்றனர் - villages. பெரும்பாலான ஆதி திராவிடர் குடும்பங்கள் பொருளாதாரத்தில் பின்தங்கியுள்ளனர். தமிழக அரசால் பல்வேறு நலத் திட்டங்கள் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினரின் முன்னேற்றத்திற்காகப் பல்வேறு துறைகள்மூலம் திட்டங்கள் தீட்டப்பட்டு, செயல்படுத்தப்பட்டு வருகின்றன.

சிறப்புக் கூறுத் திட்ட வழிகாட்டுதலின்படி மாநிலத்தின் மொத்த திட்ட ஒதுக்கீட்டில், அந்த மாநிலத்தில் வாழ்கின்ற ஆதி திராவிட மக்களின் விகிதாச்சாரத்தின் அடிப்படையில் நிதி ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும். தமிழ்நாட்டில் ஆதி திராவிடர் மக்கள் தொகை 19 விழுக்காடு. எனவே, அரசின் மொத்தத் திட்ட ஒதுக்கீட்டில் 19 சதவிகிதத் தொகை ஆதி திராவிட மக்களுக்காகச் செலவிடப்பட வேண்டும். இந்தச் சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் பின்வரும் செலவினங்கள் மேற்கொள்ளப்படுகின்றன:

ஆதி திராவிடர்களின் கல்வி, வீட்டு வசதி, சமூகம் மற்றும் பொருளாதாரம் ஆகியவற்றை மேம்படுத்துவதற்கான திட்டங்களை ஆதி திராவிடர் நலத் துறை செயல்படுத்தி வருகிறது. இத்திட்டங்களின் பலன்கள் முழுமையாக ஆதி திராவிட மக்களையே சென்றடைகின்றன. இது முழுமையாகச் சிறப்புக் கூறுத் திட்டத்தில் சேர்க்கப்படுகிறது. பல்வேறு துறைகளின்கீழ் தனி நபர்கள் பயன்பெறும்



வகையில் செயல்படுத்தப்படும் திட்டங்களில் ஆதி திராவிட வகுப்பைச் சேர்ந்த பயனாளிகளுக்காகச் செலவிடப்படும் தொகை சிறப்புக் கூறுத் திட்டத்தில் கணக்கில் கொள்ளப்படுகிறது.

இது தவிர, ஏனைய துறைகள் செயல்படுத்தும் திட்டங்களில் குறிப்பிட்ட குடியிருப்புகளுக்குப் பயன் தரும் இணைப்புச் சாலைகள், பள்ளிகள் மற்றும் மின் வசதி ஆகியவற்றில், பெரும்பாலும் ஆதி திராவிட இன மக்களின் குடியிருப்புகளுக்குப் பயனளிக்கக்கூடிய திட்டப் பணிகளுக்கான ஒதுக்கீடுகள், பகுக்கக்கூடிய திட்டங்களின்கீழ்—divisible scheme என்று ஆங்கிலத்திலே அதைக் குறிப்பிடுகிறார்கள்—பிரித்து, அடையாளம் காட்டக்கூடிய அப்படிப்பட்ட செலவுகள் சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் கணக்கில் கொள்ளப்படுகின்றன. மின் உற்பத்தி நிலையங்களை நிறுவுதல், மாநில நெடுஞ்சாலைகள் அமைத்தல், அரசு நிறுவனங்களில் முதலீடு செய்தல், நகரக் கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல், பெரிய பாலங்கள் மற்றும் போக்குவரத்து போன்ற கட்டமைப்பு மேம்பாட்டுத் திட்டங்கள் பொதுவாக அனைத்துப் பிரிவு மக்களுக்கும் பயனளிக்கும் திட்டங்களாகும். இத்திட்டங்கள் பகுக்க இயலாத திட்டங்கள் (indivisible schemes) என்று அழைக்கப்படுகின்றன. அனைத்து மக்களுக்கும் பயனளிக்கும் இத்திட்டங்களின்கீழ் ஆதி திராவிட மக்களும் பயன்பெறுகின்றனர். அதனால் இத்திட்டங்கள் சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் கணக்கில் கொள்ளப்படுவதில்லை.

ஆதி திராவிட மற்றும் பழங்குடியின மக்களுக்கான சிறப்புக் கூறுகள் திட்டங்களுக்குரிய அரசின் நிதி ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள் நிதிநிலைக் குறிப்பின் இணைப்புகளில் வெளியீடு 61, இணைப்பு 21, பக்கம் 240-261-ல் தரப்பட்டுள்ளன. இதுபோன்று பழங்குடியின மக்களுக்கான பகுதிகள், துணைத் திட்டங்களுக்கான அரசின் ஒதுக்கீடுகள் பற்றிய விவரங்கள், அதே வெளியீட்டில் தரப்பட்டுள்ளன. இவை மட்டுமின்றி, மின் வாரியம் போன்ற அரசு நிறுவனங்களும் ஆதி திராவிட மக்களுக்குப் பயனளிக்கும் திட்டங்களைச் செயல்படுத்தி வருகின்றன. இவ்வாறு அரசு மற்றும் நிறுவனங்கள்மூலமாக ஆதி திராவிட மக்களின் நலனுக்காகச் சிறப்புக் கூறுத் திட்டத்தின்கீழ் செலவிடப்படும் மொத்தத் தொகை பற்றிய விவரம் வரவு-செலவுத் திட்ட வெளியீடு எண் 62, திட்டம், வரவு-செலவுத் திட்ட இணைப்பில்—plan budget—பக்கம் 256-270-ல் தரப்பட்டுள்ளது. திட்டச் செலவினங்களில் சிறப்புக் கூறுகள் திட்டத்தின்கீழ் ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினருக்கான

நலத் திட்டங்களுக்கான அரசின் மொத்த ஒதுக்கீடு 2005-2006 ஆம் ஆண்டில் ரூ.573 கோடி என்ற அளவில் இருந்தது. இது அந்த ஆண்டின் மொத்தத் திட்ட ஒதுக்கீடான ரூ.9,100 கோடியில் 6 சதவிகிதம் மட்டுமேயாகும். இந்த ஒதுக்கீடு 2006-2007 ஆம் ஆண்டில் அதனுடைய திருத்திய மதிப்பீடுகளில் ரூ.1,331 கோடியாக உயர்ந்துள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் அரசின் இந்த ஒதுக்கீடு ரூ.1,638 கோடியாக மேலும் உயர்த்தப்பட்டுள்ளது. எனவே, இந்த ஆண்டு மொத்த ஒதுக்கீடான ரூ.14,000 கோடியில் 12 சதவிகிதமாகும். இவ்வாறாக, இந்த அரசால் இந்த ஒதுக்கீடு பெருமளவிற்கு இரு மடங்காக உயர்த்தப்பட்டுள்ளது. வரும் ஆண்டுகளிலும் இந்தச் சிறப்புக் கூறுத் திட்ட ஒதுக்கீட்டை மேலும் உயர்த்துவதற்கு வழி காணப்படும் என்று நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன். இது ஒரு தொடர் முயற்சியாக நடைபெறும் என்று நான் அறிவிக்க விரும்புகிறேன்.

பிற்பகல் 1-20

அதேபோல, சிறு சேமிப்புத் திட்டத்தைப் பற்றி திரு. ஜி.கே. மணி அவர்கள் பேசுகிறபோது, சிறு சேமிப்புத் திட்டத்திலே ஈடுபட்டிருப்பவர்களுக்கு ஏற்கெனவே அந்தப் பணிக்கு ஒரு விழுக்காடு அவர்களுக்குத் தரப்பட்ட அந்த ஊக்கத் தொகை இப்போது 0.5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டிருப்பதைச் சுட்டிக்காட்டி, அதை உயர்த்த வேண்டும் என்றார்கள். உள்ளபடியே மத்திய அரசினிடத்திலே ஒப்படைக்கப்படுகிற அந்தத் தொகை முழுவதும் மாநில அரசுக்கே திருப்பித் தருகிறார்கள். ஆனால் வட்டி விகிதம், அந்த 9.5 சதவிகித வட்டிக்கு வாங்குகிற அந்தப் பணத்திற்கு நாம்தான் அந்த வட்டியைக் கட்ட வேண்டியிருக்கிறது. ஆகவே, சிறு சேமிப்பால் அரசுக்குப் பணம் வருமானால், அந்தப் பணம் எத்தனை கோடியாக இருந்தாலும், அதற்கு 9.5 விழுக்காடு வட்டி செலுத்துகிறபோது, அரசு வேறு சில நிறுவனங்களிடம் வாங்குகிற கடனைவிட இந்த வட்டி அதிகமாகிற காரணத்தால், அது சிறு சேமிப்புத் திட்டமே தவிர, சிக்கனமான திட்டமாக இல்லை. சிக்கனமாகவும் இல்லை, பயன் மிகுந்ததாகவும் இல்லை. அது ஒரு பழக்கத்தால் வந்துவிட்ட திட்டமாக இருக்கிறது. மத்திய அரசு அதிலே எந்தப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்ளவில்லை. வருகிற பணத்தைத் திருப்பிவிடுகிறார்கள். Channelise பண்ணுகிறார்கள். அந்தப் பொறுப்பு நமக்கு வருகிறது. ஆகவே, தமிழக அரசினுடைய நிதிநிலையை வைத்துக் கணக்கிட்டுப் பார்க்கிறபோது, அந்த விழுக்காட்டை இப்பொழுது உயர்த்தக்கூடிய வாய்ப்பு இல்லை.



எதிர்காலத்திலே இந்த நிலையிலே மாற்றங்கள் வருமானால், அப்பொழுது அது பற்றி ஆலோசிக்கப்படும் என்று நான் தெரிவித்துக்கொண்டு, வேறு பல செய்திகள் இருந்தாலும்கூட, காலத்தைக் கருதி இந்த அளவோடு என்னுடைய விடையை நிறைவு செய்ய விரும்புகிறேன். வணக்கம். (மேசையைத் தட்டும் ஒலி)

**திரு. ஆர்.எம். பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே...

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** என்ன திரு. பழனிசாமி? நன்றி சொல்கிறீர்களா? சரி, சொல்லுங்கள்.

***திரு. ஆர்.எம். பழனிசாமி**: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நேற்றைக்கு நான் பேசுகிறபோது, நம்முடைய மாண்புமிகு முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் இங்கே இருந்தபோது, முன்னாள் சட்டமன்ற உறுப்பினர் திரு. கே.ஆர். நல்லசிவம் அவர்களுடைய குடும்பத்தைப் பற்றி நான் எடுத்துச் சொன்னேன். உடனே தாயுள்ளத்தோடு, உடனடியாக, நிச்சயமாக, நீங்கள் என்ன நினைக்கிறீர்களோ, அதைவிட நாங்கள் நிச்சயமாக அவரோடு நெருங்கிப் பழகியவர்கள், அண்ணாவுடைய நெருங்கிய நண்பர், எங்கள் அத்தனை பேரோடும் பழகிய அந்த மாமனிதருக்கு ஏதாவது நாங்கள் செய்ய வேண்டுமென்று சொன்னவர், இன்றைக்கு உடனடியாக அறிவித்திருக்கிறார் என்று சொன்னால், நாங்கள் எங்கள் மாவட்டத்தின் சார்பிலே, எங்கள் தொகுதி சார்பிலே, அனைத்து மக்கள் சார்பிலே, (மேசையைத் தட்டும் ஒலி) தாயுள்ளத்தோடு இருக்கிற முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களுக்கும், இன்றைக்கு அறிவித்த மரியாதைக்குரிய இனமானப் பேராசிரியர் அவர்களுக்கும் எங்கள் காங்கிரஸ் பேரியக்கத்தின் சார்பிலே எங்கள் நெஞ்சார்ந்த நன்றியைக் காணிக்கையாக்கி, விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** விவாதம் முடிவுற்றது. இப்போது வாக்கெடுப்பு.

## (அ) கோரிக்கை எண் 1–மாநிலச் சட்டமன்றம்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 1-மாநிலச் சட்டமன்றம், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"மாநிலச் சட்டமன்றம் பற்றிய 1 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.19,88,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.

## (ஆ) கோரிக்கை எண் 2–ஆளுநர் மற்றும் அமைச்சரவை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 2-ஆளுநர் மற்றும் அமைச்சரவை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஆளுநர் மற்றும் அமைச்சரவை பற்றிய 2 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.17,27,97,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## (இ) கோரிக்கை எண் 16–நிதித் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை. வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"நிதித் துறை பற்றிய 16 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.464,60,11,000/- மூலதனக் கணக்கில் ரூ.1,000/- மற்றும் கடன் கணக்கில் ரூ.16,83,55,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

## (ஈ) கோரிக்கை எண் 36–திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என்று அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய 36 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.39,16,06,000/- மற்றும் மூலதனக் கணக்கில் ரூ.15,63,76,000/-ஆகியவற்றுக்கு மேற்படாத தொகைகள் அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகைகள் வழங்கப்பெறுகின்றன.

### (உ) கோரிக்கை எண் 50–ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும்

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும், வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறுகின்றனவா என அறிய விரும்புகின்றேன்.

(வெட்டுத் தீர்மானங்கள் வலியுறுத்தப்பெறவில்லை.)

வெட்டுத் தீர்மானங்கள் அனைத்தும் பேரவையின் அனுமதியுடன் திரும்பப் பெறப்படுகின்றன.

"ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய 50 ஆம் எண் மானியக் கோரிக்கையின்கீழ் வருவாய்க் கணக்கில் ரூ.6,184,19,15,000/-க்கு மேற்படாத தொகை அரசுக்கு வழங்கப்பெற வேண்டும்" என்னும் மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.

அரசுக்குக் கோரிய தொகை வழங்கப்பெறுகிறது.



## 5. அறிவிப்புகள்—தொடர்ச்சி

### (ஆ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2007 (ஆ.இ.)

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்யவும் மற்றும் ஆய்வு செய்யவும் ஆளுநர் அவர்கள் தமது இசைவினைத் தெரிவித்துள்ளார்கள்.

## 4. அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)—தொடர்ச்சி

### (ஈ) தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு, 2007

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** அரசினர் சட்டமுன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்). 2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவு. மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

"2007 ஆம் ஆண்டு தமிழ்நாடு நிதி ஒதுக்கச் (எண் 2) சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதியளிக்க வேண்டும்"

எனக் கோருகிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

மாண்புமிகு நிதி அமைச்சர் அவர்கள்.

**மாண்புமிகு பேராசிரியர் க. அன்பழகன்:** மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இச்சட்டமுன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் நிறைவுற்றன. பேரவை மீண்டும் நாளை (10-5-2007) வியாழக்கிழமை, காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர், பேரவை பிற்பகல் 1-27 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

# 7. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்

## (அ) சட்டமுறை விதிகளும், ஆணைகளும்

83. யாதொரு வணிகர் ஒருவர் அச்சு எழுத்துக்களின் விற்பனைக்குச் செலுத்தத்தக்க 8 சதவிகித ஒருமுனை விற்பனை வரிக்கும், 5 சதவிகிதப் பன்முனை விற்பனை வரிக்குமிடையேயான வரி வேறுபாட்டுத் தொகையை, அச்சு எழுத்துக்களை விற்பனை செய்யும் வணிகர்கள், அத்தகைய விற்பனைக்குச் செலுத்தத்தக்க 8 சதவிகித ஒருமுனை விற்பனை வரி வீதத்தில் வரி விதிப்பதற்குப் பதிலாக, 5 சதவிகிதப் பன்முனை விற்பனை வரி வீதத்தில் வரி வசூலித்திருப்பது 1-4-1987 ஆம் நாளுக்கு முந்தைய கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையின் 30-6-1992 ஆம் நாளிட்ட 244 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

84. இந்திய உணவுக் கழகம், சென்னை, செலுத்தத்தக்க அபராதத் தொகையினை 1986-87 ஆம் ஆண்டிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் அறநிலையத் (டி.2) துறையின் 31-3-1995 ஆம் நாளிட்ட 87 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

85. பல்வேறு வணிகர்கள் செலுத்தத்தக்க தண்ட வட்டியை 21-9-1977 முதல் 31-10-1982 வரையிலான கால அளவிற்குத் தள்ளுபடி செய்தது குறித்து வணிக வரி மற்றும் அறநிலையத் (டி.2) துறையின்



23-5-1995 ஆம் நாளிட்ட 132 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

86. 1990 ஆம் ஆண்டு உள்ளூர்ப் பகுதிகளில் நுழையும் மோட்டார் வாகனங்கள்மீதான வரி விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்தும் மற்றும் யாதொரு உள்ளூர்ப் பகுதியில் பயன்பாடு அல்லது விற்பனைக்காக நுழையும் யாதொரு மோட்டார் வாகனத்தின் கொள்முதல் மதிப்பின்மீது விதிக்கப்பட்டு வசூலிக்கப்பட வேண்டிய வரி வீதங்களை அறிவிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு 1-1-2007 ஆம் நாளிலிருந்து அந்நாள் முதற்கொண்டு நிர்ணயித்தும் வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி2) துறையின் 1-1-2007 ஆம் நாளிட்ட 7 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

87. போக்குவரத்துத் துறையின் மோட்டார் வண்டிகள் ஆய்வாளர், நிலை II பதவித் தாத்திற்குக் குறையாத மற்றும் சீருடை அணிந்த காவல் துறை உதவி ஆய்வாளர் பதவித் தாத்திற்குக் குறையாத காவல் துறை அதிகாரிக்குத் தகுதி வாய்ந்த அதிகாரியின் அலுவல்களை ஆற்றுவதற்காக அதிகாரம் அளித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி2) துறையின் 22-1-2007 ஆம் நாளிட்ட 33 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1990 ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சிப் பகுதிக்குள் இயக்கூர்திகள் நுழைவின்மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 13/1990) 18(4) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

88. வணிக வரிகள் மற்றும் அறநிலையத் துறையில் உருவாகி 18-9-1996 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் பாகம்-II பிரிவு-2, வெளியிடப்பட்டுள்ள II (2)/வவஅநி/1938 ஆம் எண் அறிவிக்கையை இரத்துச் செய்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி2) துறையின் 14-3-2007 ஆம் நாளிட்ட 69 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1981 ஆம் ஆண்டு தமிழ்நாடு ஆடம்பர வசதிகளின் மீதான வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 6/1981) 21(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

[2007 மே 9

89. திருவண்ணாமலை மாவட்டம், சேத்துப்பட்டில் உள்ள திருவாளர்கள் சேஷமா மறுவாழ்வுப் பயிற்சி நிலையம் நடத்தும் பயிற்சி வகுப்பின்போது தயாரிக்கும் பொருட்களின் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியினை 1-4-2006 முதல் 31-3-2009 வரை விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 14-11-2006 ஆம் நாளிட்ட 143 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

90. திருவாளர்கள் இறைவன் ஃபைபர் போட் ஒர்க்ஸ், ஸ்ரீ மாருதி போட் நிறுவனம் ஆகியவை திருவாளர்கள் ஹோப் பவுண்டேஷன் நிறுவனத்திற்குக் காஞ்சிபுரம் மற்றும் நாகப்பட்டினம் மாவட்டங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்குப் படகுகள் வழங்குவதற்காகச் செய்த படகு விற்பனை குறித்து அந்நிறுவனம் செலுத்தத்தக்க வரிக்கு சில நிபந்தனைகளுக்குட்பட்டு விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (பி2) துறையின் 14-11-2006 ஆம் நாளிட்ட 144 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

91. யாதொரு வணிகர் திருவாளர்கள் ஆரோவில் லாங்குவேஜ் லேபரட்டரி நிறுவனத்திற்கு நுண்ணுயிரியல் நீர் சுத்திகரிப்பு முறையில் பயன்படுத்தப்படும் பயோடைனமைசர் இயந்திரத்தைச் சுனாமியால் பாதிக்கப்பட்ட சில பகுதிகளில் நிறுவுவதற்கு மட்டுமே விலக்கு அளிக்கத்தக்கதாகும் என்ற நிபந்தனைக்குட்பட்டு அந்த இயந்திரத்தை அக்வாடைன் நிறுவனத்திடமிருந்து விற்பனை செய்வதன் பேரில் மேற்சொன்ன சட்டத்தின்கீழ் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 29-12-2006 ஆம் நாளிட்ட 191 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

92. தமிழ்நாட்டிலுள்ள, அறிவிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள தூதர்கள் மற்றும் தூதரக அலுவலர்களின் அலுவலகம் மற்றும் சொந்தப் பயன்பாட்டிற்காகப் பொருட்களை விற்பனை செய்வதன் பேரில் செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களிக்கப்பட்டது குறித்து



2007 மே 9]

வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 30-12-2006 ஆம் நாளிட்ட 192 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53 (5) பிரிவின்கீழ் போவைமுன் வைக்கப்பெற்றது].

93. ஏதேனும் வணிகர் நாகப்பட்டினம் மாவட்ட அரசு மருத்துவமனைக்கு நன்கொடையாக வழங்குவதற்காக தமிழ்நாடு மருத்துவப் பணிகள் நிறுவனம்மூலம் யூனிசெஃப் நிறுவனத்திற்கு விற்பனை செய்யப்படும் மருத்துவம் மற்றும் அறுவை சிகிச்சை கருவிகள், சாதனங்கள் மற்றும் உபகரணங்கள் ஆகியவற்றின்மீது விற்பனை வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 31-12-2006 ஆம் நாளிட்ட 195 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1959 ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 1/1959) 53(5) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

94. மொத்தச் சில்லரை விநியோகஸ்தர்கள் நியாய விலைக் கடைகள்மூலம் குடும்ப அட்டைதாரர்களுக்குப் பொது விநியோக முறையின்கீழ் இரண்டாவது மற்றும் அதற்கடுத்த நிலைகளில் செய்யப்படும் மண்ணெண்ணெய் விற்பனைமீது செலுத்தத்தக்க வரியிலிருந்து விலக்களித்தது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 1-1-2007 ஆம் நாளிட்ட 9 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

95. ஏதேனும் வணிகர்கள் முதல் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள இரசாயன உரங்கள், பூச்சிக் கொல்லிகள், எலிக் கொல்லிகள், கிருமிக் கொல்லிகள், களைக் கொல்லிகள், காளான் கொல்லிகள், பூண்டு இனக் கொல்லிகள் மற்றும் அவற்றின் கூட்டுப் பொருட்கள் ஆகியவற்றின் இரண்டாம் மற்றும் அடுத்த நிலைகளில் செய்யப்படும் விற்பனைகள்மீது வரி செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டது குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் துறையின் 4-1-2007 ஆம் நாளிட்ட 16 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு மதிப்புக் கூட்டு வரிச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 32/2006) 86(2) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

96. 1989 ஆம் ஆண்டு தமிழ்நாடு இயக்கூர்திகள் விதிகளில் திருத்தங்கள் செய்தது குறித்து உள் (போக்குவரத்து 7) துறையின் 4-1-2007 ஆம் நாளிட்ட 17 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [1988 ஆம் ஆண்டு இயக்கூர்திகள் சட்டத்தின் (மத்தியச் சட்டம் 59/1988) 212(3) பிரிவின்கீழ் பேரவைமுன் வைக்கப்பெற்றது].

## (ஆ) அறிக்கைகள், அறிவிக்கைகள் மற்றும் ஏனைய தாள்கள்

248. 1957 ஆம் ஆண்டு மத்திய விற்பனை வரி (தமிழ்நாடு) விதிகளில் செய்யப்பட்ட திருத்தங்கள் குறித்து வணிக வரிகள் மற்றும் பதிவுத் (சி1) துறையின் 1-1-2007 ஆம் நாளிட்ட 8 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

249. 22-7-2006 ஆம் நாளிட்ட தமிழ்நாடு அரசிதழின் சிறப்பு வெளியீட்டில் பாகம் II, வெளியிடப்பட்டுள்ள II (1)/வணிக வரி, பதிவுத் துறை/29 (b-15)/2006 ஆம் எண் அறிவிக்கையை இரத்துச் செய்வது குறித்து வணிக வரி மற்றும் பதிவுத் (சி1) துறையின் 10-1-2007 ஆம் நாளிட்ட 22 ஆம் எண் அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை.

250. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

251. மானியக் கோரிக்கை எண் 36-திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

252. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008. (தமிழ், ஆங்கிலம்)

253. தொழில் துறை மற்றும் தகவல் தொழில்நுட்பவியல் துறை மானியக் கோரிக்கைகளின்மீதான விவாதத்தின்போது மாண்புமிகு முதலமைச்சர் அவர்களால் பேரவையில் அறிவிக்கப்பட்ட அறிவிப்புகள், 2007-2008. (தமிழ்)

254. மானியக் கோரிக்கை எண் 16-நிதித் துறை பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் வெளியிடப்பட்ட திருத்தங்கள், 2007-2008. (தமிழ்)



255. மானியக் கோரிக்கை எண் 50-ஓய்வூதியங்களும், ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் பற்றிய கொள்கை விளக்கக் குறிப்பில் வெளியிடப்பட்ட திருத்தங்கள், 2007-2008. (தமிழ்)

256. அரசு உறுதிமொழிக் குழுவின் மூன்றாவது அறிக்கை. (2006-2007)

257. அரசு உறுதிமொழிக் குழுவின் நான்காவது அறிக்கை. (2006-2007)

258. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (ஒன்பதாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

259. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பத்தாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 100 வரை)

260. உடுக்குறியிடாத வினாக்கள்-விடைகள் பட்டியல். (பதினொன்றாவது பட்டியல்) (வரிசை எண்கள் 1 முதல் 50 வரை)

2007 மே 9]

## இணைப்பு–I

*(256 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 16–நிதித் துறை கொள்கை விளக்கக் குறிப்பு, 2007–2008

*(பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் தலைப்பின்கீழ் வரும் இனம் 254-ன்படி கொள்கை விளக்கக் குறிப்புடன் தரப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.)*

தமிழக அரசின் பொது நிதி நிருவாகப் பொறுப்பு நிதித் துறையைச் சார்ந்ததாகும். ஆகவே ஒவ்வோராண்டும் வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரித்து சட்டப் பேரவையில் தாக்கல் செய்வதில் இது முக்கியப் பங்கு வகிக்கிறது. மாநிலக் கருவூலத்தின் பாதுகாவலனாக இருக்கும் நிதித் துறை, வரவுகளையும் செலவுகளையும் ஒரே சீராக வைத்து வர ஒட்டுமொத்த பொறுப்பு வகிப்பதோடு கடன் பொறுப்புகளை திருப்பிக் கொடுக்கவும் பொறுப்பு வகிக்கிறது. வரவுக்கேற்றபடி செலவினங்களைச் சீர் செய்து ஒட்டுமொத்த வளர்ச்சியை கருத்தில் கொண்டு அரசின் நிதி இலக்குகளை எய்தும் பொருட்டு, தேவை, செலவுக்கேற்ற பயன், வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கம், நிதி நடைமுறை, முதலியவற்றிற்கேற்ப துறை செயற்குறிப்புகளை நிதித் துறை உன்னிப்பாக ஆய்வு செய்கிறது.

2. நிதித் துறையின் நிருவாகக் கட்டுப்பாட்டின்கீழ் பின்வரும் ஏழு துறைத் தலைவர் அலுவலகங்கள் இயங்கி வருகின்றன:—

(1) கருவூலக் கணக்குத் துறை

(2) உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

(3) சிறு சேமிப்புத் துறை

(4) அரசு தகவல் தொகுப்பு விவர மையம்

(5) கூட்டுறவு தணிக்கைத் துறை

(6) துறைத் தணிக்கை மற்றும் சட்டப்படி அமைந்த அரசுத் துறை நிறுவன தணிக்கைத் துறை.

(7) ஓய்வூதிய இயக்ககம்.

3. நிதித் துறையின் கட்டுப்பாட்டின்கீழ் இயங்கும் பல்வேறு துறைகளின் செயல்பாடுகள் பற்றிய விவரம் வருமாறு:

## கருவூலக் கணக்குத் துறை

4. கருவூலக் கணக்குத் துறை 01-04-1962 ஆம் நாளன்று ஏற்படுத்தப்பட்டது. இத்துறையின்கீழ் 9 சம்பளக் கணக்கு அலுவலகங்கள், 30 மாவட்டக் கருவூலங்கள், 203 சார் கருவூலங்கள், 3 வட்டார இணை இயக்குநர் அலுவலகங்கள், சென்னையிலுள்ள ஓய்வூதியம் வழங்கல் அலுவலகம், முத்திரைத்தாள் உதவி கண்காணிப்பாளர் அலுவலகம் மற்றும் சென்னையிலுள்ள கருவூலக் கணக்குத் துறை ஆணையாளரின் தலைமையிட அலுவலகம் ஆகியவை உள்ளன. அரசுப் பணியாளர்களுக்கு சம்பளங்களும் ஓய்வூதியதாரர்களுக்கு ஓய்வூதியம் வழங்குவதும், பல்வேறு திட்டங்களைச் செயற்படுத்துவதற்காக அரசு ஒப்புதலளித்த தொகைகளை அரசுத் துறைகளுக்கு வழங்குவதும் இத்துறையின் முதன்மையான பணியாகும். அரசுக்குச் சேரவேண்டிய வருவாயைப் பெற்று அவற்றுக்கான விரிவான கணக்குகளை மாநிலக் கணக்காயருக்கு அளிப்பதும் இத்துறையின் பொறுப்பாகும். பத்திரப் பதிவுக்கு பயன்படுத்தப்படும் முத்திரைத்தாள்கள் முறையாக வழங்கப்படுவதையும் கருவூலக் கணக்குத் துறை மேற்கொண்டுள்ளது. தமிழ்நாடு அரசுப் பணியாளர் நல நிதியை கருவூலக் கணக்குத் துறை பராமரிக்கிறது. அரசுத் துறைகள் கருவூலங்களில் வைப்பீடு செய்யும் விலை மதிப்பு வாய்ந்த பொருள்களை கருவூலங்கள் பத்திரமாகப் பாதுகாக்கின்றன.

5. மின் ஆளுகை திட்டத்தினைச் செயல்படுத்தத் தேர்வு செய்யப்பட்ட துறைகளில் கருவூலக் கணக்குத் துறையும் ஒன்றாகும். மின்னாளுகை சிறப்பு முயற்சிகளை அறிமுகப்படுத்துவதற்காக, மொத்தம் ரூ.15 கோடி நிதியொதுக்கத்தில் 2004-2005 ஆம் ஆண்டிலிருந்து கருவூலத் துறையில் தொடர்ந்து மூன்றாண்டு கால அளவில் செயல்படுத்தப்படக்கூடிய திட்டம் நிறைவேற்றப்பட்டு வருகிறது. இத்துறைக்குத் தேவைப்படும் புதிய கணினிகள் கொள்முதல் செய்யப்பட்டுள்ளன. சென்னையில் நவீன வசதிகளுடன்கூடிய மின் ஆளுகைக்கான மையம் ஒன்று ஏற்படுத்தப்படவுள்ளது.

6. இதன் தொடர்பாக மின்னணுத் தீர்வை முறையில் அரசுப் பணியாளர்களுக்கு சம்பளப் பணம் பட்டுவாடா செய்தல், தானியங்கி முறையில் பட்டியல்கள் பரிசீலித்தல், கருவூலக் கணக்கு ஆணையரக அலுவலகத்தில் அலுவலகப் பணிகளை மின் அலுவலகம்மூலம் செயல்படுத்துதல் போன்ற திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.





மின்னணுத் தீர்வை முறையில் சம்பளப் பட்டுவாடா செய்யும் முறை அனைத்து மாவட்டக் கருவூலங்களுக்கு விரிவுப்படுத்தப்பட்டுள்ளது. கருவூலக் கணக்கு ஆணையரகம் மின்னணு ஆளுமைக்காக நவீன முறையில் மாற்றி அமைக்கப்பட்டுள்ளது. பட்டியல்களுக்கு கணினி இணைப்பின்மூலம் உடனடியாக ஒப்பளிக்கும் முறை கரூர் மற்றும் தேனி மாவட்டம் மற்றும் தலைமைச் செயலக சம்பளக் கணக்கு அலுவலகத்திலும் சோதனை முறையில் செயல்படுத்தப்பட்டுள்ளது. இத்திட்டம் மேலும் கோவை, மதுரை, திருச்சி, பெரம்பலூார் மற்றும் இராமநாதபுரம் ஆகிய ஐந்து மாவட்டங்களுக்கும் மற்றும் சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (கிழக்கு), சென்னை, சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம் (மதுரை) மற்றும் சம்பளம் மற்றும் கணக்கு அலுவலகம், புதுதில்லி ஆகியவற்றிற்கும் இவ்வாண்டு விரிவுபடுத்தப்படவுள்ளது. ஓய்வூதியதாரர்கள் நேர்காணல் முறையினை ஒளிக்காட்சி-கலந்தாய்வுமூலம் செயல்படுத்துவதற்கான திட்டம் பரிசீலனையில் உள்ளது.

7. கருவூலக் கணக்குத் துறைக்காக ஒரு வலைய தளம் மாண்புமிகு நிதியமைச்சர் அவர்களால் 2006, டிசம்பர் 21-ம் நாளன்று துவக்கி வைக்கப்பட்டது.

8. மின்னணுத் தீர்வை முறைமூலம் மதிப்புக் கூட்டு வரி திட்டத்தின்கீழ் வரி விதிப்புக்குரியவர்களுக்கு வரித் தொகை திருப்பிக் கொடுக்கப்படுவதை எளிதாக்க கூடுதல் கணினி மற்றும் உபகரணங்கள் வாங்க அரசால் கருவூலத் துறைக்கு ரூ.27.29 இலட்சம் வழங்கப்பட்டுள்ளது.

9. இம்மாநிலத்தில் மொத்தம் உள்ள 203 சார் கருவூலங்களில், 201 சார் கருவூலங்கள் வங்கிமூலம் தொகை செலுத்தும் சார் கருவூலங்களாக மாற்றப்பட்டுவிட்டன. இவ்விரண்டு வட்டங்களிலும் உள்ள உள்ளூர் வங்கியிடமிருந்து பெறப்பட்ட இசைவுக் கடிதத்தின் அடிப்படையில் இந்திய ரிசர்வ் வங்கியின் இசைவு கிடைத்தவுடன் மீதமுள்ள 2 சார் கருவூலங்களும் (திருநெல்வேலி மாவட்டத்திலுள்ள இராதாபுரம் மற்றும் தூத்துக்குடி மாவட்டத்திலுள்ள ஒட்டப்பிடாரம்) வங்கிமூலம் தொகை செலுத்தும் சார் கருவூலங்களாக மாற்றப்படும்.

10. பணம் மற்றும் பட்டியல்களை நேரடியாகக் கையாளுவதைத் தவிர்க்கும் பொருட்டும், பட்டியல்கள் சேதமடைவதைத் தவிர்க்கும் பொருட்டும், மாவட்டக் கருவூலங்களில் காசோலை வழங்கும் திட்டம் செயல்படுத்தப்பட்டுள்ளது. இந்தத் திட்டம் மாநிலத்தில் மொத்தம் 194 சார் கருவூலங்களுக்கும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

11. இத்துறையால் உருவாக்கப்பட்டு, தேசிய தகவல் மையத்தினால் சான்றளிக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு தமிழ்நாடு மாநில அமைப்பைச் சேர்ந்த அகில இந்தியப் பணி அலுவலர்களுக்கான குழுக் காப்பீட்டுத் திட்டம் கருவூலக் கணக்கு ஆணையரகத்தில் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் மாதச் சந்தாத் தொகை அனைத்திந்திய பணி அலுவலர்களின் மாத ஊதியத்தில் பிடித்தம் செய்யப்பட்டு, அவர்கள் ஓய்வு பெறும்போது வட்டியுடன் திருப்பி அளிக்கப்படுகிறது. அவர்களிடம் இருந்து பெறப்படும் சந்தாத் தொகை பற்றிய தகவல்கள் கருவூலம் மூலமாகப் பெறப்பட்டு, வாரிசு நியமனதாரர் பற்றிய தகவல்கள் உட்பட அனைத்துத் தகவல்களும் ஒரு தகவல் அட்டவணையில் பதிவு செய்யப்படுகின்றன. இந்த நடவடிக்கை கணினிமயமாக்கப்படுவதினால் இவ்வாறு கேட்புகள் விரைவாகத் தீர்வு செய்வது எளிதாக்கப்பட்டுள்ளது.

12. இவ்வலுவலகத்தால் நிர்வகிக்கப்படும் தமிழ்நாடு அரசு ஊழியர் மருத்துவ நல நிதித் திட்டம் முழுவதுமாகக் கணினிமயமாக்கப்பட்டு அவ்வப்பொழுது பெறப்படும் கேட்புகள் வரிசைக்கிரமமாகத் தீர்வு செய்யப்படுகின்றன. கணினி இணைப்பு மூலமாக நேரடியாகக் கேட்புகளைப் பெற முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

13. இத்துறையால் உருவாக்கப்பட்ட மென்பொருளைக் கொண்டு, மின்னணு முறைமூலம் கருவூல ஆய்வு முறை மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த மென்பொருள் தேசிய தகவல் மையத்தினால் சான்றளிக்கப்பட்டுள்ளது. மின்னணு ஆய்வுமூலம் சேலம், தருமபுரி, கடலூர், கிருட்டிணகிரி, தூத்துக்குடி மாவட்டக் கருவூலங்கள் மற்றும் சம்பளக் கணக்கு அலுவலகம் (தெற்கு) ஆகியவற்றில் ஆய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

14. மூத்த குடிமக்களுக்கு மேலும் உதவியளிப்பதற்காக எளிய முறையில் ஓய்வூதியம் வழங்குவதற்கேற்ப ஓய்வூதியம் வழங்கல் அலுவலகத்தை நவீனமயமாக்கும் திட்டம் ஒன்று அரசின் தீவிர பரிசீலனையில் உள்ளது.

## உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை

15. மாநிலத்திலுள்ள நகர்ப் பகுதி மற்றும் ஊரகப் பகுதி உள்ளாட்சி நிறுவனங்கள், பல்கலைக்கழகங்கள், வேளாண்மை விற்பனை குழுக்கள், மாவட்ட நூலக ஆணை குழுக்கள் மற்றும் இதர நிறுவனங்களின் கணக்குகளை அவற்றுக்குரிய சட்ட விதிகளின்கீழ்



சட்டபூர்வ தணிக்கை செய்யும் பொறுப்பு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையைச் சார்ந்ததாகும்.

16. இன்றைய நாளில் பின்வரும் நிறுவனங்கள் உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறையின் தணிக்கைக் கட்டுப்பாட்டின்கீழ் வருகின்றன:

| தொடர் எண் | நிறுவனங்கள் | மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | மாநகராட்சிகள் | 6 |
| 2. | (அ) நகராட்சிகள் | 102 |
| | (ஆ) மூன்றாம் நிலை நகராட்சிகளாக உயர்த்தப்பட்ட பேரூராட்சிகள் | 50 |
| 3. | பேரூராட்சிகள் | 561 |
| 4. | மாவட்ட ஊராட்சிகள் | 30 |
| 5. | ஊராட்சி ஒன்றியங்கள் | 385 |
| 6. | பல்கலைக்கழகங்கள் | 19 |
| 7. | உள்ளூர் நூலக ஆணைக் குழுக்கள் | 29 |
| 8. | மாவட்ட விற்பனைக் குழுக்கள் | 25 |
| 9. | தேசிய சமூக நலத் திட்டங்கள் | 29 |
| 10. | உள்ளூர் திட்டக் குழுமங்கள் | 21 |
| 11. | கிராம ஊராட்சிகள் (சோதனைத் தணிக்கை மட்டும்) | 2524 |
| 12. | பல்வகை நிறுவனங்கள் | 09 |

### நகர்ப்புற பஞ்சாயத்து ராஜ் நிறுவனங்கள் மற்றும் பல்கலைக்கழகங்களின் உடனிகழ் தணிக்கை மேற்கொள்ளுதல்:

17. அனைத்து மாநகராட்சிகளிலும், 19 நகராட்சிகளிலும் மற்றும் 14 பல்கலைக்கழகங்களிலும் உடனிகழ் தணிக்கை தற்பொழுது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. தணிக்கைக் குழுக்கள் இந்நிறுவனங்களிலேயே செயல்படுகின்றன. அரசு, 2000-2001 ஆம் ஆண்டு முதல், 385 ஊராட்சி ஒன்றியங்கள் அனைத்திலும் உடனிகழ் தணிக்கை முறையை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன்படி 119 ஊராட்சி ஒன்றிய அலுவலகங்களைத் தலைமையிடமாகக் கொண்டு, ஒவ்வொரு

மூன்று அல்லது நான்கு ஊராட்சி ஒன்றியங்களுக்கு ஓர் ஆய்வாளர், மற்றும் ஒரு துணை ஆய்வாளர்/ஓர் உதவி ஆய்வாளர் அடங்கிய ஒரு தணிக்கைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

18. உடனிகழ் தணிக்கையின்போது, தணிக்கையில் கண்டறியப்படும் தணிக்கை மறுப்புகள், தணிக்கைச் சீட்டுகள் வாயிலாக உடனுக்குடன் சம்பந்தப்பட்ட நிறுவனங்களுக்கு தெரிவிக்கப்பட்டு அவர்கள் அளிக்கும் பதில்கள் சரிபார்க்கப்பட்டு, குறைகள் சரி செய்யப்பட்டதை உறுதி செய்து தணிக்கைத் தடைகள் நீக்கப்பட்டு நிலுவையில் உள்ள மறுப்புகளை அடக்கி தணிக்கை அறிக்கைகள் வெளியிடப்படுகின்றன. தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள குறைகள் சரிசெய்யப்பட்ட பின்னர், தணிக்கை மறுப்புகளுக்குரிய பதில்கள், சம்பந்தப்பட்ட நிறுவனப் பதிவேடுகள் மற்றும் ஆவணங்களோடு தணிக்கைக் குழுவினரால் ஒப்பிட்டு, சரிபார்க்கப்பட்டு, அவை தொடர்பாக தணிக்கை மறுப்புகளுக்குத் தீர்வு காணப்படுகின்றன.

**கிராம ஊராட்சி நிறுவனங்களின் சோதனைத் தணிக்கை**

19. கிராம ஊராட்சிகளைப் பொறுத்தமட்டில் மொத்த நிறுவனங்களின் எண்ணிக்கையில் 20 சதவிகிதம் சோதனைத் தணிக்கையாக இத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. இந்த நிறுவனங்களின் எண்ணிக்கை 2,524 ஆகும். மேலும் கிராம ஊராட்சிகளின் வரவினங்கள், மேற்கொள்ளப்பட்ட வேலைகளின் மதிப்பு மற்றும் ஊரக வளர்ச்சி இயக்குநரால் கிராம ஊராட்சிகள் மீது பெறப்படும் குறிப்பான புகார்கள் ஆகியவற்றின் அடிப்படையில் 2 விழுக்காடு தணிக்கை மேற்கொள்ளப்படும்

20. இதர நிறுவனங்களான பேரூராட்சிகள், மாவட்ட ஊராட்சிகள், மாவட்ட வேளாண்மைக் குழுக்கள், மாவட்ட ஆணைக் குழுக்கள் மற்றும் பல்வகை நிறுவனங்கள் நூலக தணிக்கை ஆண்டுக் கணக்குகள் வரப் பெற்ற பின்னர் ஆகியவற்றின் அளவில் ஆண்டுத் தணிக்கையாக மேற்கொள்ளப்படுகின்றன. உள்ளூர்

**நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் இயல்பாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான (Accrual based) கணக்கு வைப்பு முறையைச் செயற்படுத்துதல்:**

21. நகர்ப்புற உள்ளாட்சி நிறுவனங்களில் பின்பற்றப்பட்டு வந்த ரொக்க அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையைச் சீரமைக்கும்



ஒரு நடவடிக்கையாக, தமிழ்நாடு அரசு, 1999-2000, 2000-2001 ஆகிய கணக்கு ஆண்டுகளிலிருந்து இயல்பாகச் சேரும் கணக்கு அடிப்படையிலான கணக்கு வைப்பு முறையை இரு கட்டங்களாகச் செயற்படுத்தியுள்ளது. அனைத்துப் பேரூராட்சிகளிலும் 2002-2003 ஆம் ஆண்டு முதல் சேர்ந்துவரும் அடிப்படையிலான கணக்கு வைப்பு முறை செயல்படுத்தப்பட்டது.

22. ஓர் ஆண்டின் நிதிசார் நடவடிக்கைகளைத் தெரிந்துகொள்ள உதவும் வருவாய் மற்றும் செலவுக் கணக்குகளையும் (Income and Expenditure Account) ஒரு குறிப்பிட்ட கால அளவில் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் உண்மையான நிதிநிலையை அறிந்து கொள்ள உதவும் ஐந்தொகைக் கணக்குகளையும் (Balance Sheet) தயாரிக்க பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கு வைப்பு முறை கோட்பாட்டில் இந்தக் கணக்கு வைப்பு முறையை அமைப்பதே நோக்கமாகும்.

23. இந்த நடைமுறையினால் நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்கள் சொத்துகளை உரிய மதிப்பீட்டு முறைகளோடும், சொத்துப் பதிவேட்டின்மூலமும் கணக்குகளில் சேர்த்து பதிவேட்டின் மூலமும் அறிந்துகொள்ள முடியும். நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களில் மேம்படுத்தப்பட்ட கணக்கு வைப்பு முறைகளைச் செயல்படுத்தியிருப்பதால், மூலதனத் திட்டங்களுக்கு நிதியுதவி அளிக்க நிதி நிறுவனங்கள் முன்வந்துள்ளன. நகர்ப்புற உள்ளாட்சி மன்றங்களின் நிதி ஆதாரங்கள் இதனால் வலுப்படுத்தப்பட்டுள்ளன.

24. அனைத்து உள்ளாட்சி நிறுவனங்களில் பேணப்பட்டுவரும் கணக்குகளில் சீர்திருத்தங்களை 2000-2001 முதல் வெற்றிகரமாகச் செயல்படுத்தியதில் இந்தியாவிலேயே முதல் மாநிலம் என்ற பெருமையைத் தமிழகம் பெற்றுள்ளது.

**உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளுக்கு தணிக்கைச் சான்று வழங்குதல்:**

25. உள்ளாட்சி நிறுவனங்களின் ஆண்டுக் கணக்குகளுக்குத் தணிக்கைச் சான்று வழங்குவது மிகவும் முக்கியமான பணியாகும். மேலும் தணிக்கைச் சான்று அளிக்கப்படாத கணக்குகள் அர்த்தமற்றவை என்பது சர்வதேச அளவில் ஏற்றுக்கொள்ளப்பட்ட ஒன்றாகும். எனவே அரசாணை பல்வகை எண் 93, நிதி (நி.கு.) துறை, நாள் 28-3-2003-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி உள்ளாட்சி

நிறுவனங்களில் செயல்படுத்தப்பட்டு வரும் [2007 மே 9
கணக்கு அடிப்படையிலான கணக்குகள் இயல்பாகச் சேரும்
செய்யப்பட்டு ஆண்டுக் கணக்குகள் முறைப்படி தயார்
செய்யப்பட்டு தணிக்கைச் சான்று வழங்கப்படுகின்றது. இத்துறையால் தணிக்கை

**தணிக்கை மறுப்புகளை தீர்வு செய்யும் நடைமுறை:**

26. தணிக்கை அறிக்கையின்மீதான தொடர் நடவடிக்கை
இத்துறையின் முக்கிய பணிகளில் ஒன்றாகும். தணிக்கையின்போது
கண்டறியப்படும் கடும் முறைகேடுகள் உடனடியாக சம்பந்தப்பட்ட
நிர்வாக அதிகாரிகளின் கவனத்திற்கு எடுத்துச் செல்லப்படுகின்றன.
தணிக்கை அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள முறைகேடுகள்
மற்றும் தொகை இழப்புகள் பற்றிய விவரங்கள் மாதாந்திர கால முறை
அறிக்கைமூலம் அரசுக்கும் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையின்
தலைவருக்கும் தொடர் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு
தெரியப்படுத்தப்படுகின்றது.

27. தணிக்கை மறுப்புகளுக்கு பெறப்படும் பதில்கள்
சரிபார்க்கப்பட்டு தணிக்கை மறுப்புகள் நீக்கப்படுவது வழக்கம்.
மேலும் தணிக்கை மறுப்புரைகளுக்கான பதில்கள் பெறப்பட்டு,
தொடர்புடைய நிர்வாகத் துறை ஏற்பாடு செய்யும் கூட்டமர்வின்
மூலமாகவும், இத்துறையின் மண்டல மற்றும் மாவட்ட
அலுவலர்களால் தணிக்கை மறுப்புரைகளுக்கான உடனடி தீர்வு
காணப்படுகிறது.

28. மேலும், ஊராட்சி ஒன்றியங்களைப் பொறுத்தமட்டில், மாவட்ட
ஆட்சியரைத் தலைவராகக் கொண்டு, மாவட்ட உயர்நிலைக்
குழுக்களும், ஊரக வளர்ச்சி இயக்குநரைத் தலைவராகக் கொண்டு
மாநில உயர்நிலைக் குழுக்களும் அமைக்கப்பட்டுள்ளன.
2006 ஆம் ஆண்டில் 9 மாவட்ட உயர்நிலைக் குழுக் கூட்டங்கள்
நடத்தப்பட்டு, தணிக்கை மறுப்புகள் அடங்கிய 775
எண்ணிக்கையிலான பத்திகள் நீக்கப்பட்டன. இதேபோன்று மாநில
உயர்நிலைக் குழுக் கூட்டத்தில் ஆய்வுக்குப் பின்னர் 7 தணிக்கை
மறுப்புகள் நீக்கம் செய்யப்பட்டன. இதனால் ஓய்வுபெற்ற மற்றும்
ஓய்வு பெற உள்ள ஊராட்சி ஒன்றிய அலுவலர்கள் தங்களுக்குச்
சேரவேண்டிய ஓய்வூதியப் பலன்களை தாமதமின்றி எளிதாகப் பெற
இயலுகிறது.



2007 மே 9]

29. மாநில அளவில் பேரூராட்சிகளின் இயக்குநரைத் தலைவராகக்
கொண்டும், மாவட்ட அளவில் மாவட்ட ஆட்சியரைத் தலைவராகக்
கொண்டும், பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழுக்கள் அ. ஆணை
எண் 1, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
(பேரூ2), நாள்: 4-1-2007-ல் அமைக்க ஆணையிடப்பட்டுள்ளன.
இங்ஙனம் பேரூராட்சிகளுக்கான உயர்நிலைக் குழு
அமைக்கப்பட்டுள்ளதால், பேரூராட்சிகளின் தணிக்கைத் தடைகள்
பெருமளவில் தீர்வு செய்ய வாய்ப்பு உள்ளது.

30. ஊராட்சி ஒன்றியங்களுக்கு உள்ளது போன்று நகராட்சிகளுக்கு
உயர்நிலைக் குழுக்கள் அமைக்க வேண்டி கருத்துரு அரசின்
பரிசீலனையில் உள்ளது.

**மானியங்கள் பயன்படுத்தப்பட்டதற்கான பயனீட்டுச் சான்றிதழ் அளித்தல்:**

31. பல்கலைக்கழகங்களுக்கு பல்கலைக்கழக மானியக் குழு மற்றும்
இதர நிதி அளிக்கும் நிறுவனங்களால் வழங்கப்படும் நிதியுதவிகள்
மற்றும் இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்ட இதர
நிறுவனங்களுக்கு மாநில / மத்திய அரசுகளினால் வழங்கப்படும்
மானியங்கள் ஆகியவற்றை பயன்படுத்தியதற்கு இத்துறையினால்
பயன்பாட்டு தணிக்கைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. திட்டப்
பணிகள் முடிவடைந்தவுடன் பயனீட்டுச் சான்றிதழ்கள் உடனடியாக
வழங்கப்படுகின்றன.

**சிறப்புப் பணிகள்:**

32. வழக்கமான தணிக்கைப் பணிகளுடன் கீழ்க்காணும் சிறப்புப்
பணிகளும் இத்துறையிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன:—

(1) நகராட்சி, ஊராட்சி ஒன்றியம் மற்றும் பேரூராட்சி
ஆகியவற்றில் ஓய்வு பெற்ற பணியாளர்கள் மற்றும் அவர்களின்
குடும்பத்ினருக்கு ஓய்வூதியப் பயன்கள் மற்றும் மாதாந்திர ஓய்வூதியம்
வழங்குதல்.

(2) நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான மருத்துவ நல நிதி
திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து பட்டுவாடா
செய்தல்.

(3) நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கான குடும்பப் பாதுகாப்புத்
திட்டத்தின்கீழ் உதவித் தொகை ஒப்பளிப்பு செய்து பட்டுவாடா
செய்தல்.

(4) உள்ளாட்சி நிறுவனங்களின் சேமநலநிதி கருவூல வைப்பு இருப்புக்கு வட்டி ஒப்பளித்தல். [2007 மே 9

(5) அரசு அறக்கட்டளைகளுக்கான பொருளாளராகப் பணியாற்றுதல்

**உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களுக்கு ஓய்வூதியப் பயன்கள் வழங்குதல்:**

33. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் ஓய்வூதியப் பயன்களுக்கு சான்றளித்தல் மற்றும் தொகை வழங்குதல் போன்ற பணிகள் ஒருங்கிணைக்கப்பட்டு உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்ககத்தின்மூலம் நிர்வகிக்கப்பட்டு வருகிறது. தற்போது 32,122 ஓய்வூதியர்கள், நான்கு தேசியமயமாக்கப்பட்ட வங்கிகள்மூலம் மாதாந்திர ஓய்வூதியம் பெறுகின்றனர்.

34. 2007-2008 நிதி ஆண்டிற்கு உள்ளாட்சி நிறுவனங்களிலிருந்து ஓய்வுபெற்ற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற ஓய்வு காலப் பயன்கள் வழங்கத் தேவைப்படும் நிதி ரூ.164.28 கோடி ஆகும். ஓய்வூதியப் பயன்கள் உடனுக்குடன் இத்துறையால் வழங்கப்பட்டு வருகின்றன.

| தொடர் எண் | உள்ளாட்சி நிறுவனங்களின் பெயர் | ஓய்வூதியம் பெறுவோர் எண்ணிக்கை | 2007-2008 ஆம் ஆண்டு தேவை (ரூ.கோடியில்) |
|---|---|---|---|
| 1. | நகராட்சிகள் | 16,492 | 86.36 |
| 2. | பேரூராட்சிகள் | 5,990 | 28.57 |
| 3. | ஊராட்சி ஒன்றியங்கள் | 9,640 | 49.35 |
| | **கூடுதல்** | **32,122** | **164.28** |

35. அரசு ஆணை எண் 579 நிதித் துறை, நாள் 15-9-2006-ல் வெளியிடப்பட்ட ஆணைகளின்படி, 1-6-1960 முதல் 31-5-1988 முடிய உள்ளாட்சி நிறுவனங்களில் ஓய்வுபெற்ற 2,830 ஓய்வூதியதாரர் மற்றும் குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கு திருத்தியமைக்கப்பட வேண்டிய ஓய்வூதியம் / குடும்ப ஓய்வூதிய நிலுவைத் தொகை ரூ.17.48 கோடி பின்வருமாறு வழங்கப்பட்டு/ வழங்கப்பட உள்ள நிலையில் உள்ளது.



2007 மே 9]

| வ. எண் | உள்ளாட்சி நிறுவனங்களின் பெயர் | ஓய்வூதியதாரர்/ குடும்ப ஓய்வூதியதாரரின் எண்ணிக்கை | தொகை (ரூ. கோடியில்) |
|---|---|---|---|
| 1 | நகராட்சிகள் | 1,100 | 10.00 |
| 2 | ஊராட்சி ஒன்றியங்கள் | 1,022 | 4.08 |
| 3 | பேரூராட்சிகள் | 708 | 3.40 |
| | மொத்தம் | 2,830 | 17.48 |

36. மாநகராட்சிகள் மற்றும் பல்கலைக்கழகங்களைப் பொறுத்தவரை ஓய்வூதியப் பயன்களுக்கான தணிக்கைச் சான்றிதழ்கள் இத்துறையின் உள்ளுறைத் தணிக்கைக் குழுக்களால் வழங்கப்படுகின்றன. அதனடிப்படையில் இவர்களது ஓய்வூதியப் பயன்களை, அந்தந்த நிறுவனங்கள் தமது நிதியிலிருந்து வழங்குகின்றன.

**நகராட்சி ஓய்வூதியர்களுக்கு நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் செயல்படுத்துதல்:**

37. அரசுப் பணியாளர்களுக்கு செயல்படுத்தப்பட்டு வருவதைப்போல் நலத் திட்டம் மற்றும் குடும்பப் பாதுகாப்புத் திட்டம் அரசாணை பல்வகை எண் 1200/ நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 25-5-1999-ன்படி, நகராட்சி ஓய்வூதியதாரர்களுக்கு 1.8.1999 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்த இரண்டு நலத் திட்டங்களும் உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநரால் நிருவகிக்கப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்கீழ் பின்வருமாறு 2006-2007 ஆம் ஆண்டில் கோரிக்கைகள் பெறப்பட்டு தொகை வழங்கப்பட்டுள்ளன:

| நலத் திட்டம் | | குடும்பப் பாதுகாப்புத் திட்டம் | |
|---|---|---|---|
| கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) | கோரிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
| 58 | 8.68 | 188 | 42.98 |

[2007 மே 9

**உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதி இருப்புத் தொகைகளுக்கு வட்டி அளித்தல்:**

38. உள்ளாட்சி நிறுவனப் பணியாளர்களின் வருங்கால வைப்பு நிதியும் அவற்றின் முதலீடுகளும் அரசால் 1967 ஆம் ஆண்டு முதல் ஏற்கப்பட்டன. உள்ளாட்சி நிறுவனங்களின் வருங்கால வைப்பு நிதிக் கணக்குகளின் இருப்புகளுக்கு வட்டி வழங்குவதற்கு உள்ளாட்சி நிதித் தணிக்கைத் துறை இயக்குநருக்கு அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.8 கோடி தொகை அரசால் ஒப்புதல் அளிக்கப்பட்டு உள்ளாட்சி நிறுவனங்களிடமிருந்து பெறும் கோரிக்கையின் அடிப்படையில் தொகை வழங்க உரிய ஒப்பளிப்பு அளிக்கப்படுகிறது.

**அறக்கட்டளை நிதிக் கணக்குகளின் பொருளாளர்:**

39. உள்ளாட்சி நிதித் தணிக்கை இயக்குநர், 1-4-1952 முதல் கல்வி தொடர்பான நோக்கங்களுக்கான அறக்கட்டளை நிதி பொருளாளராகவும் செயல்பட்டு வருகிறார். அறக்கட்டளைகளை அரசு ஏற்று ஒப்பளித்து அறக்கட்டளைகளின் நிர்வாகத் திட்டங்களை அரசிதழில் வெளியிடுகிறது.

40. இந்த அறக்கட்டளை நிதிக்கான வட்டித் தொகை, தொடர்புடைய நிறுவனங்களுக்கு அவர்களிடமிருந்து வரும் கோரிக்கையின் அடிப்படையில் அளிக்கப்படுகிறது. தற்போது அறக்கட்டளை நிதிப் பொருளாளரின் கட்டுப்பாட்டில் ரூ.683 இலட்சம் மதிப்புள்ள நான்கு மத்திய அரசு அறக்கட்டளைகளும், ரூ.10.66 கோடி மதிப்புள்ள 782 மாநில அரசு அறக்கட்டளைகளும் உள்ளன. 2006-2007 ஆம் ஆண்டில் அறக்கட்டளைகளும் கிடைக்கப்பெற்ற வரவுகளிலிருந்து 161 பயனாளிகளுக்கு உதவித் தொகைகள் பரிசுகள் மற்றும் பதக்கங்கள் முதலியன வழங்கப்படுவதற்காக ரூ.4.78 இலட்சம் தொகை பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

**துறையின் செயலாக்கம் கணினிமயமாக்குதல்:**

41. இத்துறையின் நடவடிக்கைகளை கணினிமயமாக்கும் திட்டத்திற்காக 2006-2007 பகுதி-II திட்டத்தில் அரசு முதல் கட்டமாக ரூ.27.56 இலட்சங்கள் அனுமதியளித்துள்ளது. இத்துறையின் பல்வேறு பணிகளை கணினிமயமாக்கும் செயலாக்கம் செயல்பட்டு வருகின்றது.



2007 மே 9]

**துறைப் பணியாளர்களுக்குப் பயிற்சி:**

42. இத்துறையின் தணிக்கைப் பணியாளர்களுக்கு, தேவைக்கு ஏற்ப பயிற்சி அளிக்கப்பட்டது. முதற்கட்டமாக, 2006 ஆம் ஆண்டில் பயிற்சி அளிக்கப்பட்டது. முதற்கட்டமாக, தற்போது தமிழ்நாடு மாநிலக் கணக்காயரால் "தொழில்நுட்ப வழிகாட்டுதல்" (Technical Guidance and Support) திட்டத்தின்கீழ் இத்துறைப் பணியாளர்களுக்கு பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. அடுத்தக் கட்டமாக இத்துறைப் பணியாளர்களுக்கு அண்ணா மேலாண்மை நிறுவனத்தின்மூலமாகவும் பயிற்சியளிக்க திட்டமிடப்பட்டுள்ளது.

**தணிக்கைக் கட்டணம்**

43. பல்கலைக்கழகத் தணிக்கைக்கு 100% தணிக்கை செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும் மாநகராட்சிகள், நகராட்சிகள் தணிக்கைக்கு 50% தணிக்கை செலவினம் தணிக்கைக் கட்டணமாகவும் இத்துறையால் வசூலிக்கப்படுகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் ரூ.3.77 கோடி தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்பட்டுள்ளது.

## சிறுசேமிப்பு

44. சிறுசேமிப்பு, மாநிலத் திட்டங்களுக்கும், கட்டமைப்பு வசதி மேம்பாட்டிற்கும் தேவைப்படும் முக்கியமான பெரிய நிதி ஆதாரமாக விளங்குகிறது. 1-4-2002-லிருந்து மாதந்தோறும் வசூலாகும் நிகர சிறுசேமிப்பு வசூலுக்கு சமமான தொகையை மத்திய அரசு, மாநில அரசுக்குக் கடனாக வழங்கி வருகிறது. இக்கடன் தொகைக்கு மத்திய அரசு தற்போது விதிக்கும் வட்டி வீதம் 9.5 சதவீதமாகும்.

**சிறுசேமிப்புத் திட்டங்கள்**

45. சமுதாயத்தின் பல்வேறு பிரிவினருக்கும் பயனளிக்கும் பல்வேறு வகையான சிறுசேமிப்புத் திட்டங்கள் நடைமுறையில் உள்ளன. அவை பின்வருமாறு.

| | |
|---|---|
| 1. பல்வகை வருவாய்த் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம் |
| 2. வருமான வரிச் சலுகை அளிக்கும் திட்டம் | தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு<br>15 ஆண்டு பொது வருங்கால வைப்பு நிதி |
| 3. காலமுறை அடிப்படையிலான தொடர் வருவாய் திட்டம் | அஞ்சலக மாத வருவாய் திட்டம் மற்றும் மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் |

[2007 மே 9

| | | |
|---|---|---|
| 4. | தொடர் சேமிப்புத் திட்டம் | அஞ்சலக தொடர் வைப்புத் திட்டம் |
| 5. | குறித்த கால வைப்புத் திட்டம் | 1 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | | 2 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | | 3 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| | | 5 ஆண்டு அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம் |
| 6. | மற்ற திட்டங்கள் | அஞ்சலக சேமிப்புக் கணக்கு |

46. பல்வேறு திட்டங்களுக்கு அளிக்கப்படும் வட்டி வீதங்கள் மத்திய அரசால் செய்யப்படும் திருத்தங்களுக்கு உட்பட்டவையாகும். சிறுசேமிப்புத் திட்டங்களுக்கு தற்போது அளிக்கப்பட்டு வரும் வட்டி வீதங்கள் பின்வருமாறு:

| வ. எண் | திட்டம் | வட்டி வீதங்கள் 01-03-2003 முதல் |
|---|---|---|
| 1. | அஞ்சலக மாத வருவாய்த் திட்டம் | 8.00% |
| 2. | 1 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.25% |
| | 2 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 6.50% |
| | 3 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.25% |
| | 5 வருட அஞ்சலக குறித்த கால முதலீடு | 7.50% |
| 3. | தேசிய சேமிப்புப் பத்திரம் 8-வது வெளியீடு | 8.00% |
| 4. | பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம் | 8.00% |
| 5. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் | 9% |
| 6. | அஞ்சலக சேமிப்பு கணக்கு | 3.5% |
| 7. | அஞ்சலக தொடர் வைப்பீட்டுத் திட்டம் | மாதம் ரூ.10/-வீதம் 5 வருடம் செலுத்தினால் முடிவில் ரூ.728.90 முதிர்வுத் தொகை கிடைக்கும். |
| 8. | கிசான் விகாஸ் பத்திரம் | முதலீடு 8 வருடம் 7 மாதங்களில் இரட்டிப்பாகும். |



2007 மே 9]

**2006-2007 ஆம் ஆண்டு சிறு சேமிப்பு வசூல்:**

47. இத்திட்டத்தைச் செயல்படுத்துவதில், அந்தந்த மாவட்ட ஆட்சியர்களும், சென்னையைப் பொறுத்தவரை மாநகராட்சி ஆணையாளரும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். பிப்ரவரி 2007 முடிய ரூ.2,449 கோடி நிகர வசூல் திரட்டப்பட்டுள்ளது.

**சிறுசேமிப்புக்குரிய முகவர் அமைப்பு:**

48. சிறுசேமிப்பு வசூலைத் திரட்டுவதற்கு மாநிலம் முழுவதும் முகவர்கள் நியமிக்கப்படுகின்றனர். இவர்கள் சிறுசேமிப்புத் திட்டத்தை ஊக்குவிப்பதிலும், வசூல் பணிகளிலும் முக்கிய பங்கு வகிக்கின்றனர். வெவ்வேறு வகை சேமிப்புத் திட்டங்களுக்காக 3 வகையான முகவரமைப்புகள் செயல்பட்டு வருகின்றன. அவற்றின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| வ. எண் | முகவரமைப்பு வகை | நியமிக்கப்பட்ட திட்டங்கள் | பிப்ரவரி 2007 நிலவரப்படி மொத்த முகவர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | கிசான் விகாஸ் பத்திரம், அஞ்சலக மாத வருவாய் திட்டம், தேசிய சேமிப்பு பத்திரம் 8-வது வெளியீடு, அஞ்சலக குறித்த கால வைப்புத் திட்டம், மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம். | 14,827 |
| 2. | மகளிர் முகவர்கள் (தொடர் வைப்புத் திட்டம் ) | அஞ்சலக தொடர் சேமிப்புத் திட்டம் | 28,535 |
| 3. | அதிகாரபூர்வமான முகவர்கள் பொது வருங்கால வைப்பு நிதி திட்டம் | (பொது வருங்கால வைப்பு நிதித் திட்டம்) | 1,650 |
| | மொத்தம் | | 45,012 |

**முகவர்களுக்கான ஊக்கத் தொகை:** [2007 மே 9

49. முகவர்கள் அவர்கள் திரட்டும் முதலீடுகளுக்காக, கீழ்க்காணும் வீதத்தில் ஊக்கத்தொகை வழங்கப்படுகிறது.

| வ. எண் | முகவரமைப்பு வகை | மத்திய அரசு வழங்கும் தாகுத் தொகை | மாநில அரசு வழங்கும் கூடுதல் ஊக்கத் தொகை | மொத்தம் |
|---|---|---|---|---|
| 1. | நிலைப்படுத்தப்பட்ட முகவரமைப்புத் திட்டம் | 1% | 0.5% | 1.5% |
| 2. | மகளிர் முகவர் திட்டம் | 4% | 2% | 6% |
| 3. | பொது வருங்கால வைப்பு நிதி முகவர் | 1% | இல்லை | 1% |
| 4. | மூத்த குடிமக்கள் சேமிப்புத் திட்டம் (நிலை முகவர்கள்) | 0.5% | இல்லை | 0.5% |

50. மின்னணு இணைப்புத் தீர்வுமூலம் முகவர்கள் சேமிப்புக் கணக்கு வைத்திருக்கும் அஞ்சலகங்களிலேயே அவர்களின் ஊக்கத்தொகையினை அவரவர் கணக்குகளில் வரவு வைக்கப்பட அனைத்து மாவட்டங்களிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2007-2008 ஆம் ஆண்டில் முகவர்களுக்கு ஊக்கத்தொகை வழங்குவதற்காக, ரூ.45 கோடியை அரசு ஒதுக்கியுள்ளது.

**சிறுசேமிப்பு ஊக்குவிப்புத் திட்டங்கள்**

51. தொடர் விளம்பரங்கள்மூலமும், முகவர்கள், உள்ளாட்சி அமைப்புகள் மற்றும் அரசு அலுவலர்கள் ஆகியோருக்கு ஊக்கத்தொகை வழங்குதல்மூலமும், தமிழ்நாட்டில் சிறுசேமிப்புத் திட்டத்தை அரசு செம்மையாக ஊக்குவித்து வருகிறது. சிறுசேமிப்பு வசூலில் ஈடுபட உள்ளாட்சி அமைப்புகளை ஊக்கப்படுத்தும் பொருட்டு, முந்தைய ஆண்டைவிட நடப்பு ஆண்டில் கூடுதலாக சிறுசேமிப்பு நிகர வசூலை ஈட்டிய மாவட்டங்களுக்கு, அவை ஈட்டிய வசூல் தொகை அடிப்படையில், ஒவ்வோர் ஆண்டும், அரசு ஊக்கமானியம் வழங்குகிறது. 2006-2007 ஆம் ஆண்டில் உள்ளாட்சி மன்றங்களுக்கான ஊக்கத்தொகைத் திட்டத்திற்காக அரசு ரூ.40 கோடி ஒப்பளிப்பு செய்துள்ளது. இவ்வூக்கத் தொகையானது பள்ளிக்



2007 மே 9]

கட்டடங்கள், சத்துணவுக் கூடங்கள், சுகாதார நிலையங்கள் முதலியவற்றை மேம்படுத்துதல் போன்ற கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துவதற்காக பயன்படுத்தப்படுகிறது.

## அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம்

52. இம்மையம் தற்போது கீழ்க்கண்ட பணிகளை கையாளுகிறது:

(1) கல்வித் துறையின் மாணவர்களுக்கான தேர்வு முடிவுகளைத் தொகுத்தல்.

(2) ஆசிரியர் வருங்கால வைப்பு நிதி குறித்த பணிகள்

(3) காவலர் பயிற்சிக் கல்லூரிக்கான பணிகள்

**கல்வித் துறையின் மாணவர்களுக்காகத் தயாரிக்கும் தேர்வு முடிவுகள்**

53. இம்மாநிலத்தில் அரசுத் தேர்வுகள் இயக்ககத்தினால் நடத்தப்படும் பத்தாம் வகுப்பு மெட்ரிக்குலேஷன், ஆங்கிலோ இந்தியன், மேல்நிலைத் தேர்வு, சிறப்புத் துணைத் தேர்வு, ஆசிரியர் கல்வி பட்டய படிப்பு மற்றும் தொழில்நுட்பத் தேர்வுகளின் மதிப்பெண் பட்டியலைப் பெற்று, அனைத்து மாணவர்களுக்குரிய தேர்வு முடிவுகளைத் தயாரித்து அரசுத் தேர்வுகள் துறை இயக்குநரகத்திற்கு அனுப்பப்படுகிறது. இதனடிப்படையில் மதிப்பெண் சான்றிதழ்களையும் தயாரித்து, இயக்குநர் அரசுத் தேர்வுகள் துறைக்கு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையம் அனுப்புகிறது.

54. கடந்த வருடம் மேற்கொள்ளப்பட்ட பணியின் விவரங்கள் கீழே தரப்பட்டுள்ளன:

| தேர்வுகள் 2006 | மார்ச் (முதன்மை) | சிறப்பு துணை தேர்வு | துணை தேர்வு | மொத்தம் |
|---|---|---|---|---|
| மேல்நிலைப் பள்ளி | 5,77,879 | 1,20,708 | 43,231 | 7,41,878 |
| பத்தாம் வகுப்பு | 8,14,820 | 1,18,608 | 86,265 | 10,19,693 |
| மெட்ரிக்குலேஷன் | 1,02,358 | 10,631 | 5,766 | 1,18,755 |
| ஆங்கிலோ இந்தியன் | 4,783 | 304 | 466 | 5,563 |
| தொழில்நுட்பத் தேர்வு | 20,000 | — | — | 20,000 |
| ஆசிரியர் கல்வி பட்டயப் படிப்பு | 29,850 | — | — | 29,850 |
| மொத்தம் | 15,49,690 | 2,56,551 | 1,35,728 | 19,35,739 |

## ஆசிரியர் வைப்பு நிதிக்காக கையாளப்படும் பணிகள்

55. ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர் நல நிதிப் பற்றுச்சீட்டு மற்றும் வரவு அட்டவணை மாநிலத்திலுள்ள அனைத்துக் கருவூலங்களிலிருந்தும் மாதந்தோறும் பெறப்பட்டு கணிப்பானில் தொகுக்கப்பட்டு ஆசிரியர் நல நிதி கணக்குச் சீட்டு அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் தயாரிக்கப்பட்டு தொடக்கக் கல்வி இயக்குநர் அலுவலகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

56. ஆசிரியர் நல நிதிக் கணக்கு எண்கள் ஊராட்சி ஒன்றிய பள்ளி ஆசிரியர்கள், நகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள் மற்றும் அரசு உதவி பெறும் தொடக்கப் பள்ளி ஆசிரியர்களுக்கு அரசின் அறிவுரைப்படி வழங்கப்பட்டு வருகின்றன.

## காவலர் பயிற்சிக் கல்லூரிக்காக கையாளப்படும் பணிகள்

57. காவலர் பயிற்சிக் கல்லூரிக்கான ஆண்/பெண் காவலர் மற்றும் ஆண்/பெண் உதவி ஆய்வாளர்கள் தேர்வு ஆவணங்கள் காவலர் பயிற்சிக் கல்லூரியில் இருந்து பெறப்பட்டு இறுதித் தேர்வு முடிவுகள் அரசுத் தகவல் தொகுப்பு விவர மையத்தால் தயாரிக்கப்பட்டு காவலர் பயிற்சிக் கல்லூரியிடம் வழங்கப்பட்டுள்ளன. கடந்த வருடம் முடிக்கப்பட்ட பணிகள் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| அ. | ஆண் / பெண் காவலர்கள் (ஜூலை 2006) | 216 |
| ஆ. | பெண் துணை ஆய்வாளர்கள் (அக்டோபர் 2006) | 74 |
| இ. | ஆண் / பெண் துணை ஆய்வாளர்கள் (ஜனவரி 2007) | 51 |
| | மொத்தம் | 341 |

## கூட்டுறவுத் தணிக்கை துறை

58. சந்தானம் குழு மற்றும் நிருவாக சீர்திருத்த ஆணையத்தின் பரிந்துரைகளின்படி கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளை சுதந்திரமான மற்றும் பாரபட்சமற்ற முறையில் தணிக்கை செய்யும் நோக்கத்துடன், கூட்டுறவு துறையில் இருந்த தணிக்கைப் பிரிவினை தனியாகப் பிரித்து 17-6-1981 முதல் கூட்டுறவுத் தணிக்கைத் துறை எனும் தனித் துறையை அரசு உருவாக்கியது. கூட்டுறவுத் தணிக்கைத்



துறையின் முக்கிய பணி தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம் 1983-ன் பிரிவு 80-ன்படி பன்மாநில கூட்டுறவுச் சங்கங்கள் மற்றும் பால் கூட்டுறவுச் சங்கங்கள் தவிர்த்து தமிழகத்தில் 14 நிர்வாக பதிவாளர்களின்கீழ் இயங்கும் அனைத்துக் கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்வதாகும்.

59. கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் அதிகார வரம்புக்குள் வரும் கூட்டுறவுச் சங்கங்களின் பட்டியல் கீழே கொடுக்கப்பட்டுள்ளது:

| தொடர் எண் | பதிவாளரின் பெயர் | கூட்டுறவுச் சங்கங்களின் மொத்த எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் | 10,724 |
| 2. | கைத்தறி மற்றும் துணி ஆணையர் | 1,477 |
| 3. | தொழில் மற்றும் வணிகத் துறை ஆணையர் | 335 |
| 4. | தலைமைச் செயல் அலுவலர், தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம் | 1,725 |
| 5. | தலைமைச் செயல் அலுவலர், பனைப் பொருள் வளர்ச்சி வாரியம் | |
| 6. | கூட்டுறவுச் சங்கங்களின் பதிவாளர் (வீட்டு வசதி) | 1,028 |
| 7. | மீன் வளத் துறை இயக்குநர் | 1,221 |
| 8. | கால்நடை பராமரிப்புத் துறை இயக்குநர் | 721 |
| 9. | சர்க்கரைத் துறை ஆணையர் | 18 |
| 10. | வேளாண்மைத் துறை இயக்குநர் (எண்ணெய் வித்துக்கள்) | 337 |
| 11. | வேளாண் பொறியியல் மற்றும் பணிக் கூட்டுறவுச் சங்கங்களின் இயக்குநர் | 210 |
| 12. | பட்டுப் புழு வளர்ப்புத் துறை இயக்குநர் | 30 |
| 13. | சமூக நலத் துறை இயக்குநர் | 129 |
| 14. | ஊரக வளர்ச்சித் துறை இயக்குநர் | 50 |
| | மொத்தம் | 18,005 |

**கூட்டுறவுத் தணிக்கைத் துறையின் நோக்கம்:**

*60.* கணக்குகளை சரிபார்க்கவும், ஐந்தொகை கணக்கும், வரவு-செலவு கணக்கும், முறையாகவும் சங்கங்களின் உண்மையான மற்றும் தெளிவான நிலவரத்தைப் பிரதிபலிக்கும் வகையிலும் தயாரிக்கப்படுவதை உறுதி செய்யவும் கூட்டுறவுத் தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. கூட்டுறவுத் தணிக்கை, உறுப்பினர்களின் நலனைப் பாதுகாக்கிறது; அரசின் உதவி எதற்காக வழங்கப்பட்டதோ அந்த நோக்கத்திற்காகத்தான் செலவிடப்பட்டு உறுப்பினர்களும், சமுதாயமும் பயன் அடைந்துள்ளனர் என்பதையும் உறுதி செய்கிறது.

கூட்டுறவுச் சங்கங்களின் தணிக்கை இருவகைப்படும் அவை:

1. உடனிகழ் தணிக்கை. (Concurrent Audit)
2. அடிப்படை விதி 127-ன்கீழ் தணிக்கை. (FR 127 Audit)

**உடனிகழ் தணிக்கை:**

*61.* 45 நாட்களுக்குள் தணிக்கையை முடிக்க இயலும் வகையில் உள்ள சிறிய கூட்டுறவுச் சங்கங்களில் மேற்கொள்ளப்படும் தணிக்கை உடனிகழ் தணிக்கை எனப்படுகிறது. தணிக்கை மேற்கொள்ளும் தணிக்கையாளரின் நிலை மற்றும் சம்பந்தப்பட்ட கூட்டுறவுச் சங்கங்களின் கணக்குகளைத் தணிக்கை செய்வதற்கு எடுத்துக் கொள்ளப்படும் நேரம் ஆகியவற்றின் அடிப்படையில் தணிக்கைக் கட்டணம் வசூலிக்கப்படுகின்றது. 1-4-2006 முதல் 31-12-2006 வரையிலான காலத்திற்கு தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 1.57 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.

**அடிப்படை விதி 127—ன்கீழ் தணிக்கை:**

*62.* பெரிய அளவிலான கூட்டுறவு நிறுவனங்களில் பணியிடங்களை உருவாக்கி, அப்பணியிடங்களில் தணிக்கையாளர்களை நியமித்து அடிப்படை விதி 127-இன்கீழ் தணிக்கை செய்யப்படுகிறது. அப்பணியிடங்களுக்கான செலவு சங்கங்களிலிருந்து தணிக்கைக் கட்டணமாக வசூலிக்கப்படுகிறது. ஆனால், தற்போது கூட்டுறவுச் சங்கங்களின் நிதி நிலைமையை கருத்தில் கொண்டு அரசு 23-11-2004 முதல் தணிக்கைச் செலவு வசூலிப்பை 100 விழுக்காட்டிலிருந்து 60 விழுக்காடாக குறைத்துள்ளது. 1-4-2006 முதல் 31-12-2006 வரையிலான காலத்திற்கு அடிப்படை விதி தணிக்கைக் கட்டணமாக ரூபாய் 5.40 கோடி வசூல் செய்யப்பட்டுள்ளது.



*63.* கீழ்க்காணும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு தணிக்கைக் கட்டணம் செலுத்துவதிலிருந்து விலக்களிக்கப்பட்டுள்ளது:

(1) எந்தச் சங்கத்தின் அனைத்து உறுப்பினர்களும் அல்லது பெரும்பான்மை உறுப்பினர்கள் ஆதிதிராவிடர்களாக அல்லது மீனவர்களாக உள்ளனரோ அந்தச் சங்கங்கள் அனைத்தும்

(2) கிராம வங்கிகள், முன்னாள் வேளாண்மை வங்கிகள், தொடக்க வேளாண்மை மற்றும் கிராம முன்னேற்ற வங்கிகள் மற்றும் கடன் சங்கங்கள் இவை தவிர்த்த வரையறுக்கப்பட்ட பொறுப்பு அல்லது வரையறுக்கப்படாத பொறுப்புகள் கொண்ட நட்டத்தில் இயங்கும் அனைத்து தொடக்கக் கூட்டுறவு வேளாண்மை வங்கிகள்

(3) அனைத்து பயிற்சி நிறுவனங்கள்

(4) அனைத்து மாவட்ட கூட்டுறவு ஒன்றியங்கள்

(5) அனைத்து பனைவெல்லம் உற்பத்தி கூட்டுறவுச் சங்கங்கள்

(6) அனைத்து மீனவர் கூட்டுறவு இணையங்கள்

(7) அனைத்து கைக்குத்தல் அரிசி பணியாளர்கள் கூட்டுறவுச் சங்கங்கள்

(8) மாநில மற்றும் அனைத்து மாவட்ட பனைப் பொருட்கள் உற்பத்தி கூட்டுறவு இணையங்கள்

(9) அனைத்து பூமி தானம் மற்றும் கிராம தானம் கூட்டுறவுகள்

(10) ஆறு ஆண்டுகள் நிறைவு செய்யாத அனைத்து நெசவாளர் கூட்டுறவுச் சங்கங்கள்

(11) தொழில் மற்றும் வணிகத் துறை இயக்குநர், காதி மற்றும் கிராமப்புற தொழிற் வாரியம் இவற்றின் கட்டுப்பாட்டில் இயங்கும், தொடங்கியதிலிருந்து ஐந்தாண்டுகள் நிறைவு செய்யாத அனைத்து தொழிற் கூட்டுறவுச் சங்கங்கள்

(12) வரிசை எண் 1 மற்றும் 11-ல் சொல்லப்படாத, தொடங்கியதிலிருந்து மூன்றாண்டுகள் நிறைவு செய்யாத அனைத்து தொடக்கக் கூட்டுறவுச் சங்கங்கள்

மேற்சொன்ன விலக்களிப்பு, தன்சொந்த செலவில் தணிக்கை செய்துகொள்ளும் கூட்டுறவு சர்க்கரை ஆலைகள் மற்றும் கூட்டுறவு நூற்பு ஆலைகளுக்குப் பொருந்தாது.

**தணிக்கைப் பணியின் முன்னேற்றம்:**

*64.* கடந்த ஐந்து ஆண்டுகளில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை மேற்கொண்ட தணிக்கைகளின் விவரம் வருமாறு:

| வ. எண் | ஆண்டு | முடிக்கப் பெற்ற தணிக்கை அறிக்கைகளின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1. | 2002-2003 | 21,654 |
| 2. | 2003-2004 | 21,842 |
| 3. | 2004-2005 | 20,018 |
| 4. | 2005-2006 | 18,335 |
| 5. | 2006-2007 (31-12-2006 வரை) | 14,144 |

**சிறப்பு அறிக்கைகள்:**

*65.* தணிக்கையில் கடுங்குறைகள் காணும்போது அது தொடர்பான அனைத்து விவரங்களும் அடங்கிய சிறப்பு அறிக்கைகள்மூலம் சம்பந்தப்பட்ட நிர்வாக பதிவாளருக்கு உடன் தெரிவிக்கப்படுகிறது. கூட்டுறவுச் சங்கங்களில் நடைபெற்ற முறைகேடுகள், பணம் கையாடுதல், சட்ட விதிகளுக்குப் புறம்பாக செயல்பட்டது மற்றும் தமிழ்நாடு கூட்டுறவுச் சங்கங்களின் சட்டம், விதிகள், துணை விதிகளுக்குப் புறம்பாக செயல்பட்டது, சங்கத்திற்கு இழப்பீட்டை ஏற்படுத்திய முறையற்ற நிருவாகம் ஆகியவற்றின் தொடர்பாக கடந்த ஐந்தாண்டு காலத்தில் கூட்டுறவுத் தணிக்கைத் துறை அளித்த சிறப்பு அறிக்கைகள் மற்றும் அவற்றில் சம்பந்தப்பட்ட தொகைகளின் விவரம் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:



| வ. எண் | ஆண்டு | சிறப்பு அறிக்கைகளின் எண்ணிக்கை | தொகை (ரூபாய் இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | 2002-2003 | 1,445 | 7,450.56 |
| 2 | 2003-2004 | 1,146 | 14,518.22 |
| 3 | 2004-2005 | 839 | 23,696.28 |
| 4 | 2005-2006 | 690 | 5,295.34 |
| 5 | 2006-2007 (31-12-2006 வரை) | 510 | 3,289.97 |

**தணிக்கையின் தரத்தை மேம்படுத்த வழங்கப்பட்ட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள்:**

*66.* தணிக்கையாளர்களின் திறமை மற்றும் தணிக்கையின் தரம் இவற்றை மேம்படுத்த முறையான பயிற்சிகள், கருத்தரங்குகள் நபார்டு வங்கி மற்றும் இந்திய ரிசர்வ் வங்கியின்மூலமும், சரக கூட்டுறவுத் தணிக்கை உதவி இயக்குநர் அலுவலகங்களில் நடத்தப்பெறும் புத்தாக்கப் பயிற்சிகள்மூலமும் இத்துறையில் வழங்கப்பட்டு வருகிறது. இத்துடன் கூட்டுறவு தணிக்கையின் அடிப்படை கொள்கைகள், வழிகாட்டுதல்கள் அடங்கிய கூட்டுறவு தணிக்கைக் கையேடு பல்வேறு சங்கங்களின் தணிக்கையை மேற்கொள்ளும் அனைத்து தணிக்கையாளர்களுக்கும் 2006 ஆம் ஆண்டில் திருத்தப்பட்டு வழங்கப்பட்டுள்ளது.

**தணிக்கையாளர்களுக்கான பயிற்சித் திட்டங்கள்:**

*67.* தற்போது இத்துறையில் உள்ள தணிக்கையாளர்களுக்கு நடேசன் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், சென்னை மற்றும் கூட்டுறவு மேலாண்மைப் பயிற்சி நிலையம், மதுரை ஆகிய பயிற்சி நிறுவனங்கள்மூலம் கீழ்க்கண்ட பயிற்சிகள் காலவாரியாக அளிக்கப்படுகின்றன:

**குறுகிய கால பயிற்சிகள்**

(1) நிதித் தணிக்கைப் பயிற்சி

(2) கூட்டுறவுச் சட்டங்கள் மற்றும் தொடர்புடைய சட்டங்கள்

(3) மத்திய கூட்டுறவு வங்கிகளுக்கான செயல்படா சொத்துக்கள் மேலாண்மை மற்றும் வசூல் செய்யும் முறைகள் பற்றிய பயிற்சி

(4) நகர கூட்டுறவு வங்கிகளுக்கான செயல்படா சொத்துக்கள் மேலாண்மை மற்றும் வசூல் செய்யும் முறைகள் பற்றிய பயிற்சி

(5) தகவல் தொழில்நுட்பம் மற்றும் கணினிமயமாக்குதல்

(6) எம்.எஸ். வேர்டு, எம்.எஸ். எக்ஸல் மற்றும் இணையவலை பயன்படுத்துதல் .

(7) கணினிமயமாக்குதல், இணையவலை மற்றும் தொலைத்தொடர்பு

(8) கணினிமயமாக்கிய கணக்குமுறை

(9) கணினிமயமாக்கிய கணக்கு முறையினைத் தணிக்கை செய்தல்.

**தணிக்கையாளர்களுக்கான புத்தாக்க வகுப்புகள்:**

68. தணிக்கையாளர்களுக்கு நிர்வாக பதிவாளர்கள், இந்திய ரிசர்வ் வங்கி மற்றும் நபார்டு வங்கி இவற்றின் நடைமுறையில் உள்ள சுற்றறிக்கைகள் பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்தவும், தணிக்கை தொடர்பான விவரங்களை நடப்பினதாக தெரிந்துகொள்ளவும் ஆண்டுக்கு ஒருமுறையும், அவ்வப்போதும் மாவட்டத்தில் உள்ள அலுவலகங்கள்மூலம் புத்தாக்கப் பயிற்சி வகுப்புகள் நடத்தப்பெறுகின்றன.

**துறைத் தணிக்கை மற்றும் சட்டபூர்வ நிறுவனத் தணிக்கைத் துறை:**

69. "அரசு வணிகத் திட்டங்கள் தணிக்கைத் துறை" முதன் முதலாக 1969 ஆம் ஆண்டில் தோற்றுவிக்கப்பட்டது. 1992 ஆம் ஆண்டு இத்துறை மேலும் வலுப்படுத்தப்பட்டு, இந்திய அரசு தலைமைக் கணக்குத் தணிக்கை தலைவர் மற்றும் பொதுக் கணக்குக் குழுவின் பரிந்துரைகளின்படி சுதந்திரமாக இயங்கும் உள்தணிக்கைத் துறையை உருவாக்கும் முகத்தான் இத்துறை மறு சீரமைக்கப்பட்டு இத்துறையின் பெயர் "துறைத் தணிக்கை மற்றும் சட்டபூர்வ நிறுவனத் தணிக்கைத் துறை" என மாற்றியமைக்கப்பட்டது.



**தணிக்கை வரம்பு:**

70. இத்துறையின் தணிக்கை வரம்பிற்குட்பட்டுள்ள நிறுவனங்களின் விவரம் பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | சட்டபூர்வ நிறுவனங்கள் | 10 |
| 2. | புரட்சித் தலைவர் எம்.ஜி.ஆர். சத்துணவுத் திட்ட மையங்கள் | 81,336 |
| 3. | வேளாண் விரிவாக்க மையங்கள் | 889 |
| 4. | அரசுத் துறைகள் (சிறு சேமிப்பு, மாவட்ட நூலகங்கள், முதல்வர் நிவாரண நிதி, போன்றவை) | 90 |
| 5. | பிற நிறுவனங்கள் (அரசு உதவி பெறும் விடுதிகள், தொழில் பயிற்சி நிறுவனங்கள் போன்றவை) | 2,646 |
| 6. | ஆண்டு தோறும் தொடர் மானியம் ரூ.0.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல், மற்றும் தொடரா மானியமாக ரூ.1.20 இலட்சம் மற்றும் அதற்கு மேல் மானியம் பெறும் நிறுவனங்கள். | 428 |
| | மொத்தம் | 85,399 |

**அரசுத் துறைகளின் உள்தணிக்கை:**

71. அரசுத் துறைகளின் அலுவல்களை இத்துறையின் உதவி இயக்குநர்கள் / ஆய்வாளர்களை நியமித்து உள்தணிக்கை செய்யப்படுகிறது. அரசுத் துறைகளில் உள்ள நிதி மற்றும் கணக்குகள் சம்பந்தமான செயல்பாட்டினை மேம்படுத்துவதற்காக அவ்வப்போது கருத்துரு மற்றும் பரிந்துரைகள் அரசுக்கு இத்துறையால் அளிக்கப்பட்டு வருகின்றன. இந்த உள்தணிக்கை அலகுகள் நிர்வாகத்தினருக்கு திறமையான நிதி நிர்வாகத்திற்கான விதிமுறைகளையும் பல்வேறு வழிகளையும் சுட்டிக்காட்டுகிறது.

**தணிக்கை செய்யப்பட்ட மொத்த வரவு-செலவுகள்:**

72. இவ்வாண்டில் சட்டபூர்வ நிறுவனங்கள் மற்றும் சட்டபூர்வமற்ற நிறுவனங்களில் ரூ.9,008.83 கோடி மதிப்பிற்கு வரவு-செலவுகள்

(சட்டபூர்வ நிறுவனங்கள் ரூ.2,256.36 கோடி மற்றும் சட்டபூர்வமற்ற நிறுவனங்கள் ரூ.6,752.47 கோடி) தணிக்கை செய்யப்பட்டுள்ளன.

**அனைவருக்கும் கல்வித் திட்டம்:**

73. அனைவருக்கும் கல்வித் திட்டத் தணிக்கை இத்துறைக்கு 2002-2003 முதல் ஒப்படைக்கப்பட்டு 2004-2005 வரை தணிக்கை முடிக்கப்பட்டு 2005-2006 ஆம் ஆண்டுத் தணிக்கை முன்னேற்றத்தில் உள்ளது.

**அரசு பணியாளர்களின் 1-1-1996 அன்று உள்ள திருத்திய ஊதிய நிர்ணயத் தணிக்கை:**

74. பணியாளர்களின் 1-1-1996 நிலையில் திருத்திய ஊதிய நிர்ணயத் தணிக்கை இத்துறைக்கு அரசுக் கடிதம் எண் 85023 / நிதி (ஊகு) / 2001-2002, நாள் 10-12-2001 மூலம் ஒப்படைக்கப்பட்டது. வருவாய் மற்றும் காவல் துறைக்கான தணிக்கை முழுமையாக முடிக்கப்பட்டு கடும் குறைபாடுகள், சம்பந்தப்பட்ட துறைத் தலைவர்கள் மற்றும் அரசுச் செயலாளர்களுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

**தணிக்கைத் தடை தீர்வு:**

75. நிர்வாகத் துறை அலுவலர்களால் மாதந்தோறும் ஏற்பாடு செய்யப்படும் கூட்டமர்வுகளில் இத்துறையின் மாவட்ட அலுவலர்கள் கலந்துகொள்கின்றனர். பெறப்பட்ட பதில்கள் மற்றும் ஆவணங்களைச் சரிபார்த்து நிலுவையில் உள்ள தணிக்கைத் தடைகள் நிவர்த்திக்கப்படுகின்றன. இதனால் தாமதமின்றி விரைவாக தணிக்கைத் தடைகள் உடனுக்குடன் தீர்வு செய்யப்படுவதுடன் ஓய்வூதிய முன் மொழிவுகள் சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்படும் நிறுவனங்களில் ஓய்வு பெறும் பணியாளர்கள், காலதாமதமின்றி உடனுக்குடன் ஓய்வூதியப் பயன்கள் பெற்று வருகின்றனர்.

76. 2005-2006 ஆம் ஆண்டில் 11,892 தணிக்கைத் தடைகள் (2005-2006 ஆம் ஆண்டு முடியவுள்ள கணக்குகளில்) எழுப்பப்பட்டன. தணிக்கைத் தடைகளில் ஆட்சேபிக்கப்பட்ட தொகை சம்பந்தப்பட்ட நிறுவனங்களில் வசூலிக்கப்பட்டு 9,524 தணிக்கைத் தடைகள் (முந்தைய ஆண்டு தணிக்கை அறிக்கைகளில் குறிப்பிட்ட தணிக்கைத் தடைகள் உட்பட) தீர்க்கப்பட்டன.



**தணிக்கைச் சான்று வழங்குதல்:**

77. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரியம், தமிழ்நாடு வீட்டு வசதி வாரியம், தமிழ்நாடு குடிசைப் பகுதி மாற்று வாரியம், சென்னை பெருநகர வளர்ச்சிக் குழுமம், தமிழ்நாடு தொழிலாளர் நல வாரியம் மற்றும் தமிழ்நாடு வஃக்பு வாரியம் ஆகிய 6 பெரிய சட்டபூர்வ வாரியங்களின் ஆண்டுக் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

78. தமிழ்நாடு கதர் மற்றும் கிராமத் தொழில் வாரிய அனைத்து அலகுகளின் ஒப்படைப்புக் கணக்குகள் மற்றும் 889 வேளாண்மை விரிவாக்க மையங்களின் கணக்குகள் இத்துறையால் தணிக்கை செய்யப்பட்டு சான்றளிக்கப்படுகின்றன.

79. அனைத்து முந்தைய ஊராட்சி ஒன்றியங்கள் மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் ஓய்வு பெறும் ஆசிரியர்களின் சேமநல நிதி இறுதி இருப்புக்கள் இத்துறையால் சான்றளிக்கப்படுகின்றன.

80. அரசு உதவி பெறும் 3 தனியார் பொறியியல் கல்லூரிகள், அரசு உதவிபெறும் 36 தனியார் தொழில்நுட்பப் பயிலகங்கள், அரசு மானியம் பெறும் 128 அரசு சாரா நிறுவனங்களின் மானியத்தகுதி இத்துறையால் தணிக்கை மேற்கொள்ளப்பட்டு சான்றளிக்கப்படுகின்றது.

81. தணிக்கை வரம்பிற்குட்பட்ட சட்டப்படி அமைந்த வாரியப் பணியாளர்கள் மற்றும் தமிழ்நாடு பாடநூல் கழகப் பணியாளர்களின் ஓய்வூதிய முன்மொழிவுகள் இத்துறையால் சரிபார்க்கப்பட்டு சான்றளிக்கப்படுகின்றது.

**துறையைக் கணினிமயமாக்குதல்:**

82. இத்துறையை கணினிமயமாக்குவதற்கு 2006-2007 ஆம் நிதியாண்டிற்கான பகுதி-2 திட்டத்தின்கீழ் ரூ.9.14 இலட்சம் நிதி அரசால் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இத்துறையின் செயல்பாடுகளைக் கணினிமயமாக்குவது முன்னேற்றத்தில் உள்ளது.

**தணிக்கைப் பணியாளர்களுக்குப் பயிற்சி அளித்தல்:**

83. இத்துறையின் தணிக்கைப் பணியாளர்களின் தேவையை உணர்ந்து மற்றும் அவர்களை வெவ்வேறு வகையான சிறந்த தணிக்கைக்குத் தயார்படுத்தும் முகமாக துறைமூலமான உள் பயிற்சி

2006 ஆம் ஆண்டில் அளிக்கப்பட்டுள்ளது. மேலும் மாநில கணக்காய்வுத் தலைவர் மூலமாகவும் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இந்தப் பயிற்சி முடிந்த பிறகு அண்ணா மேலாண்மை பயிற்சி நிறுவனத்தின்மூலம் வரும் ஆண்டுகளில் பயிற்சி அளிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

## ஓய்வூதிய இயக்ககம்

84. ஓய்வூதியம் பெறத் தகுதியுள்ள மாநில அரசு ஊழியர்கள் மற்றும் ஆசிரியர்கள் ஓய்வு பெற்ற பின் ஓய்வூதிய விதிகளின்கீழ் அவ்வப்போது நிர்ணயிக்கப்படும் ஓய்வூதியத்தை மாவட்ட கருவூலங்கள், ஓய்வூதியம் வழங்கும் அலுவலகம் மற்றும் பொதுத் துறை வங்கிகள்மூலம் பெற்று வருகின்றனர். இவர்களைத் தவிர குடும்ப ஓய்வூதியதாரர்களுக்கும் குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மேலும், ஓய்வூதியர்களின் எண்ணிக்கை ஆண்டுதோறும் பெருகிக்கொண்டே வருகிறது. இவர்களுக்கு ஓய்வூதியம் சம்பந்தமாக பல்வேறு பிரச்சினைகள் காலப்போக்கில் எழுகின்றன. அவைகளில் முக்கியமானவை ஓய்வூதியம் கணக்கிடுவதற்கு விடுபட்ட பணிக்காலம், திருத்திய ஓய்வூதிய நிர்ணயம், ஓய்வூதியம் கிடைக்கப்பெறாமை போன்ற பிரச்சினைகள் இருந்து வருகின்றன. இந்தப் பிரச்சினைகளைத் தீர்த்துக்கொள்ள வயதான ஓய்வூதியதாரர்கள் தாங்கள் பணிபுரிந்த பல்வேறு அலுவலகங்களுக்குச் சென்று விவரங்களைப்பெற மிகுந்த சிரமப்படுகிறார்கள். ஓய்வூதியதாரர்களின் பிரச்சினைகளை தீர்ப்பதற்கும் அவர்களின் நலன்களைக் காப்பதற்கும் தமிழக அரசு அவர்களுக்கென்று ஒரு தனி அமைப்பு தேவை எனக் கருதி அவர்களுக்கு ஓர் ஓய்வூதிய இயக்ககத் துறையை 1-9-1994 முதல் நடைமுறைப்படுத்திட ஆணையிடப்பட்டது. இந்த ஓய்வூதிய இயக்ககம் அரசு நிதித் துறையில் இணைச் செயலர் நிலையில் ஓர் இயக்குநரையும் அரசு நிதித் துறையில் துணைச் செயலர் நிலையில் ஓர் இணை இயக்குநரையும், துணை இயக்குநர்கள் மற்றும் ஆதார பணியாளர்களையும் கொண்டு செயல்பட்டு வருகிறது. இந்த இயக்குநரகம் தற்போது கீழ்வரும் பணிகளைச் செய்து வருகிறது:

(i) ஓய்வூதியர்கள் குறைகளைத் தீர்த்தல்

(ii) ஓய்வூதியர் அதாலத்



(iii) அனைத்து அரசு அலுவலர்களும்/தலைமை துறை அலுவலர்களும் ஓய்வூதிய கருத்துருவினை மாநில கணக்காயர்களுக்கு உரிய நாளில் அனுப்பினார்களா என்பதனை உறுதி செய்தல் மற்றும் ஆய்வு செய்தல்.

(iv) மாநில கணக்காயர் அலுவலகத்தில் தொடர்பு கொண்டு ஓய்வு பெறும் நபர்களுக்கு ஓய்வு பெறும் நாளன்று அனைத்து ஓய்வூதிய பயன்களும் தாமதமின்றி பெற்றிட ஆவன செய்தல்.

(v) ஓய்வூதியர்கள் கோரும் தெளிவுரைகளை வழங்கிடல்.

(vi) தமிழ்நாடு தொழிற்சாலை பணியாளர்களது சேமநல நிதி திட்டம் தொடர்பான பணிகளை மேற்கொள்ளல்.

(vii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் மருத்துவ நல நிதி திட்டம், 1995.

(viii) தமிழ்நாடு அரசு ஓய்வூதியர்கள் குடும்ப பாதுகாப்பு நல நிதி திட்டம், 1997.

(ix) கருவூல கணக்குத் துறையில் பராமரிக்கப்பட்டு வந்த 1984 ஆம் ஆண்டு சிறப்பு சேமநல நிதித் திட்டத்தினை இத்துறைக்கு மாற்றம் செய்து அப்பணிகளை இத்துறையில் கவனித்தல்.

(x) தமிழ்நாடு அரசுப் பணியாளர் சிறப்பு சேம நல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம், 2000 மற்றும்

(xi) தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம், 1974.

85. 31-12-2006 வரை ஓய்வூதியம் பெறும் நபர்களின் எண்ணிக்கை கீழ்க்கண்ட அட்டவணையில் கொடுக்கப்பட்டுள்ளது:

| விவரம் | ஓய்வூதியர்கள் | குடும்ப ஓய்வூதியர்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| சிவில் ஓய்வூதியர் | 2,73,192 | 1,27,722 | 4,00,914 |
| ஆசிரியர் ஓய்வூதியர் | 63,759 | 28,446 | 92,205 |
| பிற ஓய்வூதியர்கள் | 28,577 | — | 28,577 |
| மொத்தம் | 3,65,528 | 1,56,168 | 5,21,696 |

## ஒய்வூதியர்கள் குறை தீர்வு:

86. மாவட்டங்களில் மாவட்ட ஆட்சித் தலைவரால் ஓய்வூதியர்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் நான்கு மாதங்களுக்கு ஒருமுறை மாவட்ட ஆட்சித் தலைவரால் நடத்தப்பட்டு வருகிறது. இயக்குநரக அலுவலர் ஒருவர் இக்கூட்டத்தில் பங்கேற்று அம்மாவட்டத்தில் உள்ள ஓய்வூதியர்கள் குறைகள் கேட்டறிந்து, விரைந்து தீர்த்திட மாவட்ட ஆட்சியருக்கு உதவி புரிதல், மாநில கணக்காயர் அலுவலகத்தில் அது சம்பந்தமாக கோப்பு நிலுவையில் இருந்தால் தொடர்பு கொண்டு தொடர் நடவடிக்கை இவ்வியக்ககத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. நேரடியாகவோ அல்லது முதலமைச்சரின் தனிப் பிரிவுமூலமாகவோ பெறப்படும் மனுக்களை கருணையுடன் பரிசீலித்து அவர்களது துறைத் தலைவர்களுடன் தொடர்பு கொண்டு ஓய்வூதியர்கள் குறைகள் தீர்க்கப்பட்டு வருகின்றன. ஓய்வு பெறும் அரசு அலுவலர்கள் தாமதமின்றி உடனடியாக தங்களது ஓய்வூதியப் பயன்களைப் பெற்றிட முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன.

87. ஓய்வூதியர்களின் குறைதீர்க்கும் அதாலத் உயர் நீதிமன்ற வளாகத்திலுள்ள தமிழ் சட்டப் பணிகள் ஆணை குழுவால் 22-02-2002 முதல் அமைக்கப்பட்டு செயல்படுகிறது. ஓய்வூதிய அதாலத்தால் வழங்கப்படும் கட்டளைகளின்மீது தொடர் நடவடிக்கை எடுத்திட அரசு ஓய்வூதிய இயக்குநர், தலைமைச் செயலக நிர்வாகத் துறை சார்பாளர்கள், துறைத் தலைவர்கள் மற்றும் மாநில கணக்காயர் சார்பாளர் ஆகியோரை உள்ளடக்கிய ஒரு குழுவினை அமைத்துள்ளது. ஓய்வூதிய இயக்குநர் இதன் தொடர்பு அலுவலராவார். மாதந்தோறும் இந்த அதாலத் நடைபெறுகிறது. மேலும் அதிக அளவில் ஓய்வூதியர் பயனடைந்திடும் வகையில் இது டிசம்பர் 2003 முதல் மாதமிருமுறை நடைபெறுகிறது.

88. ஓய்வூதிய பயன்களை ஓய்வூதியர்கள் அறிந்துகொள்ளும் பொருட்டு வழிகாட்டி ஏடு ஒன்று தயார் செய்யப்பட்டு இணைய தளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. (www.tn.gov.in/dop) ஓய்வூதியப் படிவங்கள் இணைய தளத்தில் இருந்து உடனடி உபயோகத்திற்காக பெற்றுக்கொள்ளலாம். மின் அஞ்சல்மூலமாகவும் இத்துறையினைத் தொடர்புகொள்ளலாம். இத்துறைக்கான மின் அஞ்சல் குறியீடு dop@tn.nic.in



## தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ நல நிதித் திட்டம், 1995

89. தமிழ்நாடு அரசு சிவில், ஆசிரியர் மற்றும் தமிழக அரசு சார்ந்த இந்திய அரசுப் பணியில் பணியாற்றி ஓய்வு பெற்றவர்கள் அரசினால் அங்கீகரிக்கப்பட்ட மருத்துவமனைகளில் அனுமதிக்கப்பட்ட சிறப்பு சிகிச்சை/அறுவை சிகிச்சை மேற்கொண்டதற்கு நிதி உதவி செய்யும் பொருட்டு தமிழ்நாடு அரசு ஓய்வூதியர் மருத்துவ நல நிதித் திட்டம் 01-07-1995 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. ஓய்வூதியர் தனது வாழ்நாளில் மேற்கொண்ட மருத்துவ சிகிச்சை/அறுவை சிகிச்சைக்கான செலவுத் தொகையில் 75% அல்லது அதிகபட்சமாக ரூ.50,000/- இதில் எது குறைவோ இந்த நிதியிலிருந்து அத்தொகை அவருக்கு வழங்கப்படுகிறது. இத்திட்டத்தின்கீழ் ஓய்வூதியத்திலிருந்து மாதா மாதம் ரூ.10/- பிடித்தம் செய்யப்படுகிறது. 28-2-2007 வரை ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்பட்ட 26,930 விண்ணப்பங்களுக்கு ரூ.26.45 கோடி நிதி உதவி வழங்கப்பட்டுள்ளது. அரசு ஆண்டுதோறும் இந்த நிதியத்திற்கு ரூபாய் 8 இலட்சம் மானியமாக அளித்து வருகிறது.

## தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டம், 1997

90. தமிழ்நாடு ஓய்வூதியர் குடும்ப நல பாதுகாப்புத் திட்டம் 1-1-1997 முதல் தொடங்கப்பட்டது. இத்திட்டத்தில் ஓய்வூதியர் ஒரு குறிப்பிட்ட சந்தாத் தொகையை தொடர்ந்து பன்னிரண்டு மாதங்கள் செலுத்தியிருக்க வேண்டும். இந்தத் திட்டம் 1-1-1998 முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. குறிப்பிட்ட சந்தாத் தொகையை குறைந்தது ஓராண்டாவது செலுத்திய பின்னர் ஓய்வூதியர் இறந்தால் அவரது மனைவி (அ) கணவர் / நியமனதாரர் / வாரிசுதாரருக்கு ரூ.25,000/- வழங்கப்படுகிறது. இது ஒரு விருப்பத் திட்டம். ஓய்வூதியர் இத்திட்டத்தில் சேர்ந்த பின்பு இத்திட்டத்திலிருந்து விலகிக்கொள்ள நேர்ந்தால் அவர் மாதந்தோறும் செலுத்திய தொகை திரும்ப வழங்கப்படும். தற்பொழுது இத்திட்டத்தின்கீழ் ரூ.70/- மாத சந்தா ஓய்வூதியர்களிடமிருந்து பெறப்படுகிறது. 28-2-2007 முடிய இத்திட்டத்தில் 64,434 குடும்பங்கள் பயனடைந்துள்ளன. ரூ.161.81 கோடி அளவில் இறந்துபோன ஓய்வூதியரின் குடும்பங்களுக்கு குடும்ப பாதுகாப்பு நிதியாக வழங்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு தொழிற்சாலை தொழிலாளர் வருங்கால வைப்பு நிதித் திட்டம், 1969**

91. அரசுத் தொழில் நிறுவனங்களில் தினக்கூலி பணியாளர்களின்
நலம் கருதி இத்திட்டம் 1969 ஆம் ஆண்டு அறிமுகப்படுத்தப்பட்டது.
இத்திட்டத்திற்காக 01-04-1989-க்கு முன்னர் பணியாளர்களின் கூலித்
தொகையில் 8.33 சதவீதத் தொகை சந்தாவாகவும் அதற்கு சரிசமமான
அளவு நிறுவனரின் பங்குத் தொகையாகவும் அளிக்கப்பட்டு வந்தது.
01-04-1989-க்கு பின்னர் பணியாளரின் கூலித் தொகையில் 10 சதவீதத்
தொகை சந்தாவாகவும் அதற்கு சரிசமமான அளவு அரசு பங்காகவும்
வழங்கப்பட்டு வருகிறது.

92. விவசாயம், வனத் துறை, பொதுப் பணித் துறை, கால்நடை
பராமரிப்பு, பட்டு வளர்ச்சித் துறை தோட்டக்கலைத் துறை மற்றும்
விதைப் பண்ணைகள் போன்ற அரசுத் துறைகள் சார்ந்த
453 அலகுகள் இத்திட்டத்தின்கீழ் கொண்டு வரப்பட்டு
20,200 உறுப்பினர்கள் இத்திட்டத்தின்கீழ் சேர்க்கப்பட்டுள்ளனர்.
இத்திட்டத்தில் கணக்குகள் முழுவதும் கணினிமயமாக்கப்பட்டுள்ளது.
இத்திட்டத்தின்கீழ் 43.88 கோடி அளவிலான வருவாய் அரசின் வைப்பு
கணக்கில் சேர்க்கப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம், 1984**

93. இந்த திட்டம் 1-4-1984 ஆம் ஆண்டு முதல் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. மாதம் ரூ.20/- வீதம் 148 மாதங்கள் வரை அரசு
பணியாளரிடம் பிடித்தம் செய்யப்பட்டு அத்தொகை பணியிலிருந்து
ஓய்வு பெறும் போது அவர் செலுத்திய சந்தாத் தொகை, வட்டி
மற்றும் அரசின் பங்குத் தொகையாக ரூ.5,000/-மும் கொடுக்கப்படுகிறது.
இத்தொகை 15-9-2000 முதல் ரூ.10,000/-மாக உயர்த்தப்பட்டுள்ளது.

**தமிழ்நாடு அரசு ஊழியர்கள் சிறப்பு சேமநல நிதி மற்றும் பணிக்கொடை திட்டம், 2000**

94. இத்திட்டம் 1-10-2000 முதல் எல்லா நிரந்தர அரசு
ஊழியர்களுக்கும் செயல்படுத்தப்பட்டுள்ளது.

அ. இத்திட்டத்தில் ரூ.50/- வீதம் மாதா மாதம் செலுத்தி ஓய்வு
பெறும் மாதத்திற்கு முன்மாதம் வரை செலுத்தலாம்.
அத்தொகை ஓய்வு பெறும்போது வட்டியுடன் திரும்ப
வழங்கப்படுகிறது.



ஆ. இத்திட்டத்தில் ஏற்கெனவே உள்ள பணியாளர்கள்
விருப்பத்தின் பேரில் சேரலாம். 1-10-2000 அன்றோ அல்லது
அதற்குப்பின் பணியில் சேருபவர்களுக்கு இத்திட்டம்
கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இத்தொகையுடன் வட்டியும்,
அரசின் பங்குத் தொகை ரூ.10,000/- பணியில் இருந்து ஓய்வு
பெறும்போது திரும்ப வழங்கப்படுகிறது.

**தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம், 1974**

95. தமிழ்நாடு அரசு, தமிழ்நாடு சமூகப் பாதுகாப்புத் திட்டம் 1974-ஐ
எல்லாப் பிரிவு மக்களும், முக்கியமாக கூலித் தொழிலாளர் மற்றும்
சுயதொழில் செய்வோர் பயனடைந்திட 1975 ஆம் வருடம் முதல்
தொடங்கியுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பொதுமக்கள் மாத சந்தாத்
தொகை முறையே ரூ.10/-, ரூ.20/-, ரூ.30/- மற்றும் ரூ.60/- என மாதா
மாதம் செலுத்தக்கூடிய ஏழுவகை பிரிவுகள் உள்ளன. அதன்படி
சந்தாதாரர்கள் மாத ஓய்வூதியமாக ரூ.20/-, ரூ.35/-, ரூ.60/- மற்றும்
ரூ.100/- என 30 வருடங்களுக்கு தொடர்ந்து ஓய்வூதியமும் திட்ட
இறுதியில் ஒட்டு மொத்தத் தொகையும் பெறலாம். இதில்
சந்தாதாரர்களுக்கும் அரசுக்குமிடையேயான ஒப்பந்தப்படி சந்தா
காலம் முடிவடைந்தபின் 30 ஆண்டுகளுக்கு ஓய்வூதியத் தொகை
வழங்கப்படும். சந்தா சேகரிப்பு 1982உடன் நிறுத்தப்பட்டுவிட்ட
போதிலும் இத்திட்டத்தின் ஆயுட்காலம் 2037 வரை தொடரும்.
தற்பொழுது இவ்வியக்கத்தில் அதற்கான எஞ்சியுள்ள பணிகள்
கவனிக்கப்பட்டு வருகின்றன. தமிழ்நாடு பவர் பைனான்ஸ்
கார்ப்பரேஷன் மற்றும் தமிழ்நாடு டிரான்ஸ்போர்ட் டெவலப்மெண்ட்
கார்ப்பரேஷனில் ரூ.25.53 கோடி முதலீடு செய்யப்பட்டுள்ளது.

96. இந்த இயக்ககம் ஓய்வூதியதாரர்களின் அனைத்து
பிரச்சினைகளையும் தீர்ப்பதற்குண்டான முயற்சிகளை மேற்கொண்டு
வருகிறது. தேவைப்படும்போது சம்பந்தப்பட்ட துறைகளில் நேரடியாகத்
தொடர்புகொண்டு பிரச்சினைகளைத் தீர்த்து வைப்பதால்
இதுபோன்ற சிரமமான சூழ்நிலையிலிருந்து வயதான
ஓய்வூதியதாரர்கள் விடுபடும் சூழ்நிலை உள்ளது.

[2007 மே 9

## இணைப்பு-II

*(256 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)*

## மானியக் கோரிக்கை எண் 36—திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை

## கொள்கை விளக்கக் குறிப்பு, 2007-2008

**1.1 திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மாநில திட்டக் குழுவின் உதவியோடு ஐந்தாண்டுத் திட்டங்கள் மற்றும் ஆண்டுத் திட்டங்கள் தயாரித்தல் மற்றும் மத்திய திட்டக் குழுவுடன் இணைந்து செயல்படுதல்.

(ii) திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் மத்திய மாநில அரசுகள் செலவு பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவற்றைக் கண்காணித்தல்.

(iii) திட்டப் பணிகள், மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு நிதி உதவி பெறும் திட்டங்கள் ஆகியவற்றை மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறைமூலம் மதிப்பீடு செய்தல்.

(iv) பொருள் இயல் மற்றும் புள்ளி இயல் துறைமூலமாக புள்ளி விவரங்கள் சேகரித்தல், ஒருங்கிணைத்தல் மற்றும் வெளியிடுதல். இப்பணிகளில், மாநில வருவாய் மதிப்பீடு, பொருளாதாரக் கணக்கெடுப்பு, வேளாண்மை கணக்கெடுப்பு மற்றும் சிறப்பு ஆய்வுகள் ஆகியவற்றுடன் மாநில பொருளாதார மாதாந்திர கண்காணிப்பு ஆகியவை அடங்கும்.

(v) இருபது அம்சத் திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் வறுமை ஒழிப்புத் திட்டங்களைக் கண்காணித்தல்.

(vi) மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளின் செயலாக்கம் குறித்து மேற்பார்வையிடுதல்.



2007 மே 9]

(vii) மாநில அளவில் உலக வர்த்தக அமைப்பின் சம்பந்தப்பட்ட நிகழ்வுகளின் பாதிப்புகளை கண்காணித்தல்.

(viii) பெரிய கட்டமைப்புத் திட்டங்களின் முன்னேற்றம் குறித்து ஆய்வு செய்தல்.

(ix) சிறப்பு முயற்சிகளின்கீழ் வரும் திட்டங்களைத் துவக்குதல் மற்றும் அவற்றின் செயலாக்கத்தை மேற்பார்வையிடுதல்.

(x) ஆண்டுத் திட்டங்களுக்கான திட்டம் மற்றும் வரவு-செலவுத் திட்ட இணைப்பினைத் தயாரித்தல்.

(xi) தொலை உணர்வு நுட்பம் பயன்படுத்தப்படும் திட்டங்களை ஒருங்கிணைத்தல்.

(xii) மாவட்ட கண்காணிப்பு அலுவலர்களின் அறிக்கைகள்மீது தொடர் நடவடிக்கை எடுத்தல்.

### 1.2 இந்தப் பணிகள் பற்றிய சுருக்கக் குறிப்பு பின்வருமாறு:

### 1.2.1 ஐந்தாண்டுத் திட்டங்களின் சாதனைகள்:

இரண்டாவது ஐந்தாண்டுத் திட்டம் முதலாகத் திட்ட ஒதுக்கீடுகளை மாநில அரசு தொடர்ந்து எய்தி வந்துள்ளது. முதல் ஐந்தாண்டுத் திட்டம் முதல் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டம் வரையில் ஏற்பளிக்கப்பட்ட திட்ட ஒதுக்கீடுகள் மற்றும் செலவினங்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன:

| திட்டக் காலம் | (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|
| | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
| முதல் திட்டம் (1951-56) | 86 | 80 |
| இரண்டாவது திட்டம் (1956-61) | 186 | 188 |
| மூன்றாவது திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் (1961-69) | 608 | 613 |
| நான்காவது திட்டம் (1969-74) | 552 | 559 |
| ஐந்தாவது திட்டம் (1974-79) | 1122 | 1165 |
| ஆறாவது திட்டம் (1980-85) | 3150 | 3645 |

[2007 மே 9

| திட்டக் காலம் | (ரூபாய் கோடியில்) | |
|---|---|---|
| | ஏற்பளிக்கப்பட்ட ஒதுக்கீடு | செலவினம் |
| ஏழாவது திட்டம் (1985-90) | 5750 | 6317 |
| ஆண்டுத் திட்டம் (1990-91) | 1450 | 1591 |
| ஆண்டுத் திட்டம் (1991-92) | 1600 | 1726 |
| எட்டாவது திட்டம் (1992-97) | 10200 | 14024 |
| ஒன்பதாவது திட்டம் (1997-2002) | 25000 | 25036 |
| பத்தாவது திட்டம் (2002-2007) | 40000 | 43391* |

*எதிர்பார்க்கப்படுவது

முதலாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு ரூ.29 ஆக இருந்தது. இது ஐந்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் ரூ.248 ஆக உயர்ந்தது. மேலும் பத்தாவது ஐந்தாண்டுத் திட்டத்தில் தனி நபருக்கான திட்ட ஒதுக்கீடு உயர்ந்த அளவான ரூ.6557/-ஐ எட்டியுள்ளது.

### 1.2.2 பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் (2007–2012):

ரூ.80,000 கோடி அளவில் பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் செயல்படுத்தப்படும். இந்தத் திட்டக் காலத்தில், மாநிலப் பொருளாதாரத்தை சராசரியாக 9 சதவிகித அளவிற்கு வளர்ச்சி அடையச் செய்வதைக் குறிக்கோளாகக் கொண்டு, இந்த அரசு திட்டங்களை வகுத்துச் செயல்படுத்தும்.

### 1.2.3 2007–2008 ஆம் ஆண்டுத் திட்டம்:

2007-2008 ஆம் நிதியாண்டு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் முதல் ஆண்டாகும். 5-2-2007 அன்று மாண்புமிகு முதலமைச்சர் மற்றும் மத்திய திட்டக் குழுத் துணைத் தலைவர் ஆகியோரிடையே நடந்த கலந்தாய்வுக் கூட்டத்தில், 2007-2008 ஆம் ஆண்டில் ரூபாய் 14,000 கோடி என்ற உயரளவிலான ஆண்டுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு ஒப்புதல் பெறப்பட்டுள்ளது.



2007 மே 9]

### 1.2.4 இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா:

இராஷ்டிரிய சம் விகாஸ் யோஜனா திட்டம், திருவண்ணாமலை, திண்டுக்கல், கடலூர், நாகப்பட்டினம் மற்றும் சிவகங்கை ஆகிய 5 மாவட்டங்களில் மத்திய அரசின் முழு உதவியுடன் செயல்படுத்தப்பட்டு வருகின்றது. இத்திட்டத்தின் முக்கிய நோக்கமானது, குறைந்த வேளாண்மை உற்பத்தி, வேலையின்மை, சமூகம் மற்றும் ஏனைய கட்டமைப்புகளில் உள்ள குறைபாடுகளை நிவர்த்தி செய்வதாகும். இத்திட்டத்தைச் செயல்படுத்துவதற்கு மாவட்டம் ஒவ்வொன்றிற்கும் ஆண்டுதோறும் சிறப்பு மத்திய நிதி உதவியாக ரூ.15.00 கோடி என மூன்றாண்டுகளுக்கு மத்திய அரசு வழங்குகிறது. இத்திட்டத்தில் மண்வளப் பாதுகாப்பு, வனவளம், சமூக வனம், நீர்வடிப்பகுதி வளர்ச்சி, சிறுபாசனம், வேளாண்மை, தோட்டக்கலை, கட்டமைப்பு வசதி (சாலைகள் மற்றும் மின்சக்தி), சமூகத் துறை (மருத்துவம் மற்றும் கல்வி) மற்றும் பிழைப்பதற்கான உதவி (வருமானம் பெருக்குவதற்கான நடவடிக்கைகள், குறிப்பாக கைத்தறி, தகவல் தொழில்நுட்பம், வேளாண்மை செய்முறை மற்றும் பல) ஆகியவை அடங்கும். இத்திட்டங்களை முழுமையாகச் செயல்படுத்திய பின்னர் தனிநபர் வருமானம் மற்றும் வேளாண்மை உற்பத்தி ஆகியவை உயரும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இத்திட்டம் மாற்றியமைக்கப்பட்டு "பின்தங்கிய பகுதிகளுக்கான மானிய நிதி" என்று பெயரிடப்பட்டு, மத்திய அரசு, பஞ்சாயத்து ராஜ் அமைச்சகம் வெளியிட்டுள்ள திருத்தி அமைக்கப்பட்ட வழிகாட்டு நெறிமுறைகளுடன் செயல்படுத்தப்படுகின்றது. இத்திட்டம் 2007-2008 ஆம் ஆண்டு முதல் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையால் நிர்வகிக்கப்படுகிறது.

### 1.2.5 மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள்/மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள்:

மத்திய அரசு பொறுப்பேற்கும் திட்டங்கள் (100 சதவிகிதம் மத்திய அரசின் நிதியுதவியுடன்) மற்றும் மத்திய, மாநில அரசுகள் செலவுப் பொறுப்பேற்கும் திட்டங்கள் ஆகியவை பல்வேறு துறைகள் மற்றும் நிறுவனங்களால் செயல்படுத்தப்படுவது கண்காணிக்கப்படுகிறது. மேற்கண்ட திட்டங்களின் செயலாக்கத்தின் முன்னேற்றம் பல்வேறு நிலைகளில் மாதாந்திர அடிப்படையிலும், இத்திட்டங்களுக்கு மத்திய அரசு நிதி வழங்குவது மூன்று மாத அடிப்படையிலும் கண்காணிக்கப்படுகிறது.

## 1.2.6 சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்கள்: [2007 மே 9

சிறப்பு முயற்சிகள் மற்றும் திட்டங்களைக் கண்காணிக்க ஏதுவாகவும், வெவ்வேறு ஆதாரங்களிலிருந்து உருவாகும் புத்தாக்கத் திட்டங்களை சம்பந்தப்பட்ட தலைமைச் செயலகத் துறைகளுடனும், இதர சார்பு துறைகளுடனும் கலந்தாலோசித்து செயல்படுத்தும் நோக்குடனும், "திட்டம் மற்றும் வளர்ச்சித் துறை" என்பது "திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை" என்று திட்டம் மற்றும் வளர்ச்சித் துறையின் 29-04-2003 நாளிட்ட அரசாணை எண் 31-ல் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

அரசாணை எண் 146, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள்: 2-11-2006-ல் "சிறப்பு முயற்சிகள்" என்ற பொருளை அலுவல் விதிகளில் முதல் அட்டவணையில் ஒருங்கியல் பட்டியலில் சேர்க்கப்படுவதற்கான ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன.

கீழ்க்கண்ட அறிவுரைகள் அரசு கடித எண் 8835/மதி/2003, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை, நாள் 2-11-2006-ல் வெளியிடப்பட்டுள்ளன:—

1. "சிறப்பு முயற்சிகள்" என்பது ஒரு பொதுவான பொருளாகும். ஒரு குறிப்பிட்ட காலகட்டத்தில் உருவாகும் எந்தவொரு திட்டத்தைவிட இது மாறுபட்டது.

2. ஒரு பொருள், ஒரு காலகட்டத்தில் சிறப்பு முயற்சியாக இருக்கலாம். அதுவே பின்னர் வழக்கமான திட்டமாகவும் மாறலாம்.

3. சிறப்பு முயற்சிகள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையினால் தன்னிச்சையாகவோ அல்லது பிறிதொரு துறையின் வேண்டுகோளின்பேரிலோ துவக்கப்படலாம். இவ்வாறு துவக்கப்பட்ட சிறப்பு முயற்சிகள், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையால் சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறைகளுடன் கலந்தாலோசிக்கப்பட்டு, ஒருங்கிணைக்கப்பட்டு கையாளப்படும்.

4. சிறப்பு முயற்சிகள், அவற்றின் இயல்பின் காரணமாக சில வெற்றிகரமான திட்டமாக அமையாமலும், தொடர்ந்து பரிசீலனை செய்யவேண்டிய அவசியம் இல்லாமலும் போய்விடும். இச் சூழ்நிலையில் அவை கைவிடப்படலாம்.



2007 மே 9]

5. சிறப்பு முயற்சிகளைத் துவக்குவது மற்றும் (அல்லது) ஒருங்கிணைப்பது, மேலும் அவற்றை முதிர்வு நிலைக்குக் கொண்டுவருவது அல்லது தொடர்ந்து பரிசீலனை செய்வதில் பயனில்லை என்பது குறித்து முடிவு செய்து அவற்றைக் கைவிடுவது, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் பணிகளாகும்.

6. திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் தொடர் கண்காணிப்பு இனி தேவையில்லை என்ற நிலையில், ஒரு குறிப்பிட்ட சிறப்பு முயற்சி முதிர்வு நிலை அடைந்துவிட்டது என்று முடிவெடுக்கப்பட்டு அது சம்பந்தப்பட்ட நிர்வாகத் துறையிடம் ஒப்படைக்கப்படும்.

மேற்கூறியவற்றிலிருந்து சிறப்பு முயற்சிகள் தொடர்பாக பின்வரும் கருத்துக்கள் கவனத்தில் கொள்ளப்பட்டன:—

(அ) உயிரி எரிசக்தி உற்பத்தித் திட்டம்: உயிரி பொருள்கள் வழங்குதல்.

(ஆ) சர்க்கரை ஆலைகளிலிருந்து எத்தனால் தயாரித்தல்: கருப்பஞ்சாற்று கசண்டு அல்லாத ஏனைய ஆதாரங்களான சர்க்கரைக் கிழங்கு (Sugarbeet), இனிப்புச் சோளம், மக்காச் சோளம், மரவள்ளிக் கிழங்கு மற்றும் ஏனைய மாச்சத்து தாவரங்களிலிருந்து எத்தனால் தயாரித்தல்.

(இ) காட்டாமணக்கு மற்றும் சைமருபா கிளாக்கா மரம் ஆகியவற்றிலிருந்து உயிரி எரிவாயு தயாரித்தல்.

(ஈ) உயர் தொழில்நுட்ப விவசாயம்.

அன்றாடம் பெருகிவரும் தேவைக்கேற்ப, நவீனமான செயல்திறன்மிக்க ஒரு சிக்கன மாநகர இரயில் போக்குவரத்து முறையைச் சென்னையில் நடைமுறைப்படுத்துவது என அரசு முடிவு செய்துள்ளது.

விரிவான திட்ட அறிக்கை தயாரிப்பதற்காக ஆய்வு ஒன்றினை அரசு நடத்தி வருகிறது. வரைவுத் திட்ட அறிக்கையில் ஏறத்தாழ 49 கிலோ மீட்டர் தூரத்திற்கான இணைப்பை சுமார் ரூ.9000 கோடியளவில் அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. அரசாணை (நிலை) எண் 10, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை,

நாள் 18-01-2007-ல், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் [2007 மே 9
துறையின்கீழ் இத்திட்டம் "சிறப்பு முயற்சி" திட்டமாக அறிவிக்கப்
பட்டுள்ளது.

## 1.2.7 மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம்:

மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில் நீலகிரி
மாவட்டத்தில் மட்டும் 1975 ஆம் ஆண்டு முதல் மத்திய திட்டக்
குழுவின் நிதியுதவியுடன் செயல்படுத்தப்படுகிறது. மலைப்பகுதியின்
உயிரினச் சூழல்களைப் பாதுகாத்து, மேம்படுத்துதல், அதனை மேலும்
வளப்படுத்துதல் ஆகிய மாநில அரசின் முயற்சிக்கு உறுதுணையாக
இத்திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

இத்திட்டத்தின் முக்கிய குறிக்கோள் இயற்கைச் சூழலைப்
பாதுகாப்பதும், இயற்கைச் சூழலை நிலைப்படுத்துவதும் ஆகும்.
இதன் அடிப்படையில் பல்வகை உயிரினச் சூழலைப் பாதுகாக்கவும்,
மலைவாழ் உயிரினங்களைப் பாதுகாத்து புத்துயிர் ஊட்டும் வகையில்
அனைத்து வளர்ச்சிப் பணிகளும் திட்டமிடப்படுகின்றன. நீலகிரி
மாவட்டம் முழுவதும் 75 பெரிய நீர்வடிப்பகுதிகளாகப் பகுக்கப்பட்டு,
முன்னுரிமை நீர்வடிப்பகுதிகள் கண்டறியப்பட்டுள்ளன. அதற்கான
பணிகள் முன்னுரிமை நீர்வடிப்பகுதிகளில் செயல்படுத்தப்படுகின்றன.
சாகுபடி செய்யத்தக்க நிலங்களில், வடிகால்களைச் சுத்திகரித்தல்,
மழைநீரைச் சேமித்தல், ஈரப்பதத்தைத் தக்கவைத்தல் போன்ற
சுற்றுப்புறச் சூழலுக்கு உகந்த நடவடிக்கைகள்மூலம், சிறிய நுண்நீர்
வடிப்பகுதிகள் மேம்படுத்தப்படுகின்றன.

தமிழ்நாட்டிற்கு மத்திய திட்டக் குழு சிறப்பு மத்திய உதவியாக
ரூபாய் 35.50 கோடியை வருடாந்திர ஒதுக்கீடாக செய்துவருகின்றது.
இந்தச் சிறப்பு மத்திய உதவி 90 சதவிகிதம் மானியமாகவும் 10
சதவிகிதம் கடனாகவும் விடுவிக்கப்படுகிறது. 2005-2006 ஆம் ஆண்டு
முதல் மத்திய அரசு சிறப்பு மத்திய உதவியின் மானியத்தை மட்டும்
விடுவித்து வருகிறது. கடன் பகுதியை, வெளிச்சந்தைக் கடனாகப்
பெறுவதற்கு மாநில அரசுக்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

## 2006–2007 ஆம் ஆண்டின் செயல்பாடு

2006-2007 ஆம் ஆண்டிற்கு மொத்த ஒதுக்கீடு ரூபாய் 35.50
கோடியாகும். இந்த முழு ஒதுக்கீட்டிற்கும் ஒப்பளிப்புகள்
வழங்கப்பட்டுவிட்டன. மேற்படி நிதி ஒதுக்கீட்டில், பெருமளவு



2007 மே 9]
தொகை மண்வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டபயிர்
வளர்ப்பு, உள்ளாட்சி மன்றங்கள் மேம்பாடு, சாலைகள் மேம்பாடு,
ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா மேம்பாடு
ஆகிய திட்டப் பணிகளுக்காக செலவிடப்பட்டுள்ளது.

## 2007–2008 ஆம் ஆண்டிற்கான திட்ட செயற்குறிப்பு

திட்டச் செயல்பாட்டினை கருத்தில்கொண்டு, 2007-2008 ஆம்
ஆண்டுத் திட்டத்திற்கு ரூபாய் 35.50 கோடிக்கு நிதி ஒதுக்கீடு செய்ய
மத்திய திட்டக் குழு ஒப்புக்கொண்டுள்ளது. வரைவு ஆண்டுத்
திட்டம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த ஆண்டுத் திட்டத்தில் மண்
மற்றும் நீர் வளப் பாதுகாப்பு, காடு வளர்ப்பு, தோட்டக்கலை, ஆதி
திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சாலைகள் மற்றும் சுற்றுலா
துறைகளின் வளர்ச்சிக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

## 1.2.8 மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம்:

மேற்கு மலைத் தொடர் மேம்பாட்டுத் திட்டம், தமிழ்நாட்டில்
1975-1976-ல் தொடங்கப்பட்டு, மத்திய அரசின் முழு நிதியுதவியுடன்
(90% மானியம் மற்றும் 10% கடன்) செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேற்கு மலைத் தொடர் பகுதியானது, தமிழ்நாட்டில் 26,000 சதுர
கிலோ மீட்டர் பரப்பளவில் உள்ளது. இது தமிழ்நாட்டின் மொத்த
பரப்பளவில் 20 சதவிகிதமாகும். இத்திட்டம் தற்பொழுது,
தமிழ்நாட்டில் 8 மாவட்டங்களில் இருந்து தெரிந்தெடுக்கப்பட்ட
57 வட்டாரங்களைக் கொண்ட 33 வட்டங்களில் செயல்படுத்தப்பட்டு
வருகிறது. இத்திட்டம் தேனி மற்றும் கன்னியாகுமரி மாவட்டங்களில்
முழுவதுமாகச் செயல்படுத்தப்படுகிறது.

இத்திட்டத்தின் முக்கிய நோக்கங்களாவன:

(i) உயிரினப் பாதுகாப்பிற்கு, இயற்கைச் சூழலின் சமநிலையைப் பேணுதல்

(ii) இப்பகுதியில் அபரிமிதமாகக் காணப்படும் உயரிய மரபணு உயிரினங்களைப் பாதுகாத்தல்

[2007 மே 9

(iii) மனித இனத்தால் இயற்கைச் சூழலுக்கு ஏற்பட்ட மற்றும் ஏற்படுகின்ற சீரழிவுகளைச் சரி செய்தல் மற்றும்

(iv) அங்குள்ள மக்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தி சுற்றுச்சூழல் வளர்ச்சிக்கான திட்டங்களில் அவர்களைத் தீவிரமாகப் பங்கு கொள்ளச் செய்தல்

இத்திட்டத்தின்கீழ் செயல்படுத்தப்படும் முக்கிய வளர்ச்சிப் பணிகள் மண்வளப் பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு, சிறுபாசனம், ஊரகச் சாலைகள், கால்நடை பராமரிப்பு, மீன்வளம், பட்டு வளர்ச்சி, தொலையுணர்வு, ஆதி திராவிடர் மற்றும் பழங்குடியினர் நலன், சுற்றுலா, விடுபட்ட அடிப்படை வசதிகளைப் பூர்த்தி செய்தல் மற்றும் மரபுசாரா எரிசக்தி ஆகியவையாகும். இத்திட்டத்தின் மொத்த ஒதுக்கீட்டில் 80 சதவிகிதத் தொகை மண்வள பாதுகாப்பு, தோட்டக்கலை, காடு வளர்ப்பு ஆகிய மூன்று முக்கிய துறைகளுக்கு ஒதுக்கப்பட்டு வருகிறது.

பத்தாவது ஐந்தாண்டுத் திட்டக் காலத்தில் (2002-2007) மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டத்திற்கு ரூ.61.00 கோடிக்கு மத்திய அரசு ஒப்புதல் அளித்துள்ளது. அவற்றில் மத்திய அரசிடமிருந்து சிறப்பு நிதி உதவியாக ரூ.54.90 கோடி பெறப்பட்டுள்ளது. இத்திட்டத்தின்கீழ் பணிகள் யாவும் சம்பந்தப்பட்ட துறைகள் மூலமாகவும், மாவட்ட ஆட்சித் தலைவர்களின் கண்காணிப்பின் மூலமாகவும் செயல்படுத்தப்பட்டு வருகிறது.

மேலும், மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டப் பணிகளுக்காக 2007-2008 ஆம் ஆண்டிற்கான திட்ட ஒதுக்கீடு ரூ.17.04 கோடியாகும். மாவட்ட ஆட்சித் தலைவரின் தலைமையிலான மாவட்ட அளவிலான மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் ஒப்புதலைப் பெற்று துறைத் தலைவர்களிடமிருந்து பெறப்பட்ட கருத்துருக்கள் ஆண்டுத் திட்டம் 2007-2008-ல் சேர்க்கப்பட்டுள்ளன. அதற்குரிய நிதி பல்வேறு திட்டங்களுக்கும், விடுபட்ட அடிப்படை வசதிகளுக்கும், உள்ளூர் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்தும்பொருட்டு மத்திய திட்டக் குழுவால் நிதி ஒதுக்கீடு பெறப்படவுள்ளது.



2007 மே 9]

## 1.2.9. இருபது அம்சத் திட்டம் – 2006

இருபது அம்சத் திட்டம் 1975-ல் முதன்முதலாக தொடங்கப்பட்டது. 1982 மற்றும் 1986 ஆகிய ஆண்டுகளில் இரண்டு முறை இத்திட்டம் மாற்றி அமைக்கப்பட்டது. தற்போது இத்திட்டம் மூன்றாவது முறையாக 2006 ஆம் ஆண்டு திருத்தி அமைக்கப்பட்டு, "இருபது அம்சத் திட்டம் 2006" எனப் பெயரிடப்பட்டுள்ளது. 2007 ஏப்ரல் திங்கள் முதல் நாளிலிருந்து இத்திட்டக் கண்காணிப்பு நடைமுறைக்கு வருகிறது.

நாட்டில் வறுமையினைப் போக்கி, ஏழை, எளிய மக்களின் வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதே இத்திட்டத்தின் முக்கிய நோக்கம் ஆகும். இத்திட்டத்தில், வறுமை ஒழிப்பு, வறுமைக் கோட்டின்கீழ் உள்ள மக்களுக்கான வேலைவாய்ப்பு, கல்வி, வீட்டு வசதி, உடல் நலம், வேளாண்மை மற்றும் நிலச் சீர்திருத்தங்கள், நீர்ப்பாசனம், குடிநீர், நலிந்த பிரிவினரின் பாதுகாப்பு மற்றும் உரிமை, நுகர்வோர் பாதுகாப்பு, சுற்றுச்சூழல் போன்ற சமூகப் பொருளாதார அம்சங்கள் உள்ளன.

இத்திட்ட முன்னேற்ற அறிக்கைகள் மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்திற்கு மாதந்தோறும் அனுப்பப்படுகிறது. மத்திய அரசு மாதந்தோறும் மாநிலங்களின் செயல்பாடுகளை தரவரிசைப்படுத்துகிறது. மாவட்ட அளவிலும் இத்திட்டச் செயல்பாடுகள் தரவரிசைப்படுத்தப்படுகின்றன.

## 1.2.10. பெருந்திட்டங்களின் பயன்களை மதிப்பீடு செய்தல்:

அரசுத் திட்டங்களின் பயன்கள் உரிய மக்களைச் சென்றடைவதை உறுதிப்படுத்துவதற்காக மதிப்பீடு செய்தல் இத்துறையின் முக்கியப் பணியாகும். திட்டங்களைச் செயல்படுத்தும்போதும், திட்டங்கள் முடிவுற்ற பின்னரும் மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை மதிப்பீடுகளைச் செய்துவருகின்றது. அம்மதிப்பீட்டாய்வுகளின் முடிவுகள் பகுத்தாய்வு செய்யப்பட்டு தேவையான திருத்தங்கள் மற்றும் கொள்கையளவில் மாற்றங்கள் ஏதேனும் இருப்பின், அரசுக்குத் தெரிவிக்கப்படுகிறது. திட்டங்களைச் செயல்படுத்தும்போதே கண்காணிக்கும் முறையையும், அரசின் சேவைகள் உரிய மக்களுக்குச் சென்றடைவதைக் கண்காணிக்கும் முறையையும் 2006-2007 முதல் துவக்கப்பட்டுள்ளது.

**1.2.11. உலக வர்த்தக நிறுவனப் (WTO) பிரிவு:**

உலக வர்த்தக அமைப்பு தொடர்பான கொள்கை அளவிலான முடிவுகளைப் பெரும்பாலும் மத்திய அரசே கவனித்து வருகிறது. உலக வர்த்தக அமைப்பு தொடர்பான நடவடிக்கைகள் காரணமாக, மாநில பொருளாதார மேம்பாட்டிற்கு ஏற்படும் பாதிப்புகளின்மீது மாநில அரசு அளவில் கொள்கை வகுப்பதற்கு உதவிபுரியும் நோக்குடன், திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையில் இதற்கென உலக வர்த்தக நிறுவனப் பிரிவொன்று ஏற்படுத்தப்பட்டுள்ளது.

**1.3. துறைத் தலைமையிடங்கள்:**

திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின்கீழ் உள்ள துறைகள் பின்வருமாறு:

(i) மாநிலத் திட்டக் குழு

(ii) பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

(iii) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

மேற்கண்ட துறைகளின் பணிகள் பின்வரும் பக்கங்களில் சுருக்கமாகக் குறிப்பிடப்பட்டுள்ளன:



## மாநிலத் திட்டக்குழு

**2.1.** தமிழ்நாட்டில், மாநிலத் திட்டக் குழு 1971 ஆம் ஆண்டு, மே திங்கள், 25 ஆம் நாள் அமைக்கப்பட்டது. மாநிலத் திட்டக் குழு, முதலமைச்சர் அவர்களின் தலைமையின்கீழ் இயங்குகிறது. ஒரு ஆலோசனை அமைப்பாகச் செயல்படும் மாநிலத் திட்டக் குழு, மாநிலத்தின் வளர்ச்சி குறித்த பல்வேறு செயல்பாடுகளில் தனது பரிந்துரைகளை அரசுக்கு அளிக்கிறது. பேராசிரியர் மு.நாகநாதன் அவர்களைத் துணைத் தலைவராகவும், ஆறு பகுதி நேர உறுப்பினர்களையும், ஒரு முழு நேர உறுப்பினரையும் கொண்டு 19-05-2006 அன்று மாநிலத் திட்டக் குழு திருத்தியமைக்கப்பட்டது. அரசுச் செயலர் (நிதித் துறை) மற்றும் அரசுச் செயலர் (திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் துறை) ஆகியோர் பதவி வழி உறுப்பினர்கள் ஆவர். உறுப்பினர்-செயலர், மாநிலத் திட்டக் குழு, திட்டக் குழுவின் நிர்வாகப் பொறுப்பை ஏற்றுள்ளார்.

**2.2. திட்டக்குழுவின் முக்கிய பொறுப்புகளாவன:**

(i) பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய திட்டங்கள், பொருள்கள் மற்றும் அத்திட்டத்தில் சேர்க்கப்பட வேண்டிய புதிய திட்டங்கள் குறித்து ஆலோசனை வழங்குதல்.

(ii) வரைவு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் மற்றும் ஆண்டுத் திட்டம் தயாரித்து, அதனை மத்திய திட்டக் குழுவிற்கு அனுப்புவதற்கு ஏதுவாக அரசின் ஒப்புதலுக்கு அனுப்புதல்.

(iii) பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தில் சேர்க்கப்படவுள்ள திட்டங்களை, ஐந்தாண்டுத் திட்டத்தில் குறிப்பிடப்படவுள்ள இலக்குகள் மற்றும் குறிக்கோள்களை எய்துவது குறித்து காலமுறை அடிப்படையில் ஆய்வு செய்தல்.

(iv) பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தின் இடைக்கால ஆய்வு மேற்கொள்வதுடன், அவ்வாய்வின் அடிப்படையில் செய்யவேண்டிய மாற்றங்கள் மற்றும் திட்டங்களைத் திருத்தியமைத்தல் குறித்து அரசிற்குத் தெரிவித்தல்.

[2007 மே 9

(v) மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உதவியுடன், பெரிய திட்டங்களை மதிப்பீடு செய்தல், ஒவ்வொரு மதிப்பீட்டின் அடிப்படையில் திட்டங்களைத் திருத்தியமைத்தல் மற்றும் செம்மைப்படுத்துதல் குறித்து அரசுக்குப் பரிந்துரை செய்தல்.

(vi) பரவலாக்கப்பட்ட மாவட்டத் திட்டப் பணிகளை ஏற்கெனவே உள்ள அரசாணைகள் மற்றும் வழிமுறைகளின்படி திறம்பட செயல்படுத்துவது குறித்து அரசிற்கு ஆலோசனை வழங்குதல்.

## 2.3. 2007–2008 ஆம் ஆண்டுத் திட்டத்தையும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்தையும் தயாரித்தல்

மாநிலத்தின் ஆண்டுத் திட்டங்கள் பெரும்பாலும் தேசியத் திட்டத்தையும், மாநிலத்தின் ஐந்தாண்டுத் திட்டங்களையுமே பின்பற்றுகின்றன. 2007-2008 ஆம் ஆண்டுத் திட்ட வரைவு அறிக்கை, ரூ.13,500 கோடி அளவிற்கும், பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கு (2007-2012) ரூ.80,000 கோடி அளவிற்கும் தயாரிக்கப்பட்டு மத்திய திட்டக்குழுவிற்கு அனுப்பப்பட்டது. 5.2.2007 அன்று புதுடெல்லியில் முதலமைச்சருக்கும், மத்திய திட்டக்குழு துணைத் தலைவருக்கும் இடையே நடந்த கலந்துரையாடலில் 2007-2008 ஆம் ஆண்டு திட்டத்திற்கு ரூ.14,000 கோடி ஒதுக்கீடு செய்வது என முடிவுசெய்யப்பட்டது. நடப்பு விலையில் 2006-2007 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டைவிட இது 12 சதவிகிதம் கூடுதலாகும்.

## 2.4. பதினோராவது ஐந்தாண்டுத் திட்டம் உருவாக்குதல்

பதினோராவது ஐந்தாண்டுத் திட்ட (2007-2012) உருவாக்கம் தற்போது நடந்தேறி வருகிறது. இதன் ஒரு பகுதியாக, தமிழ்நாடு மாநிலத் திட்டக் குழு பதினோராவது ஐந்தாண்டுத் திட்டத்திற்கான அணுகுமுறை அறிக்கையைத் தயாரித்துள்ளது. இதில் பதினோராவது திட்டத்தின் பரந்த நோக்கும், செயல் திட்டங்களும் குறிப்பிடப்பட்டுள்ளன. இந்த அணுகுமுறை அறிக்கை 21-11-2006 அன்று முதலமைச்சர் தலைமையில் நடைபெற்ற திட்டக் குழுக் கூட்டத்தில் ஏற்கப்பட்டது. இந்த அறிக்கை மாநிலத் திட்டக்குழுவின் இணைய தளத்தில், அனைவரும் பரவலாக அறியும் வகையிலும், பொது மக்களிடமிருந்து கருத்துக்களையும், ஆலோசனைகளையும்



2007 மே 9]

பெறுவதற்காகவும் வெளியிடப்பட்டது. திருச்சி, கோயம்புத்தூர், மதுரை, திருநெல்வேலி, திருவண்ணாமலை, விழுப்புரம், சென்னை போன்ற நகரங்களில் பதினோராவது திட்டம் குறித்து பொது மக்கள், மக்கள் பிரதிநிதிகள் கருத்துக்களை நேரில் அறியும்வண்ணம் மண்டல அளவிலான கூட்டங்கள் நடத்தப்பட்டன.

பொருளாதாரத்தின் பல்வேறு துறைகள் குறித்து, துறைவாரியான திட்டங்கள் உருவாக்க, மாநிலத் திட்டக்குழு 14 வழிகாட்டுதல் குழுக்களையும், 38 பணிக் குழுக்களையும் அமைத்துள்ளது. பல்வேறு கூறுகள் குறித்து வழிகாட்டுதல் குழுக்கள் / பணிக் குழுக்கள் ஆலோசனைகள் நடத்தி வருகின்றன. பதினோராவது திட்டத்தின் உருவாக்கத்தில் பணிக் குழுக்களின் அறிக்கைகள் பயன்படுத்தப்படும்.

## 2.5. பரவலாக்கப்பட்ட மாவட்ட அளவிலான திட்டமிடுதல்

மாநிலத்தின் எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத் திட்டக் குழுக்கள் அமைக்கப்பட்டுள்ளன. அதுபோன்றே, எல்லா மாவட்டங்களிலும், மாவட்டத் திட்டப் பிரிவுகள் உருவாக்கப்பட்டு, அவை மாவட்டத் திட்டங்களை உருவாக்குவதில், மாவட்டத் திட்டக் குழுக்களுக்கு உதவி புரிகின்றன. இந்தப் பிரிவுகள் அண்மையில் ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித் துறையின் நிர்வாகக் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டு வரப்பட்டுள்ளன. மாவட்டத் திட்டக் குழுக்கள் வளர்ச்சித் திட்டங்களை உருவாக்குவதற்குத் தேவையான, விரிவான வழிகாட்டுதல்களை மாநிலத் திட்டக் குழு தயாரித்துள்ளது.

## 2.6. தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு வாரியம்

மாநில நிலப் பயன்பாட்டு வாரியம், மாநிலத் திட்டக் குழுத் துணைத் தலைவரின் தலைமையில் இயங்கி வருகிறது. நிலம், நீர் பயன்பாடு தொடர்பான துறைகளின் தலைவர்கள் மற்றும் அரசுச் செயலர்கள் இதன் உறுப்பினர்களாக உள்ளனர். மாநிலத் திட்டக் குழுவின் உறுப்பினர்—செயலர் கூட்டுக் குழுத் தலைவராக (Co-Chairperson) உள்ளார்.

மாநில நிலப் பயன்பாட்டு வாரியத்தின் செயல்பாடுகள் பின் வருமாறு:

(i) மாநிலத்தின் மிக அரிதான செல்வங்களாகிய செழுமையான வேளாண் நிலங்களை, காற்று, கடல், நீர் தேங்குதல், உவர் தன்மை ஆகியவற்றால் ஏற்படும் அரிப்பிலிருந்து தடுத்துக்

காத்தல், மற்றும் நகர்மயம், தொழில்மயம் போன்றவற்றால்
ஏற்படும் பாதிப்புகளிலிருந்தும் காப்பதற்குத் தேவையான
உறுதியான நடவடிக்கைகளை இவ்வாரியம் முன்மொழியும்.

(ii) வளர்ச்சித் திட்டங்களை மேற்கொள்வதற்காக, மாநிலத்தில்
உள்ள மண் வளங்கள், அவை அமைந்துள்ள இடங்கள் குறித்து
துல்லியமான தகவல்கள் அளிப்பதற்கு விரிவான ஆய்வுகள்
மேற்கொள்ளுதல்.

(iii) நடுத்தர, பெரிய பாசனத் திட்டங்களிலும், ஆற்றுப்
படுகைகளிலும், வண்டல் படிவினைத் தடுப்பதற்காக
தேவையான நடவடிக்கைகள் எடுத்தல்.

நிலம், நீர் ஆதாரங்களை அறிவியல் முறையில் பாதுகாத்து
மேலாண்மை செய்வதற்கான தொடர் ஆராய்ச்சிகள், தமிழ்நாடு
நிலப்பயன்பாட்டு வாரியத்தினால் மேற்கொள்ளப்படுகிறது.
புதுக்கோட்டை மாவட்டத்தில் இயற்கை வள புள்ளி விவர
மேலாண்மை அமைப்பு (NRDMS) உருவாக்கப்பட்டு செயல்பட
வைக்கப்பட்டுள்ளது மற்றும் வேலூர் மாவட்டத்தில் இவ்வமைப்பு
முடியும் தருவாயில் உள்ளது. தேனி, கடலூர் மற்றும் நாகப்பட்டினம்
மாவட்டங்களில் உருவாக்கப்பட்டுள்ள NRDMS செயல் திட்டங்களின்
பணி தொடங்கப்பட்டு வளர்ச்சி பெற்று வருகின்றன. மாநில
அளவில் தமிழ்நாடு புவியியல் தகவல் அமைப்புத் (TNGIS)
திட்டமொன்றினை வரைவதற்கான ஒருங்கிணைந்த செயல்
திட்டத்தினை உருவாக்குவதிலும் தமிழ்நாடு மாநில நிலப் பயன்பாட்டு
வாரியம் ஈடுபட்டுள்ளது.

*2007-2008* ஆம் ஆண்டிற்கு, நிலப்பயன்பாட்டு வாரியத்திற்காக
*ரூ.75.00* இலட்சம் ஒதுக்கீடு செய்யலாம் என உத்தேசிக்கப்பட்டுள்ளது.
இதில், மத்திய அரசின் உதவியாக *ரூ.67.50* இலட்சமும், இதற்கு
இணையாக மாநில அரசின் பங்காக *ரூ.7.50* இலட்சமும் இருக்கும்
என எதிர்பார்க்கப்படுகிறது.

## 2.7. மனித மேம்பாடு

ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டம் (United Nations Development
Programme) மற்றும் மத்திய திட்டக் குழுவும் இணைந்து நிதியுதவி
அளிக்கும் "மனித மேம்பாட்டுக்காக மாநிலத் திட்டங்களைப்
பலப்படுத்துதல்" என்னும் திட்டத்தின்கீழ் மாநிலத் திட்டக் குழுவில்



மனித மேம்பாட்டு ஆராய்ச்சி மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவு
(Human Development Research and Co-ordination Unit) அமைக்கப்பட்டது.
இந்தத் திட்டத்தின்கீழ் திண்டுக்கல், சிவகங்கை, திருவண்ணாமலை,
கடலூர், நாகப்பட்டினம் மாவட்டங்களுக்கான மாவட்ட-மனித
மேம்பாட்டு அறிக்கைகள் தயாரிக்கப்பட்டு வருகின்றன. மூன்று
மாவட்டங்களுக்கான வரைவு அறிக்கைகள் பெறப்பட்டு தற்போது
ஆய்வில் உள்ளன. வழிகாட்டுதல் குழுவினால் ஒப்புதல்
அளிக்கப்பட்ட பின்னர் இறுதி அறிக்கைகள் வெளியிடப்படும்.

மனித மேம்பாட்டு தொடர்புடைய தலைப்புகளில், மாநில அரசின்
அலுவலர்களுக்கு புனே நகரத்திலுள்ள ரிசர்வ் வங்கியின் வேளாண்
வங்கியியல் கல்லூரியிலும், மும்பையிலுள்ள மக்கள் தொகை
அறிவியல்களுக்கான பன்னாட்டு நிறுவனத்திலும் (International
Institute of Population Science) பயிற்சி அளிக்கப்படுகிறது.

செயல்திட்டத்தின் ஒரு பகுதியாக, மனித மேம்பாட்டு ஆராய்ச்சி
மற்றும் ஒருங்கிணைப்புப் பிரிவானது மனித மேம்பாட்டுக்
கருத்துருக்களை எடுத்துரைத்தும், பயிற்சி அளித்தும் வருகிறது. மேலும்
இப்பிரிவு மனித மேம்பாட்டுக்காக மாநிலத் திட்டங்களை
உருவாக்கவும், மாநில புள்ளியியல் அமைப்புகளைப் பலப்படுத்தவும்
ஒரு திட்டம் வரைந்துள்ளது. இத்திட்டம் மத்திய திட்டக்குழுவின்
வழியாக ஐக்கிய நாடுகள் வளர்ச்சித் திட்டத்தின் (UNDP) ஒப்புதலை
எதிர்நோக்கி உள்ளது. மாநிலத்திற்கான இரண்டாவது மாநில மனித
மேம்பாட்டு அறிக்கையையும், மேலும் நான்கு மாவட்டங்களுக்கான
மனித மேம்பாட்டு அறிக்கைகளையும் உருவாக்குவதற்கு மாநிலத்
திட்டக் குழு திட்டமிட்டு வருகிறது.

## 2.8. 2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டங்கள்

மாநிலத் திட்டக்குழுவில், உள்கட்டமைப்பு வசதிகளை
வலுப்படுத்தவும், அலுவலர்களுக்கு பயிற்சி அளிக்கவும், ஆய்வுகள்
மற்றும் பணியரங்குகள் நடத்தவும் ரூ.33.22 இலட்சம்
முன்மொழியப்பட்டுள்ளது.

[2007 மே 9

## பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை

3.1 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறை, மாநிலத்தின் தலைமை புள்ளியியல் முகமையாகும். மாநிலம் முழுமையிலும் புள்ளி விவரங்களைச் சேகரிப்பதிலும், தொகுப்பதிலும், ஆராய்வதிலும், வேளாண்மை, தொழில் மற்றும் விலைவாசி மற்றும் இதர பிரிவுகளின் கீழ் அறிக்கைகள் வெளியிடுவதும் மற்றும் புள்ளிவிவரங்கள் குறித்த செயல்பாடுகளை ஒருங்கிணைக்கும் அமைப்பாகவும் செயல்படுவது இத்துறையின் முக்கியப் பணிகளாகும்.

3.2 பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையால் கீழ்க்கண்ட திட்டங்கள் செயலாக்கப்படுகின்றன:—

**(அ) மாநில அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**வேளாண்மை முறை மற்றும் விவரங்கள் சேகரித்தலை நவீனப்படுத்துதல்**

இத்திட்டத்தில், கணிப்பொறி முறைகளை மேம்படுத்துதல் மற்றும் பணியாளர்களுக்கான பயிற்சி அளித்தல் ஆகியவை அடங்கும்.

**(ஆ) மத்திய அரசினால் செயல்படுத்தப்படும் திட்டங்கள்**

**1. வேளாண்மைக் கணக்கெடுப்பு**

நுண்ணிய அளவிலான வேளாண் திட்டமிடுவதற்கென உரிய நிலப் பதிவேடுகளிலிருந்து கைப்பற்றின் அளவு, தன்மை மற்றும் கையிருப்பின் உரிமம் பற்றிய விவரங்கள் மறு அட்டவணைபடுத்தப்படுகின்றன.

**2. பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு நடத்துதல்**

பழங்கள், காய்கறிகள் மற்றும் சிறுபான்மைப் பயிர்களுக்கான ஒரு ஹெக்டேருக்கான விளைச்சல் விவரத்தை பயிர் அறுவடை பரிசோதனைகள்மூலம் கண்டறிந்து, அதன்மூலம் பயிர் உற்பத்தி மற்றும் விளைச்சல் விகிதம் மிக நுட்பமாகக் கணக்கிடுவது இந்த ஆய்வின் நோக்கமாகும்.



2007 மே 9]

**3. தேசிய தொழில்நுட்ப ஆள்திறன் தகவல் முறைக்கான ஒருங்கிணைப்பு மையம் ஏற்படுத்துதல்**

இத்திட்டத்தின்கீழ், ஒவ்வொரு வருடமும் தமிழ்நாட்டில் உள்ள அனைத்து தேர்ச்சி பெற்ற பொறியியல் பட்டதாரிகள் மற்றும் பட்டயதாரர்கள் ஆகியோரின் பல்வேறுபட்ட பொறியியல் மற்றும் தொழில்நுட்ப தனித்தன்மை குறித்து விவரங்கள் சேகரித்தல் மற்றும் அவர்களின் தேவை மற்றும் அளிப்பினை மதிப்பிடுதல் ஆகியவை மேற்கொள்ளப்படுகின்றன.

**4. பொருளாதாரக் கணக்கெடுப்பு**

வேளாண்மை (பயிர் உற்பத்தி மற்றும் மலைத்தோட்டப் பயிர்கள் தவிர) மற்றும் வேளாண்மை அல்லாத நிறுவனங்களின் விவரங்களைச் சேகரித்தல் பொருளாதாரக் கணக்கெடுப்பாகும்.

நூறு சதவிகித மத்திய அரசின் நிதி உதவியுடன், தமிழ்நாட்டில் ஐந்தாவது பொருளாதாரக் கணக்கெடுப்பு 2005-ல் மேற்கொள்ளப்பட்டது. இதற்காக, தமிழகத்திற்கு ரூ.588.76 இலட்சம் நிதி ஒதுக்கீடாக மத்திய அரசால் செய்யப்பட்டுள்ளது. மேற்படி தொகையில் ரூ.538.23 இலட்சம் 31-03-2006 வரை இக்கணக்கெடுப்பிற்காக செலவழிக்கப்பட்டுள்ளது. இக்கணக்கெடுப்பிற்கான படிவங்களை ஸ்கேன் செய்யும் பணி முடிவுற்று, 2006 பிப்ரவரி திங்கள் முதல், திருத்தி அமைத்தல் பணி நடைபெற்று வருகிறது. தவிர, ஸ்கேன் செய்யும் பணி இந்தியாவிலேயே தமிழ்நாட்டில்தான் முதல் முதலாக முடிக்கப்பட்டது. மேலும் விரைவு அட்டவணை அறிக்கை 12-06-2006 அன்று, புதுடில்லியில் மத்திய அரசின் புள்ளியியல் மற்றும் திட்டச் செயலாக்க அமைச்சகத்தால் வெளியிடப்பட்டது. அவ்வறிக்கையின்படி தமிழ்நாட்டில் 44,46,999 நிறுவனங்கள் (விவசாயம் மற்றும் விவசாயமல்லாத) உள்ளன என்று அறியப்பட்டது.

**(இ) மத்திய, மாநில அரசுகள் சரிசமமாகப் பங்கேற்கும் திட்டங்கள் (50 : 50)**

**1. பயிர்ப் பரப்பு உரிய காலத்தில் மதிப்பிடும் திட்டம்**

ஒவ்வோர் ஆண்டும், 20 சதவிகித கிராமங்களில், முன்னுரிமை அடிப்படையில் நில உபயோக புள்ளி விவரங்கள் கணக்கெடுத்தல் மற்றும் ஒவ்வொரு பருவத்திலும், பயிர் வாரியாக நீர்பாய்ச்சப்பட்ட

மற்றும் நீர் பாய்ச்சப்படாத பரப்பில் உயர் ரகம் மற்றும் உள்ளூர் ரகம் வாரியாக பரப்பு மதிப்பீடு செய்யப்படுகிறது.

**2. பயிர் மேம்பாட்டுத் திட்டம்**

மாநிலத்தில் கிராம அளவில் அடிப்படை களப் பணியாளர்களான கிராம நிர்வாக அலுவலர்களால் சேகரிக்கப்படும் வேளாண்மைப் புள்ளிவிவரங்களில் காணப்படும் குறைபாடுகளை முறையாக ஆய்வு செய்து, அவற்றை சரிசெய்ய நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும் முக்கிய உணவு மற்றும் உணவல்லாத பயிர்களுக்கான விளைச்சல் மதிப்பீடுகளைக் கணிக்க அறுவடை நிலையில் பயிர் அறுவடை பரிசோதனை மேற்பார்வையிடப்படுகிறது.

**3.3** திட்டப் பணிகளைத் தவிர இத்துறை பல்வேறு ஆய்வுகளையும், திட்டம் சாரா திட்டங்களின் மாநில வருவாய் மதிப்பீடு, மாநிலக்கணக்கு, மூலதன ஆக்கம், ஆண்டுத் தொழில் ஆய்வு, மாதாந்திர தொழில் உற்பத்திக் குறியீட்டெண், பருவமும் பயிரும் பற்றிய அறிக்கை, பயிர் முன் மதிப்பீட்டறிக்கை, உணவு மற்றும் உணவல்லாத பயிர்களின் பயிர் மதிப்பீட்டாய்வு, தேசிய வேளாண் காப்பீட்டுத் திட்டம், தென்னை மற்றும் கமுகு ஆய்வு, மழைப் புள்ளி விவரங்கள் சேகரித்தல், நீர்பாசனப் புள்ளிவிவரங்கள், விவசாயக்கூலி குறியீட்டெண், வீட்டு வசதி புள்ளிவிவரம், கட்டடக் கட்டுமானச் செலவுக் குறியீட்டெண், ஆண்டு நகராட்சி புள்ளியியல் கையேடு மற்றும் மாவட்ட புள்ளியியல் கையேடு, மாநில புள்ளியியல் கையேடு மற்றும் ஆண்டு புள்ளி விவரத் தொகுப்பு, கைத்தறித் திட்டம், ஆள்திறன் மற்றும் வேலைவாய்ப்புத் திட்டம், அங்காடிப் புலனாய்வு மற்றும் விலைவாசி, தொழிற்சாலை ஊழியர்களின் நுகர்வு விலைக் குறியீடு, மொத்த விலைக் குறியீட்டெண், சிறுபான்மைப் பயிர் மதிப்பீட்டாய்வு, சுற்றுச்சூழல் புள்ளிவிவரங்கள், விற்பனை மிகுதித் திட்டம் மற்றும் தேசிய மாதிரி ஆய்வுத் திட்டம் ஆகிய பணிகளையும் செய்துவருகின்றது.



**3.4 மாநிலப் புள்ளியியல் குழு**

மாநிலப் புள்ளியியல் குழுவானது, பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையில் புள்ளிவிவரங்கள் சேகரிக்கப்படும் முறைகள், அவற்றைப் பயன்படுத்தும் தன்மைகள் ஆகியவை குறித்து மேற்பார்வை செய்கிறது. மாநிலப் புள்ளியியல் குழு, அரசாணை (நிலை) எண் 156, திட்டம், வளர்ச்சி மற்றும் சிறப்பு முயற்சிகள் (பு.இ.-II) துறை, நாள் 15-11-2006-ல் மீள அமைக்கப்பட்டுள்ளது.

**3.5 2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்**

பொருளியல் மற்றும் புள்ளியியல் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திட ரூ.46.19 இலட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை

4.1 பேரளவிலான வளர்ச்சிப் பணிகள் மற்றும் திட்டங்களுக்கு அரசு நிதியளித்து நிறைவேற்றி வருகிறது. அவ்வாறான திட்டங்களின் தாக்கம் மற்றும் பயன்களை முன்மதியுடன் மதிப்பீடு செய்ய வேண்டியது மிகவும் இன்றியமையாததாகும். அதன்படி மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை, தொடங்கப்பட்ட 1972 ஆம் ஆண்டு முதற்கொண்டு மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளுதல்மூலம் கொள்கைகளை வகுப்பது மற்றும் திட்டங்களைச் சிறப்பாகச் செயல்படுத்துவதற்கு பொறுப்பேற்று அரசுக்கு உதவி வருகிறது.

**4.2 இத்துறையின் முக்கியப் பணிகளாவன:**

(i) மத்திய, மாநில அரசுத் திட்டங்கள் மற்றும் வெளிநாட்டு உதவி பெறும் திட்டங்களை மதிப்பீடு செய்தல்;

(ii) குறிப்பிட்ட பிரிவுகளில் திட்டங்களைச் சிறப்பு மதிப்பீடு செய்தல் மற்றும் சமூகப் பொருளாதார ஆய்வுகளை மேற்கொள்ளுதல்;

(iii) மாநில நிதி நிலவரம் மற்றும் தமிழ்நாடு பொருளாதாரம் பற்றிய சிறப்புப் பகுப்பாய்வுகள் மேற்கொள்ளல்; மற்றும்

(iv) வருடாந்திர வெளியீடுகளான 'தமிழ்நாடு - ஒரு பொருளாதார ஆய்வு' மற்றும் தமிழ்நாடு அரசின் நிதிநிலை அறிக்கையை அடிப்படையாகக் கொண்டு 'பொருளாதாரம் மற்றும் பணிவாரியான பகுப்பாய்வு' மேற்கொள்ளுதல்.

4.3 தமிழ்நாட்டில் மாநில, மத்திய அரசுகள் மற்றும் வெளிநாட்டு உதவியுடன் நடைபெற்று வரும் திட்டங்களான டானிடா திட்டம், சிடா திட்டம், ஐரோப்பிய பொருளாதாரக் கழகத் திட்டங்கள் மற்றும் பன்னாட்டு வளர்ச்சிக் கழகத் திட்டங்கள் ஆகியவை இத்துறையால் மதிப்பீடு செய்யப்பட்டு வருகின்றன. மேலும், மலைப்பகுதி மேம்பாட்டுத் திட்டம் மற்றும் மேற்கு மலைத்தொடர் மேம்பாட்டுத் திட்டம் ஆகிய திட்டங்களும் அவற்றின் வேறுபட்ட உட்கூறுகளும் தொடர்ச்சியாக மதிப்பீட்டாய்வு செய்யப்படுகின்றன. இவை தவிர, குறுகிய கால உடனடி மதிப்பீடுகளும் மற்றும் ஆராய்ச்சி அறிக்கைகளும் இத்துறையால் மேற்கொள்ளப்படுகின்றன.



4.4 இத்துறை தொடங்கப்பட்டதிலிருந்து, மார்ச்–2007 வரை, பல்வேறு துறைகளைச் சார்ந்த 572 மதிப்பீட்டாய்வுகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

4.5 எந்தெந்தத் திட்டங்களை மதிப்பீடு செய்ய எடுத்துக்கொள்ளலாம் என்றும், மதிப்பீடு செய்யப்பட்ட அறிக்கைகளின் மீது மேற்கொள்ளப்பட வேண்டிய மேல்நடவடிக்கைகள் குறித்தும் விவாதித்து முடிவெடுக்கவும் மாநில மதிப்பீட்டுக் குழு ஏற்படுத்தப்பட்டுள்ளது. திருத்தியமைக்கப்பட்ட இக்குழு, வளர்ச்சி ஆணையர் மற்றும் நிதித் துறைச் செயலாளரைத் தலைவராகக் கொண்டும், மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறை இயக்குநரை உறுப்பினர்—செயலராகக் கொண்டும் இயங்கி வருகிறது.

**4.6. 2007–2008 ஆம் ஆண்டுக்கான புதிய திட்டம்**

மதிப்பீடு மற்றும் செயல்முறை ஆராய்ச்சித் துறையின் உள்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்திடவும் மற்றும் அலுவலர்களின் பணித் திறனை உயர்த்திடவும் ரூ.9.64 இலட்சம் செலவிடத் திட்டமிடப்பட்டுள்ளது.

## இணைப்பு–III

[2007 மே 9

(256 ஆம் பக்கத்திலுள்ள அடிக்குறிப்பைக் காண்க)

## மானியக் கோரிக்கை எண் 50––ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக் கால நன்மைகளும்

## கொள்கை விளக்க குறிப்பு, 2007–2008

(பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள் தலைப்பின்கீழ் வரும் இனம் 255-ன்படி கொள்கை விளக்கக் குறிப்புடன் தரப்பட்ட திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.)

1. இம்மானியக் கோரிக்கையில் பின்வரும் பெருந்தலைப்புகள் அடங்கியுள்ளன:—

| | | |
|---|---|---|
| 2071. | ஓய்வூதியங்களும் ஏனைய ஓய்வுக்கால நன்மைகளும் | (ரூபாய்) 61,72,98,03,000 |
| 2235. | சமூகப் பாதுகாப்பும் நலனும் — 60.ஏனைய சமூகப் பாதுகாப்பு, மற்றும் நலத் திட்டங்கள் | 12,09,10,000 |
| | மொத்தம் | 61,85,07,13,000 |

2. இந்த மானியக் கோரிக்கையின்கீழ் இடம் பெறும் முக்கியமான செலவினம், அரசுப் பணியாளர்கள் மற்றும் அரசு மானிய உதவி பெறுகின்ற கல்வி நிறுவனங்களில் பணிபுரியும் ஆசிரியர்கள் மற்றும் பிற பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் ஓய்வூதியப் பயன்கள் அளிப்பது தொடர்பானதாகும். இந்த மானியக் கோரிக்கையில், விடுதலைப் போராட்ட வீரர்கள் மற்றும் முன்னாள் இந்திய தேசிய இராணுவப் படை பணியாளர்களுக்கு ஓய்வூதியம் மற்றும் பிற பயன்கள் அளிப்பதும் அடங்கும். இந்த மாநிலத்தில், 31-12-2006 ஆம் நாள் நிலவரப்படி, சுமார் 521,696 பேர் ஓய்வூதியம் மற்றும் குடும்ப ஓய்வூதியம் பெறுகின்றனர். இம்மாநிலத்தில் உள்ள ஓய்வூதியம் மற்றும், குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் குறித்த விவரம் வருமாறு:



2007 மே 9]

| | | |
|---|---|---|
| 1. | மாநில அரசு ஓய்வூதியம் பெறுபவர்கள் | 2,73,192 |
| 2. | ஓய்வூதியம் பெறும் ஆசிரியர்கள் | 63,759 |
| 3. | அரசுப் பணியாளர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 1,27,722 |
| 4. | ஆசிரியர் குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் | 28,446 |
| 5. | ஓய்வூதியம் பெறும் ஏனைய வகையினர் | 28,577 |
| | மொத்தம் | 5,21,696 |

### 3. ஓய்வூதியம்:

(i) ஓய்வூதியம் பெற தகுதி பெறுவதற்கு குறைந்தபட்ச தகுதி பணிக்காலம் 10 ஆண்டுகளாகும். முழு ஓய்வூதியம் பெற அதிகப்படியான பணிக்காலம் 33 ஆண்டுகளாக இருந்ததை 30 ஆண்டுகளாக 1-4-2003 முதல் குறைத்து அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், அரசுப் பணியாளர்கள் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 சதவீதம் அல்லது கடைசி 10 மாத பணிக்கால அளவில் பெற்ற சராசரி ஊதியத்தில் 50 சதவீதம் இதில் எது அதிகமோ அதன் அடிப்படையில் ஓய்வூதியம் 1-4-2003 முதல் கணக்கிடப்படுகிறது.

(ii) அரசு 1-1-2006 முதல் 50 சதவீதம் அகவிலைப்படியை அகவிலை ஓய்வூதியம் / அகவிலை குடும்ப ஓய்வூதியமாக அனுமதித்து ஆணையிட்டுள்ளது.

(iii) குறைந்த அளவு ஓய்வூதியத்தொகை மாதம் ஒன்றுக்கு ரூபாய் 1,275.

### 4. பணிக்கொடை:

### (i) ஆற்றிய பணிக்கான பணிக்கொடை:

பத்து ஆண்டுகளுக்குக் குறைவாக தகுதிப் பணிபுரிந்தவர்களுக்கு, அவர்கள் ஆற்றிய பணிக்கான பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது. முடிவுற்ற ஒவ்வொரு ஆறுமாத காலப் பணிக்கும் 1/2 மாத ஊதியம் என்ற ஒரே சீரான வீதத்தில் இப்பணிக்கொடை கணக்கிடப்படுகிறது. இது, ஆற்றிய பணிக்காக அனுமதிக்கத்தக்க ஓய்வுகாலப் பணிக்கொடையுடன் சேர்த்து ஒரே நேரத்தில் வழங்கப்படுகிற ஒட்டு மொத்தத் தொகையாகும்.

**(ii) இறப்புப் பணிக்கொடை :** [2007 மே 9

அரசுப் பணியாளர் ஒருவர் பணியில் இருக்கும்போதே
மரணமடையும் நேர்வில், பின்வரும் வீதங்களில் இறப்பு
பணிக்கொடை அனுமதிக்கப்படுகிறது:—

| பணிக்காலம் | பணிக்கொடையின் வீதம் |
|---|---|
| 1. ஓராண்டுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் இரு மடங்கு |
| 2. ஓராண்டு அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் ஐந்தாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் ஆறு மடங்கு |
| 3. ஐந்தாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக, ஆனால் இருபதாண்டுகளுக்குக் குறைவாக | மாத ஊதியத்தில் பன்னிரண்டு மடங்கு |
| 4. இருபதாண்டுகள் அல்லது அதற்கு அதிகமாக | அதிகபட்சம் மாத ஊதியத்தில் 33 மடங்கு என்பதற்கு உட்பட்டு, முடிவுற்ற ஒவ்வோர் ஆறு மாதத் தகுதிப் பணிக்கும் அரைமாதச் சம்பளம். ஆனால், அவ்வாறு வழங்குகிற இறப்புப் பணிக் கொடை எந்த இனத்திலும் ரூ.3.50 இலட்சத்திற்கு மேற்படக் கூடாது. |

**(iii) ஓய்வுகாலப் பணிக்கொடை:**

ஒருவர், ஐந்தாண்டும் அதற்கு மேலும் தகுதிப் பணியை
முடித்திருந்தால், அவர் ஓய்வு பெறும்போது உயரளவாக மாத
ஊதியத்தில் 16½ மடங்கு என்ற அளவிற்கு உட்பட்டு, அவர்
பணியாற்றி முடித்துள்ள ஒவ்வொரு ஆறு மாத தகுதிப் பணிக்கும்
மாத ஊதியத்தில் நான்கில் ஒரு பங்கு ஓய்வுகாலப் பணிக்கொடையாக
வழங்கப்படுகிறது. ஓய்வுகாலப் பணிக்கொடையின் உச்சவரம்பை
1-1-1996-லிருந்து ரூபாய் 2.50 இலட்சத்திலிருந்து ரூபாய் 3.50 இலட்சமாக
உயர்த்தி அரசு ஆணையிட்டுள்ளது. மேலும், 1-4-1998 அன்று அல்லது



2007 மே 9]

அதற்குப்பிறகு ஓய்வு பெறும் பணியாளர்களுக்கு அவர்கள்
கடைசியாகப் பெற்ற அடிப்படைச் சம்பளம் மற்றும்
அகவிலைப்படியின் அடிப்படையில், பணிக்கொடை கணக்கிடப்பட
வேண்டும் என்றும் அரசு ஆணையிட்டுள்ளது. 1-1-2006 முதல்
வழங்கப்படும் அகவிலை ஊதியமும் இத்துடன் சேர்க்கப்படுகிறது,

**5. குடும்ப ஓய்வூதியம்:**

அரசுப் பணியாளர் ஒருவர், பணியாற்றும்போது அல்லது ஓய்வு
பெற்ற பின்னர் இறந்து விட்டால், அவரது குடும்பம், குடும்ப
ஓய்வூதியம் பெறத் தகுதியுடையதாகும். ஒருவர் பணியிலிருக்கும்போது
இறந்து விட்டால், அவருடைய குடும்பம், குடும்ப ஓய்வூதியம்
பெறுவதற்குத் தகுதி பெற, அவர் தம்முடைய பணிக்காலத்தில்
ஓய்வூதியம் பெறத்தகுதியுடைய பதவியில் தொடர்ந்து ஓராண்டுகாலம்
பணியாற்றியிருக்க வேண்டும். அரசுப் பணியாளர் பணியில்
இருக்கும்போது இறக்கும் நேர்வுகளில், குடும்ப ஓய்வூதியம், அவர்
கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 50 விழுக்காடு, அவர் இறந்த
பின்னர் 7 ஆண்டுகள்வரை வழங்கப்படுகிறது. அதன் பின்னர் குடும்ப
ஓய்வூதியம் அவர் கடைசியாகப் பெற்ற ஊதியத்தில் 30 விழுக்காடாக
அளிக்கப்படும். மேலும், அரசுப் பணியாளர் ஒருவர் தொடர்ந்து
ஓராண்டு காலம் பணியாற்றுவதற்கு முன்பே பணியிலிருக்கும்போது
இறந்து விடுவாரேயானால், அவருடைய குடும்பத்திற்கும் குடும்ப
ஓய்வூதியம் அனுமதிக்கப்படுகிறது. ஆனால், அந்தப் பணி அல்லது
பதவியில் நியமனம் செய்யப்படுவதற்கு முன் அவரை மருத்துவ
அதிகாரி மருத்துவப் பரிசோதனை செய்து அரசுப் பணிக்கு அவர்
தகுதியானவர் என்று அறிவித்திருக்க வேண்டும்.

ஓய்வு பெற்ற பின்னர் இறந்துவிட்டால், அவருடைய குடும்பம்,
குடும்ப ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதிபெற, அவர் இறக்கும்போது
ஓய்வூதியம் பெறுபவராக இருந்திருக்க வேண்டும். இருப்பினும்,
ஓய்வுபெற்ற பிறகு இறந்து விடும் நேர்வுகளில் 10 ஆண்டிற்குக்
குறைவாகப் பணியாற்றி இருப்பவர்களின் குடும்பங்களுக்கும்
குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. மற்றபடி
ஓய்வூதியத்திற்கு தகுதியுடையவர் அல்லர்.

விதவைக்கு / மனைவியை இழந்த கணவனுக்கு, அவர், மறுமணம்
செய்துகொள்ளும் வரையில் அல்லது இறக்கும் வரையில் இதில் எது
முந்தியதோ அதுவரையில் அவருக்கு குடும்ப ஓய்வூதியம்

வழங்கப்படுகிறது. அவருடைய இறப்பிற்குப் பிறகு, அவருடைய குழந்தைகளுக்கு 25 வயது ஆகும் வரையிலோ அல்லது அவருடைய திருமணம் செய்துகொள்ளும்வரையிலோ இதில் எது முந்தியதோ அதுவரை குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படுகிறது. எனினும், அத்தகைய மகன் அல்லது திருமணமாகாத மகள் 25 வயதை அடைந்த பிறகும்கூட, பொருள் ஈட்ட அல்லது வாழ்க்கை நடத்த இயலாத அளவுக்கு மனநலம் குன்றியவராக அல்லது மனநலமற்றவராக இருந்தாலோ, உடல் ஊனமுற்றவராக அல்லது ஏலாமையுற்றவராக இருந்தாலோ அவருக்கு, வாழ்நாள் முழுவதும் குடும்ப ஓய்வூதியம் அளிக்கப்படும்.

குறைந்தளவு குடும்ப ஓய்வூதியம் மாதமொன்றுக்கு ரூபாய் 1,275 ஆகும்.

## 6. கருணைத் தொகை வழங்குதல்:

வருங்கால வைப்பு நிதிக்கு பங்குத் தொகை செலுத்தி, இறந்துவிட்ட பணியாளர்/மாநில அரசின் ஓய்வூதியமில்லாத பணியாளர் அமைப்பைச் சேர்ந்தவர்களின் குடும்பங்களுக்கும், 1-1-1986-க்கு முன் பணியிலிருந்து ஓய்வுபெற்ற/பணியிலிருக்கும்போது இறந்துவிட்ட முன்னாள் மாவட்ட வாரியப் பணியாளர்களுக்கும், குடும்ப ஓய்வூதியம் பெற தகுதியில்லாத நபர்களுக்கும் 1-11-1997 முதல் ரூ.31 அகவிலைப்படியுடன் மாதமொன்றுக்கு வழங்கப்படும் கருணைத் தொகையை ரூபாய் 150/-லிருந்து ரூபாய் 605 ஆக உயர்த்தி அரசு ஆணைகள் பிறப்பித்துள்ளது. இவர்கள், 1-1-1998 முதற்கொண்டு வழங்கப்படும் அகவிலைப்படி உயர்வையும் பெறத் தகுதியுடையவர்கள்.

## 7. ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாக அளித்தல்:

ஓய்வூதியம் பெறுவோர், தமது ஓய்வூதியத் தொகையில் 33 1/3 விழுக்காடு வரையிலான ஓய்வூதியத் தொகையின் ஒரு பகுதியை ஒட்டு மொத்தமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஓய்வூதியம் வழங்குவதற்கான ஆணை பிறப்பிக்கப்பட்ட நாளிலிருந்து ஓராண்டுக்குள் அவர்கள், விண்ணப்பித்திருந்தால், மருத்துவப் பரிசோதனை இல்லாமல், ஓய்வூதியத் தொகையில் ஒரு பகுதியை மொத்தமாகப் பெற மாநிலக் கணக்குத் துறைத் தலைவரால் அனுமதி வழங்கப்படுகிறது. இச்சலுகை, விருப்பத்தின்பேரில் பணியிலிருந்து ஓய்வு பெறுபவர்களுக்கும் நீட்டிக்கப்பட்டுள்ளது. ஓய்வு பெற்ற நாளும், ஓய்வூதியத்தின் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றுக் கொண்ட



நாளும் ஒரே நாளாக இருக்குமாயின் அவ்வாறு ஓய்வு பெற்றவர் அவர் ஓய்வு பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு அல்லது ஓய்வு பெற்ற பிறகு இரண்டாவது மாதத்திலோ அல்லது அதன் பின்னரோ ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்றிருந்தால் அவ்வாறு ஓய்வூதியத்தில் ஒரு பகுதியை மொத்தமாக்கிப் பெற்ற நாளிலிருந்து 15 ஆண்டுகளுக்குப் பிறகு ஓய்வூதியத்தில் குறைக்கப்பட்ட பகுதியை மீண்டும் சேர்த்தளித்து முழுமையாக ஓய்வூதியம் பெற்றிட அரசு அனுமதியளித்துள்ளது.

## 8. ஏனைய ஓய்வுக்காலப் பயன்கள்:

(i) ஓய்வு பெறும்போது கணக்கிலுள்ள ஈட்டிய விடுப்பில், உயரளவு 240 நாட்களுக்கான ஈட்டிய விடுப்பை, ஒப்படைப்பு செய்து விடுப்புச் சம்பளம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(ii) ஓய்வு பெறும்போது, பணியாளர் கணக்கில் உள்ள சொந்த அலுவலுக்கான விடுப்பில் அதிகபட்சமாக 180 நாட்களை 90 நாட்களாக மாற்றி முழுச் சம்பளத்திற்கு ஒப்படை செய்து ரொக்கம் பெற அனுமதிக்கப்படுகிறது.

(iii) ஈட்டிய விடுப்பின் முழு அளவினையும் சொந்த அலுவல்கள் குறித்த அரை சம்பள விடுப்பினையும் காசாகப் பெற அடிப்படைச் சம்பளத்துடன் அகவிலை ஊதியமும், அகவிலைப்படியும், வீட்டு வாடகைப்படியும் நகர ஈட்டுப்படியும் சேர்த்துக் கணக்கிட்டு வழங்கப்படுகிறது.

(iv) ஓய்வு பெறும் பணியாளர் ஓய்வு பெற்ற பின்னர் தன்னுடைய சொந்த ஊருக்கு அல்லது தான் சென்று வசிக்க விரும்பும் ஊருக்குச் செல்வதற்கான பயணப்படி வழங்கப்படுகிறது.

## 9. ஓய்வூதியம் பெறுவோருக்கான ஏனைய பயன்கள்:

### (அ) அகவிலைப்படி

(i) ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்களுக்கு, அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போலவே அகவிலைப்படி வழங்கப்படுகிறது.

(ii) மாநில அரசின் ஓய்வூதியம் பெறும் இராணுவ ஓய்வூதியதாரர்கள், மத்திய அரசின் ஓய்வூதியத் தொகைக்கான அகவிலைப்படியுடன், மாநில அரசின் ஓய்வூதியத்திற்கான அகவிலைப் படியையும் சேர்த்துப் பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**(ஆ) மருத்துவப்படி**

ஓய்வூதியம் பெறுவோருக்கு / குடும்ப ஓய்வூதியம் பெறுவோருக்கு திங்களொன்றுக்கு ரூ.50/- மருத்துவப்படி வழங்கப்படுகிறது.

தற்காலிக ஓய்வூதியம் பெறுபவர்கள்/குடும்ப ஓய்வூதியம் பெறுபவர்கள் அகவிலைப்படி மற்றும் மருத்துவப்படி பெற அனுமதிக்கப்படுகின்றனர்.

**10. ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதி என்ற ஒரு நிதியை ஏற்படுத்தி, ஓய்வூதியம் பெறுவோருக்கு சிறப்பு மருத்துவச் சிகிச்சை / அறுவைச் சிகிச்சை மேற்கொள்வதற்காக அந்நிதியிலிருந்து நிதியுதவி அளிக்கும்பொருட்டு, 1-7-1995 முதல் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் நல நிதித் திட்டம் செயற்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்திற்கு ஓய்வூதியர்களிடமிருந்து மாதமொன்றுக்கு ரூ.10/- பிடித்தம் செய்யப்படுகின்றது. ஓய்வூதியர் மேற்கொள்ளும் மொத்த மருத்துவச் செலவினத்தில் 75 விழுக்காடோ அல்லது ரூ.50,000/- இவற்றில் எது குறைவோ அத்தொகை இத்திட்டத்தின்கீழ் வழங்கப்படுகிறது.

**11. ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம்:**

தமிழ்நாடு அரசு, ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதித் திட்டம் என்றதொரு திட்டத்தை அரசு 1-1-1997 முதல் தொடங்கி செயல்படுத்தி வருகிறது. இத்திட்டத்தின்படி, ஓய்வூதியம் பெறுவோர் இறக்கும் காலம்வரை அவர்தம் ஓய்வூதியத்திலிருந்து மாதந்தோறும் தமிழ்நாடு அரசு ஓய்வூதியம் பெறுவோர் குடும்பப் பாதுகாப்பு நிதிக்குப் பிடித்தம் ஒரே சீராக ரூ.70 செய்யப்படுகிறது. இந்த நிதி 1-1-1998-லிருந்து செயல்படுத்தப்படுகிறது. இந்த நிதிக்கு ஓர் ஆண்டுத் தொகை செலுத்திய பிறகு, இறக்க நேரிடும் ஓய்வூதியதாரரின் குடும்பத்திற்கு ரூபாய் 25,000/- வழங்கப்படும்.

**12. உள்ளாட்சி மன்றப் பணியாளர்கள் உட்பட அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கு ஓய்வூதியம்:**

அரசு மானியம் பெறும் கல்வி நிறுவனங்களின் பணியாளர்களுக்கும், உள்ளாட்சி மன்றப் பணியாளர்களுக்கும் மாநில அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கப்படுவது போன்றே ஓய்வுக் காலப் பயன்கள் அனுமதிக்கப்படுகின்றன.



**13. கடந்த ஆண்டுகளில் ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக்காலப் பயன்கள் குறித்து ஏற்பட்டுள்ள செலவு வருமாறு:-**

| ஆண்டு | ஓய்வூதியம் மற்றும் ஓய்வுக் காலப் பயன்கள் குறித்த மொத்தச் செலவு (ரூபாய் கோடியில்) | மொத்த வருவாய் கணக்கு வரவுகளில் சதவீதம். |
|---|---|---|
| 1997-1998 | 1286.77 | 9.47 |
| 1998-1999 | 1691.42 | 11.45 |
| 1999-2000 | 2668.41 | 16.46 |
| 2000-2001 | 2927.24 | 15.48 |
| 2001-2002 | 3050.48 | 16.07 |
| 2002-2003 | 3488.20 | 16.86 |
| 2003-2004 | 3279.96* | 13.84 |
| 2004-2005 | 3921.05 | 13.78 |
| 2005-2006 | 4488.83 | 13.22 |
| 2006-2007 திட்ட மதிப்பீடு | 5186.70 | 12.82 |
| 2007-2008 வரவு செலவு திட்ட மதிப்பீடு | 6185.07 | 13.89 |

*நிலுவைத் தொகை வழங்குவது தள்ளி வைக்கப்பட்டதன் காரணமாக குறைந்தளவு செலவினம்.

**14. பங்களிப்புத் தொகையுடன்கூடிய ஓய்வூதியத் திட்டம்:**

1-4-2003 ஆம் நாளுக்குப் பின்னர் பணியில் சேர்ந்துள்ள புதிய பணியாளர்கள் பங்களிப்புத் தொகையுடன்கூடிய ஓய்வூதியத் திட்டத்தின்கீழ் சேர்த்துக்கொள்ளப்படுகின்றனர். 1-4-2003-க்குப் பின்னர் பணியில் புதியதாக பணியமர்த்தப்பட்ட அரசுப் பணியாளர்களிடமிருந்து புதிய ஓய்வூதியத் திட்டத்திற்குச் சந்தாவாக அடிப்படை ஊதியம் மற்றும் அகவிலைப்படியில் 10 சதவீதம் பிடித்தம் செய்யப்படுகிறது. இந்தத் திட்டத்தின்கீழ் அதற்குச் சமமான அளவு அரசு பங்குத் தொகை செலுத்துகின்றது. மாநிலக் கணக்காயர்

பங்களிப்பு ஓய்வூதியத் திட்டத்தின் கணக்குகளை தற்போது நிர்வகித்து
வருகிறார். ஓய்வூதிய நிதி ஒழுங்குமுறை மற்றும் வளர்ச்சி ஆணையம்
(PFRDA) முழுமையாகச் செயல்படத் தொடங்கியதும் இந்தத்
தொகைகள் அதற்கு மாற்றப்படும்.

**விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில் பணியாற்றியவர்களுக்கும் ஓய்வூதியம் மற்றும் ஏனைய பயன்கள்.**

15. நமது நாடு விடுதலை பெறுவதற்காக, விடுதலைப்
போராட்டத்தில் கலந்து கொண்டு சொல்லொணா துன்பங்களை
அனுபவித்த தியாகிகள் மற்றும் அவர்களுடைய குடும்பத்தினர்கள்
பயனடையும் வகையிலும் மற்றும் அவர்களது நலனுக்காகவும்
விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம், மருத்துவ வசதி, இலவசப்
பேருந்து வசதி, அரசு வேலைவாய்ப்புகளில் முன்னுரிமை மற்றும்
வீடுகள் ஒதுக்கீடு போன்ற பல திட்டங்களை தமிழ்நாடு அரசு
செயல்படுத்தி வருகின்றது.

16. 1-10-1966 முதல் செயல்படுத்தப்பட்டு வரும் தமிழ்நாடு அரசு
விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியத் திட்டத்தின்படி, விடுதலைப்
போராட்ட வீரர்கள் தேசிய விடுதலைப் போராட்டத்தில் பங்கு
கொண்டதற்காக, சிறைத் தண்டனை வழங்கப்பட்டவர்களும்
அல்லது மூன்று மாத காலத்திற்குக் குறையாமல் சிறையில்
அடைக்கப்பட்டவர்களும் அல்லது தேசிய போராட்டத்தில்
ஈடுபட்டபோது மரணமடைந்தவர்களும் அல்லது துப்பாக்கிச் சூடு
அல்லது காவலர் தடியடியினால் நிரந்தரமாக ஊனமுற்றவர்களும்
விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள்
ஆவர். முன்னாள் இந்திய தேசிய இராணுவத்தில்
பணியாற்றியவர்களும், 1946 ஆம் ஆண்டு கடற்படை கலகத்தில் பங்கு
கொண்டவர்களும், மதுரை சதித்திட்ட வழக்கில் சிறைத் தண்டனை
பெற்றவர்களும் விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத்
தகுதியுடையவர்கள் என பின்னர் அறிவிக்கப்பட்டது. மேலும்,
சுதந்திரப் போராட்டத்தின்போது கைது வாரண்ட்
பிறப்பிக்கப்பட்டதைத் தவிர்ப்பதற்காக தலைமறைவாக இருந்து
சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டவர்களும் அல்லது
சொத்து பறிமுதல் செய்யப்பட்டவர்களும், அரசுப் பணி நீக்கம்/
பணியறவு செய்யப்பட்டவர்களும், அதற்கு ஆதாரமாக நீதிமன்ற
அல்லது அரசு ஆவண ஆதாரங்களைச் சமர்ப்பித்தால், விடுதலைப்





போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறத் தகுதியுடையவர்கள் எனவும்
அறிவிக்கப்பட்டது. ஓய்வூதியம் பெறுவதற்கு நிர்ணயிக்கப்பட்ட
தகுதிகளில் ஒன்றான மூன்று மாத கால சிறைவாசம் என்பது,
01-04-1980 முதல் மூன்று வார காலம் எனக் குறைக்கப்பட்டது. இந்த
ஓய்வூதியம் பெறுவதற்கு ஏற்கெனவே நிர்ணயிக்கப்பட்டிருந்த வருமான
உச்சவரம்பு 11-03-1983 முதல் நீக்கப்பட்டது.

17. சிறைத் துன்பம் அனுபவித்ததை நிரூபிக்கும்பொருட்டு அதற்கு
ஆதாரமாக சம்பந்தப்பட்ட நீதிமன்ற ஆணை அல்லது சிறைத் துறை
ஆவணத்தின் உரிய பகுதியின் நகலை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க
வேண்டியது மிகவும் அவசியமானதாகும். மேற்படி ஆவணங்கள்
கிடைக்காத நிலையில், 1980 ஆம் ஆண்டில் அல்லது அதற்கு முன்பு
செயல்பட்ட சட்டமன்ற உறுப்பினர்கள் வழங்கும் 'சக கைதி'
சான்றிதழ்கள், மனுதாரர்கள் சிறைத் தண்டனை அனுபவித்தமைக்கு
ஆதாரமாக, 1-4-1980 முதல் ஏற்றுக்கொள்ளப்பட்டன. ஆனால், இந்த
முறையில் சில குறைபாடுகள் அரசின் கவனத்திற்குக் கொண்டு
வரப்பட்டதால், சட்டமன்ற உறுப்பினர்களால் வழங்கப்படும்
'சக கைதி' சான்றினை ஏற்கும் முறை 1988 ஆம் ஆண்டில்
திருத்தியமைக்கப்பட்டது. பொதுத் துறையின் 16-11-1988 நாளிட்ட
அரசு ஆணையின்படி மாநிலம் முழுவதற்கும் அரசால்
அங்கீகரிக்கப்பட்ட பதினைந்து சான்றாளர்களுள் எவரேனும்
இருவரிடமிருந்து 'சக கைதி' சான்று பெற்று விண்ணப்பிக்கலாம் என
தெரிவிக்கப்பட்டது. பின்பு, இந்த முறையிலும் சிரமங்கள் உள்ளன என
அரசின் கவனத்திற்குக் கொண்டு வரப்பட்டதால், 7-2-1996 ஆம்
நாளிட்ட பொதுத் துறையின் அரசு ஆணையின்படி மாவட்ட
ஆட்சியரைத் தலைவராகவும், மாவட்ட வருவாய் அதிகாரியைத்
துணைத் தலைவராகவும், மூன்று பிரபல தியாகிகளை
உறுப்பினர்களாகவும், இரண்டு பிரபல தியாகிகளை
சான்றளிப்பவர்களாகவும் கொண்டு மாவட்ட அளவிலான சீராய்வுக்
குழு ஒவ்வொரு மாவட்டத்திலும் அமைக்கப்பட்டது. இக்குழுவின்
உறுப்பினர்களாகவும், சான்றளிப்பவர்களாகவும் உள்ள தியாகிகள்
நீதிமன்ற மற்றும் சிறைத் துறை மூல ஆவணங்களின் அடிப்படையில்
விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுபவராக இருத்தல்
வேண்டும். விடுதலைப் போராட்ட ஓய்வூதியம் கோருபவர் தாம்
சிறைத் தண்டனை அடைந்த காலத்தில், 18 வயது நிரம்பியவராக
இருந்திருக்க வேண்டும். விண்ணப்பம் வரையறுக்கப்பட்ட படிவத்தில்,
சம்பந்தப்பட்ட மாவட்ட ஆட்சியருக்கு, ஓய்வூதியம் கோரி

அனுப்பப்பட வேண்டும். அரசால் வகுக்கப்பட்ட நெறிமுறைகளின்படி மாவட்ட சீராய்வுக் குழுவினால் இந்த விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்பட்டு அரசுக்குப் பரிந்துரை செய்யப்படுகிறது.

18. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் ஓய்வூதியம் அரசால் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு I-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

19. மாநில அரசின் ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர் இறந்தால், இந்த ஓய்வூதியத் தொகையானது அன்னாரின் மனைவி/கணவர்/உரிய வயதடையாத குழந்தைகளுக்குத் தொடர்ந்து வழங்கப்படுகிறது. மேற்படி ஓய்வூதியம் பெற்று வருகின்ற விடுதலைப் போராட்ட வீரர்களின் மகனோ அல்லது மகளோ மனவளர்ச்சி குன்றியவராகவோ அல்லது நிரந்தர உடல் ஊனமுற்றவராகவோ இருக்க நேர்ந்தால், அவர்களது வாழ்நாள் முழுமைக்கும் தொடர்ந்து ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. இக்குடும்ப ஓய்வூதியத் தொகையும் அவ்வப்போது உயர்த்தப்பட்டு வந்துள்ளது. இதன் விவரம் இணைப்பு II-ல் கொடுக்கப்பட்டுள்ளது.

20. நாட்டின் விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறிப்பிடத்தக்க வகையில் சிறப்புற பணியாற்றிய மேலோரின் பணியைப் பாராட்டி அவர்களது வாரிசுகளுக்கும் சிறப்பு ஓய்வூதியமானது அரசால் வழங்கப்படுகிறது. அந்த வகையில், சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வாரிசுதாரர்கள் 211 பேர்களுக்கும், வீரபாண்டிய கட்டபொம்மனின் நேரடியான முதுநிலை வாரிசுதாரர்கள் 5 பேர்களுக்கும், இராமநாதபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த 'முன்னாள் மன்னர் முத்துராமலிங்க விஜயரகுநாத சேதுபதியின் தகுதியான வாரிசுதாரர்கள் 80 பேர்களுக்கும் அவர்கள் வாழ்நாள் முழுவதற்கும் மாதம் ஒன்றிற்கு ரூபாய் 500/- வீதம் அரசால் ஓய்வூதியம் வழங்கப்பட்டு வருகிறது.

21. விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும் அவர்களது வாரிசுகளுக்கும் வழங்கப்படும் ஏனைய சலுகைகள் பற்றிய விவரம் பின்வருமாறு:

**(அ) மருத்துவ வசதிகள்:**

மைய அரசிடமிருந்தோ அல்லது மாநில அரசிடமிருந்தோ அல்லது இரண்டு அரசுகளிடமிருந்தோ ஓய்வூதியம் பெற்று வருகின்ற





அனைத்து விடுதலைப் போராட்ட வீரர்களுக்கும்/விதவைகளுக்கும்/
உரிய வயதடையாத குழந்தைகளுக்கும் மாதம் ஒன்றிற்கு ரூ.15/- வீதம்
மருத்துவப்படி வழங்கப்படுகிறது. மேற்கூறிய விடுதலைப் போராட்ட
வீரர்கள் அல்லது அவரது வாரிசுதாரர்களுக்கு அரசு
மருத்துவமனைகளில் 'அ' வகுப்பு வார்டு வசதிகளுடன் இலவச
மருத்துவ சிகிச்சை வழங்கப்படுகிறது.

**(ஆ) வீட்டு வசதி:**

தமிழ்நாடு மாநில வீட்டு வசதி வாரியம் ஒதுக்கீடு செய்யும்
வீடுகளில் / மனைகளில்/ அடுக்கு மாடி வீடுகளில் ஆதிதிராவிடர்/
பழங்குடியினருக்கு ஒதுக்கப்பட்ட 18 சதவிகிதத்திலிருந்தும்,
சலவையாளர் / நாவிதர்களுக்கு ஒதுக்கப்பட்ட 5 சதவிகிதத்திலிருந்தும்
மற்றும் பொதுமக்களுக்கு ஒதுக்கப்பட்ட 37 சதவிகிதத்திலிருந்தும் தலா
ஒரு சதவிகிதம் வீதம் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கென ஒதுக்கப்
பட்டுள்ளது.

**(இ) போக்குவரத்து வசதி:**

மைய மற்றும் மாநில அரசு ஓய்வூதியம் பெறும் விடுதலைப்
போராட்ட வீரர்களுக்கும், விடுதலைப் போராட்ட வீரர்களின்
விதவைகளுக்கும் மற்றும் அவர்களுடைய சட்டப்படியான
வாரிசுகளுக்கும் அரசின் போக்குவரத்துக் கழகப் பேருந்துகளில்
இலவசமாகப் பயணம் செய்ய சலுகைகள் வழங்கப்பட்டுள்ளன.

**(ஈ) ஈமச்சடங்குச் செலவு:**

விடுதலைப் போராட்ட வீரர் இறந்து போக நேரிடும்போது
அவர்தம் ஈமச் சடங்குச் செலவுக்காக விடுதலைப் போராட்ட வீரரின்
மனைவிக்கு அல்லது அவருடைய நேரடி வாரிசுதாரர்களுக்கு உதவி
தொகை ரூ.2000/- உடனடியாக வழங்கப்பட்டு வருகிறது. மாநி
அரசின்/மைய அரசின் ஓய்வூதியம் அல்லது இவ்விரண்
ஓய்வுதியங்களையும் பெறுகின்ற விடுதலைப் போராட்ட வீரர்க
அனைவருக்கும் இது பொருந்தும். இறந்துபோன விடுதலை
போராட்ட வீரர்களுக்கு மரியாதை செலுத்தும் வகையி
வட்டாட்சியருக்குக் குறையாத பதவியிலுள்ள வருவாய்த் துறை
அலுவலர் ஒருவரால் அரசு சார்பில் மறைந்தவரின் உடல்மீ
மலர்வளையம் வைத்து மரியாதை செலுத்தப்படுகிறது.

**(உ) வேலைவாய்ப்பில் முன்னுரிமை:**

வேலைவாய்ப்பு அலுவலகங்களிலிருந்து, அரசுத் துறைகளுக்கும் மற்றும் அரசு சார்ந்த நிறுவனங்களுக்கும் வேலைவாய்ப்புக்குத் தகுதியான பெயர்ப்பட்டியல் அனுப்பப்படும்பொழுது விடுதலைப் போராட்டத் தியாகிகளின் சட்டப்படியான வாரிசுகளுக்கு முன்னுரிமை அளிக்கப்படுகிறது.

22. தற்போது மாநில அரசின் பல்வேறு வகையான ஓய்வூதியங்களைப் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை பின்வருமாறு:

| | | |
|---|---|---|
| 1. | மாநில ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் எண்ணிக்கை (ரூ.3,000/- +15 மருத்துவப்படி) | 1024 |
| 2. | மாநில அரசின் தொடர் ஓய்வூதியம் பெறும் விடுதலைப் போராட்ட வீரர்களின் வாரிசுதாரர்களின் எண்ணிக்கை (ரூ.1,500/- +15/- மருத்துவப்படி) | 2251 |
| 3. | வீரபாண்டிய கட்டபொம்மன் வழித்தோன்றல்கள் (ரூ.500/- மாதம் ஒன்றுக்கு) | 5 |
| 4. | சிவகங்கை மருதுபாண்டியர் சகோதரர்களின் வழித்தோன்றல்கள் (ரூ.500/- வீதம்) | 211 |
| 5. | மன்னர் முத்துராமலிங்க விஜய ரகுநாத சேதுபதியின் வழித்தோன்றல்கள் (ரூ.500/- வீதம்) | 80 |

**மைய அரசின் ஓய்வூதியத் திட்டம்:**

23. மைய அரசு செயல்படுத்தும் விடுதலைப் போராட்ட வீரர்கள் ஓய்வூதியத் திட்டம் 15-08-1972 ஆம் நாள் முதல் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இத்திட்டத்தின்படி வழங்கப்படும் சலுகைகள் பின்வருமாறு:

(i) விடுதலைப் போராட்ட இயக்கத்தில் பங்கு கொண்டு குறைந்தபட்சம் ஆறு மாதங்கள் சிறைத் துன்பம் அனுபவித்தவர்கள் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவராகிறார்கள். அவர்கள் தங்களது சிறைத் துன்பத்திற்கு ஆதாரமாக சிறைச் சான்று சமர்ப்பிக்க வேண்டும். மேலே குறிப்பிட்டுள்ள



சிறைச் சான்று சிறை ஆவணங்களில் இல்லாத நேர்வில், சம்பந்தப்பட்ட சிறை நிர்வாகத்திடமிருந்து பெறப்பட்ட "ஆவணங்கள் இல்லை" என்பதற்குரிய சான்றும், தான் சிறையிலிருந்த காலத்தில், அதே சிறையில் குறைந்தபட்சம் ஓராண்டு காலம் சிறைத் துன்பம் அனுபவித்தவர்கள் இருவரிடமிருந்து, நிர்ணயிக்கப்பட்டுள்ள 'சக கைதி சான்றிதழ்' படிவத்தில் பெறப்பட்ட இரு 'சக கைதி சான்றிதழ்கள்' சமர்ப்பித்தல் வேண்டும் அல்லது தற்போதுள்ள அல்லது முன்னாள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர் சான்றாளராக இருக்கின்ற நிலையில் இரு சக கைதி சான்றுகளுக்குப் பதிலாக 'ஒரு சக கைதி சான்றிதழ்' மட்டும் சமர்ப்பித்தால் போதுமானது.

(ii) ஆதி திராவிடர்/பழங்குடியினர் மற்றும் பெண் விடுதலைப் போராட்ட வீரர் ஆகியோரைப் பொறுத்தமட்டில், ஓய்வூதியம் பெறுவதற்கு சிறைத் தண்டனை அனுபவித்த காலம் ஆறு மாதத்திலிருந்து மூன்று மாதங்களாகக் குறைக்கப்பட்டுள்ளது.

(iii) ஆறு மாதம் அல்லது அதற்கும் மேலாக தலைமறைவாக இருந்தவர்கள், ஆனால் அரசு ஆவணங்கள் கிடைக்கப் பெறாதவர்கள், இரண்டாண்டுகள் அல்லது அதற்கும் மேலாக சிறைத் தண்டனை அனுபவித்துள்ள பிரபலமான விடுதலைப் போராட்ட வீரர் எவரேனும் ஒருவரிடமிருந்து, குறிப்பிட்ட படிவத்தில், 'நன்கறிந்த சான்றிதழ்' பெற்று தக்க ஆதாரமாகச் சமர்ப்பிக்கலாம். மேலும், மேற்படி "அரசு ஆவணங்கள் கிடைக்கவில்லை" என்பதற்கான சான்றிதழ் சம்பந்தப்பட்ட அலுவலகங்களிலிருந்து பெற்று சமர்ப்பிக்க வேண்டும். சான்றிதழ் அளிப்பவர் மனுதாரரின் மாவட்டத்தைச் சேர்ந்தவராக இருத்தல் வேண்டும்.

(iv) விடுதலைப் போராட்டத்தில் கலந்துகொண்டு 10 சவுக்கடிகள்/ கசையடிகள் அல்லது பிரம்படிகள் தண்டனையாகப் பெற்று ஒருவர் துன்பப்பட்டிருந்தால், அது ஆறு மாத காலம் சிறைத் தண்டனை அனுபவித்ததற்கு ஈடாகக் கருதப்படும்.

(v) மேலும், இந்தியாவிற்கு வெளியே நடந்த சுதந்திரப் போராட்டத்தில் பங்கு கொண்டு, ஆறு மாதங்களோ அல்லது அதற்கு மேலோ சிறைத் துன்பம்/காவல் துன்பம் அனுபவித்த முன்னாள் இந்திய தேசிய இராணுவ வீரர்களும் மைய அரசு சுதந்திரப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதியுடையவர்களாவர்.

(vi) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம் பெறும் ஒவ்வொருவருக்கும் 2-10-2006 முதல் ரூ.6,330/- ஓய்வூதியத்துடன் 58 சதவீதம் அகவிலைப் படியும் சேர்த்து ரூ.10,001/- வழங்கப்பட்டு வருகிறது.

(vii) மைய அரசு விடுதலைப் போராட்ட வீரர் ஓய்வூதியம்/மைய அரசு குடும்ப ஓய்வூதியம் பெறுபவருக்கு, மாநில அரசின் நிதியிலிருந்து, ரூபாய் 500/- மாநில அரசு ஓய்வூதியமாக வழங்கப்பட்டு வருகிறது. இவ்வாறு மாநில அரசு ஓய்வூதியம் பெற்று வரும் மைய அரசு ஓய்வூதியதாரர்கள் / மைய அரசு குடும்ப ஓய்வூதியதாரர்கள் எண்ணிக்கை 2,927 ஆகும்.

24. மேற்குறிப்பிட்ட அரசின் ஓய்வூதியத் திட்டங்களுக்காக 2007-2008 ஆம் ஆண்டில் ரூ.11.74 கோடி நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது.

## இணைப்பு–1

**மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களுக்கு வழங்கப்படும் மாதாந்திர ஓய்வூதியத் தொகை விவரம்**

| வ. எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50 |
| 2. | 15-08-1972 முதல் | 75 |
| 3. | 01-04-1979 முதல் | 100 |
| 4. | 25-01-1981 முதல் | 150 |
| 5. | 10-06-1986 முதல் | 250 |
| 6. | 01-08-1989 முதல் | 350 |
| 7. | 01-01-1991 முதல் | 400 |
| 8. | 01-08-1992 முதல் | 1,000 |
| 9. | 01-09-1995 முதல் | 1,500 |
| 10. | 15-08-1997 முதல் | 3,000 |





## இணைப்பு – 2

**மாநில அரசால் விடுதலைப் போராட்ட வீரர்களின் குடும்பத்தினருக்கு வழங்கப்படும் மாதாந்திர குடும்ப ஓய்வூதியத் தொகை விவரம்**

| வ. எண் | கால அளவு | ஓய்வூதியத் தொகை (ரூபாய்) |
|---|---|---|
| 1. | 01-10-1966 முதல் | 50 |
| 2. | 15-08-1972 முதல் | 75 |
| 3. | 01-04-1979 முதல் | 100 |
| 4. | 25-01-1981 முதல் | 150 |
| 5. | 10-06-1986 முதல் | 250 |
| 6. | 01-08-1989 முதல் | 350 |
| 7. | 01-01-1991 முதல் | 400 |
| 8. | 01-08-1992 முதல் | 500 |
| 9. | 01-09-1995 முதல் | 750 |
| 10. | 15-08-1997 முதல் | 1,500 |

227669

அரசு மைய அச்சகம், சென்னை - 600 079.

Copies can be had from the
Assistant Director,
Government Publication Depot,
110, Anna Salai,
Chennai-600 002.

©
Published under Rules 280 and 283 of the Tamil Nadu Legislative Assembly Rules and printed by the Commissioner of Stationery and Printing, Chennai-600 002.